# புலம்பெயர்ந்த தமிழர்

## வரலாறும் வாழ்வியலும்



பதிப்பாசிரியர்
முனைவர் கோ. விசயராகவன்
முனைவர் கு. சிதம்பரம்
முனைவர் இரத்தின வேங்கடேசன்
முனைவர் ஏ. எழில்வசந்தன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# புலம்பெயர்ந்த தமிழர்
## வரலாறும் வாழ்வியலும்

சிங்கப்பூரில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு

பதிப்பாசிரியர்

*கோ. விசயராகவன், கு. சிதம்பரம்*
*இரத்தின வேங்கடேசன்*
*ஏ. எழில்வசந்தன்*

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

## நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கோ. விசயராகவன்<br>முனைவர் கு. சிதம்பரம்<br>முனைவர் இரத்தின வேங்கடேசன்<br>முனைவர் ஏ. எழில்வசந்தன் |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113<br>தொலைபேசி எண் 044/22542992 |
| வெளியீட்டு எண் | : | 788 |
| தரக்குறியீட்டு எண் (ISBN) | : | 1978-81-925359-7-5 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2014 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 16 + 304 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ.140/- (ரூபாய் நூற்று நாற்பது மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீ சரவணா அச்சகம்<br>எண்.144, தம்புத் தெரு<br>சென்னை 600 001. பேசி: 94442 65471 |
| பாடம் | : | அயலகத் தமிழ் |



கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

**முனைவர் கோ. விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி., எம்.பி.ஏ.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600113

## அணிந்துரை



உலக அளவில் தமிழர்கள் இன்று பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். புலம்பெயர்வு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நடைபெறுகின்றது.ே புலம்பெயர்வுக்கான காரணங்களைக் காலம்தான் முடிவுச் செய்கின்றது. தமிழர் புலம்பெயர்வினைக் காலக்கட்டத்தின் அடிப்படையில் சிந்துசமவெளிக்காலப் புலம்பெயர்வு, சங்ககாலப் புலம்பெயர்வு, சங்கம் மருவியக்காலப் புலம்பெயர்வு, ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலப் புலம்பெயர்வு, தற்காலப் புலம்பெயர்வு என வகைப்படுத்தலாம்.

சிந்துசமவெளிக்காலப் புலம்பெயர்வு ஆரியர்களின் வருகையால் தமிழர்கள் வடக்கிருந்து தெற்கு நோக்கிப் புலம் பெயந்துள்ளனர் எனப் பலவரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன. சங்ககாலத் தமிழர்கள் வணிகத்தின் பொருட்டும், தமிழ் இனத்தின் ஆட்சி எல்லையை விரிவுப்படுத்தும் காரணத்தின் பொருட்டும் புலம்பெயர்ந்தனர். ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் தமிழ் மக்கள் தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் மலேசியா, சிங்கப்பூர், மியான்மார், இந்தோனேசியா, மொரிசியசு, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். அக்காலக் கட்டத்தில் ஆங்கிலேயர்கள் தமிழர்களை அடிமைகளாகவும் ஒப்பந்தக் கூலிகளாகவும் கரும்புத் தோட்டங்களுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் கொண்டுச் சென்றனர். தற்காலத்தில் இலங்கையில் போர்காரணமாக இலங்கைத் தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாகப்

புலம்பெயர்ந்துள்ளனர். இப்புலம்பெயர்வு தமிழ் இன வரலாற்றில் பல மரக்கமுடியாத சம்பவங்களையும் கழுவமுடியாத இரத்தக் கறைகளையும் உருவாக்கியுள்ளது. இத்தகைய புலம்பெயர்த் தமிழர்கள் குறித்தான தரவுகளையும் அவர்களின் வாழ்க்கை நிலையையும் பதிவுச் செய்வது இன்றையத் தேவையாக உள்ளது.

எனவே, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக்களமும் இணைந்து **புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்** எனும் பொருண்மையில் ஒருநாள் பன்னாட்டு கருத்தரங்கினைச் சிங்கப்பூரில் 2014 மே 31 ஆம் நாள் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இம்மாநட்டின் தலைவரும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களத்தின் தலைவருமான முனைவர் இரத்தின வேங்கடேசன் அவர்களுக்கும், கருத்தரங்க ஆய்வுக்குழு உறுப்பினர்களும் மாநாட்டின் வழிகாட்டிகளுமான சிங்கபூர் எழுத்தாளர்களான திரு மா.அன்பழகன், மூத்த எழுத்தாளர் ஏ.பி.இராமன், கவிஞர் இறை மதியழகன், கவிஞர் பெரி. சிவக்குமார், கவிஞர் கி. கோவிந்தராசு ஆகியோருக்கும் எமது பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அரிய நூலினைச் செப்பம் செய்யும் பணியினை மேற்கொண்ட இம்மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் கு.சிதம்பரம், முனைவர் எழில் வசந்தன் அகியோருக்கும், இம்மாநாட்டிற்கு ஒத்துழைப்பினை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா**

அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எம் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். இந்த அரிய நூலை கணினியில் வடிவமைத்த முனைவர் எழில்வசந்தன், திருமதி எ.ம. லட்சுமி மற்றும் செல்வி. ல. தீபிகாவிற்கும் அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

**முனைவர் இரத்தின வேங்கடேசன்**
**நிறுவுநர் மற்றும் தலைவர்**
**சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம்**
**சிங்கப்பூர்**

## என்னுரை



சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக்களம் கடந்த 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இலக்கியக்களத்தின் சார்பில் ஏராளமான இலக்கிய நிகழ்ச்சிகளும் பட்டிமன்றங்களும் கவியரங்குகளும் கலந்துரையாடல்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை மொழியால், பண்பாட்டால் ஒருங்கிணைத்தலை நோக்கமாகக் கொண்டு இவ்வமைப்பு பல இலக்கிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. மாணவர்கள் மற்றும் இளையர்களிடம் அடுத்த தலைமுறையினருக்குத் தமிழை, பண்பாட்டை இலக்கிய மரபினை எடுத்துச் செல்லும் நோக்கோடு அவர்களுக்கான போட்டிகள் மற்றும் தன்முனைப்புப் பேச்சுகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியனவற்றை இலக்கியக் களம் தொடர்ந்து நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோருக்குக் காப்பிய விழாவும் எடுத்துத் தமிழின் சிறப்பினை வெளிப்படுத்தி வருகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் மற்றும் சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களமும் இணைந்து **புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்** எனும் பொருண்மையில் பன்னாட்டு கருத்தரங்கினைச் சிங்கப்பூரில் 2014 மே 31 ஆம் நாள் நடத்தப்பெற்றது. இக் கருத்தரங்கம் புலம்பெயந்த தமிழர்களைப் பற்றியான ஒரு தொடக்கம்தான். தனிநாயகம் அடிகளார் முதல் உலகத் தமிழ் மாநாட்டை மலேசியாவில் நடத்தி தமிழர்களுக்கெல்லாம் பெருமையைத் தேடித் தந்தவர். அவ்வித்தில் இப்புலம்பெயர் தமிழர் குறித்தான இக்கருத்தரங்கம்

ஒரு முன்னோடி கருத்தரங்கமாக சிங்கப்பூர் மண்ணில் நடைபெற்றதும் நமக்கு கிடைத்த பெருமை என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை.

கருத்தரங்கம் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களத்துடன் இணைந்து நடத்துவதற்கு இசைவினை அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கு எனது மனமகிழ்ச்சியினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கருத்தரங்கத் தொடக்க விழாவிற்குத் தலைமை ஏற்ற நன்யாங் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்களுக்கும், தொடக்க விழா நாட்டியக் குழுவிநர் பானுப்பிரியா, ரூபிணி ஜெயசீலன், கற்பனா ஆகியோருக்கும், தொடக்கவிழா வரவேற்பினை நிகழ்த்திய இலக்கியக் களத்தின் செயலாளர் சொல்லருவி பெரி. சிவக்குமார், கருத்தரங்க நிகழ்வினைத் தொகுத்து வழங்கிய திருமதி நாகம்மை ஆகியோருக்கும் நன்றியினை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பின் மாதிரிப் படியினை வெளியிட்ட சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. தினகரன் அவர்களுக்கும், முதல் படியினைப் பெற்றுக்கொண்ட வளர் தமிழ் இயக்கத் தலைவர் திரு. இரா. ராஜாராம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய மேலாண்மைக் குழுத் தலைவர் திரு. வை. தேவராஜா, கவிமாலை அமைப்பின் காப்பாளர் கவிஞர் மா. அன்பழகன் மற்றும் இரா.ராஜாராம் அவர்களுக்கும் எனது கனிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக் கருத்தரங்கின் அமர்வுகளைச் சிறந்த முறையில் நடத்திக்கொடுத்த முனைவர் சீதா லட்சுமி, வளர்தமிழ் இயக்கச் செயலாளர் புஷ்பலதா, சிங்கப்பூர் மூத்த படைப்பாளர் கண்ணபிரான், முனைவர் இலலிதா சுந்தரம் ஆகியோருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவு விழாவிற்குத் தலைமை ஏற்ற சிங்கப்பூர் மூத்த பத்திரிக்கையாளர் வெ. புருஷோத்தமன், வளர் தமிழ் இயக்கப் பொருளாளர் ஜோதி மாணிக்கவாசகம், நிறைவு விழாப் பேருரை நிகழ்த்திய நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக் கழகத் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுத் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ.ரா.சிவக்குமார் அவர்களுக்கும், கருத்தரங்க மதிப்புரை வழங்கிய முனைவர் முரசு நெடுமாறன் (மலேசியா), பேராசிரியர் யோகராசா (இலங்கை), முனைவர் சற்குணவதி (சென்னை) ஆகியோருக்கும், கருத்தரங்கு நிறைவு ஆற்றிய கவிஞர் அரங்க ராமசாமி அவர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, இலங்கை, லண்டன், பிரான்ஸ், கனடா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பேராளர்களுக்கும், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் கு. சிதம்பரம், முனைவர் ஏ. எழில்வசந்தன் மற்றும் கவிஞர் சு. உஷா ஆகியோருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கருத்தரங்கம் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு காமன்வெல்த் டிரைவ் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய திருவள்ளுவர் மண்டபத்தினை வழங்கிய அதன் மேலாண்மைக் குழுவிநர்களுக்கும், ஒத்துழைப்பினை நல்கிய சிங்கப்பூர்வாழ் உடன் பிறப்புகளுக்கும் கருத்தரங்க தலைவர் என்ற முறையில் நன்றியினைத் தெரிவிக்க இது ஒரு நல்வாய்ப்பென்றே கருதுகின்றேன். எனது இந்த பங்களிப்பு உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்க ஒரு படிகல்லாக அமையும் என நம்புகின்றேன்.

தமிழால் வாழ்வோம்...! தமிழால் இணைவோம்...!

## பதிப்புரை

உலக நாடுகளுக்குத் தமிழின் தனித்துவத்தையும் தமிழரின் பெருமையயும் உலக மக்களுக்கு எடுத்துச் சென்றவர்களில் மிக முக்கியமானவர் தவத்திரு தனிநாயகம் அடிகளார் அவர்கள். இம்மாமனிதரின் பெருமையைப் போற்றும் வகையில் அவரது நூற்றாண்டை உலகம் முழுவதுமுள்ளத் தமிழர்கள் கொண்டாடிவருகின்றனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இவரின் சிறப்பைப் போற்ற கடமைப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அடிகளார் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது என்பது உலகம் அறிந்த உண்மை.

இவரின் நூற்றாண்டுக் கருத்தரங்க வரிசையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர்புலம் - உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இலண்டன் உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் ஆகஸ்ட் திங்கள் 2013 இல் இலண்டனில் நடத்திய உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டிற்கு தன்து முழு ஒத்துழைப்பினையும் நல்கி மாநாட்டு மலரினை இரு தொகுதிகளாக வெளியிட்டுக் கொடுத்தது. மதுரை டோக் பெருமாட்டிக் கல்லூரி, மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம் எனும் தலைப்பில் மதுரையில் 2013 டிசம்பர் திங்கள் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது.

அவ்வரிசையில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களத்துடன் இணைந்து சிங்கப்பூரில் 2014 மே 31 ஆம் நாள் புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும் எனும் பொருண்மையில் ஒரு நாள் கருத்தரங்கினை நடத்தி அதன் பலனாக இந்த மாநாட்டு புத்தகம் தங்களின் கையில் தவழ்கின்றது. இம்மாநாடு மிகக்குறுகிய காலத்தில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களத்தின் தலைவர் அவர்களின் பெரும் முயற்சியால் வெற்றிகரமாக நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு இலங்கை, மலேசியா, இந்தியா, இங்கிலாந்து, பிரான்சு, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் பேராளர்கள் தங்களின் கட்டுரைகளை அளித்து மாநாட்டினைச் சிறப்படைய செய்தனர்,

இம்மாநாட்டில் புலம்பெயர்ந்த தமிழ்ர்கள் குறித்தான கருத்துகளைப் பல்வேறு பொருண்மைகளில் விவாதிக்கப்பட்டன - புலம்பெயந்த தமிழர்களின் வரலாறு, அயலகத் தமிழர்களின் படைப்பிலக்கியங்கள், அயல்நாடுகளில் தமிழ்க் கல்வி, அயல்நாடுகளில்/அயல்மாநிலங்களில் தமிழர் வாழ்வியல், சமூகம் மற்றும் பொருளாதார நிலைகள் குறித்து அவ்விவ்வாதங்கள் அமைந்தன.

இக்கட்டுரைகள் அனைத்துமே உலக அளவில் புலம்பெயந்த தமிழர்களின் வரலாற்றினையும் வாழ்வியலையும் உலகத் தமிழர்களுக்கு எடுத்துக்கூறும் விதமாக அமைந்துள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் எம் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். இதைக் கணினியில் வடிவமைத்த முனைவர் எழில்வசந்தன், திருமதி எ.ம. லட்சுமி மற்றும் செல்வி. ல. தீபிகாவிற்கும் அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

முனைவர் கோ.விசயராகவன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் இரத்தின வேங்கடேசன்
முனைவர் ஏ.எழில்வசந்தன்

# பொருளடக்கம்


பக்கம்

1. **தமிழர் புலம்பெயர்வும் வாழ்வியலும்**
*முனைவர் இரத்தின வேங்கடேசன்* 1

2. **சிங்கப்பூர்த் தமிழர் வரலாறு**
*முனைவர் இலலிதாசுந்தரம்* 5

3. **சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வி வரலாறு**
*கவிஞர் பரந்தூர் இராமசாமி* 13

4. **சிங்கப்பூர் தமிழறிஞர் மகுதூம் சாயுபுவின் தமிழ்ப்பணிகளும் ஆளுமைகளும்**
*முனைவர் கோட்டி திருமுருகானந்தம்* 19

5. **கடித இலக்கியங்களில் காணலாகும் சிங்கப்பூர்த் தமிழர்களின் வாழ்வியல்**
*ஆர். சகுந்தலா* 27

6. **மலேசியத் தமிழர்களின் வரலாறும் வாழ்வியலும்**
*முனைவர் லோ. சந்திரசேகர்* 32

7. **மலேசியத் தமிழர்களின் வாழ்வியல்நிலை**
*புலவர். ஆ.சந்திரசேகரன்* 38

8. **மலேசியாவில் தமிழ்க் கல்வி**
*முனைவர் கோ. விசயராகவன்* 45

9. **மலேசியத் தமிழ்க் கவிதைகள் பன்முகப்பார்வை**
*முனைவர் மு. சற்குணவதி* 50

10. **மலேசியத் தமிழ் சிறுவர் கவிதைகள்**
*டாக்டர் மா. சம்பத்குமார்* 56

11. மலேசியத் தோட்டப்புறப் பாடல்களில் பாலியல் செய்திகள்
*முனைவர் முரசு.நெடுமாறன்* 61

12. மலேசியக் கவிஞர் சா.ஆ.அன்பானந்தனின் கவிதைத்திறன்
*முனைவர் வே.சபாபதி* 72

13. மலேசியாவில் ஹிண்ட்ராஃப் இயக்கத்தின் போராட்டமும் அதன் விளைவுகளும்
*கோ வி.சிவபாலன்* 81

14. மலேசிய இந்துக்களிடையே மாறிவரும் சமயப்போக்குகள் "வீட்டு வளாக ஆலயங்கள்" ஒரு பார்வை
*முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம்* 92

15. மலேசியத் தமிழிசை தொகுப்புகளின் சிந்தனைப் போக்குகள்
*முனைவர் பா.த.கிங்ஸ்டன்* 101

16. மலேசியப் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் இளஞ்செல்வனின் படைப்புகளை முன்வைத்து
*இளங்குமரன் சிவநாதன்* 106

17. மலேசியத் தமிழ் மரபுக் கவிதை வரலாறு
*முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி* 111

18. மலேசியச் சூழலில் சிறுபான்மை மக்களும் மொழித் தற்காத்தலும்
*செல்வசோதி இராமலிங்கம்* 119

19. சயாம் மரண ரயில்பாதை அமைப்பில் தமிழர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள்
*முனைவர் சாந்தி* 127

20. பர்மா, மலேசியத் தமிழர் வாழ்வியல்
*முனைவர் வெ.திருவேணி* 130

21. ஐக்கிய இராச்சியத்தில் தமிழரின் வாழ்வியல்
*திரு. அல்பிரட் வேந்தர்கோன்* 135

22. பிரித்தானியப் புலம்பெயர் தமிழிலக்கியத்திற்கு மூலங்களாக அமைந்த வாழ்வியல் கூறுகள்
*திருமதி சொர்ணமலர் முருகையா* 144

23. இங்கிலாந்தில் அரசாங்க, சமூகப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்பித்தல்
*திரு. சிவகுருநாதப் பிள்ளை* 149

24. பிரான்சு நாட்டில் இலங்கைத் தமிழர் வாழ்வியல் 'பாரிஸ் கதைகள்' தொகுப்பினை முன்வைத்து
*திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்* 153

25. பிரான்சுத் தமிழர் வரலாறும் வாழ்வியல்
*கவிஞர் பாமல்லன்* 162

26. புதுச்சேரித் தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாறு
*முனைவர் ஏ. எழில்வசந்தன்* 168

27. ஈழத்தமிழரின் அரசியல் மீள் உருவாக்கத்தில் புலம்பெயர் தமிழரின் பங்களிப்பு கனடாவை மையப்படுத்திய ஆய்வு
*திரு கே.ரி.கணேசலிங்கம்* 174

28. புலம்பெயர்ந்த பெண்கள் கவிதைகளில் புலப்பெயர்வும் வாழ்வியலும் அடையாளச் சிக்கல்களும்
*முனைவர் நதிரா மரியசந்தனம்* 179

29. கனடாத் தமிழர்களின் வாழ்வியல்
*திரு.எம்.ஐ.எம்.ஹனிபா* 187

30. செர்மானியத் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களும் சிதைவுகளும்
*சு. குணேஸ்வரன்* 196

31. நார்வேத் தமிழர் வரலாறும் வாழ்வியலும்
*முனைவர் செ.யோகராசா* 204

32. செர்மனிய தமிழர்களின் வாழ்நிலை: பார்த்திபன் படைப்புக்களை முன்வைத்து
*திரு த. மேகராசா* 213

33. இலங்கைவாழ் தமிழர்களின் வாழ்வியல் அடையாளச் சிக்கல்கள்
*முனைவர் மூ. தமிழரசி* 221

34. எஸ்.பொ.வின் நாவலில் பெண்கள்
*முனைவர் இரா.இராமமூர்த்தி* 227

35. அ.முத்துலிங்கம் படைப்புகளில் வெளிப்படும் புலம்பெயர்ந்தோர் வாழ்வியல் பதிவுகள்
*முனைவர் குளோரியா விதாஸ்* 234

36. அழித்தலும் - உயிர்த்தலும் (யாருமில்லை என்றானபோது - என்னும் கவிதை நூலை முன்வைத்து)
*முனைவர் கு. சிவப்பிரகாசம்* 242

37. மொரிசியசு தீவில் தமிழர் வாழ்வியல்
*முனைவர். ஏ.காருண்யாள்* 250

38. தமிழ்நாடு சுற்றுலாவில் அயலகத் தமிழர்கள்
*திரு வே. திருநாவுக்கரசு* 259

39. தாய்த் தமிழும் புலம்பெயர்ந்த தமிழரும்
*யாழ் தர்மினி பத்மநாதன்* 266

40. கேரளத் தமிழரும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கமும்
*முனைவர் கு. சிதம்பரம்* 274

41. தாயகம் கடந்த தமிழ்
*முனைவர் சி .சிதம்பரம்* 281

42. A Tamil Martyr from Pondicherry in Nethaji's Freedom Struggle in south-east Asia (Vietnam)
*JBP. More* 288

# தமிழர் புலம்பெயர்வும் வாழ்வியலும்

முனைவர் இரத்தின வேங்கடேசன்
நிறுவுநர் மற்றும் தலைவர்
சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம்
சிங்கப்பூர்

மனிதன் காலங்காலமாக ஓரிடத்தைவிட்டு மற்றோரிடத்திற்குப் இடம்பெயர்ந்துகொண்டே இருக்கிறான். இனக்குழுக் காலத்தில் கூட்டம் கூட்டமாக உணவு தேடியும் தங்குமிடம் தேடியும் இடம் பெயர்ந்தான். ஓரேயிடத்தில் தங்கி வாழ்தலும் அதன் எதிரிடையான புலம்பெயர்தலும் மானுட இயல்பாகும். இடம் பெயர்ந்து கொண்டேயிருந்த சமூகம் ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்டது. மண் சார்ந்தும் தன்குழு சார்ந்தும் இனம் சார்ந்தும் வாழ்ந்திடும் அவசியம் ஏற்பட்டது. பின் காலவோட்டத்தில் வணிகத்துக்காகவும் உயர்கல்விக்காகவும் போர்க் காரணங்களுக்காகவும் புலம்பெயர்தல் நிகழ்ந்ததாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

நம் சங்க ஆற்றுப்படை நூல்களும் புலம் பெயர்தலைப் பதிந்திருக்கிறது. ஓரிடம்விட்டு புலம் பெயர்வதற்கு முன்னோடியாகக் பண்டைப் புலவர்களைச் சொல்லலாம்.. துறவிகளும் கூட ஓரிடத்தில் தேங்குதல் என்பது அற்றவர்கள். 'புலம் பெயர்தல்' என்கிற போது நாம் கவனிக்க வேண்டியது 'சென்று மீளுதல்', 'சென்றடைந்த இடத்திலேயே தங்கி வாழ்தல்' என்கிறது தொல்காப்பியம் மேனாட்டுத் தொடர்புகள் பற்றி, பிளினி, பெரிப்ளூஸ், தாலமி போன்ற மேலைநாட்டு கடலோடிகள் தம் குறிப்புகளில் இச்செய்திகளைப் பதிவு செய்துள்ளனர்.

பழந்துறை முகங்களான முசிறி, தொண்டி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் போன்ற இடங்களிலிருந்து யானைத் தந்தங்களும் வாசனைப் பொருட்களும் முத்தும் அரிசியும் இஞ்சியும் மிளகு போன்றன பாபிலோனியா, கிரேக்கம், யவனம், சோனகம், சீனம் என இன்ன பிற நாடுகளுக்கும் ஏற்றுமதியாயின. தமிழகத்தையும் ஈழத்தையும் தங்களின் பூர்வநிலங்களாகக் கொண்ட தமிழர்கள் பழங்காலத்திலிருந்தே பர்மா, சிங்கப்பூர், மலேயா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்று அங்கேயே தங்கியும் வாழ்ந்தும் மீண்டும் வந்தனர்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் உலகின் பல நாடு நகரங்களிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 'இன்று உலகில் 78 நாடுகளில் தமிழர் வாழ்வதாக' தமிழறிஞர் ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

நம் தமிழ்நாட்டிலும் யவனர், கிரேக்கர், சோனகர், சீனர் போன்ற நெடுந்தூரத்தினரான பிற நாட்டவர்கள் நம் நாட்டின் வளம், வீரம், கொடை, வாணிகம், அறிவு போன்ற காரணங்களால் தொழில் நிமித்தம் கருதி இங்கு தங்கிக் கலந்து வாழ்ந்திருக்கின்றனர் என்பதை,

"பல்லாயமொடு பதிபழகி
வேறுவே ருயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்தினி துறையும்,,,"

என்று பட்டினப்பாலை கூறுகிறது. பல பழந்தமிழ்ப்பாக்களும் இக்கூற்றை வலியுறுத்துகின்றன. 'புலம் பெயர் மாக்கள்' என்று சிலம்பில் வரும் சொற்றொடருக்குக் 'கடலோடிகள்' என்று அரும்பதவுரைகாரர் பொருளுரைக்கின்றார். 'புலம்பெயர் மாக்கள்' என்றாலே 'அயல்நாட்டினர்' என்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் லெக்சிகனும் உரைக்கிறது. இதன் மூலம் 'சென்று மீளுதலை' உயர்வாகக் கருதிய அக்காலத் தமிழர் 'சென்ற இடத்துத் தங்கி வாழ்தலைக்' குறைவு பட்டதாகவே நோக்கியுள்ளனர் எனத் தெரிகிறது. போர் மேற்சென்ற அரசர்களும் கூடத் தாம் வென்ற நாடுகளில் தன் சார்புடைய ஆட்சியை நிலைநிறுத்தாமல் திறை பெற்றுத் திரும்பியே இருக்கின்றனர். 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' எனும் தொல்காப்பிய வரியும் சென்ற இடத்தில் தங்கி வாழ்தல் இல்லை என்பதை உணர்த்துகிறது. மேற்சொன்ன இவை யாவையும் மேல்தட்டு மக்களின் வாழ்க்கைப் பதிவாகவே கொள்ளவேண்டும்.

மறுதலையாக வணிகத்திற்காகச் சென்றவர்களைச் சார்ந்தும் மற்றும் அவர்களுக்குப் பணியாளாகச் சென்ற மக்கள் அங்கேயே தங்கி இருந்து பணிபுரிந்திருக்க வேண்டும். இதற்குச் சான்று பிற்காலச் சோழர் காலத்தில் படைநடத்திச் சென்றவிடங்களில் எல்லாம் கோயில் கட்டுதலும், எய்திய கடல் வணிகம் போன்ற செயல்பாடுகளினாலும் மக்கள் அங்கு சென்று தங்கியிருப்பர் என்று உய்த்துணரப்படுகிறது. அவ்விதம் சென்றவர்கள் நாளடைவில் அவ்வவ்விடங்களையே தத்தம் வாழிடங்களாகக் கொண்டு வாழ்ந்திருப்பர் என்றும் கொள்ள ஏதுவாகிறது.

ஆங்கிலேயர் 1822 ஆம் ஆண்டு இன்றைய சிங்கப்பூர் பூமலையில் இரப்பர் கன்றுகளை பயிரிட்டு அது நன்றாக வளர்கிறது என்றுணர்ந்து பின் அதனைத் தன் ஆளுகைக்குட்பட்ட தென்கிழக்கு ஆசியாவில் பயிர் செய்ய வேண்டியும் தேயிலை மற்றும் தோட்டத் தொழில் சார்ந்த அடிநிலைப் பணிகளுக்காகவும் இருப்புப்பாதை

அமைக்கும் பணிகளுக்காகவும் தம் காலனியாதிக்கத்திற்கு உட்பட்ட பிஜி, மத்திய இலங்கை, போன்ற நாடுகளுக்கும் தமிழர்களை கைதிகளாகவோ கூலியாட்களாகவோ குடியேற்றினர்.

தமிழகத் தமிழரைப் போலவே ஈழத் தமிழரும் முன்பு கல்விக்காகவும் வணிகத்திற்காகவும் மட்டுமே புலம் பெயர்ந்திருக்கின்றனர். ஆனால் சொந்த நாட்டிலேயே உயிருக்கு உத்தரவாதமின்றி விரட்டப்பட்டும் வெளியேறியும் உலகின் பிற நாடுகளுக்கும் சிதறிச் செல்கிற அவல வாழ்க்கைக்கு இன்று தள்ளப்பட்டுவிட்டனர். சிங்கள ராணுவத்தின் அடக்கு முறையால் ஐரோப்பிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்தோரே இன்று அவர்களில் புலம்பெயர்ந்தோர். ஆங்கில ஆட்சியிடமிருந்து பெறப்பட்ட இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின், ஆக்கப்பட்ட இலங்கையின் புதிய ஆட்சித் திட்டத்தின் கீழ் படிப்படியாகத் தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நேர்ந்ததும், அதன் காரணமாக தமிழ்த் தேசியக் கருத்தாக்கம் வலுப்பெற நேர்ந்ததும் தனி ஈழக் கோரிக்கைக்கு வலுச் சேர்த்தது.

1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது சிங்கள ராணுவத்தால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ் நூலக எரிப்புக்குப் பிறகு ஜனநாயகப் போராட்டம் முற்றிலும் வலுவிழக்க நேரிட்டது. ஆயுதப் போராட்டம் தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு அன்றாட வாழ்வே போர்க்களத்திலேயே கழியும் அவலநிலை தொடங்கியது. அதன் விளைவாக இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, டென்மார்க், நார்வே, அயர்லாந்து, கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கெல்லாம் ஈழத் தமிழர் குடிபெயர நேரிட்டது.

தமிழகத்திலிருந்து வறுமை காரணமாகவும், ஆங்கிலேயரின் அடக்குமுறை காரணமாகவும் தோட்டத் தொழிலுக்காக ஆங்கிலேயரால் மத்திய இலங்கைக்குச் செல்ல நேர்ந்த மலையகத் தமிழரை நாம் தமிழகத்துடனே பொருத்திப் பார்க்க வேண்டும். இவர்கள் தலைமுறை தலைமுறையாக அங்கேயே வாழ்ந்தாலும் தம் வேராகத் தமிழகத்தையே நினைக்கின்றனர். அவ்வெண்ணத்தைத் தம் சந்ததியினருக்கும் கடத்தி வைத்தனர். இதுவே அங்கு தமிழர் இரு கூறாகப் பிரிந்திருப்பதற்கான காரணமுமாயிற்று.

இலங்கைக்கு மட்டுமின்றி தென்னாப்பிரிக்கா, பிஜித் தீவு, மலேஷியா, பர்மா போன்ற நாடுகளுக்கும் இரப்பர்-தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகக் கப்பலேறிச் சென்று கைகளும் கால்களும் சோர்ந்து விழும்படி உழைத்தனர். அத்தொழிலாளர்களின் கண்ணீரும் வியர்வையும் அம்மண்ணில் கலந்து உரமாய் மாறி அந்நாடுகளின் வளர்ச்சிக்குத் துணை நின்ற வரலாற்றை எவரும் மறுக்கவோ மாற்றவோ இயலாது.

ஆனால், இன்றைக்கு உயர்கல்விக்காகவும், உயர்பணிகளுக் காகவும் ஐரோப்பிய, அமெரிக்க, ஆஸ்திரேலிய நாடுகளுக்குச் செல்வோர் அங்கேயே நிலைத்து வாழத் தலைப்பட்டனர் தலைப்படுகின்றனர். மேலும் அங்கு கிடைக்கும் வசதியும் வாய்ப்புகள் கருதியும் அதற்குப் பழகி இருந்ததாலும் அங்கும் தம் மொழி, சமயம், சடங்கு முதலான பண்பாட்டுக் கூறுகளைப் பேணி வருகின்றனர். ஆனால் அரபு நாடுகளுக்குத் தொழிலின் காரணமாகச் செல்லும் தமிழர் அந்நாட்டின் சட்ட திட்டங்கள் காரணமாக பணம் ஈட்டிய ஐந்து, பத்தாண்டுகளில் திரும்ப மீளுதலையே செயலாக்குகின்றனர். அன்றி அந்நாடுகளில் நிலைத்து வாழ்வோர் குறைவே.

இந்தியத் தேசத்தில் பிற மாநிலங்களுக்குப் பிழைப்புத் தேடிச் சென்ற தமிழர்கள் இந்தியா முழுக்கப் பல்கிப் பெருகியிருக்கின்றனர். குறிப்பாக மும்பை, தில்லி, பெங்களூரு முதலான இடங்களில் தமிழர்கள் பெருமளவில் வாழ்கின்றனர். இந்தியநாட்டின் பிற மாநில மக்களும் குறிப்பாக கேரள, ஆந்திர மக்களும் மேற்சொன்ன நாடுகளிலும் இந்தியாவின் பல மாநிலங்களிலும் பரவி வாழ்கின்றனர். ஆனாலும் தாக்குதல்களுக்குப் பெரும்பாலும் தமிழரே உள்ளாகின்றனர் இதன் காரணத்தை ஆராய்கையில்,

- பழம் பெருமைப் பேசித் திரியும் தன்மை
- பிற பண்பாடுகளைத் தம்மிலும் கீழாக மதிக்கும் மனோபாவம்
- சென்று வாழுமிடங்களில் பொருந்தி வேர்கொள்ளாத் தன்மை

ஆகியவற்றைத் தமிழர்தம் குறைபாடாகக் குறிப்பிடலாம். தமிழ் மக்கள் புலம் பெயர்வது என்பது நீண்ட காலமாகவே நிகழ்ந்து வருகின்ற ஒரு செயல் இருந்தபோதிலும், அத்தகைய பெயர்வுகள் பொருளியல் மேம்பாட்டுக் காரணங்களுக்காகவே பெரும்பாலும் நிகழ்ந்துள்ளன என்பதை வரலாறு காட்டுகிறது. அஃதாவது வாழ்வாதாரத்திற்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும், அடிப்படை உரிமைகள்பெற என நிறையக் கராணங்களுக்காக புலப்பெயர்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. சமீப காலத்திய மூலக்காரணமாக பொருளியல் மேம்பாட்டுடன் பின்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் மிகக் குறைந்த சதவீதத்திலே தமிழ் மக்களைத் தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்திட பெரிய செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனில் மிகையில்லை.

## பயன்பட்ட நூல்கள்

தென்கிழக்காசிய தமிழர் பண்பாடு - க. த. திருநாவுக்கரசு

தமிழர் வரலாறும் பண்பாடும் - மாணிக்கவேலுச்சாமி

மலையகத் தமிழர் வாழ்வியல் - லாரன்ஸ்

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர் - 1956 ஆண்டு மலர்

# சிங்கப்பூர்த் தமிழர் வரலாறு

முனைவர் இலலிதாசுந்தரம்
14, வள்ளலார் தெரு,
ஜெகதாம்பிகை நகர், பாடி
சென்னை.

## தோரணவாயில்

இந்தியாவின் சிட்னி எனஅழைக்கப்படும் சிறிய தீவான சிங்கப்பூர் தமிழ் நாட்டின் தென்கிழக்கே 1500 மைல் தொலைவில் உள்ளது. இந்நகரம் ஒருதுறைமுக நகரமாகும். தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் ஒன்று சிங்கப்பூர். சிங்கப்பூரிலுள்ள புலம்பெயர்ந்தவர்களின் வரலாற்றை வரைவான் புகுகின்றேன்.

## புலம் பெயரக் காரணங்கள்

எந்த ஒரு செயலுக்கும் முக்கியக் காரணம் உண்டு. தாம் பிறந்த நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்குக் குடியேறி வாழ்பவர்களையே புலம் பெயர்ந்தோர் என்பர்.

1. ஆங்கிலேயர்கள் தங்களின் அனைத்து வேலைகளுக்கும் கூலித் தொழிலாளர்களாகத் தாம் வெற்றி கொண்ட நாட்டு மக்களை தத்தம் நாடுகளுக்கு அடிமைகளாகக் கொண்டு சென்றனர்.

2. சிலர் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கு இணங்கவும்; வாணிகம் செய்வதற்கும்; பொருளாதார மிகுதியாலும், புதிய இடங்களைத் தம் வயப்படுத்தி உரிமை கொண்டாடவும் புலம் பெயர்ந்தனர். புலம் பெயர்ந்த நாட்டின் சூழல்; வளம் பிடித்துப் போக அங்கேயே தங்கிவிட்டனர்.

3. இக்காலத்தில் கல்வி கற்றவர்கள் மிகுந்த பொருளைப் பெற வேண்டி புலம் பெயர்கின்றனர்.

4. அரசர்களும் தங்கள் ஆட்சியைப் பரப்பவும் பிறநாட்டு வளங்களைத் தம் வயப்படுத்தவும் வெற்றி பெற்ற மக்களைத் தம் நாடுகளுக்கு அடிமைகளாகக் கொண்டு வந்தனர்.

## புலம் பெயர்ந்த தமிழர்கள் குடியேறியுள்ள நாடுகள்

மலேசியா, சிங்கப்பூர்; பர்மா, தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட்நாம், ஜப்பான், கொரியா, சீனா, பிஜித்தீவு, பிரிட்டன் , அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, செய்செல்சு, மொரீசியஸ், ரீயூனியன்; மேற்கு செருமனி, உருஸ்சியா, ஸ்வீடன்,

ஆப்பிரிக்கா, லிபியா, பிலிப்பைன்ஸ், ஹாங்காங் முதலிய நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

## புலம் பெயர்ந்தோர் அனுபவித்த கொடுமைகள்

1. அடிமைகள் பிழைப்பு தேடிச் சென்றவர்க்ள், மிகுந்த கொடுமைகளுக்கு ஆளாயினர்.

2. ஆங்கிலேயர்கள் கல்லாத பாமர மக்களிடம் வெளிநாட்டு வேலை நிறையப் பொருளீட்டலாம். சுகமாக வாழலாம். என ஆசை காட்டி மோசம் செய்தனர். செம்மறியாட்டை அடைப்பதுபோல் அடைத்துக் கப்பலில் அவதியுறச் செய்தனர்.

3. தங்குவதற்கு வீடின்றி கூடாரம் அமைத்து அதில் பல பூச்சி கடிகளுக்கும் ஆளாகித் துன்பப்பட்டனர்.

4. சரியான ஆடைகள் கிடையாது. முழங்காலுக்கீழ் வேட்டி சேலை கட்டக்கூடாது. தோளில் துண்டு போட்டுக் கொள்ளக் கூடாது. இரு கைகளையும் கட்டிக் கொண்டு நடந்து செல்ல வேண்டும்.

5. காலை 6 மணி முதல் மாலை முன்னிரவு வரை வயல் வெளியிலும், சேற்றிலும் இரவில் சேரியின் இருட்டிலும் வாழ வேண்டும்.

6. அனைத்து வேலைகளையும் செய்யும் இவர்கள் ஆண்டைகள் மனமுவந்து கொடுக்கும் பதர் நெல், கேழ்வரகுக் கதிர்கள் அழுகிய காய்கறிகளைச் சமைத்து உண்ண வேண்டும்.

7. வேத சாத்திரம் மனுதருமத்தில் இவ்வடிமைகளின் தீட்டு விஷத்தை விடக் கொடியது எனக் கூறுகிறது. இக்கருத்தினை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

8. இன்றைய நிலை : ஏழு நூறு ஆண்டுகளுக்கு முன் சென்ற ஒப்பந்தத் தொழிலாளர்களின் வழிவழிவந்த நான்காவது, ஐந்தாவது தலைமுறையினர் இன்றும் மலேசியா, சிங்கப்பூர் மற்ற பிற நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

## சிங்கப்பூரின் அமைப்பு

இச்சிறிய தீவு குறுக்கும் நெடுக்கும் 22 5 41.8 கி.மீ தெலைவு உடையது. 54 அண்டைத்தீவுத் திட்டுக்கள் உடையது. 618.1 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. 4.48 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். சீனர்கள் 77% மலாய்க்காரர்கள் 13.7% இந்தியர்கள் 8.4% பிற இனத்தவர்கள் 1.4% இவர்களில் இந்தியர்களில் 65% தமிழர்கள். மலையாளம், தெலுங்கு, பஞ்சாபி, குஜராத்தி பேசுவர்களும் வாழ்கிறார்கள்.

## சிங்கப்பூரின் அதிகாரத்துவ மொழிகள்

எந்த ஒரு நாட்டிற்கும் மொழி இன்றியமையாதது. மலாய் மொழி தேசிய மொழியாகவும் சீனம், மலாய்; தமிழ், ஆங்கிலம்

அனைத்தும் அதிகாரத்துவ மொழிகளாகும். ஆங்கிலம் தொடர்பு மற்றும் வணிக மொழியாக வலம் வருகிறது.

## தொழில்களின் இருப்பிடம்

பல தோட்டங்கள், பண்ணைகள், தகரம் உருக்கிப் பிரித்தெடுத்தல் ரப்பர், (துடைப்பான்) பதனஞ்செய்தல் பழவகைகளைத் தகர அடைப்புகளில் அடைத்தல் பல்வேறு தொழிற்சாலைகள் முதலியன உள்ளன. இரப்பர், தகரம் கொப்பரைத் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இத்தனை தொழில்கள் இருக்கும் காரணத்தினால் தான் மக்கள் சிங்கப்பூருக்கு புலம் பெயர்ந்தனர். 1819 இல் மலாயாவின் தென் பகுதியில் அமைந்துள்ள வளமான துறைமுக நகரமான சிங்கப்பூரை பிரிட்டீசார் தங்கள் பிடிக்குள் கொண்டுவந்தனர்.

## சிங்கப்பூர் வரலாறு

ஒரு நாடு என்றால் அந்த நாடு எவ்வாறு உருவாயிற்று யார், யார் காரணகர்த்தாக்கள் என அறிவது முக்கியம். அரச வம்சத்தவர் முக்கிய காரணகர்த்தாக்களாக அமைகின்றனர். கி.பி 2013 ஆம் ஆண்டில் பு-லூ-சுங் என்ற தீவே சிங்கப்பூர் என நம்பப்படுகிறது. பாளம் பாங்கை ஆண்டு வந்த மன்னர் தெமாசக் மாவட்டத்தை சிங்கப்பூர் என்று 13ஆம் நூற்றாண்டுகளில் அழைக்கத் தொடங்கினர். இத்தீவின் மன்னர் மஜபாகிட் அரசரால் 1376ல் தோற்கடிக்கப்பட்டவுடன் இத்தீவின் முக்கியத்துவம் நலியத் தொடங்கியது.

## சுவடிகள் தரும் சான்று

கால வரலாற்றை அரிய சுவடிகள் பெரிதும் உதவுகின்றன. இராசேந்திர சோழனின் முன்னோரான ஸ்ரீதிரிபுவனா என்பவரே சிங்கப்பூரின் முதல் அரசர் என மலேசியாவின் வரலாறு அல்லது செய்யாரா மெலாயூ என்னும் சுவடியில் கூறப்படுகிறது. இச்சுவடிகளில் சிங்கப்பூரின் அரச பரம்பரைச் செய்திகள் காணப்படுகிறது. மலாயா, சிங்கப்பூர்; இந்தோனேசியாவிலும் சோழர்களின் புகழ் ஓங்கியிருந்ததை அறிய முடிகிறது.

## சிங்கப்பூரின் பழமை

சர் ஸ்டாபோர்டு ராஃபில்ஸ் என்ற ஆங்கிலேயர் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்திற்காக 1819 ல் சுல்தான்களிடமிருந்து உரிமை பெற்று சிங்கப்பூர் தீவைக் களமாக அமைத்தார். சுமார் 200 ஆண்டுகால பழமை வாய்ந்தது. பல இனத்தவர்களும் வாழ்ந்தனர். ஒரு மீன் பிடி கிராமமாக இருந்தது. 1800 முதல் 1853 வரை தமிழர்களும் பிறரும் இங்கு புலம் பெயர்ந்தனர். ராஃபில்ஸ் ஸின் முயற்சி சிங்கப்பூர் சுங்கமற்ற துறைமுகமாகவும்; சிறந்த வாணிபத்தலமாகவும் மாறியது. அண்டை நாட்டினர் பலரும் புலம் பெயர்ந்தனர்.

### சிங்கப்பூரின் வளர்ச்சி

சிங்கப்பூரில் குடியேறிய தமிழர்கள் சாலைகள் அமைக்கவும் இரயில் போக்குவரத்து அமைப்பதற்கும் துறைமுகத்தை நவீனமாக்கவும் குறைவான ஊதியத்தில் பணி புரிந்தனர். இரப்பர் தோட்டங்களிலும், இறக்குமதி செய்யவும் தமிழர்கள் பணி செய்தனர். சிங்கப்பூர் வளர்ச்சியின் கடின உழைப்பில் 1825 ல் தமிழ்நாட்டிலிருந்து கைதிகள் கொண்டு வரப்பட்டனர். சிங்கப்பூரில் பணிபுரிந்தவர்களுக்குச் சில உரிமைகளும், சலுகைகளும் அளிக்கப்பட்டதால் தமிழர்கள் சிங்கப்பூரில் மிகுதியாகக் குடியேறினார். 1915ல் தமிழர்களின் தொகை மூன்று மடங்காகப் பெருகியது. முதல் உலகப் போர் சமயத்தில் அனைத்து இனத்தினரும் செல்வாக்குள்ள வாணிகச் சமூகமாக மாறிவிட்டனர். இரண்டாம் உலகப் போருக்கு முன் சிங்கப்பூரின் மக்கள் தொகை அதிகமானது. சீனர்கள், இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்களும் சிங்கப்பூரின் சமூக பொருளாதார அமைப்பை உருவாக்குவதில் பெரும்பங்கேற்றனர்.

### சீர்மையடைந்த சிங்கப்பூர்

சிங்கப்பூர் சிங்கங்களின் நாடு அதனால்தான் சிங்கத்தை அடையாளச் சின்னமாக அமைத்துள்ளனர் தமிழர் எங்கிருந்து வந்து குடியேறினாலும் இந்த நாடு என் நாடு என்ற உணர்வுடன் முன்னேற வேண்டும் என்ற வேட்கையுடன் இரைதேடும் சிங்கங்களைப்போல் வாழ்கிறார்கள். சிங்கப்பூரின் சிங்கங்களை பெரியோர்களின் சீர்திருத்த இயக்கங்களும் சங்கங்களும் தட்டி எழுப்புகின்றன.

### அரசாங்க மொழி

சிங்கப்பூரில் தமிழ் அரசாங்க மொழியாகும். நாடளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் பேசுவதை தாங்கள் விரும்பிய மொழியில் அதன் மொழி பெயர்ப்பை செவிமடுக்கும் வசதி இருப்பது உலகில் எங்குமேயில்லாத ஒரு புதுமை

### வானொலி

தமிழ் நிகழ்ச்சிகளை எப் எம் ஸ்டிரீயோ ஒலிபரப்பில் அதிகாலை முதல் நள்ளிரவு 2 மணி வரை கேட்டு மனமகிழ்ந்து நிம்மதி அடைகிறார்கள். தமிழ் நிகழ்ச்சிகளை அள்ளித் தருவதற்கோர் வானொலி என்றால் அது சிங்கப்பூரில் தான் உலகிலேயே முதல் தமிழத் தொலைக்காட்சி முதல் வண்ணத் தொலைகாட்சி நிகழ்ச்சி சிங்கப்பூரில்தான் தொடங்கப்பட்டது.

### பண்டைய மரபு

'வினையே ஆடவருக்கு உயிரே
மனையுரை மகளிருக்கு ஆடவர் உயிர்'

தொழில் செய்து பொருள் சேகரிப்பது ஆடவரின் செயல் என்றும் செல்வத்தைப் பெண்கள் பாதுகாத்து ஆடவரைக் காப்பது பெண்களின் செயல் என்றும் கூறப்படுகின்றன.

'முந்நீர் வழக்கம் மகடூஉ வொடு இல்லை' (தொல். அகத் 37) என்ற வரையரையின்படி கடல் கடந்து ஆண்கள் வாணிகம் செய்யமுற்படும் போது பெண்களை உடன் அழைத்து செல்வதில்லை என்பது மரபு. ஆனால் கண்ணதாசன் ஆச்சி என்ற தனது நாவலில் தாயார் கடல்கடந்து செல்கிறார் எனக் கூறுகிறார்.

**பண்பாடு**

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்பது கலித்தொகைக் கூற்று. மக்களின் சமூக வாழ்க்கையில் வளர்ச்சி கருதி பாங்கு அறிந்து பெருமை உணர்ந்து பயன் தெரிந்து ஒழுகும் பண்பைத் தான் பண்பாடு என்று தமிழ்ச் சான்றோர் குறிப்பிடுவர். இதற்குச் சான்று உலகத் தமிழர்கள்.

**சிங்கப்பூர்- தமிழ்நாடு தொடர்பு மூன்று பிரிவுகள் உண்டு**

1. ஆங்கிலேயர் குடியேற்றத்திற்கு முன்பு
2. ஆங்கிலேயர் ஆட்சி காலம்
3. சுதந்திர சிங்கப்பூர்

குடியேற்ற நாடாக இருந்தது. நீரிணை குடியேற்றங்கள் (பினாங் சிங்கப்பூர் மலாக்கா) தமிழ் பணியாட்களை சிங்கப்பூர் செல்ல அனுமதித்தனர். 1910 ஆம் ஆண்டில் தொழிற்கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டது. தமிழ்க் கூலிகள் ஒப்பந்தக் கெடு முடிந்த பின்னரும் நீடித்துத் தங்க முற்பட்டனர். 1950 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டதால் குடியேற்றங்களில் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. தற்பொழுதுகூட சிங்கப்பூர் செல்வோர் எண்ணிக்கை மிகவும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

**குடியேற்றங்களின் பிரிவுகள்**

1.குற்றவாளிகளின் குடியேற்றம் 2. கட்டுப்படுத்தப்பெற்ற குடியேற்றம் 3. தாமாக வந்த குடியேற்றம். 1857 வரை குடியேற்றங்கள் நீடித்தது. 1890இல் ஒப்பந்தப் பிணைப்புக்கு உட்படாத உழைப்பாளராகிய தமிழர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு ஆயிற்று. 1931ஆம் ஆண்டில் நீரிணைக் குடியேற்றங்களில் எல்லா இனத்தினரும் மதத்தினரும் சமமாகக் கருதப்பட்டனர். பணிகள், உரிமைகள் சமவாய்ப்பு அளிக்கப்பட்டது.

**சுதந்திர சிங்கப்பூர்**

1965 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7ஆம் நாள் சிங்கப்பூர் தனி முழு உரிமையுள்ள சுதந்திர நாடு ஆகியது. சிங்கப்பூரின் வளர்ச்சியில் தமிழர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. அரசு வரலாற்றுச் சின்னங்கள்

மாரியம்மன் கோவில்களாக, ஸ்ரீ பெருமாள் கோவில், நாகூர் தர்க்கா போன்ற 19 சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றது.

### திருவிழா

தமிழர்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் தைத் திங்களில் மற்றொரு நாளைத் தேர்ந்தெடுத்து அந்நாளை தமிழர் திருநாள் எனச் சிங்கப்பூர் தமிழர்கள் கொண்டாடுகின்றார்கள். தீபாவளித் திருவிழாவைக் கூட அனைத்து பேருக்கும் உரிய முறையில் ஒரு விடுமுறை நாளில் கொண்டாடி விருந்து போற்றியும் அகமகிழ்கின்றர்.

### தமிழர்கள் சிங்கப்பூர் குடிமகன்கள்

இன்று 75 விழுக்காட்டினர் தமிழர்கள் சிங்கப்பூர் குடிமகன்கள் ஆவார். எந்த ஒரு நபரும் எந்த நாட்டில் பிறந்தார்களோ அந்தநாட்டு குடியுரிமை உண்டு. சிங்கப்பூரில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் குடியுரிமை உண்டு. பதிவு செய்தவர்களுக்கும் அயல்நாட்டவர் களுக்கும் குடியுரிமை பெற வாய்ப்புண்டு.

### தமிழ்க் கல்வி

சிங்கப்பூர் நிறுவப்பட்ட காலத்திலேயே தமிழ்க் கல்வி தொடங்கப்பட்டது. 2ம் உலகப் போருக்கு முன்பே 18 தமிழ்ப் பள்ளிகள் இருந்தன. 1945க்கு பின்னர் இரண்டாம் மொழியின் முக்கியத்துவம் உணர்ந்தனர். சிங்கப்பூர் தமிழைப் பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ், எனப் பிரிக்கலாம். பேச்சுத்தமிழை யாழ்ப்பாணத் தமிழ், இந்தியத் தமிழ் என இருவகைப் படுத்தலாம்.

### பொருளாதார நிலை

சமூக அமைப்பின் மேம்பாட்டில் 25 விழுக்காட்டினர் வணிகர்களாவும்; அரசு அலுவலர்களாகவும் உள்ளனர். வணிகர்கள் தமிழ் நாட்டுடனும் மற்ற இந்தியர்களுடனும் தொடர்பு வைத்திருந்தனர். 75 விழுக்காட்டினர் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். நான்கில் மூன்று பங்கினர் அயல்நாடுகளில், சிங்கப்பூரில் பிறந்தவர் ஆவார். ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் தமிழ் வணிகர்கள் சீனர்களை நம்பி வாழ்கிறார்கள். தமிழர்கள் மருத்துவர்களாகவும் வழக்குரைஞர்களாகவும் இருக்கிறார்கள் என்பதில் பெருமிதம் அடையலாம்.

> 'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும்' (குறள் : 616)

என்பதற்கிணங்க தமிழ் மக்களின் கடின உழைப்பு பெரிதும் போற்றதற்குரியது.

### குடும்பச் சூழ்நிலை

அன்றும், இன்றும் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் பிள்ளைகளிடம் பேசுவதற்கே வார விடுமுறை நாட்கள்

வரும் வரை காத்திருக்க வேண்டி உள்ளது. பாசத்திற்கும், உறவிற்கும் ஏங்கித் தவிக்கின்றனர். தமிழ் மொழியில் பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும் பெற்றோர்கள். பேச்சுத்தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படையாகும். பெற்றோர்களின் அன்பும், அரவணைப்பும் இல்லாத நேரத்தில் பிள்ளைகள் தடம் மாறிச் செல்கின்றனர். இந்நிலை மாற வேண்டும்.

### தமிழனின் நிலை

தமிழன் தாழ்ந்தவன். தலை குனிந்து வாழ வேண்டியவன் என்று பலர் எண்ணிச் செயல்படுகிறார்கள். 'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்பது தமிழனின் தாரகமந்திரம். 'தமிழனால் முடியாதது எதுவுமில்லை,' 'தமிழால் முடியாதது எதுவுமில்லை; தமிழன் எதற்கும் அஞ்சாதவன், வீரம் நிறைந்தவன். தமிழர் வாழ்வு புலம் பெயர்ந்த நிலையில் பல நாடுகளில் வஞ்சிக்கப்பட்டுள்ளது. ஆண்டாண்டு காலமாக தமிழன் அடிமைகளாக வாழ்வதும், சாவதும், அவனின் தலை விதியாக உள்ளது. சிங்கப்பூரை உருவாக்குவதில் தமிழர்கள் பெரும்பங்கு வகித்து சாதித்து உள்ளார்கள்.

### புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்ப்பெயர்கள்

தமிழர்கள் தாம் புலம் பெயர்ந்த நாட்டு மக்கள் இலகுவாகு அழைப்பதற்காக மாற்றங்கள் மேற்கொண்டனர். புதிய இலகு உச்சரிப்புப் பெயர்களைச் சூட்டல், வழக்கிலுள்ள தமிழ்ப் பெயர்களைத் திரிவு படுத்தல் என இருவகையாக மேற்கொண்டனர். தமிழ்க் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் பொழுது ஆங்கில ஆதிக்கத்தைக் காணலாம். தமிழுக்கு உரித்தான ஓசைகள் தவிர்க்கப்பட்டு ஆங்கில மொழியில் உச்சரிக்கக் கூடிய பெயர்கள் வழக்குக்கு வருகின்றான்.

உதாரணமாக 'ழகரம் தமிழிலும், மலையாளத்திலும் மட்டுமே உள்ளன. 'ழகரம் கொண்ட பெயர்களை வைப்பதையே தவிர்த்து விடுகிறார்கள் நீண்ட பெயர்களாக இல்லாமலும், ஆங்கிலேயர்கள் உச்சரிக்கக் கூடிய பெயர்களாகவும் இருக்க வேண்டும் என எண்ணுகிறார்கள். தாத்தாவின் பெயரையோ, பெயரடியையோ, பேரன், பெயர்த்திக்கு வைக்கும் தமிழ்ப் பண்பாடு கைவிடப்பட்டது, குறித்து மனம் வேதனை கொள்கிறது. இலகு தமிழ்ப் பெயர்களின் தாக்கம் இன்று தாயகங்களிலும் பரவுவது வேதனைக்குரியது. புலம் பெயரும் தமிழர்கள் தமது பெயரை ஆங்கிலேயர் உச்சரிப்பதற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்கிறார்கள்.

### புலம் பெயர்ந்தோர் கலை இலக்கிய முயற்சிகள்

புலம் பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய முயற்சி என்பது கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, ஓவியம் எனத் தீவிரமடைகிறது. நான் கண்ட அரியதொரு காட்சியை கூற விழைகின்றேன். கலைப் போட்டி நடக்கும் சமயத்தில் தீவுத் திடலில் மணலில் பல புராதனச்

சின்னங்கள், கோவில்கள், உலக அதிசயங்கள் எனப் பலவற்றை மணலில் உருவாக்கி இருந்தனர். இன்றும் என் நினைவில் உள்ளது. 'கைவண்ணம் இங்கே கண்டேன்' என்ற சினிமா பாடல் வரிகள் என் நினைவில் ஊஞ்சலாடுகின்றன. கூத்துக் கலைகள் தெரு நாடகங்கள், குறும்படங்கள் மூலமாக பிரச்சனைகளை உலக சமுதாயத்திற்கு எடுத்துரைக்கின்றனர். படைப்புகள், சாதி, அரசியல், மதம், இலக்கியக் கோட்பாடு, கருத்தியல் வாறாகப் பன்முகத்தன்மை கொண்டவையாய் விளங்குவது மிகவும் குறிப்பிடத்தக்கது.

### தன்பால் ஈர்த்தல்

வளரும் நாடுகளில் ஒன்றாகத் திகழும் புலம் பெயர்ந்தோர் வாழும் சிங்கப்பூர் விரைந்து முன்னேறி வருகிறது.

'உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும்
சேரா தியல்வது நாடு' (கு. 734)

என்ற கூற்றுக்கு இணங்கவும்,

'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு' (கு. 739)

என்ற திருவள்ளுவர் கூற்றுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது சிங்கப்பூரும், சிங்கப்பூர் தமிழர்களும் ஆவர்.

### நிறைவுரை

ஓடும் ஆறு போன்றது பேச்சுமொழி. அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது. எழுத்து மொழி என எளிமையாக விளக்கம் தருகிறார். மேல்நாட்டு அறிஞர் வெண்ட்ரியே. அதற்கொப்ப,

'பன்னாட்டு மக்களும் வாழும் தீவு
பலமொழியும் பல்கலையும் வளரும் தீவு
எல்லோரும் போற்றுகின்ற சிங்கைத்தீவு'

பற்றி எழுத ஏடு எடுத்தேன். நேரமும், பொழுதும் பக்கங்களும் போதவில்லை. சிங்கப்பூரில் புலம் பெயர்ந்தோர் வரலாறு பற்றியும், இன்று வளர்ச்சி அடைந்து சிங்கமென உயர்ந்து நிற்கும் புலம் பெயர்ந்தோர் வரலாறு - சிங்கப்பூர் பற்றி அளித்து மகிழ்வு அடைகின்றேன். படித்து இன்பம் துய்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

# சிங்கப்பூர்த் தமிழ்க்கல்வி வரலாறு

கவிஞர் பரந்தூர் இராமசாமி
தமிழ்நாடு

## முன்னுரை

உலகில் மொழிகளுக்கெல்லாம் தமிழ்மொழி முதன்மையான தென்றும், எளிமையும், இனிமையும் உடையதென்றும், தனிமொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்றும் தமிழ்கூறும் நல்லுலகில் கால்டுவெல் போன்ற தமிழறிஞர்கள் மட்டுமன்றி, தமிழை விரும்பிக் கற்ற உலக அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழ்மொழி உலகின் மிக உயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும், மரபுச் செல்வங்களையும், தனித்துவமாகப்பெற்று மொழித்தாக்கம் பழமையும் வளமையும் கொண்டு செம்மொழியாகத் திகழ்கிறது. தமிழ்மொழிப்பள்ளிக் கல்வி கற்பித்தலுக்கென கல்வி மொழியாக, சமுதாயப் பணிகளுக்கேற்ப வாழ்வியல் நடைமொழியாக வளர்ச்சிப்பெற்று கருத்து பாரிமாற்றம், உணர்வுகளால் நல்ல அனுபவங்களைப் பெரும் அளவில் மனிதரை மாமனிதராக வாழ வைக்கிறது.

உலகளாவில் வாழும் தமிழர்கள், தமிழ்மொழி, கலை, இலக்கியம், சமயம், பண்பாடு இவைகளால் மேம்பட்டு சிறந்தவர்களாக விளங்கினாலும், அன்றிருந்த பல்வேறு சமூகச் சூழல்களின் காலமாற்றங்களால் வெவ்வேறு காரணங்களால் தாயகம் கடந்து, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியசு, பர்மா, தென் ஆப்பிரிக்கா ஆகிய மாற்று நிலங்களுக்குச் சென்று குடியமர்ந்தார்கள். புலம்பெயர்ந்த சமூகத்தினர் சாதி, மதம், மொழி, நாடு ஆகிய எந்தப் பிரிவினையும் இல்லாமல் கருத்துவேறுபாடுகள் இல்லாமல் மனிதரை மனிதர் மதித்து, அன்பு காட்டி மனித நேயமுடன் எல்லாரும் உறவாளர்கள் எனும் ஒருமைப் பாட்டுடன் உள்ளன்போடு வாழ்வதே பெரும் மகிழ்ச்சியாகும் என்பதை "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்று கணியன் பூங்குன்றனார் தெளிவான கவிதை வாரிகளால், எடுத்துரைக்கின்றார். உலகில் எந்த இடமானாலும், எங்கு போய்வாழ்ந்தாலும், வாழும் உரிமை நமக்குண்டு என்பதையும், உலகம் யாவர்க்கும் ஒன்றே என்பதையும் வாழும் வகையை உணர்த்தவல்ல, தமிழ்ப் பண்பாட்டை வளர்க்க வல்ல அவ்வரிகள் அமைந்துள்ளதை அறியலாம்.

தாயகம் கடந்து வெளிநாடுகளில் வாழ்வதென்பது, மனித வாழ்வை உயர்த்தி, மேம்படுத்துவது மட்டும் அல்லாமல் அந்நாட்டின்

தமிழ்க்கல்வியின் வாயிலாக எல்லா நிலையிலும் சமுதாயம் வளர்ந்து நிற்கவும், வளர்த்துக்கொள்ளவும் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும், முதன்மையான தமிழ்க்கல்வி அவசியமாகிறது.

## உலக அரங்கில் தமிழ்

தமிழ், தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜி , மொரிசியசு, பர்மா, தென் ஆப்பிரிக்கா, வியட்நாம் முதலிய நாடுகளிலும் பேசப்படுகின்றது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தாய்மொழியாக கல்வி மொழியாக, துணை ஆட்சி மொழியாக, செய்திப்பரவல் தொடர்பு மொழியாக இலக்கிய மொழியாகப் பயன்பட்டுவருகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்சு, செர்மனி, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா முதலிய நாடுகளில் தமிழ் மொழி பல்கலைக்கழகங்களில் அறிஞர்கள் விரும்பிப் பயிலும் மொழியாக அமைந்துள்ளது. யுனெசுகொ நிறுவனம் தமிழ் மொழியில் கூரியர் இதழ் வெளியிடுவது தமிழுக்குச் சிறப்பாகும். கொழும்பு, பேரதேனியா, கெவானியா, நுகெதா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் தமிழைக் கற்பிக்கின்றன. மலேசியப் பல்கலைக்கழகத்திலுள்ள இந்தியத்துறை தமிழ்மொழிப் பயிற்சியில் மிகச்சிறந்த பங்கு வகிப்பதுடன் இத்துறை உலகப் புகழ்பெற்ற ஆய்வியல் துறையாக விளங்குகிறது. கோலாலம்பூரில் உள்ள இப்பல்கலைக்கழகம் மொழியியல் துறையில் ஈடுபாடு கொண்டு உள்ளதுடன், தமிழ் இலக்கியம், இலக்கணம், தத்துவம் போன்ற துறைகளில் பாடுபட்டு வருகிறது. முதன் முதலில் முதல் உலகத்தமிழ் மாநாட்டினைக் கூட்டி நடத்திய பெருமையும் சிறப்பும் கண்டது இப்பல்கலைக்கழகமாகும். அமெரிக்காவில் தமிழ்மொழிக் கென்று சிறப்பிடம் தருவது மட்டுமல்லாமல் அங்கு சிகாகோ பல்கலைக்கழகம் தமிழ்ப்படிப்புக்கு சிறந்த இடமாகவும் திகழ்கிறது. சிகாகோ பல்கலைக்கழகம், சிகாகாவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகம், பெர்க்கிலியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம், சியாட்டியிலுள்ள வாஷிங்டன் பல்கலைக்கழகம், ஹோனாலுவி லுள்ள ஹவாய்ப் பல்கலைக்கழகம் ஆஸ்டினிலுள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகம் ஆகியவைகள் தமிழ்கல்விக்கும், தமிழாய்வுக்கும், சிறப்பான வழிகளைச் செய்துள்ளது. இதுபோன்று உலக மொழிகளில் தமிழ்மொழி பேச்சிலும் தமிழ்மொழிக் கல்வியிலும், திகழ்ந்து விளங்குவதைக் காண்கின்ற போது ஈங்கு குறிப்பாக "அயல்நாட்டில் தமிழ்க்கல்வி வரலாறு" என்பதை எடுத்துக்காட்டும் வகையில் சிங்கப்பூரில் தமிழ்க்கல்வி எப்படி வளர்ந்து வரலாறு படைத்துள்ளது என்பது பற்றி ஆரம்ப நிலையிலிருந்து அந்நாட்டின் தமிழ்க்கல்வி வளர்ச்சியையும் சிறப்பையும் பற்றி எடுத்துரைக்கவே சுருக்கமாக ஓரளவில் இக்கட்டுரை அமைகிறது.

**தமிழ்க்கல்வி வரலாறு**

சிங்கப்பூர் சிறுதீவாக இருந்தாலும் இந்நாடு வாழ்வியல், கலை பண்பாடு, கலாச்சாரம், நாட்டின் தூய்மை, இயற்கை வளமை ஆகியவற்றில் உயர்ந்து நிற்பதுடன் தமிழக்கல்வி வரலாற்றில் மிகுந்த சாதனைக் கண்டு சிறந்து விளங்குவது அனைத்து நாடுகளாலும் பாராட்டுக்குரியது. சிங்கப்பூரில் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட தனியார்த் தமிழ்ப்பள்ளிகள் இருந்த தருணத்தில், இருப்பத்திமூன்று பள்ளிகளை அரசாங்க உதவிபெறும் பள்ளிகளாக மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்க்கல்விக்கழகம் நிறுவப்பட்டு அதன்வழியாக தமிழ் குழந்தைகளுக்கும், வயது வந்தவர்களுக்கும் தமிழ் ஆங்கிலம் மற்ற மொழிகளும் கற்றுத்தரப்பட்டது. சொற்பொழிவு ஒலிப்பரப்புகள், நூல் நிலையங்கள் நூல் வெளியீடுகள் வாயிலாக தமிழ்மொழியும், தழிழ்க்கலையும் வளர்க்கப்பட்டன.

சிங்கப்பூர் காலனியில் சிறுவர், சிறுமியர், வயது வந்தவர்களுக்கு தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் நிறுவி நிர்வகிக்கப்பட்டது. திறமை தரமுள்ள தமிழ்மாணவ மாணவியர் மேல்படிப்பு படிக்க உதவும் வகையில் வெளிநாடுகளில் படிக்க நிதி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தமிழ்க்கல்வியை அரசாங்கப்பள்ளியில் புகுத்தவும், தமிழ் ஆசிரியர்களுக்கு மதிப்பு ஊதியம் வழங்கிடவும், உரியன செய்யப்பட்டன. தமிழர் அயர்ந்திடக்கூடாதென்று தாழ்வு மனப்பான்மையுள்ள தமிழர்களிடம் தன்னம்பிக்கையை ஊட்டும் விதமான "தலைநிமிர்ந்து நில் தமிழா" என்ற குரல் ஒலிக்கப்பட்டது. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு எனும் முழக்கத்தோடு தமிழர் நலனுக்காகவும், வாழும் வாழ்க்கைக்காக காரியங்கள் சாரியாகச் செய்யபட வேண்டுமென்றும், இல்லையேல் எந்தபயனும் இல்லையென எழுத்திலும், பேச்சிலும் சங்கங்கள் வாயிலாகவும் எடுத்துரைக்கப் பட்டது.

மாணவர்களை ஊக்குவிக்க கல்வி அமைச்சகத்தின் தமிழ்மொழிப்பிரிவு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காக தமிழ் இலக்கியம், சிறுகதைப்போட்டிகள் நடத்தப்பட்டன. அதனால் தமிழ்க்கல்வியை வளர்த்துக்கொள்வதிலும், பயன்படுத்துவதிலும், மாணவர்களிடம் நாட்டம் அதிகமாக உண்டாக்கப்பட்டது. அத்துடன் ஆங்கிலத்தால் தமிழில் ஆர்வம் அற்றவர்களாக உள்ளவர்களைத் தமிழில் அதிக ஊக்கம் ஏற்படச்செய்தது.

மாணவர்கள் இலக்கியப் படைப்புகள், படைப்பதற்காக கல்விஅமைச்சகமும், பல்கலைக்கழகமும் புத்தாக்கப்படைப்புகளை ஆரம்பித்து மாணவர்களின் படைப்புகளை நூல்களாகத் தொகுக்கப்பட்டன.

தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றன. அரசாங்க ஆதரவுடன் வளர்த்தமிழ் இயக்கம், அதனை ஒருங்கிணைத்து அமைச்சர்களோ அதிபரோ தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அங்கீகாரம் அளிக்கப்படுகின்றன. பள்ளிகளில் தமிழ்மாதத்தை முன்னிறுத்தி வகுப்பறை நடைமுறைகளில் தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இங்கு ஆங்கிலம் முதல் மொழியாகவும், எல்லோருக்கும் பொது மொழியாகவும் இருக்கிறது. தமிழ்மொழி இரண்டாம் நிலை மொழியாக கற்பிக்கப் படுகிறது. மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் ஈடுபாடும் மோகமும் கொண்டு தமிழர்கள் தங்கள் அடையாளத்தை மறந்து ஆங்கிலத்தின் மீது நாட்டம் கொண்டாலும் எந்த நேரத்திலும் தமிழை மறந்துவிடாமல் அதன் அருமை பெருமைகளை அறிந்து உணர்ந்து போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருவது தமிழின் வளர்ச்சியாகும். முதன்மை வாய்ந்த தமிழ்மொழியை, இலக்கிய இலக்கண வளம் நிறைந்த தமிழின் பெருமையை தம் உயிலீரினும் மேலாகக் காப்பது தமிழ்ப்பற்றும் தமிழ் உணர்வுடைய தமிழர்களின் இரத்தத்தோடு ஒன்றாக கலந்ததாகும்.

தமிழ்ப்பற்றாளர்களது வாழ்வு அவர்களின் படைப்பு தமிழ்மொழிக்கு ஆற்றிவருகின்ற அரும்தொண்டுகளைப் போற்றிடும் போது தமிழ் உணர்வு தானாக வரும்.

தமிழ் உணர்வு ஒவ்வொருவருக்கும் இருக்குமானால் பேச்சுத்திறன் மேம்பட்டு உயர்வடையலாம். பேச்சுத்தமிழின் வழி எழுத்துத்தமிழைக் கற்பிக்கும் கல்வி அமைச்சகத்தின் புதிய கொள்கை சிங்கப்பூர் தமிழ் இளையர்களை தமிழ் மீதுள்ள அச்சமற்ற நிலையை நீக்கி, தமிழை நன்கு பயன்படுத்திக்கொள்ள வழிவகுத்துள்ளது. கல்வி நிலையங்களில் 25,000 மாணவர்கள் தமிழ்மொழி பயில்கிறார்கள். 650 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். இங்கு அரசாங்கத்தின் இருமொழிக் கொள்கையால் இன்று 140க்கு மேல் தொடக்கப் பள்ளிகள் 93க்கு மேல் உயர்நிலைப்பள்ளிகள் 12 மொழி நிலையங்கள் 16 தொடக்கக் கல்லூரிகள் இருப்பதுடன் தமிழ் தாய்மொழிப் பாடமாக கற்பிக்கப்படுகிறது.

தேசிய பல்கலைக்கழகத்தில் தெற்கு ஆசிய இயல்துறையிலும் மொழிகள் படிப்பு நிலையத்திலும், தமிழ்மொழி, தமிழியல் பாடங்கள் விருப்பப்பாடமாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப் படுகிறது. நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக் கழகங்கத்தில் ஒருபகுதி தேசியக்கல்வி கழகத்தின் தமிழ்மொழி பண்பாட்டுப்பிரிவு தமிழாசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டயப்படிப்பு கற்பிப்பதுடன் தமிழ்கற்றல் கற்பித்தல் மொழி இலக்கியம் தொடர்பான ஆய்வுகள் செய்வதுடன் கல்வியியல் முதுநிலை முனைவர் பட்டக்கல்வி வகுப்புகளும்; நடத்தி வருகின்றன. யுனிசிம் பல்கலைக்கழகம் தமிழ்

இளங்கலை (பி.ஏ) பட்டப்படிப்பு பகுதிநேரப்படிப்பாக நடத்தி வருகிறது.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தமிழில் பேசுவதற்குரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டிருப்பதுடன், எம்மொழியில் பேசப்பட்டாலும் மொழிபெயர்ப்பும் செய்யப்படுகிறது. அரசாங்க அலுவலகங்கள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் நான்கு அதிகாரத்துவ மொழிகளில் அறிவிப்புகள் இடம்பெற்றிருக்கிறது.

இரயில்களிலும், வானூர்திகளிலும் தமிழில் அறிவிப்பு செய்வதுடன், இரயில்நிலையத்தில் எழுத்தாளர்களின் கவிதைகளும் தேர்ந்து வைக்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி முதலிய ஊடகங்கள் துணையாக இருக்கின்றன. சிங்கைநேசன் தமிழ்முரசு, தமிழ்மலர், மலாயா நண்பன், தமிழ்நேசன் ஆகிய தமிழிதழ்கள் எழுத்தாளர்களின் தமிழ் இலக்கியம் சார்ந்த படைப்புகள் வெளியிட்டு பெருமைகள் கூட்டுகின்றன. தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களால் தமிழ்முரசு தொடங்கப்பட்டு மாணவர் மணிமன்றம் பகுதியை இணைத்து மாணவர்களின் கல்வி அறிவு மேம்படச்செய்வதுடன் அதில் இலக்கியப் படைப்புகளை வெளியிட்டு தமிழ் வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

வானொலியில், தொடர் நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள், ஒலிப்பரப்பப்படுகிறது. தொலைக்காட்சிகளிலும் இது போன்ற நிகழ்ச்சிகள் அனைவரையும் மகிழ்வுறச் செய்யும் வகையில் ஒளிவழியாக ஒளிபரப்பப்படுகின்றன.

சிங்கப்பூரில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்கம் நல்லாதரவு நல்கி வருவதுடன்; இலக்கியம், கலை ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்க்கு கலாச்சார விருது வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்துகிறது.

தேசிய புத்தக மேம்பாட்டுக்கழகம், சிறந்த புத்தகங்களுக்கான விருது வழங்கி படைப்பாளர்களை ஊக்குவிக்கிறது. சிங்கப்பூர் தேசியகலைமன்றம் 1986 முதலாக ஈராண்டுக்கு ஒருமுறை எழுத்தாளர் வாரம் என்று நிகழ்ச்சியை நடத்தி, எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு கலைமன்றம் மானியம் வழங்கி வருகின்றது.

1979 முதலாக தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே, ஆசியான் கூட்டமைப்பிலுள்ள நாடுகளின் அதிகாரத்துவ மொழிகளில் படைக்கப்படும் தலைசிறந்த இலக்கியங்களை உருவாக்கும் எழுத்தாளர்களுக்குத் ***தென்கிழக்கு ஆசிய இலக்கிய விருது*** தாய்லாந்து மன்னரால் வழங்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதால் தமிழ் படைப்பிலக்கியங்கள் இணையத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூரின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் அடையாளமாக பல இலக்கிய நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவைகளில் 2002-இல் முனைவர் சுப. திண்ணப்பன், முனைவர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன் இருவரும் இணைந்து எழுதி சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக கலைமன்றம் வாயிலாக ***சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு கண்ணோட்டம்,*** என்ற படைப்பும், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் வெளியிட்ட ***சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு*** என்ற படைப்பும், 20 ஆம் ஆண்டு விழாவில் வெளியிட்ட ஆய்வரங்கக் கோவையும் சிங்கப்பூரின் வரலாற்றையும் தமிழ்பெருமையையும் கூறுகின்றன.

சிங்கப்பூரில் தமிழ்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு நாகாரிகம் இவற்றால் தமிழ் மொழியைப் போற்றவும், வளர்க்கவும், தமிழ் இலக்கியங்களைப் படைக்கவும், இன்றளவும் பல இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தி பெருமை சேர்க்கின்றன. வளர் தமிழ் இயக்கம், சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை, கரம்பக்குடி திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம், மாதவி இலக்கிய மன்றம், தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம் போன்ற பல சமூக அமைப்புகள் தமிழ்க்கல்விக்கும் வாழ்வியலுக்கும் சிறப்பினை சேர்த்துள்ளன.

முடிவுரை

இவை அனைத்தும் அத்தனையும் எடுத்துக்காட்டும் வண்ணமாக சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் திரு.நா.ஆண்டியப்பன் அவர்களால் 2011 அக்டோபர் திங்களில் உலகத்தமிழ் எழுத்தாளர் மாநாடு, நடத்தப்பட்டு சிறப்பினைக் கண்டது. அதனை அடுத்து உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சிங்கப்பூர் தமிழ் இலக்கியத் தளம் இணைந்து 2014 மே 31 ஆம் நாள் சிங்கப்பூரில் நடத்தப்படும் இந்த பன்னாட்டு மாநாடு தமிழ்மொழி, பண்பாடு இவற்றால் அனைவரையும் ஒன்றிணைத்து சிறப்பும் புகழும் படைப்பதோடு அதுவருங்கால தலைமுறையினருக்கும் பயன்விளைக்கும் பேருண்மையாகும் என்பதுடன் இவை அத்தனையும் தமிழ்மொழிக்கு மேலும் புகழ் படைப்பதாகும்.

# சிங்கப்பூர்த் தமிழறிஞர் மகுதூம் சாயபுவின் தமிழ்ப்பணிகளும் ஆளுமைகளும்

முனைவர் கோட்டி திருமுருகானந்தம்
புளோக் 703 யூசூன் அவின்யூ
5, #07 - 250, சிங்கப்பூர்

பத்திரிகைகள் அனைத்துமே இருளில் இருக்கும் மக்களுக்கு அறிவொளியை ஏற்றி வைக்கும் ஊடகங்கள் என்பதில் ஐயமில்லை. இன்றைய உலகில் ஏராளமான பத்திரிகைகள் செய்திகளையும் பலதுறை சார்ந்த தகவல்களையும் மக்களுக்கு எடுத்து இயம்புகின்றன. பத்திரிகைகள் ஒரு நாட்டு வளர்ச்சியிலும் சமுதாய வளர்ச்சியிலும் பெரும் பங்காற்ற முடியும் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். கடந்த காலத்தில் தகவல் தொடர்பின் மூத்த சாதனங்களாகப் பத்திரிகைகள் விளங்கின. செய்திகளைத் தருதல், பத்திரிகை ஆசிரியர் கருத்துகளை வெளியிடுதல், நாட்டு நடப்புகளை மக்களுக்கு உணர்த்துதல், கலைகளை வளர்த்தல், இலக்கியம் வளர்த்தல் என பல நன்மைகளைக் காலம் காலமாகப் பத்திரிகைகள் செய்து வருகின்றன. தாயகத்திலும் அயலகத்திலும் பல தமிழ்ப்பத்திரிகைகள் தோன்றி உள்ளன. மகுதூம் சாயபு சிங்கப்பூரில் 'சிங்கைநேசன்' என்னும் பெயரிய இதழை 1880 ஆம் ஆண்டுகளின் இறுதியில் வெளியிட்டுள்ளார். இவர் இதழாசிரியர், கவிஞர், சிறுகதையாசிரியர், கட்டுரையாளர், பத்தி எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். அவரின் தமிழ்ப் பணிகள் மற்றும் ஆளுமை குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

### யார் இந்த மகுதூம் சாயபு?

சிங்கப்பூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பத்திரிகை உலகில் கொடிகட்டிப் பறந்தவர்களில் மகுதூம் சாயபு குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் நானிலம் போற்றும் தஞ்சை மாவட்டத்திலுள்ள பொறையாறு பகுதியைச் சேர்ந்தவர். இப்பகுதியில் சிறப்புடன் வாழ்ந்த குலாமுகிய்யித்தீன் சாகிப் இவர் தந்தையாவார். இக்காலக் கட்டத்தில் சிங்கப்பூரில் வாழ்ந்த யாழ்ப்பாண வண்ணைநகர் சி. ந. சதாசிவ பண்டிதரிடம் முறையாகத் தமிழ் கற்ற இவர் ஆங்கிலம், அரபு மொழிகளில் புலமையுடையவர். இவர் சிறந்த கவிஞர், சிறுகதை

ஆசிரியர், கட்டுரையாளர், இதழாளர், இலக்கியப் புலமை மிக்கவர், பிற சமயத்தைப் போற்றும் பண்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். மக்களுக்குத் தரமான செய்திகளைத் தரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். இவர் தீனோதய வேந்திரசாலை என்னும் அச்சகத்தை 1872 ஆம் ஆண்டு நிறுவி அதன் உரிமையாளராய் விளங்கியவர். இவர் நடத்திய சிங்கை நேசன் வார இதழ் மாலாயாவின் மூத்த இதழாக நடைபோட்டுள்ளது. இவர் இக்கால கட்டத்தில் தமிழ், ஆங்கிலம், சீனம், மலாய் முதலிய மொழிகளில் நூல்களையும் அச்சிட்டுக் கொடுத்துள்ளார். குறிப்பாகச் சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை நூல்களை அச்சிட்டுக் கொடுத்துள்ளது சிங்கப்பூர்த் தமிழர் பெற்ற பெரும் பேறாகும்.

கவிஞர் செவத்த மரைக்காயரின் மலாக்கா பிரவேசத்திரட்டு என்னும் கவிதை நூலை ம.குதூம் சாயபு தனது தீனோதய வேந்திரசாலை அச்சுக்கூடத்தில் அச்சிட்டுக் கொடுத்துள்ளார். அதற்கு இவர் தன்னுடைய நூலைச் சிறப்பாக அச்சிட்டுக் கொடுத்த தீனோயத வேந்திரசாலை அச்சுக்கூடத்தின் உரிமையாளரான மகுதூம் சாயபுவைப் பற்றிச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

*அச்சினைக் கோர்வை செய்தவருள் மகுதூம்சாகிபு*
*வச்சிரக் கரத்தை நோக்கி வளம்பெரு மெடிட்டர்மார்கள்*
*அச்சமுற்ற டைந்தாரென்னில் ஆர்நிகர் கூடம்போல*
*மெச்சினே வின்னை நோக்கிமேன் சலாமுமக் குண்டாமால்*
*(செவத்த மரைக்காயர், மலாக்காப் பிரவேசத் திரட்டு,ப. 38)*

என்றும் செவத்த மரைக்காயர் சி. கு. மகுதூம் சாயபு குறித்தும் அவர் ஆற்றும் பணிகள் குறித்தும் பாடியுள்ளார். இவரைத் தவிர வேறு எவரும் மகுதூம் சாயபுவைப் புகழ்ந்து பாராட்டிப் பாடியிருப்பதாகத் தெரியவில்லை.

**இதழாசிரியர்**

மகுதூம் சாயபு தலைசிறந்த பத்திரிகையாசிரியர் என்பதை இவர் நடத்தியுள்ள சிங்கை நேசன் புலப்படுத்துகிறது. இவர் இதற்கு முன் சிங்கை வர்த்தமானி, தங்கைநேசன், ஞானசூரியன் ஆகிய மூன்று பத்திரிகைகளைச் சிங்கப்பூரில் வெளியிட்டு அனுபவம் பெற்றவர். எனவே சிறந்த பத்திரிகையில் என்னென்ன அம்சங்கள் இடம்பெற வேண்டுமோ அவை அனைத்தையும் இவர் நடத்திய இதழில் வெளியிட்டுள்ளார். இவர் நடத்திய இதழில் திருக்குறள், தலையங்கம், கடவுள் வாழ்த்து, பத்திரிகை நோக்கம், கையொப்பர்களுக்கு, சிங்கப்பூர்ச் செய்திகள், உலகச் செய்திகள், தந்திச் சமாச்சாரம், சமாசாரத் திரட்டு, இந்தியச் செய்திகள், இலங்கை செய்திகள், கவிதைகள், விளம்பரங்கள், மார்க்கட் சரக்குவிலை, பேங் நாணயம், நூலறிமுகம் என்ற தகவல்களுடன் இவ்விதழை வெளியிட்டுள்ளார். முதல் இதழுடன் அநுபந்தம் என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் இணைப்பை

வெளியிட்டுள்ளார். இதில் விக்டோரியா மகாராணியாரின் ஜூப்லி விழா கொண்டாட்டங்கள் குறித்த தகவல்கள் உள்ளன. இறுதியில் அச்சிட்டோர் விபரம் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு சிறந்த இதழுக்கு வேண்டிய தகவல்கள் அனைத்தையும் தொடக்கம் முதல் இவ்விதழ் தாங்கி வந்துள்ளாதால் இவரைத் தலைசிறந்த இதழாசிரியர் எனச் சொல்வதில் தவறேதுமில்லை.

**கவிஞர்**

மகுதூம் சாயபு சிறந்த கவிஞர் என்பதைச் சிங்கை நேசனில் இவர் படைத்துள்ள கவிதைகள் உணர்த்துகின்றன. இவர் சிங்கைநேசனில் படைத்துள்ள கவிதைகளைத் தவிர வேறு கவிதைகள், கவிதை நூல்கள் படைத்துள்ளாரா என்பது ஆய்விற்குரியதாகும்.

தேரும்விக் டோரியாசேர் பிலித்தினத்தைச்
சாருமிப் பத்திரிகை தான்

என்று மகுதூம் சாயபு எழுதியுள்ள குறளுடன் இவ்விதழ் வந்துள்ளது. அதாவது விக்டோரியா மகாராணியின் நினைவாகத் தொடங்கப்பட்ட இதழ் இதுவாகும். எனவே ஒவ்வொரு தலையங்கத்தின் தொடக்கத்திலும் இக்குறளை எழுதிய பின்னரே தலையங்கம் தொடங்குகிறது. இதனால் இவர் குறள் வெண்பா இயற்றுவதில் வல்லவர் என்பதை உணரமுடிகிறது.

உலகில் வாழும் இசுலாமிய மக்கள் அனைவரும் லஸ் என்னும் நபிகள் நாயகத்தை இறைத்தூதர் என்று போற்றுகின்றனர், வணங்குகின்றனர். உமறுப்புலவர் படைத்துள்ள சீறாப்புராணத்தில் இவரின் அருமை பெருமைகளைச் சிறப்புடன் பாடியுள்ளார். அதைப் போல இங்கு வாழும் இசுலாமியர்களும் இவரை வணங்குகின்றனர். அதனால் அவரது சிறப்புகளைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

சீரான ஹஜ்ஜின் சிறப்பான நற்றினத்தைப்
பேரான நாயன் பெருநபிமேல் - நேரான
மக்கமதிற் கொண்டாட வைத்தபடி யெவ்விடந்துந்
தக்கபடி செய்தல் தகும்

(மகுதூம் சாயபு, சிங்கை நேசன், 29 - 08 - 1887, இதழ் எண் 10)

என மகுதூம் சாயபு நபிகள் நாயகத்தின் சிறப்புகளைப் பாடியுள்ளார். இக்கவிதை சிங்கை நேசன் இதழில் பல இடங்களில் உள்ளதைக் காணமுடிகிறது.

பினாங்கிற்கு அருகிலிருக்கும் கூலிம் பகுதியில் தம்பி மாமா என்று அழைக்கப்படும் கா. முகியித்தீன் மதினா சாயபு, 1884 ஆம் ஆண்டு வாகைநேசன் என்னும் பத்திரிகையை நடத்தி தமிழை வளர்த்துள்ளார். இவர் தமிழகம் நாகூர் பகுதியைச் சார்ந்தவராவார். இவர் இவ்விதழின் - சிங்கை நேசனின் - பினாங்கு பகுதியின் முகாமையாளராக

இருந்துள்ளார். இவர் இறப்பைக் கேள்விப்பட்ட பினாங்கு நண்பர்கள் அவரை முறைப்படி அடக்கம் செய்தனர். இதனை,

தம்பிமாமா பேரிற் தமிழ்வாகை நேசனென்பான்
நம்பி யிருந்து நயனடைந்தான் - வெம்புவியை
விட்டு வியனுலகை மேலோனடைந்த புகழ்
எட்டமெங்கு சென்று மெழில்
ஏப்பிரல் மாதமதிலீரெட்டாந் தேதி தன்னில்
ஏப்பமிடும் வருகயெழிற்றமிழான் - தோப்புமிகு
நன்னாகூர்ச் செல்வன் நபிநா யகத்தருளாற்
பொன்னாகூந் சென்றான் புகழ்
(மகுதூம் சாயபு, சிங்கைநேசன், 22 - 01 - 1889, இதழ் எண் 42)

என மகுதூம் சாயபு தம்பி மாமா குறித்தும் அவர் ஆற்றிய பணிகள் குறித்தும் சிறப்பாகப் பாடியுள்ளார். இதிலிருந்து இவர் பத்திரிகைக்கு முன் தம்பி மாமா வாகை நேசன் என்ற பத்திரிகையைப் பினாங்கிலிருந்து நடத்தியுள்ளது தெரியகிறது. மேலும் அவரை இசுலாம் மதத்தின் கொள்கைபடி அடக்கம் செயத்தையும் அறிய முடிகிறது. இவ்வாறு மகுதூம் சாயபு படைத்துள்ள கவிதைகளைக் காணமுடிகிறது.

### சிறுகதை ஆசிரியர்

சிறுகதை அளவில் சிறியதாக இருப்பதோடு ஒரே மூச்சில் படித்துவிடக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதாவது குதிரைப் பந்தயம் தொடங்குவது போலத் தொடங்கி விறுவிறுபாகச் சென்று முடியவேண்டும். எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை அது கொண்டிருக்கிறதோ, அதைப் படிப்பவரின் நெஞ்சில் மின்சாரத்தைப் போல் பாய்ச்சும் ஆற்றல் சிறுகதை பெற்றிருக்க வேண்டும். கதைக்குப் பின்னேயுள்ள கதாசிரியரின் கலையாற்றல், கற்பனை, சொல்லாட்சி, சொல்ல விரும்பும் செய்தி இவ்வளவும் இலக்கண வரம்புகளைவிட மிகமிக முக்கியமானவை. சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் எந்த இலக்கணத்தையும் மனத்தில் நினைத்துக் கொண்டு எழுதுவதில்லை. அவர்களது எழுத்துகள் தாமாகவே சிறுகதை வடிவம் பெற்றுவிடுகின்றன.

மகுதூம் சாயபு சிறுகதை ஆசிரியராகவும் தன்னை அடையாளப் படுத்தியிருக்கிறார். இவர் படைத்துள்ள உரையாடல் வடிவில் அமைந்த சிறுகதைகளைத் தமிழில் தோன்றியுள்ள முதல் சிறுகதை என்று நா. கோவிந்தசாமி மொரீசியசு நாட்டில் நடந்த உலகத் தமிழாசிரியர் மாநாட்டில் தனது கருத்தை முன் வைத்துள்ளார். அதற்கு மலாயா சிறுகதைகளை ஆய்வு செய்த பால பாஸ்கரன் இது முதற்கதையல்ல எனத் தனது வாதங்களைச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். எது எப்படி இருந்த போதிலும் இவர் சிறுகதை இலக்கிய வடிவத்தைச் சிங்கப்பூரில் அறிமுகப்படுத்தி இருக்கிறார் என்பது உண்மை.

### கட்டுரை ஆசிரியர்

பல நூற்றாண்டுகளாக செய்யுள் வடிவமே தமிழில் இலக்கியம், தத்துவம் முதலியன படைக்க பெரிதும் பயன்பட்டது. உரைநடை வடிவம் இலக்கணங்களுக்கும் செய்யுள்களுக்கும் விளக்கம் கூறப் பயன்பட்டது. இருபதாம் நூற்றாண்டிலேயே உரைநடை வடிவம் வளர்ச்சி பெற்று மக்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கும் பயன்படுகிறது. கட்டுரையே உரைநடை வெளிப்பாட்டின் முக்கிய வடிவமாகும். தர்க்கக்கட்டுரை, செய்திக்கட்டுரை, விபரக்கட்டுரை, பகுத்தாய்வுக் கட்டுரை, செயல்முறை விளக்கக்கட்டுரை, எடுத்துரைத்தல் கட்டுரை, ஒப்பீட்டுக் கட்டுரை, புனைவுக்கட்டுரை எனக் கட்டுரைகளை வகைப்படுத்தலாம். இதழாசிரியர்கள் செய்திகளைக் கோர்வையாக்கி வாசகர்கள் தேவைக்கேற்ப கட்டுரைகளாகப் படைப்பது வழக்கம். இவர்களும் மேலே கூறப்பட்டுள்ள பலதரப்பட்ட கட்டுரைகளைப் படைப்பது வழக்கம். இதற்கேற்ப மகுதூம் சாயபு பல சிறந்த கட்டுரைகளைப் படைத்துள்ளதால் அவரைச் சிறந்த கட்டுரையாளர் என அழைப்பதில் தவறேதும் இல்லை. இவர் சிங்கை நேசன் இதழில் தர்க்கக்கட்டுரை, செய்திக்கட்டுரை, விபரக்கட்டுரை, விளக்கக்கட்டுரை, எடுத்துரைத்தல் கட்டுரை எனப் பலதரப்பட்ட கட்டுரைகளைப் படைத்துள்ளைக் காணமுடிகிறது.

### பத்தி எழுத்தாளர்

பத்தி எழுத்து என்பது தகவல் அடிப்படையில் அல்லது நிகழ்வு அடிப்படையில் பேசப்படுவதாகும், எழுதப்படுவதாகும். எந்த தகவல் குறித்தும் வருணனை செய்து எழுதாமல் சுருக்கமாக சுவையாக எழுதப்படும் *Column Writing* எனப்படும் பத்தி எழுத்து, இன்று பரவலாக இணைய தளங்களில் எழுதப்படும் வலைப்பதிவுகளுக்கு முன்னோடியாகக் கொள்ளலாம். பத்தி எழுத்துகள் தாம் கூறவந்த தகவலை மாத்திரம் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையுடன் வாசகரைக் கவரும் திறனைப்பெற்று இருக்கவேண்டும். பத்தி எழுத்து ஒரு பொருள் பற்றியோ பல பற்றியோ ஓர் ஒழுங்கு முறையின்றி ஆனால் தொடர்புடையதாகச் சிந்தனைத் திவலைகளாக அமையும் என்கிறார் பத்தி எழுத்தாளர் கே.எஸ். சிவகுமாரன். கணையாழில் சுஜாதா எழுதிய?கடைசிப் பக்கங்களையும் விகடன் வலைதளத்தில் சாருநிவேதிதா எழுதிய கோணல் பக்கங்களையும் சிறந்த பத்தி எழுத்துகளாகக் கொள்ளலாம்.

### இலக்கிய ஈடுபாடு கொண்டவர்

மகுதூம் சாயபு தமிழைத் திறம்படக் கையாளும் திறமை பெற்றவர் என்பதை இவர் படைத்துள்ள தலையங்கங்கள், கட்டுரைகள் உணர்த்துகின்றன. தகுந்த இடங்களில் தக்க பழமொழிகளையும் சிறந்த சொற்றொடர்களையும் பயன்படுத்தும் திறமை பெற்றவர். தமிழ் இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர் என்பதை அறியமுடிகிறது.

தன் குற்றம் நீக்கி பிறர் குற்றம் காண்கிற்பின்
என்குற்றமாகும் இறைக்கு

என்னும் குறட்பா சிங்கைநேசன் ஒவ்வொரு இதழ் தொடக்கத்திலும் இடம் பெற்றுள்ளது. இது இவரது திருக்குறள் மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டுகிறது. மேலும் இக்குறட்பாவிற்கு விளக்கம் தந்து இவர் படைத்துள்ள தலையங்கம் இலக்கிய ஈடுபாட்டைக் காட்டுகிறது.

தோன்றிற் புகழொடு தோன்றுக அக்தில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்னும் புகழ் அதிகாரத்திலுள்ள குறள் எண் இருநூற்று முப்பத்து ஆறையும்

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

என்னும் பெருமை அதிகாரத்திலுள்ள 975 ஆம் குறளையும் இவர் தக்க இடத்தில் பயன்படுத்தியுள்ள பாங்கு இவரது இலக்கிய ஈடுபாட்டைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. /விக்டோரியா மகாராணியின் ஐம்பதாவது பிறந்தநாள் நிகழ்வுகளைச் சிங்கப்பூரிலுள்ள முகமதியர்களும் இந்துக்களும் மலாய்க்காரர்களும் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். மலாய்க்காரர்களின் பிரதிநிதிகளாகக் கம்பங் கிள்ளாம் பகுதியைச் சேர்ந்த செய்யது முகம்மது பின் அகமது அல் சக்காப், அபூபக்கர் பின் அலி அல்ஜீனித் ஆகியோர் இருந்தனர். முகமதியர்களின் பிரதிநிதியாக சா. குலாமுகியத்தீன் அவர்களும் இந்துக்களின் பிரதிநிதிகளாக ஆ. அண்ணாமலை பிள்ளை, வி. ரி. ராமன் செட்டியார் ஆகியோரும் முன்னின்று சிறப்பாக நடத்தினர். இவர்கள் செய்த அரும்பணிகளை எழுதி முடிக்கும்போது மேற்கண்ட இரு குறட்பாக்களை மேற்கோள்காட்டி இவர்களின் செயலாற்றலைச் சிறப்பாக விளக்கியுள்ளார். இவ்வாறு தகுந்த இடங்களில் இலக்கியப் பாடல்களை மேற்கோள் காட்டுவதால் இவர் இலக்கியப்புலமை மிக்கவர் என்பதை உணரமுடிகிறது.

**அங்கதச்சுவை மிக்கவர்**

பொதுவாக இந்தியர்கள்தாம் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்ற கருத்து உலகில் நிலவுகின்றது. இக்கருத்து தவறானது என்னும் விதத்தில் உலகிலுள்ள பிற இனத்தவர்களும் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்ற தகவலை இதழாசிரியர் கூறியுள்ளார். இதற்குச் சான்றாக இலண்டனிலுள்ள ஒரு பெண்ணுக்கு இருபத்தொன்பது குழந்தைகள் இருக்கின்றதாம். இதைவிடச் சிறப்பான செய்தி என்னவெனில் இந்நாட்டிலுள்ள இன்னொரு பெண்ணுக்கும் இருபத்தொன்பது குழந்தைகள் இருந்த போதிலும் இப்பெண்

இப்போது முப்பதாவது குழந்தையைப் பெற்றெடுக்கும் நிலையில் இருக்கிறாள் என அங்கதமாகக் கூறியுள்ளார். அனேகபிள்ளைக்கப்பன் என்ற செய்தி இவரது அங்கதசுவையை உணர வைக்கிறது. முப்பது வயது பூரணமாய்ச் செல்லாத சீயதேயத்தான் பெற்ற பிள்ளைகள் 263. இவருக்கு எத்தனை மனைவியோ? அறியோம். தஞ்சாவூர் சிவாஜி மகாராஜா அவர்களுக்கு ஏறக்குறைய 50 மனைவிகளிருந்தும் பிள்ளை ஒனறாவது மில்லையே! ஆச்சரியந்தான் என அங்கதச் சுவையோடு தன் கருத்தை வலுவாகக் கூறியுள்ளார். இதைப் போல பல செய்திகளை அவர் அங்கதமாகக் கூறியுள்ளார்.

### சிங்கைநேசனில் கவிதைகளை வெளியிட்டவர்

செய்தித்தாள் நடத்துபவர்கள் இலக்கியம் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இக்காலம் போல் அக்காலத்தில் வாய்ப்புகள் அதிகமில்லை. இருந்தாலும் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதையை வளர்க்க இவர் காட்டியுள்ள ஆர்வம் பாரட்டத்தக்கது, போற்றத்தக்கது. வாழ்த்து கவிதைகள், விடுகதை கவிதைகள், விடைதரும் கவிதைகள், விளக்கம் கேட்கும் கவிதைகள், சமரசக் கவிதைகள், நபிகள் நாயகம் குறித்த கவிதைகள், சிங்கப்பூர்க் கவிதை நூல்களை அச்சிட்டுத் தந்தமை எனப் பல நிலைகளில் சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வளர்த்த முன்னோடியாய் மகுதூம் சாயபு விளங்குகிறார். மேலும் தாயகத்தில் தோன்றிய நூல்களைப் பற்றிப மதிப்பீடுகளைத் தம் ஆசிரியர் சி. ந. சதாசிவ பண்டிதர் எழுதியுள்ளதைச் சிங்கைநேசனில் வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை நூல்களை அச்சிட்டுத் தந்தவர்: மகுதூம் சாயபு தனது தீனோதய வேந்திரசாலை மூலமாக ஷாகு முகம்மது அப்துல் காதிறு ஜெயினுத்தீன் படைத்துள்ள இரத்தினச் சுருக்கம், முகியித்தீன் அப்துல் காதர் படைத்துள்ள சந்தக்கும்மி, நெல்லையப்ப செட்டியார் படைத்துள்ள சிங்கை வடிவேலவர் ஸ்தோத்திரம், செவ்வலூர் மதுவ நாயகியம்மை பதிற்றுப்பத்தந்தாதி, இராமநாத பிள்ளையார் பாடல், செவத்த மரைக்காயரின் மலாக்காப் பிரவேசத் திரட்டு, மீறா சாகிபுவின் பாயாலேபர் பங்கலாவின் அலங்காரச் சிந்து, சி.ந.சதாசிவப் பண்டிதரின் வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திர கவிகள், மெய்யப்ப செட்டியாரின் சிங்கப்பூர் பிரபந்தத் திரட்டு, இரங்கசாமி தாசனின் குதிரைப் பந்தய லாவணி, க.வேலுப்பிள்ளையின் சிங்கை முருகேசர் பேரில் பதிகம் முதலிய கவிதை நூல்களை அச்சிட்டுத் தந்துள்ளார். அதாவது சிங்கப்பூரின் தொடக்ககாலக் கவிதை நூல்களை அச்சிட்டுத் தந்த பெருமை இவரையே சாரும்.

## தொகுப்புரை

தாயகத்திலிருந்து அன்றைய மலாயாவிற்குப் புலம்பெயர்ந்த இந்தியர்களில் தமிழ் இசுலாமியர்கள் மலாயாத் தமிழ்ப்பத்திரிகை உலகின் முன்னோடிகளாக இருந்துள்ளனர் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. இவர்கள் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் படைத்த முன்னோடிகளாக இருந்துள்ளதையும் ஆய்வுகள் காட்டுகின்றன. எனவே மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ் வளர்ச்சிக்குத் தமிழ் முஸ்லீம்கள் செய்துள்ள பங்களிப்பை யாரும் புறக்கணிக்க முடியாது. இவர்களில் ஒருவரான சிங்கைநேசன் ஆசிரியர் மகுதூம் சாயபு தமிழ், ஆங்கிலம், அரபு முதலிய மொழிகளில் புலமை வாய்ந்தவர், இதழாளர், கவிஞர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், பத்தி எழுத்தாளர், இலக்கியப் புலமை மிக்கவர், பிற சமயத்தைப் போற்றும் பண்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட நல்ல மனிதர் என்பதைச் சிங்கைநேசன் உணர்த்துகிறது.

# கடித இலக்கியங்களில் காணலாகும் சிங்கப்பூர்த் தமிழர்களின் வாழ்வியல்

ஆர். சகுந்தலா
இளநிலை கருத்தாளர்
இந்திய தேசியத் தேர்வுப் பணி
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## முன்னுரை

கடித வடிவத்தை இலக்கியமாக கொள்ளத் தலைப்பட்டு உள்ளத்தில் எழுகின்ற உணர்வுகளை இலக்கிய நயமுடனோ தகவல் தெரிவிக்கும் பொருட்டோ படைக்கப்படும் எழுத்து வடிவம் - கடித இலக்கியம் எனப்படுகிறது. இது உரைநடை இலக்கியத்தில் ஒரு வகையாகத் திகழ்கிறது. மேலும், கடிதம் எனப்படுவது இருவருக்கிடையே இடம்பெறும் எழுத்து தகவல் பரிமாற்றத்தைக் குறிக்கின்றது. கடிதம் எழுதுதல் மொழியின் வளர்ச்சி நிலைக்கும் உணர்வுகளின் வெளிப்பாடுகளுக்கும் ஒரு சரியான ஊடகமாக இருக்கிறது. தொலைவில் இருக்கும் உறவுகளும், நட்புகளும் தொடர்புகொள்ள இருந்த ஒரு மிகச் சரியான வழியாக இருந்து வந்தது. கடிதம் எழுதுவதில் இருக்கும் ஒரு உணர்வுரீதியிலான தொடர்பு வேறு எந்த ஒரு தொழில்நுட்பக் கருவிக்கும் இல்லாத ஒரு சிறப்பு நிலையாகும். கருத்துக்களையும் உணர்வுகளையும் சரியான ஒரு திசையில் கொண்டு செல்வதற்கு இது உதகின்றது. கடித இலக்கியமானது கடிதம் வடிவில் ஒருவர் பலருக்கு தமது அனுபவங்களை அறிவுரைகளாக எழுதப்படுவதாகவும் கொள்ளலாம். இவ் அறிவுரைகள் வாசிப்பவரின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும். மொழி மேலாண்மைக்கும் இன்றைய இளைஞர்களின் இலக்கிய இலக்கண அறிவு வளர்வுக்கும் கடிதம் எழுதும் முறை தொடக்க நிலையில் சிறப்பான தீர்வாகும். இது போன்ற சிந்தனைகளைக் கொண்ட கடிதங்களை அண்ணா, மு.வ. போன்றவர்கள் எழுதியிருக்கின்றனர். புலம்பெயர்ந்த மூத்த தமிழர்கள் எழுதிய கடிதங்களில் அமைந்த உணர்வுகளையும் நலன்களையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள கனகலதா அவர்கள் எழுதிய 'தாத்தா பாட்டி கவிதைகள்' என்ற நூலில்

உள்ள வாழ்வியல் சார்ந்த சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

செய்தி ஆசிரியரான க. கனகலதா, அவர்கள் தொகுத்த "தாத்தா பாட்டி எழுதிய கடிதங்கள்", என்ற நூலில் புலம்பெயர்ந்த தமிழர்கள் எழுதிய கடிதங்களைத் தொகுத்து நான்கு பகுதிகளாக கொடுக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பகுதிகளில் தமிழில் எழுதப்பட்ட கடிதங்கள் இடம்பெற்றுள்ளன. இம்மூன்று பகுதிகளில் இடம்பெற்றுள்ள கடிதங்களில் தற்கால இளைய தலைமுறையினருக்குத் தேவையான இன்றியமையாத நாட்டுப்பற்று மொழிப்பற்று போன்ற செய்திகள் அமைந்துள்ளன. இக் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறுபட்ட அனுபவங்களைக் கூறப்பட்டுள்ளன. சமூகத்தின் பல்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்வுகளைக் கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். அவரவர் வாழ்க்கையில் சில துயரமான நினைவுகள் இருந்தாலும் அவை வேதனையாகவோ விரக்தியாகவோ வெளிப்படாமல் இனிமையான நினைவுகளாக ஒவ்வொரு கடிதங்களிலும் வெளிப்பட்டுள்ளன. இவற்றுள் சில சிங்கப்பூரின் வரலாற்றினைப் பற்றி கூறுகின்றது.

### சிங்கப்பூர் வரலாறு

உலகில் சிறந்த நாடுகளுள் ஒன்றாக விளங்கும் சிங்கப்பூர் நீண்ட வரலாற்றைக் கொண்டது. இரண்டாம் உலகப்போருக்குப்பின் இதன் வளர்ச்சி அபரிமிதமானது. இதைப்பற்றி எஸ் சிவக்கொழுந்து தமது கடிதத்தில் சிங்கப்பூர் அன்று தத்தளித்த நிலையில் இருந்தது தட்டுத் தடுமாறி இன்று கரை சேர்ந்து வளர்ந்துள்ளதைப் பற்றி நினைவு கூறுகிறார். சிங்கப்பூர் தனது பிஞ்சுக் கால்களால் தவழ்ந்து எவ்வாறு நடைப் பழகியது என்பதைப் பற்றியும் அது சிங்கப்பூர் தமது முதல் குழந்தை என்றும் நவீன சிங்கப்பூர் எவ்வாறு பிறந்து வளர்ந்த்து என்பதைப் பற்றியும் குறிப்பிட்டு தமது பேரக்குழந்தைகளுக்குத் தேசப்பற்று ஏற்படும் வகையில் சிங்கப்பூர் வளர்ந்த விதத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

### நாட்டுப்பற்று

தாய்நாட்டை நேசிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. இந்நூலில் நாட்டுப்பற்றினை ஊட்டும் சில செய்திகளும் காணக் கிடைக்கின்றன. அந்த வகையில் சிங்கப்பூரின் முன்னாள் துணைப்பிரதமர் எழுதிய சிங்கப்பூர் பற்றுறுதி மற்றும், அவர் ஆற்றிய மிகப் பெரிய தொண்டு போன்ற செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளதன் வாயிலாக அக்கடிதங்கள் நாட்டுப்பற்றைத் ஊட்டுவதாகச் சில செய்திகள் உள்ளதை உணர முடிகிறது. முன்னோர்களை மறக்காமல், நாட்டு விசுவாசத்தைத் துறக்காமல் கலாசாரம் மொழியோடு குடும்ப

உறவைக் கட்டிகாக்க வேண்டும் என்ற சிந்தனையை இது வெளிப்படுத்துகிறது. தமிழ் சமுகத்தினர் தன் நாட்டின் மீதும் குடியேறிய நாட்டின் மீதும் பற்றுடையவராக இருந்தனர் என்பதை சில கடிதங்கள் தெரிவிக்கின்றன.

## மொழிப்பற்று

கலைச்சுடர் ஜி. கிருஷ்ணசாமி பாலன், தம் பிள்ளைகள் பிறந்து வளர்ந்ததைப் பார்த்துப் பெருமைப்படுவதைப்போல இந்த புதிய சிங்கப்பூர் பிறந்து இன்று உலகின் முதல் தர நாடாகப் பல துறைகளிலும் வளர்ந்திருப்பதைத் தமது கடிதத்தில் கூறுகிறார். தமிழ்மொழி அன்றைய சூழலில் அதிகாரத்துவ இடத்தைப் பெறாமல் இருந்தாலும் மிக ஆர்வத்துடன் பெற்றோர் மற்றும் சமூக உந்துதலால் மொழியைக் கற்று பங்கெடுதத்தைக் கூறி தமிழ் மொழியைத் தாய் எனக் கருதி நாம்தான் காப்பாற்ற வேண்டும் என்று தமது மொழிப் பற்றை வெளிப்படுத்துகிறார். நல்லொழுக்கம், நற்சிந்தனை, இறை நம்பிக்கை, பாசம், குடும்பப்பற்று மக்களுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் நல்ல அறிமுகம் என்று தம் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

பொன் சுந்தரராசு, எழுதிய கடிதத்தின் தொடக்கம் கவிதையாக பொழிவதுபோல் அமைவது இவர் ஓர் எழுத்தாளர் என்பதை கடிதத்தில் அமைந்திருக்கும் வார்த்தைகளே வெளிப்படுத்துகின்றன. தமது வாழ்க்கையில் நடந்த வரலாற்றுச் செய்தியை குறிப்பிட்டுள்ளார். பண்பாட்டுத் துறை அமைச்சர ராஜரத்தினம் இயற்றிய "சிங்கப்பூர் குடிமக்களாகிய நாம்" என்ற உறுதிமொழியை முதன் முதலில் இவர் சான்றோர்கள் முன்னிலையில் கம்பீரமாக வாசிதத்தைக் காலகளஞ்சிய செய்தியாகக் குறிப்பிட்டுள்ளார்.

## அறிவுரைகள்

பலரும் தமது கடிதங்களில் வாழ்வியல் உணர்வுகளை வெளிப்படுத்தியதோடு அல்லாமல் திட்டமிட்டு செயல்படவேண்டும் என்று கூறுகிறார்கள். நன்நடத்தை, உதவும் மனப்பான்மை, நூலகத்தின் முக்கியத்துவம், உறவுகளைச் நேசித்தல், தன்னம்பிக்கையூட்டுதல், விளையாட்டில் சிறந்து விளங்குதல் ஆகிய உயர் பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும் என்கிறார்கள். மேலும் திறமை மற்றும் உழைப்பு வாழ்க்கையின் சிறந்த பண்புகளுள் ஒன்று என்றும் பணிவோடும் கனிவோடும் மரியாதையோடும் நடந்துகொள்ளல் போன்ற வாழ்வியல் சிந்தனைகளையும் கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். இச்சிந்தனைகள் இளைஞர்கள் வாழ்வில் நெறியூட்டி செம்மையாக வாழ தூண்டுதலாக அமைந்துள்ளன.

## நல்லொழுக்கம்

என் ராதாகிருஷ்ணன் தம் கடிதத்தில், தம் சிறுவயதுக் காலத்தில் சிங்கப்பூர் வாழ்க்கை மிகவும் சிரமமாக இருந்தது என்றும் இன்று இருக்கின்ற வசதிகளில் கால்பங்குகூட அன்று இல்லை என்று தெரிவிக்கிறார். பெற்றோர்களது கண்டிப்பான வளர்ப்பைப் பற்றியும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எவ்வாறு தம்மை கட்டுக்குள் வைத்து ஒழுங்குப் படித்தினார்கள் என்றும் தம் உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய சந்ததியினர் எவ்வாறு சிரமமே இல்லாமல் வளர்கிறார்கள், சிலர் போதைப் பொருள்களுக்கு எவ்வாறு அடிமையாகி சீரழிந்து போகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு நன்மை தீமைகளைப் பகுத்தறிவால் ஆராய்ந்து இன்றைய சந்ததியினர் தம்மை கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையை அவரது கடிதத்தில் பதிவு செய்திருக்கிறார். இது நல்லொழுக்கத்தை இளைஞர்கள் மத்தியில் விதைப்பதாக உள்ளது. இக் கடிதங்களை எழுதியவர்கள் இளைய சமுதாயத்தைக் குறித்துக் கவலைப்படக் கூடியவர்காளாக உள்ளனர் என்பதையும் காட்டுகிறது.

## பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல்

எழுபத்து மூன்று அகவை நிரம்பிய யி.சீ. பிள்ளை தமது கடிதத்தில் பெற்றோரின் கண்டிப்பான வளர்ப்பு, கல்விக்குத் தந்த முக்கியத்துவம், அவர்களது தியாகம், ஊக்கம், போன்ற செயல்கள் தங்களது பண்புகளை வளர்த்து வாழ்க்கையில் குறிக்கோளை ஏற்படுத்தியது நினைவு கூர்ந்து எழுதுகிறார். 19ஆம் நூற்றாண்டு லெபனானிய கவிஞர் கலீல் கிப்ரான், பிள்ளை வளர்ப்புப் பற்றிக் கூறும் அறிவுரையை எடுத்துரைத்து பெற்றோர்கள் நடத்தை, குணநலன்கள் எவ்வாறு குழந்தைகளுக்குள் பதிகின்றன என்பதை சிந்திக்க வைத்துள்ளார்.

## கல்வி

கல்வி ஒரு மனிதனை மனிதனாக அடையாளம் காட்டுகிறது. இதில் தாய்மொழிக் கல்வி மிக முக்கியமானது. இதை டாக்டர் வி.கே, பிள்ளை தான் பண்பாட்டு ரீதியாகவும் மரபு ரீதியாகவும் இந்தியன் என்று குறிப்பிட்டு மலாயாவில் வாழ்ந்த சிலோன் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளின் நிலையை உயர்த்த ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பிப் பட்டக் கல்வி படிக்க வைத்தாலும், "பாலர் கல்வியைக் கட்டாயம் தமிழில்தான் படிக்க வைப்பார்கள்" என்ற கூற்று அவர்களின் தாய்மொழிப் பற்றை உணர்த்துவதாக உள்ளது. வசதி இல்லாத பல இந்தியர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்காக தனது நண்பர் ஜீ. கந்தசாமியுடன் பலரும் சேர்ந்து இந்தியர் கல்வி அறக்கட்டளையை உருவாக்கியதை வெளிப்படுத்தி, கல்விக்கும் சமூகத்துக்கும் உதவவேண்டும் என்ற உன்னதமான சிந்தனையை ஏற்படுத்தியுள்ளார்.

## ஒற்றுமை

உலகத்தில் எங்கு வாழ்ந்தாலும் எல்லோரும் ஆண்டாண்டு காலத்துக்கு ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக இனிதே வாழ வேண்டும் என்ற ஆசை, கூடி வாழவேண்டும் என்ற சிந்தனையை தூண்டுகிறது. இன்றைய சமூகச் சூழலில் ஒற்றுமை இன்மையால் நடக்கின்ற அவல நிலைகளைக் கண்டு மனம் நொந்து வரும் சந்ததியினருக்குச் சில அறிவுரைகளைத் தனது கடிதத்தில் எடுத்துக் கூறி ஒற்றுமையின் அவசியத்தை என். ராதாகிருஷ்ணன் என்பவர் வலியுறுத்துகிறார்.

## முடிவுரை

செய்திகள் கூறல், அறிவுறுத்தல், சீர்திருத்த நோக்கு போன்ற பல தன்மைகள் இந்நூலில் சிறப்பாக அமைந்துள்ளது. மேலும் அங்கதம், எள்ளல், சொற்பொழிவுத்தன்மை போன்ற மொழி நடைகளில் அமைந்து படிப்போரின் எண்ணத்தை எளிதில் கவருவதாக இக்கடிதங்கள் உள்ளன. மேலும் செய்திகள் கூறல், அறிவுறுத்தல் என்பன சீர்திருத்த நோக்கிலே இந்தக் கடிதங்கள் அமைந்துள்ளன.

புலம்பெயர்ந்த தமிழோர் எழுதிய இந்த கடிதங்களில் சமயம், பண்பாடு, கலாச்சாரம், மனிதமாண்பு, நாட்டுப் பற்று, தமிழ் உணர்ச்சி, தமிழ் ஆர்வம், போன்ற சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன. மூத்த தலைமுறையினரின் தமிழ் இலக்கிய வளங்களும் புலமை நலன்களும் இக்கடிதங்களின் ஊடாக வழங்கியுள்ள வாழ்வியல் செய்திகள் ஒருவர் வாழ்வை மேம்படுத்துவதாக அமைவதோடு நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கும் இது உதவும் என்பதில் ஐயமில்லை.

### பார்வை நூல்

க. கனகலதா, "தாத்தா பாட்டி எழுதிய கடிதங்கள்", Singapore: Panpac Education, 2008.

# மலேசியத் தமிழர்களின்
## வரலாறும் வாழ்வியலும்

முனைவர் லோ. சந்திரசேகர்,
உதவிப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை, தமிழ்நாடு

**மலேசியர்களின் சுருக்கமான வரலாறு**

வரலாறு என்றால் என்ன என்ற கேள்விக்கு, அரிஸ்டாட்டில் பின்வருமாறு பதில் அளிக்கிறார். 'வரலாறு என்பது பழைய காலத்தின் ஆவணம். அதை கடவுளே நினைத்தாலும் மாற்றியமைக்க முடியாது' என்கிறார். அதுபோன்று மாவோவும் மக்களே வரலாற்று நாயகர்கள். அவர்களால்தான் வரலாற்றை உருவாக்க முடியும். அவர்களால் மட்டும தான் சிறந்த வரலாற்றைப் படைக்க முடியும் என்றார். அப்படிப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்ட மலேசிய தனிழர்களின் வரலாறை பின்வருமாறு காணலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் வர்தகத் தொடர்பில் அயல்நாடுகளுடன் தொடர்புற்று இருந்தனர். சுமேரியா, எகிப்து, சீனா போன்ற நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தனர். அதன் காரணமாக வெளிநாட்டவரை சங்க இலக்கியத்தில் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. அவர்களை யவணர்கள் என்றும் அழைத்தனர். கிறித்து பிறப்பதற்கு முன்பே இந்திய வணிகர்கள் மூலம் இந்தியப் பண்பாடு மலேசியாவில் அறிமுகமாயிருந்தது. பிறகு சீறி விசயனின் சுதந்திரப் பேரரசின் காலமான கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பதிமூன்றாம் நூற்றாண்டின் காலம் வரை மலாயாவின் அரசியல் வணிக நடவடிக்கைகள் உருவாக்கம் பெற்றன. அரேபிய இசுலாமும் முதன்மை பெற்றன. மலேசிய ஆட்சியாளர்கள் இசுலாத்தைத் தழுவியதன் காரணமாக ஐரோப்பியர் வருவதற்கு முன்பாகவே அம்மதம் பலமாக வேரூன்றிவிட்டது. போர்ச்சுக்கீசியரினால் கிறித்துவ மதம் அத்தாக்கத்தை உடைக்க முடியவில்லை.

போர்ச்சுகீசியர்கள் 1511இல் மலாக்காவைக் கைப்பற்றி மிளகு வணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டனர். ஆனால் அதற்கு மலேசியாவைச் சுற்றிலுமுள்ள மாநிலங்களிலிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பின. டச்சுக்காரர்கள் நுழைந்தனர். இது போர்ச்சுகீசியர்களுக்குக் கோபத்தை உண்டுபண்ணியது. ஆனால்

டச்சுக்காரர்கள் 1614இல் போர்ச்சுகீசியர்களின் மலாக்காவைத் தாக்கியதற்கு ஜோகொர் சுல்தான் ஆதரவளித்தார். மலாக்காவை 1824 வரை டச்சுக்காரர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதே காலகட்டத்தில் பினாங்கையும் சிங்கப்பூரையும் ஆங்கிலேயர் பிடித்திருந்தனர்.

இப்படியாக இந்தியாவை அடிமைப்படுத்தி ஆட்சி செய்ததைப் போன்றே மலேசியாவில் பிரிட்டிசாரின் ஆட்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. பின்னர் ஐரோப்பியர்கள் மலேசியா தீபகற்பத்தில் நுழைந்த அதே காலகட்டத்தில் சீன வணிகர்கள் மிளகு வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். சீனர்கள் 1319ஆம் ஆண்டு முதலே வணிகம் செய்து வந்ததற்கான ஆவணங்கள் உள்ளன. ஆனால் மலாக்காவில் முதல் சீனக் குடியிருப்பு எப்போது ஏற்பட்டது என்று உறுதியாகத் தெரியவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் சீனர்கள் மலாக்காவில் தங்களை நன்கு நிலைநிறுத்திக் கொண்டனர். உள்ளூர் மலாயாப் பெண்களை மணந்து கொண்டனர். இவர்கள் பாபாக்கள் அல்லது தீபகற்ப சீனர்கள் என்றழைக்கப்பட்டனர். ஆங்கிலேயர்கள் பினாங்கை கைப்பற்றியதன் விளைவாக சீனர்கள் அதிக அளவில் குடியேறத் தொடங்கினர். கடற்கரைப் பகுதியிலும், உள்நாட்டிலும் வாணிகத்தில் ஈடுபட்டனர். 1840, 50களில் சீனர்களில் பெரும்பாலோர் சுரங்கப் பதிகளில் (தங்கம், ஈயம்) நுழைந்தனர்.

இதற்கிடையில் ஆங்கிலேயர் மலாய மக்களின் நல்லுறவைப் பேணி வந்தாலும், மலாய மக்கள் ரப்பர் தொழிலில் ஈடுபட்டு முன்னேறுவதை விரும்பாத ஆங்கிலேயர் எர்னஸ்ட் டபிள்யூ. பிரிச் பின்வருமாறு அவர்களை விமர்சனம் செய்கிறார்.

"ஒரு கத்தியுடன் நிழலில் அமர்ந்து ரப்பர் பால் இறக்கும் தொழில் மலாயின் மனநிலைக்கு பொருத்தமானதே. ஊதியமும் அதிகம். ஆனால் ஒரு பின்னடைவான காரணம் என்னவெனில் நீண்ட நேரம் வேலை செய்ய மாட்டார்கள் அல்லது பெரும் ஒழுங்கை எதிர்பார்க்க முடியாது. மலாய்கள் பொதுவாகவே சுறுசுறுப்பில்லாதவர்கள்; சோம்பேறிகள். அத்துடன் தொழில்ரீதியாக லாபம் ஈட்டித் தரக்கூடியவர்கள் அல்ல. தொடர்ந்து கடின வேலை செய்வதற்குரிய மனமோ மூளையோ இல்லாதவர்கள்" (மாயதேவன், 2007, ப. 18). இதனால் சீனர்களிடம் நட்பு பாராட்டத் தொடங்கினார். அதே சமயம் ஒரு சீனனிடம் நட்பு ஏற்படுத்திக் கொள்வது என்பது நம்பிக்கைக்குரிய காரியம். ஆனால் ஓர் அரசு அதிகாரி அதைச் சாதிக்காமல் பணியாற்றுவது மிகக் கடினமான காரியம் என்ற முடிவுக்கும் வரவேண்டியிருந்தது.

### சீனர்களுக்கு தொழில் செய்ய அனுமதி

ஆங்கிலேயர் சீனர்களைத் தொழில் செய்வதற்கு தடையில்லாமல் அனுமதித்தனர். சுரங்கத் தொழில், தோட்டத் தொழில் போன்ற தொழில்களுக்கு சீன முதலாளிகள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள்

தேவைப்பட்டனர். அதனால், தென் சீனத்திலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர். 1871ஆம் ஆண்டு 83,000 பேர்களாக இருந்த சீனர்கள் 1891இல் 1,83,000 பேர்களாக அதிகரித்தனர். ஆனால், சீனர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாமல் போயினர். சீனக் கூலிகளைக் கொண்டுவரும் கங்காணிகளும் நேர்மையற்றவர்களாக இருந்தனர். பல நாட்களாக கப்பலில் பயணம் செய்யப்பட்ட சீனக் கூலிகள், கப்பலிலிருந்து இறக்கப்பட்டவுடன் அங்குள்ள ஒரு முகவரிடம் ஒப்படைக்கப் படுவார். கப்பலில் வரும்போது காலரா நோயால் தாக்கப்படாமல் உயிர் தப்பித்திருந்தால் தோட்டத் தொழிலில் மலேரியா நோய்க்குப் பலியாகும் அவலம் இருந்தது. கடனில்லாமல் வந்த தொழிலாளி பிறகு கடனில் மூழ்கியே இறந்து போவார்.

### ஆங்கிலேயரும் தமிழர்களும்

முன்னர் கூறியது போல சீனத் தொழிலாளர்களை நிர்வாகம் செய்வது என்று ஆங்கிலேயருக்கு சிரமமான காரியமாக இருந்தது. அதனால் இதற்கு தமிழர்கள் பொருத்தமானவர்கள், அமைதியானவர்கள், எளிதில் கட்டுப்படக் கூடியவர்கள் என்று இந்தியாவில் குறிப்பாக தமிழர்களை இறக்குமதி செய்ய ஆங்கிலேய அரசு தீர்மாநித்தது.

இதில் இன்னொரு நன்மையும் ஆங்கிலேயருக்கு இருந்தது என்று குறிப்புத் தருகிறார் வெல்ட். "தோட்ட அதிபர்களுக்கு தென்னிந்திய தனிழர்களை சிலோனுக்கு இறக்குமதி செய்து அவர்களை நிர்வாகம் செய்த அனுபவம் ஏற்கனவே இருந்தது. அவர்களில் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்ட மக்கள்" (மாயதேவன், 2007, ப. 20) என்கிறார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தென்னிந்திய கூலித் தொழிலாளர்கள். அவர்களிலும் பெரும்பான்மையோர் தமிழர்கள். முதலில் கரும்புத் தோட்டங்களுக்கும், காப்பித் தோட்டங்களுக்கும் ஆட்கள் தேவைப்பட்டனர். பிரிட்டிஷ் தோட்ட அதிபர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கங்காணிகளை நியமித்துக் கொண்டனர். சீனத் தொழிலாளர்கள் சந்தித்த அதே நிலை இவர்களுக்கும் ஏற்பட்டது. 1860இல் பிரிட்டிஷ் இந்திய அரசு இந்நடைமுறையைத் தடை செய்ய முயன்றது. குறைந்த ஊதியத்திற்கு தொழிலாளர்கள் தேவை. எனவே தோட்ட அதிபர்கள் வெளிப்படையாகவே இந்தத் தடையை மீறினர். மறுபரிசீலனை செய்யுமாறு இந்திய அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதனால் சமரசம் ஏற்பட்டு 1871இல் சட்டரீதியாக ஆட்களை ஏற்றுமதி செய்தனர்.

மலேசியாவில் 1905இல் இரப்பர் அறிமுகப் படுத்தப்பட்டதற்கு பிறகு அதிக அளவில் தொழிலாளர் தேவை இருந்தது. அதனால் ஆங்கிலேயர் நேரடியாக இந்திய தொழிலாளர்களை இறக்குமதி செய்ய தொடங்கியது. இதற்காக, 'தமிழ்த் தொழிலாளர் நிதி' என்ற அமைப்பை 1907இல் தொடங்கப்பட்டது. இதனால் இரு நாட்டு காலனிய நாடுகள் நடைமுறைப்படுத்தின. அரசுப் தொழிலாளர் இறக்குமதி நிதி

திட்டத்திற்கும் உதவி புரிந்தது. இதனால் எந்த பாதிப்பும் இல்லாமல் நடைபெற்று வந்ததால் 1909ஆம் ஆண்டு 21,963 பேராக இருந்த தொழிலாளர்கள், 1913ஆம்ஆண்டு 91,236 பேராக வளர்ச்சிப் பெற்றனர். அவர்களுடைய தேவைக்குப் போதுமான பணத்தைவிட சிறிய அளவே சம்பளம் கூடுதலாக கொடுத்து வந்தனர். இந்தப் பணத்தை சேமித்துக் கொண்டால் அத்தொழிலாளிகள் நாடு திரும்ப உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் ஊதியம் தரப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால் சீனர்களைப் போன்றே சூதாட்டம், மது, மாது போன்ற போதைப் பொருட்களால் தமிழர்களின் பணமும் விரையமானது. நாடு திரும்ப போதிய பணமில்லாமல் மலாயாவிலே தங்கிவிட்டனர். கடன் தொல்லையால் பலர் அங்கே தங்கி தொழில் செய்து வந்தனர்.

### மலாய் என்பவர் யார்?

அதன் காரணமாக 1933ஆம் ஆண்டு சட்டத் திருத்தப்படி மலாய் என்பவர் யார் என்பதை விளக்கம் கூறும் முகமாக, "மலாய் என்பவர் மலாய் இனத்தைச் சேர்ந்தவராகவும், மலாய் மொழி பேசுபவராகவும், இசுலாத்தை தழுவியராகவும் இருக்க வேண்டும். டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து குடியேறியவர்களும் இதில் அடங்குவர். ஆனால் தலைமுறைகளாக மலேசியாவில் வாழ்ந்து வரும் சீனர்களும், தனிழர்களும் மலாய் மக்களாகக் கருதப்பட மாட்டார்கள். இது பின்னர் குடியுரிமை பிரச்சினைக்கு வழிவகுக்கும். சீனர்களும் தமிழர்களும் எத்தனைக் காலமாக மலேசியாவில் வசித்து வந்தாலும் அவர்கள் அனைவரும் தற்காலிகத் தொழிலாளர்களே என்று ஆங்கிலேய அரசாங்கம் கூறியது. காரியம் முடிந்தவுடன் கழுத்தை அறுக்கும் வெள்ளை ஏகாதிபத்தியம் தன் வேலையைக் காட்டிவிட்டது.

கல்வித் துறையில் ஆங்கிலத்திற்கும் மலாய் மொழிக்கும் முன்னுரிமை தரப்பட்டது. சீனமும் தமிழும் புறக்கணிக்கப்பட்டன. மலாய் நிர்வாகவியல் (இந்திய ஐ.ஏ.எஸ். போன்று) உருவாக்கப்பட்டது. காலனிய ஆட்சியாளர்கள் வெள்ளையர்கள் இருந்த இடங்களில், அரசின் நிர்வாகத்தில் மலாய்கள் தங்களை வலுப்படுத்திக் கொண்டனர்" (மாயதேவன், 2007, ப. 22).

### உடன்பாடு

மலாய்களுக்கு உள்ள சிறப்பு உரிமையும், அரசியல் உரிமைகளும் சீன இந்தியத் (தனிழர்) தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். பதிலாக, சீனர்களுக்கும் தமிழர்களுக்கும் வணிக நலன்களும் தாராளமாகக் குடியுரிமை வழங்குவதாக மலாய் அரசும் ஒத்துக்கொண்டது. மலாய் மொழி தேசிய மொழியாக இருக்கும். அதே சமயத்தில் சீனமும் தனிழும் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்ற இந்த முயற்சிக்கு வித்திட்டவர் துங்கு அப்துல் ரகுமான் குவிப்பிடத்தக்கவர்.

மலாய்த் தீவிரவாதிகள் சீனர்களையும் தமிழர்களையும் நாட்டை விட்டு வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்து வருகின்றனர். சீனர்களும்

தனிழர்களும் இதை எதிர்த்து வருகின்றனர். மலேசியாவின் முதல் தலைமை அமைச்சரான துங்கு அப்துல் ரகுமான் 1969, மே 9 அன்று வானொலியில் உரையாற்றினார். அப்போது, "மலாய் மக்கள் அரசியல் அதிகாரத்தை வென்றுள்ளனர். சீனர்களும் இந்தியர்களும் பொருளாதார சக்தியாக உள்ளனர். இந்த இரு தரப்பும் நல்லெண்ணத்துடனும் புரிதலுடனும் இணைந்து வாழும்போது மட்டுமே அமையும். நல்லுறவும் இருக்கும். அப்போது தான் நாடு செழிப்பாக இருக்கும்"" என்று கூறினார் (மாயதேவன், 2007, ப. 24). ஆனால் அந்த எண்ணம் அவருக்குப் பின் மாற்றங் காணத் தொடங்கியது.

## பூர்வகுடிகள்

மலேசிய நாட்டிலுள்ள மலாயர்களே பூர்வகுடிகள் என்று கூறிக் கொள்கின்றனர். ஆனால் உண்மையில் யார் பூர்வகுடிகள் என்றால் ஒராங்அஸ்லி என்னும் இனம்தான். இதை மாயதேவனும் மெய்ப்பிக்கும் தன்மையில்,"மலேசியாவின் மக்கள் தொகை ஏறக்குறைய இரண்டே கால் கோடி. இதில் 26 லட்சம் பேர் ஒராங் அஸ்லி இனக்குழு மக்களாவர். இவர்கள் தான் மலேசியாவின் பூர்வகுடி மக்களாவர். இவர்கள் பெரும்பாலும் கிழக்கு மலேசியாவிலும் (சபா, சரவாஜ்) சிறு எண்ணிக்கையிலானோர் மலேசிய தீபகற்பத்திலும் வாழ்ந்து வருகின்றனர்" (பக். 10, 11). சபா பகுதியில் அவர்கள் மண்ணின் மைந்தர்கள் அல்லது அநாக் நேகிரி என்று அழைக்கப் படுகின்றனர். அவர்களுக்குள்ளும் பல்வேறு பிரிவுகள் உண்டு. சுமார் 39 இனக்குழுக்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அப்படிப்பட்டவர்கள் இன்று காடுகளில் வாழ்ந்து வரும் அவர்களது வாழ்விடங்கள் இன்று பல்வேறு விதமாக அரசினாலும் தனியாராலும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன என்பது தான் உண்மை. இப்படிப் பட்ட உணர்வு கொண்டவர்கள் தமிழர்களை எந்தளவிற்கு ஏற்கத் துதிவார்கள் என்பது ஆய்வாளரின் கேள்வி.

தொடக்கத்தில் கூறியது போன்று தான், தனிழர்கள் தங்கள் அடையாளங்களைத் துறந்து மேலை நாட்டு மோகத்திற்கு அடிமையாகி, பிறகு தங்களுக்குள் உள்ள ஒற்றுமையின்மையால் எங்கு பார்த்தாலும் தமிழர்களின் அழுகுரல்கள் கேட்டுக் கொண்டே உள்ளது. இதைத் தடுக்க வேண்டுமென்றால் முதலில் ஒற்றுமை உணர்வு ஏற்பட வேண்டும். ஆட்சி அதிகாரத்தை கைக்கொள்ள வேண்டும், மொழி உணர்வு வேண்டும், விழிப்புணர்வு செய்து மக்களை ஒன்று திரட்ட வேண்டும். எங்கும், எதிலும் தமிழ், தமிழர் என்ற அடையாளத்தை நிலை நாட்ட வேண்டும்.

## தமிழ்ப் பள்ளிகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

மலேசியாவில் சுதந்திரத்திற்குப் பின்பு தமிழ்ப் பள்ளியின் நிலை மாற்றங் காணத் தொடங்கியுள்ளது. தமிழ்ப் பாடங்கள் எல்லாம் தமிழகத்தைச் சார்ந்து அல்லாமல் மலேசியாவை அடிப்படையாக வைத்தே பாட நூல்கள் உருவாகி வந்துள்ளது. இருப்பினும் இடைக் காலத்தில் பாடத் திட்டத்தில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தூண்டுதலாக இருக்கிறது. ஆனால் இந்த முறையில் அடிப்படையில் பாடங்களை முழுமையாகக் கற்றுக் கொடுத்திருந்தால், தமிழ்ப் பள்ளி மாணவர்கள் மிகவும் சிறப்பாக தேர்வு பெற்றிருப்பார்கள். தமிழ்ப் பள்ளிகளில் முன்பே பல சிக்கல்கள் இருந்தமையால் இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்த முடியாதது வருந்தத்தக்கது. மேலும் தமிழ்ப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை, குறைவான அடிப்படை வசதி, பொருளாதார ஆதரவு பற்றாக்குறை, தகுதிக்கேற்ற வாய்ப்பின்மை, திறமைக்கு சோதனை, கற்பிக்கும் முறையில் மாற்றம், எதிர்கால திட்டம் இல்லாமல் இருத்தல், ஆங்கில மோகத்தால் உருவான பாதிப்பு போன்ற காரணங்களால் தமிழ்ப் பள்ளிகள் கொண்டுள்ள சிக்கல்களாக வகைப்படுத்தவியலும்.

### பல்கலைக்கழகத்தில் தமிழ்

மலேசியப் பல்கலைக்கழகத்தில் சீனமும், மலாயா மொழியும் இடம் பெற்றிருந்தது. 1956ஆம் ஆண்டு முதல் தமிழ் மொழியும் இடம் பெறத் தொடங்கியது. மலேசியாவில் உள்ள மக்கள் தொகையில் மூன்றாவது இடம் பெற்றிருப்பது தமிழர்கள்தான். மலேசியாவில் நூற்று எண்பத்தைந்து சதவிதத்தினர் தமிழர்கள். தாய்மொழி தமிழ் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இடம் பெறுவது எவரும் ஒப்பக் கூடியது தான் என்றாலும், தமிழகத்திலிருந்து ஆலோசனை சொல்ல வந்த நீலகண்ட சாஸ்திரி சமஸ்கிருதமே பல்கலைக்கழகத்தில் இடம்பெற வேண்டும் என்றார். இதற்கு சாட்சி சொல்லும் தன்மையில் இந்திய அரசும் 70 சமஸ்கிருத புத்தகங்களை அனுப்பியது. இதுபோன்ற நிலையால் தான் தமிழுக்கும், தமிழருக்கும் இடையூறு உண்டாகின்றது.

### முடிவுரை

உலக நாகரிகத்திற்குத் தொட்டிலாக தமிழினம் விளங்கியது. ஆனால் இன்று தமிழர்கள் என்றாலே வெறுக்கின்றனர். இந்நிலை மலேசியாவில் வேறு வடிவத்தில் தொடங்கிவிட்டது. அவர்களும் தமிழர்கள் என்றாலே வெறுத்து ஒதுக்கும் தன்மையில் இருக்கின்றனர். இதற்கிடையில் மலேசியத் தமிழர்கள் தங்களுடைய முழு கவனம் மொழிமீது செலுத்த வேண்டும். ஏனென்றால் ஓர் இனத்தை அழிக்க நினைத்தால், அவ்வினம் பேசும் மொழியை அழியுங்கள், உடனே அந்த இனம் தானே அழியும் என்பார்கள். எனவே தமிழர்கள் மொழியை காப்பாற்ற வேண்டிய கடமை மிக்கவர்களாக இருக்கின்றனர்.

### துணைநூற் பட்டியல்

1. மாயதேவன், மலேசியாவில் தமிழர்கள், 2008, தமிழோசைப் பதிப்பகம்.
2. வாஞ்சி, சிந்துவெளியும் அதற்கப்பாலும் தமிழ்ப் பண்பாடு, 2008.

# மலேசியத் தமிழர்களின் வாழ்வியல்நிலை

புலவர். ஆ. சந்திரசேகரன்
தலைமையாசிரியர் (பணி நிறைவு)
பழனி முருகன் நகர்
கடலூர், தமிழ்நாடு

**முன்னுரை**

உலகின் பல பகுதிகளிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்று வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஆதிகாலம் தொடங்கி இந்தக் காலம் வரை தம் நாட்டைவிட்டு, கடல் கடந்து புலம் பெயர்ந்த தமிழராவர். அவ்வாறு புலம்பெயர்வதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்திருக்கின்றன. குறிப்பாக மலேசிய நாட்டிற்குப் புலம்பெயர்ந்த தமிழரின் வாழ்வியல் நிலை முன்பு எவ்வாறு அமைந்திருந்தது தற்போது எவ்வாறு அமைந்திருந்திருக்கிறது என்பதனைக் காணும் நோக்கில் இக்கட்டுரை மலர்கிறது.

**புலம் பெயர்தல்**

மக்கள் தாம் வாழும் நாட்டிலிருந்து யாதானும் ஒரு காரணம் பற்றி மற்றொரு நாட்டிற்கு இடம்பெயர்ந்து செல்ல நேரிடுகிறது. இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்கள் 'அகதிகள் ' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தனியிடங்களில் தற்காலிகமாகக் குடியமர்த்திய இடம் 'முகாம்' என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு வேற்றுப் புலத்திலிருந்து தற்காலிகக் குடியிருப்புகளில் தங்கியுள்ளோர் வாழ்க்கை நிலையை நம்மால் ஓரளவே அறிய முடியும், நிலம் பெயர்தல் அல்லது புலம்பெயர்தல் என்பவை ஒரு பொருளுடையவையே

**புலம்பெயர்ந்தோர்**

தங்களுடைய விருப்பத்திற்கோ அல்லது மாறாகவோ பிறந்த இடத்தில் வாழ்வதற்கான உறுதிப்பாடு ஏதுமற்ற நிலையில் தம் நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து பிறிதொரு நாட்டிலே தஞ்சம் புகுந்தோரைப் புலம் பெயர்ந்தவர்களாகக் கொள்ளலாம்.

'1990' ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக்கழகத்தில், ஆஸ்திரேலியாவில் குடியேறிய அகதிகள்

பிரச்சனையை ஆராயும் மாநாடு நடைபெற்றது, அந்த மாநாட்டில் '*The Tamil Diaspora*' என்ற சொற்றொடர் பரவலாகப் பயன் படுத்தப்பட்டது. அந்த சொற்றொடரைப் ' புலம்பெயர்ந்தோர்தமிழர் ' என்று தமிழாக்கம் செய்யலாம் என்று அந்தமாநாட்டிலே எழுத்தாளர் எஸ்.போ. என்பவர் அறிவித்தார் . அதன் பின்னர் அந்தத் தொடரே பரவலாக வழங்கப்பட்டு ' புலம்பெயர்ந்த தமிழர்' என்று 'நிலைத்துவிட்டது' [1]

தமிழர், தம் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து பிறநாட்டில் குடியேறியதைப் போல பிறநாட்டினரும் புலம்பெயர்ந்து தமிழ்நாட்டிற்கு வந்துள்ளார்கள்,

யார் எந்தக் காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்திருந்தாலும் அடிப்படையான உரிமைகளையும் பாதுகாப்பையும் அளித்திடுதலே மனித நேயம். பாதிக்கப்பட்ட எந்த ஒரு தனிமனிதனுக்கும் பிறநாட்டில் புலம் பெயர்வதற்கும், தஞ்சம் கோருவதற்கும் உரிமை உண்டு. இதனை உலகளாவிய மனித உரிமைப்பிரகடனமே ஏற்றுக்கொள்கிறது.

### தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகள்

பர்மா, (மியான்மர்), மலேசியா, சிங்கப்பூர், இந்தோனிசியா, இலங்கை, சீனா போன்ற ஆசியநாடுகள் - டென்மார்க், ஜெர்மனி, நார்வே,சுவிட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் - குயானா, சூரினாம் போன்ற தென்னமெரிக்கா நாடுகள் - மடகாஸ்கர் , காங்கோ, தென்னாப்பிரிக்கா போன்ற ஆப்பிரிக்க நாடுகள் - பாபுவா, நியூ கினி போன்ற கரீபியன் கடல் தீவுகள் - பிஜி போன்ற மேற்கத்தியத் தீவுகள், மற்றும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து பகுதிகளிலும் தமிழர்கள் புலம் பெயர்ந்து குடியேறியுள்ளார்கள். ஒரு குலைக்காய்கள் உதிர்ந்து சிதறுவதைப்போல இவர்கள் உலகின் பல பகுதிகளிலும் சிதறிக்கிடக்கிறார்கள்.

### தமிழர் புலம்பெயர்ந்ததற்கான காரணங்கள்

இதற்கான காரணங்கள் பலவாக இருப்பினும் கீழ்க்கண்ட காரணங்களை முதன்மைக் காரணங்களாகச் சுட்டலாம்.

கல்வி, போர், தூது, இயற்கை இடர்ப்பாடுகள், பொருளாதாரக்குறைபாடு, சாதி - சமய - மத - இன வேறுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், பல்வேறு வாழ்க்கைப் பிரச்சனைகள், அரசியல் சூழ்நிலைகள் - அந்நியர் ஆட்சி - பிழைக்க வழிதேடல் - வணிகம் செய்தல் - பொருளீட்டல் - புதியன காணும் ஆர்வம் போன்றவை தமிழர்கள் புலம்பெயர்வதற்கான காரணங்களாக அன்றும் இன்றும் அமைந்துள்ளன. தொடக்கத்தில் தமிழர் புகலிடம் நோக்கிப் புலம் பெயர்ந்திருக்கிறார்கள். புலம்பெயர்தல் என்பது மகிழ்ச்சிக்குரிய எளிய

# மலேசியத் தமிழ்க் கவிதைகள் பன்முகப்பார்வை

முனைவர் மு. சற்குணவதி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தொலைதூரக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, தமிழ்நாடு

உலக வரலாற்றை அலசி ஆய்கிற போது உயிரினங்கள் முதற்கண் தோன்றிய பகுதி இந்தியாவின் தென்பகுதியாகிய பண்டைத் தமிழகமே என்பது புலனாகின்றது. குறிப்பாக உயிரினங்களுள் மக்களினம் தோன்றிய பகுதி பண்டைத்தமிழகம் என்பதும் பெறப்படுகின்றது. இதனைக் ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி'' என்னும் புறப்பொருள் வெண்பாமாலை வரிகள் மெய்ப்பிக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்தில் உயிரினங்களை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று பிரித்துப் பார்த்த பெருமை தொல்காப்பியரையே சாரும். காலத்தால் பழமையும், பழம்பெரும் இலக்கிய வளமையும் கொண்டவர்களே தமிழர்கள். அவர்களின் பண்பாடும் உலகளவில் மதிக்கத்தக்க ஒன்றாகும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயரிய எண்ணம் கொண்டவர்கள் தமிழர்கள். 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று அறிவுறுத்தியவர்கள் தமிழர்கள். வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடியவர்கள் தமிழர்கள் 'அறம் செய விரும்பு' 'ஆறுவது சினம்' என்று சொன்னவர்கள் தமிழர்கள். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' 'ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்' என்று வாழ்விற்கு வழிகாட்டியவர்கள் தமிழர்கள். அன்பும் சிவமும் ஒன்றென உணர்ந்தவர்கள் தமிழர்கள். அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் என அன்பு வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள். இவை போன்று உயரிய சிறப்புக்களையும், பழம் பாரம்பரியமும் உடைய தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகின்றனர். வரலாற்று நெருக்கடி காலக்கட்டத்தில் பல்வேறு நாடுகளுக்கும் சிதறுண்டுபோன தமிழர்கள் அவ்வவ் நாடுகளையே தமது நாடுகளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அதே வேளையில் தமது தாய்மொழிப்பற்றினையும், தமிழ்ப் பண்பாட்டினையும், கைவிடாமல் வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் மலேசிய நாட்டிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

### தொழிலாளர்களாக வந்த தமிழர் நிலை

உழைப்பதற்காக மலேசியா வந்த தமிழ்த் தொழிலாளர்கள் ஆங்கிலேயாரால் அடிமைகள் போல் நடத்தப்பட்டனர். குறைந்த கூலி கொடுத்து , நாள் முழுவதும் கடின வேலைகளில் தமிழர்களை ஈடுபடுத்திக் கசக்கிப்பிழிந்தனர். அடிப்படை வசதிகளற்ற சுகாதார மற்ற சூழலில் தங்கவைத்தனர். சரியான உணவு - உடை கூட கிடைக்கவில்லை. குறைந்த கூலி - அதிக உடலுழைப்பு - ஏற்ற உணவின்மை - சுகாதாரமின்மை போன்ற காரணங்களால் நாளுக்கு நாள் தமிழர்கள் உடல் நலிவுற்று காய்ச்சல், காலரா போன்ற கொடிய நோய்களுக்கு ஆட்பட்டு சிலர் இறந்தும் போயினர். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் விடிவாக '*1934*' ஆம் ஆண்டு முதன் முறையாக 'மலாய்ப் பொதுத் தொழிலாளர்கள் சங்கம்' (*Malayan General Labour Union* ) தோன்றியது'[4]. இதன் பின்னர் தான் தமிழரின் வாழ்வு படிப்படியாக உயரத்தொடங்கிற்று.

### திரைகடலோடி திரவியம் தேடல்

கடல்கடந்து , உலகநாடுகள் பலவற்றுடன் வணிகம் நடத்திக் காட்டிய நாகரிகம் தமிழருடையது, 'பட்டினப்பாலை' என்ற ஒரு நூலே இதற்கு இலக்கியச்சான்று. 'வெளியூர்களிலும்' வெளிநாடுகளிலும் சென்று வாணிகம் செய்வோரைச் 'சாத்தன்' என்றும் அவர்தம் வாணிகக் குழுவைச் 'சாத்து' என்றும் பழந்தமிழப் புலவர் குறித்தனர், மசாத்துவான் - கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆகிய பெயர்கள் இப்பொருளிலேயே பண்டைய இலக்கியங்களில் வழங்குகின்றன'.[5]

இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ்நாட்டு நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பர்மா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்குச்சென்று வாணிகம் செய்து, தங்களது அயராத உழைப்பினாலும், நேர்மையான தொழில் முறையாலும் மிகு பொருள் சேர்த்துப் புகழ்பெற்றிருக்கிறார்கள், மலேசியாவில் நகரத்தார்கள் ஆலயத்திலேயே சங்கத்தையும் அமைந்திருந்தனர்.

'இரப்பர் மரத்தை மலேசியாவில் நகரத்தார்கள்தான் முதன் முதலில் பயிரிட்டார்கள். ஒரு நாட்டின் வளத்திற்கே வித்திட்ட பெருமை நகரத்தார்களுக்கு உண்டு'[6].

### மலேசியாவின் மாண்பு

புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடக்கத்தில் அயல்புலச்சூழலில் தம்தாய்மொழியான தமிழறிவையும், தமக்குரிய தமிழ்ப்பண்பாடு, நாகரிகம் ஆகியனவற்றைப் போற்றுவதிலும்,அயல் புலச்சூழ்நிலையை அடுத்தத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதிலும் அளவிறந்த துன்பங்களை அடைந்திருக்கக்கூடும். இவற்றிலிருந்து மீண்டுத் தமிழர் எனும் அடையாளத்தைக் காப்பாற்றி ஏனைய இனத்திற்குச் சமமான

உரிமையுடன் வாழும் நிலையைத் தமிழன் அடைவதற்கான வாய்ப்பும் வசதியும் மலேசியாவில் அமைந்தமை தமிழர் பெற்ற பெரும்பேறாகும்.

தமிழர் இன்று குடியுரிமை பெற்று மலேசியாவில் ஏறத்தாழ பத்து இலட்சம் மக்களுக்கு மேலாக மக்கள் வாழ்ந்து வருவதனை அறியமுடிகிறது, மலேசியா ஓர் உலகச் சந்தையாக இன்று திகழ்கிறது. இங்கு உலகநாடுகள் அனைத்தின் வணிகத் தொழில் களும் நடைபெறுகின்றன. இதனால் பன்னாட்டு மக்களின் கலை. கலாச்சாரப் பண்பாடுகளை அறியவும், அவர்களுடன் நட்புக் கொள்ளவும் வாய்ப்பாக உள்ளது.

### இந்திய மலேசிய நட்பு

மலேசியா இந்தியாவிற்கும் இடையே ஒரே மாதிரியான அரசியலமைப்பு அமைந்துள்ளது. இரு நாடுகளிலும் பாராளுமன்ற சனநாயகம் பேணப்பட்டு வருகிறது. அன்று முதல் இன்றுவரை நட்பு நாடுகளாக இரு நாடுகளும் விளங்கி வருகின்றன. என்றும் இந்த நிலையே தொடரும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இந்திய மண்ணைச் சீனர்கள் கையகப்படுத்தமுயன்ற போது மலேசியஅரசு, இந்தியாவுக்கு ஆதரவளித்துப் பாதுகாப்பாகவும், பக்கத்துணையாகவும் இருந்ததையும் யாவராலும் மறக்க இயலாது.

### கலாச்சாரக் கருவூலம்-மலேசியா

கலாச்சாரக் கருவூலமாகவும், வரலாற்றுப்பெட்டகமாகவும், பண்பாட்டின் சிகரமாகவும் இன்று மலேசியா விளங்குகிறது. இங்கு வாழும் தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கிறார்கள். இவையாவும் உழைப்பால் வாழ்வைச் செம்மைப்படுத்தி, ஒருமைப்பாட்டுடன் செயலாற்றும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்களால் உருவானதாகும்.

தொழிலாளிகளையும் முதலாளிகளாக ஆக்கவேண்டும் என்று தேசியத்திட்டத்தைச் செயல் படுத்திய மாண்புமிகு டத்தோ. சம்பந்தம் என்ற தமிழர் மலேசியாவில் அமைச்சர் பொறுப்பு வகிக்கிறார். தொழிலாளர் நல அமைச்சராகத் திருமிகு. மாணிக்கவாசகம் என்ற தமிழர் இருக்கிறார் என்றால் இதைவிடத் தமிழருக்கு வேறு பெருமை என்ன இருக்க முடியும்?

மலேசியத் தலைநகரிலுள்ள மலாய்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக் கென்று ஓர் ஆய்வுப் புலம் அமைக்கப்பட்டுள்ளது தமிழர்க்குக் கிடைத்த பெருமையாகும். 1966 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டை முதன் முதலில் கோலாலம்பூரில் நடத்திக்காட்டிய பெருமை மலேசியாவிற்கு உரியது. இதன் பின்னர்த் தான் 1968 இல் இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் நடைபெற்றது. உலகத் தமிழ்மன்றமும் மலேசிய பல்கலைக்கழகமும் இணைந்த கூட்டு

முயற்றியால் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் பல இடங்களில் நடைபெற்றுவருகின்றன, இன்று பலவகையிலும் தமிழுக்கு உயர்வும், தமிழர்க்குச் சிறப்பான வாழ்வையும் அளித்துவரும் பெருந்தன்மைமிக்க நல்ல அரசாக மலேசியா விளங்குகிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் மலேசியா சென்று அங்குள்ள தமிழர்வாழ்வை நேரில் கண்டு கூறியவை; பல்லாண்டு காலத்திற்கு முன்னே தமிழ்த் தாயகத்தைவிட்டுச் சென்ற பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர் என்று கூறியுள்ளதே பெரிய சாட்சியாக அமைகிறது. மேலும்,'மற்ற நாடுகளிலே தமிழர்கள் ஏதோ இருக்கிறார்கள் - ஆனால் மலேசியாவில்தான் அவர்கள் வாழ்கிறார்கள்'[7] என்கிறார், 'இருக்கிறார்கள்' என்பதற்கும் 'வாழ்கிறார்கள்' என்பதற்குமான விளக்கத்தைப் புரிந்துகொண்டால் இவ்வுண்மை விளங்கும்.

### மலேசியா-சிங்கப்பூர்

மலேசியா சிங்கப்பூர் என்றால் பன்மையில் ஒருமைதான், ஒரு கொடியில் இருமலர்கள் போன்றது , ஒருகாலத்தில் சிங்கப்பூரும், மலேசியாவும் ஒன்றாகத்தான் இருந்திருக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சியில் தான் , சிங்கப்பூரை 'காலனி ஆஃப் சிங்கப்பூர் 'என்றும், மலேசியாவை' பெடரேஷன் ஆஃப் மலேசியா' என்றும் பிரித்ததாக அறிகிறோம்,

சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் தமிழ்மொழியின் கலை, பண்பாடு, நாகரிகம் வேரூன்றவும், தமிழ் மொழி - சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக ஆக்கப்படுவதற்கும் அரும்பாடுபட்ட திரு. கோ. சாரங்கபாணி அவர்களை மறக்க இயலாது.

சிங்கப்பூரிலும் தமிழ் மொழி - கலை - பண்பாடு வளம்பெற சங்கங்கள், கழகங்கள், சபைகள், பேரவைகள்,போன்றனவற்றை அமைத்துச் செயலாற்றி வருவதையும், 'முத்தமிழ் விழா' - 'கண்ணதாசன் விழா' போன்ற விழாக்கள் நடைபெற்றுவருவதையும் நாளேடுகள் வாயிலாக அறியமுடிகின்றது. மலேசியா சிங்கப்பூர் த் தமிழறிஞர்கள், தமிழ்நாட்டின் கல்லூரி - பல்கலைக்கழக ஆராய்ச்சி நிறுவனங்களில் நடைபெறும் கருதரங்கம், ஆய்வரங்கங்களில் பங்கு பெற்று , தமிழ்ச்சிறப்புரையாலும் - கட்டுரை வன்மையாலும் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார்கள் என்பது போற்றுதற்குரியதாகும்.

### நிறைவு

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

'கூடிவாழ்ந்தால் கோடிநன்மை'

என்ற உலகளாவிய உயர் கொள்கையை அளித்தவர் தமிழர் , இதனை உளங்கொண்டு, புலம் பெயர்ந்த தமிழராயினும் நலம் உயர்ந்த தமிழராக வாழ்வோம் , உலகை வளமாக்குவோம்.

குறிப்புகள்

1. ராமசாமி, பி. (1999) மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், கோலாலும்பூர் - செம்பருத்திப் பதிப்பகம், ப.14.
2. புலம்பெயர்ந்த தமிழர் சிறப்புமலர், டிசம்பர் - 18.1994, திருச்சி. ப.22.
3. அறவாணன், க.ப. தமிழர்கள் வரலாறு (தொல்தமிழர் காலம்) தமிழ்க்கோட்டம், அமைந்தகரை, சென்னை. ப.81.
4. மலேசியாவில் தமிழர்களின் குடியேற்றமும் விடுதலைக்கு முன் அவர்களின் போராட்டங்களும், 1941 - இன் போராட்டம் ஒரு சிறப்புப் பார்வை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.50.
5. கலைமுத்து, க.(2008) மலேசிய இந்தியர்கள் ஓராய்வு, கோலாலம்பூர் பைன் ஆர்ட் பிரிண்டிங் வொர்க்ஸ், பக்.50.
6. சிதம்பரம், வி.என். வெளிநாட்டு அனுபவங்கள், வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை, 17, பக்.20.
7. செங்குட்டுவன், மா. மலேசியாவில் அண்ணா, தாமரைச்செல்வி பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை, 14, பக்.74.

# மலேசியாவில் தமிழ்க் கல்வி

முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

## முன்னுரை

மலேசியா பல இனமக்கள் வாழும் ஒரு நாடு. அங்கு அந்நாட்டின் தேசிய மொழிகளான மலாய், சீனம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. இருப்பினும் மலாய் மொழியே கற்பித்தல் மொழியாக உள்ளது. தமிழ்ப் பள்ளிகள் தமிழ்க் கல்வியைக் கற்பித்து வருகின்றன. எனவே, இவ்வாய்வுக் கட்டுரையானது, மலேசியாவில் தமிழ்க் கல்வி வளர்ச்சிக் குறித்து விரிவாக ஆராய்கின்றது.

## தொடக்கக்கல்வி

பினாங்குத்தீவு 1786இல் ஆங்கிலேயர்களின் ஆளுகையின்கீழ் வந்தபின்னர் மலேசிய நாட்டிற்கு இந்தியத் தொழிலாளர்களின் குடியேற்றம் தொடங்கியது. 1800களில் திண்ணைப் பள்ளி அமைப்புப் போன்ற நிலைகளிலும், தனிப்பாட முறையில் வீடுகளிலும் தமிழ் பயிலப்பட்டு வந்துள்ளது. இந்தியர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கச் சமயப் பணிகளோடு தொடர்புடைய இடங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் தொடக்கக்காலத் தமிழ்ப்பள்ளிகள் இயங்கின. அதன்பின் பினாங்கில் 1816இல் ரெவரெண்டு ஹட்சிங்ஸ் முயற்சியால் இலவசப் பள்ளி (Penang Free School) என்ற பெயரில் ஆங்கிலப் பள்ளியின் ஒரு பிரிவாகத் தொடங்கப்பட்டது. இதுவே முதல் பள்ளி ஆகும். இது மூடப்பட்டபின் 1834இல் சிங்கப்பூர் இலவசப் பள்ளியின் (Singapore Free School) ஒரு பிரிவாகத் தமிழ்ப்பள்ளி தொடங்கப்பெற்றது. இது 1839இல் மூடப்பட்டது. சிங்கப்பூர்ப் பிரான்சிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் மலாக்கா தெங்காரோ பள்ளியிலும் தமிழ்ப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

இதே காலக்கட்டத்தில் ஆங்கிலோ-தமிழ்ப் பள்ளிகள் பினாங்கிலும், சிங்கப்பூரிலும் கிறித்துவ சமய நிறுவனங்களால் நடத்தப்பெற்றன. முதலாவது தோட்டத் தமிழ்ப் பள்ளி வெல்லஸ்சி

மாநிலத்தில் தொடங்கப்பெற்றது. பின்பு கோலாலம்பூரிலும் ஒரு தமிழ்ப்பள்ளி தொடங்கப்பெற்றது.

**தமிழ்மொழியின் வளர்ச்சி**

1900ஆம் ஆண்டு வாக்கில் முதலாவது அரசினர் தமிழ்ப்பள்ளி ஒன்றும், சிரம்பானில் ஒரு பள்ளியும் நிறுவப்பட்டன. 1912இல் தொழிலாளர் அடிப்படையில் சிறுசிறு தமிழ்ப்பள்ளிகள் தோன்றின. 1932ஆம் ஆண்டு முதல் கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 100 வெள்ளி கொடுக்கப்பட்டது. எனினும் கல்வியின் தரம் உயரவில்லை. இருப்பினும் மலேசியாவிற்கு 1929இல் ஈ.வெ.ரா. பெரியாரின் வருகையும், அவரது சுயமரியாதைக் கொள்கையும், தமிழர் நாகரிகம் மற்றும் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கொள்கையும், நகர்ப்புறத் தோட்டப்புறத் தமிழர்களுக்கு எழுச்சியைத் தந்தன. இதன் பயனாய்த் தோட்டப்புறங்களில் தமிழ்ப்பள்ளிகள் அமைக்கும் முயற்சிகள் தீவிரமடைந்தன. மக்கள் தொகையிலும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தால் தமிழ்மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் முதன்மை இடம் வழங்கப்பெற்றது. தொடர்ந்து இலக்கிய முயற்சிகளும் தொடங்கின. தமிழ்வழிக் கல்வி பயின்றவர்கள் தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவதில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தினர்.

**தமிழ்வழிக் கல்வி**

கல்வியின் தரம் உயர நல்ல ஆசிரியர்களை உருவாக்கும் முயற்சியில் பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. முதன்முதலில் 1938இல் தமிழ் போதனாமுறை வகுப்புகள் தொடங்கப்பெற்றன. தமிழ் ஏழாம் வகுப்பு தேர்ச்சியடைந்தவர்கள், இப்பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1949இல் கல்வி குறித்த ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டபின் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தது.

1946இல் புதிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதன்படி தொடக்கப் பள்ளிகளில் தாய்மொழிக் கல்வி இலவசமாகக் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட்டது. 1947இல் தமிழ்ப்பள்ளிகளைத் திருத்திக் கட்டவும், நவீனச் சாதனங்களைப் பெருக்கவும், பயிற்சிபெற்ற ஆசிரியர்களை நியமிக்கவும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது. இதனால் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை கூடியது.

1946இல் 33,466 இருந்த மாணவர்களின் எண்ணிக்கை மூன்றாண்டுகளுக்குப் பிறகு 38,700ஆக உயர்ந்தது. அரசு நியமித்த பல உயர்மட்ட ஆலோசனைக் குழுக்களால் தமிழ்ப்பள்ளிகள் ஓரளவு

வளர்ச்சி நிலையை அடைந்தன. தொடக்கப் பள்ளியின் ஆறாண்டுகளில் முதல் மூன்றாம் ஆண்டுவரை தாய்மொழிக் கல்வி மட்டுமே கற்றனர். பின்னர் அதனுடன் ஆங்கிலம் மலாய் மொழிகளையும் கற்றனர்.

1947இல் சுதந்திரத்திற்குப்பின் போதனாமுறைப் பயிற்சி நிறுத்தப்பட்டது. தலைநகரில் தினப்பயிற்சி நிலையத்தில் இருந்த தமிழ்ப்பிரிவும் கைவிடப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1967இல் தஞ்சோங் மாலிம் என்ற இடத்தில் விடுமுறைக் காலத் தற்காலிகத் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு ஒன்று சுல்தான் இட்ரிஸ் பயிற்சிக் கல்லூரியில் தொடங்கப்பெற்றது.

தமிழ்ப்பள்ளிகளுக்குத் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களின் தேவையை உணர்ந்த கல்வி அமைச்சு, பல நகரங்களில் இயங்கி வந்த ஆசிரியர் கல்லூரிகளில் தமிழ்ப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியது. தற்சமயம் கோலாலம்பூர், சிரம்பான், ஈப்போ, சுங்கைப் பட்டாணி, யுக்கிட்மெர் தாஜம், குவபந்தான், ஜொகூர்பாரு ஆகிய முக்கிய நகரங்களில் தமிழாசிரியர்களுக்கான பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பயிற்சி பெற்றவர்களுக்குத் தேசிய மொழி முதன்மை மொழியாகவும், தமிழ் ஒரு பாடமொழியாகவும் உள்ளது.

1956இல் அமைக்கப்பட்ட 'துன் ரசாக் குழு' இரண்டு முக்கிய அம்சங்களை வலியுறுத்தியது.

1. அப்போதிருந்த தொடக்கப்பள்ளிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை தேசியப் பள்ளி, தேசிய ஆரம்பப் பள்ளி, தேசிய ஆரம்பச் சீனப் பள்ளி, தேசிய ஆரம்பத் தமிழ்ப் பள்ளிகளாகும்.

2. அனைத்துத் தொடக்கப்பள்ளிகளிலும் குறைந்தது 15 மாணவர்களின் பெற்றோர் கேட்டுக்கொண்டால் தமிழையோ சீனத்தையோ கற்றுக்கொடுக்கும் நிலை இருந்தது.

1960இல் அப்போதைய கல்வி அமைச்சர் ரஹ்மான்தாலிப் தலைமையில் அமைந்த குழுவின் அறிக்கையின்படி அனைத்துப் பள்ளிகளும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. மலாய் பள்ளிகள் அனைத்தும் தேசியப் பள்ளிகளாகவும், சீனம், மற்றும் தமிழ்ப் பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாகவும் இயங்கின. இன்றும் இதனடிப் படையிலே பள்ளிகள் இயங்கிவருகின்றன.

சிறுசிறு பள்ளிகள் இணைக்கப்பட்டுக் கூட்டுப்பள்ளிகளாக மாற்றப்பட்டன. இதனால் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கையும் சேர்ந்து பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது.

1975க்குப் பிறகு பல தமிழ்மாணவர்கள் தேசியத் தொடக்கப் பள்ளிகளில் சேர்ந்து பயில விரும்பினர். எனவே இதனாலும்

எண்ணிக்கை குறைந்தது. 1971இல் 647 பள்ளிகள் இருந்தன. 1980இல் இவை படிப்படியாக 583ஆக குறைந்தன.

மலேசியக் கல்வி முறையில் 1983இல் ஏற்பட்ட கே.பி.எஸ்.ஆர். என்ற புதிய அணுகுமுறையால் தமிழ்க் கல்வியின் தரம் ஓரளவும் தமிழ்மொழியின் தரம் அதிகமாகவும் உயர்ந்தது. 1988-89இல் இடைநிலைப் பள்ளிகளிலும் இத்திட்டத்தைக் கொண்டு வந்ததால் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தால் தமிழ்மொழியின் தரம் உயர்ந்தது. தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் பாடத் திட்டத்தில் இடம்பெற்றன.

தற்போது தேசியப்பள்ளிகளில் மலாய் மாணவர்கள் அல்லாதவர்களை ஈர்க்கக் கூடுதல் மொழிக்கற்றல் எனும் அடிப்படையில் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 70 பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

*மலாயாப் பல்கலைக்கழகம்*

மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயில இப்பாடத்திட்டம் மிகவும் அவசியமாகின்றது. 1956இல் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறை தொடங்கப்பெற்றது. இது தமிழ்ப்பாடம் படிக்க விரும்பும் இளங்கலை மாணவர்களுக்குப் பல பாடங்களை நடத்தி வருகின்றது. 1988இல் மொழி, மொழியியல் புலத்தில் தொடங்கப்பெற்ற இதன்வழி தமிழாசிரியர் பலர் பட்டதாரிகள் ஆயினர். இதில் தமிழ் இலக்கணம், சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், காப்பியம் போன்ற பல தமிழ்ப்பாடங்கள் கற்பிக்கப் பெறுகின்றன. தற்சமயம் அதிகமானோர் இத்துறையில் தமிழ்க்கல்வி கற்பது தமிழ்மொழிக் கல்வியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் முதல் மாநாடும் (1966), 6ஆம் மாநாடும் (1987) இங்கு நடைபெற்றன. முதல் மாநாடு நெறிப்படி தமிழாய்வு சிறக்க வழிவகுத்தது.

மலாயாப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி வேறு சில பல்கலைக்கழகங்களிலும் வேறுமொழித் துறைகளில் அடிப்படைத் தமிழ் கற்பிக்கப்பெற்று வருகின்றது. அவ்வகையில் புத்ரா பல்கலைக்கழகத்தில் 1966 முதல் தமிழ் வகுப்புகள் நடந்து வருகின்றன. அங்குக் கற்பிக்கப்படும் 12 மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். இதேபோல் சபாப் பல்கலைக் கழகத்திலும், பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகத்திலும் அடிப்படைத் தமிழ் வகுப்பு நடைபெற்று வருகின்றது.

## முடிவுரை

தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட தொடக்கப் பள்ளிகளின் அமைப்பு சிறப்பாக உள்ளது. மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறை எனத் தமிழுக்கு ஒரு தனித்துறை உள்ளமையும், 7 வயதுமுதல் 12 வயதுவரை தொடக்கக்கல்வியைத் தமிழ்மொழியிலேயே கற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடக்கத்தில் தமிழ்ப்பள்ளிகள் தோன்றியிருப்பினும், அவை பல இடையூறுகளைக் கடந்தே படிப்படியான வளர்ச்சிகளைப் பெற்றுள்ளன. தொடக்கத் தாய்மொழிப் பள்ளிகளை அடுத்து, இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் தமிழ்வழிக் கல்வி இடம்பெறத் தொடங்கி வளர்ச்சி பெற்றுள்ளது.

இன்று மலேசியாவில் வாழும் தமிழர்கள் தங்கள் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, சமயம் ஆகியவற்றை மறக்காமல் பின்பற்றி வருவதற்குத் தமிழ்க்கல்வியே ஆணிவேராக அமைந்துள்ளது.

## துணை நூல்கள்

1. அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம் - சமகாலச் செல்நெறிகள், முனைவர் ந. கடிகாசலம், முனைவர் ச. சிவகாமி (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001.

2. மலேசியத் தமிழரும் தமிழும், முனைவர் முரசு. நெடுமாறன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

# மலேசியத் தமிழ்க் கவிதைகள் பன்முகப்பார்வை

முனைவர் மு.சற்குணவதி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தொலைதூரக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, தமிழ்நாடு

உலக வரலாற்றை அலசி ஆய்கிற போது உயிரினங்கள் முதற்கண் தோன்றிய பகுதி இந்தியாவின் தென்பகுதியாகிய பண்டைத் தமிழகமே என்பது புலனாகின்றது. குறிப்பாக உயிரினங்களுள் மக்களினம் தோன்றிய பகுதி பண்டைத்தமிழகம் என்பதும் பெறப்படுகின்றது. இதனைக் ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி'' என்னும் புறப்பொருள் வெண்பாமாலை வரிகள் மெய்ப்பிக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்தில் உயிரினங்களை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று பிரித்துப் பார்த்த பெருமை தொல்காப்பியரையே சாரும். காலத்தால் பழமையும், பழம்பெரும் இலக்கிய வளமையும் கொண்டவர்களே தமிழர்கள். அவர்களின் பண்பாடும் உலகளவில் மதிக்கத்தக்க ஒன்றாகும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயரிய எண்ணம் கொண்டவர்கள் தமிழர்கள். 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று அறிவுறுத்தியவர்கள் தமிழர்கள். வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடியவர்கள் தமிழர்கள் 'அறம் செய விரும்பு' 'ஆறுவது சினம்' என்று சொன்னவர்கள் தமிழர்கள். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' 'ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்' என்று வாழ்விற்கு வழிகாட்டியவர்கள் தமிழர்கள். அன்பும் சிவமும் ஒன்றென உணர்ந்தவர்கள் தமிழர்கள். அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் என அன்பு வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள். இவை போன்று உயரிய சிறப்புக்களையும், பழம் பாரம்பரியமும் உடைய தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகின்றனர். வரலாற்று நெருக்கடி காலக்கட்டத்தில் பல்வேறு நாடுகளுக்கும் சிதறுண்டுபோன தமிழர்கள் அவ்வவ் நாடுகளையே தமது நாடுகளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அதே வேளையில் தமது தாய்மொழிப்பற்றினையும், தமிழ்ப் பண்பாட்டினையும், கைவிடாமல் வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் மலேசிய நாட்டிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழகத்தை ஆண்டு வந்த முதலாம் இராசேந்திர சோழன் ஈடு இணையற்ற கடற்படையைக் கொண்டிருந்தான். அதனால் கடல் கடந்து சென்று பல நாடுகளை வென்றான். அவற்றுள் முதன்மையானது கடாரம் ஆகும். அதனால் தான் அவனுக்குக் கடாரம் கொண்டான் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கடாரம் என்பது இன்றைய மேற்கு மலேசியாவில் மலைப்பகுதியில் உள்ள கெடா என்னும் மாநிலம் ஆகும். தான் வென்ற மலேசியநாடு மலைப்பிரதேசமாக இருந்ததால் தாம் வென்ற நாட்டை விட்டு வந்தான் இராசேந்திர சோழன். அன்றைய காலத்தில் போருக்காகச் சென்ற மக்களுள் பலர் அங்கேயே தங்கி விட்டனர். கி.மு.விலேயே தமிழர்களிடம் மலேசிய நாட்டுடன் வாணிபத்தொடர்புகள் இருந்த நிலையிலும் தமிழர்கள் அங்கே கால் கொள்ள ஏதுவாயிற்று. இத்தகைய வரலாறு உடைய மலேசிய நாடு 1957 ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று மலாய்காரர், சீனர், இந்தியர், இதரப்பிரிவினர் என்னும் நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலத்தில் தமிழர்கள் இங்கு பெருந்தொகையினராய் வாழ்ந்து வந்தனர். வரலாற்றுப் பேரிடர்கள் காரணமாக 12 விழுக்காடு ஆகினர். அதன் பின்னர் 10 ஆகி தற்போது 8 விழுக்காடு தமிழ் மக்களே அங்கு வாழ்ந்து வருகின்றனர். மலாயா சொர்க்க பூமி என்ற கனவினை மனதில் கொண்ட தமிழர்களைக் கொடிய விலங்குகளும், காடுகளும் அச்சுறுத்தின. தமது உழைப்பையும், குருதியையும் கொட்டி ஒரு புதிய நாட்டை உருவாக்க வேண்டிய பணி தமிழர்களுடையதாக இருந்தது. அவர்கள் பட்ட பாடுகளையும் அதன் பிறகு பெற்ற ஏற்றங்களையும், தமது வாழ்வியல் போராட்டங்களையும் கவிதைகளாக வடித்தனர். நூறாண்டு காலம் பதிவான 650 கவிதைகளைத் தொகுத்து மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்ற நூலினைக் கவிஞர் முரசு நெடுமாறன் என்னும் கவிஞர் நூலாக்கியுள்ளார். அந்த நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளை அடிப்படையாக வைத்து இனிச் செய்திகளைக் காண்போம். இயற்கை, இறை, நாடு, தமிழ், தோட்டப்புறம், சமுதாயம், எழுச்சி, காதல், வாழ்த்து, இரங்கல், இசை, நாடகம், சிறுவர், பல்சுவை, என்னும் 14 தலைப்புகளின்கீழ் கவிதைகள் இந்த நூலுள் தொகுத்து அளிக்கப்பெற்றுள்ளன.

**இயற்கை**

இயற்கை என்னும் தலைப்பில் முதல் கவிதையே கதிரும் கடலும் பற்றியது. காலைக் கதிரவனையும் புல்லின் பசுமையையும், அதன் மேலே தங்கியுள்ள பனித்துளியையும் மலர்களின் வாசத்தையும், காற்றின் இனிமையையும், நிலாவின் எழிலையும், காட்டின் அழகையும் விவரிக்கும் கவிதைகள் படித்து இன்புறத்தக்கன. இயற்கை என்னும் தலைப்பின் கீழ் வரும் கவிதைகளுள் 'மலேசியக் கடல் வளம்' என்னும் கவிதை மலேசிய நாட்டை படம் பிடித்து காட்டுவதாக அமைந்துள்ளது.

கலையெழில் கொஞ்சக் கடிமணம் வீசுங்
கவனுறும் மலேசிய நாட்டின்
மலைகளும் சோலை வனங்களும் நெஞ்சை
மயக்குறச் செய்து எந்நாளும்
அலைபுரண் டோடி ஆர்த்திடுங் கடலின்
அழகுறுங் காட்சிகள் நம்மை
மலைத்திடச் செய்தே மனத்தினைக் கவரும்
மாண்புறும் மலையக வளமே (ஞானதாசன், ப.245)

என்னும் கவிதை அலைக்கடலின் அழகையும், மலை சோலை வனங்களின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் எழிலையும் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இறை

இறை என்னும் தலைப்பின்கீழ் அருள்மிகு விநாயகர் தோத்திரம், ஈசனார் வாழும் இடம், சிவலிங்க விளக்கம், பராசக்தி, இறையுணர்வு, இறைவணக்கம், புத்தனை அறிக, ஈகைத்திருநாள் இன்பம், கிறிஸ்து பாலன் சதுரங்கம், தோத்திரப்பாட்டு முதலான தலைப்புகளின் கீழ் கவிதைகள் தொகுக்கப்பெற்றுள்ளன.

இறைவனது படைப்பின் கீழ் உயிர்கள் எல்லாம்
இணை ஒன்றே எனும் பொதுமை இறையுணர்வாம்
மறைவகுத்த வாழ்வேற்று நெறியுணர்ந்தால்
மாநிலத்து நல்வாழ்வே இறையுணர்வாம்
(ரெ. சண்முகம், ப. 276)

என்னும் கவிதை வரிகள் உலக உயிர்களனைத்தும் ஒன்று என்று உணரும் பொதுமை உணர்வே உண்மையான இறைஉணர்வு என்பதைச் சுட்டுகின்றது.

நாடு

நாடு என்னும் தலைப்பின்கீழ் எங்கள் மலாயா இது. மலாயன் இனம் பிறந்தது மாவள நாடு, பன்னை மலை நாடு, எம்மலை நாடு, சுதந்திரம், வாழ்க தாயே, நமது நாடு, வாழ்வோம் நாமே முதலான தலைப்புகளின் கீழ்கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

முப்புறமும் கடலலையில் தவழும் நாடு!
முப்படையும் முனைப்புடனே காக்கும் பீடு!
எப்பொழுதும் வான்பொழியும் வளமார் மாட்சி!
எங்கெங்கும் கண் கொள்ளா இயற்கைக்காட்சி!
ஒப்பரிய பொன்னாடாய் மாற்றுகின்ற
ஒண் பொருள்கள் யாவும் நிறைந்திலங்கும் பேறு
அப்பழுக்கில் லாமனத்தால் உலகமெல்லாம்
அன்புடனே ஏத்துவண்ணம் வாழ்வோம் நாமே!
(பொ.மு.தமிழ்மணி, ப. 298)

என்னும் கவிதை மலேசிய நாட்டின் வளத்தை எடுத்துரைத்து அந்த நாட்டில் வாழும் மக்கள் தூய நெஞ்சத்தினராய் அன்புடன் இணைந்து வாழ வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

### தமிழ்

தமிழ் என்ற தலைப்பின்கீழ் தமிழ் மணக்க, தமிழ் என்றன், செந்தமிழ் கோயில் வாழ்க, உலகத்தமிழா வருக, அன்னைத்தமிழே அருள்வாய், தமிழ் உறவு, பினாங்கிலே தமிழ், கல்விப்பாதை முதலான தலைப்புகளின்கீழ் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**உலகத் தமிழா! உனக்கோர் செய்தி**
**உன்னையும் என்னையும் படைத்தவள் தமிழ்த்தாய்!**
**அலைகடல் மலைகள் நிலத்தைப் பிரிக்கலாம்!**
**அனைத்தும் கடந்தது நம் தமிழ் உணர்வு!**
(வே. சங்கு சண்முகம், ப. 315)

என்ற கவிதை வரிகள் உலக மக்களுக்கு தமிழ் உணர்வை ஊட்டுவதாக அமைந்துள்ளன.

### தோட்டப்புறம்

தோட்ட வேலை செய்யும்போது தமிழர்கள் பட்ட பாடுகளையும், துன்பங்களையும் தோட்டப்புறம் என்னும் தலைப்பின் கீழ் வரும் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

**பாலுமரம் வெட்டலான்னு, பழயகப்பல் ஏறி வந்தேன்**
**நாப்பத்தஞ்சி காசப்போட்டு நட்டெலும்ப முறிக்கிறானே!**
**முப்பத்தஞ்சி காசப்போட்டு மூட்டெலும்ப முறிக்கிறானே!**
(ப. 336)

என்ற கவிதை வரிகள் தமிழர்கள் பட்ட துன்பங்களை நம் கண் முன் நிறுத்துகின்றன.

### சமுதாயம்

தோட்ட வேலை மட்டும் அல்லாமல் பல்வேறு நிலைகளில் தமிழர்கள் பட்ட கொடுமைகளையும், வேதனைகளையும், சமுதாயம் என்ற தலைப்பின்கீழ் வரும் கவிதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. மனிதன் என்ற தலைப்பில் வரும்

**ஒன்றிட்ட உணர்ச்சியினால் உதித்திட்ட மனிதன்**
**ஒற்றுமையைப் பேசிநனெ பேணிடவே இல்லை**
(நால்வர், ப. 406)

என்னும் வரிகள் தமிழரின் ஒற்றுமைக் குலைவைச் சுட்டிக்காட்டுகின்றது.

### எழுச்சி

ஒற்றுமையற்றுக்கிடந்த தமிழர்களை ஒன்றிணைத்து ஒன்றுபட்டு நின்று உழைத்து வெற்றிபெற்று மான உணர்வுடன் வாழ வேண்டும்

என்று இளைஞர்களுக்கு வழி காட்டுவதாக எழுச்சி என்ற தலைப்பின் கீழ் கவிதைகள் அமைந்துள்ளன.

சுடருக்கு அணிகூட்டும் வெளிச்சம் என்றால்
சொல்லுக்கு அணி நாட்டும் வாய்மையாகும்;
உடலுக்கு அணியேற்றும் தூய்மை என்றால்
உயிருக்கு அணி மான உணர்வே யன்றோ?

(எல்லோன், ப. 434)

என்ற வரிகள் மனிதர்களிடம் வாய்மையும், தூய்மையும், மான உணர்வும், கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை கவிதை வெளிப்படுத்துகின்றது.

**காதல், வாழ்த்து, இரங்கல்;**

காதலின் தன்மைகள் பற்றி பல்வேறு நிலைகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. வாழ்த்து என்ற தலைப்பின் கீழ் மாமன்னர் வாழ்க, தமிழ் நெறி காவலர், முத்தமிழ் காவலர் முதலான தலைப்புகளின் கீழ் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இரங்கல் என்ற தலைப்பின் கீழ் மாமன்னர் மறைவிற்கு இரக்கம் தெரிவித்துக் கவிதைகள் அமைந்துள்ளன. தனிநாயகம் அடிகள், நேதாஜி, மார்ட்டின் லூதர் போன்றோரின் சிறப்புகளும் கவிதையில் இடம்பெற்றுள்ளன.

**இசை, நாடகம், சிறுவர்**

இசை என்னும் தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ள கவிதைகள் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றியதாக அமைந்துள்ளது.

காட்டுமரம் எல்லாமே காலத்தொடு காய்க்குது
கன்னிப்பூ வீட்டுக்குள்ளே கண்கலங்கி வெம்புது

(தி.சி.பொன்னுசாமி, ப. 614)

என்னும் கவிதை கன்னிப்பெண்களின் அவல நிலையைச் சுட்டுகின்றது. நாடகம் என்ற தலைப்பின்கீழ் அமைந்துள்ள கவிதைகள் நாடக உரையாடல் போன்று அமைந்துள்ளன. சிறுவர் என்ற தலைப்பின் கீழ் அமைந்துள்ள கவிதைகள் சிறுவர் மனதில் பதியும் பாடல்கள் போன்று அமைந்துள்ளன.

ஒன்றே இறைவன் நம்புவோம்;
உள்ளம் உருக வணங்குவோம்!
நாட்டை ஆளும் மன்னரை
நாளும் மதித்துப் போற்றுவோம்!
அரசியல் சட்ட நெறிகளை
அகத்தில் பதித்துக் கொள்வோம்!
சட்ட முறைப்படி ஆளுவோம்;
தாயகம் காத்து வெல்லுவோம்!
ஒழுக்கம் உயர்வைத் தந்திடும்;
உயிராய் அதனைப் பேணுவோம்!

உலகில் நல்ல குடிகளாய்
உண்மை போற்றி வாழுவோம்!

(முரசு. நெடுமாறன், ப. 649)

எனும் கவிதை வரிகள் சிறுவர்களுக்குச் சொல்வதாக இருந்தாலும் பெரியோர்களும் மனதில் கொள்ள வேண்டிய செய்திகளையும் உரைக்கின்றன.

### பல்சுவை

மெய்மை வாழ்வு, புலரும் பொங்கல், சித்திரைத் திருநாள், வீரம், கிளி, உறவுகள், பிணைந்து வாழ, இலக்கியங்கள் முதலான தலைப்புகளின்கீழ் உள்ள கவிதைகள் அனைத்தும் பல்சுவை என்ற தலைப்பின்கீழ் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன. உறவுகள் என்ற தலைப்பின்கீழ் வாழ்வின் நிலையாமையை எடுத்துரைத்து நல் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனும் செய்தியை உறவுகள் என்ற கவிதை வெளிப்படுத்துகின்றது.

தண்மை களைந்துடல் தரிபட முறையாய்த்
தகிக்கும் நெருப்புடன் உறவு! - எனினும்
உண்மையில் இறப்பினை ஒன்றிடும் போதுடல்
உதித்த மண்ணுக்கே உறவு! (ஆதம்குமார், ப. 759)

இந்தக் கவிதை வரிகள், மண்ணில் தோன்றிய மனிதன் மண்ணிலே மறைகிறான் என்பதை உணர்த்தி, நல்லுறவுகளை மனிதர்கள் வளர்த்துக்கொண்டு ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதை உணரச்செய்கின்றது.

### நிறைவுரை

மலேசிய நாட்டின் வரலாற்றையும், அங்கே தமிழர்கள் தோட்டக்கூலிகளாகப் பட்ட துன்பங்களையும் எடுத்துரைத்துத் தாம் வாழும் நாடு நம்முடைய நாடு என்ற உணர்வுடன் தமிழர்கள் உணைமையாக உழைத்து முன்னேற்றப்பாதையில் வாழ்க்கை வளம் கண்ட ஏற்றத்தையும், எடுத்துரைக்கும் கவிதைகளின் தொகுப்பாக 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்னும் நூல் அமைந்துள்ளது. மலேசியத் தமிழர்களின் நூறாண்டுக் காலக் கவிதைப் பதிவுகளை நாற்பது ஆண்டுகளுக்கு மேல் தாமே அரிதின் முயன்று திரட்டிய 50,000 கவிதைகளிலிருந்து 650 கவிதைகளைக் களஞ்சியமாக வெளியிட்டுள்ள கவிஞர் முரசு. நெடுமாறன் அவர்களுக்கு மலேசியத் தமிழர்கள் மட்டுமல்லாது உலகத் தமிழர்கள் அனைவரும் கடப்பாடு உடையவர்கள் என்பதை உறுதியாகக்கூறலாம்.

### துணை நூல்

மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், (பதி). கவிஞர் முரசு. நெடுமாறன், மலேசியா.

# மலேசியத் தமிழ்ச் சிறுவர் கவிதைகள்

முனைவர் மா.சம்பத்குமார்
இணைப்பேராசிரியர்
தலைவர், தெலுங்குத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, தமிழ்நாடு

பல்வேறு நாடுகளில் இந்திய மக்கள் குடிபெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அதிலும் தமிழர் உலகம் முழுவதும் பரவியுள்ளனர். அந்த வகையில் மலேசிய நாட்டில் வாழும் தமிழர் கவிதைகள் பல படைத்துள்ளனர். அக்கவிதைகளைத் தொகுத்து கவிஞர் முரசு.நெடுமாறன் என்பவர் மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். அவற்றுள் பதினான்கு தலைப்புகளில் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அக்கவிதைகளுள் சிறுவர் என்ற தலைப்பின்கீழ் அறுபது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அக்கவிதைகள் வெளிப்படுத்தும் பல்சுவைச் செய்திகளை இனிக் காணலாம்.

**திருவிழா**

சிறுவர் மனதில் எளிதில் பதியும் வண்ணம் இக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் எளிய பாடல்கள் போன்றும் அமைந்துள்ளன. அந்தத் தன்மையில் திருவிழா என்ற தலைப்பின் கீழ் அமைந்துள்ளது இக்கவிதை.

எங்கள் வீட்டில் திருவிழா
இன்பம் சேர்க்கும் பெருவிழா
ஆவலோடு அனைவரும்
அன்பாய்க் கூடும் நல்விழா
ஆலிஸ் மரியம் செல்வியும்
அகமத்தோடு தோழரும்
இன்று இங்கு வருவரே
இனிது கூடி மகிழ்வோம் (பக்கம். 649, முரசு.நெடுமாறன்)

என்னும் கவிதை சிறுவர் மனம் திருவிழாக்களில் மகிழ்வுறும் என்பதையும், மதச்சார்பின்றி அனைவரும் ஒன்று கூடி மகிழும் நிகழ்வாக திருவிழா அமையவேண்டும் என்பதையும் சுட்டுகின்றது.

### வெற்றியின் இரகசியம்

சிறுவயது பிள்ளைகளின் மனதுள் நம்பிக்கையையும் மன உறுதியையும் விதைப்பதாகக் கீழ்வரும் கவிதை அமைந்துள்ளது.

அழுதுகொண்டே இருப்பவர்
அடைவதில்லை இன்பமே
அஞ்சி அஞ்சி பதுங்குவோர்
அடைவதில்லை வெற்றியே
சிரித்து நெஞ்சில் துணிவுடன்
செயல்கள் நாளும் புரிகுவோர்
வெற்றி பெற்றுச் சிறப்புடன்
விளங்கி வாழ்வார் உறுதியே (ப. 650,முரசு.நெடுமாறன்)

என்ற கவிதை வரிகள் சிறுவர்களைச் சுறுசுறுப்பாய் மன உறுதியுடன் இயங்க வைக்கக்கூடியன.

### ஒன்றே கடவுள்

ஒன்றே கடவுள் என்ற கவிதை, கடவுள் பக்தியை இளஞ் சிறார்களிடம் ஊட்டுவதுடன், அந்தக் கடவுள் பக்தி எந்தவிதமான காழ்ப்பும் இன்றி இருக்கவேண்டும் என்பதைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

உலகுக் கெல்லாம் ஓர் இறைவன்
உண்டே அவர்க்குப் பல பெயர்கள்
அலகில் கருணைப் பரம் பொருளை
யாவரும் போற்றி வணங்குவோம்
ஒன்றே செய்து வாழ்ந்திடவே
நம்மைப் படைத்தார் புவிமீதே
நன்றே கடவுள் என்றெண்ணி
ஒருகுலமாகவே வாழ்ந்திடுவோம்
(ப. 653-654, சி. வேலுசுவாமி)

மனித அறிவுகளையும் செயல்களையும் கடந்த ஒரு சக்தி உலகில் உண்டு. அதனை மனிதர் கடவுள் என்று அழைக்கின்றனர். அந்தக் கடவுள் ஒன்றே என்பதை இக்கவிதைகள் பதிவு செய்கின்றன.

### வாழையும் தென்னையும்

இயற்கை தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்கிறது. அதனைப்போல் மனிதர்களும் பிறருக்காக வாழ வேண்டும் என்பதைக் கீழ்வரும் கவிதை சுட்டுகின்றது.

ஓங்கி உயர்ந்தது தென்னைமரம் - அங்கே
ஒதுங்கியே நின்றது வாழைமரம்
காயென்று தந்தது தென்னைமரம் - நல்ல
கனியென்று தந்தது வாழைமரம்

வாழையும் தென்னையும் போலுலகில் - நாம்
வாழ்ந்திட வேண்டிய பந்தலிலே
வாழையும் தென்னையும் கட்டுகிறார்-நாம்
வாழ்ந்துமே காட்டிட வேண்டுமடா!

(ப.659, கா.கலியபெருமாள்)

மனித வாழ்க்கையில் நடக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகளுக்கு வாழையும் தென்னையும் கட்டுவது என்பது அவை போல் பிறருக்காக வாழ வேண்டும் என்பதை மனிதர்களுக்கு உணர்த்துவதற்காக என்ற கருத்தை இக்கவிதை உணர்த்துகின்றது.

இன்றே கற்பாய்

கல்வி என்பது மனிதர்களுக்குக் கண் போன்றது என்றார் வள்ளுவர். அந்தக் கல்வியை இளமையில் கற்க வேண்டும் என்பதை இன்றே கற்பாய் என்ற கவிதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கற்றவர் வாழ்வில் சிறந்திடுவார்
கல்லார் நாளும் இடர்ப்படுவார்
அழியும் அறிவாய் பொருட் செல்வம்
அழியா தென்றும் கலைச் செல்வம்
இளமையிற் கற்றால் பதிந்திடுமே
என்றும் மனத்தில் நிலைத்திடுமே
பின்னர் வருந்திப் பயனில்லை
இன்றே கற்பாய் உயர்வாயே! (ப. 660, தமிழ்பாணன்,)

உலக நன்மை தீமைகளை அறிந்து, அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் பண்பை வளர்த்துக் கொள்வதற்கும் கல்வி அவசியம் என்பதை இக்கவிதை சுட்டுகின்றது.

காது

ஐம்புலன்களும் நல்லதை நாடுவதற்கும் நல்லதைச் செய்வதற்குமே இறைவன் படைத்துள்ளார் என்பதைக் குறிப்பதாகக் காது என்னும் கவிதை அமைந்துள்ளது.

இறைவன் வழங்கிய இருகாது
இரவும் பகலும் மூடாது!
இசையும் வசையும் பெறும் காது
இதற்கே உலகில் இணையேது!
புத்தி மிகுந்தவர் தம்காது
ஒட்டுக் கேட்பதை விரும்பாது!
அன்னையின் அறிவுரை கேளாது
அலட்சியம் செய்யும் வீண்காது!
உயர்ந்தவர் சொல்வதைத் தப்பாது
உற்றுக் கேட்கணும் உன்காது (ப. 662, க.து.மு.இக்பால்)

இக்கவிதை வரிகள் பிறர் கூறும் புகழ்மொழிக்கு மயங்காமல், இகழ் மொழிக்கு வருந்தாமல் எதையும் எளிதாய் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும், ஒட்டுக்கேட்பது கூடாது என்பதையும் அன்னையின் அறிவுரையை மதித்து உயர்ந்தவர் சொல் கேட்டு நடப்பதே சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதைச் சுட்டுகின்றன.

**சேவலே!**

காலை வேளையில் கிராமப்புறங்களில் கொக்கரக்கோ என்னும் சேவலின் ஒலியைக் கேட்காமல் இருக்க முடியாது. இந்தச் சேவலை படத்தில் மட்டுமே இன்றைய சிறுவர்களால் பார்க்க முடிகின்றது. அந்தச் சேவலைப் பற்றியதே கீழ்வரும் கவிதை.

*சேவலே நல்ல சேவலே!*
*செக்கச் சிவந்த சேவலே!*
*கூவித்தினமும் காலையில்*
*கொண்ட தூக்கம் நீக்குவாய்!* (ப. 666, எல்.எம்.பகதூர்)

சேவலின் சுறுசுறுப்பையும் அதனைக்கண்டு சிறுவர்களும் சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதைச் சேவலே கவிதை உரைக்கிறது.

**எதுகைப்பாடல்**

சிறுவர் மனதில் நற்பண்புகளை வளர்ப்பதாகக் கீழ்வரும் கவிதை அமைந்துள்ளது.

*உழைப்பில் கிடைப்பது பணம்!*
*உறவினை வளர்ப்பது குணம்!*

*அழிவினை அளிப்பது சினம்!*
*அன்றாடம் என்பது தினம்!*
*உள்ளத்தில் பிறப்பது ஊக்கம்*
*ஊக்கம் தளர்ந்தால் தேக்கம்!*
*மனத்தில் எழுவது ஏக்கம்!*
*மாண்புடன் செய்திடில் ஆக்கம்!* (ப.669, சுப.கணேசன்)

உழைத்துப் பொருளீட்ட வேண்டும், குணத்தால் உறவினர்கள் இணைத்தல் வேண்டும். சினத்தைத் தவிர்க்க வேண்டும், ஊக்கமாய் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்தால் வாழ்வில் ஆக்கங்கள் விளையும் என்பதை இக்கவிதை வரிகள் சுட்டுகின்றன.

**பறவைகள் போல**

பறவைகளின் செயல்பாடுகளைக் கண்டு, அவற்றிலிருக்கும் நல்லதைச் சிறுவர் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டுவதாக கீழ்வரும் கவிதை அமைந்துள்ளது.

சேவல் போலக் காலையில்
சீக்கிரமாக எழுந்திடு!
சிட்டுப் போலச் செயல்களைச்
சுறுசுறுப்பாய் ஆற்றிடு!
குயிலைப் போல இனிமையாய்க்
கீதம் பாடிக் களித்திடு!
கிளியைப்போலக் கனிவுடன்
கொஞ்சிப் பேசி மகிழ்ந்திடு! (ப.677, ந.மகேசுவரி)

காலையில் சீக்கிரமாய் எழுந்து சுறுசுறுப்பாய் செயல்படுதலும் இனிமையாகப் பேசுவதும் பழகுவதும் நற்பழக்கங்கள். இதனை சிறுவர் மனம்கொள்ளுமாறு கவிதை அமைந்துள்ளது.

**நிறைவுரை**

சிறுவர் என்னும் தலைப்பில் அமைந்துள்ள மலேசியத் தமிழ்க் கவிதைகள் யாவும் சிறுவர் மனதுள் நற்பண்புகளையும் நற்செயல்களையும் விதைத்து, சிறுவர்களின் எதிர்காலம் சிறப்பாய் அமைய வழி காட்டுகின்றன என்பதை இக்கட்டுரை வழி அறியலாம்.

# மலேசியத் தோட்டப்புறப் பாடல்களில் பாலியல் செய்திகள்

முனைவர் முரசு.நெடுமாறன்
மலேசியா

*முன்னுரை*

கட்டுரையின் தலைப்பில் வரும் 'தோட்டப்புறப் பாடல்கள்' என்பது, நாட்டுப்புறப் பாடல்களைக் குறிப்பதாகும். இங்கு 'நாட்டுப்புறம்' என்னும் வழக்கு இல்லை யாதலாலும், தமிழர்களில் 85 விழுக்காட்டினர் தோட்டப்புறங்களில் *(Estates)* வாழ்ந்தவர்கள் ஆதலாலும் (இப்பொழுது நிலை மாற்றமடைந்துள்ளது) அவர்கள் பாடிய வாய்மொழிப் பாடல்கள் இங்குத் 'தோட்டப்புறப் பாடல்கள்' என்று குறிக்கப் பெற்றன. முத்தம்மா பழனிசாமி என்பவரும் தம் 'நாட்டுப்புறப் பாடல்களில் என் பயணம்' (2006) என்ற நூலில் மலேசிய நாட்டுப்புறப் பாடல்களைப் 'பால்காட்டுப் பாடல்கள்', 'தோட்டக்காட்டுப் பாடல்கள்' என்று தலைப்புகளிட்டே தொகுத்தளித்துள்ளார். தோட்டக்காடு என்பது தோட்டப்புறத்தைக் குறிக்கும். தோட்டப்புறத்தில் வாழ்பவரைத்'தோட்டக்காட்டான்' என்று தாழ்வாகக் குறிப்பது ஒருகாலத்தில் வழக்கமாய் இருந்தது. 'பால்காடு' என்பது ரப்பர் தோட்டம் *(RubberEstate)*.

தமிழக, இலங்கை நாட்டுப்புறப் பாடல்கள், அங்கு வாழ்ந்த - வாழும் குமுகாயத்தை, உள்ளது உள்ளபடிப் படம்பிடித்துக் காட்டுவனபோல், மலேசியத் தோட்டப்புறப் பாடல்களும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வை ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டுகின்றன. மலேசிய நாட்டின் மூத்த கவிதை இலக்கியமாய் விளங்கிய அவை காலங்கடந்து தொகுக்கப்பெற்றதால் பேரிழப்புக்கு ஆளாகிச் சிலவே கிட்டின. அவை ஓரளவு தோட்டப்புறத் தமிழர் வாழ்வை எடுத்துரைக்கும் ஆவணமாய் விளங்குகின்றன.

இக் கட்டுரையாளர் தொகுத்த 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தில்' (1997), 18 தோட்டப்புறப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இரா. தண்டாயுதம் அரிதின் முயன்று தொகுத்த 'மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள்' (1998) என்ற நூலில் முழுக்க முழுக்க அக் காலப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 2006ஆம் ஆண்டில் முத்தம்மா பழனிசாமி தொகுத்த,'நாட்டுப்புறப் பாடல்களில் என் பயணம்' என்ற நூலில் பத்திற்குமேற்பட்ட, பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

மலேசியத் தோட்டப்புறப் பாடல்களில் பல்வேறு வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன. அடக்குமுறை, பணிச்சுமை, ஏமாற்றம், மேலதிகாரிகளின் துன்புறுத்தல், மனத்துயர், வீண்பழி சுமத்தல், விரக்தி போன்றவற்றொடு, பாலியல் துன்புறுத்தல்களும் அடங்கும். அவற்றை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். பாடல்கள் நூல்களில் உள்ளவாறே இங்கு எடுத்துக்காட்டப்பட்டன. நாட்டுப்புற வடிவிற்கேற்பச் செப்பம்பெற வேண்டிய பல பாடல்கள், நூல்களில் உள்ளன என்பதும் இங்குக் குறிக்க வேண்டிய செய்தியாகும்.

**பாலுணர்ச்சியும் உயிர்களும்**

அடக்குமுறைக் கொடுமைகளில் சிக்கித் தவிப்போருக்கும் தாங்கமுடியாப் பணிச் சுமையால் தத்தளிப்போர்க்கும் வறுமையில் உழல்வோர்க்கும் பாலியல் உணர்வு இல்லாமல் போகாது. உலகில் பிறந்த எல்லா உயிர்க்கும் ஏற்படும் பொதுவான உணர்வு அது.

> **காதல் அடைதல் உயிரியற்கை - அது**
> **கட்டில் அகப்படும் தன்மையதோ**

என்பார் பாரதிதாசன். உயிர்களின் பயணம் இடையீடின்றித் தொடர அவ்வுணர்வே காரணமாகும்.

பாலுணர்ச்சி எல்லா நிலையினருக்கும் பொது எனினும், அப் பசியைத் தணித்துக் கொள்ளும் முறை, ஒவ்வொரு வகையினருக்கும் ஒவ்வொரு வகையாகும். ஒத்த அகவையினர் முறையாக மணமுடித்து, உணர்வுகளைப் பரிமாறிக்கொண்டு ஒழுக்கம் பிறழாமல் வாழ்வது ஒருவகை. கணவனோ மனைவியோ மனம் மாறுபட்டு வழுக்கி விழுவது ஒருவகை. மேட்டுக்குடி ஆண்கள், அதிகார வலுவுடையோர் அப்பாவிப் பெண்களை எளிதில் அடைவது ஒருவகை. அவ் வகைப் பெண்களில் எதிர்த்துப் போராடும் வலிமை கொண்டோரும் உளர் என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். நல்ல குடும்பத்தில் பிறந்த உறுதியான மனமுடையோரும் நம்பவைத்துக் கழுத்தறுக்கும் போக்குடையோரும் உளர். இவ் வகைப் போக்குகளை மலேசியத் தோட்டப்புறப் பாடல்களில் காணமுடிகிறது.

மலேசியத் தோட்டப்புறப் பாடல்கள், முன்தொடர்பு எதுவுமின்றித் தான்தோன்றியாகப் (சுயமாக) பிறந்தவை அல்ல. தமிழர் தமிழகத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தபோதே தங்களுடன் கொண்டுவந்த பாடல்களின் அடிப்படையில் பிறந்தவைகளே ஆதலால், மூல நாட்டின் சாயல் இருக்கவே செய்யும். சிற்சில தொடர்கள் - அப்படியே அச்சு மாறாமல் வருவதுண்டு. முழுப் பாடல்களும் அப்படியே இங்குப் பாடப்படுவதுமுண்டு. ஆனால், உணர்வுகள் தோட்டப்புறத் தமிழர்களின் வெளிப்பாடுகளேயாகும்.

### இயல்பான பாலுணர்வு

பாலுணர்வால் உந்தப்பட்ட தோட்டப்புற இளைஞன் ஒருவன், அதே தோட்டத்தைச் சேர்ந்த ஓர் இளம் பெண்ணை அடைய விரும்புகிறான். தன் எண்ணத்தை அவளிடம் இங்ஙனம் வெளிப்படுத்துகிறான்:

*நாட்டுக்கு நாட்டு மட்டம் - நாம*
*ரெண்டுபேரும் ஜோடி மட்டம்*
*ரோட்டுக்குப் போனாலும்*
*என் தங்க ரத்தினமே - நம்மள*
*கோடி ஜனம் கையெடுக்கும்*
*என் பொன்னு ரத்தினமே* (இரா. தண்டாயுதம், 1998: 64)

தனக்கு உரிமையுள்ள பெண்ணிடம், தன் விருப்பத்தை ஓர் இளைஞன், இந்தப் பாட்டு மூலம் தெரிவிக்கிறான்:

*நான் சிதம்பரத்தில் பொறந்தேன்*
*நான் புத்தூரில் வளர்ந்தேன்*
*என் செல்லம்மாவ கூட்டிக்கிட்டு*
*எஸ்டேட்டுக்கு வந்தேன்*
*செல்லம்மா, எந்தன் செல்லம்மா*
*முத்தம் வேணும்மா .......* (மேலது: 65)

### உறுதிகூறும் காதலன்

தான் விரும்பும் பெண்ணை இறுதிவரையில் கைவிட மாட்டேன் என்று உறுதி கூறும் காதலனின் கூற்று இது:

*ஞான மயிலே உன்னைக் கைவிட*
*வில்லையென்று முனியாண்டி*
*கோயிலிலே வேட்டி போட்டு*
*வேட்டிபோட்டுத் தாண்டறேன்,*
*முனியன் அறிய, முன்னாடி*
*காத்தான் அறிய அந்தக்*
*காளி அறிய கறுப்பன் அறியக்*
*கை உடலிட மெய் உடலிட*
*விவரம் சொல்லடி*
*வயிசுத் தங்கமே* (மேலது: 66)

கப்பலில் வந்தபோதே காதல் வயப்பட்டவன், கன்னியிடம் தன் விருப்பத்தை இப்படிக் கூறத் தொடங்குகிறான்.

*வாடக்காத்து வீசுதடி தங்கமே!*
*சேர்ந்து வந்த கப்பலிலே தங்கமே!*
*சிங்கார மனம் கூடலியா?* (மேலது : 67)

பெண் தன்முற்சியில் வென்றதையும் ஆண் தன்முயற்சியில் வென்றதையும் கூறும் பாடல்கள்:

பெண்: மலைக்கு மலைநடுவே
மானுக்கொரு கண்ணி வச்சேன்
மானுபடும் பாட்டுலே
மாமன் மகன் பட்டுட்டான்!"

ஆண்: செடிக்குச் செடிநடுவே
சிட்டுக்கொரு கண்ணி வச்சேன்
சிட்டுப்படும் பாட்டுலே
சிறுக்கிமவ பட்டுட்டாளாம்! (மேலது: 69)

தோட்டத்திலே (பால்வடிக்க) ரப்பர் மரம் சீவும் பெண்ணைப் பார்க்கிறான் ஓர் இளைஞன். அவள் அழகிலும் தொழில் புரியும் நளினத்திலும் மயங்குகிறான். அவள் தொழிற்சாலையில் தகடு போல உருமாறும் ரப்பர் சீட்டுகளை *(Sheets)* அடுக்கும் அழகைக் கண்டு அவள் மேல் பித்தாகிறான், இப்படிப் பாடுகிறான்:

அறுக்கிறியே* ஒட்டுப்பாலு**
ஷோக்கான சுப்பரப் பொண்ணு
தங்கமே தில்லாலே! ...
அவ சீட்டு மடிக்கிறாளாம்
பொண்ணுமே தில்லாலே!

ஆளாயி நாலு மாதம்
தங்கமே தில்லாலே
(பாடல் முழுதும் கிட்டவிலலை) (மேலது: 71)

(*ரப்பர் மரத்தைச் சீவுதல் ** மரத்தில் ஒட்டியிருக்கும் உறைந்த பால்)

இங்ஙனம் நாகரிகமாக வெளிப்படும் பாலுணர்வுக்கிடையே, ஒழுங்கின்மையால் ஏற்படும் துன்பம், ஏமாற்றம், மானக்கேடு, வெறுப்பு, விரக்தி போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களும் பிறந்துள்ளன.

..................................
அடகுட்டி மார்களையும் கூட்டிக்கிட்டு - என்னைக்
குந்தவச்சு வுட்டுப் பிட்டு
பணம் வாங்கிக்கிட்டு......
அட கூறு கெட்ட மாமா!
நினை விழந்து போகலாமா?
வெட்டுண்டு போவாயடா - இந்தப் பத்தினி
வேறுமுகம் பார்ப்பேனாடா? (மேலது: 78)

கற்புடைய மனைவி ஒருத்தியின் குமுறல் இது: "நீ நெறிதவிறிப்போனதுபோல் நான் தாழ்வடையமாட்டேன் என்று கூறும்

உறுதி தெரிகிறது. கணவர்களின் கட்டுப்பாடற்ற பாலுணர்ச்சி, மனைவிமாரை எங்ஙனமெல்லாம் வாட்டுகிறது என்பதனை இப்பாடல் புலப்படுத்துகிறது.

நெறிதவறிய பெண்களைப் பற்றிய பாடல்களும் தோட்டப்புறப் பாடல்களில் காணப்படுகின்றன. இதோ ஒன்று :

சிட்டு பறக்குது பார்
சிட்டு பறக்குது பார்
சின்ன மலைக் கப்பால
சிருக்கி ஊரு உறங்கினாலும் - என் தங்கமே
சின்னப் பையனைத் தேடுறாளே. (மேலது: 91)

## நம்பி ஏமாந்த பெண்

காதலிப்பவன் நல்லவன், கைவிட மாட்டான் என்று நம்பிய பெண், அவன் உறுதி மாறி ஏமாற்றிக் கைவிட்ட போது குமுறிப் பீறிடும் கதறல் இது:

"பாசாவில்*" தண்ணிமொள்ளப்
பக்கம் பார்த்துத் தடம் போனேன்
குளிக்க வந்த மாமா - என்னைக்
குளிக்காம ஆக்குனீங்க
..............................
நாயம் பொறக்கோணும் - எனக்கு
நாயம் பொறக்கோணும்
நல்லபடி கேக்கறப்போ - நமக்குள்
நாயம் பொறக்கோணும்
என் வயுத்துப் பிள்ளைக்கு - ஊரறிய
வாக்குத்தர் வேணும்

(முரசு நெடுமாறன் (தொகுப்பு), 1997: 343,44)

(* பள்ளத்தாக்கு)

## ஒப்பாரியில் உதிர்ந்தவை

பெண்களில் ஒருசிலர் தம் மனக்குமுறல்களை வெளிப்படையாகச் சொல்வதில்லை. தம் கணவனின் தீய நடத்தையைப் பெரிதுபடுத்திக் கூச்சல் போடுவதில்லை. வேளைவரும் போது வெளிப்படுத்தினாலும், கணவனை இகழாமல் இருமனப் பெண்டிரை - பொருட்பெண்டிரை இகழ்வர்.

தன் கணவன் மறைந்த போது ஒரு பெண், ஒப்பாரி மூலம் வெளிப்படுத்திய அதுபோன்ற செய்தி இது:

வெள்ளி வெடியெடுத்து
வீரமலைக் குண்டெடுத்து - நீங்க
வேசிகளைப் பின்னனுப்பி

வேட்டையாடும் கானகத்தே - உங்க
வேசியோட கண்ணுபட்டு
வெள்ளிவெடி தோக்குதையா!.

தங்க வெடியெடுத்து - நீங்க
தாமரைப்பூக் குண்டெடுத்து
தாசிகளைப் பின்னவிட்டு - நீங்க
சண்டை செய்யும் கானகத்தே - உங்க
தங்க வெடி தோக்குதையா. (மேலது : 121)

ஒப்பாரியில் வைப்பாட்டியை ஏசுதல்

வடக்கத்தி மின்னலிலே
என்ன தேடிய ராசாவே
வாழப்பூச் சன்னலிலே
வப்பாட்டி தின்னும் வேள
வழக்கு நீங்க பேசும் போது

அவள வண்டு கடிக்காதா
வப்பாட்டி சாவாளா
என்னோட சாமி வாசல்ல
எப்ப வந்து சேருவியோ

நீ தெம்மாங்கு பேசும் போது - அவள
தேளு கடிக்காதா?
அந்தப் பரத்தையவ சாவாளா
என்னோட தேசம் சாமி
எப்பவந்து சேருவியோ. (மேலது: 131, 2)

பாலுணர்ச்சி என்பது இயல்பான முறையில் ஏற்படுவது, ஒத்த இருமனப்பிணைப்பில் நிறைவுறுவது அது. நெறியற்ற வெற்றுடல்களின் சேர்க்கையன்று. கட்டாயப்படுத்தலில், அச்சுறுத்தலில், தீய ஆசை காட்டிலில் வருவதன்று. (மெய்யுறு) 'புணர்ச்சி','கூட்டம்' போன்ற சொற்களே இதனை உணர்த்தும். வல்லுறவு கொள்ள முயல்வதெல்லாம் கொடுஞ் செயலாகும்; கடும் குற்றச் செயலாகும். எனினும், குமுகாயத்தில் அவை நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அதனால் தாக்கப் படுவோர் பெண்களே.

அடிமைப்பட்ட நாட்டில் - போரில் தோல்வியுற்ற நாட்டில் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. பாலியல் வெறிபிடித்த விலங்குகளின் வேட்டை பற்றிய நிகழ்வுகள் இதழ்களில் செய்திகளாக நூல்களாக ஆவணப்படங்களாக வெளி வந்து கொண்டுதான் இருக்கின்றன.

மலேசிய நாட்டில் போர்க்காலப் பாலியல் வல்லுறவுக் கொடுமைகள் நடந்ததாகப் பாடல்களில் பதிவில்லை. வெள்ளையர்

ஆட்சிக்காலத்தில் தோட்டப்புறங்களில் எல்லை மீறிய பெருங் கொடுமைகள் இல்லை எனினும், அத்துன்புறுத்தல்கள் நடந்தே உள்ளன. நயமான கெஞ்சல், கையூட்டுப்போல வேலையில் சலுகை காட்டுதல், அதிகாரத்தைக் காட்டி பணிய வைத்தல், மருட்டுதல் போன்றவை நடந்துள்ளன என்பதனைப் பாடல்கள் காட்டுகின்றன. உண்மை நிகழ்வுகளை வைத்துப் பின்னப்பட்ட சிறுகதை, புதினம், சிறுபாவியம் போன்றவற்றிலும், அந் நிகழ்வுகள் பதிந்தேயுள்ளன, எதிர்த்துப் போராடிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

தோட்டப்புறப் பெண்களுக்குக் கூற்றுவன்போல் மனத்துன்பமும் உடல்துன்பமும் தந்தோரில் கங்காணிகளுக்கு முதலிடம் உண்டு. கணக்கர்களுக்கும் *(Conductor)* வெள்ளைகார நிருவாகிகளுக்கும் அடுத்த அடுத்த இடம் உண்டு. கங்காணிகள் தொழிலாளாருடன் வாழ்ந்தனர், பல நிகழ்வுகளில் அவர்களுடன் ஒட்டியே செயல் பட்டனர். தோட்டப்புற வாழ்வில் அவர்களுக்குத் தலைமைப் பொறுப்பும் இருந்தது. பல சிக்கல்களுக்குத் தீர்ப்புக் கூறும் நடுவர் பொறுப்பும் வகித்தனர். ஆதலால், தொழிலாளர்களை அணுகும் வாய்ப்பும் அவர்களுக்கு மிகுதியாக இருந்தது. தோட்டத் தொழிலில் தொழிலாளரை வழிநடத்தும் பொறுப்பு மற்றவர்களை விட அவர்களுக்கு கூடுதலாக இருந்ததால் அவர்கள் தங்களை இளவரசர் போலக் கருதிச் செயல்பட்டதுண்டு. வேட்டெஃக்மாக (துப்பாக்கி) வெள்ளையர் தோற்றமளித்தனர் எனினும் அதிலிருந்து வெளிப்படும் 'இரவை' போன்றவராகக் கண்காணிகள் இருந்தனர். அவர்களைப் பற்றிய தோட்டப்புறப் பாடல்கள் சற்றுக் கூடுதலாகவே கிடைத்துள்ளன:

கங்காணி கங்காணி
கறுப்புச் சட்டைக் கங்காணி
ஜோடி மட்டம் போட்டுக்கிட்டான்
திருட்டுக் கங்காணி

என்பன ஒரு பாடலின் அடிகள்.

குருவி கூடும்போதும் கங்காணி
நினைவு எம் மேலே (மேலது : 50)

இன்னொரு பாட்டின் ஓரடி இது:

வெள்ளைக்காரர்களும் கணக்கர்களும், கண்காணிகளும், வேலைக் காட்டில் (பணிபுரியும் இடம்) குறிப்பிட்ட பெண்களிடம் தொடர்பு கொள்வதற்குப் பொருத்தமான இடத்தை ஒதுக்குவார்கள். ஆண்களைமேடு பள்ளங்கள் நிறைந்த கடுமையான இடங்களுக்கு அனுப்புவார்கள். இப் பாடல் அடிகளில் அச் செய்திகளைக் காணலாம்:

"தொட தொடத்தான் காடி* போட்டுத்
தொரையும் வந்துட்டான் - இந்த

எஸ்மூஸ்** கிராணியும் கிட்ட வந்துட்டான்
கோள் சொல்லிக் கங்காணியும் கிட்ட வந்துட்டான்
ஏட்டைப் பொரட்டுகிறான்
எல்லம்மாவைத் தேடுறான்
வழிய வழிய பார்க்கிறான்
வள்ளிய பார்க்கிறான்
எட்டாம்*** நெம்பர் காட்டுக் குள்ளே
என்னை வெட்டச் சொல்றான்
பத்தாம் நெம்பர் காட்டுக் குள்ளே
பாசாங்கு காட்டச் சொல்றான்...."

(முரசு நெடுமாறன் (தொகுப்பு), 1997: 337,8)

(*மோட்டார் சைக்கிள், **ஆங்கில மொழி, ***எட்டாம் எண் கொண்ட வேலைப்பகுதி)

இப்பேர்ப்பட்ட சூழலுக்கு அடிமையானோரையும். எதிர்த்துப் போராடியோரையும் பாடல்கள் காட்டுகின்றன. இவை போன்ற உண்மை நிகழ்வுகளை மையப்படுத்தி எழுதப்பெற்ற வேறுவடிவப் படைப்புகளும் பல வந்துள்ளன. 'வெற்றிச் செல்வி முத்தமாள்' என்ற தலைப்பில் வெளிப்போந்துள்ள சிறுபாவியம் (பெ.மு. இளம்வழுதி, 2001) அவற்றுள் ஒன்று.

தந்திரத்தால் பெண்களை வயப்படுத்த எண்ணுவது ஒருவகை, வலிந்து அடைய நினைப்பது மற்றொருவகை. பாடலில் வரும் ஒரு காட்சி:

........................ கங்காணி
வேகமுடன் ஓடிவந்து
தாவணியைத் தொட்டாண்டி - கைக்குத்
தங்கக் காப்புத் தரேன்னு சொல்லி
கையப் புடிச்சி இழுத்தாண்டி...!"

(இரா. தண்டாயுதம், 1998: 64)

இவைபோன்ற செய்கைகளை முறியடித்த பெண்கள்பற்றிய கதைகளும் உள.

காதலனால் ஏமாற்றப்பட்டு, சூலடைந்து ஒரு மகவை ஈன்றதால், மனமுடைந்து கிடந்த ஒரு பெண்ணை, எளிதில் வயப்படுத்தி விடலாமென்று வெள்ளைக்காரத் தோட்ட முதலாளி ஒருவன் முயன்றான். "தான் அப்பேர்ப்பட்டவள் அல்லல்; வேறு ஆளைப்பாருங்கள்" என்று பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் துணிச்சலொடு சொல்லி ஒதுங்கியவளின் உண்மை நிகழ்வு, சிறுகதையாகி நூலாகவும் வெளிவந்துள்ளது. (பி. கோவிந்தசாமி, 2007).

தந்திரத்தால் தன்னை அடைய விரும்பிய கண்காணியின் வஞ்சகம் நிறைந்த செயலைப் பெண்ணொருத்தி, தன் கணவனிடம் இங்ஙனம் முறையிடுகிறாள்:

மாயமே உருவாகி நான்
ஏனெடுத்தேன் பெண்தேகம்?
மாமா வந்தீங்களா? - கங்காணி
சொன்னத கேட்டீங்களா?
என்னடி சொன்னான்?
குத்துக் கட்டுல நிற்கச் சொன்னான்
அங்கே சாப்பாடு இருக்கு
சாப்பிடச் சொன்னான் (மேலது : 209)

கண்காணிகளின் பொதுவான இயல்புபற்றிய ஒரு பாடல் பின் வருமாறு:

தொட்டுத் தொடுசலுக்குத்
தொங்க நிர* பாப்பாத்தி
கட்டித் தழுவிக்கக்
கட்டிலிலே காமாட்சி
கருக்கல் களத்திலே
காத்தானின் பெண்டாட்டி
மோகம் தீரலியோ
மூதேவி கங்காணி (முரசு நெடுமாறன், 1997: 339)

இங்ஙனம் கண்காணிமார்களைப்பற்றிய பல பாடல்கள் உள்ளன. கண்காணிகள் எல்லாருமே மேற்கண்ட வகையினர் அல்லர். ஊர் / கிராமத் (தோட்டமக்கள்) தலைவர்போல் விளங்கி மக்களுக்கு நல்வழி காட்டியவர்களும் இருந்தனர் என்பதனையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இக்கட்டுரை ஆசிரியரின் தந்தை ஒரு கண்காணி, அவர் அறநெறிப் பிறழாச் சான்றோர். பல்லோருக்கு நல்வழி காட்டி வாழச் செய்தவர், பல வழக்குகளில் நல்ல தீர்ப்பு வழங்கியவர். தாத்தாவும் ஒரு கண்காணிதான். அதுவும் ஆள்கட்டி வந்த பெரிய கண்காணி. அவர் மிக மிக துணிச்சல்காரரர். கெஞ்சிக் கூத்தாடும் வழக்கம் அவர் அகராதியில் இல்லை. தொழிலாளர் உரிமைக்காகப் போராடியவர். ஒரு முறை தம் கோரிக்கையை ஏற்காத வெள்ளைக்கார நிருவாகிமேல் சினங்கொண்டு, "நீ கொடுத்த கண்காணி வேலையே வேண்டாம் போடா"" என்று தம் கையிலிருந்த பிரம்பைத் தூக்கி எறிந்து அவனைப் பணியவைத்தவர். மக்கள் செல்வாக்கு இருந்ததால் வெள்ளையரே அஞ்சும்படிக் கடைசி மூச்சுவரை அரிமா போல் வாழ்ந்தவர்.

அவர் சிறந்த தெருக்கூத்துக் கலைஞராயும் விளங்கினார். பலருக்குப் பயிற்சி அளித்துத் திருவிழாக் காலங்களில் கூத்து நடத்துவார். இவை போன்ற செயல்களை விளக்கும் நாட்டுப்புறப் பாடல்கள் பிறந்திருக்கலாம். ஆனால் கிட்டவில்லை.

நாட்டுப்புறப் பாடல்களில் பாலியல் செய்திகள் என்னும்போது இன்னும் பல செய்திகள் உள வெள்ளைக்காரத் தோட்ட நிருவாகிகள் தமிழ்ப் பெண்களை நாடியமை, வெள்ளைக்காரப் பெண்மணிகள் தமிழ்

இளைஞர்களை நாடியமை போன்ற செய்திகள் குவிந்து கிடக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்களில் விடுபட்டுபோன அச்செய்திகள் செவிவழிச் செய்திகளாக உலவுகின்றன. படைப்புகளில் அவை கற்பனைப் பின்னணியொடு வெளிப்பட்டுள்ளன.

வெள்ளையர்கள் நடத்தும் பாலியல் விளையாட்டுகள், தோட்டப் புறங்களில் பெரிதாகப் பொருட்படுத்தப்படுவதில்லை. அச்சூழலும் அங்கில்லை. அழகிய தமிழ்ப் பெண்கள்மேல் விடுதலறியா விருப்பம் கொண்ட வெள்ளையர்கள், அவர்கள் ரப்பர் மரம் சீவும் போது நிருவாகி என்ற நிலையிலிருந்து இறங்கி, வலியவந்து உதவியதுண்டு. தம் மனைக்கும் அழைத்துப் போவதுண்டு; அழகிய பெண்ணை மணம் செய்து கொண்டு தம் நாட்டிற்கு அழைத்துப் போனோரும் உண்டு.

தோட்டங்களில் நடக்கும் திருவிழாக்களில், வெள்ளையர் வளமனைகளில் நடக்கும் நிகழ்வுகளில் பெண்கள் கும்மியடித்துப் பாடும்பொழுது, இவைபோன்ற செய்திகளைப் பாட்டோடு பாட்டாக வெளிப்படுத்துவதுண்டு. அவ்வகைப் பாடல்களிலொன்று இது:

சுரை படந்ததைப் பாருங்கடி - சுரை
சுத்திப் படந்ததைப் பாருங்கடி
சுரைக் கொடிபோல நம்மதுரைக்குச்
சொல்லு வரிசையைப் பாருங்கடி
....................
மானு வேட்டைக்கு போவாராம்
மயிலு வேட்டைக்கு போவாராம்
கோழி கூப்பிடும் நேரத்திலே துறை
குமரி வேட்டைக்குப் போவாராம்!"

(இரா. தண்டாயுதம், 1998 : 242)

வெள்ளைக்காரரர்கள் தமிழ்ப் பெண்களை நாடியது போல் வெள்ளைக்காரிகள் தமிழ் இளைஞர்களை நாடிய (உண்மை) கதைகளும் உள. தோட்டப்புறத்தில் முதிர்ந்த மரங்களை இயந்திரத்தைக் கொண்டு கீழே தள்ளிக் கொண்டிருந்தான் ஓர் இளைஞன். அப் பணி வெள்ளைக்கார நிருவாகியின் வளமனைக்குப் பக்கத்தில் நடந்துகொண்டிருந்தது. அந்த இளஞனின் ஆளுமை, எடுப்பான தோற்றம், மரங்களைத் தள்ளும் இலாவகம் போன்றவற்றைப் பலகணி வழியாக எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வெள்ளைக்காரியைக் காளையின் பாங்கு வெகுவாக்க் கவர்ந்தது. அருகில் அழைத்துப் பேசினாள், பல முறை பேசினாள். மனங்கள் கலந்தன. ஒரு நாள் துணிமணிகளை மூட்டைக் கட்டிக் கொண்டு அந்த இளைஞனுடனேயே சென்று விட்டாள். ஏற்கனவே திருமணமான அத்தொழிலாளி மிகச் சிறிய வீட்டில் மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்துகொண்டிருந்தான். வெள்ளைக்காரியும் அச்சிறிய வீட்டில் அவனுடன் வாழ்ந்தாள். அவள் கணவனும் விட்டுக் கொடுத்து உதவியும் செய்து வந்தான். இது போன்ற பல உண்மைச்

செய்திகள்பற்றியும் பாட்டுப் பிறந்திருக்கலாம். ஆனால், கருத்தொடு திரட்டி ஆவணப்படுத்தப்படவில்லை.

**நிறைவுரை**

தோட்டப்புறத் தமிழர் வாழ்வு, நிலையாய ஆவணமாக வேண்டிய வரலாற்றுப் புதையலாகும். ஆனால் அவ் வாழ்வைத் துல்லியமாய்ப் படம்பிடித்துக் காட்டும் நூல்கள் இன்னும் உருவாகவில்லை. சிற்சில கூறுகளைக் கொண்ட நூல்களே வந்துள்ளன. ஆனால் அங்கு வாழ்ந்த தமிழர் தம்வாழ்வுப் படங்களைத் தம்பாடல்களில் ஓரளவு பதிவுசெய்து வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களை 'தோட்டக்காட்டான்கள்' என்று குறைத்தே மதிப்பிட்ட மேட்டுக் குடியினர், எழுதும் திறன் கொண்டிருந்தோர் அவற்றைப் போற்றிக் காக்க முன் வரவில்லை. காலங்கடந்து செய்த முயற்சியால் உருவான நூல்களின் துணையோடு இக்கட்டுரை எழுதப் பெற்றது. பழந்தமிழர் வரலாறு புறநானூறு போன்ற செவ்வியல் இலக்கியங்களில் படிந்துகிடப்பதுபோல் நாட்டுப்புற இலக்கியங்களிலும் கொட்டிக் கிடக்கின்றன. ஆய்வுலகம் உடல்வருத்தி ஆய்வு செய்தால் அரிய வரலாற்று உண்மைகளைப் பெறலாம்.

**துணை நூல்கள்:**


1. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம் (1997), அருள்மதியம் பதிப்பகம், கிள்ளான்.
2. இரா. தண்டாயுதம், மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள் (1999), தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.
3. பெ. மு. இளம்வழுதி, வெற்றிச் செல்வி முத்தம்மாள், 2001), மணிமேகலை பிரசுரம்.
4. முத்தம்மாள் பழனிசாமி, நாட்டுப்புறப் பாடல்களின் என் பயணம் (2006), கொங்கு இளைஞர் மன்றம், கோவை.
5. பி.கோவிந்தசாமி, உள்ளேவாருங்கள் (2007), அருள்மதியம் பதிப்பகம், கிள்ளான்.

# மலேசியக் கவிஞர் சா.ஆ.அன்பானந்தனின் கவிதைத்திறன்

முனைவர் வே.சபாபதி
இணைப்பேராசிரியர்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர், மலேசியா

## முன்னுரை

மலேசியத் தமிழர்களின் மத்தியில் அறிமுகம் தேவைப்படாத படைப்பாளர் சா.ஆ.அன்பானந்தன் அவர்கள்.சமூகக்கலைமணி என்றதும் உடனடியாக மலேசியத் தமிழர்களின் நினைவுக்கு வருகின்றவர். மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பிரிக்கமுடியாத ஒரு முக்கிய சக்தியாகத் திகழ்ந்தவர். இருபதாம் நூற்றாண்டின் ஐம்பதுகளில் மலேசியத் தமிழ் இலக்கிய வானில் முன்னோடிகள் பலர் தோன்றி இலக்கியத்தை வளர்த்தெடுத்தனர். அக்காலப் பகுதியில்,வரும்தம் எழுத்துகளால் மலேசியத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய ஒருபெருந்தகையாளராகக் காணப்படு கின்றார். 1955-ஆம்ஆண்டு முதல் மலேசியத் தமிழ்ப் படைப்பிலக்கியத் துறையில் தமசுவடுகளை ஆழப்பதித்துள்ளார். அவர் உயிருடன் இருந்த காலப்பகுதியிலேயே காலத்தின் விளக்கு (சிறுகதைத் தொகுப்பு), மரவள்ளிக் கிழங்கு (குறுநாவல்), நான் யார்?(சிந்தனைக் கட்டுரைகள்), நயனங்கள் (கவிதைத் தொகுப்பு), திருப்பம் (நாடகம்) ஆகிய ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன. இவருடைய மேலும் பல படைப்புகள் இன்னும் நூலுருவம் பெறவில்லை. அவற்றுள் புதிய சமுதாயம் மாத இதழில் அவர் எழுதிய உண்மைகள் எனும் நெடுங்கதை, இசைப்பாடல்கள், வானொலிக்கு அவர் எழுதியவை போன்றவை இன்னும் நூலுருவம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. நூலுருவம் பெற்றுள்ள ஐந்து நூல்களும் 2009-இல் அன்பானந்தனின் ஆக்கங்கள் எனும் பெயரில் ஒரே நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

## மலேசியக் கவிஞர் சா.ஆ.அன்பானந்தன்

சா.ஆ.அன்பானந்தன் மலேசியத் தமிழ்க்கவிதை இலக்கியத்தில் முத்திரை பதித்து, தமக்கெனத் தனியிடம் பிடித்த ஒருவராகத் திகழுகின்றார். தாம் ஒரு கவிஞன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமிதமும் மிடுக்கும் அவரிடம் காணப்படுகின்றது. கவிஞர்கள்

சிறப்புக்குரியவர்கள் என்பதனைத் தம்முடைய பாடல் ஒன்றில் பதிவு செய்துள்ளார்,

ஆனால் ஒன்று செல்லுகின்றேன்
ஆற்றல் உடையோர் நீரானால்
வீணாய்த் தோற்றுப் போவீரே
வீரன் முதல்வன் கவிநானே!
..........................
எல்லாம் நானே படைக்கின்றேன்
எண்ணும் எழுத்தும் என்பின்னே
வல்லான் என்போன் யாரிங்கே
வாட்கவி கொண்டேன் வாமுன்னே!

(அன்பானந்தனின் ஆக்கங்கள், ப.323)

என்று அவர் வெளிப்படுத்துகின்றார். அவருடைய கூற்றுப்படி கவிஞர்கள் சாதாரண மனிதரைவிட ஒரு படி மேலானவர்கள் எனும் கருத்து பெறப்படுகின்றது.

இலக்கியப் படைப்பாளர்களுள் பெரும்பாலோர் கவிதை இலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள் ஆகிய இரண்டில் ஏதாவது ஓர் இலக்கிய வகையில் மட்டும் ஈடுபடுவர்; அதில் சிறந்தும் விளங்குவர். வெகு சிலர் மட்டுமே இவ்விரண்டு துறைகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர். அந்த வெகுசிலருள் சா.ஆ. அவர்களும் இடம்பிடித்து சிறப்புக்குரிய ஒரு படைப்பாளராகத் திகழ்கின்றார். சா.ஆ. அவர்கள் கவிதை இலக்கியத்தில் மரபுக்கவிதைத் துறையிலும் உரைநடை இலக்கியங்களான நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை போன்றவற்றிலும் சிறந்து விளங்கினார்.

### சா.ஆ.அன்பானந்தனின் கவிதைகள்

எந்த ஓர் இலக்கிய வடிவத்திற்கும் இரண்டு பரிமாணங்கள் உள்ளன. அவை உருவமும், உள்ளடக்கமும் ஆகும். கவிதை இலக்கியத்திற்கும் இவையிரண்டும் உள்ளன.

### அ. உருவம் (வடிவம்)

உருவம் என்பது ஒரு படைப்பின் புறத்தோற்ற அமைப்பு ஆகும். புறத்தோற்றமும் ஒரு படைப்பின் சிறப்புக்குக் காரணமாக அமையும் கூறுகளுள் ஒன்றாக உள்ளது. பொதுவாக மரபுக்கவிதையின் புறத்தோற்றத்தை அக்கவிதை அமைந்துள்ள பாவகையும் அதற்கான யாப்புமே உறுதி செய்கின்றன. அவ்வகையில் பார்க்கும்போது சா.ஆ.அவர்களின் படைப்புகள் மிகுதியும் ஆசாரியப்பாவிலேயே அமைந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழில் தொன்மையானதாகவும் அடிப்படையானதாகவும் விளங்கும் ஆசிரியப்பாவையே சா.ஆ. அவர்கள் மிகுதியாகக் கையாண்டுள்ளது

சிறப்பிற்குரியதாகப்படுகின்றது. உள்ளத்து உணர்வுகளையும் கருத்துகளையும் முழுமையாகவும் முழுவீச்சோடும் வெளிப்படுத்துவதில் ஆசிரியப்பாவுக்கு இணை வேறு கிடையாது. அவ்வகையில் பார்க்கும் போது அன்பானந்தன் அவர்கள் தம் கவிதைகளின் பாடுபொருள்களை முழுமை யாகவும் முழுவீச்சோடும் வெளிப்படுத்துவதற்குத் திட்டமிட்டே ஆசிரியப்பாவைக் கையாண்டுள்ளார் எனக் கூறலாம். எனவே, மரபுக் கவிதைகளின் நுட்பங்களை நன்கறிந்த ஒருவராகவே அவர் காணப்படுகின்றார்.

### ஆ. உள்ளடக்கம் (பாடுபொருள்)

கவிதை இலக்கியத்தில் உள்ளடக்கம் என்பது பாடுபொருளும் அதனையொட்டித் தோன்றும் சிந்தனைகளும் உணர்வுகளும் ஆகும். பாடுபொருளே கவிதைக்கு உயிரைத்தந்து வாழவைக்கின்றது. கவிதையின் உயிர்நாடியாகத் திகழும் பாடுபொருள் அமையவேண்டிய வகையில் அமையாவிடில் கவிதை சிறக்காது. தமிழில் கவிதையின் பாடுபொருள் மாறியே வந்துள்ளது. தற்காலத்தில் சமுதாயமே கவிதைகளின் முக்கியப் பாடுபொருளாக உள்ளது. அவ்வகையில் அன்பானந்தன் அவர்களின் கவிதைகளும் சமுதாயத்தை மையமாகக் கொண்டு, அவற்றையே பாடுபொருள்களாக்கியுள்ளன. அவர் வெளியிட்டுள்ள ஒரே கவிதைத் தொகுப்பான நயனங்கள் எனும் நூலிலுள்ள கவிதைகள் சமுதாயத்தைச் சார்ந்த மொழி, இனம், நாடு, பண்பாடு, அரசியல் எனப் பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டுள்ளன. இத்தொகுப்பின் உள்ளடக்கத்தில் கவிதைகளின் பாடுபொருள்களின் வைப்புமுறையை மொழி, நாடு, இயற்கை, தத்துவம், இளைஞர், சமுதாயம், பாவியங்கள் எனக் கவிஞர் வகைப்படுத்தியுள்ளதும் சமுதாயமே அவரின் மையப்பாடுபொருள் என்பது தெளிவாகின்றது.

### கவிஞரின் நோக்கம்

கவிஞர் அன்பானந்தன் அவர்கள் எதற்காக இக்கவிதைகளைப் பாடியுள்ளார் எனும் நோக்கத்தை அவர் தம் பாடல் ஒன்றிலேயே பதிவு செய்துள்ளார்.

என்னருந் தமிழரோ எண்ணருந் துன்பமே
கொண்டிவண் வருந்திடும் அன்னவர் இன்புற
என்னுயிர் வைத்து மேநற்பணிஆற்றிட
இன்னுயிர்த் தமிழே நற்றிறம்அருள்கவே

பொன்னணி இருந்தும் பூணுவா ரிலைபோல்
கண்ணொளி இருந்தும் காணுவா ரில்லையே
மண்ணிதில் செவிடராய் மடமெனும் ஊனராய்
இன்னும் இருக்கிறார் இவர்விழி திறக்கவே!

*கனற்கவி பாடுவேன் கலைஎழில் கூட்டுவேன்*
*புனற்புவி பாயவே புதுநலம் தேடுவேன்*
*தினமவர் பீடையைத் தீயினில் போசுக்கவே*
*எனைக்கவி ஆக்குவாய் என்னருந் தாயே! (அ.ஆக்கங்கள். ப.312*

என்று சமுதாய நலனுக்காகப் பணிபுரிவதையே தம்முடைய கவிதை நோக்கமாகக் அவர் கொண்டுள்ளது தெரிய வருகின்றது.பிறிதோர் இடத்தில் தம் கவிதை நோக்கத்தை மீண்டும்உறுதிப்படுத்தும் வகையில் அன்பானந்தன் அவர்கள்,

*தமிழன் வாழ்க்கையோ இருண்டு கிடந்தது*
*........................*
*எந்தமிழ் மக்கள் செல்வஞ் சிறந்திட*
*அந்தமிழ்க் கல்வியில், கைத்தொழில் மேன்மையில்*
*சிறந்திடப் பாடுவேன்! சீர்பெறப் பாடுவேன்!*
*அறங்களைப் பாடுவேன்! அன்பினைப் பாடுவேன்!*
*பட்டம் பதவிகள் கூட்டம் ஆட்டம்*
*மட்டும் பெரிதெனும் மட்டப் புத்தியை*
*என்கவி உளியால் ஆழக் குத்துவேன்! (அ.ஆக்கங்கள், ப.364)*

எனப் புலப்படுத்துவதோடு, தாம் வாழையடி வாழையெனவந்த திருக்கூட்டமாம் கவிஞர் மரபில்/பரம்பரையில்வந்தவன் என்பதையும் அடக்கத்தோடு அக்கவிதையில் கூறிக்கொள்கிறார். (அ.ஆக்கங்கள், ப.ப.363-366)எனவே, துன்பத்திலும் அறியாமையிலும் உழன்று கொண்டிருக்கும் மக்களுக்கு உதவுவதற்காகவும் விழிப்புணர்ச்சி தருவதற்காகவும் கவிதைகள் பாடியுள்ளார் எனலாம்.

### தமிழகக் கவிஞர்களின் தாக்கங்கள்

கவிஞர் அன்பானந்தன் அவர்கள் தம்கவிதையை மக்களுக்கு உதவும் கருவி யாகவும் பாரதியைப்போன்று ஒரு தொழிலாகவும் கொண்டுள்ளார். கவிஞரின் கவிதை நோக்கத்தில் முக்கியக் கவிஞர் சிலரின் தாக்கங்களை இவரிடத்தில் காணமுடிகின்றது. குறிப்பாக, பாரதியார், பாரதிதாசன், நாமக்கல்லார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, முடியரசன், பட்டுக்கோட்டையார் போன்றோரின் செல்வாக்கை இவர்தம் கவிதைகளில் காணமுடிகிறது. மகாகவியாம் பாரதியின் தாக்கத்தை,

*மண்ணிதில் செவிடராய் மடமெனும் ஊனராய்*
*இன்னும் இருக்கிறார் இவர்விழி திறக்கவே!*
*(அ.ஆக்கங்கள், ப.312)*

எனும் கவிஞரின் கவிதை வரிகளில்,

*ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்*
*வாழ்கின்றோம்; ஒருசொற்கேளீர் (மகாகவி பாரதியார்)*

எனும் அவருடைய முழக்க வரிகளைக் காணமுடிகின்றது. கவிஞரின் கலைமகள், வீறுபெற்ற மகளிர்க்கும்மி ஆகிய பாடல்களிலும் பாரதியின் தாக்கம் காணப்படுகின்றது.

கன்னம் கடைஇதழ் களித்திருப்பாள்
காவியம் அன்னவே ஒளிர்ந்திருப்பாள்
பெண்ணின் உருவெலாம் பெருகிநிற்பாள்
பேசும் மொழியிலே நயந்திருப்பாள்
பண்ணில் இசையினில் மயங்கிநிற்பாள்
பாவவர் கவியினில் மகிழ்ந்திருப்பாள்
மண்ணில் உயிர்களில் மலர்ந்திருப்பாள்
மாக்கடல் அலைமடி தவழ்ந்திருப்பாள். (அ.ஆக்கங்கள், ப.328)

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்.
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணைவாசகத்துட்பொருளாவாள் (மகாகவி பாரதியார்)

பாரதிதாசனின் தாக்கம் கவிஞரிடத்தில் பரவலாகவே காணப்படுகின்றது. பாரதிதாசனிடத்தில் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது இதன்வழி அறிய முடிகின்றது. பாரதிதாசனிடத்தில் இருந்து புரட்சிச் சிந்தனைகளையும் சீர்திருத்தக் கருத்துகளையும் அன்பானந்தன் அவர்கள் அதிகமாகவே பெற்றுள்ளதனை அவர் கவிதைகளின் வழி அறிய முடிகின்றது. அனபானந்தன் அவர்களின் கவிதைநோக்கமான,

என்னருந் தமிழரோ எண்ணருந் துன்பமே
கொண்டிவண் வருந்திடும் அன்னவர் இன்புற
என்னுயிர் வைத்துமே நற்பணி ஆற்றிட
(அ.ஆக்கங்கள், ப.312)

எனும் கவிஞரின் வரிகளில் பாரதிதாசனின் தாக்கமே வெளிப்படுகின்றது.

இன்னலிலே, தமிழ் நாட்டினிலே யுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.
அன்னதொரு காட்சி இரக்க முண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே! (பாரதிதாசன்)

மொழியுணர்வு

மொழியாலே விழிபெற்றவர்கள் கவிஞர்கள். எனவே, மொழியுணர்வு பேசுவதில் வியப்பதிற்கில்லை. அன்பானந்தன் அவர்களும் மிகுந்த மொழிப்பற்றும் மொழியுணர்வும்

கொண்டிருந்தார். இத்தொகுப்பின் கவிதைகளில் பலஇடங்களில் தம் மொழியுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். மொழிப்பற்று, மொழியின் சிறப்பு, மொழி வளர்ப்பு, மொழியுணர்வை ஊக்குவித்தல் எனத் தமிழ் மொழிகுறித்த பல்வேறு சிந்தனைகளை இவர்தம் கவிதைகளில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

*இன்பத் தமிழும் அன்புக் கொழுந்தும்*
*என்புயர் தனிலும் இனியன வென்பேன்!*
*...................................................................*
*அன்னை இன்றியே ஆவது மில்லை*
*அன்னையு மவளே ஆவியும் அவளே!* (அ.ஆக்கங்கள், ப.310)

என்று தம் மொழிப்பற்றைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார். இதில் பாரதிதாசனே நம் கண்முன் நிழலாடுகின்றார்.

**இனவுணர்வு**

தமிழினத்தின் மாண்பு, வரலாறு, கடல்கடந்து மலாயா வந்த வரலாறு, அவர்களின் இன்றையநிலை ஆகியவற்றைக் கவிதைகளில் பதிவுசெய்து தம் இனவுணர்வை வெளிப்படுத்திஉள்ளார்.

*கடாரத்தின் கரைதொட்டு வீரம்நட்டு*
*மலைமகளும் கலைகமழச் செய்துசென்றான்*
*மாமன்னன் ராஜராஜன் பெற்றசிங்கம்!*
*............................................*
*அதற்கடுத்துச் சிலநூற்றாண்டடுத்துப் பின்னர்*
*அருந்தமிழன் 'சஞ்சி'யிலே அழைக்கப்பட்டான்*
*விதமறியா காடுகளில் இறங்கி, கொட்டும்*
*வியர்வைவழி இரத்தத்தைப் பெருக்கிஊற்றிப்*
*புதுத்தேனாய் ரப்பரைத்தான் பாயவிட்டான்*
*புதுப்பாதை-ரயிற்பாதைபோட்டுவைத்தான்!*
*............................................*
*துண்டாடற் கொடுமையிலே துண்டுபட்டுத்*
*தூசாகிக் காற்றினிலே பறக்கக்கண்டும்*
(அ.ஆக்கங்கள், ப.ப.370-371)

என்றுமலேசியத் தமிழர்களின் வரலாற்றைப் பதிவு செய்துள்ளார். தம் காலத்தில் மலேசியத் தமிழர்களின் வாழ்வியல்நிலை எப்படி இருந்தது என்பதையும் பதிவுசெய்துள்ளார். இந்நாட்டில் ஒரு காலப்பகுதியில் தோட்டங்களில் தமிழர்களே பெரும்பான்மையோராய் வாழ்ந்திருந்தனர். அந்தத்தோட்டப்புறச் சமுதாயத்தின் வாழ்வியல் நிலைகளையும்பரவலாகவே கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

*எங்கிருந்தோ தமிழனைப்போ லிங்கெழுந்து நிலம்பார்த்துத்*
*தன்னை ஊன்றி*

தங்கடமை முடித்துவிட்டுத் தனையழிக்கக் கொடுத்து
விட்டுச் சாய்தல் போல
செங்குருதி நீராக்கி செம்புடலை உரமாக்கிச்
சாய்ந்து போக
அங்கிருந்து வந்தானோ? அவனுக்கும் ரப்பருக்கும்
மாற்றம் காணேன். (அ.ஆக்கங்கள், ப.ப.367-368)

என்று இனவுணர்வு கொண்டு பாடியுள்ளார். தமிழினம் தன் நிலையில் தாழ்ந்து போனதற்குரிய காரணங்களையும் கண்டறிந்து சில கவிதைகளில் குறித்து வைத்துள்ளார்.

## வாழ்வியல் தத்துவங்கள்

கவிஞர் தம் வாழ்வியல் அனுபவங்களிலிருந்து பெற்ற பார்வைகளைத் தத்துவக் கருத்துகளாகப் பதிவு செய்துள்ளார். வாழ்வில் வெற்றிபெற்ற ஒருவரின் அனுபவங்கள் புதிய தலைமுறையினர் சிறந்துவாழ்வதற்கு இடப்படுகின்ற நல்லுரமாகும். ஆதலால், அவை தேவையானது; வாசகரின் சிந்தனை யாற்றலை வளர்ப்பது.

காலம் என்பவன் யாரடா? - அவன்
காட்டும் விந்தை யாதடா?
ஞாலம் வாழும் மக்களெலாம் - நிதம்
சாடும் பிறவிக் காரனடா!

## கற்பனைநயமும் சொன்னயமும்

கவிஞரின் கற்பனைநயம் மிகச் சிறப்பாக அவர்தம் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளன.கற்பனைத்தேரேறித் தம்தூரிகையால் நிலாவையும் மின்மினிப்பூச்சியையும் கீழ்வந்துள்ள கவிதைகளில் அவர் வரைந்துள்ள அழகே அலாதியானது.

மனிதர்கள் மத்தியில் ஆடைகளின் பயன்பாட்டைக் கவிஞர் தம் சொல் திறன் கொண்டும் சொன்னயம் கொண்டும் காட்டியுள்ளதும் சிறப்புக்குரியது.

இருப்பவர்கள் போடுவதோ எழிலால் ஆடை
இல்லாதார் பூணுவதோ தூசி ஆடை
திருப்புகழார்க் கேறுவதோ பொன்னால் ஆடை
தேய்ந்தவர்கள் போர்த்துவதோ தோலாம் ஆடை
தருக்கிடுவார் சேர்ப்பதெலாம் கனத்தால் ஆடை
தருமத்தார் ஏற்பதுவோ வள்ளல் ஆடை
உருத்தெரியார் அணிபே ரோபன் னாடை
உழுகின்றார் துய்ப்பதுவோ சேற்றின் ஆடை
(அ.ஆக்கங்கள், ப.337)

என்று சூழலுக்கும் குணநலனுக்கும் ஏற்ப ஆடைகள்மாற்றங் கொள்வதைச் சொற்களால் விளக்குகின்றார்.

நையாண்டியும் நகைச்சுவையும்

கவிஞரிடம் நையாண்டித்தனம் குடிகொண்டுள்ளதனையும் அவர்தம் கவிதைகளில் காணமுடிகின்றது. இதற்குநாய்க்கோர் இரங்கல் எனும் கவிதை தக்கச் சான்றாகும்.

துப்பட்டி சுத்திவைத்த கப்படிக்கும் தலையணையை
ஒப்பழகு 'லேசி' நாயே!
துப்பாக்கி கொண்டுன்னைத் துப்புரவு பண்டாராயான்
எப்படித்தான் சுட்டான்! அந்தோ!
மப்போடு ரோட்டினிலே போனகுப்பன் காரடிக்கக்
குப்புறவே விழுந்தாப் போலே
அப்படியும் இப்படியும் இழுத்திழுத்துச் செத்தாயே
செப்பாய்என் 'லேசி' நாயே! (அ.ஆக்கங்கள், ப.388)

அ. பேச்சுவழக்குச் சொற்களின் பயன்பாடு

பேருன்னா பேருங்க - கித்தா
மரந்தான் எம் பேருங்க.
ஊருன்னா வெளியூரு - காலை
ஊன்றினதோ இவ்வூரு (அ.ஆக்கங்கள், ப.316)

ஆ. பாடுபொருளையேபாட(பேச)வைத்தல்

அவ்வகையில் கவிஞர் நாடு, ரப்பர்மரம் போன்றவற்றை, அவற்றின் கூற்றாகவே பாடவைத்து, உணர்த்தவிழையும் கருத்துகளுக்கு வலுவூட்டியுள்ளார்.

நாடென்பார்எனையழகுநங்கைஎன்பார்
ஆடுமயில்பாடுமயில்தேடுஞ்செல்வம்
கூடியபாற்குடமுலையாள்தென்றல்வீசும்
நீடுமலைத்தோளென்பார்நீதிஎன்பார்!
(அ.ஆக்கங்கள், ப.314)

இ. காட்சியும்கருத்தும்

காட்சிகளைக் காட்டி அதன்வாயிலாகச் சொல்லவரும் கருத்துகளை உணர்த்துதல் ஆகும். பட்டமரமும் பகுத்தறிவு மனிதனும், வெள்ளம் வரவேணுமுங்க ஆகிய கவிதைகள் அவ்வகையில் அமைந்தவை.

கடுவினை புள்ளினங் காத்தேன் வளர்த்தேன்
காத்திடக் கடிக்கும் எறும்பொடு பலவும்
படுக்கை என்னிடம் பெற்றன; எனினும்
பலனெது மெனக்குப் பெறச் செய்திலனே!
(அ.ஆக்கங்கள், ப.339)

ஈ. கதைசுமந்த பாடல்கள்

கதையின் மூலமாகத் தாம் சொல்ல விழையும் கருத்துகளைக் கவிஞர் விளக்கியுள்ளார். அவ்வகையில் நயனங்கள் எனும் கவிதைத் தொகுப்பில் இத்தொகுப்பில் 3 கதைப்பாடல்கள்உள்ளன. அவை:

(1) பச்சைக்கொடி - தோட்டப்புறத்தை மையமாகக்கொண்ட இக்கதைபாடலில் கங்காணிகள் தோட்டத்துப் பெண்களுக்குத் தரும் பாலியல்தொல்லை விளக்கப்பட்டுள்ளது.(அ.ஆக்கங்கள், ப.ப.409-411)

(2) எனக்கென்ன - தோட்டத் துண்டாடலை மையமாகக் கொண்ட கதைப்பாடல் இது. தோட்டத் துண்டாடலால் அழிந்த குடும்பம் ஒன்றின் கதை இதில் காட்டப் பட்டுள்ளது. (அ.ஆக்கங்கள், ப.ப.412-416)

(3) மலையாண்டி வீடு - நாய், பூனை, எலி ஆகியன ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்ததைக் கூறும் கதைப்பாடல் இது. மலையாண்டியின் வீடு மலேசிய நாட்டில் வாழும் மூன்று இனங்களுக்கும் குறியீடுகளாக அமைந்து,நாட்டின் ஒற்றுமையை ஒற்றுமையை வலியுறுத்துகின்றது. (அ.ஆக்கங்கள், ப.ப.417-423)

தொகுப்புரை

அன்பானந்தன் அவர்கள் கவிஞருக்கே உரிய பண்புகளை முழுமையாக வாய்க்கப்பெற்றவராகவும் கவிதை மரபுகள் நன்கு அறிந்த ஒருவராகவும் காணப்படுகின்றார்.இவருடைய படைப்புகள் மிகுதியும் ஆசிரியப்பாவிலேயே அமைந்துள்ளன.தமிழகக் கவிஞர்களின் தாக்கங்கள் கொண்டவராக உள்ளார்.மலேசியக் கவிஞர்களையும் மதித்துப் போற்றியுள்ளார். சமுதாயமும் நாட்டுநடப்புகளுமே அவர் கவிதைகளின் பாடுபொருள்களாகி யுள்ளன. சுருங்கக்கூறின் நாடு,இனம், மொழி ஆகியனவே அவரை இயக்கியுள்ளன.அணிகளும் உத்திகளும் பொருத்தமாகவும் கச்சிதமாகவும் செழுமையாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன.அவர் மறைந்தாலும் என்றும் தம் கவிதையால் வாழ்ந்து வருபவர்.

# மலேசியாவில் ஹிண்ட்ராஃப் இயக்கத்தின் போராட்டமும் அதன் விளைவுகளும்

கோவி. சிவபாலன்
முதுநிலை விரிவுரையாளர்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர், மலேசியா

## முன்னுரை

தமிழகத்திலிருந்து மலாயாவுக்கு சஞ்சிக் கூலிகளாகக் கொண்டு வரப்பட்டத் தமிழர்கள் எல்லாக் காலங்களிலும் இந்த மண்ணுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்து வந்துள்ளனர். தொடர்ச்சியாகவே ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போதும் மலாய்க்காரரர்களின் ஆட்சியின் போதும் உழைப்பாளி இனமாகிய இவர்களின் உரிமைகளும், இவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சலுகைகளும் ஆட்சியாளர்களால் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்துள்ளன. சற்றேறத்தாழ இரண்டாயிரத்தாம் ஆண்டுகளில் தங்கள் இனம் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் ஓரங்கட்டப்படுவதை இவர்கள் படிப்படியாக உணரத் தொடங்கினர். இந்தியர்களைப் பிரதிநிதிக்கின்ற அரசியல் கட்சியாகிய ம.இ.காவின் பால் இவர்கள் வைத்திருந்த நம்பிக்கை தளரத் தொடங்கியது. இவர்களது சமய, இன உணர்வுகள் மலாய் ஆட்சியாளர்களால் வெளிப்படையாகவே சீண்டப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் வந்ததனால் இவர்களிடையே மனக்கொந்தளிப்பு உருவானது. அதன் விளைவாக மலேசிய இந்தியர்கள் ஒன்று திரண்டு 25 நவம்பர் 2007இல் பேரணி ஒன்றை நடத்தினர்.

## கட்டுரையின் நோக்கம்

ஹிண்ட்ராஃப் பேரணி, மலேசியாவின் அரசியல், சமூக வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. மலேசிய இந்தியர்களின் மீது அரசாங்கத்தின் பார்வையைத் திரும்பச் செய்த ஆற்றலையுடையதாக இப்பேரணி கருதப்படுகின்றது. மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் வெளிச்சத்தைக் கொண்டுவரும் எனப் பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட இப்பேரணி குறித்தும், ஹிண்ட்ராஃப் அமைப்பு குறித்தும் இப்பேரணி

ஏற்படுத்தியுள்ள விளைவுகள் குறித்தும் ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை படைக்கப்படுகின்றது.

**ஹிண்ட்ராஃப் அமைப்பின் தோற்றமும் பின்னணியும்**

மலேசிய நாட்டில் இந்தியர்களின் வாழ்வுரிமைக்குத் தடைகளும் எதிர்ப்புகளும் ஏற்பட்டபோது, அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு களம் தேவைப்பட்டது. அந்தக் களமே இந்து உரிமை நடவடிக்கை குழு எனப்படும் ஹிண்ட்ராஃப் அமைப்பாகும் (Hindu rights action force). ஹிண்ட்ராஃப்பின் நடவடிக்கைகளுக்குத் தங்களது ஆதரவைப் புலப்படுத்திய மக்கள், தங்களது ஒன்றுப்பட்ட ஆதரவை 'மக்கள் சக்தி' எனும் பெயரால் அழைத்தனர். 2008ஆம் ஆண்டு ஹிண்ட்ராஃப் அமைப்பைத் தடை செய்யப்பட்ட அமைப்பாக அரசாங்கம் அறிவித்தது. ஆனாலும் அவர்களது நடவடிக்கை 'மக்கள் சக்தி' எனும் பெயரில் தொடர்ந்தது.

ஹிண்ட்ராஃப் தோன்றிய காலக்கட்டத்தை மிகத்துல்லியமாகக் கூறிட இயலாது. "டிசம்பர், 2005இல் எவரஸ்ட் வீரர் எம்.மூர்த்தியின் உடல் குடும்பத்தாரிடமிருந்து பறிக்கப்பட்டு இஸ்லாமிய முத்திரை குத்திப் புதைக்கப்பட்டதே ஹிண்ட்ராஃப் தோன்றுவதற்கான முதல் புள்ளியாகும்" என வழக்கறிஞர் பி.உதயகுமார் கூறுகின்றார் (செம்பருத்தி,டிசம்பர்,பக்.10). ஹிண்ட்ராஃப் அமைப்பின் தலைவர் பொ.வேதமூர்த்தியும் இதே கருத்தைக் கொண்டுள்ளார். "தனிமனித உரிமை தொடர்பான விவகாரங்களில் மிகப் பிரபலமாக விளங்கியவர் உதயகுமார். அவருக்கு நான் ஒத்துழைப்பையும் உதவியையும்தான் வழங்கினேன். ஆனால் எம்.மூர்த்தியின் பிரச்சினையில் மலேசிய அரசு சார்பற்ற அமைப்புக்களின் நிலைப்பாட்டில் எனக்கு உடன்பாடில்லை. அப்போது ராமாஜி என்பவரின் உதவியுடன் சுமார் 30 அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் உதயகுமார் அலுவலகத்திலேயே ஹிண்ட்ராஃப் அமைப்பு உருவானது" (செம்பருத்தி,டிசம்பர்,பக்.9). எனினும் அடுத்த இரண்டு வாரங்களில் அதிலிருந்த பெரும்பாலான அமைப்புகள் விலகிக் கொண்டன.

அப்போது மாணிக்கவாசகம், ஜெயதாஸ் போன்றோர் அவர்களுக்கு அனுதாபிகளாக இருந்தனர். இந்நிலையில் எம். மனோகரன் மற்றும் ஆர்.கங்காதரன் ஆகியோர் சட்ட சேவையின் வாயிலாகத் தங்களின் பங்களிப்பை வழங்க முன் வந்தனர். ஹிண்ட்ராஃப் ஒருபோதும் அரசியல் நோக்கம் கொண்டதல்ல என்ற நிலையிலும் அரசியல் தொடர்புடைய மனோகரன், மாணிக்கம் மற்றும் ஜெயதாஸ் போன்றோரையும் இணைத்துக் கொண்டது. அந்நிலையில்தான் கணபதிராவ் மற்றும் வசந்தகுமார் எனும் இரண்டு

புதியவர்களின் வரவு அமைந்தது. செப்டம்பர் 2007இல் இவ்வமைப்பில் இணைந்த அவர்களுள் கணபதிராவுக்கு மலேசிய வரவு செலவு திட்டம் குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்கும் பொறுப்பு தரப்பட்டது. வசந்தகுமார் இவ்வமைப்பின் தற்காலிகப் பொருளாளராக நியமிக்கப்பட்டார். உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவதற்கு இரண்டரை மாதங்களுக்கு முன்தான் அவர்கள் இருவரும் இவ்வமைப்பில் இணைந்தனர்(செம்பருத்தி,டிசம்பர்,பக்.12).

### ஹிண்ட்ராஃப் அமைப்பின் நடவடிக்கைகள்

அடுத்தடுத்து நிகழ்ந்த மதமாற்றச் சிக்கல்களும் கோயில் உடைப்புகளும் மலேசிய இந்தியர்களுக்கு ஹிண்ட்ராஃப்பின் தேவையை உணர்த்தின. இவ்விரண்டு வகை நிகழ்வுகளும் இந்தியர்களின் சமயச் சூழலை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், இவை ஓர் இனத்தின் பண்பாட்டுச் சிதைவுக்குரிய செயல்களாகவே பார்க்கப்பட்டன. இந்நாட்டில் இந்தியர்களின் வாழ்வுரிமையை மறுக்கும் நிகழ்வுகளாக இவை கருதப்பட்டன. இவற்றோடு இந்தியர்களை ஏழ்மைச் சூழலுக்குள் தள்ளுதல், தமிழ்ப்பள்ளிகளைப் புறக்கணித்தல், தாய்மொழிக் கல்வியை ஓரங்கட்டுதல், உயர்கல்வித்துறைகளில் தடைகள் விதித்தல், பொருளாதாரச் சூழலிலிருந்து ஒதுக்குதல், அரசாங்கத்துறை வேலை வாய்ப்புக் கொடாமை, வீட்டுடைமைகளில் வாய்ப்பினை முடக்குதல் போன்றவற்றை எதிர்த்து இன்று போராடாவிட்டால் இனி என்றுமே போராட முடியாது என்னும் சூழல் உருவானது.

ஆங்காங்கே தனிப்பட்ட மனிதர்களாவும், இயக்கங்களாகவும் தனித்து இயங்கிப் பெரிதாக எதையும் சாதிக்க இயலாது என்பதை இந்தியர்கள் உணரத் தலைப்பட்டனர். இவ்வாறு உணர்ந்து விழித்தெழுந்தவர்களை ஒன்றிணைக்கும் களமாகவே ஹிண்ட்ராஃப் விளங்கியது. ஹிண்ட்ராஃப் பதிவுபெற்ற இயக்கமாகவோ பொருள்வளம் மிக்க அமைப்பாகவோ உருவாக்கப்படவில்லை. பல்வேறு வாழ்வியல் சூழல்களில் ஒடுக்கப்பட்ட மனிதர்களின் மனவலிமையைக் கொண்டு உருவாக்கப்பட்ட போராட்டக்களமாக ஹிண்ட்ராஃப் அமைந்திருந்தது.

### கோரிக்கைகளை முன்வைத்து தீர்வு காணும் முயற்சி

இந்தியர்களின் வாழ்வியல் உரிமைகள் எங்கெங்கு மறுக்கப்பட்டுள்ளன என்பதை அடையாளங்கண்டு அவற்றை அரசுக்குத் தெரிவிக்கும் பணியை மேற்கொண்டனர் ஹிண்ட்ராஃப் குழுவினர். மலேசியா விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டாலும், பல துறைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இந்தியர்களின் வளர்ச்சி நிறைவாக இல்லை. இந்தியர்களின் வாழ்வுரிமைகளும் வளர்ச்சியும் ஒடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மலேசிய இந்தியர்களின் வாழ்வுரிமையைக்

காப்பதற்குப் பதினெட்டுக் கோரிக்கைகளை உள்ளடக்கிய மனு ஒன்று (காலனித்துவ சாயல் அம்னோ அரசாங்கத்தால் 50 ஆண்டுகளாக ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, பாகுபாட்டுக் கொள்கைகளுக்குப் பலியான இந்திய சமுதாயம் - 50 years of marginalization and discrimination of Indians under the Neo-colonist umno Government) தயாரிக்கப்பட்டது *(www.policewatchmalaysia.com)*.

**பிரிட்டிஷ் அரசு மீது வழக்கு**

இந்நாட்டு இந்தியர்களின் இன்றைய நிலைமைக்குப் பொறுப்பேற்க வேண்டிய கடப்பாடு இங்கிலாந்து அரசுக்கும் உண்டு என்பதை உணர்ந்தனர் ஹிண்ட்ராஃப் குழுவினர். அதன் அடிப்படையில் இந்நாட்டு இந்தியர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் அவர்களது வாழ்வுரிமைக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குமான பொறுப்பு இங்கிலாந்து அரசுக்கும் இருக்கின்றது என வலியுறுத்தப்பட்டது. இங்கிலாந்து அரசிடமிருந்து இரண்டு இலட்சம் கோடி பவுண்டு *(Trillions of pounds)* கோரி அவ்வரசு மீது இலண்டன் உயர்நீதிமன்றத்தில் 30.8.2007இல் சிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது(மக்கள் ஓசை நாளிதழ், 31.8.2007, பக்.1&13). இந்த வழக்குத் தொடர்பாக இலண்டனிலுள்ள மலேசியத் தூதரகத்திற்கு வெளியே வேதமூர்த்தி தலைமையில் அமைதிக்கூட்டம் நடத்தப்பட்டது. இலண்டன், நியூயார்க், வாஷிங்டன் முதலிய பகுதிகளிலுள்ள அரசு சாரா அமைப்புகளுடனும், அமெரிக்க வெளியுறவுத்துறையைச் சார்ந்த செனட்டர் பார்பரா பொக்சீயுடனும், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்திப்புக்கூட்டம் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு மேல்நடவடிக்கைகள் மலேசியாவில் மேற்கொள்ளப்பட்டன. மலேசிய இந்தியர்கள் பல்வேறு இன்னல்களுக்கிடையே வாழ்வதற்கு ஆங்கிலேய அரசின் பொறுப்பற்ற தனம் முக்கியக் காரணமாகக் கூறப்பட்டது. இதன் தொடர்பாக ஓர் இலட்சம் இந்தியர்கள் கையொப்பமிட்ட மனு ஒன்றை இங்கிலாந்து அரசுக்கு மலேசியாவிலுள்ள இங்கிலாந்து தூதரகத்தார் வழியாகச் சேர்க்க வேண்டுமென முடிவெடுக்கப் பட்டது. ஓர் இலட்சம் கையெழுத்தினைப் பெறுவதற்கு நாடெங்கும் பொதுக்கூட்டங்களும் விளக்கக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. மலேசிய இந்தியர்களின் பின்னடைவு தொடர்பான பல்வேறு விளக்கங்களும் தகவல்களும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. அரசியல், அரசமைப்புச்சட்ட விதிமுறைகள் பற்றியும் விளக்கங்கள் தரப்பட்டன (மக்கள் ஓசை நாளிதழ், 15.11.2007,பக்.1&13). இதுபோன்ற விளக்கக்கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நாடெங்கிலும் நடத்தப்பட்டன. இதன் வழி,

இந்திய மக்கள் தம் வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையினை ஓரளவு அறிந்து கொண்டனர். இதன் விளைவாக, இந்தியர்கள் ஒன்றுபட்டு வாழ்வியல் உரிமைகளைப் பெற வேண்டும் என்னும் வேட்கையில் இயங்கினர்.

25.11.2007ஆம் நாள் காலை மணி ஒன்பதுக்கு இந்தியர்கள் ஒன்றுகூடி இம்மனுவை இங்கிலாந்து தூதரகத்தில் கொடுப்பதற்கு அனுமதி கேட்கப்பட்டது. ஆனால், காவல்துறையினர் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டனர். இதனைப்பற்றிய அறிக்கைகளும் செய்திகளும் நாளிதழ்களில் பரவலாக வெளியிடப்பட்டன. ஆனாலும் திட்டமிட்டபடி 25.11.2007-இல் பேரணி கூட்டப்பட்டு இங்கிலாந்து தூதரகப் பொறுப்பாளரிடம் கொடுக்கப்படும் என்னும் முடிவில் மாற்றமேதும் இல்லையென ஹிண்ட்ராஃப் பொறுப்பாளர்கள் தெளிவுபடுத்தினர் (மலேசிய நண்பன் நாளிதழ், 20.11.2007, பக்.1).

ஹிண்ட்ராஃப் குழுவின் முக்கியப் பொறுப்பாளர்கள் மீது காவல்துறையினர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றனர். அதோடு, மலேசிய அரசு ஹிண்ட்ராஃப் பொறுப்பாளர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது. இவர்களின் முயற்சிகள் வெற்றி பெறாமலிருக்கப் பல இடையூறுகளைக் கொடுத்தது மலேசிய அரசு. பேரணியில் பொதுமக்கள் கலந்து கொள்ளக்கூடாதென அரசு முன்னெச்சரிக்கை விடுத்தது (மக்கள் ஓசை, தமிழ் நேசன், மலேசிய நண்பன்). அரசின் எச்சரிக்கையும், இந்திய மற்றும் அம்னோ அரசியல் தலைவர்களின் எச்சரிக்கைகளும் நாளிதழ்களில் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் இருந்தன. ஆனால் பேரணியை நடைபெறாமல் தடுக்கும் அரசின் எல்லாவிதமான முயற்சிகளையும் பொதுமக்கள் நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டனர்.

### ஹிண்ட்ராஃப் பேரணி

24.11.2007- வரை மலேசிய இந்தியர்கள் ஒற்றுமை குறைந்தவர்கள் என்று கருதப்பட்டார்கள். ஆனால், தம் உரிமைக்காகப் போராடுவதிலிருந்து தாங்கள் பின் வாங்கும் சமுதாயம் இல்லை என்று உணர்த்தினர் இந்தியர்கள். 25.11.2007-இல் நாடெங்கிலுமிருந்து இந்தியர்கள் கோலாலம்பூரின் முக்கிய சாலைகள் அனைத்திலும் கூடினர். குறைந்தது முப்பதாயிரம் பேர் திரண்டிருப்பர் எனச் சொல்லப்படுகின்றது. 50,000க்கும் அதிகமாகத் திரண்டதாகவும் கூறப்படுகிறது. 'மலேசியா இன்று' எனும் தனியார் இணையத்தளத்துக்கு பி.உதயகுமார் அளித்தப் பேட்டியில் குறைந்தது 100,000 பேர் திரண்டனர் என்று கூறியுள்ளார். இந்நாட்டுத் தமிழர் வரலாற்றில் காணப்படாத காட்சியாகவும் ஆற்றலின் எழுச்சியாகவும் அப்பேரணி இருந்தது.

பேரணியைத் தோல்வியுறச் செய்வதற்காகக் கூட்டத்தார் மீது காவல்துறை அமிலம் கலந்த நீரைப் பாய்ச்சியடித்தனர், கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். காவல்துறையினரின் வரம்பு மீறிய செயல்களைப் பொதுமக்கள் பொறுத்துக் கொண்டனர். மின்னூடகங்கள் பேரணிக்காட்சிகளைப் பலநூறு கோணங்களில் படம்பிடித்துக் காட்டின. அரசாங்க ஊடகங்கள் செய்திகளைத் திரித்துக் கூறின.

**பேரணியின் விளைவுகள்**

பேரணியையொட்டி அரசு மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகள் பற்றி உலக நாடுகள் பலவற்றில் பேசப்பட்டது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகளில் பேரணி பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. மலேசிய அரசுக்கு எதிராக இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியும் தங்களது கண்டனம் கலந்த வருத்தத்தைத் தெரிவித்தனர். 'ஒற்றுமைக்கு இலக்கணமான நாடு மலேசியா' என்னும் மாயக்கண்ணாடி உடைபட்டது. சிறுபான்மையினர் மீது மலேசிய அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஒடுக்குமுறைகளை உலகம் கண்டு கொண்டது. மலேசிய அரசின் நடவடிக்கைகளைப் பல நாடுகளும் மனித உரிமைக் கழகங்களும் கண்டித்தன. "இது எங்கள் உள்நாட்டு விவகாரம், வெளியார் தலையிட வேண்டாம்," என மலேசிய அரசாங்கம் உறுதியாகக் கூறிவிட்டது.

ஹிண்ட்ராஃப் குழுவின் பெயரும், அதன் முக்கியப் பொறுப்பாளர்களின் ஆற்றலும் உலகளவில் பரவலாகப் பேசப்பட்டன. மலேசிய அரசு ஹிண்ட்ராஃப் பொறுப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுத்தது. நீதிமன்ற வழக்குகள் பல பதிவு செய்யப்பட்டன. ஆனால், சட்டத்தின் அடிப்படையில் இவர்கள்மீது எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க இயலவில்லை. ஹிண்ட்ராஃப் குழுவின் வெற்றியையும் பொறுப்பாளர்களின் ஆற்றலையும் ஒடுக்க வேண்டுமென அரசு முடிவெடுத்தது. ஹிண்ட்ராஃப் குழுவின் ஐந்து முக்கியப் பொறுப்பாளர்களான வழக்கறிஞர் பி. உதயகுமார், வழக்கறிஞர் எம். மனோகரன், வழக்கறிஞர் வீ. கணபதிராவ், வழக்கறிஞர் ஆர். கங்காதரன், முன்னாள் வங்கி அதிகாரி கே. வசந்தகுமார் ஆகியோர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 8-இன் கீழ் நவம்பர் 13, 2007இல் கைது செய்யப்பட்டு தைப்பிங்கிலுள்ள கமுண்டிங் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். ஹிண்ட்ராஃப் தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கப்பட்டது.

அப்போதைய துணைப்பிரதமர் டத்தோசிரீ நஜிப் துன் ரசாக், இந்திய சமூகம் உட்பட்ட இஸ்லாம் அல்லாதவர்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் செவிமடுப்பதற்கும் பல்வேறு வழிமுறைகளையும் செயல்

திட்டங்களையும் அரசாங்கம் உருவாக்கியிருப்பதாகவும் பேரணி நடத்துவது பிரச்சினைக்குத் தீர்வாகாது எனவும் கூறினார்.

ஹிண்ட்ராஃப் பேரணிக்குப்பின் மலேசிய இந்தியர்களிடம் சகோதரவுணர்வுடன் கூடிய ஒற்றுமை மேலோங்கி இருந்தது. வழக்கமாக உள்ளூர்த் தமிழ் நாளிதழ்களில் இந்தியர்களின் குற்றச் செயல் தொடர்பான செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கும். ஆனால், பேரணிக்குப் பின் பல மாதங்களுக்கு இந்தியர்கள் தொடர்புடைய குற்றச் செயல் செய்திகள் எதுவும் வெளிவரவில்லை. இந்தியர்களின் ஒட்டு மொத்த கவனமும் தங்களின் உரிமைப்போராட்டத்தில் இருந்ததால் அந்தக் காலக்கட்டத்தில் எந்த இந்தியரும் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பது இதன் வழி தெரிய வருகின்றது.

பேரணிக்கு முதல் நாள் வரை பேரணிப் பொறுப்பாளர்களையும் அதற்கு ஆதரவு வழங்குவோரையும் ம.இ.கா. தேசியத் தலைவரும் ம.இ.காவைச் சார்ந்த பிற தலைவர்களும் கடுமையாகச் சாடிப்பேசியிருந்தனர். ஆனால் பேரணியின் வெற்றியைப் பார்த்தபின் ம.இ.கா தலைவர்கள் வாயை மூடிக் கொண்டனர். இந்தச் சூழலில்தான் 2008-இல் பொதுத்தேர்தல் வந்தது. பொதுத்தேர்தல் பரப்புரைகளின் போது அரசியல்வாதிகளின் பேச்செல்லாம் இந்தியர்களை மையமாக வைத்தே அமைந்திருந்தது. இந்தியர்களின் வாழ்க்கையை மேம்படுத்தப்போவதாகப் பல வாக்குறுதிகளை தேசிய முன்னணியினர் தந்து கொண்டிருந்தனர். அவர்களது வாக்குறுதிகள் அனைத்தும் இந்தியர்கள் இதுநாள் வரை பல உரிமைகளைப் பெறாமல் இழந்து வந்திருக்கின்றனர் என்பதைத் தெளிவுப்படுத்தின.

அதே நேரத்தில் இன்னொரு. புறம் ம.இ.கா. தலைமைத்துவத்தைப் பலரும் சாடி அறிக்கை விட்டுக் கொண்டிருந்தனர். முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமட், ம.இ.கா தலைவர் டத்தோசிரீ சாமிவேலு இந்தியர்களுக்கு உரியதை இதுவரை கேட்டது கிடையாது என்ற மிகப் பெரிய குற்றச்சாட்டை முன்வைத்தார். அதே வேளை, தான் பிரதமராக இருந்த காலத்தில் இந்தியர்களுக்கு அரசாங்கம் செய்த நிதி ஒதுக்கீடுகள் என்னவாகின எனவும் கேள்வி எழுப்பினார். ஆனால், தான் பிரதமராக இருந்தபோது இந்தியர்களுக்கு உரியதைச் செய்யாத மகாதீர் தேர்தல் நாடகம் ஆடுகிறார் என்பதை மக்கள் புரிந்துகொண்டனர்.

அரசியல்வாதிகளின் இதுபோன்ற குற்றச்சாட்டுகள், இந்தியர்கள் இதுநாள்வரை எவ்வாறெல்லாம் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள் என்னும் பெரிய தெளிவை மக்களுக்கு ஏற்படுத்தின. இதன் காரணமாகவே தங்களுக்குரிய உரிமையை முறையாகப் பெற்றுத் தராத

ம.இ.காவை பொதுத்தேர்தலில் தோல்வியுறச் செய்தனர். ம.இ.கா. தேசியத் தலைவர் டத்தோசிரீ சாமிவேலு தமது சொந்தத் தொகுதியிலேயே தோல்வியைத் தழுவினார்.

ஹிண்ட்ராஃப் பேரணி எதிர்க்கட்சி கூட்டணிக்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்தது. இந்தியர்கள் எழுப்பியுள்ள கோரிக்கைகளை வைத்து எதிர்க்கட்சியினர் தேசிய முன்னணி அரசாங்கத்தையும், ம.இ.கா. கட்சியையும் கடுமையாகச் சாடினர். தங்களுக்கு நாட்டை ஆளும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் இந்தியர்களின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்தனர். அந்தப் பொதுத் தேர்தலில் ஆளும் தேசிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழந்ததோடு 5 மாநிலங்களையும் எதிர்க்கட்சி கூட்டணியிடம் இழந்து பெரிய சரிவைச் சந்தித்தது.

### ஹிண்ட்ராஃப்பின் இன்றைய நிலை

2007இல் இண்ட்ராப் பேரணி முடிந்த அடுத்த நாளே இங்கிலாந்து அரசாங்கத்தின் மீதான வழக்கு சம்பந்தமாக லண்டன் பயணமான வேதமூர்த்தி 56 மாதகாலம் லண்டனில் தஞ்சம் புகுந்தார். அந்தக் காலக்கட்டத்தில் அனைத்துலக நாடுகளின் கவனத்தை மலேசிய இந்தியர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டுவரும் இனவொதுக்கல் போக்கின்பால் ஈர்க்கும் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இங்கிலாந்து, இந்தியா, அமெரிக்க காங்கிரஸ் உள்ளிட்ட நாடாளுமன்றங்களிலும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள நாடாளுமன்றங்களிலும் ஐக்கிய நாடுகளின் சபையிலும் மலேசிய இந்தியர்களின் நிலை குறித்து விளக்கமளித்தார். இப்படி இன்னும் பல்வேறு அனைத்துலக அமைப்புகளுக்கு மலேசிய இந்தியர்களின் நிலை விளக்கப்பட்டது (வேதமூர்த்தியுடன் நடத்தப்பட்ட மின்னஞ்சல் பேட்டி ) . மேலும் இந்த வழக்குத் தொடர்பாக பல நுண்ணிய பணிகளையும் மேற்கொண்டார். ஹிண்ட்ராஃப் இயக்கத்தின் முக்கியத் தலைவர்கள் இல்லாத அந்தச் சூழ்நிலையில், ஹிண்ட்ராஃபின் தேசிய ஒருங்கிணைப்பாளரான தனேந்திரன் தனக்குச் சார்பாக உள்ளவர்களுடன் மக்கள் சக்தி இயக்கத்துக்கு தான் தலைமை ஏற்பதாக அறிவித்துக் கொண்டார். அத்துடன் அரசாங்கத்துக்கு ஆதரவான இயக்கமாக மக்கள் சக்தி இயக்கத்தின் தோற்றத்தையும் செயல்பாடுகளையும் மாற்றினார். இவரது நடவடிக்கைகள் மக்களிடையே அதிருப்தி அலைகளை ஏற்படுத்தின. இந்திய சமுதாயத்தின் உரிமைக்காகப் போராடும் ஒரு போராட்ட இயக்கமான மக்கள் சக்தியை தேசிய முன்னணி அரசாங்கத்திடம் தனேந்திரன் அடகு வைத்து விட்டார் என்று மக்கள் குமுறினர். மலேசிய இந்தியர்களின் வாழ்க்கைநிலை மாற்றத்துக்கு சிறிதும் உழைக்காத தனேந்திரன்

கொல்லைப்புறம் வழியாக மக்கள் சக்தி கட்சியைக் கடத்திவிட்டார் என்றெல்லாம் அப்போது நாளேடுகள் செய்திகள் வெளியிட்டன. தற்போதும் மக்கள் சக்தி இயக்கத்துக்கு தனேந்திரனே தலைவராகப் பொறுப்பு வகிக்கின்றார். அரசாங்கத்துக்கு ஆதரவான இயக்கம் என்னும் நிலையில் ஆண்டுதோறும் மக்கள்நலப் பணிக்குரிய நிதியை இவ்வியக்கம் அரசாங்கத்திடமிருந்து பெற்று பல்வேறு சமுதாயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஹிண்ட்ராஃப் தேசிய முன்னணி அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் ஹிண்ட்ராஃப் ஆதரவாளர்கள் அதிர்ச்சிக்குள்ளானார்கள். ஹிண்ட்ராஃபின் கோரிக்கைகளுக்குத் தொடக்கத்திலிருந்தே செவிசாய்க்காத தேசிய முன்னணி அரசாங்கத்துடன் ஹிண்ட்ராஃப் செய்துகொண்ட இவ்வொப்பந்தம் இந்தியர்களிடையே மிகப்பெரிய அதிருப்தி அலைகளை ஏற்படுத்தியது. இத்தனை காலமும் அரசாங்கத்தின் கொள்கைகளைச்சாடி இந்தியர்களின் விடியலுக்காக தன்னை ஒரு போராட்ட இயக்கமாக முன்னிலைப்படுத்திக் கொண்ட ஹிண்ட்ராஃப் இன்று அதன் அடிவருடியாக மாறிவிட்டதாக மக்கள் குறை கூறினர். வேதமூர்த்தி மலேசிய இந்தியர்களின் நம்பிக்கைகளை அடமானம் வைத்துவிட்டார், இந்தியர்களின் நம்பிக்கைகளை அடமானம் வைப்பதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கின்றது என்பன போன்ற கண்டனக் குரல்கள் எழத்தொடங்கின.

இச்சூழலில் நாட்டின் 13ஆவது பொதுத் தேர்தல் நடந்தது. தேசிய முன்னணி வெற்றிபெற்றாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவியலவில்லை. இந்நிலையில் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டு, மலேசியாவின் கட்சி அரசியல் சார்பற்ற வகையில் இந்தியர்களின் முதலாவது துணை அமைச்சராக 16.5.2013இல் வேதமூர்த்தி பதவியேற்றார். பின் கடந்த 8.2.2014இல் தனது பதவியைத் துறந்தார். 268 நாட்கள் மட்டுமே நீடித்த அந்தப் பதவி காலத்தில் தேசிய முன்னணி அரசாங்கம் தன்னுடன் செய்த ஒப்பந்தத்தை நடைமுறையாக்கத் தவறி விட்டதாகக் குறைக்கூறினார். பதவி விலகிய வேதமூர்த்தி ஹிண்ராஃப்-தேசிய முன்னணி கூட்டு ஒப்பந்தத்தைக் காப்பாற்றத் தவறிய பிரதமர் நஜிப் பதவி விலக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

வேதமூர்த்தியின் இம்முடிவை மக்கள் இரண்டு வகையான கண்ணோட்டத்துடன் பார்த்தனர். முதல் வகைக் கண்ணோட்டம் வேதமூர்த்தியைக் கடுமையாக விமர்சனம் செய்தது. அரசியல் அனுபவம் இல்லாதவர், பொறுமையற்றவர், மலேசிய அரசாங்கக் கட்டமைப்பில் இணைந்துப் பணியாற்றுவதற்குரிய

முதிர்ச்சியில்லாதவர், மலேசிய இந்தியர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டவர், பிரதமரைக் குறைக்கூறுவதற்கு அருகதையற்றவர் என்றெல்லாம் அந்த விமர்சனங்கள் அமைந்திருந்தன. இரண்டாவது வகைக் கண்ணோட்டம் வேதமூர்த்தியின் நடவடிக்கைகளையும் முடிவையும் பாராட்டும் வகையில் அமைந்திருந்தன. தன்னுடைய போராட்டத்தில் மாற்றுவழிமுறையாக அரசாங்கத்துடன் இணைந்தாவது இந்திய சமுதாயத்துக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற முனைந்தவர், மலேசிய இந்திய அரசியல் தலைவர்கள் யாரும் இதுவரைச் செய்யத் துணிந்திராத பதவித்துறப்பைச் செய்தவர், பிரிட்டி அரசின் மீது ஒரு இந்தியருக்கு அமெரிக்க டாலர் 20 லட்சம் என்ற வகையில் 4 டிரிலியன் (4,000,000,000,000) அமெரிக்க டாலருக்கு நஷ்டஈடு கோரி 2007-ஆம் ஆண்டின் சுதந்திர தினத்தன்று ஒரு வழக்கைத்தொடுத்து அதன்வழி மலேசிய இந்தியர்களுக்கு தங்களின் நிலைகுறித்த பரந்த விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் என்றெல்லாம் அவருக்கு ஆதரவாகவும் குரல்கள் ஒலித்தன.

தான் அரசாங்கத்துடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது விவேகமான முடிவே என்கின்றார் வேதமூர்த்தி. "அது தேர்தல் காலக்கட்டம். மலேசிய இந்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய கோரிக்கைகளுக்கு எந்தக்கட்சி செவிசாய்க்கின்றதோ அந்தக்கட்சியை ஆதரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. எதிர்க்கட்சியினர் பாராமுகமாக இருந்த நிலையில் தேசிய முன்னணி அரசாங்கம் செவிசாய்க்க முன்வந்தது. இந்தியர்களின் பிரச்சினைகளுக்கு இதன்வழியாகவாவது தீர்வு பிறக்கட்டுமே என்று அவர்களுக்கு ஹிண்ட்ராஃப் ஒத்துழைத்தது. ஆனால் ஒப்பந்தத்தின்படி அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை. எனவே அரசாங்கப் பதவியைத் துறந்தேன். இதன்வழி அரசாங்கத்தின் கபடநாடகம் மக்களுக்கு அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. நான் பதவி துறந்த பிறகு, முன்பைவிட மக்கள் எனக்கு ஆதரவாகவும் பக்கபலமாகவும் இருக்கின்றார்கள். முன்பைவிட நன்கு திட்டமிட்ட நிலையில் பல்வேறு தரப்பினரின் ஆதரவோடு இந்தியர்களிடையே இன்னொரு எழுச்சி அலையை ஏற்படுத்த முடியுமென நான் நம்புகிறேன்" எனக் கருத்துக்கூறும் வேதமூர்த்தி ஹிண்ட்ராஃப்பின் அண்மைய கால போக்குகள் சரியான திசையிலே சென்றுகொண்டிருப்பதாகக் கருதுகின்றார்(வேதமூர்த்தியுடன் நடத்தப்பட்ட மின்னஞ்சல் பேட்டி).

முடிவுரை

மலேசிய இந்தியர்களுக்கு அரசாங்கத்தின் இனவொதுக்கப் போக்கு பல காலமாகவே மனக்கீறல்களை ஏற்படுத்தி வந்துள்ளது. ஆனாலும், மலேசிய இந்தியர்களைப் பிரதிநிதிக்கின்ற தலைவர்களின் அம்னோ அரசுக்கு ஒத்துப்பாடும் போக்கினால் அந்தக் கீறல்கள்

உள்ளுக்குள்ளேயே இரணமாகிப் போயிருந்தன. இந்தியர்களின் சமயவுணர்வு சீண்டப்பட்ட பொழுது அவர்கள் பெரும் மனத்துயரடைந்தார்கள்; கிளர்ந்தெழுந்தார்கள். இதன் விளைவாக மலேசிய இந்தியர்களிடையே தன்மான உணர்வு மேலோங்கியது. இன்று வரை பல்வேறு இனமானப் பிரச்சினைகளுக்காக அவர்கள் போராடிவருவது இதை உறுதிப்படுத்துகிறது. மலேசிய இந்தியர்களின் பிரச்சினைகளுக்குப் பேரணியும் போராட்டங்களும் தீர்வல்ல எனப் பல்துறை சார்ந்த தரப்புகள் கருத்து கூறுகின்றன. ஆனாலும், சரியான அணுகுமுறையின் வழி மலேசிய அரசுக்கும் உலக நாடுகளுக்கும் உணர்த்த முடியாத மலேசிய இந்தியர்களின் உள்ளக் கிடக்கையை ஹிண்ட்ராஃப் பேரணியின் வழியாகத்தான் உணர்த்த முடிந்துள்ளது என்னுங் கருத்தை பொதுவாகவே எல்லாரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஹிண்ட்ராஃப் இயக்கம் தன்னுடைய போராட்ட அணுகுமுறைகளை மாற்றிக்கொண்டதனால் மக்களிடையே அதற்கிருந்த செல்வாக்கு சரிந்திருப்பதாகக் கருதப்பட்டாலும், ஹிண்ட்ராஃப் இயக்கம் ஏற்படுத்திய எழுச்சியும் 'மக்கள் சக்தி' என்னும் கருத்தலையும் மலேசிய இந்தியர்களின் மனங்களில் இன்னும் பசுமையாகப் பதிந்துள்ளன என்னும் உண்மையை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

## மேற்கோள்கள்


1. செம்பருத்தி மாத இதழ், கோலாலம்பூர்: செம்பருத்தி பதிப்பகம்
2. மக்கள் ஓசை நாளிதழ்
3. மலேசிய நண்பன் நாளிதழ்
4. தமிழ் நேசன் நாளிதழ்
5. www.policewatchmalaysia.com
6. வேதமூர்த்தியுடன் நடத்தப்பட்ட மின்னஞ்சல் பேட்டி, 6 ஏப்ரல் 2014 .

# மலேசிய இந்துக்களிடையே மாறிவரும் சமயப்போக்குகள் "வீட்டு வளாக ஆலயங்கள்" ஒரு பார்வை

முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம்
விரிவுரையாளர், இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்,
கோலாலம்பூர், மலேசியா

## முன்னுரை

மலேசிய இந்தியர்கள் மேற்கொண்டு வரும் இந்து சமய வழிபாடுகளை அவர்களது இல்ல வழிபாடுகள் தொடங்கி ஆண்டுதோறும் நடைபெறும் பண்டிகைத் திருநாட்களிலும், விழாக்காலங்களிலும் மற்றும் ஆலயத் திருவிழா கொண்டாட்டங் களிலும் பெரிதும் காணலாம். இவ்வாறான சமய வழிபாடுகள் வாழையடி வாழையாக மலேசிய இந்தியர்களால் இல்லங்கள் மற்றும் ஆலயங்கள் தோறும் முறையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான வழிபாடுகளுக்கு இந்து சமயம் பெரும் பங்காற்றி வருகின்றது. அதிலும் தற்பொழுது இந்தியர்கள் கடைப்பிடிக்கின்ற வழிபாடுகளில் இல்ல வழிபாடுகள் காலச் சூழலுக்கேற்ப பல்வேறான பரிணாமங்களைக் கடந்து பல மாற்றங்களுடன் உருவெடுத்து வருகின்றன. இவ்வாறாக பல்வேறு மாற்றங்களைக் கண்டு வரும் இந்து சமய வழிபாடு களில், முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது வீட்டு வளாக வழிபாடு.

மலேசிய இந்தியர்களில் பெரும்பான்மையோர் தங்களது வீட்டு வளாகங்களில் சிறு சிறு ஆலயங்களை நிறுவி அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப நாள்தோறும் தெய்வ வழிபாடு அல்லது குலதெய்வ வழிபாடு செய்து வருகின்றனர். இவ்வாறான வீட்டு வளாக ஆலயங்கள் கிராமப் புறங்களில் படிப்படியாக உருப்பெற்று இப்போது பட்டணங்கள் வரையிலும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இவ்வழிபாட்டு முறை தற்போது இந்துக்களிடையே மாறிவரும் ஒரு புதுவழிபாட்டு முறையாகக் கருதப்பட்டுகின்றது. ஆகவே இக்கட்டுரை மலேசிய இந்துக்களிடையே மாறிவரும் சமயப்போக்கான "வீட்டு வளாக ஆலயங்கள்" பற்றிய ஒரு பார்வையை முன்வைக்கின்றது.

## மலேசிய இந்துக்களிடையே ஆலய வழிபாடு

மலேசிய இந்தியர்கள், 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டு காலக் கட்டங்களில் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்போது மலாயாவிற்கு தொழிலாளர்களாகக் குடியேறினர். இவ்வாறு கூலி வேலை செய்யும் தொழிலாளர்களாகப் புலம்பெற்றிருந்த இந்தியர்கள் அக்காலக் கட்டத்தில் தங்களின் பரம்பரை வழிவந்த சமய வழிபாட்டினை அவரவர் பக்தி மார்க்கத்திற்கேற்ப நம்பிக்கையோடு பின்பற்றி வந்தனர். அதுமட்டுமின்றி, தொடக்கக் காலக் கட்டத்தில் இந்தியாவில் தாங்கள் வாழ்ந்து வந்த கிராமப் பகுதியில் உள்ள ஆலயங்களின் பிடிமண்ணை எடுத்துவந்து மலாயாவில் தாங்கள் வாழத் தொடங்கிய தோட்டம் மற்றும் பட்டண புறங்களில் அம்மண்ணை அடித்தளமாகக் கொண்டு அவர்களுக்கென ஆலயங்களை நிறுவினர். இவ்வழியில் அமைந்த இறைவழிப்பாட்டுத் தலங்களே பின்னாளில் தோட்டப்புற மக்களுக்கு அடிப்படை சைவ ஆகம விதிமுறைப்படி அமைந்த ஆலயங்கள் உருவாவதற்கு வித்திட்டன.

மலேசிய இந்தியர்கள் வாழ்க்கை கிராமப் பின்னணியை அடித்தளமாகக் கொண்டு இருந்ததனால், அவர்கள் தங்களுடைய வழிபடுத் தெய்வங்களாக விநாயகர், முருகன் மற்றும் மாரியம்மனை வழிபட்டனர். இன்னும் சிலர் முனீஸ்வரர், முனியாண்டி, காளியம்மன் மற்றும் மதுரை வீரன் போன்ற காவல் தெய்வங்களையும் பரிவார தெய்வங்களையும் அவர்கள் வாழுகின்ற வீட்டுப்புரம், தோட்ட எல்லை, பணியிடம் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தேவைக்கேற்ப ஆங்காங்கே அமைத்துக்கொண்டு வழிபட்டனர். இக்காவல் பரிவார தெய்வங்கள் அவர்களது குலதெய்வங்களாகக் கருதப்பட்டன. அதே வேளையில் மேற்கூறிய தெய்வங்களான மாரியம்மன், முருகன், விநாயகர் மற்றும் சிவன் ஆலயங்களைத் தவிர்த்து பட்டணங்களிலும் இந்தியர்கள் தாங்கள் வசித்து வந்த இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே தங்களின் குலதெய்வங்க வழிபாடு செய்து வந்தது வழக்கத்தில் இருந்தது. அவர்கள் குடும்பமாகவோ அல்லது தனி மனிதராகவோ இவ்வாறான சிறு சிறு ஆலயங்களை நிறுவி அதைத் தகுந்த முறையில் பராமரித்தும் வந்தனர்.

அக்காலக்கட்டத்தில் குறிப்பாகத் தோட்டங்களில் வாழ்ந்த இந்தியர்கள் தாங்கள் பணிபுரியும் பணியிடங்களில் தங்களது பாதுகாப்பு நலன் கருதி முச்சந்தியிலும், மரங்களிலும், சாலை ஓரங்களிலும், காட்டுப் பகுதிகளிலும் உருவச்சிலைகள் அல்லாமல் பல்வேறு வழிபாட்டுச் சின்னங்களான திரிசூலம், வேல், வாள், செங்கல் போன்றவற்றை ஊன்றியும் சிகப்பு, மஞ்சள் நிறத்துணிகளை மரங்களில் சார்த்தியும் தம் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். இன்னும் ஒரு சிலர் சுதைசிலைகளையும், சுண்ணாம்பு சிலைகளையும்,

மரக்கட்டையால் செய்யப்பட்ட சிலைகளையும் மற்றும் களிமண்ணால் வடிக்கப்பட்ட சிற்பங்களையும் தங்களது வழிபாட்டுக்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு அன்றைய தோட்டப்புற உரிமையாளர்களாகவும் மேலாளர்களாகவும் விளங்கிய ஆங்கிலேயர்கள், தோட்டப்புறங்களில் வாழும் இந்தியர்கள் தாங்கள் வழிபடுவதற்கான தோட்ட ஆலயங்களையும் குலதெய்வ வழிபாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்குரிய சூழலையும் உருவாக்கித் தந்துள்ளனர். இச்சூழலைப் பயன்படுத்தி இந்தியர்கள் தங்களின் பாரம்பரிய வழிபாட்டினை(popular religion) எத்தடைகளும் இல்லாமல் மேற்கொண்டு வந்தனர். இவ்வழிபாடுகளில் காவல் பரிவாரத் தெய்வங்களுக்கு விலங்குகளைப் பலிகொடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அதோடு மது, சுருட்டு, கருவாடு, சமைத்த மாமிச உணவு போன்றவற்றைப் படைத்து பம்பை, உடுக்கை, உறுமி, மேளதாளம் முழங்க வழிபாட்டினை மேற்கொண்டனர்.

தோட்டப்புறங்களில் தமிழர்களுடன் சிறுபான்மைத் தெலுங்கர்களும் மலையாளிகளும் வசித்து வந்தனர். ஒரு சில தோட்டப்புறங்களில் தெலுங்கினத்தவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்துள்ளனர். இதுபோன்ற தோட்டங்களில், அவர்கள் தங்களது இஷ்ட தெய்வங்களான இராமர், ஆஞ்சனேயர் ஆலயங்களை நிறுவி தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டனர். அதே காலக்கட்டத்தில் பட்டணங்களில் வாழ்ந்தவர்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களில் ஆலயங்கள் எழுப்பி மாரியம்மன், முருகன், விநாயகர் போன்ற தங்கள் வழிபாட்டுக்குரிய தெய்வங்களை வழிபட்டனர். இவ்வாலயங்களிலும் காவல் பரிவாரத் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. குறிப்பாகச் செட்டியார்கள் தாங்கள் வாழ்ந்து வந்த நகர்ப்புறங்களில் அவர்களின் முதன்மைக் கடவுளான முருகப் பெருமானுக்கு சைவ ஆகம ஆலயங்கள் எழுப்பி வழிபட்டு வந்தனர். இவர்களைப் போன்றே இலங்கைத் தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த பட்டணப்புறங்களில் சிவன், முருகன் ஆலயங்களை எழுப்பி தங்கள் வழிபாட்டினை மேற்கொண்டு வந்தனர். மலேசிய நாட்டின் விடுதலைக்கு முன்பு, மலேசிய இந்தியர்களின் வழிபாட்டுமுறை பொதுவாகவே மேற்கூறப்பட்ட நிலையிலேயே அமைந்திருந்தது.

மலேசிய நாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகும் இவ்வழிபாட்டு முறை தொடர்ந்தது. காலவோட்டத்தில், தோட்டப்புறம் மற்றும் பட்டணப்புறங்களிலுள்ள ஆலயங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு புதுவடிவம் பெற்றன. இவற்றுள் பல ஆலயங்கள் சைவ ஆகம முறைக்கு ஏற்ப மறுசீரமைப்புச் செய்யப்பட்டு அவ்வாலயங்களில் சைவ ஆகம முறையிலான வழிபாடுகளும் பூசைமுறைகளும் மெல்ல மெல்ல மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாலயங்களில் சைவ ஆகமப் பயிற்சிப்பெற்ற பிராமணர், பிராமணர் அல்லாத குருமார்களும் பண்டாரங்களும் பணியில் அமர்த்தப் பட்டனர். காவல் தெய்வங்களுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் அவரவர் குடும்பப் பொருளாதாரத் தன்மைக்கேற்ப சிறு சிறு ஆலயங்கள் விருப்பம்போல் ஆங்காங்கே எழுப்பப்பட்டு வந்தன.

**1980**களில் , மலேசியாவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மக்களின் வாழ்க்கை முறையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. பட்டணப்புறங்களையொட்டி அமைந்திருந்த தோட்டங்கள் படிப்படியாக மேம்பாட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக பல தோட்டங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்படி வெளியேறியவர்களில் பலர் பட்டணம், பட்டணப்புறம் ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் குடியேறினர். ஒரு சிலர் புறம்போக்கு நிலங்களிலும் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்தனர். பட்டணப்புறங்களில் அந்தக்காலக்கட்டத்தில் தாமான் என்னும் பல்லின மக்கள் வாழும் குடியிருப்பு முறை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இன்று தீபகற்ப மலேசியா முழுமையும் இத்தகைய குடியிருப்பு முறையே பரவலாக உள்ளது.

அதே காலக்கட்டத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப பட்டணப்புறங்களும் விரிவாக்கம் கண்டன. இவ்வாறு அனைத்தும் உருமாற்றம் காணப்பட்டக் காலக்கட்டத்தில் மாநகரங்களை ஒட்டி அமைந்திருந்த தோட்டங்கள் பல பட்டணப்பகுதிகளாக உருமாற்றம் கண்டன. இத்தகையப் பகுதிகளில் வாழ்ந்த இந்துக்களின் வாழ்க்கையும் மேம்பட்டிருந்தது. இந்த மேம்பாடு அவர்களின் சமய நம்பிக்கைகளிலும் பிரதிபலித்தது. தோட்டப் புறங்களில் ஓரிடத்திலேயே ஒரே குடும்பமாக வாழ்ந்து பழக்கப்பட்ட இந்துக்கள், நகர்ப்புறங்களிலும் புறம் போக்கு நிலங்களிலும் வசிக்க நேரிட்டப் போது ஆலயங்கள் நிறுவி தங்கள் சமய வழிபாட்டினை மேற்கொண்டனர். எனவே இந்தியர்கள் பட்டணச் சூழலில் பல்வேறு இன மக்களோடு வாழ்வதற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளத் தொடங்கினர்.

மேலும் இவ்வாறான ஆலயங்கள் தொடர்ந்து பட்டணப்புற ஆலயங்களாக மாறியவுடன் அவை ஆகம விதிப்படி மறுசீரமைக்கப் பட்டு முறையான ஆகம பூசைகளும் வழிபாடுகளும் அங்கே மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு சமய வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்த காலக்கட்டத்தில் முறையாகப் பதிவு பெறாத, புறம்போக்கு அல்லது தனியார் நிலத்தில் கட்டப்பட்டதன் காரணமாக நகராண்மைக் கழகங்களின் அதிரடி நடவடிக்கையினால் சில ஆலயங்கள் சட்டத்திற்குப் புறம்பானவை என முத்திரைக் குத்தப்பட்டு

ஆலய உடைப்புக்கு ஆளாகின. இத்தகைய நடவடிக்கைகள் பரவலாகவே ஆங்காங்கு நடந்தேறின. இதன் விளைவாக 2000த்தாம் ஆண்டிற்குப் பிறகு ஆலயங்கள் உடைக்கப்படுவது இந்துக்களிடையே மிகப் பெரிய சர்ச்சைக்கு வித்திட்டது. இத்தகைய சூழல்கள் ஒருபுறம் நிலவிவந்தபோதும் நாடுதழுவிய நிலையில் சில ஆலயங்கள் முறையாகப் பதிவுபெற்றும் ஆகம முறைப்படி கட்டப்பட்டும் முறையாக நிறுவகிக்கப்பட்டும் வருகின்ற சூழலையும் காண முடிகின்றது.

## மலேசிய இந்துக்களிடையே இல்ல வழிபாடு

ஆலய வழிபாட்டினைத் தவிர்த்து, இந்துக்கள் அக்காலக் கட்டத்தில் இல்ல வழிபாட்டினையும் தங்களது வீடுகளில் கடைப்பிடித்து வந்தனர். தாங்கள் இருக்கும் இருப்பிடத்திலேயே, அல்லது தாங்கள் வாழ்கின்ற இல்லங்களிலேயே இறைவனுக்கான மேடை அல்லது கூடத்தை அமைத்து இறை வழிபாட்டினைச் செலுத்துவது வழக்கத்தில் இருந்த ஒன்றாகும். மலேசிய மண்ணில் குடியேறிய காலந்தொட்டு இந்துக்கள் ஆலய வழிபாடு செய்து வந்தாலும், இல்ல வழிபாடுகளையும் மறவாது மேற்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அப்போதைய சூழலில் இந்துக்கள் இல்ல வழிபாட்டினை வீட்டின் பல பகுதிகளில் செய்து வந்தனர். எடுத்துக் காட்டாக, வீட்டு மனை, வீட்டின் வரவேற்பறை, வீட்டின் முகப்புப் பகுதி ஆகிய பகுதிகளில் இல்ல வழிபாட்டினை மேற்கொண்டு வந்தனர். இன்னும் சிலர் தங்களது வீடுகளில் வழிபாட்டிற்கென்றே தனி அறையை ஒதுக்கி, தங்களின் வசதிக்கேற்ப சமய வழிபாட்டினைக் கடைப்பிடித்து வந்தனர்.

இத்தகைய வழிபாடுகளில் தெய்வத்தின் சின்னங்களாக இறைவனின் திருவுருவப் படத்தையும், இந்து சமயச் சின்னங்களான வேல், சூலம், திருவிளக்கு போன்றவற்றையும், சிறிய வடிவிலான தெய்வ உருவச் சிலைகளையோ வைத்து வழிபட்டு வந்தனர். தங்களின் நித்தியக் கடமையாக தங்கள் நெற்றியில் திருநீறு அணிந்து இறைவனுக்கு தினந்தோறும் விளக்கேற்றி, தூப தீப ஆராதனைச் செய்து வழிபட்டு வந்தனர். மேலும் பூக்களால் அர்ச்சித்து, படையலிட்டு தமக்குத் தெரிந்த பக்திப் பாடல்களைப் பாடுவதும் இந்த வழிபாட்டு முறையிலே அடங்கியிருந்தன.

இந்துக்களில் சிலர் தங்கள் வீட்டின் நுழைவாயிலுக்கு மேல் தெய்வத் திருவுருவப் படங்களை மாட்டி வைத்தும் வழிபட்டனர். ஒரு சிலர் தங்களது வீட்டு நுழைவாயிலின் பக்கத்தில் தங்களது குலதெய்வங்களான காவல் பரிவாரத் தெய்வங்களை அமர்த்தி, தங்கள் முன்னோர்கள் வழிபட்ட முறையில் வழிபட்டு வந்தனர். முக்கியப் பண்டிகைக் காலங்களிலும், செவ்வாய் வெள்ளிகளிலும் தங்கள் இல்லங்களில் சிறப்பு வழிபாடுகளை அவர்கள் மேற்கொண்டனர்.

மலேசிய நாட்டின் விடுதலைக்குப் பின்பு தோட்ட மக்களிடையே சமய சிந்தனைகள் முதிர்ச்சி காணத் தொடங்கின. இதற்கு அக்காலக்கட்டத்தில் இந்து சமய இயக்கங்கள் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளும், சமய தெளிவு பெற்ற அறிஞர்களின் சமய உரைகளும் அவற்றால் ஏற்பட்டத் தாக்கங்களும் முக்கியப் பங்காற்றின. இந்தத் தாக்கங்களின் காரணமாக இல்ல வழிபாட்டினை ஆகம முறையில் மேற்கொள்ள வேண்டிய தெளிவு மக்களுக்கு ஏற்பட்டது எனலாம். இதன் தொடர்ச்சியாக இல்ல வழிபாட்டு மேடைகளை அமைக்கின்ற போக்குகளும் மக்களிடையே தோன்றி பரவத் தொடங்கின. கால ஓட்டத்தில் இந்த வளர்ச்சி வீட்டில் வழிபாட்டுக்கென்று தனியறை அமைத்து ஆலயத்தில் வழிபடுவது போன்ற சூழலை உருவாக்கியிருக்கின்ற போக்கினையும் காணமுடிகின்றது. இத்தகைய வளர்ச்சிகள் மக்களிடையே ஆகம முறைப்படி வழிபாடுகள் மேற்கொள்ளும் போக்கு பரவலாகிவிட்டதைக் காட்டுகின்றன. மலேசிய இந்துக்களிடையே இத்தகைய சமய வழிபாட்டு மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதற்கு பல்லின சமயத்தவருடன் வாழ்ந்து வரும் சூழலில் தன் சமயத்தை நெறிபட மேற்கொள்ள வேண்டும் எனும் மக்களின் சிந்தனை வளர்ச்சியைக் காட்டுகின்றது. இந்துக்களிடையே படித்த சமய அறிவுடையோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளதையும் இவ்வளர்ச்சி காட்டுகின்றது.

மலேசிய இந்துக்களிடையே வீட்டு வளாக வழிபாடு

மலேசிய இந்துக்களிடையே அமைந்திருந்த சமய வழிபாட்டு முறைகளுள் ஒன்றான வீட்டு முகப்பில் இறையுருவங்களை அமைத்து வழிபடும் போக்கினை முன்னம் கண்டோம். இத்தகைய வழிபாட்டு முறைகளில் ஏற்பட்ட பல்வேறு பரிணாம வளர்ச்சிகளை இனிக் காண்போம்.

• இந்துக்கள் தோட்டப்புற பின்னணியில் இருந்தபோது தங்களது குலதெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதற்குரிய இடங்களாக தங்களின் பணியிடங்களையும் தோட்டத்தையொட்டியக் காட்டுப்புறங்களையும் தலங்களாகப் பயன்படுத்திக்கொண்டன. இதற்குக் காரணம் இவர்கள் தங்கள் வீடுகளில் இத்தகைய வழிபாட்டு இடங்களை அமைத்துக் கொள்ள தோட்ட நிருவாகம் இவர்களை அனுமதிக்கவில்லை. அந்நிலங்கள் தனியாருக்குச் சொந்தம் என்ற காரணத்தால் இந்த அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் தோட்டப்புற மக்கள் பட்டணங்களுக்கும் பட்டணப் புறங்களுக்கும் குடியேறிய பிறகு சுயமாக இல்லம் வாங்கத் தொடங்கினர். ஒரு சிலர் சொந்தமாக நிலம் வாங்கி அந்த நிலத்தில் வீடு கட்டிக் கொண்டனர். இத்தகையோர் தங்களின் விருப்பம்போல் தெய்வ, குலதெய்வங்களின் திருவுருவங்களை வடிவமைத்து, அவற்றுக்கு வீட்டு வளாகங்களில் சிறு ஆலயங்களையும் நிறுவி வழிபாடு செய்து வந்தனர். இத்தகைய ஆலயங்களே வீட்டு வளாக ஆலயங்கள் என அழைக்கப்படுகின்றன.

• இவ்வாறு நிறுவப்பட்ட இந்த வீட்டு வளாக ஆலயங்கள் குடும்ப உறுப்பினர்களால் மட்டுமே வழிபடும் ஆலயங்களாகவும் பொதுமக்கள் வந்து வழிபடும் ஆலயங்களாகவும் அமைந்தன.

• குடும்ப உறுப்பினர்களால் வழிபடப்படும் ஆலயங்களில் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்குபெறுவர். இத்தகைய ஆலயங்கள் அக்குடும்பத்தின் பொருளாதாரச் சூழலுக்கேற்பவும் ஈடுபாட்டிற் கேற்பவும் அதன் அமைப்புத் தோற்றத்தில் மாற்றங்களைப் பெற்று விளங்கின. குடும்பச்சூழலுக்கேற்ப இத்தகைய ஆலயங்களில் நித்திய வழிபாடுகளுக்கு அப்பால் சிறப்பு பூசைகளும் வருடாந்திர வழிபடுகளும் குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

• பொதுமக்கள் வந்து வழிபட்டுச் செல்லும் ஆலயங்களில் பல்வேறு நம்பிக்கைச் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சாமியாடுதல், குறிகேட்டல், குறைதீர்த்தல், பேயோட்டல் போன்ற நடவடிக்கைகள் மேற்கண்ட நடவடிக்கைகளுள் சிலவாகும். காலவோட்டத்தில் அவ்வாலயத்தில் ஆண்டு விழாவான திருவிழாக்களும் கொண்டாடப்பட்டுவந்துள்ளது. இந்த வளர்ச்சி படிப்படியாக ஆலய நிருவாகம் ஒன்றை அமைக்கும் நிலையையும் அவர்களிடையே உருவாக்கியிருக்கின்ற போக்கினை நம்மால் காணமுடிகின்றது. இப்படி அமைக்கப்பட்ட ஆலய நிருவாகம் குடும்ப நிருவாகமாகவோ பொதுநிருவாகமாகவோ இருந்து வந்துள்ளன. இவ்வாலயங்களுக்கு பூசாரிகளை அமர்த்தி நித்திய பூசைகளையும் சிறப்பு பூசைகளையும் ஆண்டு விழாக்களையும் நடத்தி வந்துள்ளனர்.

• இத்தகைய நிருவாகங்கள் மலேசிய இயக்கப் பதிவிலாக்காவில் பதிவு பெற்றவையாகவோ பதிவுபெறாதவை யாகவோ இருந்து இயங்கி வந்துள்ளன.

### வீட்டு வளாக ஆலயங்களால் ஏற்படும் சிக்கல்கள்

தோட்டப்புற மக்களாக இருந்து பட்டணப்புறம் மற்றும் பட்டண வாழ் மக்களாக உருமாற்றம் கண்ட இந்துக்களின் வாழ்க்கை முறையும் அவர்களுடைய வீட்டு வளாக ஆலயங்களின் உருவாக்கமும் பல்வேறு விளைவுகளை காலவோட்டத்தில் ஏற்படுத்தியுள்ளன. அவ்விளைவுகளான சிக்கல்களை இனி தொடர்ந்து ஆராய்வோம்.

• பரவலாகவே வீட்டு வளாக ஆலயங்கள் அக்கம் பக்கத்தில் வாழ்பவர்களுக்கும் பல்லின அண்டை அயலார்க்கும் பெரும் இடையூறாக அமைந்து அதுவே பல்வேறு சிக்கல்களுக்கும் வழிவகுத்துள்ளது. அந்த இடையூறுகள் பலநிலைகளில் அமைந்து விடுகின்றன.

• வீட்டு வளாகப் பூசைகளில் பயன்படுத்தப்படும் ஊதுவர்த்தி, சாம்பிராணி, சுருட்டு போன்ற பொருட்களிலிருந்து வெளிப்படும் மணம் அண்டை வீட்டாருக்கு குறிப்பாக இஸ்லாமிய சமயத்தவருக்கு சங்கடங்களை ஏற்படுத்துகின்றது.

• பூசைகளின்போது சொல்லப்படும் மந்திரங்களின் ஒலியும் சிக்கல்களுக்கு வழிவிடுகின்றன. குறிப்பாக அண்டை வீட்டார் இஸ்லாமியராகவோ கிருத்துவராகவோ இருக்கும்போது இந்நிலை உணரப்படுகின்றது.

• ஒரு சில வீட்டு வளாக ஆலயங்களில் சாமி ஆடுவதனாலும் குறி சொல்வதனாலும் எழுகின்ற ஓசை எல்லை கடந்துவிடுவதனால் அது அண்டை அயலாருக்குத் தொல்லையாகி விடுகின்றது.

• சிறப்புப் பூசைகளின்போதும் திருவிழாக்களின்போதும் எழுப்பப்படும் உடுக்கை, பம்பை, உறுமி, மேளம் போன்றவற்றின் அதிகப்படியான இரைச்சல் ஒலியும் அண்டை அயலாருக்குத் தொல்லையாக அமைந்து விடுகின்றன. இது பிற சமயத்தவருக்கு மட்டுமல்லாமல் இந்துக்களுக்கும் குறிப்பாக வயோதிகர்களுக்கும் குழந்தைகளுக்கும், படிக்கின்ற மாணவர்களுக்கும் தொல்லையாக அமைந்துவிடுகின்றன.

• பூசைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களான எலுமிச்சை, பூசணிக்காய், மலர்கள் போன்ற பொருட்கள் அண்டை வீட்டு எல்லை வரை சிதறிக் கிடப்பதனால் பொதுவாகவே எல்லா இனத்தவருக்கும் மதத்தவருக்கும் மனச்சங்கடத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

• சிறப்பு பூசை, திருவிழா, பண்டிகை என இவ்வீட்டு வளாக ஆலயங்களில் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது அதில் கலந்துகொள்ள வருபர்களின் வாகனங்கள் பொறுப்பற்ற நிலையில் பிறர் வீட்டு வாசலை மறித்துக் கொண்டும் போக்குவரத்துக்குத் தடையாகவும் நிறுத்தப்படுவதனால் சாலை நெரிசலை உண்டாக்கி அங்குள்ள குடியிருப்பாளர்களுக்கு சங்கடங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

• மேற்கண்டவாறு வீட்டு வளாக பூசைகளின்போது மேற்கொள்ளப்படும் சிக்கல் நிறைந்த நடவடிக்கைகளான போக்குவரத்து நெரிசலும் மக்கள் கூட்டமும் பக்கத்துக் குடியிருப்பாளர்களுக்கு தங்கள் வாழ்வியல் சுதந்திரத்தைப் பாதித்துவிட்டது போன்ற உணர்வை ஏற்படுத்தி விடுகின்றன.

• இந்துக்களின் இத்தகைய சமய நம்பிக்கைச் சார்ந்த நடவடிக்கைகளால் பிற இனத்தினரும் மதத்தினரும் இந்து சமயத்தைத் தாழ்வாகப் புரிந்துகொள்ளக்கூடிய சூழல்களும் அமைந்து விடுகின்றன.

• தொல்லைகள் எல்லை மீறும்போது பிற இனத்தவர்களும், மதத்தினரும் சில நேரங்களில் காவல்துறையிலோ மாநகரக் கழகங்களிலோ புகார் செய்வதுமுண்டு.

• மாநகராட்சி கழகங்கள் இப்படி சிக்கல்களை உண்டாக்குகின்ற வீட்டு வளாக ஆலயங்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்தல், எச்சரிக்கை கடிதம் அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மேலும் வீட்டு மனை திட்ட வரைவுக்குப் புறம்பாக அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த ஆலையங்களை அப்புறப்படுத்தும்படியும் அறிவுறுத்துகின்றனர்.

• மாநகராட்சி கழகங்களின் அறிவுறுத்தலை மீறி வீட்டு வளாக ஆலயங்கள் சிக்கல் நிறைந்த நடவடிக்கைகளைத் தொடரும்போதும், அது பற்றிய புகார்களைத் தொடர்ந்து பெறும்போதும் அவ்வாலயங்களை உடைக்கின்ற நடவடிக்கைகள் சட்டரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன.

முடிவுரை

மலேசிய இந்தியர்களில் பெரும்பான்மையாக இருக்கின்ற இந்துக்கள் தாங்கள் இந்நாட்டில் குடியேறிய காலந்தொட்டு தங்களின் மரபுவழி வந்த வழிபாட்டு முறைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். தொடக்கக் காலக்கட்டத்தில் பெரிய தடைகள் ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்டு வந்த இத்தகைய வழிபாடுகள் காலவோட்டத்தில் பல்வேறு சவால்களுக்கிடையே மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின. இதற்கு நாட்டின் பொருளாதார விரிவாக்கப் போக்கும், தோட்டங்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும் அதன்விளைவாக பல்வேறு இனங்களுடன் வாழுகின்ற புதிய வாழ்க்கைச் சூழலும் காரணமாக அமைந்துவிட்டன. பல்வேறு இனங்களுடன் நல்லிணக்கப் போக்கோடு இந்துக்கள் வாழ்ந்து வந்தாலும் தங்களின் சமய நம்பிக்கைச் சார்ந்த நடவடிக்கைகளை தற்கால வாழ்க்கைச் சூழலுக்குத் தக்கவாறு மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்துக்களின் வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகிக்கும் அவர்களின் சமய நம்பிக்கைகள் காலச்சூழலுக்குத் தக்கவாறு மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதனால் வீட்டு வளாக வழிபாடு குறித்த முறையான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

# மலேசியத் தமிழிசை தொகுப்புகளின் சிந்தனைப் போக்குகள்

முனைவர் பா.த.கிங்ஸ்டன்
விரிவுரையாளர்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல்
பல்கலைக்கழகம், மலேசியா

## முன்னுரை

இசை என்பது நாம் வாழ்வியலோடு இணைந்தது. பண்டைய கால மக்களின் மந்திரங்கள், சடங்குகளோடு வளர்ந்து உள்ளத்தோடும் உடலோடும் ஒன்றினைந்த ஒன்றாக பரிணமித்தது. சமூகச் சூழலில் மகிழ்ச்சி, துக்கம், ஆகியவற்றை வெளிப்படுத்தவும் இசை பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இசை மனதை வலிமை பெறச் செய்யும். மேலும், இசை வலிமை பெறும் இடமானது ஒலிப் பண்புகள் கொண்ட சொற்களைச் சேர்க்கும்போதுதான் என்று கூறலாம், இசையானது பொருளாதார நோக்கில் சந்தைப்படுத்தும்போது அது தேவைக்கேற்ப பல்வேறு வகைகளாக பிரிக்கப்படுகின்றன. தமிழர்கள் இசையின் முன்னோடிகளாக இருந்தனர். தமிழில் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழில் ஒரு தமிழை இசைக்காக பிரித்துள்ளனர். பழங்காலத் தமிழர்கள் நிலங்களை நான்கு வகையாகப் பிரித்தனர். அந்நான்கிற்கும் கருப்பொருள், உரியபொருள் வகுத்தது நம் மரபு.

நால்வகை நிலங்களுக்குமான நான்கு பெரும்பண்கள் உருவானது. பண்களே, காலப்போக்கில் ராகங்களாக வளர்ச்சியடைந்தன. பண்ணென்பது பாடலின் இசைவடிவம் அதை 'மெட்டு' என்றும்கூறலாம் நான்கு நிலத்திற்கும் உரிய பெரும்பண்ணை 'பாலை' என்று நாம் அழைக்கிறோம். இவ்வாறு பரிணமித்த இசை காலம் கடந்து நாடு கடந்து இன்றைய காலக்கட்டத்தில் எவ்வாறான மாற்றங்களைச் சந்தித்துள்ளது என்பதை அறியவும் வெளிநாட்டு வாழ் தமிழர்களின் இசை எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது என்பதனையும் குறிப்பாக மலேசியா வாழ் தமிழர்களின் இசை, தமிழர்களின் மரபை கொண்டுள்ளாத என்பதை அறியவும் முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மலேசியத் தமிழர்கள் பல்வேறு இசைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளனர். கால வளர்ச்சிக்கு ஏற்ப மேற்கத்திய இசையை

முழுவதமாக உள்வாங்கிய நிலையை நாம் கண்டுணரலாம். ராப் வகையை சேர்ந்த பாடல்களும் காணப்படுகின்றன. இவை முழுவதும் காதல், நட்பு, கருணை, அமைதி, கோபம், பக்தி போன்ற பல்வேறு கருப் பொருள்களைக் கொண்டு பாடப்படுகிறது. இத் தொகுப்புகளில் தமிழ்மொழி மட்டும் அல்லாது பிற மொழிக் கலப்புகளும் காணப்படுகின்றன. இது மலேசிய மக்கள் மத்தியில் குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் சிறந்த வரவேற்பு பெற்றுள்ளது எனலாம்.

**தாய்**

மலேசிய இளைஞர்களிடையே அதிகம் விரும்பபட்ட பாடல் 'எந்தன் அம்மா' வாகும். இது பாடலாசிரியர் மணி என்பவரால் இயற்றப்பட்டு மைக்கேல் ராவ் இசையில், கீதாஞ்சலி அவர்களின் வெளியீடாக வந்த பாடலாகும். அப் பாடல் வரிகளில்

> **தாங்கும் வேளையில் துக்கம் இன்றியே**
> **தோளில் ஆட்டி நீ தூக்கம் கொடுத்தாய்**

என்று அன்னையின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளனர்.

> **வேர் இன்றியே பூக்களும் பூக்குமா**
> **என் உயிர் உன்னால் தானே**

என்ற வரிகள் பாசத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது. ஒரு மரத்திற்கு வேராக இருப்பது அம்மா மட்டும் தான், பூக்கள் பூப்பது போல இம் மண்ணில் பல உயிர்களைக் கொண்டு வருகிறாள். தாய் ஒருவரால் தான் இந்த உலகில் உயிர்கள் உருவாகிறது என்பதை இப்பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகிறது. இதனை தான் பட்டிணத்தாரும் கூறுகிறார்.

> **வட்டடிலிலும் தொட்டிலிலும் மார் மேலும்**
> **தோள் மேலும்**
> **கட்டடிலிலும் வைத்தென்னைக் காதலித்து- முட்டச்**
> **சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்**

'அம்மா என்றாலே என் உசுரு' என்ற மற்றொரு பாடல் தாய் தன் குழந்தையை வளர்க்க படும் துன்பங்களை வெளிப்படுத்துவதைக் காணலாம். இப்பாடல் பேச்சு மொழி நடையில் அமைந்த பாடலாகும்.

> **தர மேல கால் பட்டால் கல் பதிந்து நோகும்னு**
> **இடுப்பில் தூக்கி நடந்து சென்றவளே**
> **தினம் மாடா ஒழைச்சி ஓடா தேஞ்சவளே**

இப்பாடல்கள் அனைத்தும் மென்மையான இசையுடன் தொடங்கும் பாடல்களாகும். தாய்மை என்பதே மென்மையான ஒன்றாகும். இதன்

உணர்வை வெளிக்காட்டா மென்மையான குரல்கள், மென்மையான இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### காதல் பாடல்கள்

காதல் என்பதே ஒரு மென்மையான உணர்வு. மலேசியப் பாடல்களில் காதல் உணர்வுப் பாடல்கள் அதிக அளவில் காணக்கிடைக்கின்றன. காதல் பாடல்கள் இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒன்று காதலில் வெற்றி மற்றொன்று தோல்வி. இதில் மிகவும் பிரபலமான பாடலாக காதல் தோல்வி பாடலான வான் மழையே பாடலில் இடம் பெற்ற பாடலைக் குறிப்பிடாலாம்.

மழையே வான் மழையே
என்னை விலகிச் செல்லாதே
மனமே பெண் மனமே
நீ மௌனம் கொள்ளாதே (விளையாட்டு பசங்க)

இப்பாடல் திலிப் வர்மன் மற்றும் சர்மிளா சிவகுரு ஆகியோர் சேர்ந்து பாடிய பாடலாகும். அதாவது இப்பாடலில் ஒரு பெண்ணை மழைக்கு உவமைப்படுத்தியுள்ளதைக் காணலாம். காதலி தன்னை விட்டு விலகி செல்ல வேண்டாம் எனவும், மௌனத்தைக் கலைத்து தன்னிடம் பேசும் படி கேட்டுக்கொள்கிறார் காதலர்.

### காதல் ஏக்கம்

தற்காலத்தில் மலேசியப் பாடல்கள் காதலை மையமாகவும், காதல் ஏக்கத்தை மையாமாகவும் கொண்டு பலப் பாடல்களை இயற்றுகின்றனர். விசுவமித்ரா ருமேதிஸ் அவர்களின் 'நெவர் எண்டிங் லவ்' என்ற இசைத் தொகுப்பில் ,

நீ வேறு நான் வேறு என்று
வேற் என்ற வார்த்தைகள் அன்று
நீ சொன்னா மறு கணமே
நான் உயிர் இழந்தேன்

காதலின் ஏக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். தற்காலக கவஞரகள நிகழ்காலத்தோடு மட்டும் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். சங்ககால காதல் பாடல் தனது மறு பிறப்பில் காதலனை அடைய முடியாதெனின் உயிர் வாழ்கிலேன் என்கிறாள் காதலி.

சாதல் அஞ்சேன் அஞ்சுவேல் சாவில்
பிறப்புப் பிறி தாகுவது ஆயின்
மறக்குவேன் கொல்லென் காதலன் (நற்றிணை )

என்ற சங்க பாடல் மூலம் காதலின் ஏக்கம் காலங்கள் கடந்தும் நிற்கிறது எனலாம். •

நட்பு

மொழி, இனம், மதம், நாடு என்று அனைவருக்கும் பொதுவானது நட்பு. நட்பு ஒருவருக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். நமது இன்பத் துன்பங்களை, நாம் பகிர்ந்துக்கொள்ளக் கூடிய இடம் நட்பாகும். ஆதலால், தான் வள்ளுவ பெருந்தகை நட்பைப்பற்றி கூறும் போது

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (திருக்குறள் 788)

துன்பம் வந்ததை அறிந்தவுடன் அக்கணமே அவன் அறியாமலும் தானே ஓடித் துன்பத்தை நீக்குவதுதான் நட்பாகும் என்கிறார். மலேசிய தமிழிசைத் தொகுப்பான "காவன்" தொகுதியில்

காவான் காவான் கஞ்சு ஊத்துவான்
என் கப்ப காவான் கூலு ஊத்துவான்

எனும் வரிகள் நட்பு எப்போதும் சிறந்த ஒன்று என்று கூறுகிறது. இதில் காவான் என்ற சொல் மலேயா மொழிச்சொல்லாகும், காவான் என்றால் நண்பன் என்று பொருள். இப்பாடல்களில் மண்ணின் மைந்தர்களாகிய நாம், எப்படி ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதனை உணர்த்தியுள்ளனர். மேலும், நாம் அனைவரும் நண்பர்களுடன் சந்தோஷமாகவும் ஒருவருக்கொருவர் அறுதல் கூறி வாழ வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

உன்னை பார்த்தனால நல்லவனா மாறல
உன்னை பார்த்தனால கெட்டவான ஆகல
(ஹவோக் பிரதர்ஸ்)

என்ற பாடல் வரிகள் சிறப்பான வரவேற்பைப் பெற்ற பாடலாகும். இப்பாடல் வரிகள் சங்கப் பாடலான "தீதும் நன்றும் பிறர் தர வாரா" எனும் வரியினை நினைவுக்கொள்ளும் வகையில் உள்ளது. நண்பனுக்காக உயிரைக் கூட கொடுக்கத் தயாராக இருக்கிறேன், உன் சிரிப்பு முகத்தை பார்க்க தவிக்கிறேன் நண்பனே எனும் பாடல் வரிகள், நண்பனுக்காக எதையும் செய்யும் ஒருவராக இருக்க வேண்டும் என்று பாடுகின்றனது.

கூட்டாளி கூட இருந்தா விண்ணைத் தொட
உற்சாகம் தானா வருதே
கூட்டாளி பக்கம் இருந்தா என் சட்டைப் பையில்
நோட்டாக நிறைந்திடுதே
நீ வேறு நான் வேறு என்று யார் சொன்னது
இங்கு நட்பு என்னும் தாய் ஒன்றுதான்
(சசி தே டோன், 2010)

என்ற பாடல் நட்பின் பெருமையை எடுத்து சொல்கிறது.

**சமயம்**

மலேசிய நாட்டில் சமயம் சார்ந்த பாடல்கள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றுள் தைப்பூச காலத்தில் வெளியிடப்படும் முருகப் பெருமானின் பக்திப்பாடல்கள் மக்களின் மத்தியில் அதிக வரவேற்பு பெற்றுள்ளது. மலேசிய திரைப்படமான "செந்தில் வேல் காக்க" திரைப்படத்தில் அமையப் பெற்ற

**உந்தன் சந்நிதி நான் தேடி வந்தேன் முருகனே**
**எந்தன் உயிரும் உருக பாடுவேன் உன்னை முருகனே**
(செந்தில் வேல் காக்க, மாறன்,2009)

எனும் பாடலைப் பாடியவர் மலேசியப் புகழ், பாடகர் திரு.திலிப் வர்மன் ஆவார். இது திரைப்படமாக வெளியிடப்பட்டாலும் இசை தொகுதியாக இன்றும் கிடைக்கப்படுகிறது.

**அம்மன் பாடல்கள்**

மலேசிய நாட்டில் முருகன் பாடல்கள் அதிகம் புகழ் பெற்றிருந்தாலும் அம்மன் மற்றும் அய்யப்பன் பாடல்களும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. அதில் "எந்தன் உயிர் நீ அம்மா " எனும்

**எந்தன் உயிரே நீ அம்மா எந்தன் துணையே நீ அம்மா**
**எந்தன் தாயும் நீ அம்மா எந்தன் சக்தியும் நீ அம்மா**
**தாயிற்குச் சமமாக ஒரு பக்தை அம்மனைக் காணும் பொருள்**

இப்பாடல் வரிகளில் அமைந்துள்ளது. அம்மன் துணையாகவும், சக்தியாகவும், வாழ்க்கைப் பாதையின் ஒளியாகவும் நிற்கின்றாள் என்பதனைக் காட்டி நிற்கிறது.

**முடிவரை**

மலேசியக் கலைஞர்களால் பாடப்படுகின்ற பாடல்கள் யாவும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இப் பாடல்கள் யாவும் சங்கப் பாடல் மரபுகளைக் கொண்டுள்ளது எனலாம். அகம் புறம் என்ற கூறுகளைத் தாண்டி இன்றைய வாழ்வியலோடு மிக நெருங்கியதாக உள்ளது. தற்கால வாழ்க்கையினைப் படம் பிடித்துக்காட்டுகிறது. இசைப்பாடல்களும், இசைஞர்களும், பாடலாசிரியர்களும் காலப்பெட்டகமாக கருதப்படு கிறார்கள். தனிமனித முனைப்புகள் மேலோங்க அவர்களது எதிர்பார்ப்புகள் இசையாக வெளிப்படும். சமுக தேவைகளையும் சமூகச் சிக்கல்களையும் திறம்பட வெளிப்படுத்தும் ஆற்றல் மலேசிய இசைத் தொகுப்பில் காணமுடிகிறது.

**துணை நூல்கள்**


1. திருக்குறள், சாரதா பதிப்பகம்,சென்னை.
2. கார்த்திகேசு சிவத்தம்பி , தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

# மலேசியப் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் இளஞ்செல்வனின் படைப்புகளை முன்வைத்து

இளங்குமரன் சிவநாதன்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்,
மலேசியா

மரபு எனும் ஆதிக்கத்தினால் பெண்கள் பலகாலமாக அடிமைப் படுத்தப்பட்டே வந்திருக்கின்றனர். ஆகையால், காலங்காலமாக பெண்களுக்கே உரித்தானது என வழங்கும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, அவர்களை ஆண்களுக்குக் கட்டுப்பட்டே வாழ வேண்டிய கட்டாய சூழலுக்கு, நம் சமுதாயம் ஆளாக்கியிருக்கின்றது.

ஆகையால்தான் இலக்கியங்களில் கூட பெண்களை அடிமைத் தலையில் ஆட்பட்டுள்ளதாகவே பெரும்பாலும் காட்டி வந்திருக்கின்றனர். ஆனால், எம். ஏ. இளஞ்செல்வன் இதனிலிருந்து மாறுபட்டு, பெண்ணியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதவும், முற்போக்குச் சிந்தனைகளைப் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தவும் பெரும்சிரத்தையோடு, தமது படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

ஆணாதிக்கப்போக்கை எதிர்த்துக் குரல் கொடுத்த மலேசிய எழுத்தாளர்கள் மத்தியில், எம். ஏ. இளஞ்செல்வன் மிகமுக்கியமானவ ராவார். பெண்கள், ஆண்களால் சொல்லாலும் செயலாலும் பலவாறாகக் கொடுமைப் படுத்தப்படுவதைத் தமது படைப்புகளில் வன்மையாகக் கண்டித்து எழுதியுள்ளார்.

பெண்ணியத்திற்காகக் குரல் கொடுத்துஎழுதிவரும் பல எழுத்தாளர்கள் மலேசியாவில் இருந்து வந்திருப்பினும், எம். ஏ. இளஞ்செல்வன் அவர்கள் எல்லாரிலிருந்தும் மாறுபட்டு விளங்கினார் என்றால்அது மிகையாகாது. இவரின் இந்தத் தனித்த போக்கைப் பறைசாற்றுவது இவரது அதிரடியான, ஆவேசமான கருத்துகள் தான். எழுத்தாளர்கள் பலரும் எழுதத் தயங்கும் மனித வாழ்க்கையின் நுண்ணிய பகுதிகளையும் திறம்பட விளக்கும் பாங்கு இவரிடத்தில் இருந்து வந்திருப்பதனை நாம் நன்கு அறிய முடிகின்றது.

பெண்கள் தொடர்ந்து ஆண்களுக்கு அடிமையானவர்களைப் போன்றதொரு வாழ்க்கையை வாழாது, அவர்கள் விழித்தெழ வேண்டும் என்ற வேட்கையில் பலமாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்துகளை இளஞ்செல்வன் தனது படைப்புகளில் காட்டி யிருப்பது குறிப்பிடத்தக்கது. சமூகரீதியில் பெண்களின்நிலை எவ்வாறு உள்ளது என்பது எம். ஏ. இளஞ்செல்வன் சிறுகதையைத் துணையாகக் கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**வேலையிடங்களில் காதல்வலை வீசப்படும் பெண்கள்**

பரபரப்பான உலகில் பெரும்பாலான பெண்கள் வேலை செய்பவர்களாகவே இருக்கின்றனர். பொருளாதார நிலையில் தங்களை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு பெண்கள் வேலைக்குச் செல்லுதல் அவசியமாகிறது. அவ்வாறு வேலைக்குச் செல்லும் பெண்கள் பலசமயங்களில் பல்வேறு பிரச்சனைகளுக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்படுபவர்களில் குறிப்பாக, திருமணமாகாத இளம்பெண்களே மிகவும் அதிகம்பணிபுரியும் இடங்களில் சகஆண்ஊழியர்களால் காதல்வலை வீசப்பட்டு, பெண்கள் அடையும் இன்னல்கள் பல. பல்வேறு சமயங்களில் இதனால் பிரச்சனையயே அதிகம் சந்திக்க நேரிடுகின்றது. அதிலும் காதல் வலைவீசி பெண்களைத் தங்கள் பிடியில் சிக்கவைக்க நினைக்கும் வக்கிரபுத்தி உள்ள ஆண்களில் பெரும்பாலோர் ஏற்கனவே திருமணம் ஆனவர்கள் என்பது மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் செய்தியாகும். இதனை ஆசிரியர், வானம் காணாத விமானங்கள் என்ற தனது கதையில்,

> "வீட்டில் மனைவி, பிள்ளைகள் இருக்கும்போது, ஆபீஸ்ல லவ் என்ன வேண்டிக்கிடக்குது? இந்த லவ்வ மனைவிஙிடம் காட்டியிருந்தா எவ்வளவு பூரிச்சுப் போயிருப்பா"

எனும் வரிகளில் உணர்த்தியிருக்கின்றார்.

மேலும், இவ்வாறு பெண்கள் அடையும் துன்பங்களை அவர்களது உயர் அதிகாரிகளிடம் சொல்வதற்கும் தடங்கல்கள் ஏற்படுகின்றன. பெரும்பாலான சமயங்களில் உயர் அதிகாரிகளிடம் சொல்லக்கூட முடியாத அளவிற்குச் சூழ்நிலைகள் அமைந்துவிடுகின்றன. இதனையும் ஆசிரியர்,

> "இதுபற்றி மானேஜரிடம் சொல்லிவைக்கலாம் என்றால் மானேஜர் வேற்று இனத்தவராக இருப்பதால் இவனுங் களுக்கு குடிக்கவும் பிள்ளை பெற்றுக்கொள்ளவும்தான் தெரியும் என்ற மற்ற இனத்தவர்களின் மதிப்பீடு சரிதான்

> என்கிற மாதிரியாகிவிடும் எனபயந்து பேசாம இருக்க வேண்டியவளாகி விடுகின்றாள்"

எனும்வரிகளின்வாயிலாகஉணர்த்தியிருக்கின்றார்.

**அதிகாரத்தால் அல்லலுக்குள்ளாகும் பெண்கள்**

பொதுவாக, பலவேளைகளில் பெண்களுக்கு, பணிபுரியும் இடங்களில் தொல்லைகள் ஏற்படுவதே அதிகாரத்தில் இருப்பவர்களால்தான் என்பது மறைக்கப்பட முடியாத உண்மையாகும். அதிகாரப் போர்வையில், பெண்களைத் தங்கள் விருப்புகள் ஆட்டிப்படைக்கும் பல உயர் அதிகாரிகளின் போக்குக் குறித்தும், மேலும், தங்களுக்குக் கீழே வேலைசெய்வதனால் தாங்கள் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் அவர்கள் பணிந்து போய்விடுவார்கள் என்ற தப்பான எண்ணங் கொண்டிருப்போர் குறித்தும் ஆசிரியர். மோகங்கள் எனும் தம் படைப்பில்,

> "புதிதாக ஒருத்தி ஈப்போ கிளையில் சேர்ந்திருக் கின்றாளாம். அவள் தன்னைச் சுற்றி ஒரு கனமான இரும்புத்திரையை அமைத்துக் கொண்டிருக்கின்றாளாம். அத்திரையை அகற்றிவிட, தான் செய்த பகீரதப் பிரயத்தனங்கள் பலிக்காமல் போய்விட்டதாம். அவள் தன்னைச் சீதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாளாம். இல்லாவிட்டால் தன் ஆபீஸில் தன்னிடம் கைநீட்டிச் சம்பளம் வாங்குபவள் தன்னையே உதாசினம் செய்துவிட முடியுமா என அவன் புலம்பினான்"

எனும் வரிகள் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

**அவதூறுகளுக்கு ஆளாகும் பெண்கள்**

வேலைக்குச் செல்லும் பெண்கள், பெரும்பாலான நேரத்தை வேலையிடங்களிலேயே கழிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவ்வேலை இடங்களில் பலரது அவதூறுகளுக்குப் பெண்கள் ஆளாகின்றனர் என்ற கருத்தினையும் ஆசிரியர் முன்வைத்திருக்கின்றார்.

இதில்குறிப்பாக, ஆண்கள் ஒருகுறிப்பிட்ட பெண்ணை அடைய பலவழிகளில் முயன்றும் முடியாது போகும்சமயத்தில், அப்பெண்குறித்து அவதூறான செய்திகளைப் பரப்பிவிடுகின்றனர் என்ற கருத்தினை வானம் காணாதவிமானங்கள் என்றகதையில்,

> "விஜயன் அலுவலகத்தில் நுழைந்தபோது, 'புதுசுதானே. அதான் பெண்ணோட பழைய ஆட்டமெல்லாம் தெரியாம கிறங்கிப்போயிருக்கிறாரு அய்யா'"

> "யூசட் யுவர்பிளடி மௌத். நான் ஏன் தற்கொலை செஞ்சிக்கணும்? கல்யாண மாகாமலேயே கண்டவனோட

ஒரு வீட்டில் தூங்கிறவளுங்க இல்ல தூக்கு மாட்டிக்கணும் அதுங்களே பத்தினி வேசம் போடும்போது ? கோபால் தன் மன அவசங்களை வார்த்தையாய் கொட்டினான்"

"இன்றைக்கு ஒருத்தன். அவன் வேலை மாறிப்போயிட்டா அடுத்துவர்றவன். அதனால தான் கலியாணம் பண்ணிக்காமலேயே கன்னி கழிச்சிகிறாளுங்க"

ஆகியவரிகளின் வாயிலாகவும், மேலும்,பெண்கள் குறித்து அவதூறுகள் பரப்புவதோடு மட்டும் நில்லாது அவர்களைக் கீழ்த்தரமாக எடைபோடும் ஒருசில ஆண்களின் செயலைக் காட்டுபவனவாக மோகங்கள் என்ற கதையில்,

"அழகான காரும், வாரியிறைக்கப் பணமும் இருந்தால் பெண்கள் பட்டாம்பூச்சிகளாய் பறந்து வருவார்கள்; விட்டில் பூச்சிகளாய் மோதுவார்கள்"

"பத்தினிகளா இருக்கிற பெண்களைவிட பத்தினிமாதிரி வேஷம் போடற பெண்கள்தான் அதிகம். சரியான சந்தர்ப்பத்தில் அவ அவளுடைய தேவையைப் புரிஞ்சிகிட்டு நிறைவேற்றிட்டா அப்படியே அர்ப்பணிச்சிடுவாளுங்க"

எனும் வரிகளில் புலப்படுத்தியுள்ளார்.

**சந்தர்ப்பவசத்தால் ஆண்களால் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள்**

ஆண் வர்க்கத்தினரால் பெண்கள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலையில், எவ்வளவுதான் கண்ணுங் கருத்துமாக, பாதுகாப்பாக நடந்து கொண்டாலும், சிலவேளைகளில் சந்தர்ப்பவசத்தால் பெண்கள் ஆண்களால் பாதிப்படைவதைத் தடுக்கவியலாது போகின்றது என்ற கருத்தினை ஆசிரியர் தமது படைப்புகளில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

முதலாவதாக, தற்காலிகங்கள் எனும் கதையில், பிரஜாவுரிமை இல்லாத நிலையில் தானும், குறிப்பாகத் தனது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, உதவி பெறும்பொருட்டு நாடி சென்ற ஒருவன், அவளது கற்பைச் சூறையாடிவிட்டுக் கைகழுவி விட்டுவிடுகின்றான். இதனை, அக்கதையில்,

"உங்களைத்தான் நம்பி இருக்கேன்". பார்வதி அவரது கண்களைப் பார்த்துக் கெஞ்சினாள். "அதுமுடியாது பார்வதி! வேணுமுன்னா இன்னைக்குப்போல அப்பப்ப வந்திட்டு அஞ்சோ பத்தோ... வாங்கிட்டுப்போ அதுக்குமேல என்னால எதையும் செய்யமுடியாது! ரெங்கையா வறண்ட நெஞ்சோடு தீர்க்கமாகச் சொல்லிவிட்டார்.".

என்ற வரிகளின் வாயிலாக இத்தகைய அவலநிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

## இளஞ்செல்வன் காட்டும் தீர்வுகள்

பெண்கள் தங்களது உரிமைகளை உணர்ந்து செயல்படுவது அவசியமானதாக இருக்கின்றது. பெரும்பாலான பெண்களுக்குத் தங்களின் உரிமைகள் தெரியாமலேயே இருப்பது வருந்தத்தக்க கூடிய ஒன்றாக இருக்கின்றது. சட்டப்படி தங்களுக்குச் சாதகமான பலசூழல்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்டிப்பாகப் பெண்கள் உணர்ந்து; தெளிந்து செயல்பட்டால் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை வெகுவாகக் களையலாம்.

உரிமைகளை அறிந்து செயல்படுவதோடு மட்டுமல்லாது, அத்தகைய உரிமைகள் மறுக்கப்படும்போது, வெறுமனே வாய்மூடி மௌனமாக இருந்துவிடாது, அதனை எதிர்த்துக் குரல்கொடுக்கவும் தயக்கம் காட்டக்கூடாது என இளஞ்செல்வன் குறிப்பிடுகின்றார்.

நம் தமிழ்ப் பெண்கள் வெறும் அடுப்பூதும் பெண்களாக மட்டும் இருந்துவிடாது, வெளிவுலகில் நம்பெண்கள் ஈடுபடாத துறைகளே இல்லை என்று கூறும் அளவுக்கு, எல்லாவற்றிலும் ஈடுபட்டு வெற்றிக்கொடி நாட்டவேண்டும். அப்போதுதான் பெண்களை அடிமையாகப் பார்க்கும் போக்கு மறைந்து, அவர்களுக்குச் சமஉரிமை கொடுக்கும் சூழல் ஏற்படும் எனவும் விவரிக்கின்றார் ஆசிரியர்.

ஆக மொத்தத்தில், இளஞ்செல்வன், மரபுவழி பெண்களின் வாழ்க்கை முறைக்கு எதிர்ப்பானவர் அல்ல. ஆனால், அவர்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது, பெண்கள் தங்களது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள குரலெழுப்ப வேண்டும் என்ற கருத்தைத் திட்டவட்டமாகக் காட்டியிருப்பதை உணரமுடிகின்றது. இருப்பினும், உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதாக எண்ணி தங்களது சுதந்திரத்தைக் கட்டுப்பாடின்றி அலட்சியமாகப் பிரயோகித்து, பின்னர் தவறான வழிகளில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் தனது படைப்புகளில் அவர் உணர்த்தி யிருக்கின்றார்.

# மலேசியத்
# தமிழ் மரபுக் கவிதை வரலாறு

முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி
ஈசாக்கு சாமுவேல்
சுல்தான் இட்ரிசு கல்வியியல்
பல்கலைக்கழகம், மலேசியா

## முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கரும்பு, காப்பி, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியத் தொழிலாளர்கள் மலேசிய நாட்டிற்குக் கொண்டுவரப் பட்டனர். இவ்வாறு கொண்டுவரப் பட்டவர்கள் தங்களோடு தங்கள் படைப்பாக்கத் திறன்களையும் கூடவே கொண்டு வந்தனர். இந்தத் திறன்களைக் கொண்டு இவர்களாலும் இவர்களின் வழித்தோன்றல்களாலும் படைக்கப்பட்ட இலக்கியமே மலேசியத் தமிழ் இலக்கியம். மலேசியத் தமிழ் இலக்கியம் 120 ஆண்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. மலேசியாவில் தோன்றிய முதல் இலக்கிய வகை மரபுக் கவிதையாகும்.

மலேசியத் தமிழ் மரபுக் கவிதை வரலாறு 1887 ஆம் ஆண்டு தொடங்குகிறது. முரசு நெடுமாறன் அவர்கள் மலேசிய மரபுக் கவிதை வரலாற்றை ஏழு காலக்கட்டங்களாகப் பிரித்துள்ளார். இவர் மலேசியாவில் மரபுக் கவிதைகள் வாய்மொழியாய் தோட்டப்புறங்களில் தோன்றிய நாட்டுப்புறப் பாடல்கள்; கிழமை, மாத, நாள் இதழ்களில் வெளிவந்த மரபுக் கவிதைகள்; நூல்கள்வழிப் பிறந்த மரபுக் கவிதைகள் என மூன்று முனைகளில் தோன்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இலக்கியக் குருசில் மா.ராமையா அவர்கள் மலேசியத் தமிழ் மரபுக் கவிதை வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பிரித்துள்ளார். கட்டுரை ஆய்வாளர் மலேசிய மரபுக் கவிதை வரலாற்றைப் பத்துக் காலக்கட்டங்களாகப் பிரித்து ஆய்வு செய்துள்ளார்.

## முதலாம் காலக்கட்டம் (1887-1899)

முதலாவது மலாயாத் தமிழ் மரபுக் கவிதை வி.நாராயணசாமி நாயகன் என்பவரால் இயற்றப்பட்ட 'இருந்தும் பயனென்ன?' என்ற கவிதையாகும். இம்மரபுக் கவிதை 1886இல் சென்னையில் வெளியிடப் பட்ட தத்துவபோதினி என்ற மாத இதழில் இடம்பெற்றுள்ளது. மேலும், முதலாவது மலாயாத் தமிழ் மரபுக் கவிதைத் தொகுப்பை ஆறுமுகப் பதிகம் என்ற தலைப்பில் வெங்கடாசலப் பிள்ளை என்பவர்

இயற்றியுள்ளார். இந்தக் கவிதைத் தொகுப்புத் தற்பொழுது கிடைக்கப் பெறவில்லை.இக்கவிதைத் தொகுப்புக் குறித்து செய்தி 6.5.1887இல் வெளி வந்த உலக நேசன் என்ற வார இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1887ஆம் ஆண்டு சதாசிவம் பண்டிதர் இயற்றிய வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல், சிங்கைநகர் அந்தாதி, சித்திரகவிகள் என்ற மரபுக் கவிதைகளை உள்ளடக்கியக் கவிதைத் தொகுப்பு நூல் கிடைக்கப்பெற்ற முதலாவது மலேசியத் தமிழ் மரபுக் கவிதைத் தொகுப்பு நூலாகக் கருதப்படுகின்றது. இந்த நான்கு மரபுக் கவிதைகளும் சமயம் சார்ந்த கவிதைகளாகும்.வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல் ஆகிய இரண்டு கவிதைகளும் காஞ்சி காமாட்சியின் சிறப்புகளை இயம்புகிறது.சிங்கைநகர் அந்தாதி, சித்திரகவிகள் ஆகிய இரண்டு மரபுக் கவிதைகளும் சிங்கப்பூர் முருகனின் சிறப்பைப் பாடுகின்றன.

இவற்றைத் தவிர்த்து, பதானந்த மாலை, மன்மதன் திவ்விய சரித்திர அதியுல்லாச சல்லாப லாவணி, அதிவிநோதக் குதிரைப் பந்தய லாவணி ஆகிய மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்களும் முதலாம் காலக்கட்டத்தில் வெளியாகியுள்ள மரபுக் கவிதை நூல்களாகும். இக்காலக்கட்டத்தில் நாளிதழ்களும் சஞ்சிகைகளும் மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன. மலாயாவின் முதலாவது நாளிதழ் 1875-ம் ஆண்டு சிங்கை வர்த்தமானி என்ற தலைப்பில் ஆசிரியர் சிகு மகதூம் சயாபு என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நாளிதழ் தமிழ் மரபுக் கவிதைகளை வெளியிட்டு தமிழ் மரபுக் கவிதை வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது. மேலும், தங்கை நேசன், சிங்கை நேசன், உலக நேசன், இந்து நேசன், பினாங்கு விஜய கேதனம், தேஜோபிமானி, பினாங்கு வர்த்தமானி ஆகிய சஞ்சிகைகளும் தமிழ் மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றிவுள்ளன. இக்காலகட்டத்தில், ஏழு தமிழ் மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### இரண்டாம் காலக்கட்டம் (1900-1929)

இக்காலக்கட்டத்தில் நான்கு தமிழ் மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.அனைத்து மரபுக் கவிதைத் தொகுப்புகளும் சமயம் சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. முதலாவதாக வெளியிடப்பட்ட சீராசதாகம் என்ற மரபுக் கவிதைத் தொகுப்பு நூல் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த கவிதை நூலாகும். இதைத் தவிர்த்து, முருகவேள் பஞ்சரத்தினப் பாமாலை, தண்ணீர்மலை சிவசண்முகநாதனின் பக்திரசக் கீர்த்தனை ஆகிய மரபுக்கவிதைத் தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இக்காலக்கட்டத்தில், பேரா வர்த்தமானி, பினாங்கு ஞானசூரியன், மகாயுத்த சமாச்சார பத்திரிக்கை, பாதுகாவலன், சத்தியவான், தமிழகம், தமிழ் நேசன் போன்ற சஞ்சிகைகளும் நாளிதழ்களும் மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளன.

### மூன்றாம் காலக்கட்டம் (1930-1941)

இக்காலக்கட்டத்தில் 22 தமிழ் மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒன்பது மரபுக் கவிதைத் தொகுப்புகள் சமயம் சார்ந்தவை. 1932ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மலாயா நாட்டில் வெள்ளத்தால் விளைந்த சேதம், பினாங்கு ஆயிர ஈத்தாம் வெள்ளச்சேதம் ஆகிய இரண்டு மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்களும் பினாங்கில் நடந்த வெள்ளச் சேதத்தை விவரிக்கும் மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்களாக அமைந்துள்ளன. 1929ஆம் ஆண்டு பெரியார் அவர்கள் மலாயாவிற்கு வருகைப் புரிந்து சீர்த்திருத்தக் கருத்துகளைப் பரப்பியதால் சீர்திருத்தக் கருத்துகள் அடங்கிய கரிகால பாசார் சிந்து, நாவரச ஆனந்தச் சீர்திருத்த கீத மலர், சமத்துவ கீத மஞ்சரி, பாரத சமதர்ம கீதம், மெய்ஞான உதய தீபம் போன்ற சீர்த்திருத்த மரபுக் கவிதை நூல்கள் வெளியாகியுள்ளன. 1933இல் இயற்றப்பட்ட வழிநடைச் சிந்து மற்றும் தற்காலச் சிந்து ஆகிய மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் மலாயாச் சூழலை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்களாகும். கீழ்க்காணும் மரபுக் கவிதை, மலேசியச் சூழலில் இயற்றப்பட்ட வழிநடைச் சிந்து கவிதைத் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள கவிதை வரிகளாகும்.

*அங்காடிக் கடைவிற்கும் ஆச்சிகளா -தங்கை*
*அண்ணன் மாரேசிறு தம்பிகளா -ஒரு*
*மங்கையைப் பார்த்தீர்களா? பார்த்தால்*
*இப்பாவிக் குரைப்பீர்களே!*
*அங்கமிக வாடுதய்யோ*
*எங்குச்சென்று தேடுவே னினியே!*
*சீன மலாய்க்கார நேயர்களா -பெற்ற*
*தாய்மக்களா செல்வ ஞோஞாக்களா -மேனி*
*ரெத்தச் சிவப்புடையாள்: கண்ணத்திலோர்*
*பச்சை மச்ச முடையாள்;*
*தேனே கண்ணால் காணீர்களா?*
*கண்டிருந்தால் விண்டிடுவீர் நீங்களே!*

மேலும், 1941இல் எழுதப்பட்ட 'பினாங்கு ஜெனரல் ஆஸ்பித்திரியில் வீரையா செய்த பரிதாப கொலைச் சிந்து' எனும் மரபுக் கவிதைத் தொகுப்பு நூல் வீரையாவின் கொலைக் குறித்தச் செய்திகளை விவரிக்கின்றது.

இம்மூன்று காலக்கட்டத்தில் மலாயாத் தமிழர்களில் அதிகமானோர் தோட்டப்புறங்களில் வாழ்ந்திருந்தாலும் எந்த மரபுக் கவிதைகளும் தோட்டப்புறத் தமிழர்களைப் பற்றி பேசப்படவில்லை. இதற்கு காரணம் தோட்டப்புறத்தில் வாழ்ந்தவர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாக வாழ்ந்தனர். பட்டணப்புறத்தில் வாழ்ந்தவர்களே

கவிதைகளை எழுதினர். 1930களில் ரப்பர் விலை வீழ்ச்சி கண்டதால் தமிழர்கள் தாயகம் திரும்பினர். அவ்வேலையில் தி.ஆர். சுப்பரமணியம் என்பவர் 'போய்வாறேன் ரப்பர் மரமே போய்வாறேன்' எனும் மரபுக் கவிதையைப் பாடியுள்ளார்.

### நான்காம் காலக்கட்டம் (1942-1945)

இக்காலக்கட்டம் ஜப்பானியர் ஆட்சி காலமாகும். *நிப்பானியரின் வெற்றிக் கீர்த்தனைகள், மாட்சிமை தங்கிய நிப்பானியர் மலாயாவில் யுத்தம் புரிந்து ஜெயம் அடைந்த வெற்றிமாலை, நிப்பானியர் ஜெய சிந்து* ஆகிய மூன்று மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் 1942இல் வெளியிடப்பட்டுள்ளன. இம்மூன்று மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்களும் ஜப்பானியரின் வெற்றியையும் மேன்மையையும் புகழ்ந்து பாடும் கவிதைகளாக இயற்றப்பட்டுள்ளன. இக்காலக் கட்டத்தில், யுவபாரதம், சந்திரோதையம், பேனா முனை, இடி முழக்கம் ஆகிய சஞ்சிகைகள் மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன. 1943ஆம் ஆண்டில் கவிதா மண்டலம் என்ற இயக்கம் தொடங்கப்பெற்று தமிழ் மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பெறும் பங்காற்றியுள்ளது.இவ்வியக்கம், மலாயாத் தமிழ் எழுத்தாளர்களை ஒரு குடையின் கீழ்க் கொண்டுவருவதற்குத் தொடங்கப்பட்ட இயக்கமாகும்.

### ஐந்தாம் காலக்கட்டம் (1946-1956)

இக்காலக்கட்டத்தில் ஆங்கிலேயர்கள் மீண்டும் மலாயாவிற்குத் திரும்பினர். மலாயா தமிழர்கள் மலாயாவைத் தங்களது சொந்த தாய்நாடாக கருதத் தொடங்கினர்.இக்காலக்கட்டத்தில் ஒன்பது மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன.அனைத்து மரபுக் கவிதைத் தொகுப்புகளும் சமயம் சார்ந்த கவிதைகளாகவே இயற்றப்பட்டுள்ளன. இக்காலக்கட்டத்தில் தமிழ் நேசன், தமிழ் முரசு போன்ற நாளிதழ்களும் முன்னணி நவயுகம், தமிழ்ப் பூஞ்சோலை, முயற்சி, நண்பன், தமிழ்ச் சுடர், கப்பலோட்டி, தினமணி போன்ற சஞ்சிகைகளும் மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளன.

இக்காலக்கட்டத்தில், மலாயாவில் பிறந்து வளர்ந்த இளைஞர்கள் கயிதை இயற்றத் தொடங்கினர். 1946இல் தமிழ் நேசன் நாளிதழ் நேசன் சிறுவர் அரங்கம் என்ற பகுதியைத் தொடங்கியது.இதில் பள்ளி மாணவர்களின் கவிதைகள் இடம்பெற்றன. இவ்வரங்கம் எம். ஏ. இளஞ்செல்வன், நா. மகேஸ்வரி, பி.சந்திரகாந்தம் போன்ற கவிஞர்களை உருவாக்கி கொடுத்துள்ளது. 1950இல், தமிழ் நேசன் நாளிதழ் கதை வகுப்பைத் தொடங்கியது. இவ்வகுப்பில் மரபுக் கவிதை எழுதும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

1951ஆம் ஆண்டு தமிழ் முரசு நாளிதழ் மரபுக் கவிதை எழுதும் போட்டிக்கு ஏற்பாடு செய்தது. இப்போட்டியில் அநேக கவிஞர்கள் பங்குபெற்றனர். 1952ஆம் ஆண்டு தமிழ் முரசு நாளிதழ் தமிழ் முரசு

எழுத்தாளர் பேரவையைத் தொடங்கிற்று. இப்பேரவையில் 200 எழுத்தாளர்கள் உறுப்பினராக பதிந்து கொண்டனர். ஒவ்வொரு உறுப்பினரும் வாரத்திற்கு ஒரு மரபுக் கவிதை எழுத வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இப்பேரவை தரமிக்க கவிஞர்களை உருவாக்கியது. 1952ஆம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் தமிழவேள், கோ.சாரங்கபாணி தமிழர் திருநாளை நடத்தினார். இத்திருநாளில் மரபுக் கவிதை இயற்றும் போட்டிகளும் நடைப்பெற்றன. இப்போட்டிகள் வழியும் தரமிக்க கவிஞர்கள் உருவாக்கப்பட்டனர்.

1953ஆம் ஆண்டு கோ.சாரங்கபாணி, மாணவர் மணிமன்றம் என்ற சஞ்சிகையை வெளியிட்டார். இச்சஞ்சிகை தமிழ் முரசு நாளிதழ் வழியாக இலவசமாக வழங்கப்பட்டது. இளங்கலைஞர்கள் தங்கள் மரபுக் கவிதைகளை இச்சஞ்சிகைகளில் வெளியீட்டு கவிதை எழுதும் திறனை வளர்த்துக்கொண்டனர். இச்சஞ்சிகை மைத்தீன் சுல்தான், பாதாசன், காரைக்கிழார் போன்ற கவிஞர்களை உருவாக்கியுள்ளது. 1950 முதல் 1956ஆம் ஆண்டு வரை மலாக்கா மாநிலத்தில் தமிழ்ப்பண்ணை எனும் அமைப்பு மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பெறும் பங்காற்றியுள்ளது. 1955ஆம் ஆண்டு தமிழ் நேசன் நாளிதழின் ஆசிரியர் கு.அழகரிசாமி என்பவர் இலக்கிய வட்டம் எனும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பின் வழி, ஒவ்வொரு வாரமும் கவிதை திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்வழியு மலேசிய மரபுக் கவிதை வளர்ச்சி கண்டது. 1955ஆம் ஆண்டு, கோலாலம்பூர் கலை மன்றம் தமிழ் எழுத்தாளர் மாநாட்டை ஏற்று நடத்தியது. இம்மாநாடு மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அமைப்பதற்கு அடிக்கோல் நாட்டியது.

### ஆறாம் காலக்கட்டம் (1957-1969)

இக்காலக்கட்டத்தில் மாலாயா விடுதலை அடைந்தது. மலாயா தமிழர்கள் மலாயாவைத் தம் சொந்த நாடாக கருதத் தொடங்கினர். 51 மரபுக் கவிதைத் தொகுப்புகள் இக்காலக்கட்டத்தில் வெளிவந்துள்ளன. இவற்றில், எட்டு மரபுக் கவிதைத் தொகுப்புகள் மட்டுமே சமயம் சார்ந்தக் கவிதைகளாக அமைந்துள்ளன. பெரும்பாலான மரபுக் கவிதைத் தொகுப்புகள் சமூகச் செய்திகளைப் பாடுப்பொருளாகக் கொண்டுள்ளன.

இக்காலக்கட்டத்திலும், நாளிதழ்களும் சஞ்சிகைகளும் மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன. தமிழ் முரசு நாளிதழ் ஒவ்வொரு வாரமும் ஒரு பக்கத்தை மரபுக் கவிதை வெளியிடுவதற்கு ஒதுக்கியுள்ளது. இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு கவிஞர்கள் தங்கள் கவிதைகளை நாளிதழ்களில் வெளியிட்டு வந்துள்ளனர். தமிழ் முரசு நாளிதழும் தமிழ் நேசன் நாளிதழும் மரபுக் கவிதை எழுதும் போட்டிகளை அவ்வப்போது எடுத்து நடத்தியுள்ளனர். இக்காலக்

கட்டத்தில் தமிழ் மலர், மலைநாடு ஆகிய இரண்டு நாளிதழ்கள் தோற்றம் கண்டன. இவ்விரு நாளிதழ்களும் ஒவ்வொரு ஞாயிறு பதிப்பில் மரபுக் கவிதைகளை வெளியீட்டு மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளன. சங்கமணி, மாதவி, பொன்னி, கூட்டுறவு, தமிழ்க் குயில், முத்தமிழ் போன்ற மாத சஞ்சிகைகளும் மரபுக் கவிதைகளை வெளியிட்டு மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளன. இக்காலக் கட்டத்தில் மலாயா வானொலி தமிழ்ப் பகுதி கவியரங்குகளை ஏற்பாடு செய்து மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளது. 1959இல் மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தோற்றம் கண்டது. இச்சங்கம் மரபுக் கவிதை எழுதும் போட்டிகளை நடத்தி தங்கப் பதக்கங்களை வழங்கி மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது.

1960இல் வட மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கம் தோற்றம் கண்டது. இச்சங்கமும் வட பகுதியில் வாழும் கவிஞர்களின் மரபுக் கவிதை எழுதும் திறனை வளப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்துள்ளது. 1957இல் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வில் துறை உருவாக்கப்பட்டது. இவ்வாய்வியல் துறை மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது. 1966ஆம் ஆண்டு தனிநாயக அடிகளார் முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் கூட்டினார்கள். இம்மாநாட்டில் எம்.சுப்பரமனியம் என்பவர் 'மலேசியத் தமிழ் மரபுக் கவிதை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வாசித்தார். இக்கட்டுரை உலகத் தமிழ் அறிஞர்கள் மத்தியில் மலேசிய மரபுக் கவிதையின் மாண்பை உயர்த்தியது. இக்காலக்கட்டத்தில் பினாங்கு தீவில் இயங்கி வந்த செந்தமிழ்க் கலா நிலையம் மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது. இந்நிலையத்தைத் தோற்றுவித்த சுவாமி இராமதாஸ் அவர்கள் யாப்பிலக்கண வகுப்புகளை இலவசமாக நடத்தி வந்துள்ளார்.

### ஏழாம் காலக்கட்டம் (1970-1979)

இக்காலக்கட்டத்தில் 65 மரபுக் கவிதைத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 16 கவிதைத் தொகுப்புகள் சமயம் சார்ந்தவை. இக்காலக்கட்டத்தில் கலாச்சாரம், உதயம், வானம்பாடி போன்ற சஞ்சிகைகள் மரபுக் கவிதைகளை வெளியிட்டு மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றின. மேலும், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்பது முறை கவியரங்குகளை நடத்தி அக்கவியரங்குகளில் படைக்கப்பட்டக் கவிதைகளைக் கவியரங்கக் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுப்பு நூலில் வெளியிட்டுள்ளனர். தமிழ் நேசன் நாளிதழ் ஒவ்வொரு மாதமும் சிறந்த மரபுக் கவிதைக்குத் தங்கப் பதக்கம் வழங்கி சிறப்புச் செய்துள்ளது. இக்காலக்கட்டத்தில் கெடா, பேரா, சிலாங்கூர், நெகரி செம்பிலான், ஜொகூர் ஆகிய மாநிலங்களில் மாநில எழுத்தாளர் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இச்சங்கங்களும் மரபுக் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன.

### எட்டாம் காலக்கட்டம் (1980-1989)

இக்காலக்கட்டத்தில் 75 மரபுக் கவிதைத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 14 மரபுக் கவிதைத் தொகுப்புகள் சமயம் சார்ந்தவை.இக்காலக்கட்டத்தில் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் மலேசிய இந்தியன் காங்கரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மரபுக் கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவிற்கு ஆயிரக்கணக்கான வெள்ளி வழங்கி தொடங்கி வைத்தார். இதன் காரணமாக, அனேக கவிஞர்கள் தங்களுடைய மரபுக் கவிதைகளைத் தொகுப்பாக வெளியிட்டனர். இக்காலக் கட்டத்தில், தினமணி, சமுதாயம், நம் குரல், தூதன், மயில் போன்ற சஞ்சிகைகள மரபுக் கவிதைகளைத் தங்கள் சஞ்சிகைகளில் வெளியிட்டுள்ளனர். மேலும், 1982ஆம் ஆண்டில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் கவிஞர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தது.1988ஆம் ஆண்டு மலாயாப் பல்கலைக்கழகம் மரபுக் கவிதைக் கருத்தரங்கை ஏற்று நடத்தியது.இக்கருத்தரங்கில் 'மலேசியத் தமிழ் மரபுக் கவிதை வரலாறு', 'மலேசிய மரபுக் கவிதை' ஆகிய இரண்டு கட்டுரைகள் படைக்கப்பட்டன. இக்கருத்தரங்கு மலேசியத் தமிழ் மரபுக் கவிதை வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது.

### ஒன்பதாம் காலக்கட்டம் (1990-1999)

இக்காலக்கட்டதில் 68 மரபுக் கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஏழு மரபுக் கவிதைத் தொகுப்புகளே சமயம் சார்ந்தவை.மேலும், அத்திப்பூ, அணையா விளக்கு, புது வெள்ளம், புல்லாங்குழல், உடைந்த வீணை, மாருதி ஆகிய ஆறு காப்பியங்கள் இயற்றப்பெற்றுள்ளன.1994ஆம் ஆண்டு தொடங்கி மலேசியப் பாரதிதாசன் மன்றம் ஒவ்வொரு ஆண்டும் மரபுக் கவிதை எழுதும் போட்டியை நடத்தி வருகின்றது. சிறந்தக் கவிஞர்களுக்கு ஆயிரம் வெள்ளி பரிசு வழங்கி சிறப்புச் செய்துள்ளது. இது போன்ற போட்டிகளும் மலேசிய மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளன.

### பத்தாம் காலக்கட்டம் (2000 - 2013)

2000ஆம் ஆண்டில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மரபுக் கவிதை மாநாட்டைக் கோலாலம்பூரில் நடத்தியது. இம்மாநாட்டில் 'விரல்பட்டடக் கவிதைகள்', 'மலேசியத் தமிழ் கவிதைகளில் மலேசியத் தமிழ் மணம்', ' மலேசியத் தமிழ் கவிதை இலக்கியம்' ஆகிய மூன்று கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இவை மலேசிய மரபுக் கவிதையின் மாண்பை உலகிற்கு எடுத்துரைக்க வல்லனவாக அமைந்துள்ளன. இக்காலக்கட்டத்தில் மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கங்களும் மரபுக் கவிதை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளன.

## முடிவுரை

மலேசியத் தமிழ் மரபுக் கவிதைகள் தமிழ்நாட்டு மரபுக் கவிதைகளுக்கு ஈடாக படைக்கப்பட்டுள்ளன. மலேசியத் தமிழ் மரபுக் கவிதைகள் 1887ஆம் ஆண்டுத் தொடங்கி இந்நாள்வரை பல்வேறு வளர்ச்சியைப் பெற்று திகழ்கின்றன. மலேசியாவில் இதுவரை ஏறக்குறைய 500 மரபுக் கவிதைத் தொகுப்புகள் வெளியாகியுள்ளன. 1965ஆம் ஆண்டு வரை சிங்கப்பூரில் படைக்கப்பட்ட மரபுக் கவிதைகளும் மலேசிய மரபுக் கவிதைகளாகவே கருதப்படுகின்றன.

### துணை நூல்கள்

முரசு நெடுமாறான். (2007). மலேசியத் தமிழ் மரபுக் கவிதைகள், தமிழ்ச் செம்மொழிச் சிறப்பு மலர், பினாங்கு: உங்கள் குரல்.

__________ (2007). மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். கிள்ளான்: அருள்மதியம் பதிப்பகம்.

__________ (2007). மலேசியத் தமிழரும் தமிழும், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சபாபதி, வி. (2001). கருத்தரங்கக் கட்டுரைகள், மதுரை: மீனாச்சி புத்தக நிலையம்.

__________(1999). மலேசியத் தமிழ்க் கவிதை வளம், சென்னை: மாணிக்க வாசகர் பதிப்பகம்.

# மலேசியச் சூழலில் சிறுபான்மை மக்களும் மொழித் தற்காத்தலும்

செல்வசோதி இராமலிங்கம்
மலேசியா

இன்றைய அறிவியல் உலகில் அறிவியலாளர்கள், தொடர் முயற்சியாலும் தீவிர ஆராய்ச்சியாலும் பல கண்டுபிடிப்புகளை உருவாக்கினர்; உருவாக்கி வருகின்றனர்; இனியும் உருவாக்குவர். இதைப் போன்றே ஒரு மொழியும் கண்டுபிடிக்கப்படுகின்றது. ஆனால் இந்த முயற்சியானது ஒரு தனிமனிதனின் முயற்சியோ ஒரு சிறு குழுவின் முயற்சியோ அல்ல ஒட்டுமொத்த ஒரு சமூகத்தில் பன்னெடுங்காலமாக பயன்படுத்தப்பட்டு வழக்கு மொழியாக இருந்து, எழுத்துருவம் பெற்று, இலக்கியங்கள் பல வடித்து இதனூடே இலக்கணமும் அமைந்து சீர்மிகு மொழியாக உருவாகுவது அந்தந்த மொழிக்கும் அதனைச் சார்ந்தவர் களுக்கும் பெருமையைத் தரவல்லது என்றால் அது மிகையாகாது.

மொழி ஒருவருடைய சிந்தனை, கருத்து, உணர்வு, எண்ணங்கள் ஆகியவற்றின் வெளிப்பாடு மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் மனிதனின் சிந்தனையுடன் நெருங்கிய தொடர்பு உண்டு என்று மொழி அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர் (Chomsky, 1993). ஒரு மனிதனிடத்தில் மொழித்திறன் இல்லையெல் அவன் உடற்பேறு குறைந்தவனாகக் கருதப்படுகின்றான். அதாவது ஒரு மனிதனுக்கு ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி எவ்வாறு இன்றியமையாத உறுப்புகளாகக் கருதப்படுகின்றதோ அவ்வாறே மொழித்திறனும் ஒரு உறுப்பாகவே கருதப்படுகிறது. இந்த மொழித்திறன் இல்லையெனில் பிறதிறன் எவற்றையும் பெருவது மிகவும் கடினம்; அறிவு வளர்ச்சி பெருவதும் இயலாத காரியம். இதனை வலியுறுத்தும் கூற்றினை நம் முன்னோர்கள் கூற்றுவழி அறியலாம். அதாவது,

'எண்ணெழுத்திகழேல்' - ஆத்திச்சூடி

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' - கொன்றை வேந்தன்

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு' (குறள்-392).

மேற்காணும் கூற்றுகள் யாவும் மொழியின் முக்கியத்துவத்தை நம் முன்னோர்கள் எவ்வாறு வலியுறுத்தி வந்தனர் என்பதைப்

பறைசாற்றுகின்றது. இவ்வாறான சிந்தனை இன்றைய நூற்றாண்டில் மிகவும் சாதாரண விடயமே. ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது வியப்பைத் தரவல்லது. இன்றைய அறிவியலாளர்கள் சீரிய ஆராய்ச்சிகள்வழி கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்த செய்திகள் நம்முன்னோர்கள் வலியுறுத்தியதும் அறிவுறுத்தியதும் ஒருபுறம் இருக்க, இன்றைய சூழலில் ஒற்றை மொழிச் சூழல் கடந்து நின்று, இரு மொழி, மூன்று மொழி, நான்கு மொழிகள் என்று பரந்து விரிந்து செல்வதை நாம் கண்கூடாகக் காண இயலுகின்றது. அதாவது நம் மலேசிய நாட்டுச் சூழலில் ஒரு குழந்தை 10 வயதிற்குள்ளாகவே தாய்மொழி, தேசியமொழியான மலாய்மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றைக் கற்கின்றது. இப்பொழுது, மலாய்ப் பள்ளிகளில் நம்மின மாணவர்களில் சிலர் சீனமொழியைக்கூட கற்கின்ற சூழல் ஏற்படுகின்றது. அதாவது ஒருவரின் மொழி ஆளுமை மொழி கடந்து, இனம்கடந்து, சமயம் கடந்து, பண்பாடு கடந்து சென்றுகொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் நாம் நமது தாய்மொழியான தமிழ்மொழியை எவ்வாறு நடைமுறையில் பயன்படுத்துகிறோம் என்பது சற்று சிந்திக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

மொழியியலாளர்கள் பார்வையில், ஒரு மொழி இன்னொரு மொழியைவிட சிறந்தது என்ற வாதங்களுக்கு எல்லாம் இடமளிப்பதில்லை. அனைத்து மொழிகளுமே அவற்றிற்கென்று சிறப்பியல்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இருப்பினும் நமது தாய்மொழியான தமிழ் மொழி தனக்கென தனியொரு பாணியில் அதற்கெனச் சிறப்பு பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டிருப்பதை நாம் காண இயலுகின்றது. உலகில் மொத்தம் 7105 மொழிகள் இருக்கின்றன, அதில் இந்தியாவில் மட்டும் 400-க்கும் மேற்பட்ட மொழிகள் இருக்கின்றன. உலக மொழிகளில் எழுத்து வடிவம் கொண்ட மொழிகள் மட்டும் மூவாயிரத்திற்கும் அதிகமானவை. மலேசியாவில் மட்டும் மொத்தம் 146 மொழிகள் பயன்பாட்டில் இருக்கின்றன. நம் நாட்டில் தமிழ் மொழியின் நிலை அரசியலமைப்புச் சட்டத்தில் கல்வி சட்டத்தின் கீழ் அதிகாரப்பூர்வ மொழியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. (1996, Education Act, No. 550, Articles 2 and 18). ஆரம்ப பள்ளியிலும் இடைநிலைப்பள்ளிகளிலும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. தேசிய மாதிரி ஆரம்பத் தமிழ்ப்பள்ளிகளில் போதனா மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது.

உலக அரங்கில் 682 மொழிகள் அரசு மொழியாக விளங்குகிறது. வளர்ந்துவரும் மொழிகள் 1534. தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும்

மொழிகள் 2502. அபாயத்தில் உள்ள மொழிகள் 1481. அழிந்து கொண்டு வரும் மொழிகள் 906. எது எப்படி இருப்பினும் உலக மொழிகளில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மொழிகள் இன்று வழக்கில் இல்லை. ஆனால் தொன்மச் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழி இன்றும் அறுபதற்கும் மேற்பட்ட நாடுகளில்; அவற்றில் பெரும்பாலான நாடுகளில் (இந்தியா, இலங்கை தவிர்த்து) புலம்பெயர்ந்த சிறுபான்மை மக்களால் பேசப்பட்டு வருகின்றது (Ethnologue, 2011). அதாவது, உலக அளவில் மொத்தம் 68 மில்லியன் தமிழர்கள் வாழ்கிறார்கள். அதில் மலேசியாவில் மட்டும் 3.5 மில்லியன் தமிழர்கள் வாழ்கிறார்கள். இப்படியாக இந்த எண்ணிக்கை, நம் மொழி தொடர்ந்து நிலைத்து நிற்பதற்கு உறுதுணையாக இருந்தாலும் சிறுபாண்மை மக்கள் வாழும் நாடுகளில் இந்த மொழியின் பயன்பாடு சற்று தோய்வு நிலையில் உள்ளது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது.

ஒரு நாட்டில் சிறுபாண்மை மக்களாக வாழும் ஓர் இனம், அந்நாட்டின் தேசிய மொழியாக; ஆதிக்க மொழியாக விளங்குகின்ற மொழிகளோடு தொடர்புநிலையில் இருக்கும்போது அந்த மொழிகளின் தாக்கம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது திண்ணம். இவ்வாறான சூழலில் ஒருவரின் தாய்மொழி முழுமையாகவோ ஒரு பகுதியாகவோ அந்த ஆதிக்கமொழியின் தாக்கத்தால் அந்த மொழியை தம் அன்றாட வாழ்க்கையில் சிறுபான்மை மக்களோடு உரையாடுகின்ற; உறவாடுகின்ற சூழலிலும் பயன்படுத்துகின்ற சூழலைப் பரவலாகக் காண இயலும். இவ்வாறான சூழலில் நாம் நமது தாய்மொழியில் திறன் குன்றியவர்களாக ஆகிவிடுவதற்கு வழிவகுத்துவிடுகிறது.

கட்டம் கட்டமாக பைய பைய மாறிவரும் இந்த பயன்பாட்டு மொழியான நமது தாய்மொழி அதிகபட்சமாக மூன்றே தலைமுறைகளில் முழுமையாக மாறி ஆங்கிலமோ தேசிய மொழியான மலாய் மொழியோ தங்களின் குடும்ப மொழியாகவோ தங்களைச் சார்ந்த வட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நண்பர்களோடும் உரையாடுவதற்குப் பயன்படுகின்ற தொடர்பு மொழியாக மாறிவிடுகின்றது. பிறகு, குறிப்பிட்ட பகுதியில் வாழ்கின்ற ஒரு சமுதாயத்தில் இந்த மொழி அழிந்துவிடுகின்ற சூழலை நாம் காண இயலும். இதனைக் கீழ்க்காணும் மனவோட்டவரை வாயிலாகக் காணலாம்.




மேல் குறிப்பிட்டதுபோல் ஒரு சமுதாயத்தில் பயன்படுத்திவருகின்ற மொழி அல்லது தாய்மொழி மூன்று தலைமுறைகளில் மறைந்துவிடுகின்ற சூழலை நாம் இங்குக் காண முடிகின்றது. பரன்பரை, சேயோன்-சேயோளுக்கும், சேயோன்-சேயோள் ஓட்டன்-ஓட்டிக்கும், ஓட்டன்-ஓட்டி, பூட்டன்-பூட்டிக்கும், பூட்டன்-பூட்டி பாட்டன்-பாட்டிக்கும், பாட்டன்-பாட்டி, தந்தை-தாய்க்கும் வழங்கி வந்த நம்முடைய இந்தத் தாய்மொழியானது ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் மறைந்து அதனை அடுத்து வரும் நமது மகன்-மகள்களுக்கும், பெயரன்-பெயர்த்திகளுக்கும், கொள்ளுப் பெயரன்-கொள்ளுப் பெயர்த்திகளுக்கும், எள்ளுப் பெயரன்-எள்ளுப் பெயர்த்திகளுக்கும் கொண்டுச் சேர்க்கின்ற தொடர்பு அறுந்து போவது ஒட்டு மொத்த சமுதாயத்தில் மொழி அழிவு ஏற்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

இவ்வுலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் தமிழ்ப் பயன்பாட்டுமொழியாக இல்லாத சூழலில் தனது அடையாளத்தை இழந்து; அடுத்து வரும் தலைமுறையினருக்குத் தங்களின் தாய்மொழியைக் கொண்டுச் செல்ல

தவறினால் மொழி அழிவதைத் தவிர்க்க இயலாது. எங்கள் மொழி, இனிய மொழி, தண்டமிழ்த் தாய்மொழி இதனை எவராலும் எந்தச் சூழலிலும் ஒருபோதும் அழிக்கவே முடியாது, அழியவும் அழியாதது என்று வெறுமனே பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. உலகநடப்புகளையும் நாட்டுச் சூழல்களையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். மொரிசியசு (Canagarajah, 2009), இந்தோனேசியா (Mani, 2002) போன்ற நாடுகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

மொழி அழிந்தால் பண்பாடு அழியும், பண்பாடு அழிந்தால் அந்த இனமே அழிந்துவிடும் என்பது நாம் யாவரும் அறிந்த ஒன்று. ஒரு மொழி அழிந்தாலும் அல்லது பயன்பாட்டு மொழியாக இல்லாதிருந்தாலும் அந்த இனத்தில் பின்பற்றிவருகின்ற சில பண்பாட்டுக் கூறுகளை வைத்துக் கொண்டு மொழி அழிந்தாலும் பண்பாடு காக்கப்படுகின்றது என்ற கருத்தும் மொழியியலாளர் களிடையே நிலவி வரும் மற்றொரு கூற்று (David, 2009). ஆனால் நமது தமிழ்மொழியைப் பொருத்தமட்டில் நமது மொழி, பயன்பாட்டில் இல்லை என்றால் நமக்குரிய பண்பாட்டினை இழந்து பிறபண்பாட்டுத் தாக்கத்தால் நமது அடையாளத்தை இழந்து நிற்கும் சூழலை எதிர்க்கொள்ள நேரிடும். காரணம் நமது தமிழ்மொழியில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொரு சொல்லும் தன்னகத்தே பண்பாட்டுப் பின்புலனையும், அறிவியலையும், மெய்யியலையும் கொண்டுள்ளது. இக்கூற்றினை வேர்ச்சொல் ஆய்வின்வழி கண்டறியலாம் (வாசுதேவன், 2013). ஆக மொழியின்றி பின்பற்றபடுகின்ற பண்பாடு ஒரு தலைமுறைக் கூட நிலைக்காது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

அனைத்துலக மொழியான ஆங்கில மொழியினாலொ, தேசிய மொழியான மலாய் மொழியினாலோ அரசாங்கக் கொள்கையினாலோ; அதன் அமலாக்கத்தினாலோ பல்வேறு வகைகளில் சவால்கள் வந்தாலும் நமது தாய்மொழியைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு மிக இன்றியமையாத ஒன்று உள்ளது. அதுதான் இந்த மொழியின் மீது நாம் வைத்திருக்கும் பற்றும் பாசமும் 'allegiance' ஆகும். இந்த மொழிப் பற்று என்று ஒன்று இருந்தால் எத்தனை இடர்கள் வந்தாலும் அவை அனைத்தையும் எதிர்க்கொண்டு இந்த மொழியினைப் பயன்பாட்டு மொழியாக அடுத்த தலைமுறைக்குக் கொண்டுச் செல்ல முடியும்.

தமிழ்மொழியின் சிறப்பு அதன் தொன்மையிலா? தொடர்ச்சியிலா? என்ற கேள்வி இன்றைய விவாதங்களுக்கு மேலும் மெருகூட்டக் கூடியது. ஒரு தரப்பினர் தொன்மச் சிறப்பே அதன் இன்றைய நிலைக்கு ஆணிவேர் என்றும் நிச்சயம் காக்கப்பட வேண்டும்; வலியுறுத்தப்பட வேண்டும்; என்று கூறுகின்ற சூழலில் இன்றைய தலைமுறையினர்கள்

மத்தியில் அது எவ்வாறு நிலைநிறுத்தப்படுகின்றது என்றும் கேள்வி எழுப்பினால் சற்று தோய்வு நிலை ஏற்படும். ஆக தொன்மச் சிறப்பு உள்ள நம் மொழியின் இன்றைய நிலை? அது தொடர்ந்து பயன்படுத்தப் படுகின்றது என்றால் உண்மையிலேயே அந்த தொடர்ச்சி இடம்பெறுகிறதா? என்ற சிந்தனையயும் நாம் முன்வைக்க வேண்டும்.

மலேசியச் சூழலில் 1960-களில், 70-களில், 80-களில் படைக்கப் பட்ட படைப்பிலக்கியங்களாகட்டும், எழுத்துப் படிவங்களாகட்டும், அவற்றில் மொழியின் தரம் சிறப்பாகக் கையாளப்பட்டது. அதுவே இன்றைய தலைமுறையில் எத்தனை இளம் எழுத்தாளர்கள் அதாவது 40 வயதுக்கும் குறைந்தவர்கள் நம் நாட்டில் உள்ளனர்? அப்படியே அவர்கள் எழுதினாலும் அவர்கள் எழுத்துகளில் எந்தளவுக்கு ஆழமும் அழுத்தமும் இடம்பெற்றுள்ளது? இன்றைய தகவல் தொழில்நுட்ப காலகட்டத்தில் இன்னும் அதிகமான வாய்ப்புகளும் வசதிகளும் நம்மைச் சுற்றி குவிந்திருக்கும் சூழலில் சிறப்பான; தரமான படைப்புகளும் அல்லவா இடம் பெற்றிருக்க வேண்டும்? ஆனால் நடப்பது என்ன? நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வீழ்ச்சியே மிஞ்சுகிறது (Palani, 2011). இதற்குக் காரணம் 50% இந்தியக் குழந்தைகள் தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்றார்கள். இவர்கள் இடைநிலைப் பள்ளிகளுக்கு வரும்போது தமிழ்மொழிப் பாடம் கற்பிப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்களினால் அதாவது ஆசிரியர் இல்லாதது; அப்படியே ஆசிரியர் இருந்தாலும் முறையாக வகுப்பு நடைபெறாதது; அப்படியே நடைப்பெற்றாலும் வகுப்புப் பற்றாக் குறை, பாட நேரத்தில் கற்பிக்க இயலாதது போன்ற பல சிக்கல்களினால் பி.எம்.ஆர் தேர்வில் இந்த ஏ மற்றும் பி பெரும் மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 2000 மட்டுமே. அதாவது நல்ல படைப்பாற்றல் வழங்கக் கூடிய மாணவர்களே இந்த 2000-த்திலிருந்துதான் நாம் பெருகிறோம். நம்முடைய எண்ணிக்கை எப்படி சுருங்கிவிட்டது என்று இதன்வழி அறிய முடிகின்றது. இன்னும் ஒரு சான்று எஸ்.பி.எம் தேர்வில் தமிழ்மொழி பாடம் பயிலும் மாணவர்கள் மொத்தம் சுமார் 5000 மட்டுமே. அதாவது பி.எம்.ஆர் தேர்வு எழுதும் ஏறக்குறைய 11000 மாணவர்களில் வெறும் 5000 என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

மலேசியாவில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக இல்லை. ஆனால், தமிழ்மொழியைக் ஆரம்பப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளி; பல்கலைக்கழகம்வரை பயின்று பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. ஆனால், நடப்பது என்ன? தமிழ்மொழி பாடம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படையாக சரிவடையும் நிலையைத்தான் காண முடிகின்றது. ஏனென்றால் அதற்கும் காரணம் மொழிப்பற்றுதான்.

### சில பரிந்துரைகள்

சிறுபாண்மை மக்கள் தங்கள் தாய்மொழியைத் தொடர்ந்து நிலைநாட்டுவதை உறுதி செய்ய யுனெஸ்கொ நிறுவனம் சில பரிந்துரைகள்/ அடிப்படை விதிகளை வழங்கியுள்ளது. அவற்றைக் கருத்தில் கொண்டு செயல்பட்டோமேயானால் நமது தாய்மொழியை நாம் தொடர்ந்து தற்காப்போம்; தற்காக்க இயலும்.

1. அடுத்தடுத்த தலைமுறகளுக்கு மொழியைக் கொண்டு சேர்த்தல்,
2. அதிகமான மொழி பயனர்களைக் கொண்டிருத்தல்,
3. ஒட்டுமொத்த மக்கள் தொகைக்கு ஏற்றவாறு பயனர்களைக் கொண்டிருத்தல்,
4. குறிப்பிட்ட தளங்களில் தொடர்ந்து இந்த மொழியைப் பயன்படுத்தி வருதல்,
5. புதிய தளங்களிலும் ஊடங்களிலும் பயன்படுத்துதல்,
6. கல்வி மொழியாக; எழுத்து மொழியாகக் கொண்டிருத்தல்,
7. மொழி அணுகுமுறையும் கொள்கைகளும்,
8. மொழி மீது உள்ள நோக்கும் போக்கும் மற்றும்
9. தரமான தரவுவுகள் பதிவு

மேற்காணும் இந்த அடிப்படை விதிகளில், பயனர்களான நாம் நேரடியாகத் தொடர்பில் உள்ளது 1, 4, 5, 8. அதாவது நம்மால் செய்யக்கூடிய மாற்றங்களாக இவற்றைக் கொள்ளலாம்.




இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் அடித்தளம் சரியாக; பலமாக இருந்தால் வேறெந்த சிக்கலும் எளிதில் பாதிப்பைத் தராது. இதனைக்

கருத்தில் கொண்டு மொழி காப்போம்; இனம் காப்போம். தமிழோடு உயர்வோம்

**மேற்கோள்**


*வாசுதேவன். (2013). உயிரோசை (02.10.2013).*

<http://www.uyirmmai.com/Uyirosai/Contentdetails.aspx?cid=2552>

Chomsky.(1993). On Nature and Language. Cambridge University Press. Cambridge.

www.ethnologue.com

<http://www.ethnologue.com>. (2014)

Canagarajah, 2009. Language Shift and the Family. Questions From the Sri Lankan Tamil

Diaspora. Retrieved from Journal of Sociolinguistics 12/2, 2008: 143-176

David, M.K dan Naji, I. (2000).'Do minorities have to abondon their language? A Case study of Malaysian Tamils'. The International Scope Review 2:3. 1-15. Retrieved from http://wikibin.org/articles/the-international-scope-review.html

Palani Krishnasamy. (2011). Pemikiran Feminisme dalam Sajak Tamil Moden di Malaysia. Universiti Malaya. Kuala Lumpur.

# சயாம் மரண ரயில்பாதை அமைப்பில் தமிழர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள்

முனைவர் சாந்தி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி
திருவனந்தபுரம் பல்கலைக்கழகம்

சென்ற நூற்றாண்டின் நிகழ்வுகளில் முக்கியமானதாகக் கருதப்படுவது இரண்டாம் உலகப்போர். இவ்வுலகப்போர் இந்திய மக்களை நேரடியாகப் பாதிக்கவில்லை எனினும் மறைமுகமான பாதிப்புக்குள்ளானார்கள். குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளில் வசித்துவந்த தமிழர்கள் போரால் அதிகமாக பாதிக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் உறவுகளையும் உடமைகளையும் இழந்து தவித்தனர். போர்க் காலத்தில் நேசநாடுகள் தங்கள் போர்த் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள தங்கள் காலனி நாடுகளைப் பயன்படுத்திக்கொண்டனர். ஜப்பான் தன் எல்லையை விரிவுபடுத்த முயன்றது. இந்தியாவைக் கைப்பற்ற எண்ணிய ஜப்பான் படைக்கருவிகளைக் கொண்டுவர கடல்வழியைப் பயன்படுத்தி வந்தது. இது சிரமம் என்பதால் தரை வழி கொண்டுவர தீர்மானித்தது. இதற்காக சயாமிலிருந்து பர்மா வரை இருப்புப் பாதை அமைக்க முயன்றது. இப்பாதையை வெகு விரைவில் செய்து முடிக்க ஜப்பான் அரசு உத்தரவிட்டிருந்தது. எனவே ஏராளமான ஆட்கள் தேவைப்பட்டனர். இப்பாதையை அமைக்க ஆஸ்திரேலியா, பிரிட்டீஷ் கைதிகள் பயன்படுத்தப்பட்டனர். இங்கு தமிழர்களையும் கொண்டு சென்றனர். இப்பாதை அமைப்பினால் வாழ்வில் உறவு, பொருள், இன்பம் அனைத்தையும் இழந்து தவித்தவர்களில் தமிழர்களும் உட்படுவர். இதைத் தமிழர்கள் "மரண ரயில் பாதை" என்றே குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து அந்நிகழ்வின் கொடுமையை உணர்ந்துகொள்ள முடிகிறது. இக்கொடுமையைப் பலரும் பதிவு செய்துள்ளனர். ஆனால் பாட்டாளி மக்களான தமிழர்கள் இதைப் பதிவு செய்ய அதிக கால இடைவெளி தேவைப்பட்டது. இந்நிகழ்வை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்தான் சண்முகத்தின் "சயாம் மரண ரயில்". இதைத் தொடர்ந்து "சயாம்-பர்மா மரண இரயில் பாதை மறக்கப்பட்ட வரலாற்றின்

உயிர்ப்பு" என்ற கட்டுரையும் வெளியானது. இவ்வாய்வுக் கட்டுரை சயாம் மரண ரயில் நாவலை முன்வைத்து இருப்புப் பாதை அமைப்பில் தமிழர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கிறது.

1942 செப்டம்பர்த் திங்கள் 16ஆம் நாளிலிருந்து 16 மாதங்களுக்குள் ரயில்பாதையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று ஜப்பான் அரசு கட்டளை இட்டது. இதற்காக அதிக கூலி தருவதாகக் கூறி தோட்டத்தில் வேலை செய்யும் தமிழர்களைக் கங்காணிகளின் உதவியுடன் ஏமாற்றிக் கொண்டு சென்றனர். இவ்வாறு சென்ற தமிழர்களில் பலரும் திரும்பி வந்ததில்லை. அவர்களில் பலரும் கொண்டுசெல்லும் வழியிலேயே மரணமடைந்தனர். சிலர் தப்பிக்க முயன்று உயிரிழந்தனர். போர் முடிவடைந்த பிறகு மலாயா திரும்பி வந்தவர்களின் குடும்பங்கள் சிதறி சின்னாபின்னமானதைக் கண்டு மனம் உடைந்து சயாமிற்கே பலரும் திரும்பிச் சென்றனர். அவ்வாறு சென்ற ஒரு தமிழ் இளைஞனின் அனுபவம் தான் இந்நாவலாக வெளிவந்தது. குடும்பச் சிதைவை இந்நாவல் சித்திரிக்கிறது. போரினால் ஏற்பட்ட கொடுமையான பஞ்சம் உறவுகளைக் கொச்சைப் படுத்தியது. உறவுகளின் உன்னத நிலையை உதறித்தள்ளியது. ரயில்பாதை அமைக்க ஜப்பானியர்கள் வலுக்கட்டாயமாக ஆண்களைக் கொண்டு சென்றதால் பல குடும்பங்களும் வறுமையால் வாடியது. பாதுகாப்பின்றி பெண்கள் துன்பமடைந்தனர். உறவுகள் கொச்சைப்படுத்தப்பட்டன. சின்னக்கண்ணு என்பவரை வலுக்கட்டாயமாக சயாமுக்கு கொண்டு சென்றனர். அப்போது அவர் தன் மனைவியையும் குழந்தையையும் தன் தகப்பனிடம் ஒப்படைத்துவிட்டுப் போனார். ஆனால் அவர் திரும்பி வந்தபோது அவர் அப்பாவே தன் மனைவியை அவர் மனைவியாக்கி ஒரு குழந்தையும் இருப்பதால் மனமுடைந்து சயாமுக்கே திரும்பிச்செல்கிறார். "அதையேன் கேட்கிறீங்க கிராணி............. மருமகள் தன் மகள்னு நினைக்காம அவளையே சேர்த்துக்கிட்டான். ஒரு பிள்ளையும் இருக்கு! எந்த முகத்தோட நான் ஊருக்குள்ளே நடமாடுவேன். அதுதான் திரும்பவும் சயாமுக்கே போறேன். அங்கேயே போயி செத்துப்புடலாம்னு! என்று சொல்லிவிட்டு ஓவென அழுதார் சின்னக்கண்ணு!" இவ்வரிகள் அவரது மன உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. மாமனார் மருமகள் உறவு கொச்சைப்படுத்தப் படுகிறது. இதற்கு காரணம் வறுமையும் பாதுகாப்பின்மையும் தான். தன் கணவன் இல்லாத சூழ்நிலையை மாமனார் பயன்படுத்திக் கொண்டார் என்று தான் சொல்ல வேண்டும். இது போன்று உறவுகள் யாருமில்லாததால் திரும்பிப் போனவர்களும் உண்டு. மாயா என்பவர் சயாமுக்கு வந்ததே தன் தாயின் தப்பான உறவை விரும்பாததால்தான். மாயாவின் அப்பா சயாமுக்கு சென்றதால் குடும்பம் வறுமையில் வாடியது. எனவே அவன் தாய் தனக்கு உதவியவரையே திருமணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான் மாயா சயாமுக்கு ரயில் பாதை அமைக்க சென்றான்.

## முகாமின் அவலநிலை

ரயில்பாதை அமைக்கச் சென்ற தொழிலாளிகள் தங்கியிருக்கும் முகாமின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. போதிய வசதியின்மை, ஓயாத உழைப்பு, நெருக்கடி இவற்றால் பெரும் அவதிக்குள்ளானார்கள். ஓய்வெடுக்கக்கூட நேரம் தரப்படவில்லை. எமன் என்பவனின் தண்டனைக்குப் பயந்து மக்கள் நடுங்கினர். தங்களுக்கு நோய் வந்தாலும் அவர்கள் வெளியே சொல்வதில்லை. காரணம் உழைக்கத் தகுதியற்றவர்கள் என்று தெரிந்துகொண்டால் ஜப்பானியர்கள் பின் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களை உயிரோடு இருக்கும்போதே பிணக்குழியில் கொண்டு சென்று தூக்கி எறிந்துவிடுவர். இதை சண்முகம் தன் நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். "நீங்க ஒண்ணு கேபி! ஆசுபத்திரியாவது மண்ணாவது - சாகப்போறான்னு நிச்சயமானதும் கொண்டுபோய் விட்டிடுவான். ஒரு மைல் தூரத்திலே நீளமா ஒரு அத்தாப்பு வீடு கட்டிப் போட்டிருக்கான். அங்கே போனவன்தான். நல்லா சொல்லணும்னா அதை சாவு கொட்டான்னுதான் சொல்லணும்.

திடீர்னு எவனுக்காவது வாந்தி பேதின்னா அதோ அந்த மேட்டிலே ஒரு அத்தாப்பு வீடு கட்டியிருக்கானே, அங்கே கொண்டுபோய் விட்டிடுவான். அங்கே போனவன்கதி அதோகதிதான். இன்னிக்கு விட்டிட்டு நாளைக்குப் போய் பார்த்தா செத்துப்போய்க் கிடப்பான்." இவ்வரிகள் முகாமின் நிலையையும் ஜப்பானியர்களின் மனிதநேயமற்ற தன்மையையும் கொடூர மனதையும் சித்திரிக்கிறது.

ரயில்பாதை அமைக்கும் வேலையை துரிதப் படுத்துவதற்காக மேற்பார்வையாளராக இருப்பவர்கள் தொழிலாளிகளை கொடுமைப் படுத்தினர். மனிதநேயமே இல்லாமல் நடந்துகொண்டனர். வயதுவரம்பின்றி எல்லோரையும் கடுமையாகத் தண்டித்தனர். சிறு தவறுதலைக்கூட மன்னிக்கும் இயல்பு இல்லாதவர்கள். "ஜப்பான்காரன்கிட்டே அடிவாங்கி இந்தக் கேம்பிலே எவண்ட்டா உயிரோட இருக்கான்? இதெல்லாம் முடிஞ்ச கேசு!" இவ்வரிகள் ஜப்பான்காரனின் கடுமையான தண்டனையையும் ஈவிரக்கமின்றி நடந்துகொள்ளும் தன்மையையும் உணர்த்துகிறது. மனிதர்களிடம் நடந்துகொள்வது போலின்றி மிருகத்தனமாய் நடந்துகொண்டனர். இதுபோன்ற கோடூரமான நிகழ்வுகள் பலவற்றையும் சண்முகம் தன் நாவலில் பதிவு செய்துள்ளார்.

சயாம் பர்மா ரயில் பாதை அமைப்பின் கொடூரத்தை இந்நாவல் முன்வைக்கிறது. இது ஒரு வரலாற்று உண்மை. வரலாற்றோடு இந்நாவல் மக்களின் மன உணர்வுகளையும் முன்வைக்கிறது. போர் மக்களின் வாழ்வை எவ்வாறு சிதைத்தது என்பதற்கு இது சான்று. மனித உறவுகள் மதிக்கப்படவில்லை. பெண்களின் நிலை பாதுகாப்பின்றி திணிக்கப்பட்ட வாழ்வை வாழ்ந்து வந்தனர். வறுமை உறவுகளின் சிறப்பைக் குலைத்தது. போரினால் ஏற்பட்ட அவலத்தை இந்நாவல் உணர்த்துகிறது.

# பர்மா, மலேசியத் தமிழர் வாழ்வியல்

முனைவர் வெ.திருவேணி
உதவிப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி, தமிழ்நாடு

தமிழ்நாட்டு வாணிகர்கள், வாணிகத்தின் பொருட்டு கிறிஸ்துவ நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே, தென்கிழக்கு ஆசியாவின் பல இடங்களில் குடியேறி இருந்தனர். தமிழருடைய பண்பாட்டின் தாக்கம் அந்நாடுகளில் வேரூன்றி உள்ளது என்பதனை அகழ்ந்து எடுத்துப் புறத்தே புலப்படுமாறு செய்யும் பணியை பல ஆய்வாளர்கள் செய்துள்ளனர். தென்கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, வியட்நாம், காம்பூச்சியா, தாய்லாந்து, சுமத்திரா, ஜாவா, பாலி முதலிய நாடுகளில் பண்டைத் தமிழருடைய வாழ்வியல், கலைச் சின்னங்கள் காணப்படுவதை அறிஞர்கள் அவ்வப்போது எழுதி வருகின்றனர்.

## பர்மாவில் தமிழர்

1850ஆம் ஆண்டுகளில் பொருளீட்ட திரள்திரளாக நகரத்துச் செட்டிமார்கள், பர்மாவிற்குச் சென்று குடியேறி வந்தனர். தொடக்கத்தில் மேமியோ, மோல்மோன் நகரங்களில் இவர்கள் தங்கி வாழ்ந்தனர். 1930-ஆம் ஆண்டிற்குள், இவர்கள் பர்மா முழுவதிலும் பரவி இருந்தனர். 1940 அளவில் பர்மாவில் மட்டும் 1665 வட்டிக்கடைகள் நகரத்தாரால் நடத்தப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஏறக்குறைய 10 கோடி ரூபாயை அக்காலத்தில் இவர்கள், வட்டிக்கடைகளில் முதலீடு செய்து இருந்தனர். 1941 ஆம் ஆண்டு அளவில் பர்மாவின் மூன்று இலட்சம் ஏக்கர் விளைநிலம் நகரத்தாரின் சொத்தாக இருந்து வந்தது.

1931-இல் பர்மாவின் குடிக்கணிப்பின்படி தமிழர் 22,536 பேர் பர்மாவில் பிறக்காதவர்கள் என்றும், இந்தியக் குடியேறிகள் 3,57,011 பேர் என்றும் கணிக்கப்படுகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழர் 1,30,000 பேர் பர்மாவில் வாழ்வதாகக் குறிப்பிடுகிறார்கள்.

இவர்கள் அலுவலகப்பணி, காசுக்கடை, உழவுத்தொழில், வாணிகம் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தனர் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

**1965** ஆம் ஆண்டிற்கு முன்னர் "அகில பர்மா தமிழ்ச்சங்கம்" செட்டியார் உயர்நிலைப்பள்ளி, கம்பை தனவைசியர் கல்விக்கழகம்" போன்ற அமைப்புகள் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வந்தன. பர்மா நெற்களஞ்சியமாக மாறுவதற்குத் தமிழருடைய உழைப்பு முதலீடாக அமைந்தது. இதனைப் "பர்மா நிலத்தில் பச்சை வயல் முகங்காட்ட, பச்சை வயலிடையே பச்சரிசி சிரித்திருக்க, அத்தனையும் பொன்னாக ஆக்கிப் படைத்தவர்கள் நம்மவரே என்றால் நாட்டோர் மறுப்பதில்லை" என்று கண்ணதாசன் மொழிந்துள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.

*1470* நிகேதின் (Nigitin) எனும் ருஷிய நாட்டுப் பயணி பர்மாவிற்குச் சென்று இருந்தார். 'பெகூ' எனும் துறைமுகத்தின் அருமை பெருமைகளை அவர் விளக்கியுரைத்துள்ளார். அந்நிலையில் அத்துறைமுகத்தில் தமிழர்களே பேரளவிற்கு வாணிகத்தில் ஈடுபட்டுள்ள செய்தியை அவர் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். (W.S.Desai, India and Burma, P.24).

### தமிழருடைய கலைத்திறன்

பர்மாவில் நெடுங்காலமாக தமிழும், சைவமும் போற்றி வளர்க்கப்பட்டு வந்ததை அறிகிறோம். தேன் கருமாப்பிள்ளை என்பவர், இரங்கூன் மாநகாரில் மாரியம்மன் திருக்கோயில் ஒன்றை எழுப்பியுள்ளார். ஆடி, தை, சித்திரை மாதங்களில், இத்திருக்கோயிலின் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இக்கோயிலில் ஆடி மாதத்தில் நடைபெறும் 'தீ மிதித்தல் திருவிழா பெருஞ்சிறப்பு வாய்ந்தது. இக்கோயிலில் நடைபெறும் விழாக்கள் எல்லாவற்றுக்குமே, பர்மாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் பேரார்வத்தோடு வந்து வழிபாடு செய்கின்றனர். தமிழன் குடியேறிய நாடுகளில் எல்லாம் கண்ணகி மதுரையை எரித்ததன் அடையாளமாகப் போற்றப்படும் 'தீ மிதித்தல்' திருவிழா நடத்தப்பட்டு வருவது கருதத்தக்கதாகும். இராமநாதன் செட்டியார் என்பவர் அங்கு திருமால் கோயிலைக் கட்டியுள்ளார். இக்கோயில், காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலின் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழருடைய கலைத்திறனிற்கும், பண்பாட்டின் சிறப்பிற்கும் இக்கோயில் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். திருவிழாக்களில் இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் அங்குள்ள தமிழர்களால் போற்றி ஆதரிக்கப்படுவதை இன்றும் காணலாம்.

### மலேசியத் தமிழரின் வாழ்வியல்

மலேசியா எனும் சொல்லிற்கு 'ஆசியாவில் உள்ள மலைநாடு' என்பது பொருள். ஆசியாவில் பிற நாடுகளில் மலைகளே இல்லையா? எனும் ஐயம் எழலாம். மலேசியத் தீபகர்ப்பத்தில் உள்ளதைப் போன்று

மலைகளும், அவற்றை அடுத்துப் பள்ளத்தாக்குகளும் ஆசியாவின் பிற பகுதிகளில் காணப்படவில்லை என அறிஞர்கள் கூறுகின்றனர். இந்நாட்டினை, கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே தமிழ் மக்களும், வடஇந்தியரும் நன்கு அறிந்து இருந்தனர். ஆனால் அக்காலத்தில் இந்த நாட்டிற்கு 'மலேயா' எனும் பெயர் வழங்கவில்லை.

பட்டினப்பாலை எனும் சங்கப்பாடல், இந்நாட்டினைக் 'காழகம்' எனும் பெயரால் சுட்டுகிறது.

கங்கை வாரியும் காவிரிப் பயனும்
காழகத்து ஆக்கமும் *(பத்து: பட்டினப்பாலை - 190-191)*

தமிழ்நாட்டில் மன்னார் குடாப் பகுதியில் வாழும் லப்பைகளுக்கும், மலேசியாவில் வாழும் முஸ்லீம்களுக்கும் இடையே பேரளவில் ஒற்றுமைப் பண்புகள் காணப்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பொருள்கள், சிறப்பாக அப்பொருள்களை அலங்கரிக்கும் முறைகள் ஆகியவற்றிலும் இவ்விரு நாட்டு மக்களிடையே ஒற்றுமைகள் இருந்து வருகின்றன. தமிழகத்தில் தொன்று தொட்டு பயன்படுத்தப்படும் தண்ணீர்ப் பாத்திரத்திற்கு "கெண்டி" என்பது பெயர். மலேசியாவில் அத்தகைய பாத்திரம் புழக்கத்தில் இருப்பதுடன் இன்றும் "கெண்டி" என்னும் பெயராலேயே அது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் வாழும் மலாய் மக்களின் வாழ்க்கையில் வேரூன்றிப் போய் இருக்கும் தமிழ் மக்களுடைய பழக்க வழங்கங்களை, இன்றும் காண முடிகிறது. இரு வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் நெருங்கி வாழ நேரிடும் பொழுது ஒரு சாராருடைய பழக்கவழக்கங்கள், மற்றொரு சாராரின் கருத்தைக் கவருவது இயற்கை. இந்த முறையில் மலாய் மக்களின் இன்றைய பழக்க வழக்கங்களுள் சிற்சில இரண்டறக் கலந்து விட்டன.

திருமணமுறை தாய் வழித் தாயமுறையாகவே பெரிதும் இருக்கிறது. மணமகள் பெண் எனப்படுவதற்குப் பதிலாக பொன் எனப்படுகிறாள். திருமணத்தில் அரிசியையும், மலரையும் தூவி வாழ்த்துதல் உண்டு. இசுலாமியப் பெண்கள் யாருமே முகமூடி அணியும் முறையை அங்கு பின்பற்றுவது இல்லை.

திருமணச்சடங்கில், தாலிகட்டும் வழக்கம் மலாய் மக்களிடம் இருந்து வருகிறது. தாலி கட்டிய பின்னர், மணமகனும், மணமகளும் கைகோர்த்தவண்ணம் நடந்து மணமேடையைச் சுற்றி வலம் வருகின்றனர். மலாய் மக்கள் அரிசிச் சாப்பாட்டையே தலையாய உணவாகக் கொண்டுள்ளனர். வெண்டை, கத்தரிக்காய் பெரிதும்

அவர்கள் உணவில் பயன்படுத்துகின்றனர். ஊறுகாய் இல்லாது உணவை அவர்கள் சாப்பிடுவதே இல்லை. தேங்காயைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். தேங்காய்ப்பால் கலந்த உணவும், சிற்றுண்டிகளும் மிகுதி. படுக்கை அறையில் கட்டில் வடிவழகுடையது. பாய்களையும் அவர்கள் பயன்படுத்துகின்றனர். குடிக்கும் நீரை ஊற்றி வைக்கும் பாத்திரத்தை அவர்கள், நம்மைப்போல 'கெண்டி' எனும் பெயராலேயே சுட்டுகின்றனர். மகளிர் வாழைப்பூக் கொண்டையும், கூடைக் கொண்டையும், அள்ளிச் செருகும் 'செலந்தம்' எனும் முறையையும் பின்பற்றுகின்றனர். அன்றாடம் வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொள்ளும் பழக்கமும், நன்னிகழ்ச்சிகளில் வெற்றிலைப் பாக்கும், பூவும் கொடுத்து மகிழ்வதும் அங்குள்ள மக்களின் வழக்கில் உள்ளன. (F.R.J.Vernoeven, Some Notes on the History of Tamil Community in Dutch Malaya - 1677-1828).

1955 இல் தமிழர்களில் ஒருவர் மட்டுமே அமைச்சர் பொறுப்பில் இருந்தார். பின்னர் இரண்டு அமைச்சுகள் தரப்பட்டன. இவற்றோடு மாநில சட்டமன்றங்களில் உறுப்பினர்களாகவும், சட்டமன்ற கட்சிக் குழுக்களில் உறுப்பினர்களாகவும் பன்னிருவர் பொறுப்பு வகிக்கின்றனர்.

மலேசியாவில் தமிழ், தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி, இலக்கிய எழுச்சி என்று எண்ணும்போது நம்நினைவில் எழும் பேருருவம் தமிழவேள் கோ.சாரங்கபாணியாவார். தமிழர்க்கு விழிப்பூட்டி, பட்டி, தொட்டியெங்கும் தமிழ் முழக்கம் செய்த அரிமாவான அவர், தமிழ் முரசு மூலம் ஆற்றிய பணிகள் வரலாற்றில் நின்று நிலைக்கத்தக்கவை. 'தமிழர் திருநாள்' மூலம் அவர் ஆற்றிய தமிழ் உணர்வும், பண்பாட்டுணர்வும் தமிழ்த் தேசிய எழுச்சியும், தமிழர் தலைநிமிர, பல்கலைக்கழகத்தில் தமிழ் ஒலிக்க வழிவகைகள் செய்ததென்றால் மிகையாகாது.

தமிழ்வேல் கோ.சாரங்கபாணி அவர்களுடைய அரிய முயற்சியால், கோலாலம்பூர்ப் பல்கலைக்கழகத்தில் "இந்தியப் பண்பாட்டு ஆய்வுத்துறை" 40 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப் பெற்றது. இத்துறையில் "தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு" பற்றிய படிப்பும் ஆய்வுமே முதன்மை இடம் பெற்றுள்ளன. தமிழில் 'புதிய சிந்தனை'யைக் கொண்டு வந்து சேர்ப்பதில் இத்துறை, பேரார்வத்தோடு ஈடுபட்டு இருக்கிறது.

அறிஞர் சேவியர் தனிநாயக அடிகள், இத்துறையின் தலைவராய் பணியாற்றிய காலத்தில், தமிழ்வேள் சாரங்கபாணியாரின் அயரா உழைப்பால், உலகமே கண்டு வியக்கத்தக்க 'முதல் உலகத் தமிழ் மாநாடு' 16.04.1966 ஆம் நாள் முதல் ஒருவார காலத்திற்குச் சீரோடும், மலேசிய நாட்டு வரலாறு காணாத வகையில் புதுமையாகக்

கொண்டாடப்பட்டது. நூற்றுக்கணக்கான உலகத் தமிழ் அறிஞர்களும், ஆயிரக்கணக்கான தமிழ் ஆர்வலர்களும் அம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்ததாகத் தமிழறிஞர்கள் பலர் தாம் எழுதிய நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அம்மாநாட்டின் பயனாக உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள், தமிழ்த் தேசிய எழுச்சியைப் பெற்றனர். சிந்தனையுலகில், பல புதிய கிளையாறுகள் தமிழாராய்ச்சியின் வெள்ளப் பெருக்கை வளப்படுத்தின' உரமூட்டின' கலையூற்றைத் தேடிக் காண முனைந்தன.

முதல் உலகத் தமிழ் மாநாட்டு அழைப்பிதழின் முகப்பில், மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஏழும், எழிலும் பெற்று விளங்கியது' காம்பூச்சியாவின் உலகப் பேரதிசயமான ஆங்கோர்வாட் கோயிலின் விமானம் விறுடன் விளங்கியது. மற்றும் மலேசியாவின் கடாரம் (கெட்டா) எனும் ஊரில் சேரன் கட்டிய கோயிலின் சிதைவுகளும் கருத்தைக் கவர்ந்தன. இவற்றின் அடியில் மலர்ந்த செந்தாமரை மலரினைச் சுற்றி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் தமிழனின் அனைத்துலகச் சகோதரத்துவத்தைப் போற்றும் மணிமொழி ஒளிமயமாய் விளங்கியது - என்று டாக்டர்.க.த.திருநாவுக்கரசு அவர்கள் தாம் எழுதிய "தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு" எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

# ஐக்கிய இராச்சியத்தில் தமிழரின் வாழ்வியல்

திரு. அல்பிரட் வேந்தர்கோன்
இலண்டன்

கடந்த அரை நுற்றாண்டு கால ஐக்கிய இராச்சிய தமிழர்களின் வாழ்வியலை ஒரு வரலாற்றுப் பரப் பார்வையில் காட்சிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையில் தமிழர்களின் வாழ்வியலை 1983க்கு முன், 1983க்கு பின் என்ற இரு நிலைகளில் ஆராயப்பட்டுள்ளதுடன் மக்களின் பின்புலம் அடிச்சுவடுகள் ஆகியவை பற்றியும் அவ்வப்போது காட்சிப்படுத்தியுள்ளோம். தலைப்பில் ஐக்கிய இராச்சியம் என சொல்லப்பட்டிருந்தாலும் இங்குள்ள வழக்கத்திற்கு அமைய கட்டுரையின் உள்ளே பிரித்தானியா என்றே குறிப்பிடப்படுகிறது.

**1983ம் ஆண்டிற்கு முன் வந்தோரின் புலம்பெயர் பின்னணியும் வாழ்வும்**

பிரித்தானியத் தமிழர் வாழ்வியலை 1983ஆம் ஆண்டிற்கு முற்பட்டது; பிற்பட்டது என இரு பெரும் பிரிவுகளாகப் பார்க்கலாம். ஒரு பிரிவு இந்தியா இலங்கை சுதந்திரமடைந்ததன் பின் அங்கிருந்து வந்து குடியேறிய மக்களின் வாழ்வியல், மற்றொன்று இலங்கையில் நடைபெற்ற 1983 ஜூலை கலவரத்தின் பின் அகதிகளாக தஞ்சம் கோரி வந்தவர்களின் வாழ்வியல் ஆகும்

முதலில் வந்தவர்கள், 2ஆம் உலகப்போர் முடிவுற்ற பின் பிரித்தானியாவில் பாரிய கட்டுமான வேலைகளுக்காக வெளிநாடுகளில் இருந்து வேலைக்காக ஆட்களை எடுத்தபோது வேலை அனுமதி வீசாவில் பிரித்தானியா வந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் படித்தவர்களாகவும் துறைசார் வல்லுனர்களாகவும் இருந்தனர்.

இவர்கள் ஒரு வேலையில் ஒப்பந்த காலம் முடிவுற்றால் வேறுறொரு நிறுவனத்தில் சேர்ந்து தமது வேலை அனுமதி வீசாவை தொடர்ந்து தக்கவைத்து வாழ்ந்து வந்தனர். .

1956இல் இலங்கையில் சிங்களம் மட்டுமே அரசகரும மொழி எனச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது தமிழ் அரச ஊழியர்கள் பலர் சிங்களம் படிக்க மறுத்து தங்கள் வேலையை இராஜினாமா செய்துவிட்டு இலண்டன் வந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் 1960வது 1970களில் வெளிநாடு என்றால் அது இலண்டன் தான். செருமனி, பிரான்ஸ் போன்ற நாடுகளும் கூட இலண்டனில் தான் இருக்கிறது என சாதாரண மக்கள் கருதி யிருந்தார்கள். அக்காலத்தில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்போது தேர்வில் நல்ல பேறுகளைப் பெறவேண்டும், பல்கலைக்கழகம் செல்லவேண்டும் சமூகத்தில், படித்தவர் என்ற பெயர் எடுக்கவேண்டும் என்பது ஒவ்வொரு மாணவர்களினதும் குறிக்கோளாகியிருந்தது.

இக்காலத்தில் சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களின் பல்கலைக்கழக பிரவேசத்தை மட்டுப்படுத்த 'தரப்படுத்தல்' என்னும் சட்டத்தை 1971இல் கொண்டுவந்தனர். அதாவது பல்கலைக்கழகம் புகுவதற்கு தேவையான வெட்டுப்புள்ளிகள் சிங்கள மாணவர்களைக் காட்டிலும் தமிழ்மாணவர்கள் அதிகம் பெறவேண்டும்.

இந்த தரப்படுத்தலில் இருந்து தப்புவதற்கும் இலண்டன் மாப்பிளைக்கு சமூகத்தின் மத்தியில் இருந்த கிராக்கியையும் கவனித்த இளைஞர்கள் 1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலண்டன் செல்லத் தொடங்கினார்கள். சிலர் தாங்கள் இலண்டன் செல்லும் பயணத்தை பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விட்டும் செல்லுவார்கள். எல்லாம் ஒரு முன்ஜாக்கிரதை தான். இன்னார் இலண்டன் சென்றுவிட்டார் என்று அறிவித்துவிட்டுச் சென்றால் பின்னர் திரும்பி வரும் போது நல்ல சீதனம் வாங்கலாம், பெற்றோர்களும் பெருமையடைவார்கள் என்ற எண்ணம்தான். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு, மற்றும் வீரகேசரி போன்ற பத்திரிகைகளில்; 'இலண்டன் பயணமானார்' என்ற விளம்பரங்களை சர்வசாதாரணமாகக் காணலாம்.

### அன்றாட வாழ்வியல்

இன்று பிரித்தானியாவிலுள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 1970ஆம் ஆண்டுகாலத்தில் வெளிநாட்டவர்களின் அளவு மிகவும் குறைவானது. அதிலும் தமிழர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்றே சொல்லலாம். அககாலத்தில் வந்தவர்கள் தத்தமது தொழில்களுக்கு அருகிலேயே வீடு எடுத்து வசித்து வந்ததால் மக்கள் மிகவும் பரவலாக வாழ்ந்தார்கள். மிகப் பெரும்பான்மையானவர்கள் தலைநகரமான இலண்டனிலேயே வசித்து வந்தனர்.

எங்கேயாவது ஒரு தமிழரை இன்னொருவர் சந்திக்கநேர்ந்தால் "நீங்கள் தமிழரா" என்று கேட்டு விசாரித்து மகிழ்ச்சி மிகுந்தவர்களாக நீண்டநேரம் பேசி விட்டு செல்வார்களாம். அக்காலங்களில் எல்லோரிடமும் வண்டி இருக்காது. பொது போக்குவரத்து தான் பெரும்பாலும் எல்லோரும் உபயோகிப்பார்கள். இன்றைய காலங்களைப் போல் கைத்தொலைபேசி இல்லாத காலமாதலால் வீட்டுத் தொலைபேசி தான் ஒரே வழி.. ஆனால் அதையும் நம்மவர்கள் முக்கியமான தேவைகளுக்கு என்று மட்டும் பாவித்து சிக்கனமாக

இருப்பார்கள். வரவுசெலவுத் திட்டம் போட்டு வாழ்பவர்கள் பணம் மிச்சம் பிடிக்கவேண்டும் என்றால் தொலைபேசி தான் முதலாவது வெட்டுவிழும் இடம். அதுவும் வெளிநாட்டுக்குப் பேசவேண்டும் என்றால் உள்நாட்டு கட்டணத்தை விட 50 மடங்கு அதிகமாகும். வெளிநாட்டு தொலைபேசி தொடர்பை நினைத்துக்கூட பார்க்கமுடியாது. பிறந்த ஊருடன் தொடர்பு எல்லாமே வான் கடிதம் தான். இரண்டொரு மாதத்திற்கு ஒருமுறை என்ற அளவில் தான் தொடர்பு கொள்ளலாம். இன்றைய காலம்போல் தமிழ் தொலைக்காட்சி, தமிழ் வானொலி, தமிழ் பத்திரிகைகள் என்று ஒன்றும் அந்நாட்களில் இலண்டனில் கிடையாது. எனவே தமிழ் மொழியில் கேட்பது படிப்பது எல்லாம் அவரவர் வீடுகளில் அவரவர் வைத்திருக்கும் புத்தகங்களும் பாட்டுகளும் தான். ஊரில் இருந்து யாராவது வரும்போது புத்தங்கள், பாட்டு ஒலிநாடா கொண்டு வந்தால் அதை ஆவலுடன் வாங்கி பிரதிசெய்து வைத்திருப்பார்கள்.

அக்காலத்தில் கணவன் வேலைக்கு காலை 7 மணிக்கு சென்றால் மாலை ஆறு, ஏழு மணிவரை மனைவி வீட்டில் தான். வீட்டில் அக்கம் பக்கம் உற்றார் சுற்றார் என கலகலப்பாக வாழ்ந்த பெண்கள் இலண்டன் வந்து கிட்டத்தட்ட பகல் பத்து பன்னிரண்டு மணித்தியாலங்கள் தனியாக இருந்து பொழுதை போக்குவதென்றால் இலகுவானதல்ல. இவ்வாறான வாழ்க்கையை அனுபவித்த பெண்கள் அதை இன்றும் இப்போதுள்ள வசதிகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து பெருமூச்சு விடுவார்கள். தமிழர் சமையல்களுக்கு தேவையான பொருள்களை உள்ளூர் பேரங்காடியில் வாங்க முடியாது. மசாலா தூள், மிளகாய், தேங்காய் போன்றவை எல்லாம் குதிரைக் கொம்பு தான். தினமும் இரண்டு தேங்காய் துருவி பால் பிழிந்து கறிகூட்டி பழகியவர்களால் தேங்காய் இல்லாத சமையலை நினைத்துக்கூட பார்க்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள். ஈற்றில் பசுப்பால் விட்டு சமைக்கப் பழகிக்கொண்டார்கள் என்பது தான் நிதர்சனம்.

மண்டையைப் பிளக்கும் வெய்யில் இருக்கக்கூடிய நாட்டில் இருந்து வந்த நம் தமிழ் பெண்களுக்கு நித்தம் மழையும், மூன்று நான்கு மாதம் குளிரும் கொண்ட சுவாத்தியம் அன்று புது அனுபவம். இன்று இருப்பதுபோல் சொந்த ஊரில் இருந்துகொண்டே வெளிநாட்டு வாழ்க்கையை, காலநிலையை தொலைக்காட்சிகளில் பார்த்துத் தெரிந்துகொள்ளும் வசதி அப்போது இருக்கவில்லை. பெற்றோர். உற்றார் உறவினர் நண்பர்களை இப்பொழுது போல் ஆண்டுதோறும் சென்று பார்க்கமுடியாது, விமானக் கட்டணமும் அதிகம், ஊருக்குபோவதானால் குறைந்தது மூன்று நான்கு ஆண்டுகளாவது பணம் சேர்த்தால் தான் ஊரில் ஒருமுறை காலடி வைக்கலாம்.

இலண்டனில்-குடியேறியவர்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் வசந்தம் வீசியதில்லை. குடும்பத்தில் பிரச்சினை என்றால் ஆறுதல் சொல்லவோ நியாயம் கேட்கவோ பக்கத்தில் ஆட்கள் இல்லை.

கிராமத்தில் இருந்து படிப்பு முடிந்த கையோடு மண்முடித்து இலண்டன் போகிறோம் என்று பல கனவுகளுடன் கட்டிய கணவனை மட்டுமே நம்பி வந்த பல பெண்களின்; வாழ்க்கை வீட்டோடும் பிள்ளையை பராமரிப்பதிலும் கணவனுக்கு பணிவிடை செய்வதிலுமேயே காலம் கழிந்து விட்டது.

சிலரது வாழ்க்கை கானல் நீராக மாறியதும் உண்டு. தனது தாய்க்கு தெரிந்தால் கவலைப்படுவாள், கஷ்டப்பட்டு உழைத்து பல ஆயிரம் சீதனம் கொடுத்து திருமணம் செய்துவைத்த அப்பாவின் மனம் என்ன பாடுபடும், தமிழர் பண்பாடு ஏற்றுக்கொள்ளுமா? என்று பலவற்றையும் எண்ணி பயத்துடன் கணவனின் துன்புறுத்தல்களையும் தாங்கி, 'பிள்ளைகளுக்காக வாழ்கிறேன்' என்ற தேற்றுதலுடன், கிட்டத்தட்ட ஒரு விலங்கிடாத வேலைக்காரியாக வாழ்ந்து, அதுதான் தனக்கு ஈசன் எழுதிய வாழ்க்கை என்று விளங்கி, வாழ்க்கையை ஓடி முடித்தவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்களின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் இன்று நன்றாக வாழ்கிறார்கள். இப்பேர்ப்பட்ட தாய்மையின் அர்ப்பணிப்பை வார்த்தையில் விபரிக்கமுடியாது.

"கோயில் இல்லா இடத்தில் குடியிருக்கவேண்டாம்" என்று ஔவையார் சொன்னார் என்று வீதிக்கு வீதி கோவில்களைக் கட்டி கும்பிட்டு வந்த மக்களுக்கு இலண்டனில் அவர்களுடைய படுக்கை அறையில் வைத்திருந்த சாமிப் படம் தான் கோயில். ஆனால் இன்று பிரித்தானியாவில் பெரிது சிறிது என 30 மேற்பட்ட சைவ கோயில்கள் பரவிக் கிடக்கின்றன.

*சமூக சமய வாழ்வியல்*

1965ம் ஆண்டளவில் தமிழ்கோயில்கள் இருக்கவில்லை. இந்து மன்றங்கள் என்னும் பெயரில் மக்கள் குழுக்களாக ஒன்றுகூடி வீடுகளில் சந்திப்புகளை நடத்தி வந்தனர். ஆயினும்; கோவில் கட்டுவதற்கான முயற்சிகள் பல இடங்களிலும் நடைபெற்று வந்தது. 1977ஆம் ஆண்டளவில் கட்டத்தைதை கொண்ட சைவக்கோவில் மலர்ந்தது. இதைத் தொடர்ந்து பல திசைகளிலும் சைவ ஆலயங்கள் முளைவிட்டன.

1975ஆம் ஆண்டளவில் இலண்டனில் திருவள்ளுவர் பாடசாலை என்னும் தமிழ் பாடசாலை தமிழகத் தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலத்தில் தமிழ்மொழி ஆர்வம் இலங்கைத் தமிழர் மத்தியில் அதிகம் இருக்கவில்லை. அக்காலத்தில் இலக்கிய விருப்பு, தமிழுணர்வு கொண்டவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர் எனலாம்.

70களில் தமது பிள்ளைகளுக்கு தமிழ் வராது என்று பெருமையுடன் கூறியவர்கள் தான் ஏராளம். ஆனால் இன்று அவர்கள் பிள்ளைகள் பலர் அடையாளம் இழந்து தமிழ்சமூகத்துடன் தம்மை இணைப்பதற்கு நிறத்தைத் தவிர வேறுஎந்த முகாந்தரங்களும்

இல்லாமல் தனியாக இருந்தும், வெளிநாட்டவர்களை திருமணம் செய்தும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் பெற்றோர்களும் அதை ஏற்றுக்கொண்டு வாழப்பழகி விட்டார்கள்.

சிலர் உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக ஒரு படி மேலே போய் 'உரோமருடைய நாட்டில் இருந்தல் உரோமர் மாதிரி செய்' என்ற பழமொழியைச் சொல்லி தாங்கள் ஏதோ உரோமர் இராச்சியத்தில் இருப்பதுபோன்ற கதைகளை அவிழ்த்துவிடுவார்கள். இவர்கள் இவ்வாறு கூறுவது தங்களைத் தாங்களே சமாதானம் செய்துகொள்ளத்தான்.

**மாணவர் வாழ்வியல்**

**1970**களின் ஆரம்பத்தில் வேலை செய்ய வந்தவர்களும் 70இன் பிற்பகுதியில் படிக்க வந்தவர்களும் ஒத்தையாகத்தான் பெரும் பாலானவர்கள் வந்தார்கள். வேலை செய்ய வந்தவர்கள் வந்து சில வருடங்களின் பின்பு ஊருக்குசென்று திருமணம் செய்து மனைவியையும் அழைத்துக்கொண்டு வந்துவிடுவார்கள். ஆனால் மாணவர் வீசாவில் வந்தவர்கள் இதைச்செய்வது இலகுவான காரியமல்ல.

படிக்க வந்தவர்கள் ஆண்டுதோறும் வீசாவை புதுப்பிக்க வேண்டும். வீசாவை புதுப்பிப்பதற்கு கல்லூரியில் இருந்து நுழைவுக் கடிதம், வங்கி கணக்கு விபரம், வதிவிட ஆதரவு வழங்குபவரின் கடிதம் ஆகியவற்றை கடவுச்சீட்டுடன் இணைத்து உள்துறைப் பணியகத்திற்கு அனுப்பினால், கல்லூரியுடன் குறித்த நபர் ஒழுங்காக கல்லூரி வந்தாரா என்பதை உறுதி செய்துவிட்டுத்தான் வீசாவை புதுப்பிப்பார்கள். பாடசாலை வரவு குறைவாக இருந்தால் காரணம் கூறவேண்டும். வரவு மோசமாக இருந்தால் வீசா மறுக்கப்படும்.

மாணவர் வீசாவில் உள்ளவர்கள் வேலை செய்ய அனுமதி தேவை. இலங்கை, இந்தியா மலேசியா, சிங்கப்பூர், போன்ற பொதுநலவாய நாடுகளைச்சேர்ந்த மாணவர்கள் உள்துறை அமைச்சின் அனுமதியுடன் பகுதிநேர வேலை செய்யலாம் என்ற சட்டம் இருந்தும், சிலவேளை அதைக்கேட்டு விண்ணப்பித்தால் திருப்பி அனுப்பி விடுவார்களோ என்ற பயத்தால் அனுமதிப்பத்திரம் எடுக்காமலேயே பயந்து பயந்து வேலை பார்த்து நாட்களைக் கழித்தவர்கள் பலர் இருந்தனர். சரியான தகவல்களைப் பெறக்கூடிய சூழல் அன்று இருக்கவில்லை. குருடனுக்கு குருடன் வழிகாட்டிய நிலமைதான் அன்று இருந்தது.

படிக்கவந்த எல்லோருமே படித்து முடித்து ஈற்றில் தமிழ் பெண்ணை திருமணம் செய்து வாழ்க்கையை தொடங்கியவர்கள் அல்லர். சிலரது வாழ்க்கை கடமைஉணர்வும் அர்ப்பணிப்பும் நிறைந்தது. மாணவர் வீசாவில் 10 வருடங்கள் இருந்தால் நிரந்தர வதிவிட அனுமதி தருவார்கள் என்ற மரபு உள்ளது. அதன் பின்னர்

தான் உரிமைகளும் உதவிகளும் கிடைக்கும். ஆனால் ஆயிரக்கணக்கில் பாடசாலைக்கட்டணம் செலுத்தி, முழுநேரம் கல்லூரியில் படித்து அரை குறை வேலையும் செய்து 10 வருடங்களை பள்ளியில் கடத்துவது எளிதான காரியமல்ல.

இந்நிலையில் வட்டிக்கு பணம் எடுத்து வந்தவர்கள், அம்மாவின் தாலிக்கொடியை அடகு வைத்து வந்தவர்கள், நிலத்தை விற்று வந்தவர்கள் என பல நெருக்கடியான பொருளாதார பின்னணியைக் கொண்டவர்களும் அன்று படித்து வந்தார்கள்.

சிலரது வாழ்க்கையில் புயலும் பூகம்பங்களும் தான் மிகுதி. இலண்டன் வந்து மூன்று மாதம் கழியும்முன்னமே அம்மாக்களிடமிருந்து "மகனே நேற்று வட்டிக்காரன் வீட்டுக்கு வந்துவிட்டு போனான்" என்று ஒரு வான்கடிதம் வரும். "அக்காவை பெண்கேட்டு வந்திருக்கிறார்கள் என்ன தம்பி சொல்வது" என்று வரும் இன்னொரு கடிதம்;. இடிந்து போவார்கள் இந்த மாணவர்கள். எப்படி பணம் சேர்ப்பது எப்படித்தான் 10 வருட காலத்தை ஓட்டுவது என்கிற எண்ணம் அவர்களிடம் அலைமோதும், 'தவறாக வெளிநாடு வந்துவிட்டோமோ' என்று எண்ணிக் கலங்குவார்கள். அப்போதுதான் புரியும் 'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை' என்று சிறுவயதில் பள்ளியில் படித்தது சொல்லப்பட்டது மாட்டுக்கு அல்ல மனுசனுக்குத்தான் என்று.

ஆண்டுதோறும் வீசாவை புதுப்பிக்க வழி தெரியாதவர்கள் உள்நாட்டு பணியகத்தின் கதுவியில் (ராடாரில்) இருந்து மறைந்து போவார்கள் அல்லது ஒரு போக்கற்ற வெள்ளைக்காரியை குடியுரிமைக்காக திருமணம்செய்து தங்கள் வாழ்வைக் கரைத்துக் கொள்வார்கள்.

### 1983ம் ஆண்டிற்குப் பின் வந்தோரின் புலம்பெயர் பின்னணியும் வாழ்வும்

1983ல் இலங்கையில் தமிழருக்கு எதிராக இனவிரோத வன்முறை சிறீலங்கா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டபோது ஏராளமான தமிழர்கள் புலம்பெயரத் தொடங்கினார்கள். 'ஓப்பன் விசா' என்னும் உள்நுழைந்து விமான நிலையத்தில் அனுமதி கோரும் முறையின் கீழ் மக்கள் இலண்டன் வரத்தொடங்கினார்கள்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், படித்தவர்கள் படியாதவர்கள், வசதியானவர்கள் வசதியற்றவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கியவர்கள் என தமிழ்சமூகத்தின் சகல தளங்களிலும் இருந்து மக்கள் தஞ்சம் கோரி வந்தார்கள். இதுவரைகாலமும் வேலைக்காகவும் படிப்புக்காகவும் வந்தவர்கள் இப்போது முதல்முறையாக தஞ்சம் கேட்டு பிரித்தானியாவுக்கு வந்தார்கள்.

தஞ்சம் கோரி வந்தவர்கள் அனைவருக்கும் அகதி அந்தஸ்து கொடுக்கப்படுவதில்லை. தஞ்சம் கோரும் ஒருவருடைய பிரச்சினை,

ஐக்கிய நாடுகள் சபையின் 1951ஆம் ஆண்டு அகதி ஒப்பந்தத்திற்கு அமைவாக இருந்தால் மட்டுமே அகதி அந்தஸ்து வழக்கப்படுகிறது. அகதி அந்தஸ்து கோரும் ஒருவர் தனது பிரச்சினையை நிரூபிக்கவேண்டும். நிரூபிக்கத் தவறினால் குடியுரிமை கொடுகப்படமாட்டாது. ஆயினும்; அவர் மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீடு சில வேளைகளில் வருடக்கணக்கில் ஜவ்வு மாதிரி இழுத்துக்கொண்டும் போகும். இக்காலங்கள் மிகவும் வேதனை நிறைந்தவையாக இருக்கும். ஏனென்றால் விண்ணப்பத்தின் முடிவுவரும்வரை ஒருவர் வேலைசெய்ய அனுமதிக்கப்படுவதில்லை. அரசாங்கம் கொடுக்கும் சிறு உதவிப்பணத்துடன் காலந்தள்ள முடியாது. குடும்பம் என்றால் மகா கடினம். ஊருக்கு திரும்பி போனால்கூட பரவாயில்லை என்றும் தோன்றும். ஆயினும் பல சமுத்திரங்களையும் கண்டங்களையும் உறைபனிக் காலநிலைகளையும் சொல்லொணாத் துயரங்களுடன் கடந்துவந்த மக்களுக்கு இங்குள்ள துன்பம் ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

தொழில்சார் அனுபவத்துடன் வந்தவர்கள் ஒன்றுகூடி சமூகமன்றங்கள், கோவில்கள், தமிழ் பாடசாலைகள், ஆலோசனை மையங்கள் என்பனவற்றை உருவாக்கினார்கள். தமிழ் மளிகைக்கடைகள் பல திக்குகளிலும் முளைவிட்டன.

இதுவரைகாலமும் ஆங்கில கலாச்சாரத்தை ஓரளவு அண்டி வாழ்ந்து வந்த தமிழர்களின் வாழ்வியல் புதிதாக அகதிகளாக வந்தவர்களால் 180 பாகை திருப்பம் எடுத்தது. புதியவர்களுக்கு ஆங்கிலம் அவ்வளவாக பேசமுடியவில்லை. பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்காவிட்டால் வெட்கக்கேடு என்று சமூகமட்டத்தில் பேச்சுக்கள் எழுந்தது. தங்கள் பிள்ளைகளை தமிழ்பாடசாலைகளில் இட்டோர் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் என்பதுபோன்ற கருத்துகள் பலரையும் மொழிஉணர்வு நோக்கி நகரவைத்தது.

பொதுவாக மற்றவர்களை தோழர் என்று விழிப்பவர்கள் பொதுவுடமைவாதியாக இருப்பார் என மக்கள் நினைப்பது போல 'தமிழ்ஈழம்' என்ற பதத்தைப் பாவிப்பவர்கள்; விடுதலைப்புலிகள் என்று கருதிய காலம் போய் தமிழ்ஈழம் எல்லோருடைய குறிக்கோளும் என்று ஆகிவிட்டது.

ஆரம்பத்தில் புதிதாக வந்தவர்களின் பழக்கவழக்கங்களையும் போக்குகளையும் பழையவர்கள் எதிர்மறையாகவே பார்த்தனர். புதியவர்களால் தங்களுக்கு பிரித்தானிய சமூகத்தில் இருக்கும் நற்பெயருக்கு களங்களம் ஏற்படுவதாக உணர்ந்தனர். தாங்கள் ஏதோ பிரித்தானிய வழிவந்தவர்கள் போலவும்; புதியவர்கள் "அகதிகள்" என்றமாதிரியும் ஒரு பார்வை இருந்தது.

ஐயாயிரம் சனத்தொகை ஐம்பதாயிரமாக மாறி ஒரு இலட்சத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தது. தகரக் கொட்டகைகளையும்

கைவிடப்பட்ட கிறிஸ்தவ ஆலயங்களையும் விலைக்கு வாங்கி கோவில்களாக மாற்றம் செய்து பக்தகோடிகளுக்கு ஆன்மிக வழிகாட்டிக் கொண்டிருந்தது ஒரு கூட்டம். தமிழ் அரசியல் களத்தில் அர்ப்பணிப்பும், சமூகக் களத்தில் கடின உழைப்பும் தேவையாக இருந்ததால் நோகாமல் நுங்கு உண்ணும் ஆன்மீகத்துறையே பலரையும் கவர்ந்து இழுத்தது.

தாயகத்தில், மண்குடிசையானாலும் வெறும் கால் நிலத்தில்பட நிலத்தோடு ஒட்டிவாழ்ந்த தமிழ் மக்களுக்கு மாடிக்கட்டடங்களில் வசிப்பது பெரும் சிரமமாய் இருந்தது. நிலத்தோடு ஒட்டிய வீடுகளை வாடகைக்கு எடுத்தார்கள், வங்கியில் கடன் எடுத்து வீடுகளை விலைக்கு வாங்கினார்கள்.

1985ம் ஆண்டு காலப்பகுதிவரை பிரித்தானியாவில் குறிப்பாக இலண்டனில் சிறு மளிகைக்கடைகளின் பெரும் பகுதி வடஇந்தியார் மற்றும் பாக்கிஸ்தானியர்கள் கையிலேயே இருந்தது. இந்தியர்கள் என்றால் சிறு மளிகைக்கடை (கோணர் சொப்) வைத்திருப்பார்கள் என்ற எண்ணம்தான் இங்குள்ள பூர்வீககுடிமக்களிடம் இருந்தது எனலாம். இவர்கள் இங்கு வந்து மிகவும் துன்பப்பட்டு கடைகளை உருவாக்கி அதன் வருமானத்தில் வீடுகள் வாங்கி வசதிகளை ஏற்படுத்தி பிள்ளைகளையும் படிப்பித்தார்கள். படிப்பு முடித்த பிள்ளைகள் தமது பெற்றோர்களைப்போல் தாமும் தினமும் பன்னிரண்டு பதினைந்து மணித்தியாலங்கள் கடையினல் நின்று காய்வதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. அவர்கள் தத்தமது படிப்பிற்கு ஏற்ற வேலைகளை எடுத்துகொண்டு சென்றுவிட்டார்கள். பெற்றோர்களும் இளைப்பாற வேண்டிய வயதை எட்டிவிட்டதால் கடைகளை விற்றுவிட்டு போவதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை.

இந்த நேரத்தில் தான் ஈழத்தமிழர்கள் வரவும் இருந்தது. இன்று வட இந்தியாகள் பாக்கிஸ்தானியர்கள் நடத்திவந்த பெரும்பான்மையான கடைகளை ஈத்தமிழர்களே நடத்தி வருகிறார்கள். இவர்கள் கடைகளுடன் நிற்கவில்லை பல்வேறு துறைகளிலும் இலட்சக்கணக்கில் முதலீடுகள் செய்து வர்த்தகம் செய்து வருகின்றனர். பொதுவாக தமிழர்கள் எங்கிருந்தாலும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். பிரித்தானியாவிலும் இதே நிலைமைதான். படிப்பு, படிப்பு, ஒரே படிப்பு தான். மருத்துவம் பொறியியல் தான் இவர்களுக்கு தெரிந்த துறை. சட்டம், ஊடகம், வர்த்தகம், போன்ற ஏனைய துறைகள் இருப்பதை இவர்கள் கண்டுகொள்வதில்லை.

கடந்த 5 ஆண்டகளாக சில மாற்றம் தெரிகிறது. மருத்துவத் துறையை தவிர வேறு துறைகளும் இருக்கிறது என்ற விழிப்புணர்வு பெற்றோர்களுக்கு வந்துள்ளது போல் தெரிகிறது. ஓவியம், புகைப்படம், ஊடகம், என தமிழ் பிள்ளைகள் பல்வேறு தொழில்

துறைகளில் கல்வி கற்றுவருகின்றனர். பலர் அரசியலிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். உள்ளூராட்சி மன்றங்கள் அளவில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். உறுப்பினர்களாகவும் பலர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான தமிழ்ப் பெற்றோர் கல்வி ஒன்றுதான் எதிர்கால நல்வாழ்வுக்கு கடவுச்சீட்டு என்று கருதுகின்றனர். கல்வியிருந்தால் பணம் சம்பாதிக்கலாம், பணம் இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம் என்று நினைக்கின்றார்கள். வாழ்க்கை என்றால் என்ன? குடும்பம் என்றால் என்ன? சமூகம் என்றால் என்ன?. எமது பிறப்பின் நோக்கம் தான் என்ன? மகிழ்ச்சி எங்கிருந்து வருகிறது என்றெல்லாம் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை. அதற்கு நேரமும் இல்லை. சிந்தித்திருந்தால் தாங்கள் இப்பொழுது எங்கு போய்க்கொண்டு இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு புரிந்திருக்கும். விரைந்து ஓடும் ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்லும் ஓடம் போல் போய்க்கொண்டு இருக்கிறது தமிழர் வாழ்வியல்.

**துணை நூல்கள்**


Singala Only Act 1986: http://en.wikipedia.org/wiki/Sinhala_Only_Act

A system of standardisation of marks in 1971: http://tamilnation.co/indictment/indict010.htm

Highgatehill Murugan Temple: http://www.highgatehillmurugan.org/History.html

London Sri Murugan Temple: http://www.londonsrimurugan.org/html/history.htm

The London Tamil Sangam http://www.ltsuk.org/v3/index.php

The UN Refugee Agency http://www.unhcr.org/pages/49da0e466.html

# பிரித்தானியப் புலம்பெயர் தமிழிலக்கியத்திற்கு மூலங்களாக அமைந்த வாழ்வியல் கூறுகள்

திருமதி சொர்ணமலர் முருகையா
இலண்டன்

புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளுக்குக் கருவூலமாக அமைந்த செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பிரித்தானியா வாழ் புலம்பெயர் தமிழர்கள் பலர் பல படைப்புக்களைப் படைத்திருக்கிறார்கள். சிறு கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எனப்பல வெளி வந்திருக்கின்றன. அப் படைப்புக்களுக்கு மூலாதாரமாக இருந்த - இருக்கின்ற ஈழத்தமிழர்கள் பட்ட, படுகின்ற, துன்பதுயரங்களையும், நாளடைவில் அவர்கள் இந்த நாட்டில் அடைந்த முன்னேற்றங்களையும் சிறியளவில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழத்திலிருந்து காலத்துக் காலம் பல தமிழர்கள் இங்கிலாந்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் அப்பொழுது ஒரு நோக்கமே இருந்தது. மேற்படிப்பு இங்கிலாந்தில் படிக்கவேண்டும் என்பதேயாகும். அவர்கள் ஒருவரும் நிரந்தரமாக இங்கு வசிக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர்கள் அல்ல. மகாத்மா காந்தியிடம் அவர் இங்கிலாந்து வந்து படிக்க விரும்பியபோதும் அவர் தாயார் கஸ்தூரி பாய் சத்தியம் கேட்டு அனுப்பியது போல ஈழத்தாய்மார்களும் ஒரு கட்டுப்பாடு விதித்தே அனுப்பினார்கள். படிக்கவந்தவர்களும் படிப்பைத் தவிர எதிலும் அதிக நாட்டம் கொள்ளாமல் படிப்பையே முக்கியமெனப் படித்துப் பட்டமும் பெற்றார்கள். மேலைத்தேய நாகரீகம் சிலரை வசீகரித்தாலும், இங்கிலாந்திலிருந்த சீதோஷ்ண நிலைகளாலும், வசிக்கும் இடங்களில் இருந்த இடவசதிப் பற்றாக்குறைகளினாலும், பொருளாதார பற்றாக் குறைகளினாலும், படிக்க வந்தோர் படித்து முடிந்ததும் தாய் நாட்டுக்குத் திரும்பினார்கள். அத்துடன் படிப்பு முடிந்து திரும்பி வந்தவுடன் தாய்நாட்டில் நல்ல முறையில் உத்தியோகம் அமைந்ததும் இதற்கு இன்னுமொரு காரணமாகும்.

இந்நிலைமை திடீரென மாற்றமடைய தொடங்கியது. இலங்கையில் மாற்றமடைந்த அரசியல் நிலவரமே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. இலங்கை போத்துக்கேயரதும் டச்சுக்

காரரினதும் ஆட்சிக்குப்பின் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டது. காலனித்துவ ஆட்சிக்காலத்திற்கு முன்னர் சிங்களவர்களுக்கு எனத் தனியான மூன்று அரசுக்கள் அவர்களது பகுதிகளிலும், தமிழர்களின் அரசான யாழ்ப்பாண அரசும் வன்னிச் சிற்றரசும் வடக்குக் கிழக்குப் பகுதியிலும் இருந்தன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் பெரும்பான்மையோராகவும், மற்றைய மாகாணங்களில் சிங்களவர்கள் பெரும்பான்மையோராகவும் வசித்து வந்தனர். ஆங்கிலேயர் தமது ஆட்சி வசதிக்காக இலங்கை முழுவதையும் ஒரு ஆட்சியில் கொண்டு வந்து அரசாட்சி செய்து வந்தார்கள். இது அவர்களின் ஆட்சிக்கு மிகவும் வசதியாக இருந்தது. ஆங்கிலமே அரச மொழியாகவும் இருந்தது.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. பெரும்பான்மை வாக்குப் பெற்றவர்களே நாட்டை ஆட்சி செய்யும் உரிமை உள்ளவர்கள், என்ற ஆரசாட்சி முறை அமுலுக்கு வந்தபோது, பெரும்பான்மையான சிங்களவர்களின் கையில் அரசாட்சி வந்தது. கல்லோயா திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு எல்லையாக இருந்த காடுகளும் அழிக்கப்பட்டது. இதனால் இயற்கையாகவே சிங்க்ள்தமிழ் பகுதிகள் இருந்த நிலை மாற்றப்பட்டுத் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டவகையில் சிங்களக் குடியேற்றங்கள் நடாத்தப்பட்டுத் தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டன. இதை அடுத்து சிங்களமொன்றே அரசமொழியாக்கப் பட்டது. அத்துடன் பெரும்பான்மையாக இருந்த சிங்கள மக்களுக்கே உரிமைகள் அதிகம் கொடுக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை அப்போதிருந்த அரசியல் சிங்களத் தலைவர்களும் கொண்டிருந்தார்கள். தமிழ் (படித்த) மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குப் போவதற்கும் பல தடைகள் விதிக்கப்பட்டன. இவைகளெல்லாம் தமிழரின் அமைதியைக் குலைத்து அவர்கள் தங்கள் உரிமைகளைக்கோர வைத்தது. சாத்துவீகப் போராட்டம் தொடங்கியது. அது எவ்வித பலனையும் அளிக்காமையால் நிலைமை மோசமடையத் தொடங்கியது.

இனக் கலவரங்கள் தலைதூக்கத் தொடங்கின. காலத்துக்குக் காலம் இனக் கலவரம் வந்தாலும் 1983ம் ஆண்டு இது பெரிய அளவில் வெடித்து தமிழர்கள், 'தமிழர்கள்' என்ற ஒரு காரணத்திற்காகத் தாக்கப்பட்டார்கள். அவர்களின் பொருட்கள் சூறையாடப்பட்டன. சிங்கள அரச மொழி ஆக்கப்பட்டபோது பல படித்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்துக்கும் வேறு நாடுகளுக்கும் சென்றார்கள். இனக்கலவரத்தின் தாக்கம் தாளாமல் தமிழர்கள் நாட்டை விட்டுப் பெரியளவில் வெளியேறத் தொடங்கினார்கள். முதலில் ஐரோப்பிய நாடுகளுக்குப் போவதிலும் பார்க்க இங்கிலாந்து வருவதையே தமிழர்கள் பெரிதும் விரும்பினார்கள். அவர்கள் ஆங்கிலத்தை படித்திருந்தமையினாலும், ஆங்கிலேயரும் ஒரு அளவு மனிதத் தன்மையைக் கடைப்பிடிப்பவர்கள் என்ற காரணத்தினாலும், இவர்கள்

இங்கிலாந்துக்கே பெரும் அளவில் வந்தார்கள். அதன் பின்தான் கனடாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் போகத் தொடங்கினார்கள்.

ஈழத் தமிழரின் நிலைமை படுமோசமடையத் தொடங்கியது. தமது சொந்த நாட்டிலேயே அவர்கள் அகதிகள் ஆக்கப்பட்டார்கள். உண்ண உணவும் உடுக்க உடையும் தங்கவசதியும் இன்றித் தவித்தார்கள். இந்த நிலைமை மிக மோசமடைந்தது. இங்கிலாந்தில் இருந்த தயாளகுணம் படைத்த பிரமுகர்களுக்கும் பணம் படைத்த பிரமுகர்களுக்கும், ஐரோப்பாவில் இருந்த சமூக சமுதாய நிறுவனங்களுக்கும் ஈழத் தமிழரின் நிலமையை விளக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக "சென்டிரல் பிரிட்டிஸ் பண்ட்' (Central British Fund - CBF) என்ற ஒரு நிறுவனம் நிறுவப்பட்டு பெருமளவு தொகையான பணம் சேர்த்து ஈழத்தமிழருக்கு புனருத்தாரண வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஈழத்தமிழ் அகதிகளின் தேவை பெரிய அளவில் இருந்ததால், சிறு சிறு அளவில் வேறு நிறுவனங்களும், தனிப்பட்ட தமிழ் அன்பர்களும் தமிழர்களுக்குப் பண உதவிகள் செய்தார்கள். இது மட்டுமல்ல தமிழ் தாயகத்தில் அரசியல் பொருளாதார நிலமைகள் மேலும் சீரழியத் தொடங்கியது. அந்த நிலைமையையும் மேலைத்தேச அரசியல் சமூக நிறுவனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு அவசியமும் ஏற்பட்டது. அதன் காரணமாக ஊடகு இன் கீழைத்தாபனமாகத் 'தமிழர் தகவல் நடுவம்' திருவாளர் க. கந்தசாமி, திருவாளர் வரதகுமார் என்பவர்களாலும் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் பத்து அங்கத்தவர்களைக் கொண்டதாக இருந்தது. இதன் முதல் கட்ட காலத்தில் அதற்கு தலைவராகப் நான் பொறுப்பேற்றிருந்தேன்.

இக்காலகட்டத்தில் ஈழத்தமிழர்கள் தாயகத்தை விட்டுப் பெருமளவில் அகதிகளாக மேலைத்தேசங்கள், இந்தியா முதலிய நாடுகளுக்கும் வரத்தொடங்கினார்கள். இப்படி வந்தவர்களுக்குப் பலதரப்பட்ட தேவைகள் இருந்தன. தமிழர்களால் பல்வேறு நிறுவனங்கள் நிறுவப்பட்டு அரசாங்க உதவியோடு; இவர்களின் தேவைகளை ஒரு அளவில் பூர்த்தி செய்து வந்தார்கள். தமிழ் அகதிகளுக்கு இங்கிலாந்தின் சீதோஷ்ண நிலை, வீட்டு வசதி, வைத்திய வசதிகள் எல்லாம் பழக்கப்படாதவைகளாகவே இருந்தன. இதைவிட தாயகத்தில் இருந்து வந்த அகதிகள், தாயகத்தில் விட்டு வந்த சொந்த பந்தங்களின் நிலைமைகளை அறிய ஆவல் உடையவர்களாக இருந்தார்கள். அத்தோடு அங்கு நடக்கும் கொலைகளை, மனித உரிமை மீறல்களை, வெளி உலகத்திற்குச் சொல்லி அவர்களின் ஆதரவை பெறவேண்டிய அவசியமும் தமிழர்களுக்கு உண்டாயிற்று. தமிழ் தகவல் நிலையம், நாட்டில் நடக்கும் மனித உரிமை மீறல்களை அட்டவணைப்படுத்தி ஐரோப்பா, இங்கிலாந்து, அமெரிக்கபோன்ற நாடுகளில் இருக்கும் வெளிநாட்டு அலுவலகங்களுக்கும், மனித உரிமைப் பாதுகாப்பு நிறுவனங்களுக்கும், ஈழத்தமிழரில் அக்கறை

கொண்ட சமய நிறுவனங்களுக்கும், தனிப்பட்ட அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பி தாயகத்தின் நடப்புக்களை அறிவித்தபடியே இருந்தது.

அத்தோடு இங்கு இருந்த தமிழ் அகதிகளுக்கு, ஈழத்தில் நடக்கும் மனித உரிமை மீறல்களை உடனுக்குடன் தொலைபேசி பதிலளிப்புச் சேவை மூலம் அறியத்தந்தது. இச் செயல்கள் எல்லாம் 1983ம் ஆண்டு முதல் 1987ம் ஆண்டு வரை மிகச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தன.

1987ம் ஆண்டு இந்தியாவின் அமைதி காக்கும் படை ஈழத்திற்கு அனுப்பப்பட்டபோது ஈழத்தமிழருக்கு ஒரு நிரந்தர தீர்வு வந்துவிட்டது என்று எல்லோரும் நம்பினார்கள். அந்த அடிப்படையில் தமிழர் தகவல் நடுவத்தை மூடுவதற்கு முடிவு செய்து திருவாளர் க. கந்தசாமியும் தாயகம் திரும்பி, அங்கே அகதிகளுக்கு புனருத்தாரண வேலையை தொடரலாம் என்று அங்கு போனபோதிலும், தூரதிருஷ்டவசமாகக் கொலை செய்யப்பட்டார்.

நாட்டில் பல இன்னல்களை அனுபவித்து வந்த ஈழத் தமிழருக்கு இன்னுமொரு மிகப்பெரிய தேவையும் இருந்தது. தமிழ்ச் சமுதாயத்தினர் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்ற கூற்றின் படி தாயகத்தில் ஒவ்வொரு ஊர்களிலும் பெரியதாகவோ அல்லது சிறியதாகவே கோயில்கள் இருக்கின்றன. அங்கு தினமும் சென்று இறைவனைச் தரிசனம் செய்த தமிழர்களுக்கு இலண்டனில் சைவக் கோயில் இல்லாதோர் பெரிய குறையாக இருந்தது. இந்தக் குறையை நீக்க வடக்கு இலண்டனில் திரு. சாபதிப்பிள்ளை முருகன் கோயில் ஒன்றை நிறுவினார். அதைத் தொடர்ந்து கிழக்கு இலண்டனில் ஒரு முருகன் கோயில் நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து தாயகத்தைப் போல ஊருக்கு ஒரு கோயில் என்ற ரீதியில் பல கோயில்கள் கட்டப்பெற்று இப்பொழுது இங்கிலாந்தில் முப்பத்தைந்து கோயில்களுக்கு மேல் இருக்கின்றன.

இக்கோயில்கள் பல வகைப்பட்ட தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. இவை தமிழ் மொழி சமயக்கல்வி, பாட்டு, நடனம் முதலிய வகுப்புக்களை நடத்தி இளைய சமுதாயத்தினரின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன. சில கோயில்கள் தங்களுக்கு வருடாந்தம் வரும் வருமானத்தில் தாயகத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழருக்குத் தொண்டு செய்வதை தமது முக்கிய கடமையாகத் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் தாய் நாட்டுக்குப் போக முடியாது, போனாலும், தமிழர் என்ற ஒரே காரணத்தால் நிம்மதியாகச் சீவிக்க முடியாது என்ற ஒரு கட்டம் வந்தபோதுதான், தமிழ் மொழி தமது இளம் சமுதாயத்திற்கு தேவை என்றதை உணர்ந்ததன் காரணமாகச் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் வகுப்புக்களும் நடன வகுப்புகள் சங்கீத

வகுப்புகள் எனபனவும் தொடங்கப்பட்டு நல்ல முறையில் அவை நடத்தப்பட்டு வருகின்றன.

இது மட்டுமல்ல பொருளாதாரத்திலும் தமிழர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் இங்கு படிக்க வந்த பெண்கள் ஆண்கள் எல்லோரும் பகல் நேரத்தில் பாடசாலைக்குப் போயும் இரவு நேரத்தில் பெரிய பெரிய நிறுவனங்களுக்கு பாதுகாவலராகவும் வேலை செய்து வந்தார்கள். உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்ட நிலையில் பின் அவர்கள் பெற்றோல் நிறுவனங்களிலும் வேலைபார்த்து வந்தார்கள். இப்பொழுது தமிழர்கள் பலர் பெற்றோல் நிறுவனங்களைச் சொந்தமாகப் பராமரிக்கிறார்கள். இங்கிலாந்து குடியுரிமை பெற்ற தமிழர்கள் தமிழ் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். திரும்பிய இடமெல்லாம் இப்பொழுது தமிழ் கடைகளை காணலாம். அத்தோடு இலங்கை இந்திய பல சரக்குகளும் மரக்கறிவகைகளும் வாங்கிக் கொள்ளலாம். இது மட்டுமல்ல தமிழர்கள் பலர் பல பட்டப்படிப்புகளைப் படித்து வைத்திய நிபுணர்களாகவும், சட்டத் தரணிகளாகவும் இன்று திகழ்கிறார்கள். பல வைத்தியர்களும் சட்டத்தரணிகளும் வைத்திய நிபுணர்களும் தங்கள் தங்கள் சொந்த நிறுவனங்களை நடத்திக் கொண்டும் இருக்கிறார்கள்.

தமிழ் இளையோரும் பட்டப்படிப்புகளில் அக்கறை கொண்டு ஒக்ஸ்வோர்ட், கேம்பிரிஜ் போன்ற சிறந்த பல்கலைக்கழகங்களில் படித்து பல வகையான பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். டாக்டர், என்ஜினியர், ஆசிரியர்கள் எனப்பல திறமை வாய்ந்தவர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னுமொரு முக்கியமான மாற்றமும் இப்பொழுது சில ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஐரோப்பாவுக்கு வந்த தமிழர்கள் பெருமளவில் அங்கே வசிப்பிட உரிமை பெற்றவுடன் இங்கிலாந்து நோக்கி வருகிறார்கள். செர்மனி, பிரான்ஸ், டென்மார்க், சுவீடன், இத்தாலி போன்ற நாடுகளில் வசித்த தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலத்தில் உயர்தரப் படிப்பிப்பதற்காக இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். இவர்களும் நல்ல முறையில் படித்து முன்னேற்றம் அடைகிறார்கள். பாடசாலைகளில் சிறந்த ஆசிரியர்களை நியமித்து முதலில் இவர்களுக்கு ஆங்கிலத்தை படிப்பித்தப்பின்னரே அவர்கள் பாடத்திட்டத்தில் இருக்கும் பாடங்களைப் படிககிறார்கள். இவையெல்லாம் ஈழத்தமிழர் தாய் நாட்டிற்கு திரும்பிப் போக முடியாத நிலைமையில் புலம் பெயர்ந்த நாடுகளில் அவர்கள் அடைந்த முன்னேற்றங்களாகும்.

படைப்பாளர்கள் இவைகளைக் கருவாக வைத்து தம் படைப்புக்களைப் படைத்திருக்கிறார்கள். இன்னமும் படைப்பார்கள் என்றே நம்புகிறோம்.

# இங்கிலாந்தில் அரசாங்க, சமூகப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்பித்தல்

திரு. சிவகுருநாதப் பிள்ளை
இலண்டன்

இங்கிலாந்து ஏனைய நாட்டு மொழிகள் பேசுவதை இதுவரை ஊக்கப்படுத்துதில் பின் தங்கியிருந்தது, DFES-(கல்வித்திணைக் கழகம்) வெளியீட்டின் பிரகாரம் லண்டனில் மட்டும் 316 மொழிகள் பேசப்படுகின்றன. அதில் குறைந்தது 26 மொழிகள் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகிறது.



The Languages Ladder Stages

| Languages Ladder Stages | | General qualifications | NQF | CEF approx. |
|---|---|---|---|---|
| Mastery | grades 16&17 | | Levels 7&8 | C2 |
| Proficiency | grades 13-15 | | Levels 4-6 | C1 |
| Advanced | grades 10-12 | AS/A/AEA | Level 3 | B2 |
| Intermediate | grades 7-9 | GCSE A*-C | Level 2 | B1 |
| Preliminary | grades 4-6 | GCSE D-G | Level 1 | A2 (B1) |
| Breakthrough | grades 1-3 | Entry Level | Entry | A1 (A2) |



இதன் பிரகாரம் 2002-ம் ஆண்டில் அரசாங்கம் மொழி ஆய்வு ஒன்றை மேற்கொண்டு "எல்லோருக்கும் மொழி, வாழ்க்கைக்கும் மொழி" (*Language for all, Language for life*) என்ற தலைப்பில் தமது ஆய்வை வெளிப்படுத்தினர். இதில் கற்பித்தலில் ஊக்கம் காண்பித்து அம்மொழிக்கு அடையாளம் காட்டடப்பட்டு அங்கீகாரமும் வழங்கப் பட்டது. இதில் மூன்று முக்கிய நோக்கங்கள் அமைக்கப்பட்டன.




- மொழி கற்றுக் கொடுப்பதில் சீர்திருத்தம்
- அதை அடையாளம் காட்டி அங்கீகாரம் பெறும் வாய்ப்பு
- மொழி கற்கும் ஆர்வத்தை ஊக்கப்படுத்தல்

அசெட்மொழிகள்- (Asset Languages) என்பது அரசாங்கத்தால் மனமுவந்து ஆரம்பிக்கபட்ட திட்டம் ஆகும். இது DFES-

கல்வித்திணைக் கழகத்திற்காக கேம்பிறிஜ் அசெஸ்மன்ட் (மதிப்பீடு) தேர்வு நிர்வாகத்தால் (Cambridge Assessment and RSA Examination) செயல்படுத்தப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் மொழி கற்கும் மாணவர்களுக்கு ஒரு கல்வித் திணைக்கழக அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கும் வழிமுறையை ஏற்படுத்துவதாகும். இதில் கற்கும் மாணவர்களுக்கு வயது (Age) கட்டுப்பாடு இல்லை. தரம் (Stage) மட்டும் உண்டு. எந்தத் தரத்திலும் எந்த மாணவனும் சேர்ந்து கொள்ளலாம். தமது மொழி அறிவை விருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு வழிவகையில் தமக்குத் தாமே விரும்பிய துறையில் விருத்தி செய்வதற்கு ஏற்றவகையில் தேசிய பாடத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஒவ்வொரு பகுதிக்குமான ஆற்றல் நிலையை ஆரம்பம் முதல் பட்டாதாரி வகுப்பு வரை தாமே இதன் வழி தமது முன்னேற்றத்தைக் கணித்து முன்னேற முடியும். இது படிப்படியான தர உயர்வு எனப்படும். ஒருவர் தமிழ் மொழியில் பேச்சுத் திறனை மாத்திரம் வளர்க்க வேண்டுமானால் இத்திட்டத்தில் அதற்கு வழி அமைக்கப்பட்டுள்ளது. அவர் அதில் மட்டும் தேர்வு எழுதி அதற்கான அங்கீகாரம் பெற்ற சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம்.

மதிப்பீட்டுத் தரங்கள்.




ஆரம்பத்தில் இருந்து உயர் தராதரங்களை ('Break through' to 'Mastery') இலகுவாக அடையக் கூடிய வழிவகைகளில் பிரிக்கப் பட்டுள்ளது. இவ்வழிவகை இந் நாட்டில் மொழி கற்கும் மாணவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது. இது தமிழ் மொழிக்கு மட்டும் அல்லாது ஏனைய மொழிகளும் இவ்வாறே அமைக்கப் பட்டுள்ளது. இதனால் எல்லா மொழிகளும் ஒரே தராதரத்தில் இருப்பதற்கு இப்பாடத்திட்டம் வழி வகுத்துள்ளது.




இத் தேர்வின் மதிப்பீடு, வகுப்பறையில் ஆசிரியரால் நடத்தப் படுவது. இதற்கான சான்றிதழை அந்த ஆசிரியரிடம் இருந்து மாணவன் பெற்றுக் கொள்வான். இத்திட்டம் மட்டுமே தற்போது நடைமுறையில் உள்ளது.

## பாடத்திட்ட கட்டமைப்பு - Curriculum Framework TAMIL

புதிய அணுகு முறைகளைக் கையாண்டு மாணவர்களும் ஆசிரியர்களும் எளிதாக மொழியைக் கற்பதற்கு தேசியத் தமிழ் மொழிப் பாடத்திட்டம் வழி வகுத்துள்ளது. தற்போது அசெட் மொழிகள் நிறுவனத்தால் பன்னிரண்டு ஆசிய ஐரோப்பிய மொழிகள் இடம்பெற்றுள்ளன. அரசாங்க ஆரம்ப, உயர் பள்ளிகளில் தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் எழுத ஏற்றதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இதில் தமிழ் மொழியும் ஒன்றாகும். இந்நாட்டு அரசாங்க ஆரம்ப (Primary school ) உயர் பள்ளிகளில் (Secondary School) தமிழை ஒரு மொழியாகக் கற்க விரும்பும் மாணவர்கள் அதைக் கற்பதற்கு வழிகள் உருவாக்கப் பட்டுள்ளது. இதற்கான விவரங்களை, <http://www.ourlanguages. org.uk> என்ற இணையத்தளங்களில் காணலாம். ஆசிரியர்களுக்கான வளங்களை தரப்பட்ட இணைய வலையத்தில் காணலாம்.

உள்ளூர் நகரசபையின் பண உதவியுடன் இங்கிலாந்தில் பல சமூகப் பள்ளிகள் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ் மொழி, நுண் கலைப்பாட வகுப்புகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதைவிட கிழமைநாள்களில் பள்ளி முடிந்த பின் குழந்தைகள் கற்கும் அரசாங்கப் பள்ளிகளில் தன்ஆர்வம் கொண்ட ஆசிரியர்களால் அப்பள்ளியின் அனுசரணையுடன் தமிழ் மொழி வகுப்புகள் நடைபெறுகின்றன. அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை அசெட்மொழிகள் தேர்வு மூலம் பெறுவதால் மாணவர்கள் தமிழ் மொழிகற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஏனைய ஐரோப்பிய மொழிகளுக்கு இருக்கும் தரம் தற்போது இங்கிலாந்தில் தமிழ் மொழிக்கும் உண்டு. 2014 ஆண்டில் இருந்து முன்பள்ளி மர்ணவர்கள் (5-11 வயது) ஏதாவது ஒரு பிற மொழி கற்றல் வேண்டும் என கல்வித் திணைக்கழகம் பள்ளிகளுக்குச் சுற்றிக்கை விட்டுள்ளது. தமிழ் மாணவைர்கள் தமிழ் மொழியைப் பிறமொழியாகக் கற்கலாம்.

லண்டன் தென்கிழக்குப் பகுதியில் கடந்த 30 வருடங்களாக தமிழ்மொழிக் கலைக் கழகம் எனப்படும் சமூகப் பள்ளி தமிழ் மொழி வகுப்புகளை சனிக்கிழமைகளில் நடத்திக் கொண்டு வருகிறது. அத்தோடு இப்பகுதியிலுள்ள அரசாங்க பள்ளிகளுடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்தி அப்பள்ளியிலுள்ள வளங்களை உபயோகப்படுத்தி தமிழ் மொழியை இந்நாட்டில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் கற்றுக் கொடுக்கப்படுகிறது. புதிய தொழில்நுட்ப அணுகு முறைகளை இப்பள்ளியில் கையாளப்படுகிறது. 2007-ம் ஆண்டு மொழிகளுக்கான ஐரோப்பிய விருதையும் இக்கூட்டுப் பள்ளிகள் பெற்றுக்கொண்டன.

தமிழ் மொழி கற்பிப்பதில் புதிய கணினி வளங்களை உபயோகித்து ஏனைய ஐரோப்பிய மொழிகள் கற்பிப்பது போல தமிழ் மொழியைக் கற்பிப்பது மாணவர்களுக்கு ஊக்கத்தையும் ஆர்வத்தையும் ஆக்கத்திறனையும் உண்டுபண்ணுகிறது.

அசெட் மொழி ஸ்தாபனம் (Asset Languages) தமிழ் மொழி கற்பிக்கும் வழி முறைகளை செயல்படுத்துவதற்கு முக்கியத்தும் கொடுத்து அது ஏனைய பொது மொழிகளின் அமைப்பிற்குள் அமைய வழி வகுத்திருக்கிறது. தமிழ் மொழிக்கு என ஒரு அடையாளத்தை உண்டாக்கி மாணவர்கள் தமிழ் மொழிக்கான பெறுபேறுகளை சிறுவயதிலிருந்தே ஆரம்பித்துப் படிப்படியாக உயர் தரத்திற்கு வர ஊக்கத்தை அளித்துதவ இது வழிவகுத்துள்ளது.

# பிரான்சு நாட்டில் இலங்கைத் தமிழர் வாழ்வியல் 'பாரிஸ் கதைகள்' தொகுப்பினை முன்வைத்து

**திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
தலைவர், மொழித் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிமுகம்

இலங்கைத் தமிழர் ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குப் பல்வேறு கால கட்டங்களில் புலம் பெயர்ந்துள்ளனர். ஆரம்ப காலங்களில் தம் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும், பொருளாதாரத் தரத்தினை உயர்த்து வதற்காகவும் இத்தகைய நாடுகளுக்கு அவர்கள் சென்றனர். இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக, 1970களின் தொடக்கம் கணிசமான அளவு புலப்பெயர்வுகள் ஏற்படலாயின.

குறிப்பாக 1980களின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட போர்ச் சூழலும் அரசியல் நெருக்கடிகளும் வகை தொகையின்றி இலங்கைத் தமிழர் மேற்குறிப்பிட்ட இடங்களுக்குப் புலப் பெயர்வினை மேற்கொள்ளக் காரணமாயின.

தமது வேர்கள் நிலை கொண்டிருந்த இலங்கையின் தாயக மண்ணிலிருந்து பிடுங்கி வீசப்பட்டவர்களாய் புலம்பெயர்ந்த தேசங்களில் இலங்கைத் தமிழர்கள் சிதறிப் போனார்கள். புதிய வாழ்விடச் சூழலில் இணைய வேண்டிய தேவையும், சொந்த வாழ்விடத்தைத் துறந்த சோகமும் நினைவுச் சுமைகளுடன் கூடிய புதிய வாழ்க்கைச் சவால்களுமாக பல்வேறுபட்ட நிலைமைகளை எதிர்கொண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இவர்கள் உள்ளானார்கள்.

## புலம்பெயர் இலக்கியம்

இலங்கையிலிருந்து ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழரின் எழுத்துக்கள் 'புலம்பெயர் இலக்கியம்' எனப்படும். இத்தகையதோர் இலக்கிய வடிவத்தை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்ததுடன் அதன் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் பங்களிப்புச் செய்து வருபவர்கள் இலங்கைத் தமிழர்களேயாவர் என்பது யாராலும் மறுக்க முடியாத

உண்மையாகும். தாயகம் பற்றிய நினைவுகளை மறக்க முடியாது ஏங்குவோரையும், புதிய சூழலில் பொருந்த முடியாமல் தவிப்போரையும், தம் அடையாளங்களை இழந்து வேறுபட்ட வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டு அதனுள் பொருந்தி வாழ்வோரையும் இத்தகைய நாடுகளில் காணமுடியும்.

சுபீட்சமானதும் செல்வம் மிக்கனவுமான நாடுகளுக்குள் வாழ வந்துள்ளோம்: வாழ்கின்றோம்; வாழப் போகின்றோம் என்று இறுமாந்திருந்தோரின் கனவுகளையெல்லாம் புலம்பெயர் நிஜ வாழ்க்கை நிர்மூலமாக்கியது. இதற்கு விதி விலக்குகளும் உள்ளன. அவை அளவில் மிகக் குறைந்தனவே. முகமூடிகளைப் போட்டுக் கொண்டும், நடித்துக் கொண்டும் வாழ்வோரின் நிஜ வாழ்க்கை அனுபவங்களைப் புலம்பெயர் இலக்கியங்கள் பதிவு செய்யத் தொடங்கின. மனக் குமுறல்களையெல்லாம் நாவல்களாகவும், சிறுகதைகளாகவும், கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் அங்குள்ளோர் வெளிப்படுத்தத் தொடங்கினர். இதன் மூலம் புலம்பெயர் வாழ்வியலின் உண்மைத் தன்மைகளை உணர முடிந்ததுடன் புலம் பெயர் இலக்கிய கர்த்தாக்களையும் அடையாளம் காண முடிந்தது.

### பிரான்சில் இலங்கைத் தமிழர்

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் கி.பி. 19ம் நூற்றாண்டில் பிரான்சிற்கு வந்தனர் எனக் கருதப்பட்டாலும், இலங்கைத் தமிழர் பிரான்சில் 1970 களில் குடியேறியதாகவும், தற்போது 75000ற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர் அங்கு வாழ்வதாகவும் கூறப்படுகின்றது. 'குட்டி இந்தியா' என 1992 இல் அழைக்கப்பட்டிருந்த பிரான்சின் பாரிஸ் நகர மையத்தின் வடக்கே அமைந்திருந்த சர்வதேச ரயில் நிலையமான பாரிஸ் நோர் *(Paris Nord)* எனும் பகுதியானது, தற்போது குட்டி யாழ்ப்பாணம் என அழைக்கப்படுமளவிற்கு இலங்கைத் தமிழரின் குடியேற்றம் காணப் படுகின்றது. பிரான்சிற்கு வந்து குடியேறியோர் மூவகைப்படுத்தப்படுகின்றனர்.

1. இலண்டனுக்குள் நுழைவதற்கான பயணத்தில் இடையில் பிரான்சில் முடங்கியோர்.
2. ஏதாவதொரு நாட்டிற்குச் செல்ல உத்தேசித்து பிரான்சிற்கு வந்தோர்.
3. இவ்விரு வகையினரையும் உறவாகவும், நட்பாகவும் கொண்டு பிரான்சிற்கு வந்து சேர்ந்தோர்.

இவர்களே பிரான்சில் இலங்கைத் தமிழரின் பரம்பலையும், வாழ்வியலையும், அங்கு புலம்பெயர் இலக்கியங்களையும் வடிவமைத்தவர்களாவர்.

### புலம்பெயர் சிறுகதைகள்

புலம்பெயர் வாழ்விலை வெளிப்படுத்தும் இலக்கிய வகைகளுள் கவிதைக்கு அடுத்தபடியாகச் சிறுகதைக்கு மிக முக்கிய இடம் உள்ளது.

தொகுப்புக்களாகவும், பல்வேறு சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் தனித்தனியாகவும் பல சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

1994இல் மகாஜன வெளியீடாக வெளிவந்த 'புலம்பெயர்ந்தோர் கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் வரும் பின்வரும் விடயம் இது தொடர்பில் குறிப்பிடற்குரியது.

"புலம்பெயர்ந்தோர் கதைகள் ஏராளம். ஆனால் அவற்றைச் சொல்வதற்குத்தான் பலருக்குக் கூச்சங்கள். பிறந்த நாள், திருமணம் இன்ன பிற கொண்டாட்டங்களின்போது வீடியோக்களில் பதிவாக்கப்படும் எங்கள் முகங்கள் போலியானவை: பொய்யானவை... போதிய நெறிப்படுத்துவாரற்று சிதறிச் சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கும் எங்கள் புலம் பெயர் உண்மை வாழ்வு பதிவாக்கப்பட வேண்டும்."

### பாரிஸ் கதைகள்

இத்தகைய பின்னணியில் இலங்கைத் தமிழரின் பிரான்சு நாட்டு வாழ்வியலைப் புலப்படுத்தும் வகையிலமைந்த 'பாரிஸ் கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு இங்கு நோக்கப்படுகின்றது.

இத் தொகுப்பிலுள்ள கதைகள் 1980இன் பின்னர் எழுதப் பட்டவை. சுதந்திர அடிமை, உதிரும் இலைகள், மூன்று நகரங்களின் கதை, இதுவும் ஓர் இலை உதிர் காலம், அலையும் தொலைவு, கியூ வரிசை, பொறி, மலர்வு, நாடோடிகள், பரிசுத்த ஆவி, துளிர்ப்பு, சிறைச்சாலை, இடை வெளி, கோழியும் அய்ந்து நண்பர்களும் பல சாத்தான்களும், விடுமுறைகள் ஆகிய பதினைந்து சிறுகதைகள் இத் தொகுப்பில் அடங்குகின்றன. இவற்றுள் பல கதைகள் பல்வேறு சஞ்சிகைகளில் அல்லது தொகுப்புக்களில் ஏற்கனவே வெளிவந்தவை. சில கதைகள் இத் தொகுப்பிற்காகவே எழுதப்பட்டவை. புலம்பெயர்ந் தோரின் வாழ்வியலை வெளிப்படுத்துவதையே இத் தொகுப்பு நோக்கமாகக் கொண்டிருப்பதனை இந் நூலின் தொகுப்பாசிரியர் கி.பி. அரவிந்தன் முன்னுரையில் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"புலம் பெயர்ந்தோர் இராஜபோக வாழ்வை அனுபவிக்கிறார்கள் என்றும், அவர்களுக்குக் கஷ்டம் என்பதே இல்லையென்றும், பணம் பணமாக உழைத்துச் சேமிக்கிறார்கள் என்றும், சந்தோஷமான வாழ்வை அனுபவிக்கிறார்கள் என்றும் தப்பாகப் புரிந்திருப்போருக்கு புலம் பெயர் வாழ்வியலின் அவலங்களையும் கஷ்டங்களையும் அங்கு வாழ்வோரின் நடிப்பிற்கும் அப்பால் உண்மைத் தன்மையோடு வெளிக் கொணரும் வகையிலேயே இத் தொகுப்பு அமைகின்றது"

பிரான்சில் இலங்கைத் தமிழரின் வாழ்வியலை வெளிப்படுத்துவதாக இத் தொகுப்பு அமைவதனை இக் கூற்று உறுதிப்படுத்துகின்றது. இக் கதைகளினூடாக தாயகம் பற்றிய ஏக்கங்களும், புலம்பெயர்நாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றும்

பிள்ளைகளுக்கும் தமிழ்ப் பாரம்பரியத்தைத் தமது பிள்ளைகள் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கும் பெற்றோருக்கும் இடையிலான பிரச்சினைகளும், வேலைத்தலங்களில் எதிர் கொள்ளும் சவால்களும், குடியிருப்புக்களில் அயல் வீட்டாருடனான உறவு நிலையும், இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளில் வாழும்போது ஏற்படும் மனநிலைப் போராட்டங்களும், தனிமை மற்றும் பௌதிகச் சூழலால் ஏற்படும் பாதிப்புக்களும் எனப் பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. எல்லாக் கதைகளினதும் பொதுப் பண்பாக தாயகம் பற்றிய ஏக்கம் இழையோடியிருப்பதைக் காணலாம்.

தொழில் புரியும் இடத்தின் சவால்களும், பிரச்சினைகளும் வாசுதேவன் எழுதிய சுதந்திர அடிமை, தா.பாலகணேசன் எழுதிய உதிரும் இலைகள், மா.கி.கிறிஸ்ரியன் எழுதிய சிறைச் சாலை, கார்த்தி நல்லையாவின் அலையும் தொலைவு ஆகிய சிறுகதைகளில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளன. சுதந்திர அடிமை என்னும் சிறுகதை, ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினால் 1988இல் வெளியிடப்பட்ட நம்பிக்கையாற்றுத் தொகுதியில் வெளிவந்தது. உணவுச் சாலையில் பணிபுரியும் பிரான்சு நாட்டுப் பணியாளர் இருவர் அந் நாட்டுத் தேசிய தினவிழாவில் கலந்து கொள்ளச் சென்றுவிட்டதால், தனது வேலையையும் சேர்த்து மூவரின் வேலையைத் தனியாளாகச் செய்யும் இலங்கைத் தமிழர் ஒருவரின் அவலத்தைக் கூறுவது.

தன்னைத் தானே சுய விமர்சனம் செய்து கொள்ளும் இக் கதா பாத்திரம், பழம் பெருமை பேசியே காலத்தைக் கடத்தும் தமிழர் நிலையை எண்ணி வேதனையுறுவதோடு சுதந்திரமற்று வாழும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றது.

"சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தைப் பிரகடனம் செய்த தேசத்தவர்கள் சுதந்திரம் கொண்டாடும் நாளில் நான் அடிமையாகச் சிதைகின்றேன்" என்பதன் மூலம் இது உணர்த்தப்படுகின்றது. மேலும் பிரான்சு நாட்டு சுதந்திர தினக் கொண்டாட்ட நினைவு தாயக நினைவுகளையும் தூண்டிவிடுவதனையும் பின்வரும் கூற்று நிறுவுகின்றது. "சுதந்திரம் வேண்டிப் போராடும் எனது சமூகத்தின் துப்பாக்கி வேட்டுச் சத்தத்திலும் இதோ என்னருகே சுதந்திரம் கொண்டாடுதற்குக் கொளுத்தப்படும் வெடிச் சத்தத்திலும் குழம்பிப் போய்" என வரும் வரிகளில் தாயக நினைவுகள் பற்றிய செய்தி குறிப்பிடப்படுகின்றது.

புலம்பெயர் தேசங்களில் உறவுகளின்றித் தனித்து விடப்பட்ட நிலையினைப் பின்வரும் வரிகள் உணர்த்துகின்றன.

"உணர்ச்சிகளின் வீதியில் அநாதையாய் கைவிடப்பட்டு, உண்மை என்னும் குளிர் காற்றில் உடல் நடுங்க, வரட்டுக் கௌரவப் படிகளுக்குள் ஒடுங்கிப் போய் கற்பனைகளைப் பிச்சையாய்த் தேடிக் கொண்டிருக்கும் நான்"

வேலைப் பளுவும், சுதந்திரமற்ற நிலைமையும் காரணமாக வேலையைத் துறக்கத் துணிகின்றான். வேலையைத் துறந்தால் அந்த இடத்தினை நிரப்ப வரப்போவது இன்னொரு தமிழன் என்றும், அதுவும் அந்நாட்டு மொழியில் 'வேலை உண்டா ஐயா' என்று மட்டும் கேட்கத் தெரிந்த இலங்கைத் தமிழன் என்றும் கூறுவதன் மூலம் வேலைக்காக அலைந்து திரியும் இலங்கைத் தமிழரின் இன்னலும் கூறப்படுகின்றது.

*'உதிரும் இலைகள்'* சிறுகதை எரிமலை என்னும் சஞ்சிகையில் 1992இல் வெளிவந்தது. கதை தாயகக் கனவுகளுடன் ஆரம்பமாகின்றது. பிரான்சில் வாழும் கண்ணனின் துக்கத்தில் வரும் கனவாக அது விரிகின்றது. ஊர் நினைவுகள் கனவுகளாகஞ் வீட்டுக் கூரையில் நின்று கூவும் சேவல், கரைந்து கொண்டே பறக்கும் காகங்கள், பாக்கு உரலில் 'டொக் டொக்' என்று ஓசையெழுப்பியபடி பாக்கு இடிக்கும் பாட்டி, படுத்திருக்கும் அவன்; மீது ஏறி விளையாடும் அக்காவின் மகனான சின்ன மருமகன் என இந்த அழகான கனவு வேலைக்குப் பபுறப்படுவதற்கான அலார சத்தத்துடன் முடிவிற்கு வருகின்றது.

நிஜ வாழ்க்கையில் குளிர் கொல்கிறது: வேலை பார்க்கும் உணவுச்சாலை கொடூரமாகத் தெரிகின்றது: ஓயாத வேலை உடலையும் மனதையும் களைக்கச் செய்கின்றது.

தாயக நினைவுகள் பற்றிய ஏக்கமும் பின்வரும் வரிகளினூடே வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம்.

"ஊரிலையெண்டா வயல் வெளிகளில் கொக்குகளும் குருவிகளும் திக்குத் திக்காய்ப் பறந்து.... மாலை தெருவோரத்தில் மரங்களுக்குள் ஒளித்துக் கொண்டும் பதுங்கு குழிக்குள்ள படுத்துக் கொண்டும் தெருக்களில் தம்பி அவங்கள் புலியாகவும் ஆமியாகவும் மாறி மாறி விளையாடிக் கொண்டிருப்பாங்கள்"

இதன் மூலம் அக் குறிப்பிட்ட காலத்து இலங்கையின் தமிழ்ப் பிரதேசத்து நிலைமைகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

*'சிறைச்சாலை'* என்னும் சிறுகதையும் வேலைப் பளுவின் சுமை பற்றியும் ஓயாது உழைக்க வேண்டியுள்ளமையையும் குறிப்பிடுகின்றது. இக் கதையில் வரும் சூரியன் என்னும் பாத்திரம் இதனை விளக்குவதற்காககப் படைக்கப்பட்டிருக்கின்றது. தனது குடும்பத்தினை பிரான்சுக்கு எடுப்பதற்காக தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது சூரியன் ஓயாது உழைக்கின்றான். இறுதியில் நோய்வாய்ப்படுகின்றான். கவனிப்பாரற்ற நிலை. இறுதியில் எதுவுமே சாத்தியமாகாத நிலையில் பிரான்சில் இறந்து விடுகின்றான்.

வேலையின் கஷ்டங்களை விளக்கும் இன்னுமொரு கதை கார்த்தி நல்லையாவின் அலையும் தொலைவு. இக் கதை 1994இல் புலம் பெயர்ந்தோர் தமிழர் மகாநாட்டுச் சிறப்பு மலரில் வெளிவந்தது. மிக இளம் வயதில் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து பிரான்சிற்கு வந்து

விசா இல்லாமை காரணமாக அரச அங்கிகாரமற்ற சட்ட விரோதமான வேலைகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் இலங்கைத் தமிழரின் கதையாக அமைவது. ஊரில் நான்கு பெண் சதேகாதரர்களுக்கு ஒரு ஆணாய்ப் பிறந்த விட்ட ஒருவன் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம். வெளிநாட்டில் மகன் இருக்கின்றான் என்ற தைரியத்தில் செலவுகளுக்கான பணத்தை எதிர்பார்க்கும் உறவுகளுக்கு அங்கே வாழும் அவர்களின் கஷ்டங்கள் புரிவதில்லை.

குறைந்த கூலி, தாமதக் கொடுப்பனவு, வீட்டுக் கஷ்டங்களையே சுமந்து வரும் கடிதங்கள், ஓய்வற்ற நிலை, வீட்டில் வளர்க்கும் நாய் பூனைகளுகட்கு காட்டப்படும் மரியாதைகூட இல்லாத புலம்பெயர் தேசங்களின் நிலை. ஏச்சும் பேச்சும் அவமானமுமாய் சில சந்தர்பங்களில் வேலையையும் இழந்து அவர்கள் படும் துன்பத்தைச் சித்திரிப்பதாக இக் கதை அமைகின்றது.

க.கலாமோகனின் *'மூன்று நகரங்களின் கதை'* என்னும் சிறுகதை குறிப்பிட்ட ஒரு காலத்தில் இலங்கையின் வட பாகத்தில் தொலைத் தொடர்புகள் ஏதுமற்றிருந்த நிலையையும் தொடர்புகளுக்காக கொழும்பிற்கு வரவேண்டியிருந்தமையையும் விளக்குவது. கொழும்பிற்கு வந்து வெளிநாட்டிலுள்ளவர்களுடன் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்த சூழலை விபரித்து தொலைபேசி உரையாடலின் ஊடாகவே பிரதான கதையைக் கூறுவது. யாழ்ப்பாணம், கொழும்பு, பிரான்சுஸ் என்னும் மூன்று நகரங்களின் ஊடாக இக் கதை சித்திரிக்கப்படுகின்றது. பிரான்சில் போதிய வருமானம் இன்றி வாழும் நிலையில் ஊரில் இருந்து வரும் 'காசு அனுப்பு: தம்பிய அங்க எடு: அடிக்கடி பேசு என்னும் வார்த்தைகள் அவனை அலைக்கழிக்க ' பிராங்க் மெத்தையில் சயனம் கொள்பவனாக அனைத்துக்கும் ஓம் போடுகிறான்' அவன். அங்கு வாழ்வோரின் பொருளாதார நிலை குறித்து விளக்குவதாக இக்கதை அமைகின்றது.

செந்தமிழர் என்பவர் எழுதிய *'பொறி'* என்னும் கதையும் தொலைபேசி உரையாடல் பற்றியதே. இதில் தொலைபேசி உரையாடலிலேயே முழுக் கதையும் சொல்லப்படுவது சிறப்பாகும். பிரான்சில் இருக்கும் ஒரு உறவினரை முன்வைத்து தமது பிள்ளைகளை ஏஜென்சி மூலம் அங்கு அனுப்புவதற்குப் பாடுபடும் பெற்றோரின் நிலையைச் சித்திரிப்பது. இடையில் சில பிரதேசங்களில் தங்க வைத்து பேசிய தொகையைவிட அதிக பணம் கேட்டு பயணத்தைத் திசைதிருப்பி தாமதமாக்கி அல்லலுற வைக்கும் தரகர்மாரால் ஏற்படும் சிக்கல்களை இக் கதை விளக்குகின்றது. நாட்டின் சூழலால் தமது பிள்ளைகளைத் தப்புவித்து வெளிநாட்டிற்கு அனுப்பத் துடிக்கும் பெற்றோருக்கும், தம்மை நம்பியிருக்கும் உறவுகளைப் பாதுகாக்க விரும்பும் புலம்பெயர் உறவுகளுக்கும் இடையில் 'மனிதர்களைக் கடத்தும்' தரகர்களின் ஏமாற்று நாடகங்கள் இக் கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் நாட்டில் வாழ்ந்தபோதும் வாழ்க்கைத் துணையைத் தமிழ்ப்பண்பாட்டில் குறிப்பாக இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து எதிர்பார்க்கும் போக்கினையும் பண்பினையும் சில கதைகளில் காணலாம். பாரிஸ் பார்த்திபன் எழுதிய *'இதுவும் ஓர் இலையுதிர் காலம்'*, ரமேஷ் சிவரூபன் எழுதிய *'இடை - வெளி'* ஆகிய கதைகள் இத்தகையன. 'கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பார்ப்பதற்கு ஜீன்ஸ் போட்ட பெண்கள் வேண்டுமென்றாலும் கல்யாணம் செய்வதற்கு சேலைகள் கட்டும் பெண்களைத் தேடும் தேசமிது' என்பதில் இது உணர்த்தப்படுகின்றது.

அட்வான்ஸ் கொடுத்து அவ்வாறான பெண்களை ஊரிலேயே புக்கிங் செய்யும் நிலையும் இதுவும் ஓர் இலையுதிர் காலம் கதையில் விளக்கப்படுகின்றது. இவற்றில் முதலாவது கதை 1993இல் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது.

மேலும் முன்னர் பிரான்சிற்கு வந்து விசா பெற்று விட்ட குடும்பங்கள் பின்னர் வந்து சேருவோரின் அகதி நிலையைத் தமக்குச் சாதகமாக்கி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களது உழைப்பைச் சுரண்டும் நிலையையும் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் மறந்து தம் கணவன்மாரை விடுத்து பிற நாட்டு இளைஞர்களுடன் சுற்றித் திரிவதையும் இக்கதை விளக்குகின்றது.

தமிழ்ப் பெற்றோருக்குப் புகலிட நாட்டில் பிறந்து வளரும் பிள்ளைகளின் நிலைமைகளையும் அவர்களைத் தமிழ்ப் பண்பாடடுடன் வாழ வைக்க விரும்பும் பெற்றோரின் விருப்பத்தையும் மையமாக வைத்துப் பின்னப்பட்ட கதை இடை - வெளி என்பதாகும். தமது பெண்பிள்ளைக்குத் தமிழைக் கற்பிக்க வரும் யாழ்ப்பாணத்துத் தமிழ் இளைஞனையே அவளுக்கு வாழ்க்கைத் துணையாக்க பெற்றோர் விரும்புகின்றனர் விசா இல்லாத அவனும் நிரந்தமாக அங்கு வசிக்கும் இந்தக் குடும்பத்தினருடன் இணைவதை விரும்புகின்றான். ஆரம்பத்தில் அவளது சுதந்திரத்தை அங்கீகரித்த அவன் கலியாணம் என்று வந்ததும் கட்டுப்பாடுகளை விதிக்க இது அவளுக்குப் பிடிக்காமல் போக அவளால் அவன் மிகச் சுலபமாக நிராகரிக்கப்பட்டு விடுகின்றான். தலைமுறை மாற்றம் தந்த இடைவெளியின் அவலங்களை இக் கதையில் காணலாம்.

தாயக விடுதலைக்காய் துப்பாக்கி ஏந்திப் போராடி சந்தர்ப்ப சூழலால் பிரான்சுக்கு வந்து விட்ட ஒரு போராளியின் மனப்போராட்டத்தைச் சித்திரிப்பதாக அமைவது க.கலைச்செல்வனின் 'பரிசுத்த ஆவி' என்னும் சிறுகதை. உணவுச் சாலையொன்றில் கோழிகளை அறுத்து பொரித்து உணவு தயாரிக்கும் வேலை. இது தாயகத்தில் போராடிய நினைவுகளுக்குள் அவனைத் தள்ளுகின்றது. துப்பாக்கி ஏந்திய கைகள் கோழிகளை அறுத்துப் பொரித்துப்

பரிமாறுவதையும் கொன்று குவிக்கப்பட்ட மக்களையும் சகோதரப் படுகொலைகளையும் நினைவூட்ட அந்த நினைவுகளால் அவன் அலைக்கழிக்கப்படுகின்றான்.

"கோழிகளைத் தூக்கி மேசையில் எறிந்தேன். ஆமி கடந்து போன வெளிக்குள் கிடந்த உடல்கள்போல் சிதறிக் கிடந்தது" என்பதன் மூலம் அந்தக் குறிப்பிட்ட கால சம்பவங்களையும் மனக்கண் முன் கொணர்கிறார் ஆசிரியர். ஏறத்தாள மனநோயாளியாக ஆகி விட்ட நிலையில் இப் பாத்திரம் சித்திரிக்கப்பட்டிருப்பது இது போன்ற பலரது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைகின்றது. இதேபோல மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவனின் கதையாக அமைவது ச.தில்லை நடேசனின் துளிர்ப்பு என்னும் கதை. இது 1998இல் அம்மா இதழில் வெளிவந்தது.

சிவலிங்கம் சிவபாலன் எழுதிய *'மலர்வு'* என்னும் கதை பிரான்சில் இனத்தாலும், நிறத்தாலும், மொழியாலும், பிரதேசத்தாலும், பண்பாட்டினாலும் வேறுபட்ட ஒரு குடும்பத்தை அயல்வீட்டாராகக் கொண்டு அவதியுறும் நிலை பற்றியதாகும். தம் வீட்டுப் பிள்ளைகளை அவர்களது பிள்ளைகளுடன் பழக விடாமல் தடுப்பதும் கணவனை மிகவும் கவனமாக அயல்வீட்டுப் பெண்ணின் பார்வைக்குத் தப்ப வைக்கப் பாடுபடுவதும் கதையில் முழுவதுமாக இடம்பெறுகின்றது. ஆனால் இறுதியில் பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் செல்லும்போது மனிதாபிமானத்துடன் இவர்களது பிள்ளைகளை விரும்பியோ விரும்பாமலோ அயல்வீட்டார் பொறுப்பெடுக்கின்றனர். மனிதாபிமானம், இரக்கம் என்பன மதம் மொழி என்பன கடந்தவை. வீணான அச்சங்களால் வரும் மனக்கஷ்டங்களை இது விளக்குகின்றது. இலங்கைத் தமிழர் தாமும் தமது பிள்ளைகளும் பாரம்பரிய அடையாளங்களை இத்தகைய தேசங்களில் வாழ்வதன் மூலம் இழந்து விடக் கூடும் என்ற அச்சத்துடன் வாழ்வதை இக் கதை எடுத்தியம்புகின்றது.

கி.பி. அரவிந்தன் எழுதிய *'நாடோடிகள்'* என்னும் கதை புலம்பெயர் தேசத்தினால் விசா மறுக்கப்பட்டு இன்னுமொரு தேசத்திற்கு நாடோடிகளாய் அலையும் இலங்கைத் தமிழர் பற்றியது. 'நாங்கள் பறவையைப் போன்றவர்கள். எல்லைகள் இன்றியே பறப்பவர் நாங்கள்' என்று பாட்டுப் பாடித் திரியும் நாடோடிக் கூட்டத்தார் போலவே இலங்கைத் தமிழரின் நிலையும் ஆகிவிட்டதைக் குறிக்கின்றது.

புவனன் எழுதிய கியூ வரிசை என்னும் கதையும் வதிவிட அனுமதிக்காக அல்லலுறும் இலங்கைத் தமிழரின் அவலத்தைச் சொல்வது. நீண்ட நெடு நேரமாக முதல்நாளே வந்து இடம் பிடித்து குளிர் மழை என்பவற்றைப் பொருட்படுத்தாமல் உணவு, படுக்கை எல்லாவற்றையும் வரிசையிலேயே கழித்து இறுதியில் முறை

வரும்போது இன்று தீர்ந்து விட்டதென்றோ அனுமதி மறுக்கப்பட்டோ பதில் கிடைப்பதை ஏமாற்றத்துடன் பொறுத்துக் கொண்டு இன்னுமொரு நாளுக்காக ஏங்கும் நிலை சித்திரிக்கப்பட்டுள்ளது.

சி.புஸ்பராஜாவின் *'கோழியும் அய்ந்து நண்பர்களும் பல சாத்தான்களும்'* என்னும் கதை, 2001இல் மூன்றாவது மனிதன் இதழில் வெளிவந்தது. இக் கதை, பிரான்சு நாட்டிலுள்ள சில பிரதான நகரங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்ட ஐந்து நண்பர்கள் எப்போதும் குளிரூட்டப்பட்ட கோழியையே உண்பதால் தாம் போகும் வழியில் உயிர்க் கோழிக் கறியைச் சாப்பிட விரும்பி கோழிப் பண்ணைகளை வழியில் தேடியலைந்தும் கிடைக்காத நிலையை நகைச்சுவையுடன் விபரிப்பது. அலைக்கழிக்க வைப்பதில் திருப்தி காணும் மனிதர்களின் நிலையையும் அந்த ஐந்து நண்பர்களும் சந்திக்கும் மனிதர்கள் ஊடாக - அதாவது சாத்தான்களாக இவர்கள் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள் - விபரித்துள்ளார் ஆசிரியர்.

பிள்ளைகளின் பாடசாலை மற்றும் பெற்றோரின் வேலைத்தல விடுமுறைகளைக் கழிப்பதற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள் பற்றியதாக அமைவது சு.கருணாநிதியின் 'விடுமுறைகள்' என்னும் கதையாகும்.

### மதிப்பீடு

பாரிஸ் கதைகள் என்னும் தொகுப்பிலுள்ள பதினைந்து கதைகளும் இலங்கைத் தமிழர் பிரான்சில் பெறும் பல்வேறு அனுபவங்களைச் சித்திரிப்பனவாக அமைந்துள்ளன. புலம்பெயர் நாட்டில் எதிர்நோக்கும் சவால்களும், பிரச்சினைகளும் இவற்றை எதிர்கொள்ளும் முறைமைகளும் இக் கதைகளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கு அவர்கள் பெறும் அனுபவங்கள் தாயக நினைவுகளை இயல்பாகவே ஏற்படுத்துவதையும் இக் கதைகள் பதிவு செய்திருக்கின்றன. இலங்கைத் தமிழ் குறிப்பாக யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் அதே வேளை பிரான்சியச் சொற்களும் பொருத்தம் நோக்கிக் கையாளப்பட்டுள்ளமையையும் காணலாம். பிரான்சில் இலங்கைத் தமிழர் புதிய சூழலில் எதிர்நோக்கும் வேலைப்பளு, தலைமுறை மோதல், கணவன் மனைவி பூசல், பிள்ளைகளின் நிலை, பிள்ளைகள் தமிழ்மொழியை பண்பாட்டை அறியாது வளர்தல், அகதி நிலை, அகதிநிலையும் மறுக்கப்படல், பொருளாதார நெருக்கடி, நிம்மதியற்ற நிலை, ஊரிலுள்ளோர் உண்மை நிலையைப் புரியாதிருத்தல், ஊர் நிலை பற்றிய கவலை முதலான பல்வேறு விடயங்கள் இக் கதைகளின் கதாபாத்திரங்கள் ஊடாகப் பேசப்பட்டிருக்கின்றன.

### துணைநூல்

பாரிஸ் கதைகள், 2004. தொகுப்பாசிரியர்: கி.பி.அரவிந்தன். வெளியீடு: அப்பால் தமிழ், திருகோணமலை, இலங்கை.

# பிரான்சுத் தமிழர் வரலாறும் வாழ்வியல்

கவிஞர் பாமல்லவன்
பிரான்சு

## புலம் பெயர்தல்

உலகினில் மாந்தர்கள் பிறக்கின்றனர். எதாவது ஓர் நாட்டினில், ஓர் இனத்தினில், ஓர் மதத்தினில்தான் பிறக்கின்றனர். அப்படி பிறக்கின்றவர்கள் தங்களின் பிறந்த நாட்டினையும், தாய் மொழி யினையும் அனைத்திற்கும் மேலாக எண்ணித்தான் வாழ்கின்றனர்.

வாழ்வின் தரங்கள், வாழும் முறைகள், வளமை நிலைகள், குமுகாய அமைப்புகள், இயற்கையின் சூழல்கள். நாட்டுக்கு நாடு வேறு படுவதால் மாந்தர்களின் மன நிலைகளில் மாற்றங்களும் விழைவுகளும் தோன்றுகின்றன. அதனால் தாங்கள் பிறந்த நாட்டினை விட்டுஅவர்கள் வேறு நாடுகளுக்குச் சென்று வாழ விரும்புகின்றனர்.

இதற்கு பொருளாதாரம் முதற் காரணமாக உள்ளது என்று சொல்லலாம். ஒரு சிலர் உறவினர்கள், நண்பர்கள் அழைப்பினால் அயல் நாடுகளுக்குச் செல்கின்றனர். சிலர் தாங்கள் கற்ற கல்விக்கு ஏற்ப அலுவல்கள் கிடைக்காத காரணங்களினால அவர்களை ஏற்கும் நாடுகளுக்குச் செல்லுகின்றனர். சிலர் அந்நாட்டின் குடியுரிமையுடன் பிறப்பதால் அங்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்வதாக ஓர் கணிப்பு கூறுகின்றது. இதில் தாயக தமிழர்களை விட ஈழத்து தமிழர்கள்தான் கூடுதலாக உள்ளனர். அவர்கள் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது உலகமெங்கும் பரந்து வாழ்கின்றனர். அவர்களால்தான் தமிழும் அதிக அளவில் விரைவாக பரவுகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

## அயல்நாட்டு மொழிகள்

நாம் தமிழர்கள். தமிழினைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். தமிழின் ஆற்றலால் உலகில் உள்ள அத்தனை மொழிகளையும் எளிதாக புரிந்துக் கொள்ளவும், பேசவும், எழுதவும் முடியும்.

நாம் தமிழ் மொழிக்கு அடுத்து ஆங்கிலம் கற்கின்றோம். ஆங்கிலம் கற்பதனால் பயணம் செய்யும் பொழுது அது பயன்படுகிறது.

அதன் பிறகு எந்தெந்த நாட்டுக்குச் செல்லுகின்றோமோ அந்த நாட்டின் மொழியினைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். தமிழின் துணை கொண்டு எந்த மொழியினையும் விரைவில கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஆங்கிலம் பேசும் நாடுகளைத் தவிர வேறு நாடுகளில் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு வாழ இயலாது. பிரான்சு நாட்டில் ஆங்கிலம் பேசினால் யாரும் மதிக்க மாட்டார்கள். அவர்களுக்கு அவர்களின் மொழியினில் தான் பேச வேண்டும். அதை தவறாகப் பேசினால் கூட அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். வேறு மொழியினில் பேசினால் ஏற்க மாட்டார்கள்.

பெரும்பாலும் தமிழர்களுக்கு படிக்க, எழுத, பேச, உச்சரிப்பில் தவறுகள் இருந்தாலும் ஓரளவிற்கு அந்நாட்டு மக்கள் போன்றே பேசுகின்றனர். பல உயர் பணிகளும் செய்கின்றனர். பலர் நன்கு கற்றுத் தேர்ந்து வெள்ளை இனத்து மக்களுக்கு நிகராக உள்ளனர். புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் மிகத் திறமையுடன் உள்ளனர். அவர்களுக்கு ஏறத்தாழ அந்நாட்டு மொழிகளே தாய் மொழிகளாக அமைகின்றன அதனால் அவர்களுக்கு தாய் மொழியின் ஆற்றல் கிடைக்கின்றது.

மொழியில் வல்லமை கொண்ட தமிழர்கள் அரசு பணிகளிலும், உயர் நிலைகளிலும் உள்ளனர். ஆனால் என்னத்தான் உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாகாது என்பதுபோல் நமக்கென்று ஓர் வரம்பு உள்ளது. அதனைத் தாண்டி நாம் செல்ல இயலாது. நேர் முகமாகச் சட்டப்படி அது இல்லை எயென்றாலும் மறைமுகமாக அது நடந்து கொண்டுதான் உள்ளது. வெளிமாநிலத்திலிருந்து வருபவர்களையும், வெளிநாட்டிலிருந்து வருபவர்களையும் ஆட்சி பீடத்தில் அமர வைத்து அழகு பார்க்க இவர்கள் என்ன தமிழர்களா?

## உணவு

தமிழர்களைப் பொருத்த வரை அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமிழ் நாட்டின் வாழ்க்கை முறையில்தான் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். உணவு முறைகளில் அதிக மாற்றங்கள் இல்லை. தமிழகத்தில் கிடைக்கின்ற அத்தனை சமைக்கும் பொருட்களும் அங்கு கிடைப்பதனால் சமையல் முறைகளும் மாறவில்லை. சைவர்கள் அங்கு சைவர்களாகவே உள்ளனர். பல்வேறு நாட்டு மக்களும் அங்கே ஒன்றாக வாழ்வதனால் அவர்கள் நாட்டு உணவுகளையும் உண்ணும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கின்றது. அசைவத்தில் அங்கு அனைத்தும் உண்டு.

## குமுகாய அமைப்பு

குமுகாய அமைப்பின் வகையினில் பார்க்கையில் தனி மாந்தனோ அல்லது குடும்பமோ சேர்ந்து வாழும் வகையினில் அடிப்படை வசதிகள் உண்டு. அதில் எந்த குறையும் சொல்ல இயலாது.

அப்படி எதாவது குறைகள் இருந்தால் அதனைத் தீர்க்க பல குழுக்களும், மனித உரிமை அமைப்புகளும் உண்டு. பொருளாதார முறையிலும், சட்ட வகையிலான ரீதியிலும் உதவிகள் புரிவார்கள்.

பல ஆண்டுகள் ஒரே நாட்டில் பணி செய்து வாழ்பவர்களுக்கு அந்நாட்டின் குடியுரிமை பெறும் வாய்ப்புள்ளது. அது எல்லா நாட்டிற்கும் பொருந்தாது. சில நாடுகள் அதனை ஏற்பதில்லை. நம் தமிழர்கள் அதனைப் பற்றி அதிகம் எண்ணுவதில்லை அவர்கள் வாழ்வதற்கு தொழில் வணிகமோ, பணி மனையே இருந்தால் போதும். சிந்தையின் நிறைவே செல்லும் என வாழ்பவர்கள்.

## பொருளாதாரம் - தொழில்

நடுத்தர நிலையினர்கள் தான் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். சாண் ஏற முழம் சறுக்கும் என்ற நிலை தான் வாழ்க்கை. பல ஆண்டுகள் பணத்தை சேமித்தோ, வங்கியில் கடன் பெற்றோ தான் தாயகம் வந்து தமது ஊரையும், உறவுகளையும் பார்த்துச் செல்லுகின்றனர். இவர்கள் பெரும்பாலோர் அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாழ்கின்றனர்.

சிறிது செல்வ நிலையில் உள்ளவர்கள் சிலர் தனியாக வீடுகள் வாங்கி வாழ்கின்றனர். இவர்கள் இதற்கென கூடுதலாக வீட்டு, வருமான வரியும் செலுத்தி வாழ்கின்றனர்.

## தொழில் நிலைகள்

தமிழர்களின் தொழில் நிலைகள் என்று பார்த்தால் அவர்கள் வண்ணம் அடிப்பது, கட்டிடங்கள் கட்டுவது, மரத்தச்சு வேலைகள் செய்வது, மகிழுந்துகளைப் பழுது பார்ப்பது, அங்காடி, சிறு கடைகள் வைத்திருப்பது, அலுவலகங்களில் பணி புரிவது போன்ற தொழில்களைத் தான் செய்கின்றனர். பெரும் நிறுவனங்களுக்கோ, வர்த்தக வணிகவளாகங்களுக்கோ அதிபர்களாக இருப்பதில்லை.

தமிழர் குடும்பங்களில் கணவன், மனைவி இருவருமே பணி செய்பவர்களாக உள்ளனர். அப்படி பணி செய்தால்தான் அந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்ப வாழ இயலும். ஒருவர் மட்டும் பணி செய்யின் குடும்ப செலவிற்கே நெருக்கடி ஏற்படும் நிலை வரும். வசதியான வாழ்விற்கு அது தேவையான ஒன்று.

## தமிழர் குமுகாயமும் - மொழியும்

தமிழர் குடும்பங்கள் தங்களுக்கென்று ஒரு சில குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் மட்டுமே பழகி வாழ்கின்றனர். ஒரு சில தமிழர்கள் பலருடனும் உறவினர் போல் வாழ்கின்றனர். சிலர் தாங்கள் உண்டு தங்களின் வீடும், குடும்பமும் உண்டு என்ற நிலையினில் தனித்தே வாழ்கின்றனர். ஆனால் திருமணம், விழாக்கள் போன்ற நிகழ்வுகளுக்கு அத்தனை பேர்களும் ஒன்றாக கூடுகின்றனர்.

அதிகமாக சிக்கல் தரக்கூடியது தமிழர்களின் தலைமுறைதான், சிங்கப்பூர், மலேயா போன்ற நாடுகளில் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்வதால் அங்கு எழும் குமுகாய சிக்கல்கள் சிறியது. ஆனால் ஐரோப்பா நாடுகளில் வாழும் தமிழர்கள் எண்ணிக்கையில் குறைவு என்பதால் அவர்களின் வாழ்வியல் நிலைகளில் சிக்கல்களும் துன்பங்களும் அதிகமாக வருகின்றன. காரணம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் வந்தவர்கள் தமிழ் பேசினார்கள். அவர்களின் பிள்ளைகள் சிலரும் தமிழ் பேசினார்கள். ஆனால் அவர்களின் பெயரப் பிள்ளைகள் தமிழ் பேசாது, அந்நாட்டின் மொழியினை பேசுகின்றனர். மூன்றாவது நான்காவது தலைமுறையினர் தமிழைப் பேசுவதே கிடையாது.

உருவம் தமிழரின் உருவமாக இருக்கும், பெயரும் தமிழ்ப் பெயராக இருக்கும். ஆனால் அவர் பேசுவது தமிழ் மொழியாக இருக்காது. ரீயூனியன், மொரிசியசு போன்ற நாடுகளில் நடந்ததைப் போல்தான் ஐரோப்பிய நாடுகளிலும் நிகழும்.

ஏன் இதையெல்லாம் சரி செய்ய தமிழ் மன்றங்களும் கழகங்களும் இல்லையா? அங்கு தமிழ் வளர்க்கும் அறிஞர்கள் இல்லையா? உண்டு. ஆனால் அதனை செய்யும் அறிஞர்களுக்கும், தமிழர்களுக்கும் பொருளாதார வசதி இல்லை. கழகங்களும், மன்றங்களும், இயக்கங்களும் தங்களின் தனி மாந்தன் புகழுக்காகவும், தங்களைச் சேர்ந்தவர்களுக்காகவும், தங்களின் சொந்த நலனுக்காகவும்தான் அதனை நடத்துகின்றனர்.

ஒரு சில இடங்களில் தமிழ்ப் பள்ளிகளும், தமிழினைச் சொல்லித்தரும் அமைப்புகளும் உண்டு. இதற்கு விதி விலக்காக ஈழத்து தமிழர்கள் தமிழை வளர்ப்பதிலும், தமிழ் கல்வி, நடனம், கலைப் பள்ளிகள் நடத்துவதில் முன்னிலையில் உள்ளனர்.

மூன்று தலைமுறையினர் என்றாலும் தமிழைத்தான் தாய் மொழியாகப் பேசுகின்றனர். தங்களின் பிள்ளைகளுக்கு தமிழ் பெயரையே வைக்கின்றனர். ஆனால் அவர்கள் அவர்களுக்குள்ளே தான் அனைத்தையும் செய்துக் கொள்ளுகின்றனர் தவிர தாயக தமிழர்களுடன் அவர்கள் அதிகமாக ஒட்டுவதில்லை.

### சமயம் - பண்பாடுகள்

அயல்நாடுகளில் இந்து சமயக் கோயில்கள் உண்டு. பள்ளி வாசல்கள் உண்டு. கிறித்துவ ஆலயங்கள் உண்டு. அதனால் தமிழர்களுக்கு தங்களின் தெய்வங்களை வணங்க எந்தத் தடையும் இல்லை. பொங்கல் விழா போன்ற விழாக்களின் பொழுது சாதி, தமயம் மறந்து தமிழர் என்ற ஓர் இன உணர்வுடன் ஒன்று சேர்ந்து கொண்டாடுகின்றனர். அங்கு தமிழர்களின் ஒற்றுமையைக் காணலாம.

ஆனால் பல கழகங்கள் பல்வேறு நாட்களில் பொங்கல் விழாவினையும், புத்தாண்டு நிகழ்வினையும் கொண்டாடுகின்றனர். அதனால் எல்லோரும் ஒரே நாளில் ஒன்று சேர முடிவதில்லை.

**திருமணம்**

பிள்ளைகளுக்கு திருமணம் என்று வரும்பொழுது பல சிக்கல்கள் தோன்றுகின்றன. கடல் கடந்து வந்தாலும் கடவுளும், சாதிகளும் உண்டு. அதனால் அந்தந்த சாதிகளில்தான் பிள்ளையையும், பெண்ணையும் தேடுகின்றனர்.

ஆனால் தமிழர்களான நமக்கு பண்பாடும், நாகரிகமும் உண்டு. அயல்நாடுகளில் அதனை சில வேளைகளில் கட்டிக்காத்தும், சில வேளைகளில் காவாமலும் வாழ்கின்றார்கள். சிலருக்கு அது போல் அமைகின்றது. பலருக்கு அதுபோல் அமைவதில்லை. அதனால் பிள்ளைகளுக்கு வயது தள்ளிப் போக திருமணம் முடியாமலேயே போய் விடுகின்றது. நம் பிள்ளைகள் வெள்ளை இனத்து மக்களுடனும் பிற இனத்து மக்களுடனும் திருமணம் செய்துக் கொள்ளுகின்றனர்.

கற்புநெறி என்று பார்த்தால் இளைய தலைமுறையினர் அதைப் பற்றி அதிகம் கவலைப் படுவதில்லை. எங்கும், எதிலும் சுதந்தரம். தமிழரின் பண்பாடு, நாகரிகம் இதில் எடுபடாது. அதைப் பற்றி நாம் நினைத்தாலோ, பேசினாலோ அவர்களுக்கும் நமக்கும் பிளவு ஏற்படும். கண்டும் காணாதும் இருப்பதே மேல். என்றே எண்ணுவோம். இது ஓர் கசப்பான உண்மை.

அயல்நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் மிகப் பெரிய குறை நம் நாடு போல் உறவுகளும், நண்பர்களும் நமக்கென பிடித்த இடங்களும், மனம் விட்டு பேச நான்கு பேர்களும் இல்லாததுதான்.

விரும்பும் உணவுகள் விரும்பும் வேளைகளில் கிடைக்காது அறிவுரை, அனுபவங்கள் சொல்ல பெரியோர்கள் இருப்பர் அவர்கள் சொல்வதை ஏற்பதும், ஏற்காமல் போவதும் இரண்டாம் நிலை.

எப்பொழுதும் தமிழ் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கும். அது ஒன்று போதாதா? ஒவ்வொரு நாளும் நம் தாயகத்தை நினைக்காத தமிழர்கள் அங்கு கிடையாது. குளிர் காலங்களிலும், துன்பங்கள் நிகழும் பொழுதும் நம் நாட்டு நினைவே அதிகம் வரும். வெள்ளாட்டு மந்தையில் கருப்பாட்டு நிலையில் தானே வாழ்கின்றனர். தெரிந்தே பரந்த சிறையினில் வாழ்கின்ற கூட்டமாக அயல்நாட்டுத் தமிழர்கள் வாழ்கின்றனர். இன்ப விலங்கை தாங்களாகவே பூட்டிக் கொண்ட வாழ்நாள் கைதிகள். ஆனால் தீர்ப்பு அவர்களின் கைகளில் தான் உள்ளது அதை அவர்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும்

எழுதலாம். என் உயிர் போவதென்றால் அது தமிழ் மண்ணில் தான் போக வேண்டும் என்று எண்ணுபவர்களும் அங்கு உண்டு.

உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தமிழன் தமிழனாகத்தான் வாழ்கின்றான். அவனது வாழ்வியல சில, பல மாற்றங்கள் கொண்டதாக இருக்கலாம். ஆனால் முதல நிலை தொடக்கம் தமிழக வாழ்வியல் தான். கற்ற தமிழ் காடு வரை மாறாது. தமிழரின் நிலையும் அது போல்தான்.

அயல்நாடுகளில் தமிழரின் வாழ்வியல் என்பது வளமை மிக்க வறிஞனின் வாழ்வியல் என்றே கூறலாம்.

# புதுச்சேரித் தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாறு

முனைவர் ஏ. எழில்வசந்தன்
புதுச்சேரி

புதுச்சேரி தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரிலிருந்து 170கல் தொலைவில் உள்ள இடம். புதுச்சேரி மாநிலத்தின் தலைநகரும் ஆகும். ஏறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்ததால் பிரெஞ்சுச் சொற்களை வெகு லாவகமாக அடித்தட்டு மக்களும் பயன்படுத்தும் இடமாகவும் இருக்கிறது. ஆந்திர மாநிலத்தின் அருகாமையிலுள்ள ஏனாம் நகரும் கேரளத்தின் அருகேஉள்ள மாஹே நகரும் தெலுங்கு, மலையாள மொழிபேசும் மக்களைக் கொண்டு புதுவை மாநிலத்தின் அங்கங்களாக உள்ளன. இவற்றோடு தமிழகத்தின் நாகப்பட்டினத்தின் அருகேயுள்ள காரைக்கால் பகுதியும் புதுவையுடன் அங்கம் வகிக்கிறது.

இப்படிப் பன்மொழி பேசும் பகுதிகளைத் தன் இணைப்பாகக் கொண்ட புதுவை பிரெஞ்சுக் காலனியத்தின் போழ்து தனது காலனி நாடுகளுக்கு வேலையாட்களைக் கூலிகளாக அனுப்பி வைத்தது. அப்படி கூலியாட்களாகச் சென்றவர்களில் பலர் அந்தந்த நாடுகளில் தங்கியும் ஒருசிலர் தாயகம் திரும்பியும் தங்களது தொடர்பை வைத்துக்கொண்டுள்ளனர். இந்நிலையில் பிரென்சுக்காரர்களின் காலனி ஆதிக்கத்தில் புதுவையில் இருந்து சென்றவர்கள் ஏராளமானோர் ஆகும்.

புதுச்சேரியில் பிரான்சு வாழ் தமிழர்களையும், புலம் பெயர்ந்து தாயகம் திரும்பிய பிரெஞ்சுத் தமிழர்களையும் சொல்தாக்கள் எனும் சொல்லால் அழைக்கின்றனர். சொல்தாக்களிடம் நேர்கண்டு உரையாடியும், சில குறிப்புகளின் அடிப்படையிலும் அமைவதே இக்கட்டுரை. பிரெஞ்சுக் காலனியமும் தமிழர்கள் புலப்பெயர்வும் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே டச்சுக்காரர்களும் டேனிஷ்காரர்களும் புதுச்சேரிப் பகுதியில் தம் வணிக வளாகத்தை நிறுவி உள்ளதை அறிய முடிகின்றது. புதுச்சேரிக்கு முதன்முதலில் வந்து வணிகம் செய்தவர்கள் போர்ச்சுக்கீசியர் ஆவர். இவர்களுக்குப் பின் 1616இல் டச்சுக்காரர்கள் புதுச்சேரிக்கு வந்தனர். இவர்களை அடுத்துப் புதுச்சேரியில் வணிக வளாகம் அமைத்தோர் டேனிஷ்காரர்கள் ஆவார்.

1656 வாக்கில் டேனிஷ்காரரர்கள் புதுச்சேரியை விட்டு வெளியேற மீண்டும் டச்சுக்காரரர்கள் 1664 முதல் 1670 வரை புதுச்சேரியில் தங்கினர். ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு மேல் புதுச்சேரி பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்து வந்துள்ளது. கி.பி. 1673ஆம் ஆண்டு பிப்ரவரி நான்காம் நாள் பெல்லான் ஷே என்ற பிரெஞ்சு வணிகன் புதுவையில் காலடி வைத்தான். பிரான்சு நாட்டு மன்னர் 14ஆம் லூயி 01.09.1664ஆம் நாள் ராயல் கம்பெனி எனும் பெயரில் ஒரு வணிகக் குழுமத்தை ஏற்படுத்தினார். இதனோடு இதற்கு முன்பு இருந்த குழுமமும் இணைக்கப்பட்டது. இந்த இணைப்பின் மூலம் பிரெஞ்சு வணிகக் கழகம் பெரிய அளவில் வணிகத்தை நடத்தத் திட்டமிடப் பெற்றது. இந்தியாவிலும் பிரெஞ்சு வணிகக் கழகம் தமது வணிகத் தளங்களை அமைத்தது.

இந்தியாவில் சூரத் நகரில் அமைக்கப் பட்டிருந்த பிரெஞ்சிந்திய வணிகக் கழகத்திற்கு முகலாய மன்னர் ஔரங்கசீப் தமது ஒன்பதாம் ஆட்சி ஆண்டில் ஆணை ஒன்றை அனுப்பி உள்ளார். அந்த ஆணை பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் நிரந்தரமாய்த் தங்கி வணிகம் செய்ய அனுமதி தந்திருந்தது. இதன்படி சூரத் நகரில் ஒரு செயலகத்தை ஏற்படுத்திக் கொண்டனர். பிரெஞ்சு வணிகக் கழகத்தினர் தம் நாட்டிலிருந்து கொண்டு வரும் பொருள்களுக்குச் சூரத் நகரில் ஒருமுறை சுங்கத் தீர்வைச் செலுத்துதல் வேண்டும். செலுத்திய பிறகு அப்பொருளை இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் விற்கும் உரிமையைப் பெற்றனர். இதேபோல் இந்தியாவில் பொருள்களை வாங்கித் தம் நாட்டிற்குக் கொண்டு செல்லும் உரிமையையும் பெற்றனர். 1670இல் புதுச்சேரியில் வணிக வளாகம் அமைக்கலாம் என்று ழான்பெப்பேன் (Jean Pepein) தலைமையில் அமைக்கப்பெற்ற குழு அறிக்கை அனுப்பியது. இதன்படி 04.02.1673 அன்று தெலாஹே என்ற கப்பல் தலைவனின் நம்பிக்கைக்குரிய துணைப்படைத்தலைவன் பெலான்ழே தெ லெஸ்ப்பினேவும் காவல் தலைவரும் புதுச்சேரிக்கு வந்து இறங்கினர். இந்நாளே புதுச்சேரி வரலாற்றில் பிரெஞ்சியர் ஆட்சியின் தொடக்க நாளாக அமைந்தது. 14.01.1674 அன்று பெலான்ழேவின் உதவியாளராகப் பிரான்சுவா மர்த்தேன் புதுச்சேரிக்கு வந்தார். பெலான்ழே பிரான்சுக்குத் திரும்பிய பின்னர் 06.05.1675இல் மர்த்தேன் புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். பின்னர் 1681இல் சூரத் நகருக்குச் செல்ல மர்த்தேன் பணிக்கப் பெற்றார்.

1686ஆம் ஆண்டில் இயக்குநர் தலைவராகப் *(Director General)* புதுச்சேரிக்குத் திரும்பினார். இடையில் நிகழ்ந்த அரசியல் போட்டிகள் போர்கள் காரணமாகப் புதுச்சேரியை இழந்தும் சிறைப்பட்டும் மீண்ட மர்த்தேன் புதுச்சேரியை மீண்டும் பெற்று 1706-இல் புதிய கோட்டை ஒன்றைக் கட்டி முடித்தார். இதன் பின்னர்ப்

புதுச்சேரி குறிப்பிடத் தக்க பிரெஞ்சுக் குடியிருப்பு நகரமாக மாறியது. பிரான்சுவா மர்த்தேன் சென்னையில் இருந்த கத்தோலிக்கத் துறவி கரோன் என்பவரின் ஆலோசனைப்படி பூந்தமல்லி தானப்ப முதலியாரைத் தரகராக நியமித்துக் கொண்டார் என்று ஞானுதியாகு (1965) குறிப்பிட்டுள்ளார். தானப்ப முதலியார் வணிகக் கழகத்திற்கும் வணிகர்க்கும் இடையே தரகராய் அமைந்து வணிகம் செழித்தோங்க வழிவகை செய்துள்ளார். தானப்ப முதலியார், வணிகத்தை மேன்மேலும் வளர்ப்பதற்காக உள்நாட்டு வணிகர்களையும் நெசவாளர் களையும் பொது ஊழியர்களையும் புதுச்சேரிக்கு வர வழைத்தார். இவர்கள் புதுச்சேரியில் ஏற்கனவே இருந்த வணிகர்களோடும் நெசவாளர்களோடும் இணைந்து பணி யாற்றினர். வெளியூரிலிருந்து வந்தோர் வசதிக்குத் தக்கவாறு வீடுகளைக் கட்டிக் கொள்ள அவர் ஏற்பாடுசெய்தார். இதனால் பிராமணர், வேளாளர் முதலிய சாதியினரும் குடியேறினர்.(சிலம்பு நா.செல்வராசு:2007), என்றும், வணிக நோக்கில் இந்தியாவிற்கு வந்த பிரெஞ்சுக்காரர்கள் தமிழ்ப் பகுதிகளை காலனி நாடுகளாக மாற்றிய பிறகு, தமிழரைத் தாம் பிறந்த தாயகத்தை விட்டுப் பலவேறு நாடுகளுக்கு அடிமைகளாகக் குடியேற்றினர் (க.ப.அறவாணன்:2001) என்றும் தெரிவிக்கிறார்கள்.

இத்தகைய வரலாற்றுப் பின்புலம் ஒருபுறம் இருக்க. இனிவரும் கட்டுரை புதுவையிலிருந்து சென்று பிரான்ஸ் நாட்டில் சில காலம் தங்கி பணியாற்றி விட்டு மீண்டும் புலம் பெயர்ந்து புதுவையில் வந்து தங்கி பிரான்ஸிற்கும் புதுவைக்குமிடையேயான ஒட்டுறவை வைத்துக்கொண்டுள்ள சொல்தாக்கள் எனும் குடிகளிடம் கண்ட நேர்காணலும் அவர்கள் அதற்கிறுத்த பதில்களும் வரிசைப்படுத்தப்பட்டுச் செல்லும்.

### நேர்காணலில் கிடைக்கப்பெற்ற தரவுகள்

*1.* புதுச்சேரியில் இருந்து பெரும்பான்மையோர் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டே புலம் பெயர்ந்துள்ளனர். மிகச்சிலரே பதினான்கு, பதினாறு வயதில் சென்றுள்ளனர். தாத்தா வழியில் சிலரும் தந்தை வழிச் சிலரும் பிரெஞ்சுக் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். தாத்த வழிப் பிரெஞ்சுக் குடியுரிமைப் பெற்றோர் முதல் உலகப் போரின்போது பிரெஞ்சு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்ததின் பேரில் சென்றுள்ளனர்.

*2.* பிரெஞ்சுக் குடியுரிமையைப் பெறுவதற்கான முதன்மையான காரணம் வேலைவாய்ப்பு ஆகும். வேலைவாய்ப்பினால் கிடைக்கக் கூடிய கைநிறைய ஊதியமும் அதனால் வருகின்ற ஒளிமயமான எதிர்காலம். இக்காரணங்களினால் இந்தியாவில் வங்கி மேலாளராகப் பணிபுரிபவர்கூட தனது வேலையை விட்டு நீங்கி பிரான்ஸிற்குச் செல்ல ஆசைப்படுகிறார். குறைந்தது வாரம் 35 மணிநேரம் வேலை செய்தால்

கூட 100 யுரோ பணம் பெறமுடியும். இவற்றோடு அரசு தரும் சலுகைத் தொகைப் போன்ற காரணங்களால் பிரெஞ்சுக் குடியுரிமைப் பெற பலர் விருப்பப்படுகின்றனர்.

3. பிரெஞ்சுக் குடியுரிமைப் பெறுவதற்கு மதமாற்றம் செய்யத் தேவையில்லை மொழியை மட்டுமே அவர்கள் தகுதியாக நினைக்கிறார்கள். பிரெஞ்சு மொழி நன்றாகப் பேசத் தெரிந்தால் போதுதம் குடியுரிமைப் பெறுவது எளிது. அதுவே தகுதி.

4. பிரெஞ்சுக் குடிமக்களுக்கும் பிரெஞ்சிந்திய குடிமக்களுக்கு மிடையே வேற்றுமை இருக்கிறது, இனவெறி இருக்கிறது. அரசாங்கம் எந்தவித பாகுபாடும் காட்டாமல் ஓட்டளிப்பு, கல்வி போன்றவற்றில் சமத்துவத்தையும், சமஉரிமையையும் கொடுத்துள்ளது. பிரெஞ்சு சமூகம் திறமைசாலிகளையும், அறிஞர்களையும் மதிப்பளிக்கும் சமூகம். ஊழல்கள் மிகச் சிலவே உள்ள இந்த பிரெஞ்சு நாட்டில் 1960ற்கு முன்பெல்லாம் கறுப்பர் உயர்பதவி வகிக்கும் அதிகாரிகளாக வரவே முடியாது. ஆனால், இன்றைய நிலை முற்றிலும் மாறி உள்ளது. நம் தமிழர்கள் கூட மிக உயர்ந்த அதிகாரப் பதிவிகளில் உள்ளனர்.

5. பிரான்ஸ் நாட்டில் பெரும்பாலானோர் ரோமன் கத்தேலிகர்களாக உள்ளனர். இவர்கள் தங்களது தாத்தா அல்லது தந்தை வழியிலேயே, அதாவது இரண்டு தலைமுறைக்கு முற்பட்டிருந்தே இந்து சமயத்திலிருந்து கிறித்துவ சமயத்திற்கு மாறியவர்கள், குழந்தை பிறக்கும் போது பெரிய விழா எடுத்து பெயர் சூட்டுவதும், இறந்தபின் அமைதியாக ஊர்வலம் சென்று கல்லறையில் புதைப்பதும் பிரான்ஸ் நாட்டு மதச் சடங்காகவும், இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் பலரின் மாதச் சடங்குகளாலாகவும் உள்ளன.

6. தமிழர்கள் எங்கு சென்றாலும் தங்களது காலாச்சாரத்தை விடவில்லை. அதேபோன்று தங்களது சாதியையும் விட மறுக்கின்றனர். பிரான்ஸ் வாழ் தமிழர்களே தங்களது சாதிகளுக்குள்ளாகவே பெண் கொடுத்தல், எடுத்தல் கொள்கின்றனர். முற்காலத்தில் பிரெஞ்சுக் குடியுரிமையைப் பெறவேண்டு மென்றாலே தங்களுது சாதிய பழக்கவழக்கங்களை விட்டுவிட வேண்டும். ஆனால், இப்போது அந்த நடைமுறையும் கெடுபிடியும் இல்லை.

7. பிரெஞ்சுப் பெயர்களில் குடும்பப் பெயர் கட்டாயம் இடம்பெற்றிருக்கும். முன்பெல்லாம் பிரெஞ்சுக் குடியுரிமைப் பெறப் போகும்போது. தமிழர்கள் தங்களுக்கான பிரெஞ்சுக் குடும்பப் பெயரினை தூதரக அதிகாரிகளிடம் கோருவர். பிரெஞ்சு மொழியறிவு இல்லாத இவர்களிடம் அவ் அதிகாரிகள் குடும்பப் பெயர்களாக, ஆலே-செருப்பு, நிமிஸ்-சட்டை, சம்தி-சனிக்கிழமை, திமாஸ்-நோ என்னும் பெயர்களை வேண்டுமென்றே இழிவுபடுத்திச்

சூட்டிவிடுவாரகள அபபடிச சுடடப்பட்ட குடும்பப் பெயர்கள் இன்னும் வழி வழியாகத் தொடர்கின்றன. ஆயினும் பலர் கிறித்துவராக இருந்தாலும் தமிழர்கள் தமிழ்ப் பெயர்களையே தங்களுது குடும்பப் பெயர்களாகக் கொண்டு விளங்குகின்றனர். சான்றாக, ஒருவரின் பெயர், பெரிய நாயகி சாமி. அவர் தன்னுடைய முன்னொட்டாகிய பெரியா என்பதை குடும்பப் பெயராகவும். சாமி என்பதை தன்னுடைய பெயராகவும் வைத்துக் கொண்டுள்ளார். அவர் வழி வந்தோர்களின் பெயரின் முன்னொட்டெல்லாம் பெரியா என்றே வழங்கப் பெறும். பெண் திருமணமாவதற்கு முன் தன் குடும்பப் பெயரையும் திருமணம் ஆனபின் தன் கணவரின் குடும்பப் பெயரையும் வைத்துக் கொள்ளலாம். ஒருசிலர் இரண்டு குடும்பப் பெயர்களையும் இணைத்துக் கொள்வர்.

8. திருமணம் செய்ய இருக்கும் பெண் அன்புடையவளாக இருக்கின்றாள் என்பதைப் பார்க்கின்றனர். ஆயினும் தமிழர்கள் பெண் வீட்டாரிடமிருந்து வரதட்சணை வாங்குவதை இங்கும் விடவில்லை. பெரும்பாலும் தமிழர்களின் திருமணம் தங்களது கலாச்சாரத்தை ஒட்டியே நிகழ்த்தப் பெறுகின்றது. பிரெஞ்சுக் கலாச்சாரத்தைப் போன்றே திருமணம் முடிந்த பிறகு பார்ட்டி கொடுக்கும் வழக்கம் உள்ளது.

9. பெரும்பான்மையான தமிழர்கள் இரண்டாம் உலகப்போரின் போதே குடியேற்றப்பட்டனர். இன்றைய நிலையில் தமிழர்கள் தங்களது படிப்பு, திறமைக்கு ஏற்ப நல்ல பணியினைப் பெற்று உயர்ந்த நிலையில் உள்ளனர். பிரெஞ்சு மக்களால் நம்மக்களுக்கு எவ்விதத் தொந்தரவும் கிடையாது மாறாக நம் தமிழர்கள் பிரெஞ்சுக் காரரர்களின் கலாச்சாரத்தில் தலையீடு செய்யும் போதுதான் பிரச்சனை ஆரம்பம் ஆகின்றது.

10. பிரெஞ்சுப் பண்பாடு தமிழர் பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கமாக ஆடம்பரமான திருமணம், ஆடம்பரத்திற்காகச் செலவு செய்தல் போன்றவைகளாகும்.

11. பிரான்ஸ் நாட்டில் கிரிக்கெட் கிடையாது. இந்நாட்டின் தென்பகுதியில் மர்சை எனும் ஒரு பகுதி உள்ளது. அங்குதான் இந்த பெத்தாங்கு விளையாட்டை விளையாட ஆரம்பித்தனர். ஒரு குழுவிற்கு இரண்டுபேர் வீதம் ஒன்றிற்கு மேற்பட்ட குழுக்கள் இணைந்து விளையாடும் ஆட்டம் இது. இவ்வாட்டத்தின் ஆடுபொருளாக இரும்புக் கோலிகள் இடம் பெறுகின்றன. பணியிலிருந்து ஒய்வு செய்ய வயதானோர் பொழுதுபோக்கிற்காக விளையாடப்படும் ஆட்டம் இது. புதுவையில் பெத்தாக்கு தவிர்த்து பிரெஞ்சுக்காரரர்கள் விட்டுச் சென்ற விளையாட்டுகள் வேறு ஏதும் இல்லை.

*12.* பிரான்ஸ் நாட்டில் சொல்தா என்றால் வீரன் என்று பொருள். இச்சொல்லால் பிரான்ஸ் நாட்டில் கூப்பிட்டால் பெருமை என்றும் அதுவே புதுச்சேரியில் கூப்பிட்டால் இழிவாகவும் நினைக்கிறார்கள். ஏனென்றால் சொல்தா என்பது அடிமட்ட வீரனை (அ) பொதுவாக இராணுவத்தில் பணியாற்றி திரும்பியவரைக் குறிக்கும் சொல்லாகும். சொல்தாவிற்கு அடுத்த பதவி கப்ரால் என்பதாகும். இராணுவத்தில் *15* வருடம் முடிந்து வீடு திரும்பியவரை சொல்தா என அழைக்கின்றனர். நிறைவாக,பிரெஞ்சு ஆட்சியின் போது கூலிகளாகச் சென்ற புதுவை வாழ்த் தமிழர்கள் நாளடைவில் பிரான்ஸிற்குச் செல்வதையும், அங்கு பணிபுரிந்து விட்டு வருவதையும் பெருமையாக நினைத்தனர்; நினைக்கின்றனர். அது இன்றளவும் தொடர்கின்றது. பிரான்ஸ் சென்று திரும்பியவர்களை இவ்வூர் மக்கள் சொல்தா என்று அழைக்கின்றனர். இம்மக்களைப் பொறுத்தவரை சொல்தா என்றால் பெரும் பணக்காரன் கண்மூடித்தனமாகச் செலவு செய்பவன் என்பதாகும்.இன்றைய நிலையில் பிரெஞ்சு குடியுரிமைப் பெறுவதற்கு புதுவையில் பல இலட்சங்கள் வரைப் புரளுகின்றன. உயர்சாதி மக்கள்கூட குடியுரிமை பெற்ற தாழ்சாதி பெண்ணை பணம் கொடுத்து திருமணம் செய்து கொள்ள முன் வருகின்றனர். காரணம், பணப்புழக்கமும், பிரான்ஸ் சென்று வந்தால் பெறக்கூடிய சமூக மதிப்பும் ஆகும். இது புதுவையைப் பொறுத்தவரை ஒரு வணிகமாகவே நடக்கிறது.எது எப்படியோ, தமிழர்கள் தங்களின் சமூக அடையாளத்தை இழக்காது உலக அரங்கில் உயர்ந்தால் அதுவே நமக்குப் பெருமை. மேற்கண்ட நேர்காணல் வழி அதனையே அறிந்துகொள்ள முடிகிறது.

**துணை நூல்கள்**


1. அறவாணன், க.ப., தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு? தமிழ்க்கோட்டம், *11*, இரண்டாம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி *05*.
2. செல்வராசு, சிலம்பு நா. ஆனந்தரங்கப்பிள்ளை, சாகித்திய அகதெமி, நியுடெல்லி.


**பயன்பட்ட இணைய முகவரி**

http://www.wikepedia.tamil.org.

**தகவலாளி**

Mr. Perthieves, Airport Engineerring Manager, France, (Working period 1952 to 1984).

# ஈழத்தமிழரின் அரசியல் மீள் உருவாக்கத்தில் புலம்பெயர் தமிழரின் பங்களிப்பு கனடாவை மையப்படுத்திய ஆய்வு

திரு கே.ரி.கணேசலிங்கம்
அரசறிவியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

## அறிமுகம்

இலங்கையின் அரசியலில் 2009 முன் 2009 பின் என வேறுபடுத்தல் ஒன்றை ஏற்படுத்த முடியும் என்பது கடந்தகால அனுபவங்கள் ஊடாக சாத்தியப்படுத்தமுடியும். அதன் அடிப்படையில் இலங்கை தொடர்பாகச் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள மனித உரிமை மீறல் விவகாரம் கனடாவின் கவனத்தை அதிகம் பெற்றுள்ளது. இது புலம்பெயர்ந்துள்ள கனடாவாழ் ஈழத்தமிழர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளும் அவர்களின் கோரிக்கைகளைக் கனடிய அரசு அங்கீகரித்ததன் பயனாக ஏற்பட்ட விளைவாகவே அளவீடு செய்யப்படு கின்றது. இலங்கையில் நிகழ்ந்த பாரிய யுத்தம் ஏற்படுத்திய கொடுமைகளால் ஈழத்தமிழர் புலம்பெயரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.கனடாவில் பெருபான்மையான ஈழத்தமிழர் குடியுரிமை பெறவும் சுதந்திரமான வாழ்வுரிமையை உத்தரவாதப்படுத்தவும் கனடிய அரசாங்கங்கச் சட்டங்கள் வாய்ப்பளித்தன. இதனால் கனடாவில் குடியேறிய ஈழத்தமிழர் தமது அரசியல் வாழ்வுரிமையையும் அரசியல் உரிமையையும் மட்டும் கருத்தில் கொள்ளாது தமது புலத்தையும் அதில் போராடிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழரின் உரிமைகளுக்காகவும் பங்கினை ஆற்றினர். கனடிய வாழ்த் தமிழர்கள் மட்டுமன்றி கனடிய அரசையும் ஈழத்தமிழர் சார்புநிலைக்குட்படுத்திய புலம்பெயர் தமிழர்கள் ஈழத்தமிழரின் மீள் உருவாக்கத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்துவருகின்றனர்.

## ஆய்வுக்கான பரப்பு

2009 களுக்குப் பின்னர் ஈழத்தமிழரின் கனடாவாழ் புலம்பெயர் உறவுகள் பின்வரும் அரசியல் நடவடிக்கையில் அதீதகவனம் செலுத்தினர்.அதனால் ஈழத்தமிழர் தமது உரிமைக்கான பேராட்டத்தினைச் சர்வதேச மயப்படுத்தவும் அதனூடாக

உரிமைக்கான அணுகுமுறையை மாற்றிக் கொள்ளவும் வாய்ப்புக்கிடைத்தது. அந்த வரிசையில்

**ஈழத்தமிழரான ராதிகா சிற்சபேசன் தெரிவு**

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்த ராதிகா சிற்சபேசன் இளவயதில் கனடாவுக்கு பெற்றேருடன் புலம்பெயர்ந்தவர் உயர் கல்வியை கனடாவில் கற்றாலும் ஈழத்தமிழரையும் அவர்களது துயரத்தையும் நினைவில் கொண்டவர் என்பது மகிழ்ச்சியான விடயமாகும். இவர் 2011 கனடாவில் நாடாளுமன்றத்திற்காக நடைபெற்ற தேர்தலில் 18856 வாக்குகளைப் பெற்று புதிய ஜனநாயகக் கட்சியில் வெற்றி பெற்றார். ஸ்காரபரோ தொகுதியில் போட்டியிட்டு அந்த வெற்றியை தமதாக்கிக் கொண்டார்.அவரது வெற்றி ஈழத்தமிழர் அடைந்த வெற்றியாக கொள்ளப்பட்டது. காரணம் ஈழத்தமிழரின் அரசியல் மிக நெருக்கடி மிக்க காலகட்டத்தில் அவரது வெற்றி அமைந்திருந்ததுடன் ஆயுதப்போராட்டத்தில் அவர்கள் அடைந்த தோல்வியும் அதன் விளைவுகளும் இலங்கை அரசின் அணுகுமுறையில் காணப்பட்ட நெருக்கடியும் பிரதான அம்சங்களாக அமைந்திருந்தன.

2013 டிசம்பரில் அவரது இலங்கை பயணம் அமைந்திருந்தமை இன்னோர் சிறப்பான விடயமாக காணப்பட்டது. அவர் ஈழத்தமிழர் என்பதை உறுதிப்படுத்தியதுடன் அவரது யாழ்ப்பாணப் பயணம் ஈழத்தமிழரை உற்சாகப்படுத்தியது. அவரது வருகையை விரும்பாத இலங்கை அரசு அதிக நெருக்கடியை ஏற்படுத்தியதாக அவரே பின்னர் குற்றம்சாட்டியிருந்தார்.

கனடா திரும்பிய பின்னர் தான் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்படுவேன் என்று மிரட்டப்பட்டதாகவும் இணையத்தளங்களுக்கு அறிக்கை வெளியிட்டார். இலங்கை அரசின் உளவாளிகளால் தான் பின்தொடரப்பட்டதாகவும் தனியாக வைத்து விசாரிக்கப்பட்டதாகவும் தெரியப்படுத்தினார். தான் சந்தித்தவர் களையும் சென்ற இடங்களையும் புலனாய்வுத்துறையினர் விசாரித்ததாகவும் குறிப்பிட்டார். அனாதை இல்லத்தை பார்வையிடச் சென்றதாகவும் அங்கும் மிரட்டப்பட்டதாகவும் தெரிவித்தார். இதனால் இலங்கையில் மனித உரிமையைப் பாதுகாப்பது எளிதான விடயமல்ல என்றார்.

இவரது பயணம் ஒட்டுமொத்த தமிழரின் நிலையை படம்பிடித்துக்காட்டியது. ஆனால் இலங்கை அரசு அவரது அறிக்கையை நிராகரித்ததுடன் அவரது நடவடிக்கையை கண்டித்தது. இது ஒருவகையில் ஈழத்தமிழரின் அரசியல் நடவடிக்கையை மேலும் பலப்படுத்தியதெனலாம் அதாவது தமிழரின் உளவியலை பலப்படுத்தியதெனலாம். நொந்துபோயிருக்கும் இனம் அதிலிருந்து விடுபடுவதற்கு ஏற்ப ராதிகாவின் பயணம் அமைந்திருந்தது. அது மட்டுமன்றி மனித உரிமைக்கான அவரது போராட்டம் மகத்தான

நம்பிக்கையைத் தமிழர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஈழத்தமிழரைத் தனது உடன்பிறப்புகளாகப் பார்க்கும் மனோநிலை அளவற்ற உத்வேகத்தை தருகின்றது. இத்தகைய நடவடிக்கை படிப்படியாக வளர்ச்சியடைய வேண்டும்.அதன்வழி ஒரு உத்வேகம் தோன்றுவதுடன் எதிர்கால இருப்பினை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

## பொது நலவாய மகாநாடு

2013 நவம்பரில் இலங்கையின் தலைநகர் கொழும்பில் நிகழ்ந்த பொதுநலவாய மகாநாட்டில் கனடா கலந்துகொள்ள மறுத்ததுடன் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆளும்கட்சி எதிர்கட்சி என்ற வேறுபாடின்றி இந்தமுடிவை அறிவித்தமை ஈழத்தமிழரின் அரசியல் வெற்றிக்குக் கிடைத்த வாய்ப்பாகவே காணப்பட்டது. இலங்கையின் மனித உரிமை மீறலை கண்டித்ததுடன் பாரிய பொறுப்புக்கூறலை அரசாங்கம் எடுக்க தவறியது எனவும் கூறியது. மேலும் பொதுநலவாய விதிகளுக்கு புறம்பாக இலங்கை செயல்படுவதாக கண்டித்தது.

ஸ்ரிபன் ஹார்ப்பரின் தலைமையில் கனேடிய ஆளும் தரப்புடன் கூடிய அனைத்துக்கட்சிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வொன்று நடைபெற்றது. ஒட்டாவா நடாளுமன்ற முன்றலில் அக்டோபர் 28 இல் ஒன்றுகூடல் நிகழ்ந்தது. புலம்பெயர் தமிழர்களின் இந்த நடவடிக்கை கடந்தகாலத்தில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளின் போது திரண்ட கூட்டத்தைவிடக் குறைவாக விளங்கினபோதும் அங்கு உரையாற்றிய கனடிய ஆளும் தரப்பினர் இலங்கை அரசின் நடவடிக்கையைக் கண்டித்தனர்.

பொதுநலவாய மாநாட்டிற்கு கனடா வரமறுத்தமை இலங்கை அரசியலில் பெரும் நெருக்கடியாக அமைந்தது. இந்த மகாநாட்டை நடாத்துவதிலுள்ள நெருக்கடியைக் கனடாவே ஆரம்பித்தது. அந்தவகையில் ஈழத்தமிழரின் அரசியல் நடவடிக்கைக்கு உந்துதலும் உற்சாகமும் கிடைத்தது எனலாம். அதுமட்டுமன்றி, இலங்கை அரசின் ஆரோக்கியமான ஜனநாயக வாய்ப்புகளுக்கான சூழலை கனடா திறந்துவிட்டதெனலாம். காரணம் இலங்கை விடயத்தில் உலக நாடுகள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. ஆதனை கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை ஒருபுறமும் பொதுநலவாயம் மறுபக்கமுமாக செயல்படுவது உள்ளாட்டு விடயத்தை தீர்த்துக் கொள்ள உதவும் என்பது பொதுவான அணுகுமுறையாகும். இதனைப் பின்பற்றி சுமூகமான தீர்வை இலங்கை முன்னெடுக்க உதவுமென பிற அரசுகள் கருதுகின்றன. அதே சந்தர்பத்தில் கனடாவின் அணுகுமுறையானது ஈழத்தமிழரைப் பாதுகாத்ததுடன் அவர்களது பிரச்சினைக்கு உலக நாடுகளின் மத்தியில் தீர்வு உண்டென்பதைக் கனடாவின் நடைமுறை வெளிப்படுத்தியுள்ளது.

ஐ.நா. சபையில் கனடா

ஐக்கிய நாடுகள் சபையில் கனடாவின் பங்களிப்பு ஈழத்தமிழருக்கு ஆதரவு தருவதாக அமைந்திருப்பது இன்னோர் சாதகமான விடயமாகும். இலங்கை அரசின் போர்க் குற்ற நடைமுறையை கண்டிக்கும் கனடா சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமென கோரி வருகின்றது. இதற்காக தனது ஆதரவை கனடாவுக்குள்ளும் சர்வதேச அரசியல் மட்டத்திலும் முன்வைத்து வருகிறது. மிகப் பிரதானமாக மனித உரிமை மீறல்கள் பொறுப்புக்கூறுதல் ஆகிய விடங்களில் கவனம் செலுத்தும் கனடா, இலங்கை அரசின் மீறல்களை கட்டுப்படுத்த முயற்சிக்கிறது. தொடர்ச்சியாக கண்காணிப்பையும் ஈழத்தமிழரின் பாதுகாப்பினையும் உத்தரவாதப்படுத்த முயலும் கனடா அரசியல் ரிதியில் பலம்வாய்ந்த சமூகமாக ஈழத்தமிழரை உருவாக்க முயலுகின்றது. 2014 இல் நிகழ்ந்த மனித உரிமைப் பேரவையில் நிகழ்ந்த வாக்கெடுப்பின்போது உரையாற்றிய கனடாவின் பிரதிநிதி "சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பாக கடந்த காலத்தில் மீறல்கள் பற்றிய சுதந்திரமான நம்பகத்தனமான விசாரணையின் தேவைகளை ஒப்புக்கொள்வதிலும் அதே போல் தமது சொந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகள் தொடர்பிலும் பரிந்துரைகள் தொடர்பிலும் பரந்துபட்ட நடவடிக்கை எடுப்பதிலும் கூட இலங்கை அரசாங்கத்தின் அக்கறையின்மை குறித்து கனடா ஆழ்ந்த கவலை கொள்கிறது; உள்நாட்டு விசாரணை முறையானது சுதந்திரமானதாகவோ அல்லது ஆக்கப்பூர்வமானதாக இருக்கவில்லை. போர்க் காலத்தின் போதும் அதன் பின்னரும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் பற்றிய அனைத்து குற்றச்சாட்டுக் களையும் விசாரிக்க சர்வதேச விசாரணை முறையொன்றுக்கான பரிந்துரையை கனடா ஆதரிக்கிறது. மனித உரிமைப் பேரவையின் தொடர்ச்சியான சிரத்தை மிக்க செயல்பாடுகளுக்கும் நாம் ஆதரவளிக்கிறோம்" எனக் குறிப்பிட்டார்.

இதே நேரம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப் பட்டமையை வரவேற்று கனடா வெளிவிவகார மற்றும் சர்வதேச மனித உரிமைக்கான அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர் தீபக் ஒபராய், இலங்கையில் நிலுவையிலிருக்கும் நல்லிணக்க மற்றும் மனித உரிமை விவகாரங்களை இலங்கை அரசாங்கம் தீக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். மேலும், கனடிய நாடாளுமன்றத்தில் இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணை மேற்கொள்ள வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதனைச் சர்வதேச மட்டத்தில் நிலைப்படுத்திவரும் கனடா ஈழத்தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடுவதனைக் காணமுடிகிறது. ஏனெனில் கனடா எந்த அடிப்படையிலும் சர்வதேச வல்லரசாக முடியாததொன்று மட்டுமன்றி அதற்கான போட்டியில் கூட ஈடுபடமுடியாததாகும்.

அதற்கு எந்த இலாபமும் கிடையாதெனக் கூறலாம். மறைமுகமாக ஏதும் இலாபத்தை கனடா அடையலாம் என கூறமுடியுமா என்பதும் ஆராயவேண்டிய விடயமாகும். மற்றய நிலையில் கனடாவுக்கு ஈழத்தமிழரை முதன்மைப்படுத்துவதால் எந்த அரசியல் இலாபமும் கிடையாது. எனவே ஒப்பீட்டடிப்படையில் கனடாவின் ஒத்துழைப்பானது ஈழத்தமிழரின் துயரத்தினை மையப்படுத்திய தாகும். இதே போன்று 2011 2012 2013 ஆகிய ஆண்டுகளிலும் கனடாவின் ஆதரவு ஈழத்தமிழருக்கானதாகவே காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கனடா மனித உரிமைகளுடன் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் இலங்கையரசு கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. இவ்வாறு ஏன் கனடா சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென வலியுறுத்துகின்றது. சுர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மூலம் நாடுகளின் எல்லைக்குட்பட்ட நெருக்கடியை கையாளமுடியும் என்பது கடந்த கால அனுபவமாகும். ஆதனை பின்பற்றம் பட்சத்திலேயே ஈழத்தமிழர் உரிமைகள் வென்றெடுக்க முடியுமென கனடா கருதுகின்றது எனலாம்.

இலங்கையில் நிகழ்ந்த போரை நிறுத்துவதற்காக மூன்று இலட்சம் புலம்பெயர் தமிழர்களும் பல நாட்களாக போராடியபோது கனடா அரசு அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் கனடிய அரச எதிர் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போராட்டத்திற்கு ஆதரவளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது அவர்களின் போராட்டத்தினைக் காட்டுவதுடன் அந்த நாட்டுச்சட்டம் வழங்கியுள்ள ஆதரவைக் வெளிப்படுத்துகிறது. ஏனெனில் அந்த நாடுகளில் காணப்படும் சுதந்திரத்தின் மரபைக் காட்டுகின்றது.

முடிவுரை

இவ்வாறு கனடாவின் பங்களிப்பு ஈழத்தமிழரின் அரசியல் வாழ்வில் மீளவும் ஒருவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஆதஎனப் பயன்படுத்துவதும் வெற்றிகாண்பதுவும் ஈழத்தமிழரின் அரசியல் சக்திகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதனை இலங்கை அரசுடன் சேர்ந்து பெறுவதா அல்லது தனித்து சர்வதேசத்தின் அங்கீகாரத்து'டன் அடைவதா என்பதை தீர்மானிப்பது தமிழ் தரப்பிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உதவிய கட்டுரைகள்

General Assembiy, Human Rights Council session 25,26 March 2014.
Tamil Canadian, 2014.
Canada Mirror, November 3, 2012.
www.Tamilwin.com, Dece ıber, 30, 2013.

# புலம்பெயர்ந்த பெண்கள் கவிதைகளில் புலப்பெயர்வும் வாழ்வியலும் அடையாளச் சிக்கல்களும்

முனைவர் நதிரா மரியசந்தனம்
இலங்கை

பண்பாட்டு அடையாளம் பற்றிய ஆய்வில் புலம்பெயர்ந்தோர் அடையாளம் என்பது சமீபகாலமாகக் குறிப்பிட்ட கவனத்தைப் பெற்று வருகின்றது. மூன்றாம் உலக நாடுகளில் இனக்குழுக்களுக் கிடையிலான மோதலும் அதையொட்டிய யுத்தங்களும் பெருமளவிலான இடப்பெயர்வுகளுக்குக் காரணமாகின்றன. இது தவிர மேற்குலக வாழ்வின் மீதான மோகத்தினாலும் பொருளாதார வாய்ப்புகள் தேடியும் பெருமளவிலான இடப்பெயர்வுகள் நிகழ்கின்றன. இவ்வாறு புலம்பெயர்ந்தோர் தமது வாழிடம், சமூகம், பண்பாடு என்பவற்றிலிருந்து பிரிந்துவந்த நிலையில், மேற்குலகப் பண்பாட்டை எதிர்கொள்கின்றபோது, ஒரு தீவிரமான பண்பாட்டு அடையாள மாற்றம் நிகழ்கின்றது. பண்பாடு தொடர்ந்தேர்ச்சையாக மாறுகின்ற நிலையில் இருக்கின்றபோதும் புலம் பெயர்ந்தோர் வாழ்வைப் பொறுத்தமட்டில் மிகவும் தீவிரமான முறையில் இம்மாற்றம் நிகழ்கின்றது. இதை மாறுகின்ற பண்பாட்டின் அடையாள நெருக்கடி *(crisis of cultural identity in transaction)* என்று கூறலாம்.

1980களிலும் அதற்குப் பின்னரும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் வாழ்விலும் இத்தகைய பண்பாட்டு அடையாள நெருக்கடிகள் ஏற்பட்டன; இன்றும் தொடர்கின்றன.

பெண்களைப் பொறுத்தவரையில் தேசியம், இனம் சார்ந்த அடையாளமாயினும் வர்க்கம் மற்றும் சாதியம் சார்ந்த அடையாள மாயினும் பண்பாட்டு அடையாளமென்பது அவர்களது தனித்துவங் களைக் கட்டுப்படுத்துகின்ற, இல்லாதொழிக்கின்ற பெருங்கதை யாடலாகவே திகழ்கின்றது. புலம்பெயர் ஈழத்துப் பெண்களைப் பொறுத்தவரையில் இருவேறு பண்பாடுகள் (ஈழத்து, மேற்கத்தைய) முன்நிறுத்துகின்ற ஆண்மைய, முதலாளித்துவ கருத்தியல் சார்ந்த பண்பாட்டு மாதிரிகளாக இவர்கள் செயற்பட வேண்டியுள்ளனர்.

ஒரு சமூகத்தின் இருப்பும் அதன் பண்பாடும் நெருக்கடிக் குள்ளாகின்றபோது ஆண்கள் அதன் பாதுகாவலர்களாகக் கருதப்படுகின்றனர். அதன் எதிர்நிலையில் பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டிய பல்வேறு பண்பாட்டுக் கூறுகளுள் ஒரு கூறாகப் - பண்பாட்டுப் பொருளாகப் பார்க்கப்படுகின்றனர். இது பெண்ணின் சுயத்தை மறுதலிக்கின்ற ஒரு போக்காகும். புலம்பெயர் வாழ்வில் இரு வேறு பண்பாடுகளுக்கிடையில் உறவு, முரண், நெருக்கடி என்பன ஏற்படுகின்றபோது பெண்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

ஆணாதிக்கம், முதலாளித்துவம், சாதீயம் என விரிந்து செல்கின்ற அதிகார வர்க்கங்கள் அதிகாரப் படிநிலைகளைப் பேணுவதற்காகத் தமக்குச் சார்பான கருத்தியல்களைக் கட்டமைக்கின்றன. இவ்வாறான கருத்தியல்களின் விதிமுறைகளுக்கேற்ப பண்பாடு கட்டமைக்கப் படுகின்றது. இதன் எதிர்நிலையில், பெண்கள், குழந்தைகள், உழைக்கும் வர்க்கத்தினர், ஒடுக்கப்பட்ட சாதியினர் போன்ற விளிம்புநிலைக் குழுக்கள் மீதான ஒடுக்குமுறை, வன்முறை என்பன பண்பாடு என்ற தளத்தின் ஊடாகவே நிகழ்த்தப்படுகின்றது. இவர்களுக்கென விழுமியங்கள், ஒழுக்கக் கோட்பாடுகள், நடத்தை விதிகள் போன்றன உருவாக்கப்பட்டு, மொழி, இலக்கியம், தொன்மம், சடங்குகள் போன்ற பண்பாட்டுக் கூறுகளுக்கூடாக மீள உறுதி செய்யப்படுகின்றன. இக்கருத்தின் அடிப்படையில் புலம்பெயர் பண்பாட்டில் பெண்களது நிலை நோக்கப்பட வேண்டும். இவர்கள் ஒருபுறம் தாய்நாட்டுப் பண்பாட்டின் அடையாளங்களைப் புகலிடத்தில் சுமக்க வேண்டியவர் களாக உள்ளனர். மறுபுறம் மேலைத்தேய நுகர்வுக் கலாசாரம், இயந்திர வாழ்க்கை, பொருளாதாரச் சுரண்டல் என்பவற்றுக்கு ஆளாகின்றனர். இது மட்டுமன்றி மேலைத்தேய ஊடகங்கள் கட்டமைக்கின்ற பெண்களின் தோற்றம் பற்றிய அளவீடுகள், நிறவெறி, அந்தஸ்து பற்றிய கற்பிதங்கள் எனப் பல்வேறு உளவியல் வன்முறைகளை இவர்கள் எதிர்கொள்கின்றார்கள்.

இத்தகைய முரண்பட்ட பண்பாட்டு வகிபாகங்கள் அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. இதைப் பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற இரட்டைப் பண்பாட்டு வன்முறையாக அல்லது பண்பாட்டு அடையாள நெருக்கடியாக நாம் கொள்ள வேண்டும்.

இப்பின்னணியில் புலம்பெயர் வாழ்வில் ஈழத்தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்ளுகின்ற தனித்துவமான சில பண்பாட்டு அடையாளச் சிக்கல்களைப் பற்றி, அவர்களது கவிதைகளூடாக இக்கட்டுரை ஆய்வு செய்ய முனைகின்றது.

அடையாளம் என்ற வார்த்தை பல்வேறு காரணிகள் சார்ந்து பொருள்தரக் கூடியது. குறிப்பாகத் தனிநபர் அடையாளம், சமூக அடையாளம், பண்பாட்டு அடையாளம் எனப் பல்வேறு அடையாளப் பகுப்புகளை நாம் குறிப்பிடலாம்.

புலம்பெயர் வாழ்வில் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்கின்ற அடையாளச் சிக்கல் ஒருபுறமிருக்க அச்சமூகத்தின் ஒரு பகுதியினராகிய பெண்கள் இருவேறு அதிகார சக்திகளின் பண்பாட்டுச் சுமைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். இத்தகைய பண்பாட்டு நெருக்கடிகளுக்கும் அடையாளச் சிக்கல்களுக்கும் உள்ளாகின்ற புலம்பெயர் ஈழத்துப் பெண்களை மூன்று வகையினராகப் பகுக்கலாம்.

1.ஈழத்திலிருந்து நடுத்தர வயதினராக அல்லது முதியவராகப் புலம்பெயர்ந்த பெண்கள்.

2.ஈழத்திலிருந்து பதின்பருவத்தில் புலம்பெயர்ந்து தற்போது பதின் பருவத்தினராகவோ அல்லது நடுத்தரவயதினராகவோ உள்ள பெண்கள்.

3.புலம்பெயர்ந்த நாட்டில் பிறந்து வளரந்த குழந்தைகளும் இளவயதுப் பெண்களும்.

இம் மூன்று வகையான நிலைகளிலும் உள்ள பெண்கள் வெவ்வேறு வகையான அடையாளச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

வயது முதிர்ந்த பெண்களைப் பொறுத்த வரையில் ஈழத்து வாழ்வை, அதன் மண்சார்ந்த மரபை இழந்துவிட்ட துயரமும் புலம்பெயர் சமூகத்துடன் ஒட்ட முடியாததனால் ஏற்படுகின்ற தனிமையும் முக்கியமான அனுபவங்களாகின்றன. அதேவேளை புலம்பெயர் சமூகத்தின் ஏனைய தரப்பினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளின் இறுதி இலக்காகவும் ஆகின்றனர்.

இத்தகைய அனுபவங்களைக் கூறுகின்ற எழுத்துகள் வயது முதிர்ந்த புலம்பெயர் ஈழத்துப் பெண்களிடமிருந்து பெரிதும் வெளிவரவில்லை. அவர்கள் அரசுகள் கொடுக்கின்ற மானியங்களைப் பெறுவதற்காகவும், பிள்ளைகளின் சமூக மதிப்புக்காகவும் புலம்பெயர் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

புலம்பெயர் நாடுகளில் பிறந்த பெண்குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தனித்துவமான பண்பாட்டு அடையாள நெருக்கடியினை எதிர்கொள்கின்றனர். ஒருபுறம் ஈழத்தமிழர் அடையாளம், மரபு சார்ந்த வாழ்க்கை, நிலப்பிரபுத்துவ சமூகத்திற்குரிய குடும்ப உறவுமுறை என்பனவும், மறுபுறம் மேற்கத்தைய பெருநகரங்களின் பல்லினச் சமூகச் சூழலும் ஒப்பீட்டளவில் அதிகமான உரிமைகளும் வாழ்க்கைத்தரமும் உலகமயமாதலும் அது சார்ந்த தகவல் தொழில்நுட்பங்களும் அவர்களது அனுபவங்களை இரண்டு முரண்பட்ட தளங்களுக்குள் உட்படுத்துகின்றன.

குறிப்பாகப் பால், இனம், சார்ந்த அடையாளம், ஒழுக்கவிதிகள், நெறிமுறைகள், உடை மற்றும் கல்விச் சுதந்திரம் போன்ற விடயங்களில்

அவர்கள் இருதலைக்கொள்ளி எறும்புகளாக்கப்படுகின்றனர். இவ்வாறான முரண்பட்ட ஒழுக்கவிதிகள், நெறிமுறைகள் ஏனைய பண்பாட்டுக் கூறுகள் அவர்களை அடையாள நெருக்கடிக்குள் தள்ளுகின்றது. அவர்களிடமிருந்து பண்பாடுசார்ந்த புதிய கேள்விகளும் பகுத்தறிவுப் பார்வைகளும் வெளிப்படுகின்றன.

மூன்றாவது பிரிவினராகிய பெண்கள் ஈழத்தில் தமது இளமைக்காலத்தைக் கழித்த பின்னர் புலம்பெயர் நாடுகளில் தமது இளைய, நடுத்தர வயது வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள்தான் இன்று அதிகமாக எழுதிக் கொண்டிருப்பவர்கள். தாய்நாட்டின் பண்பாட்டுச் சூழலை ஓரளவு தெளிவான புரிதலுடன் பெண்நிலைநின்ற அனுபவங்களினூடாக வெளிக்கொணர்கிறார்கள். இவர்கள் மேற்கூறிய இரண்டு பண்பாடுகளின் ஆதிக்கச் சக்திகளிட மிருந்தும், அப்பண்பாடுகளின் பல்வேறு ஆதிக்கக் கூறுகளிலிருந்தும் நெருக்குதல்களுக்குள்ளாககப்பட்டுத் தமது வாழ்வனுபவங்களைக் கவிதைகளாகத் தருகின்றனர். முக்கியமாக இத்தலைமுறைப் பெண்கள் ஒப்பீட்டளவிலேனும் மேற்குலகு உறுதிசெய்கின்ற பொருளாதாரச் சுதந்திரம் சட்டரீதியான பாதுகாப்பு என்பவற்றை அனுபவிக்கிறார்கள். இத்தகைய புலம்பெயர் வாழ்க்கைச் சூழல் அவர்களது எழுத்துச் செயற்பாட்டில் காணப்படுகின்ற இறுக்கத்தைத் தளர்த்தும் விதமாக அமைகின்றது.

*3*

இத்தலைமுறைப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் காணப்படு கின்ற முக்கிய போக்குகளாகப் பின்வருவனவற்றை அடையாளம் காணலாம்:

1. புலம்பெயர் வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் அந்நியப்பாடு, அடையாளம் இழத்தல், தனிமை என்பவற்றை முக்கியமான கருப்பொருளாகக் கொண்ட கவிதைகள்.

அகதி என்ற
அத்தாட்சிப் பத்திரத்தோடு
ஐரோப்பிய வசலில்
புல்லுப் போட்டு
புண்ணாக்கும் வைத்தனர்
பசி பறந்து போனது நிஜமே

நாலாபுறமும்
பலமான வேலிகள்
ஆம்!
ஜனநாயக நாட்டில்
சுதந்திர மனிதன்!
தமிழ் பேசி
கவி பாடி

கருத்துக்கள் கக்கிய
உதடுகள்

முரண்பாடு கொண்டு
சிக்கித் தவிக்கின்றன.
சிந்தனையும் தான்
ஏன் இங்கு வந்தாய்?
எட்டி நில் கறுப்பனே!
வெண்முகங்கள்
விட்டெறியும்
ஏளனப் பார்வையில்
தலை குனியும் மௌனமாய்.

வீட்டின் கோடியில்
மணற்பரப்பு
மா மரங்கள்
மரவள்ளி மாலை
நீர்வற்றிய
குட்டிக் கிணறு
குரும்பட்டித் தேர் இழுக்க(க்)
காத்திருக்கும் தோழியர்கள் (நிருபா)

2. தாம் இழந்துவிட்ட மண்சார்ந்த, மரபுசார்ந்த வாழ்வு பற்றிய நினைவுகளையும், துயரங்களையும் வெளிப்படுத்துபவையாக அமையும் கவிதைகள். இவற்றுள் இனவன்முறையால் இடம்பெறும் போரின் அவலங்களை வெளிப்படுத்தும் கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

கள்ளிச் செடியில் இருந்து
இரத்தம் கசிந்து கொண்டிருந்தது
முட்டைக்குள்
பறவைக் குஞ்சு இறந்தே பிறந்தது
மலர்களின் மகரந்தங்கள்
வண்டுகளாலே சிதைக்கப்பட்டிருந்தது.

சிதறிக்கிடந்த உன் எலும்புகளையும்
சதைத் துண்டுகளையும்
கூட்டி அள்ளி
உன் சிதைக்கு தீ வைத்தேன் (பாமதி)

நேற்றைய இரவில்
ஏதோ அனர்த்தம்
இன்றைய அதிகாலையும் காலையும்
சாவின் முனகலையும் இழந்து
சலனமற்று
சவமாய்க் கிடந்தது.

நெருப்பில் உருகிய
கொழுப்பு நெடியை
பனிப்புகார் சுமந்து வந்து
தெருக்களில் தூவிச் சென்றது. (பானு பாரதி)

இக்கவிதைகள் யுத்த அவலங்களையும் இன ஒடுக்குமுறையின் வெவ்வேறு வடிவங்களையும் வெளிப்படுத்துகின்றன. தாம் வாழ்ந்த நிலத்தின் மீதான பிணைப்பும், சொந்த இருப்பிடத்தை இழந்த நிலையும், விடுதலை உணர்வும் தாம் இழந்துவிட்ட அடையாளத்தைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றன; இவற்றைப் பற்றி இக்கவிதைகள் பேசுகின்றன; அகதிநிலை, புகலிட அனுபவம், அதனால் ஏற்பட்ட அந்நியப்பாடு, நிறவாதம், அவர்கள் எதிர்கொள்ளும் பண்பாட்டு முரண்கள் ரீஷ்;ஷ்ஜீ இக்கவிதைகவ; வெளிப்படுத்தப்படுகின்றன.

3. மேற்குலகப் பண்பாட்டில் தமக்குக் கிடைத்த சட்டரிதியான உரிமைகளாலும் பொருளாதார ரிதியான சுதந்திரத்தாலும் கிடைத்த வாழ்வனுபவங்களை உட்பொருளாகக் கொண்ட புதிய பார்வைகளைத் தருகின்ற கவிதைகள்.

குளிரோ வெய்யிலோ
காலத்தோடு புணர்தல்
கடமைக்காய் பம்பரமாதல்
புலம்பெயர்ந்த போதும் மாறுபடாத ஒன்று

உழைப்பு பெருக்கப்பட்டு
உடல் வகுக்கப்பட்டாலும்
பத்தினி பட்டத்திற்காய் புன்னகைத்து
பாடாய்ப் படுவது
முதுகில் ஏற்றப்பட்ட புதிய பளு (சுமதி ரூபன்)

பிரக்ஞைபூர்வமாகப் பெண் என்ற நிலையில் தம் உணர்வுகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கவிதைகள் இவை. ஆணாதிக்கம், பண்பாட்டின் பேரால் சமூகம் விதித்த கட்டுப்பாடுகள், குடும்பச்சுமை முதலிய விடயங்கள் தொடர்பான எதிர்ப்புக் குரலாக வெளிவருகின்றன. பெண்களின் சிந்தனைப் போக்கில் புதிய விழிப்புணர்ச்சியைப் பலவித மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையை இக்கவிதைகள் புலப்படுத்துகின்றன.

4. தீவிரமான பெண்ணிய அரசியல் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட கவிதைகள். இக்கவிதைகள் ஈழத்திலும். புகலிடத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் அவர்கள் பண்பாட்டின் சின்னங்களாக, பண்டங்களாக, காவியங்களாக பயன்படுத்தப்படுகின்றமை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

இவர்களுள் சிலர் மொழி ஊடகத்தினுள் அல்லது மொழிப் புலத்தினுள் பெண்கள் மறைக்கப்பட்ட, அந்நியப்படுத்தப்பட்ட நிலையினைத் தம் கவிதைகளினூடே வெளிப்படுத்துகின்றனர்.

அத்தோடு பெண்நிலை அனுபவங்களுக்கான புதிய வெளிகளை, புதிய உத்திகளை, புதிய படிமங்களை உருவாக்குவது பற்றித் தமது கவிதைகளூடாகப் பேசுகின்றனர். அத்தகைய புதிய மொழிநடையையும், கவிதை உத்திகளையும், படிமங்களையும் பயன்படுத்துகின்றனர்.

எனது இயக்கம்
எனது ஆற்றல்
எனது சிந்தனை
எனது திறமை
அனைத்தும் எனக்கே
இருக்கக் கூடியவை
இவற்றை யாரிடமாவது இருந்து பெற்றிருந்தால்
நான் பெண்ணாக இருக்க முடியாது
நீங்கள் உருவாக்கிய
பெண்மை!
எனது அடையாளமல்ல
நான் பெண்
பிறக்கும் போதே. (ரஞ்சனி)

ஈடு : 2

நேற்று
நம்பிக்கை செத்து
வேரறுத்த
நண்பியின் நினைவுப் புண்கள்
ஆறுமுன்னரே
நம்புகிறோம் - வாழ்வு பற்றி
அமைதி நிறைந்ததாக
எளிமையானதாக
சுதந்திரமானதாக
சுவையானதாக
அவையும் பொய்த்துப் போக
அடி தங்காய்.....
முறிவு கொள்ளாதே
மேலும் மேலும் நம்பு
வாழ்வு பற்றி
உன் இருப்பு பற்றி
அதன் அர்த்தம் பற்றி
இன்னும் வலுவாய் (ஆகர்ஷியா)

இதுவரை நிலைபெற்று வந்துள்ள பெண் பற்றிய கற்பிதங்களை மாற்றி அவற்றிற்குப் புதிய அர்த்தங்களைத் தமது நோக்கில் கற்பிக்கின்றனர். ஆண்மைய மொழியின், மொழிச் சொற்களின் அர்த்தங்களை மாற்றி

அவற்றிற்குப் புதிய அர்த்தங்களைக் கொடுக்கின்றனர். பெண்ணுடலின் பன்முகப்பட்ட உணர்வு நிலைகளையும் பிரதிபலிக்கக் கூடியதான மொழியை உருவாக்கியுள்ளனர். மொழி பெண்ணை விலக்கி அந்நியப்படுத்தியுள்ளதை உணர்ந்த பெண் கவிஞரின் வரிகளாக,

அங்கு
எனக்கென
ஓர் பிரபஞ்சம் உருவாகும்
அப்போது உயிர் பெறும்
எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய
என்மொழி
அதன்பின்
தேமல் படர்ந்த எவனாயினும்
என்னோடு உரையாடட்டும்
அப்போது கூறுகிறேன்.
பதிலை
என்மொழியில்
என் ஆதித்தாயின்
பெண் மொழியில்" (ஆழியாள்)

என்ற வரிகள் அமைகின்றன.

புதிய வாழ்க்கைச் சூழல்கள், அதற்கான சொல்லாடல்கள், புதிய சூழலுக்கேற்ற படிமங்கள் என்பன காரணமாக முற்றிலும் புதிய வெளிப்பாட்டு முறைகளைக் கொண்டதாக இக்கவிதைகள் அமைகின்றன. இப்பெண் கவிஞர்கள் தங்களது அனுபவத்திரட்சியையும் உணர்வுகளையும் சிந்தனைகளையும்; தமது கவிதைகளினூடாக வெளிப்படுத்துவதை அவதானிக்கலாம்.

**துணை நூல்கள்**


ஆழியாள்,2000. உரத்துப் பேச மறு, சென்னை.

ஆழியாள், 2006. துவிதம் மறு, அவுஸ்திரேலியா.

மைத்ரேயி, 2004. கல்லறை நெருஞ்சிகள், காவலூர் இலக்கிய வட்டம் இலங்கை.

றஞ்சனி, 2005. றஞ்சனி கவிதைகள், சென்னை.

க்ருஷாங்கனி (தொகுப்பாசிரியர்). 2001. பறத்தல் அதன் சுதந்திரம், காவ்யா.

# கனடாத் தமிழர்களின் வாழ்வியல்

திரு. எம். ஐ. எம். ஹனிபா
கலாநிதிப்பட்ட ஆய்வாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

**அறிமுகம்**

ஈழத்து இலக்கியப்பரப்பில் 1980களுக்குப் பின்னரான காலப்பகுதியில் தென்படும் முக்கியமானதொரு விடயமாகப் புலம்பெயர்வு அனுபவங்கள் அமைகின்றன. அவ்வகையில் புகலிட கவிதைகள் ஊடாக வெளிப்படுகின்ற கனடாத் தமிழர்களின் வாழ்க்கை பற்றி விவரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது. இத்தகைய கவிதைகளை எழுதுவோர் பலராயினும் மிக முக்கியமான கவிஞர்கள் சிலரின்[1] கவிதைகளே இங்கு கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன.

1980களுக்குப் பின்னர் இடம் பெற்ற புலப்பெயர்வுகளுக்கு ஈழத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவக் கெடுபிடிகள், இயக்கங்களுக்கிடையிலான உள் முரண்பாடுகள் என்பன காரணமாயின. இத்தகைய புலம்பெயர்வுகளின் பின்னர் புகலிட நாடுகளில் எதிர்கொண்ட இன்னல்கள், அங்குள்ள வாழ்க்கைக் கோலங்கள் முதலியன கவிதைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி அணுக முடிகின்றது.

1. அகதி நிலை
2. அந்நியமாதல்
3. தாயக ஏக்கம்
4. தொழில் சார் அனுபவங்கள்
5. பண்பாட்டுப் பிரச்சினைகள்
6. நிறபேதம்
7. போலி வாழ்வு

**அகதி நிலை**

பிறந்த மண்ணில் விளைந்த கொடூரங்கள், உயிராபத்துக்கள் முதலிய காரணங்களால் அகதி எனும் நாமத்தோடு ஈழத்தமிழர் பலர் கனடாவில் தஞ்சமடைந்தனர். வேண்டாத விருந்தினர்களாகக் கனடாப்பயணத்தின் துயரமான அனுபவங்களும் அங்கு சேர்ந்தவுடன் நடைபெறுகின்ற விசாரணைகளும் அவமானங்களும் அவை வருத்திய அனுபவங்களும் கவிதையாக்கப்பட்டுள்ளன. அகதி எனும் நெடுங்கவிதைத் தொகுதி அகதிகள் பலரின் வாக்கு மூலங்களைப் பதிவு

செய்துள்ளது. அகதி வாழ்வின் ஆரம்பம் கைவிலங்கும், விசாரணைகளுமாகவே அமைகின்றது. விசாரணைகள் அநாகரிகமான முறையில் இடம் பெறுகின்றன.

அஹ்ஹ்ஹா என்றே
நகைத்தார் அவர்கள்
அடிமையாய் அங்கு நீ
அழிவது உன் விதி
அழுக்கு மூட்டை நீ
அழகிய எங்கள் நாட்டிற்குள் வந்து
அமர்வது இயலுமோ
காட்டுமிராண்டி
நாட்டிலிருந்து
களவாய் வந்த நீ
திரும்பிப் போய்விடு
என்றனை ஏசிட
இருந்தேன் மறுபடி......[2]

என ஒரு அகதியின் அனுபவத்தைக் கவிஞர் கௌரி பதிவு செய்கிறார். நகைத்தாலும், அவமதித்தாலும், துரத்தினாலும்; மறுபடியும் அங்கேயே இருக்க வேண்டிய நிற்பந்தத்திற்கு உள்ளான நிலையினை அவ்வரிகள் சொல்கின்றன.

அகதி எனும் அடையாளத்துடன் வாழக் கிடைத்தபோதும் நிம்மதி இழந்து முகவரி தொலைத்தவர்களாய் வாழும் நிலை ஏற்பட்டமை குறித்து,

கடல் கடந்து
தித்திக்கும் நானோ
சித்தாந்தம் கெட்டுப்போய்
தந்திரமாய் வாழுகின்றேன்
தலையெழுத்தோ
என்னுடைய
சொந்த முகத்தைத்
தொலைத்துவிட்டுத் தேடுகின்றேன் [3]

என ஆனந்த பிரசாத் எழுதுகின்றார்.

இவ்வாறே திருமாவளவன் தனது 'பனிவயல் உழவு' எனும் கவிதையில் சூரியனை நோக்கி தொடுக்கும் வினாவும் அகதி வாழ்வின் அவலத்தைக் காட்டுகின்றது.

துருவக் கொடுங்குளிரில்
அலைகின்ற சூரியன் நீ
ஆயுதந் துரத்த
நெடுந்துயர் கடந்த

*பரதேசி நான்*
*உனை யார் துரத்த*
*இங்கு வந்து அகதியானாய்*[4]

இக் கவிதைப் பகுதியில் கனடாவின் கொடுங்குளிரையும் அங்கு ஆயுதத்தால் தான் துரத்தப்பட்ட செய்தியினையும் தாம் அகதியாக்கப்பட்ட நிலையினையும் கவிஞர் சொல்கிறார்.

**அந்நியமாதல்**

புலம் பெயர்ந்து கனடாவில் தம் வாழ்வை அமைத்துக் கொண்ட தமிழ் மக்களிடையே அந்நியமாதல் அல்லது தனித்திருப்பு பெரும் துயரத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. பெற்றவர்களை, சகோதரர்களை, மனைவி, பிள்ளைகளை தாயகத்தில் விட்டும் பெயர்ந்து வாழும் நிலையில், தனிமைத்துயர் உணர்வுகளைப் பாதித்த விதமும் உள்ளத்து ஏக்கங்களும் கவிதைகளால் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. "ஒரு சுயதரிசனம்" தொகுப்பிலுள்ள பல கவிதைகள் இத்தகைய அவலங்களை எடுத்துக் காட்டுகின்றன.

*கனவுகளில் சாப்பாடு*
*கையோடு தாம்பத்தியம்*
*மனச்சூட்டினின்றும்*
*பாதுகாத்துக் கொள்ள*
*ஆசைச் செருப்பை*
*அணிந்து கொண்டேன்*
*பொய்யென்று புரியுங்கால்*
*போதைத் துணையிருப்பு*
*டாலர் சிறகடித்து*
*பொய்வானை முத்தமிட்டேன்*
*மலத்துக்குள் திளைக்கும்*
*வண்டாக*
*உருண்டோடும் காலம்*[5]

என ஆனந்த பிரசாத் தான் கண்ட வாழ்க்கை கோலத்தைக் கவிதையாக்குகிறார். தனிமை ஏற்படுத்திய சோகத்தை மேலுள்ள வரிகள் உணர்ச்சிபூர்வமான முறையில் சொல்கின்றன.

அந்நியமாதலால் ஏற்பட்ட தனிமை, பிறழ்வான செயற்பாடுகளுக்கும் காரணமாகிவிட முடியும். நீலப்படங்களின் மூலமான சுகம்;, போதையுடனான உறக்கம் என வாழ்க்கை கழிந்து போவதையும் ஆனந்த பிரசாத்தின் "வராதவசந்தங்கள்" எனும் கவிதை வெளிப்படுத்துகின்றது.

*நீலப்படங்களிலும்*
*நினைவுச் சுகங்களிலும்*
*காலம் கழிகிறது*
*கண்மூடித் தூங்கவெனத்*

தன்னி அடிப்பதில்
தானெனது வசந்தங்கள்
வண்ணமுறப் பூக்கின்றது
வாழ்க்கைப் பயணத்தில்
என்னோடு தன்னை
இணைப்பதற்கு யாருமில்லை[6]

எனக் குறிப்பிடுகின்றவர்.

தாயக ஏக்கம்

புலம்பெயர்த் தமிழர் வாழ்வு வெவ்வேறு நெருக்கடிகளை யுடையவை. அத்தகைய நெருக்குதல் சுமையாகும் போதெல்லாம் தாம் பிறந்த மண்ணின் ஆதரவை நினைத்துப் பார்ப்பதும் அதனை நினைத்து வருந்துவதுமான உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய வகையிலான கவிதைகளும் எழுந்துள்ளன. சக்கரவர்த்தியின் 'யுத்த சன்யாசம்' எனும் தொகுதியிலுள்ள பல கவிதைகள் இத்தகைய அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன.

எந்த ஒரு நாட்டின்
அனுசரணையின் அணைப்பில்
பிரஜா உரிமையானாலும்
சொந்த நாட்டின்
கதகதப்பு

இன்பமாகும் - இல்லை
துன்பமாகவே இருப்பினும்
போய் மீண்டும் சேருதலே
புலம்பலாகிப் போனது.....[7]

என எதுவந்தாலும் தாய்மண்ணில் வாழ்வதில் உள்ள சுகத்தை சக்கரவர்த்தியின் 'துப்பாக்கிகள் துருப்பிடிப்பதில்லை' எனும் கவிதையின் மேலுள்ள வரிகள் வெளிப்படுத்துகின்றன.

செழியன் எழுதியுள்ள கவிதைகளிலும் தாயக நினைவுகளால் ஊனப்பட்டுப்போன தமிழர் மனம் வெளிப்படுத்தப்படுகின்றது. என் 'அம்மாவுக்கு' எனும் கவிதையில் அவர் தன்சோகத்தை பகிர்ந்து கொள்கிறார். இதுபோலவே திருமாவளவனின் 'பற்றை இலைக்கஞ்சி' எனும் கவிதையிலும் தாயக நினைவுகளோடு வாழும் கனடாத் தமிழரின் உணர்வுகள் காட்டப்படுகின்றன.

இன்று
இருண்ட கண்டத்தில்
அவளறியாதோர் மூலையில்
மூப்புப் பிணியோடு
பார்த்திருக்கிறாள்
அம்மா

துருவப் பனிக்கொதுங்கி
சாளரத்து ஓரத்தில்
காத்திருக்கிறேன்
நான்[8]

இங்கு தாயத்தில் வாழும் தாயின் நினைவும் அவளோடிணைந்த உறவுகளும் நினைந்துரைக்கப்படுகின்றன.

தொழில்சார் அனுபவங்கள்

கனடாவில் வாழும் தமிழர் எதிர்கொள்ளும் முக்கியமானதொரு பிரச்சினை தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுதலாகும். அந்நாட்டில் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் தன்னில் தங்கி வாழ்வோரின் ஜீவனோபாயத்திற்காகவும் கடினமாக உழைக்க வேண்டிய நிலை காணப்பட்டு வருகின்றது.

தாய் மண்ணில் படித்துப் பட்டங்கள், பட்டப்பின்பட்டங்கள் பெற்ற இளைஞன் ஒருவன் தவிர்க்க முடியாத நிலையில் உணவகத்தில் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்த அனுபவத்தை ஆனந்த பிரசாத்தின் கவிதை எடுத்துக் காட்டுகின்றது.

போன முதல் நாள் புதுப்பழக்கம் என்றாலும்
ஆனவரை பாடுபட்டேன்
ஆகா அனுபவம் தான் ...[9]

எனத் தொடங்கும் அக்கவிதை வெங்காயத் தோலுரித்தல், கிழங்கின் தோல் சீவுதல், கொதிநீரில் கழுவி பீங்கான்களை எடுத்தடுக்குதல் எனத் தொடரும் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதை விபரிக்கின்றது.

ஆணுக்குத்தான் அந்நிலையென்றால் பெண்ணும் இயந்திரமாய் உழைக்க வேண்டிய நிலை. இத்தகைய பெண்களின் வாழ்வியற் துன்பங்களை 'ரதன்' தன் கவிதையில் பதிவு செய்கின்றார்.

திருமாவளவனின் "பனி வயல் உழவு" எனும் தொகுதியிலுள்ள பல கவிதைகளில் வீடு - வேலை - வீடு என்று இயந்திர கதியில் சிக்குண்டு பனியிலும் குளிரிலும் உழல்கின்ற இலட்சக் கணக்கான மக்களோடு மக்களாக தொழில்பாதுகாப்பற்ற நிலையில் கடினமாக உழைக்கும் கனடாத் தமிழர் வாழ்வு காட்டப்படுகின்றது.

கடன் தந்தவனின் வட்டிக் கணக்கும்
கிறடிட் கார்ட் நிலுவையும்
'பெல் கனடா' வின் சிவப்புச் சிட்டையும்
கண்ணீர் கரைந்து வந்த
அம்மாவின் கடிதமும்
தங்கையின் வயதும்
தம்பியின் கானற் கனவும்
சுமையாய் இறங்கும்[10]

எனும் 'நுகத்தடி மனிதர்' என வரும் கவிதைப் பகுதியும் இவ்விதத்தில் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகின்றன.

**பண்பாட்டுப் பிரச்சினைகள்**

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே தோன்றிய அந்நியமாதல், உலகமயமாக்கல் முதலியவற்றால் பண்பாட்டுப் பிரச்சினைகளும் பிறழ்வுகளும் தோன்றியுள்ளன. குறிப்பாக மொழியும், பழக்கவழக்கங்களும் சிதைவுபட்ட தன்மைகள் கவிதைகளால் விபரிக்கப்படுகின்றன.

தேசத்தையும் மண்ணையும்
மொழியையும் மறந்து
புதிய தலைமுற வாழ்கிறது[11]

எனும் செழியனின் ஆதங்கம் இதற்குத் தக்க சான்றாவதை எடுத்துக்காட்டலாம். கனேடியத் தமிழர் அனுபவ வெளிப்பாடாகவும் அவர்களது வாக்கு மூலங்களாகவும் அமையும் கவிதைகளும் ஆங்கில மொழியால் தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தான சூழலை வெளிப்படுத்துவதாக அமைகிறது. ஆனந்தபிரசாத்தின் கவிதையில் இத்தகைய வெளிப்பாடுகள் அதிகமுள்ளன.

கரி அடுப்புகளில் இருந்து
விடுதலை வாங்கித் தந்து
"மைக்ரோவேவ்" களில்
சிறை வைத்திருக்கிறீர்கள்
நீங்கள் கொட்டிக் கொள்வதற்காய்...![12]

எனும் கவிதை வரிகளை எடுத்துக்காட்டலாம்.

மொழி மாற்றம் முக்கியமான பிரச்சினையாகின்ற அதேவேளை தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத பழக்கவழக்கங்களின் பரிமாற்றம் இன்னொரு பிரச்சினையாக அமைகின்றது. முறையற்ற பாலியல் தொடர்புகள், மதுப்பழக்கம், கலப்புத் திருமணம், ஆபாசத் தொலைக்காட்சி என்பவற்றோடு ஆடை, அணிகள் என்பவற்றிலும் மாற்றங்கள் அவதானிக்கப்படுகின்றன.

கனடாவில் வாழும் தமிழர் பல்தேச பண்பாட்டு நிலையில் வாழவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாவதும் கவிதையில் காட்டப்படுகின்றது.

தேவதேச நகரிகலெங்கும்
மின்னிப் பொலியும்
மின்னலங்காரம்
அணங்குகள்
நிறைந்த

ஆடல்மாடம்
ராப் இசையும்
ரம் மதுவும்
ரம்பையர் நடனமும்
கூத்து
குடி
கூடல்
மூன்றிலும் நீளும் இரவு[13]

என வரும் 'துயருறு காதை' எனும் கவிதையின் ஒரு பகுதி அவ்விதத்தில் எடுத்துக்காட்டத்தக்கது.

**நிறபேதம்**

வெள்ளை உடலும் நீல விழிகளும் உள்ள கனேடியர்களுக்கு தமிழர்களின் நிற வேறுபாடும் கறுப்பு விழிகளும் நிறப் பாகுபாட்டிற்கு அடிப்படையாவதையும் தமிழர் தீண்டத் தகாதவர்களாய் அவதிப்படும் நிலைக்குள்ளாவதையும் சில கவிதைகளில் வெளிப்படுத்துகின்றன.

சக்கரவர்த்தியின் (யுத்த சன்யாசம்) கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைகின்றது.

தீண்டாமை என்பது
யாழ்ப்பாணத்தாருக்கும்
பார்ப்பினருக்கும்தான்
ஏகபோக உரிமையோ? அது
இங்கிலிஸ்காரர்களுக்கும்
பரம்பரைச் சொத்துக்கள்[14]

அப்பகுதி கனடியத் தமிழர் மீதான வெள்ளையர்களில் பாரபட்சத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. இவ்வாறே ரதனின் "நிறங்கள்" எனும் கவிதையும் இப்பிரச்சினை பற்றிப் பேசுகின்றது:

விஞ்ஞானிகளுக்கு
ஓர்
வேண்டுகோள்
அவர்கள் நிறத்தை
மாற்றுவதற்கு
அப்பொழுதுதான்
எங்கள்
அன்பை
புரிந்து கொள்ளுவார்கள்...[15]

என அவர்களது (வெள்ளையர்களது) நிறங்களாவது மாற்றப்பட்டால் தங்கள் மீது அன்பு செய்வார்கள் எனும் ஆதங்கத்தில் வாழ்வதை அக்கவிதைப் பகுதி வெளிப்படுத்துகின்றது.

## போலி வாழ்வு

கனடாவில் வாழும் தமிழர்கள் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களாகவோ ஒரே நோக்கில் வந்தவர்களாகவோ இல்லை. அதனால் சுயநலமிகளும், போலிகளும் உள்ளமை பற்றியும் கவிதைகளில் அடையாளம் காட்டப்படுகின்றன.

பற்பல நாட்டின் பயங்கரவாத
வெப்பத்திலிருந்து தப்பி வந்தவர்
சுதந்திர நாட்டின்
போராட்ட நிழலின்
சுகங்களை எண்ணி
சுகமாய் வந்தவர்
விடுதலைப் போரின் இரத்தத்தை விற்று
வியாபாரம் செய்து
பணஞ்சேர்க்க வந்தவர்
மக்களைக் கொன்று
கொள்ளையும் அடித்ததால்
மாவீரராகி மகிழ்வோடு வந்தவர்
வேலைவாய்ப்புக்கள்
வெற்றிடம் இன்மையால்
வேலை தேடிட விரும்பியே வந்தவர்...[16]

என பலவிதமானோர் 'அகதி' எனும் பெயரில் வந்து வாழ்வதாக கௌரியின் அகதி எனும் நெடுங்கவிதை எடுத்துக் காட்டுகின்றது. இதனால் ஒற்றுமைத் தன்மை இவர்களிடையே காணப்படாமை பற்றியும் சுயநலமாக பேசுவோர் பற்றியும் பார்வையாளர்களாய் இருந்து பலம் பெறும் போலி மனிதர்களைப் பற்றியும் இக் கவிதையூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

தாயகத்தின் நெருக்குவாரங்களாலும் வேறு காரணங்களாலும் கனடாவில் வசிக்கும் தமிழர்களின் வாழ்வியல் பற்றிய பதிவுகளை கிடைக்கப் பெற்ற கவிதைகளின் துணையோடு இக்கட்டுரை விபரிக்கின்றது. உயிராசையால் தாயகத்தைத் துறந்து போனவர்களின் வாழ்வு இரங்கத் தக்கது. கழிவிரக்கம் உடையது. பொதுவாக கனேடியத் தமிழர் அகதி எனும் ஏளன நிலைக்கு உள்ளாக்கப்படுவதும் நிறப் பாகுபாட்டால் ஒதுக்கப்படுவதும், தனிமைத் துயர் வருத்துவதும் அதனால் பண்பாட்டுப் பிழற்வுகள் ஏற்படுவதும், கடின உழைப்பால் இயந்திர வாழ்க்கை வாழ்வதும் கவிதைகளால் வெளிப்படும் வாழ்க்கைக் கோலங்கள் ஆகின்றன. எவ்வாறிருந்தாலும் தமிழ்ப் பண்பாடும் அதனோடு இணைந்த சடங்கு சம்பிரதாயங்களையும் பாதுகாக்க வேண்டியது எல்லாத் தமிழருக்கும் உரிய பொறுப்பாகும்.

**அடிக்குறிப்புக்கள்:**

1. கௌரி, அ.கந்தசாமி, மலையன்பன், ரதன், ஆனந்தபிரசாத், செழியன், சக்கரவர்த்தி, திருமாவளவன்
2.. அகதி: பக். 32 - 33
3. ஒரு சுயதரிசனம்: ப.38
4. பனிவயல் உழவு: ப.26
5. ஒரு சுயதரிசனம்: ப. 40
6. மேலது: ப. 45
7. யுத்த சன்யாசம்: ப.10
8. பனிவயல் உழவு: ப.35
9. ஒரு சுயதரிசனம்: ப. 58
10. பனிவயல் உழவு: ப. 47
11. அதிகாலையைத் தேடி: ப. 15
12. ஒரு சுயதரிசனம்: ப. 28
13. பனிவயல் உழவு: ப. 73
14. யுத்த சன்யாசம்: ப. 25
15. காலத்தின் பதிவுகள்: ப. 70
16. அகதி: பக். 41 - 42

**துணை நூல்கள்**


கந்தசாமி. அ, மலையன்பன், ரதன்: 1991, காலத்தின் பதிவுகள், கனடா

கௌரி: 1991, அகதி, சமுக ஆய்வு வட்டம், கனடா.

ஆனந்தபிரசாத்: 1992, ஒரு சுயதரிசனம், காலம் வெளியீடு, கனடா

செழியன்: 1993 அதிகாலையைத் தேடி, காலம் வெளியீடு, கனடா

சக்கரவர்த்தி: 1994, யுத்தசன்யாசம், கனடா

திருமாவளவன், 2000 பனிவயல் உழவு, கனடா

செழியன்: 2002, ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு, ஈரமற்ற மழை, மூன்றாவது மனிதன் வெளியீடு, கனடா.

# செர்மானியத் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களும் சிதைவுகளும்

சு. குணேஸ்வரன்
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

அறிமுகம்

பொ. கருணாகரமூர்த்தி செர்மனியில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். சிறுகதை, நாவல் ஆகியவற்றுடன் புனைவுசாரா எழுத்துக்களையும் எழுதிவருபவர். இவரின் "ஒரு அகதி உருவாகும் நேரம்" தொகுதியில் இடம்பெற்றுள்ள "வாழ்வு வசப்படும்" என்ற குறுநாவலை மையமாகக் கொண்டதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

புலம்பெயர்ந்த தமிழ்ப்படைப்பாளிகளின் படைப்புக்களில் தாயகம், புகலிடம் என்ற இரட்டைச்சூழல் சார்ந்த படைப்புக்களை அவதானிக்கமுடியும். அந்த வகையில் பொ. கருணாகரமூர்த்தியும் தனது எழுத்துக்களைத் தந்திருக்கிறார். இங்கு புகலிட எழுத்துக்களின் முக்கிய போக்குகளில் ஒன்றாகிய பண்பாடு சார்ந்த விடயத்தை மட்டும் இப்பகுதியில் நோக்கலாம்.

கலாசாரம் - தமிழ்மனம் - தத்தளிப்பு

இலங்கைத் தமிழருக்கெனத் தனித்துவமான பண்பாட்டு அம்சங்கள் உள்ளன. அவர்களின் சமூகம், மொழி, வாழ்வியல் அம்சங்கள் சார்ந்து பல தனித்துவமான பண்பாட்டுக் கூறுகள் தமிழ் வாழ்வுக்குரியதாக இருக்கின்றது. தமிழர் வாழ்புலப் பண்பாட்டைக் கீழைத்தேயப் பண்பாடு என்றும் கூறுவர். இவர்கள் முற்றிலும் மேலைத்தேய நாடுகளில் அந்நிய பண்பாட்டுக்குள் கலந்து வாழமுற்படும்போது எதிர்கொள்ளும் அனுபவங்களும், முரண்பாடுகளும், தத்தளிப்புக்களும் வேறுவேறானவையாக அமைகின்றன.

இந்தவகையில் கருணாகரமூர்த்தியின் பல புனைவுகளில் தமிழ்மனம் எதிர்கொள்ளும் கலாசாரத் தத்தளிப்பை அவதானிக்க முடியும். 'வாழ்வு வசப்படும்' என்ற குறுநாவலிலும்; சிறுகதைகளான 'பர்வதங்களும் பாதாளங்களும்', 'வண்ணத்துப்பூச்சியுடன் வாழ முற்படுதல்' ஆகிய சிறுகதைகளிலும் மிகத்தெளிவாக இந்தப் பண்பை

அவதானிக்கமுடியும். இக்கட்டுரையில் "வாழ்வு வசப்படும்" குறுநாவல் கருத்திற்கொள்ளப்படுகிறது.

உண்மையில் 'தமிழ்மனம்' என்பது தமிழ்வாழ்வைக் குறிப்பதாகவே அமைகிறது. அது தமிழ்ப்பண்பாட்டினால் கட்டமைக்கப்பட்ட சிந்தனையோட்டத்தையும் செயற்பாட்டையும் குறிப்பது. மிக நுண்மையாக நோக்கினால் அது தனது தமிழ் அடையாளத்தையே வெளிப்படுத்துகின்றது. இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து சென்ற தேசமெங்கும் இன்னமும் சாதியையும் சமயத்தையும் துடக்கையும் தம் நினைவிலிருந்தும் வாழ்விலிருந்தும் அகற்றமுடியாது கட்டுண்டு கிடக்கின்றனர். இதற்குள்தான் தமிழ்ப் பண்பாட்டு ஒழுக்கவியலும் எழுதப்படாத விதியாக அமிழ்ந்திருக்கின்றது. இந்த நிலையில் முற்றிலும்; தமிழ், தமிழ்ப்பண்பாடு என்று வாழ்ந்தவர்கள் அந்நிய வாழ்வில் எதிர்கொள்ளும் தத்தளிப்புத்தான் இந்தக் குறுநாவலில் உள்ளது.

> "ஏறத்தாழ எல்லாக் கதாபாத்திரங்களிலும் ஆசிரியர் சீராக ஒரு விஷயத்தை வைத்திருக்கிறார். கீழைத்தேசக் கலாசாரத்தில் வளர்ந்த மனிதர்கள் மேலைத்தேச கலாசாரத்தை எதிர்கொள்ளும் தத்தளிப்புதான் அது. அத்வைதன் முதல் அலெக்ஸ் வரை பல்வேறு நிலைகளில் அதை வெளிப்படுத்துகிறார்கள். அவ்வெளிப்பாடு மூலம்தான் அவர்களுடைய குணச்சித்திரம் வெளிப்படுகிறது. கதாபாத்திரங்கள் மெல்லிய வேகமாக கோடுகள் மூலம் தீட்டப்படும் ஓவியங்களாக, சகஜமாகவும் வேகமாகவும் உருவாகும் விதம் இக்குறுநாவலின் மிக முக்கியமான குணம் என்று படுகிறது."[1]

என்று எழுத்தாளர் ஜெயமோகன் இக்குறுநாவலின் முக்கியத்துவம் குறித்து எழுதுகிறார்.

முத்துராசண்ணை, அத்வைதன், திலகன், நகுலன், நிமலன், சுருவில் ஆகிய இலங்கைத்தமிழர்கள் செர்மனிக்கு புலம்பெயர்ந்த போது அவர்களை அந்நாட்டு அரசு அகதிகளாகக் கருதி அவர்களுக்குத் தங்குமிடம் கொடுத்து சமூகநல உதவிப்பணமும் கொடுத்து வாழ வழிசெய்கிறது.

ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்தபோது பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இவர்கள் புலம்பெயர்கிறார்கள். ஒரு அறையில் இரண்டடுக்குக் கட்டில் அமைத்து 'ப' வடிவத்தில் ஆறுபேரை அங்கு தங்க ஏற்பாடு செய்கிறார்கள். இவர்களைப் போலவே ஏனைய நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்த பாகிஸ்தானியர், கானாக்காரரும் இதேபோல அறைகளில் தங்கவைக்கப்படுகிறார்கள்.

இக்குறுநாவலில் அகதிகளை ஜேர்மனி நடத்துகிறவிதம், தொழில் தேடுதலில் - தொழில் புரிதலில் உள்ள சிக்கல்கள், மேலைத்தேயக் கலாசாரத்தை எதிர்கொள்வதில் உள்ள தத்தளிப்புகள், தாயகக் குடும்பங்களின் நிலை, தனிப்பட்டவர்களின் பல்வேறு மனநிலைகள் ஆகியவை முதன்மையாகப் பேசப்படுகின்றன.

குறிப்பாக செர்மனிக்கு புலம்பெயர்ந்து வாழநேரிட்ட இலங்கைத் தமிழ் இளைஞர்களின் சிந்தனையோட்டங்களை அவர்களின் செயற்பாடுகளை இந்நாவல் கோடிட்டுக்காட்டுகிறது. இலங்கைத் தமிழரின் புலம்பெயர்வு 1980 களில் இருந்தே முனைப்புக் கொண்டிருந்த் காலகட்டத்தில் ஜேர்மனி போன்ற முற்றிலும் அந்நிய மொழிபேசும் நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் மனவோட்டங்களை இது எடுத்துக்காட்டுகின்றது. இதனை டி.செ. தமிழன் புலம்பெயர்ந்தவர்களின் மனவோட்டங்களை சொல்லும் ஆரம்பகால ஆவணம் என்று குறிப்பிடுவது முக்கியமான அவதானிப்பு.

> "80களின் ஆரம்பத்தில் ஈழத்திலிருந்து செர்மனிக்கு அகதிகளாய் அடைக்கலங்கேட்டு, ஒரே அறையில் தங்கியிருக்கும் ஐந்தாறு இளைஞர்களைப் பற்றிய கதைதான் இது. இன்னொருவகையில் சொல்லப்போனால், இந்தக்கதை எமது புலம்பெயர் வாழ்வின் தொடக்கத்தைப் பதிவு செய்யும் ஒரு முக்கிய ஆவணம் எனவும் சொல்லலாம். புலம்பெயர் வாழ்க்கை என்பது பொதுவான ஒன்றல்ல. நாம் புலம்பெயர்ந்த ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்ப அவை வேறுபடுபவை. உதாரணமாய் கனடா, இங்கிலாந்து போன்றவற்றுக்கு குடிபெயர்ந்தவர்களுக்கும், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களுக்கும், இடையிலான வாழ்க்கை என்பது வித்தியர்சமானது. கனடா போன்ற நாடுகளுக்கு குடிபெயர்ந்தவர்களுக்கு, ஆகக்குறைந்தது, ஏற்கனவே கற்றுக்கொண்ட, அடிப்படை ஆங்கிலத்தை வைத்து, தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவாவது முடிந்திருந்தது. ஆனால் ஜெர்மனி, பிரான்ஸ் போன்றவற்றுக்குப் போனவர்கள், மொழியிலிருந்து எல்லாவற்றையும் புதிதாகவே கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே அவர்களுடைய புலம்பெயர்வு எம்மைவிட வித்தியாச மானது மட்டுமின்றி, மிகவும் கஷ்டமானதும் கூட எனவே 'புலம் பெயர் வாழ்வு' என்ற ஒற்றைவரிக்குள், எல்லோருடைய வாழ்வையும், பொதுவாகப் பார்க்கும் நிலையையும், நாம் மாற்றவும் வேண்டியிருக்கிறது."[2]

ஆசிரியர் அத்வைதனை பிரதான பாத்திரமாக்கி கதையை நகர்த்தியுள்ளார். இதில் வரும் ஆறு பாத்திரங்களும் ஆறு வகையான மனவுணர்வு மற்றும் செயற்பாடு கொண்டவர்கள். ஒவ்வொரு காரணத்துடனும் புலம்பெயர்ந்து வந்தவர்கள்.

இவர்கள் வதியும் விடுதி நான்கு மாடிகளைக் கொண்டது. முதலாவதில் உலகின் ஆதித்தொழிலாகிய விபச்சாரம் மற்றும் மதுபானச் சாலைகளும் மூன்றாவதில் இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களும் நான்காவதில் நிரந்தர குடியிருப்பாளர்களாகிய செர்மனியரும் வதிகின்றனர்.

இந்நாவலில் பல விடயங்கள் பேசப்பட்டாலும் கீழைத்தேய மரபில் வாழ்ந்தவர்கள் எதிர்கொள்ளும் கலாசார முரண்பாடு அதிகம் பேசப்படுவது நோக்கத்தக்கது. குறிப்பாக

1. போதைப்பொருள் பாவனை
2. மதுப்பாவனை
3. போர்ணோ படங்களின் பாதிப்பு
4. பெண்களின் தொடர்பு

ஆகியவை இக்குறுநாவலின் பேசுபொருள்களில் முக்கியமானவை.

> "மொழிவழித்தனிமை, கலாசாரத் தனிமை, பாலியல் தனிமை, என்று தனிமையின் வகைமைகளுக்குள் சிக்கி சுழலும் அகதி வாழ்வு. அதிலும் அதீதப் பாலியல் தனிமை காரணமாக பெரும்பாலான கதாபாத்திரங்கள் பாலியல் குறித்த விடயங்களை ஏதாவதொரு விதத்தில் வெளிப்படுத்தும் கதைப்போக்கு அகதிகளின் உளவியல் தாக்கத்தைக் காட்டுகிறது. "[3]

நாவலில் வரும் ஈழத்தவர் ஆறுபேரின் கதையுடன் இணையாக பக்கத்து அறைகளில் வசிக்கும் பாக்கிஸ்தானியர், கானாக்காரர் ஆகியோருடன் கதையோட்டம் நகருகின்றது.

இவர்களில் வயதில் மூத்தவரான முத்துராசண்ணை கடவுள் சிந்தனையும் அமைதியும் கொண்டவர். அடிதடிகளுக்கு போகாதவர். சமையல் வேலைகளுடன் அவர் பொழுது போய்விடும். அத்வைதன் கொஞ்சம் கோபக்காரன் அநீதிகளைக் கண்டு பொறுக்கமாட்டாதவன். காலையில் மாடிப்படிகளில் ஏறி பத்திரிகைபோடும் வேலையை செய்பவன். இதனை திலகனும் செய்கிறான். ஆனால் அவன் ஒரு ஜாலிப்பேர்வழி. இக்குறுநாவலின் பேசுபொருள் திலகன் பாத்திரத்திற்கு ஊடாகவே அதிகம் சிலாகிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது. மற்றவர்களில் சுருவில் ஒரு ஹோட்டலில் உறவினர் ஒருவர் ஊடாக கிடைத்த வேலையை செய்துவருபவர். மாதம் ஒரு தடவை சோசல் காசு பெறுவதற்காக இவர்களது அறையில் வந்து தங்குபவர். மற்றைய இருவரும் வயதில் இளையவர்கள். சகோதரர்கள்.

இந்நாவலில் மேலைத்தேய சமூகத்தில் வளர்ந்த இரண்டு இளம்பெண்களை அவதானிக்கலாம். அவர்களில் ஒருத்திக்கு பிள்ளளயைப் பெற்று நல்ல விலைபேசி விற்றல் தொழிலாகிறது. மற்றவளுக்கு தனது கைச்செலவுகளுக்காக சோரம்போதல் உதவுகிறது.

இவ்வாறான பெண்களின் தொடர்பு புலம்பெயர்ந்து அங்கு வாழ நேர்ந்த இளைஞர்களுக்கு கைகூடுகிறது. கறுப்பின ஆடவருடன் நட்புக்கொண்டு அவர்கள் மூலம் குழந்தை பெற்று விற்கும் ஒருத்தியாக சபீனா என்ற பெண் இக்குறுநாவலில் அறிமுகமாகின்றாள். அவள் அத்வைதனுடன் நிகழ்த்தும் உரையாடல் ஒன்றை நோக்கலாம்.

"அத்வைதன் விளங்காமல் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்"

"நத்திங் ஆக்ஸ்டென்ரால், கர்ப்பம் தங்க வைத்துக் கொண்டு வந்தேன்."

"இந்தியக் குழந்தையில் அப்படி என்ன விசேஷம்?"

"சொக்கோ பிறவுண் குழந்தைகளுக்கு ஏக டிமாண்ட தெரியுமோ? கண்ணடித்தாள்"

"இப்போ எங்கே குழந்தை?"

"போன கோடையில் ஷிஹ்றீயீக்குப் போயிருந்தபோது ஒரு பணக்காரன் ஸ்வீகாரம் பண்ணிறேன் என்றான். கொடுத்திட்டேன். ஒன்றும் சும்மாவல்லஞ் அறுபதினாயிரம் டொய்ச்மார்க். இதைச் சம்பாதிக்க நான் பத்து வருஷம் மாடாய் உழைக்க வேணும் பார். இது ஒரு சிம்பிளான பிஸினஸ்"[4]

இதேபோல் இன்னொரு பெண்பற்றிய சம்பவமும் நாவலில் வருகிறது. பக்கத்து அறையில் வதியும் இலங்கைத்தமிழர் இரண்டு பேர் போதைவஸ்தும் போர்ணோவும் என அலைபவர்கள். பாடசாலை சென்றுவரும் 14 வயதுடைய பள்ளி மாணவியை தம் அறைக்கு அழைத்து வந்து போதைஊசியை அதிமாகச் செலுத்தி அவளை பாலியல் தேவைக்கு உட்படுத்துகின்றனர். இறுதியில் அவள் இறக்கும் தறுவாயில் அவளைக் காப்பாற்றும் எண்ணமில்லாத அவர்களின் மனித மனமும் அதற்கு இடங்கொடாத சட்டங்களும் இந்நாவலில் காட்டப்படுகிறது.

இச்சம்பவத்தை அறிந்து அத்வைதன் கோபப்படுகிறான். அவர்களுடன் சண்டைபிடிக்க முற்படுகிறான். இறுதியில் அந்தப் பெண்ணைக் காப்பாற்றும் பொருட்டு பொலிஸில் அறிவித்தும் அவர்களின் சட்டம் அதற்கு இடங்கொடுக்காத நிலையில் போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் விசேட அம்புலன்ஸ் வண்டி வைத்தியர்களின் உதவியுடன் அவள் உணர்வற்ற ஆபத்தான நிலையில் மீட்கப்படுவதோடு நாவல் முற்றுப்பெறுகின்றது.

பாலியல் நடவடிக்கைகள் மேலைத்தேய வாழ்வில் திறந்து விடப்பட்ட கலாசார நிலையாக இருந்தாலும் இவர்களின் பார்வையில் அது ஒழுக்கவிதிகளுக்கு அப்பாற்பட்டதாகவே அமைகின்றது. இது சார்ந்த பல சிக்கல்களை அறைநண்பர்கள் எதிர்கொள்கின்றனர்.

கிழைத்தேய கறுப்பின ஆடவனை நண்பனாக்கிக் கொள்வதன் ஊடாக தான் சொக்கிளற் கலர் குழந்தை பெற்று அதனை நல்ல

விலைக்கு விற்றுவிட விரும்பும் பெண் ஒருத்தி திலகனுடன் நெருங்கிப் பழகியபின் தனது குழந்தைக்கு அப்பாவாக பதிவுசெய்தால் போதும். தான் அந்தக் குழந்தையை பின்னர் நல்ல விலைக்கு விற்றுவிடுவேன் என்கிறாள். இது அதிர்ச்சியூட்டும் சம்பவமாக அமைகிறது. பத்திரிகை விநியோகிக்கப்போன இடத்தில் வெள்ளைக்காரப் பெண்கள் படுக்கைக்கு அழைக்கும் சந்தர்ப்பங்கள், முத்துராசன் ஒருமுறை ஜேர்மனியை சுற்றிப்பார்த்து போட்டோவுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு இளம்பெண் அவரை முத்தமிட்டுச் செல்லும் சந்தர்ப்பம், இன்னும் பல சம்பவங்கள் எல்லாம்; கீழைத்தேய ஒழுக்கவியலில் வாழ்ந்தவர்களை இரண்டக நிலைக்கு உட்படுத்துகின்றன.

> "ஒரு நாட்டில் குடியுரிமை பெற்று வாழும் வேற்று நாட்டவர்கள் அவர்கள் குடியேறிய நாட்டின் பண்பாட்டில் ஒரு பகுதியையும் அவர்களின் சொந்தப்பண்பாட்டில் பெரும் பகுதியையும் இணைத்துக் கொண்டவர்களாய் உள்ளனர். இவ்வாறான வாழ்க்கைமுறை அவர்கள் வாழும் நாட்டு மக்களின் பண்பாட்டிலிருந்து வேறுபட்டதாக அமையும். அவர்களின் அவ்வகைப்பண்பாடு அந்நாட்டின் மொத்தப்பண்பாட்டில் ஓர் உட்பண்பாடாக அமையும்"[5]

என புலம்பெயர்ந்த தேசத்தின் உபபண்பாடு பற்றி கூறப்படுகிறது. இக்கூற்று ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து இற்றைக்கு கால்நூற்றாண்டு கழிந்துவிட்ட நிலையில் பொருத்தமாக இருக்கின்றது. ஆனால் இந் நாவல் புலம்பெயர்ந்தவர்களின் ஆரம்பநிலை குறித்தே பேசுவதனாலேயே மேற்குறித்த கலாசார தத்தளிப்பை இலங்கைத்தமிழர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்திருக்கின்றது.

மேலும் ஒரு சம்பவத்தையும் இங்கு எடுத்துக்காட்டலாம். அறைநண்பர்கள் ஒருமுறை கோவைத்தமிழர் ஒருவரை சந்திப்பதன் ஊடாக தமிழ்ப்படம் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. அவர் ஒரு சுரண்டல் பேர்வழியாக இந்நாவலில் காட்டப்படுகிறார். அவருடன் ஏற்பட்ட மனக்கசப்பு அறைநண்பர்களுக்கு ஒரு டீவியும் டெக்கும் வாங்கவேண்டிய தேவையை ஏற்படுத்துகிறது. அது படிப்படியாக இவர்கள் மட்டுமல்லாமல் பக்கத்து அறையினரும் தமிழ்ப்படம் பார்ப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. காலநீட்சியில் 'போர்ணோ' படம்பார்க்கும் நிலைக்கு இவர்களது பொழுது தள்ளப்படுகிறது. இதுபோன்ற சம்பவங்களுக்கு நாவலில் இருந்து சில உதாரணங்களை எடுத்துக்காட்டலாம்.

> "படம் திடீரென முடிந்து 'டிவி' திரையிலிருந்து அறைக்குள் வெளிச்சம் பரவியபோது நிமலனும் முத்துராசா அண்ணையும் தத்தமது கட்டில்களில்

தலையைச் சுற்றிப் போர்த்தபடி உட்கார்ந்து படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்"[6]

"அறையின் மையமாகவிருந்த பதிவான மேசையில் மூன்றுபேர் காலடியில் பியர்க் குலையும், கையில் சிகரெட்டுமாக 'ரம்மி' ஆடிக்கொண்டிருந்தனர். கதவுக்கு எதிராக இருந்த கட்டிலில் ஒருவன் ஜெர்மன்காரி ஒருத்தியை போர்த்தி வைத்து முயங்கிக் கொண்டிருந்தான். அத்வைதன் 120000 வோட்ஸ் மின்சாரத்தால் தாக்கப்பட்டு சுதாகரிப்பதற்குள் அவனையும் ரம்மியாட அழைத்தனர். அத்வைதன் வேறொரு சமயம் வருவதாகக் கூறிக்கொண்டு வெளியே பாய்ந்தான். அவனின் மனோ உணர்வுகளைத் துளியும் புரியாத சார்ளியின் அறையினர் ஒரு அரை மணிநேரமாவது ரம்மியாட வருமாறு கெஞ்சினர்."[7]

"இவங்கட செக்ஸ்... ஒழுக்கம் பற்றிய பார்வையே வேறை.. போய் பிரண்டோட ஒருத்தி ஒரு பார்ட்டிக்கு போறாள் என்று வையன். அவள் தாயே பில்லை (கருத்தடை)யும் எடுத்துக் கையில கொடுத்து விடறாளே?.... இவங்களுடைய தியறிப்படி ஒழுக்கத்திற்கும் கன்னித்தன்மைக்கும் சம்பந்தமேயில்லை"[8]

## தொகுப்பு

புலம்பெயர்ந்தவர்களின் ஆரம்பகால வாழ்க்கை நெருக்கடியை முக்கியமாக இந்நாவல் எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இன்று புலம்பெயர் இலக்கியத்தில் அதிக அழுத்தம் கொடுத்துப் பார்க்கவேண்டிய விடயம் 'தமிழ்அடையாளம்' அது பண்பாடு சார்ந்து அவர்களின் வாழ்க்கை சார்ந்து எந்தவிதமான சரிவுகளை மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கால்நூற்றாண்டு கடந்துவிட்ட நிலையில் இங்கு குறிப்பிடப் பட்ட பலவற்றில் இன்று வாழ்ந்துவரும் புகலிடத் தமிழர்கள் புகலிடப் பண்பாட்டில் தமக்குரிய உபபண்பாட்டைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

மொழி, சமயம், திருமணம், பழக்கவழக்கம், பொழுதுபோக்கு. பாலியல் சார்ந்த பல விடயங்களில் எமது தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளுக்கு இருக்கக்கூடிய தனித்துவமான அம்சங்களோடு புலம்பெயர்ந்த நாட்டின் மொத்தப்பண்பாட்டில் உப பண்பாட்டுக்கூறு ஒன்றினையும் உருவாக்கி இன்று வாழ்ந்து வருகின்றனர். எவ்விதத்திலும் முற்றுமுழுதாக தமிழ்ப்பண்பாட்டு மனம் என்ற நிலை மாறி ஒத்துப்போகக்கூடிய அல்லது மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய நிலையிலேயே இன்று புகலிடத்தமிழர்கள் இருக்கின்றனர். அது உணர்வுபூர்வமான மொழிவழியான தமிழ் அடையாளமாக

முற்றுமுழுதாக அல்லாமல் வெறும் தமிழ் அடையாளமாகவே மூன்றாம் தலைமுறையினரிடத்தில் கையளிக்கப்படுகிறது. இதற்கு இன்றைய மொறீசியஸ் நல்ல உதாரணம் ஆகும்.

எனவே கருணாகரமூர்த்தியின் இக்குறுநாவலானது இலங்கைத்தமிழரின் ஆரம்பகால வாழ்க்கைச் சூழலை எடுத்துக்காட்டும் ஆவணமாக திகழ்கின்ற நேரத்தில் தமிழ்ப்பண்பாட்டு மனம் எதிர்கொள்ளக்கூடிய கலாசாரத் தத்தளிப்பையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் புலம்பெயர் தமிழரின் வாழ்க்கையில் அவர்களின் எழுத்துக்களில் தமிழ்ப்பண்பாடு அல்லது தமிழ் அடையாளம் என்பதுதான் முக்கிய பேசுபொருளாக இருக்கும் என்பதும் இக்குறுநாவலூடாக வலியுறுத்தப்படுகிறது.

**அடிக்குறிப்புக்கள்**

1. ஜெயமோகன் : 1996, "இவை என் முகங்கள்" ஒரு அகதி உருவாகும் நேரம் சென்னை, ஸ்நேகா ப7.
2. டி.சே. தமிழன்: "வாசிப்பும் சில குரல்களுக்கான எதிர்வினையும்" http://djthamilan.blogspot.com/2009/06/blog-post.html
3. வெற்றிச்செல்வன். ப: 2009, ஈழத்தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும், சென்னை சோழன் படைப்பகம், ப 228.
4. கருணாகரமூர்த்தி : 1996, ஒரு அகதி உருவாகும் நேரம், ஸ்நேகா, சென்னை, ப 59.
5. பக்தவத்சலபாரதி : 1999 (விரிவாக்கி திருத்திய பதிப்பு), பண்பாட்டு மானிடவியல், சென்னை, மணிவாசகர் பதிப்பகம், ப169.
6. மேலது 4: ப99.
7. மேலது 4: ப75.
8. மேலது 4: ப125.

# நார்வேத் தமிழர் வரலாறும் வாழ்வியலும்

முனைவர் செ.யோகராசா
கிழக்குப்பல்கலைக்கழகம்,
இலங்கை

## 1. முன்னுரை

இலங்கைத் தமிழர்களது வாழ்க்கையில் வெளிநாடுகள் நோக்கிய புலப்பெயர்வுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து அவ்வப்போது நடைபெற்று வந்துள்ளன. ஆயினும், சென்ற நூற்றாண்டின் எண்பது களிலிருந்து ஐரோப்பிய நாடுகள், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளை நோக்கி நிகழ்ந்த புலப்பெயர்வுகளே இலங்கைத் தமிழர்களது வாழ்க்கையில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. ஆயினும், இப்புலப்பெயர்வுகள் பற்றிய ஆய்வுகள் போதியளவு நடைபெற்றிருப் பதாகக் கூறமுடியாது. இத்தகைய குறைபாட்டினை ஓரளவாவது நிவர்த்திசெய்வனவாக, புகலிட நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் எழுதுகின்ற நவீன இலக்கியங்களும் புனைகதை சாரா இலக்கியங்களும் திகழ்கின்றன. இவ்விதத்தில் நார்வே எழுத்தாளரான இ.தியாக லிங்கத்தின் நாவல்களை அடிப்படையாகக் கொண்டு நார்வேயில் வாழ்கின்ற தமிழர்கள் தமது வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அவதானிப்பதாக இவ்வாய்வு அமைகின்றது.

## 2. ஆய்வு மூலங்கள்

இ.தியாகலிங்கம் பின்வரும் நாவல்களை எழுதியுள்ளார்: அழிவின் அழைப்பிதழ் (1994), நாளை (1999), பரதேசி (2008), வரம் (2009), திரிபு (2009), எங்கே? (2011), ஒரு துளி நிழல் (2013), பராதேசிக் கூத்துகள் (2014)

மேற்குறித்த நாவல்களுள் இறுதியாக குறித்த மூன்று நாவல்கள் தவிர' ஏனைய நாவல்களே இவ்வாய்விற்கு மூலங்களாக விளங்குகின்றன.

### இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள்

'தனிமை'

இலங்கையிலிருந்து (குடும்பமாகவன்றி) தனி ஒருவராக புலம்பெயர்ந்து புகலிட நாட்டில் வாழ்பவர் எதிர்கொள்கின்ற முக்கியமான பிரச்சினைகளுள் தலையாயது அவர் தனிமையாக வாழ்வதாகும். சொந்த நாட்டில் தனித்தோ குடும்பத்துடனோ வாழ்பவர்களால் உணரப்பட முடியாததான இப்பிரச்சினை காரணமாக

புகலிட நாட்டுத் தமிழர் மத்தியில் ஏற்படும் பாதிப்புக்கள் குறிப்பாக பண்பாடு சார்ந்த பாதிப்புக்கள் அதிர்ச்சிதரக்கூடியவை. ரமணன் என்ற தமிழ் இளைஞனது தனிமை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அவைபற்றி அலசுவதாக இ. தியாகலிங்கத்தின் 'அழிவின் அழைப்பிதழ்' விளங்குகின்றது.

அழிவின் அழைப்பிதழ் நாவலின் ஆரம்பமே 'தனிமை'யால் ஏற்படும் பாதிப்புக்களைத் தெளிவாக உணர்த்துவதாக காணப்படுகின்றது. அப்பகுதி இவ்வாறு தொடங்குகின்றது.

"ஐந்து வருடங்கள் இந்த நாட்டிற்கு வந்து, என்னதான் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தாலும் தனிமையில் இருப்பது போன்ற உணர்ச்சிதான் எப்போதும் மனதில்! நாட்டிலே அப்பா அம்மாவுடன் இருக்கும்போது இப்படித் தனிமை உணர்ச்சி தோன்றியது இல்லை. ஆண்களுடன் ஆண்கள் அன்னியோன்னியமாக இருப்பது நடிப்பது போல உடம்பைத் தொட்டுக் கொள்ளாத உறவு இது. இதில் எப்படிப்பட்ட அன்னியோன்னியம் இருக்க முடியும்? ஒரு தாய் மகனைத் தொடாமலே வளர்த்தால் அவர்களிடத்தில் பாசம் தோன்றலாம். அந்தப் பாசத்தால் உண்டாகாத ஒரு உணர்ச்சியும் இதமும் தொட்டு உண்டாகும் பாசத்தால் மட்டுமே உண்டாக முடியும்.

நான் விரும்பியவாறு நடக்கலாம். யாரும் தடுத்துவிட முடியாது. ஆனால், நான் அப்படி நடக்கவில்லை. மனிதாபிமானம், பாசம், மரியாதை ஆகியன காரணமாய் இருக்கலாம். நான் சிந்திப்பது போன்று என் பெற்றோர்கள் சிந்திப்பது இல்லை. எனது வேதனையைப் பற்றி, எனது வருத்தத்தைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. எத்தனையோ கடிதங்கள் எழுதியாகவிட்டது. ஆனால், அவர்களுக்கு புரிய வைக்க முடியவில்லை. அவர்கள் புரிந்து கொள்ள விரும்பவில்லையா என்பது கூட எனக்குத் தெரியாது. நான் இப்படி நித்தமும் மனதிற்குள் புழுங்குவதால் எந்த முடிவும் வரப்போவதில்லை. புரிந்தும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்க வேண்டியுள்ளது. எனது விருப்பத்திற்கு நான் நடப்பதனால், அப்பா அம்மாவின் ஆசைகளையும் நம்பிக்கைகளையும் உடைக்க வேண்டும். ஆசைகளையும் நம்பிக்கைகளையும் மாத்திரமா? அவர்களுடனான உறவையும் அல்லவா உடைத்துக் கொள்ள வேண்டும்? அதை நான் விரும்பவில்லை. இதற்கு முடிவுதான் என்ன? தலையில் நரை புழுக்க நான் வாழ வேண்டுமா? இது என்ன கொடுமை?.."(பக். 6 - 7)

மேற்கூறிய பகுதியினூடாக,(1) தனிமையின் கொடுமை (2) புகலிட நாட்டுச் சூழலும் வயதும், ஆண்-பெண் உடலுறவு சார்ந்த சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் தூண்டுதல் (3) பெற்றோர்கள் மகனது உடல், உள நிலையை உணராமை (4) உழைப்பை எதிர்பார்க்கும் பெற்றோரது மனோபாவம் (5) பெற்றோரது உறவினை துண்டிக்கமுடியாத இளைஞனின் மனோநிலை முதலான பல விடயங்கள் வெளிப்படுகின்றன. இத்தகைய சூழலில் ரமணன், கெய்தி

என்ற விலைமாதுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்கின்றான். முதல் நாள் அனுபவத்தை இவ்வாறு விவரிக்கின்றான்:

"எனக்கும் அவளுக்கும் இடையில் காற்றுக்கூடப் புகமுடியாத இடைவெளி. நாங்கள் இறுக அணைத்து முத்தமிட்ட வண்ணம் இருந்தோம். பின்பு அவள் தன்னைச் சற்று விடுவித்துக் கொண்டு, நான் அப்படியே நின்றிருக்க அவள் முட்டுக்காலில் இருந்தாள். எனது இடையை கட்டி அணைத்தாள். இரண்டு முத்தமிட்டாள்.

என்னை நிமிர்ந்து பார்த்து,'விருப்பமா?' என்று கேட்டாள்.

அவள் எனக்கு அந்த இன்பத்தைத் தந்தாள். இப்படியும் இன்பம் அனுபவிக்கலாம் என்பதை இலங்கையில் வாழ்ந்த காலத்தில் நான் கேள்விபட்டதுமில்லை, அவளுக்கு இருந்த பொறுமை எனக்கு இருக்கவில்லை. என்னால் தாங்க முடியவில்லை. இன்னும் சிறிது நேரம் விட்டால் அது ஆபத்தானது என எனக்குப் புரிந்தது. எனவே, அள்ளிச் சென்று படுக்கை மீது சாய்த்தேன்..." (ப. 40)

மேற்கூறியவாறு ஆரம்பித்து அடுத்த முறை, அடுத்தடுத்த முறைகள் எனத் தொடர்ந்த உறவுகளினிடையே உடற்களைப்பு, குளிர்காலத்திலும் ஓயாத வியர்வைப் பெருக்கம், தீராத தலைவலி ஏற்பட்டமை காரணமாக ரமணன் வைத்தியசாலைக்குச் செல்கிறான். நான்றாகப் பரிசோதனைகள் நடந்து சிலநாட்களின் பின்னர்தான் ரமணன் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டிருப்பது புலப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட சம்பவங்களுக்கு பிற்பட்ட ரமணனின் மன உணர்வுகள், மனப்போராட்டங்கள் நுணுக்கமாகவும் ஆழமாகவும் வெகு இயல்பாகவும்ட கலாபூர்வமான முறையிலும் நாவலாசிரியரால் சித்திரிக்கப்படுகின்றன. (ரமணனின் நடத்தைகளை அறிந்தும்கூட அவன்மீது தீராக் காதல் கொண்ட கவிதாவிற்கும் எயிட்ஸ் நோய் ஏற்பட்டுவிடுகின்றது. அதற்குக் காரணம் முன்பொரு நாள் கத்தியால் அப்பிள் வெட்டியபோது கைவிரலில் ஏற்பட்ட காயத்தினூடாக அவளிடம் எச்.வி.கிருமிகள் தொற்றிக் கொண்டமையாகும்) இத்தகைய எழுத்தாற்றல் காரணமாக இந்நாவல் வாசகர்களை எளிதாக ஈர்த்து அவர்களிடம் உளத்தாக்கத்தை ஏற்படுத்தும் வலுவைப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சுருங்கக்கூறின் புகலிடநாடுகளில் வாழ்கின்ற தமிழ்மக்கள் குறிப்பாக இளைஞர்கள் எதிர்கொள்கின்ற முக்கியமானதொரு பிரச்சினை சிறப்பான முறையில் முதன் முதலாக இந்நாவலூடாக வெளிப்படுத்தப்படுகின்றதென்பது விதந்துரைக்கத்தக்கது.

### பொருந்தா மணம்

புகலிட நாட்டுத் தமிழரது வாழ்க்கை மீதுள்ள மோகம் காரணமாக - அது ஏற்படுத்தும் ஈர்ப்புக் காரணமாக இலங்கையில் வாழ்கின்ற பெற்றோர்கள் துன்பப்பட்டு சீதனம் கொடுத்து தமது

பெண் பிள்ளைகளுக்கு புகலிடத்தில் வாழ்கின்ற ஆடவர்களை திருமணம் செய்து வைக்கின்றனர். இத்தகைய திருமணங்கள் பலவும் மனப்பொருத்தம் பாராமலும், நிழற்படங்களை மட்டும் நம்பியுமே நிகழ்வதும் இதனால் திருமணத்திற்குள்ளான பெண்களது வாழ்க்கை சொல்லாண்ணாத அவலங்களுக்குள்ளாவதும் சர்வசாதாரணமான விடயங்களாகவுள்ளன. எனினும் இவைபற்றி இலங்கைப் பெற்றோர்கள் பலரும் பெருமளவு அறிவதில்லை. (அறிவோர் சிலரும் பதிவு அல்லது திருமணம் நடந்த பின்னரே உண்மை நிலையை அறிகின்றனர்) இவ்வாறு துன்பத்தில் மூழ்கி வாழ்க்கை நடத்தும் புகலிடத் தமிழ்ப்பெண்கள் பலரும் நவீனகால அடிமை நிலையிலேயே காணப்படுகின்றனர் என்பது மிகைக் கூற்றன்று. முன்பின் எதுவுமே அறியாத குமாரவேல் என்பவரை திருமணம் செய்ய உடன்பட்டு நோர்வே சென்று (அவரைப் பதிவுத் திருமணம் செய்யாமலேயே) அவரோடு குடும்ப வாழ்க்கை நடத்துகின்ற நிம்மி என்ற பெண்ணின் வாழ்க்கைச் சித்திரமே 'பரதேசி' என்ற நாவலாகும்.

'பரதேசியில் வருகின்ற கணவனான குமாரவேலு எத்தகைய குண இயல்புகள் கொண்டவர் என்பதை நாவலின் பின்வரும் பகுதிகள் உணர்த்தி நிற்கின்றன:

குமாரவேலுவின் பாலுணர்ச்சி உந்தல், உடலுறவிற்கான அவசரம், பெண்ணின் மனநிலையை உணராத நிலைமை, அறியாமை, படிப்பறிவின்மை, சாப்பாடு மீதான பேரவா முதலான குணாம்சங்கள் தெளிவாகப் புரிகின்றன. இத்தகையவரான குமாரவேலுவுடன் இணங்கிப்போகின்ற தன்மை நிம்மிக்கு இருந்தாலும் அடி, உதை, வதை முதலான கொடுமைகள் காரணமாக தொடர்ந்து வாழமுடியவில்லை. எனவே, பதிவுத்திருமணத்தை துணிவோடு எதிர்க்கிறாள். வீட்டைத்துறந்து நம்பிக்கைக்குரிய நண்பனான திருநாவின் வீட்டில் சில நாட்கள் தங்குகிறாள். பின்னர் கனடாவில் குடும்பமாகவிருக்கின்ற தனது சகோதாஜீயான சுஜியுடன் வாழ முற்படுகிறாள். அவர்களது முயற்சியினால் தனக்கு உகந்த, மனைவியை இழந்து குழந்தையுடன் இருக்கின்ற விசுவம் என்பவரை மறுமணம் செய்து கொள்கின்றாள். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட படி அவனது குழந்தையைத் தன் குழந்தையாக வளர்ப்பதுடன் சமூக சேவையிலும் ஈடுபட முடிவெடுக்கின்றாள். அவனைத் தோழனாக ஏற்கின்றாள். பாரதிகண்ட புதுமைப்பெண்ணாக அடையாளப் படுத்தப்படுகிறாள். எவ்வாறாயினும் புகலிடச் சூழலில் நிம்மி என்ற பாத்திர உருவாக்கம் நிம்மியின் இறுதி முடிவுகள் காரணமாக (பதிவுத் திருமணத்தை எதிர்த்து நாட்டைவிட்டு வெளியேறுதல்) யதார்த்த வார்ப்பு என்பதனை விட, இலட்சியவாய்ப்பு ஆக இருக்கக்கூடிய வாய்ப்பே உள்ளதென்பது மனங்கொள்ளத்தக்கது. அவ்விதத்தில் முன்மாதிரிப் பாத்திரமாகவும் முற்போக்கான பாத்திரமாகவும் அவள் உருவாக்கப்பட்டுள்ளாள்.

எவ்வாறாயினும் ஈழத்தில் வாழ்கின்ற தமிழ்ப்பெற்றோருக்கு 'பரதேசி' கொடுப்பது சாட்டையடி என்றே கூறவேண்டும்.

சூதாட்டம்

புகலிடத் தமிழர்கள் தமது பொருளாதாரப் பின்னடைவு காரணமாகவும், அதிக அளவில் உழைக்க வேண்டிய அத்தியாவசியம் காரணமாகவும் குறுக்குவழிகளிலும் பொருள்தேட முற்படுகின்றனர். அண்மைக்காலமாக சூதாட்ட நிலையங்களுக்குச் சென்று சூதாடிப் பொருள் தேடுகின்ற முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இதனால் ஏற்படும் விபரிதங்களை விளக்குவதாக வரம் என்ற குறுநாவலின் தொகுப்பிலுள்ள விளையாட்டு உருவாகியுள்ளது.

அற்புதன் - நந்தினி தம்பதிகள் ! அவர்களுக்கு அரண், ஆரணி என்ற இருசெல்வங்கள்! கலகலப்பிற்கு எடுத்துக்காட்டான அக்குடும்பம் அற்புதன் சூதாட்டத்தில் ஈடுபடத் தொடங்கிய காலம் தொடக்கம சீரழியத் தொடங்கியது.

சூதாட்டத்தின் முதல்நாள் புறச்சூழல் பற்றியும் மனம் எவ்வாறு சூதாட்டத்தில் நாட்டம் கொள்ள ஆரம்பிக்கிறது என்பது பற்றியும் நாவலாசிரியர் பின்வருமாறு விபரிப்பதிலிருந்து புலனாகிறது.

"........நேரே வீட்டிற்குச் செல்லாது விடுப்பு ஒன்று எடுத்துச் செல்லலாம் என்று தோன்றிற்று. அந்த பாரிய சொப்பிங் சென்ரர் கம்பீரமாய் நின்றவண்ணம் கையசைத்து வா வா என வரவேற்பது போல் அவனுக்குத் தோன்றியது வேண்டாம் என்று தட்டிவிட்டு வீடு சென்றிருக்கவேண்டும். ஏனோ இன்று மனம் மறுத்தது. பாசத்தோடு அழைத்த பசுவை நோக்கி ஏகும் கன்றாய் பரபரப்போடு அதற்குள் நுழைந்தான். காசு கரையும், பொருள்கள் தொலையும், மனிதர் அலைமோதும் நவீன சந்தையில் எங்கும் எப்போதும் பரபரப்பே. கண்களைக் கவரும் பெண்களும், பெண்களைக் கருவம் பொருள்களும், எங்கும் அலையும் சிறுவர்களும், காதலில் கலைத்த இடத்தை கணக்கில் எடுக்காத காதலர் கூட்டமுமாய், உலகத்தின் அத்தனை இனங்களையும் ஐக்கியப்படுத்தி தன்னகத்தே வைத்துச் சுறுசுறுப்பாய் இயங்கும் சிறிய உலகம் ஒன்றிற்குள் இவனும் தொலைந்து போய்விட எண்ணினான்........

எவ்வாறாயினும் புகலிட நாடுகளில் உருவாகும் புதிய அதிர்வு ஆனா சூதாட்டம் பற்றிய அபாய அறிவிப்பு நாவல் என்ற விதத்தில் முதன் முதலாக இந்நாவலூடாகவே அறியப்படுகின்றது என்பது கவனிக்கற்பாலது.

ஒரு பாலின உறவு

தமிழகச்சூழலிலேயே கடந்த சில வருடங்களாக ஒரு பாலின உறவு விவாதப்பொருளாக மாறிவருகின்ற சூழல் காணப்படுகின்ற போது,[2] புகலிட நாட்டு தமிழ் குடும்பங்களிலே அது இடம்பெற

ஆரம்பிப்பது வியப்பிற்குரியதன்று. இவ்விதத்தில் நோர்வே தமிழ்குடும்பமொன்றிலே ஒரு பாலின உறவு உருவாவதையும் அதனால் ஏற்படும் விபரீதங்களையும் 'திரிபு' நாவல் விபரிக்கின்றது. இதனாலேதான் 'திரிபு தமிழ் இலக்கியத்திற்கு புதியவரவு' துணிச்சலான புனைவு' என்கிறார் எழுத்தாளர் எஸ்.பொ.

கரன் - கமலினி குடும்பத்திற்கு சுமிதா, சுவேதா, சுந்தர் ஆகிய மூன்று பிள்ளைகள். இவர்களுள் சுமிதா ஓரளவு ஒரு பாலின உறவு நாட்டம் கொண்டவள். இவள்மீது ஓரினப் பாலுறவு நாட்ட ம் மிக்க சுவேகா என்பவள் 'காதல்' கொள்கிறாள்.

முதன் முதலாக சுவேகா சுமிதா ஆகிய இருவரும் தங்களது பாலின உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலை நாவலாசிரியர் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்:

"சுமிதாவின் அறையில் இருந்த சோபாவில் சுவேகா வந்து இருந்தாள். அது இரவில் படுக்கையாகவும் பகலில் சோபாவாகவும் பாவிக்கக்கூடியது. ஒரு கணம் சுமிதாவை அவள் பார்த்தாள்.

காந்தங்களான அவள் கண்களில் இருந்து பாய்ந்த பார்வை கதிர்வீச்சாய் இதயத்தில் இறங்கிய ஒரு இன்ப வேதனையில் அவள் தடுமாறினாள். அழகிய பிரவுன் நிறம், கருநாகமான கற்றை முடி மார்பைத் தாண்டாத வளர்ச்சியோடு துண்டிக்கப்பட்ட கோலம், அழகிய மெல்லிய மேலிதழின் நளினம், சிறிது தடித்த கீழ் உதட்டின் சுழிப்பு, சரியான மணியோடு சாந்தம் பாடும் காதணிகள், சிறிதாகத் தொத்தி இருக்கும் வெட்டுப் பற்கள், கூரிய கிளிமூக்கு, அழகில் மயங்கிய சுவேகா தன்னை மறந்தவளாய் 'கள்வெறி கொள்ளுதடி' என்றாள்.

சுமிதா ஒருமுறை கண்ணை மூடிக்கொண்டாள். பின்பு அகலத் திறந்து சுவேகாவைப் பார்த்தாள். அவளது பார்வையில் எப்போதும் ஒரு புன்னகை தவழும். அது தன்னிடம் வந்து கரைந்து விடு என ஓயாது இரகசியத் தூதுவிடுவதாய் இருக்கும். அரையாக வெட்டிச் சுருட்டப்பட்ட அவள் கருமுடி கைகோரத்து அவளையும் காதலை உண்டு பண்ணும். இறுக்கமான அவள் அங்கங்கள். பெண்ணாக, ஆணாக, எல்லோரையும் பித்துக் கொள்ள வைக்கும் ஒன்றாகும். சுமிதா அவளைத் தொடர்ந்தும் பார்த்தாள். ஏதோ ஒரு உணர்வு அவளை இறுக அணைத்துக் கொள்ளுமாறு இடைவிடாது துரத்துவதாய் இருந்தது. ஏதோ ஒருவித அடங்காத மோகம் அதே கள் வெளி கொள்ள வைக்கும். சுமிதா சுவேகாவை இமை கொட்டாது ஊன்றிப் பார்த்தாள்.

மேற்கூறிய பகுதியிலுள்ள இருவருக்குமிடையிலான ஒரு பாலின உறவின் முகிழ்ப்பு வெளிப்படுகிறது. அத்துடன் இத்தகைய காதலால் ஏற்படும் பிரச்சினைகளும் அலசப்படுகின்றன.

இவ்வாறு ஆரம்பித்த 'ஒரு பாலின உறவு' நாளடைவில் உருவான கருத்து முரண்பாடு காரணமாக முற்றுப் பெற்றுவிடுகின்றது. 'பிரிவு' சுமிதாவிடம் மனச்சோர்வையும் உடற்சோர்வையும் ஏற்படுத்துகின்றன.

ஆக, சுமிதாவின் இரு 'காதல்'களும் கைகூடவில்லை. (இவ்விரு காதல்களும் தமிழ்ப் பண்பாட்டிற்கு எதிரானது என்ற காரணத்தினாலேதான் அவை நிறைவேறாத சூழலை நாவலாசிரியர் ஏற்படுத்தினாரா என்பது ஆய்வுக்குரியது) 'காதல் கைகூடவில்லை என்பதன்று, இங்கு பிரச்சினை. தமிழ்ப்பண்பாடு 'காலம் என்பது கறங்குபோல் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய்' மாறிய சூழலில் மாபெரும் மோதலைச் சந்திக்கின்றது என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டியது. எனினும், புகலிடச் சூழலில் புதிய தலைமுறையினர் இவ்வகைக் காதலை ஆதரிக்க முற்படுகின்றனர் என்பதும் மூத்ததலைமுறையினருள் சிலர்கூட (உதாரணம் : சுமிதாவின் தாய் கமலினி) அதனை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதும்கூட கவனிக்கப்படவேண்டியனவே. ஆயினும் லண்டன் முதலான இடங்களில் வாழ்கின்ற புகலிடத்தமிழர் இத்தகைய உறவு மாற்றங்களை ஆதரிப்பதில்லை என்பதையும் அறியமுடிகின்றது.

### நவநாஜிகளின் இனவாதம்

தமிழர் உட்பட புலம்பெயர்ந்து சென்ற ஆசிய நாட்டவர்கள் புகலிடநாடுகளில் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் புதிய பிரச்சினைகளொன்று, நவநாஜிகள் (இனவாதக்குழுவினர்) மேற்கொள்கின்ற வன்செயல்களுக்கு முகங்கொடுக்க நேர்வதாகும்.

இதுபற்றிப் பேசுகின்ற நாளை என்ற நாவலுக்கு முன்னுரை எழுதிய கவிஞர் இன்குலாப் கூறியதுபோன்று "இவ்விடயம் இன்றளவும் தகவல் ஊடகங்களால் இருட்டடிப்புச் செய்யப்படும் தமிழ் மக்களின் அறியப்படாத துயரம்" (ப. 7) தொடர்ந்தும் இன்குலாப் இவ்வாறு விவாதிப்பதை மனங்கொள்வோம்.

"விளையாட்டுக் களத்திலேகூட மனிதர்கள் உடல் ரீதியான துன்புறுத்தல்களை அனுபவிக்கலாகாது என்கிற நன்னோக்கிலே குத்துச்சண்டை விளையாட்டினையே சட்டவிரோதமாக்கிப் புகழ் பூத்தது இந்த மண். என்று தேவகுரு பாராட்டிச் சொல்லும் மனித நேயமண். இருந்தும் அங்கும் அவர் இனவெறிக் கொடுமைகளைச் சந்திக்கிறார் அங்கும் நவநாஜிகள், வெள்ளைத்தோல் பெருமிதர்கள், தமிழர்களை வெறுக்கிறார்கள். கறுப்புப் பன்றிகள் என்று தூற்றுகிறார்கள். இந்தத் தாக்குதல்களுக்கு, தேவகுருவின் குடும்பமே இலக்காகிறது. காந்தியவாதியான தேவகுரு, அகிம்சையில் உறுதி கொண்டு, அந்த நவநாஜிகளை அன்பினால் திருத்த முயல்கிறார். அவருடைய மனைவியின் மீதான துன்புறுத்தலில் தொடங்கி அவருடைய மகள் உயிரோடு எரித்துக் கொல்லப்படுவது வரை வன்முறை வளர்கிறது. இறுதி மட்டுக்கும் அகிம்சை நெறியில் நிற்கும்

தேவகுரு, அந்த நொஸ்க் (நார்வேமொழி) இன வெறியர்களுக்கு, அகிம்சை நெறியின் உறுதியை விளக்கி, தன் பக்கத்து நியாயத்தை உணர்த்துவதோடு நிறைவுபெறுகிறது." (ப. 8)

ஆக நாளை என்ற நாவல் இதுவரைப் பேசாப்பொருளை பேசுகின்றது என்பது இதுவரை கூறியவற்றிலிருந்து நன்கு பூதாகரமான வடிவம் எடுக்கலாம் என்பதையும் இந்நாவல் மறைமுகமாக உணர்த்திநிற்கின்றது.

## முடிவுரை

இதுவரை கூறப்பட்டவற்றை தொகுத்து நினைவு கூர்வோமாயின் அழிவின் அழைப்பிதழ் புகலிட நாடு என்ற விதத்தில் நோர்வேயில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்கள் எதிர் நோக்குகின்ற தனிமைப் பிரச்சினையின் விசுவரூபத்தையும் விபாறிதத்தையும் மனதைத் தொடும் விதத்தில் எடுத்துரைப்பதைக் கவனிக்க முடிகிறது. பொருந்தாமணம் காரணமாக தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்கின்ற பேரவல வாழ்க்கையை பரதேசி தெளிவுபடுத்துகின்றது. புகலிடத் தமிழர் சூதாட்டம் என்றொரு நாகாரிகத்திற்கு அடிமையாகத் தொடங்குவதன் அபாய அறிவிப்பை விளையாட்டு எடுத்துக் காட்டுகின்றது. தமிழ்ப் பண்பாடு புகலிட நாட்டில் எதிர்கொள்கின்ற ஒரு பாலின உறவினை திரிபு வெளிப்படுத்துகின்றது. நோர்வேத் தமிழர் உட்பட புலம்பெயர்ந்தவர்கள் அனைவரும் நவநாஜிகளின் இனவாதத்திற்கு பலியாகப் போவதன் எச்சரிக்கைக் குரலாக நாளை நாவல் திகழ்கின்றது.

## அடிக்குறிப்பு

1. ஒருதுளி நிழல் நாவல் முற்றுமுழுதாக இலங்கையில் நடைபெறும் சம்பவங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதனால் கவனத்திற்கு உட்படவில்லை. எங்கே? நாவலின் ஒரு பகுதி இலங்கையில் நடப்பது காரணமாகவும் இன்னொரு பகுதி நோர்வேயில் நடந்தாலும் ஐரோப்பிய - இலங்கை வாழ்க்கை முறையினை ஒப்பிட்டுப் பார்ப்பதனை முதன்மைப்படுத்துவது காரணமாகவும் கவனத்திற்கு உட்படவில்லை. பராரிகூத்துகள் பல நாடுகளிலுமிருந்து புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழ்கின்ற பல நாட்டவாஜீனதும் வாழ்க்கையைச் வெளிப்படுத்துவதனாலும் அது பற்றிய எடுத்துரைப்பு கோலங்களாகவன்றி கோடுகளாக அமைந்திருப்பதன் காரணமாகவும் கவனத்திற்குட்படவில்லை.
2. பார்க்க: உயிர்மை, ஜனவரி 2014, இதழ் 125

## துணைநூல்கள்

தியாகலிங்கம், இ., (1994), அழிவின் அழைப்பிதழ், மித்ர வெளியீடு, சென்னை

தியாகலிங்கம், இ., (1999), நாளை, மித்ர வெளியீடு, சென்னை

தியாகலிங்கம், இ., (2008), பரதேசி, மித்ர ஆட்ஸ் கிரியேஷன்ஸ், தமிழ் நாடு, இந்தியா

தியாகலிங்கம், இ., (2009), வரம், மித்ர ஆட்ஸ் கிரியேஷன்ஸ், தமிழ் நாடு, இந்தியா

தியாகலிங்கம், இ., (2009), திரிபு, மித்ர ஆட்ஸ் கிரியேஷன்ஸ், தமிழ் நாடு, இந்தியா

தியாகலிங்கம், இ., (2011), எங்கே?, மித்ர ஆட்ஸ் கிரியேஷன்ஸ், தமிழ்நாடு, இந்தியா

தியாகலிங்கம், இ., (2013), ஒருதுளி நிழல், மித்ர ஆட்ஸ் கிரியேஷன்ஸ், தமிழ்நாடு, இந்தியா

தியாகலிங்கம், இ., (2014), பராரி கூத்துகள், மித்ர ஆட்ஸ் கிரியேஷன்ஸ், தமிழ்நாடு, இந்தியா

# செர்மனிய தமிழர்களின் வாழ்நிலை: பார்த்திபன் படைப்புக்களை முன்வைத்து

திரு த.மேகராசா
இலங்கை

## ஜெர்மனியில் தமிழர்கள்

1983 காலப்பகுதியில் அனேகமாகத் தனித்த ஆண்களே செர்மனிக்குச் சென்றனர். இக்காலப் பகுதியிலிருந்து தொடர்ந்து வந்த மூன்று ஆண்டுகளில் செர்மனிக்குச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1990 களில் இடம்பெற்ற கணக்கெடுப்பு, ஜேர்மனியில் 32702 இலங்கையர்கள் வசித்ததாக உறுதிப்படுத்தியது. 1998 இல் 40000 - 45000 தமிழர்கள் வாழ்ந்தனர்.தற்போது 60000 - 65000 தமிழர்கள் வாழ்வதாக அந்நாட்டு நாளிதழான 'டை வெல்ட்' செய்தி வெளியிட்டிருந்தது. செர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோரி வந்தோரில் ஒரு பகுதியினர் அந்நாட்டின் குடிமக்களாக மாற, குறிப்பிட்ட ஒரு பகுதியினர் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பார்த்திபனைப் பற்றி

எண்பதுகள் காலப்பகுதியில் ஏற்பட்ட இனமுரண்பாட்டுச் சூழல்காரணமாக மேற்கு நோக்கி தூக்கியெறியப்பட்ட பலருள் பார்த்திபனும் ஒருவர். யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கிலுள்ள குரும்பச் சிட்டியே இவரது சொந்த ஊராகும். பாடசாலைப் பருவத்திலிருந்து கதைகளை வாசிப்பதில் ஆர்வம்கொண்டிருந்த பார்த்திபனுக்கு காலப்போக்கில் கதைகளை எழுதுவதிலும் சஞ்சிகையாக்கம் சார்ந்த இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபாடு அதிகரித்தது. அப்போது யாழ்ப்பாணம் பருத்தித்துறையிலிருந்து தட்டச்சுமூலம் வெளிவந்த 'நவயுகம்' சஞ்சிகை இவரது இலக்கிய ஈடுபாட்டுக்குக் களம் கொடுத்தது. குறிப்பிட்ட இச் சஞ்சிகைக்கு தொடராக மர்மக்கதைகளை எழுதிவந்துள்ளார்.

இக்காலப் பகுதியில் செர்மனிக்குப் புலம்பெயர்ந்த பார்த்திபனுக்கு அங்கு சும்மா இருந்தமை புதிய சூழலில் வாழ நேர்ந்தமை, இயக்கங்களிடையே முரண்பாடுகள் மலிந்து காணப்பட்டமை,

நண்பர்களின் வேண்டுதல்கள் என்பன எழுதுவதற்கான களத்தினை அமைத்துக் கொடுத்தன.

**செர்மனிய தமிழரது வாழ்நிலை.**

சேர்மனியில் அகதியாக உள்ள தமிழர்கள் தங்கவைக்கப்பட்ட இடத்தை விட்டு வெளியே ,உறவினர்களின் வீடுகளுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ செல்ல முடியாத நிலை இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டது.இந்நிலையினை பார்த்திபன் கனவை மிதித்தவன் நாவலில் பதிவு செய்துள்ளார்.

**இறுக்கமான சட்டம்**

இலண்டன்,சுவிசர்லாந்து முதலான நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஜேர்மனியின் நாட்டுச் சட்டம் சற்று இறுக்கமானதாகும். 1983,1984 களில் புலம்பெயர்ந்து சென்ற முதலாவது தலைமுறையினர் இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.படிப்பதற்கும் தொழில் புரிவதற்கும் விரும்பிய இடங்களுக்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட வில்லை. அத்துடன் தஞ்சக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமை யினால் நீண்ட காலம் முகாங்களிலேயே முடங்கிக் கிடக்க வேண்டியிருந்தது. அத்துடன் கிட்டத்தட்ட நூறுபேருக்கு ஒரு மலசல கூடம், ஒரு சமையலறை, ஓரறையில் வெறுவேறு நாட்டவர்களுடன் வாழுதல் முதலான மனிதாபிமானமற்ற நிர்வாக கெடுபிடிகளுக்கு உட்பட்டு வாழ்ந்தனர். 80களின் காலப்பகுதியில் புலம்பெயர்ந்தோரில் பலர் அடிப்படைக் கல்வி முதல், உயர்கல்வி வரைப் படித்தவர்களாக இருந்தனர். இவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு விரும்பியபோதும் சட்டம் இடம்கொடுக்கவில்லை.தொழில் செய்யவும் முடியவில்லை.

பார்த்திபனின் 'தெரியவராதது' சிறுகதை சேர்மனியில் தஞ்சமடைந்திருந்த பாலகிருஷ்ணன் சேர்மனியில் நிருவாகக் கெடுபிடிகள், போதிய சம்பளம் இன்மை காரணமாக கனடா போக ஆசைப்பட்டு பலமுறை முயன்று கைதாகி பின்னும் ஆசை தீராது, அமெரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் பிலிக் என்பவரின் அடையாளத்துடன் பயணமாகி சென்ற விமானம் வெடித்துச் சிதறியமையால் பரிதாபகரமாக இறந்துபோன செய்தியைத் தருகிறது.

**நாசிசவாதிகளின் துன்புறுத்தல்**

தாயகத்தைப் பிரிந்து புலம்பெயர் தேசத்தில் அகதி வாழ்க்கை வாழ்ந்த நிலையில் அந்நாடுகளின் இனவாதக் கட்சிகளினாலும் இயக்கங்களினாலும் துன்புறுத்தல்களை அனுபவித்தனர். குறிப்பாக நவநாசிகள் புலம்பெயர் தேசத்தில் தமிழர்களின் நடத்தைகளைக் கண்டு பொறாமைப்படுபவர்களாகவும் கலவரங்கள் செய்பவர்களாகவும் காணப்பட்டனர்.செர்மனியில் வாழும் தமிழர்கள் நவநாசிகளால்

பாதிப்புக்கு உள்ளாகுவதை பார்த்திபன் கனவை மிதித்தவன் நாவலில் எடுத்துக் கூறியுள்ளார்.

### நிறவாதம்

புகலிடத் தமிழர்கள் எதிர்நோக்கும் பொதுவான ஒரு பிரச்சினையே நிற ரீதியான ஒடுக்குதலாகும். தொழில்புரியும் இடங்கள், பேருந்து நிலையங்கள், கடைகள் என்று பல இடங்களிலும் தமிழர்கள் நிறவாதத்தை எதிர்கொள்கின்றனர். செர்மனியர்களில் பெரும்பாலானவர்கள் தமது நிறம், மொழி, கலாசாரம் முதலானவை மேலானவை என்றும் கறுப்பினத்தவர்கள் தாழ்வானவர்கள என்றும் வறுமைப்பட்ட நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்றும் கருதுகின்றனர். அத்துடன் அவர்கள் கல்வி, தொழில் நடவடிக்கைகள் சார்ந்த செயற்பாடுகளில் பாரபட்டசத்தினையும் காட்டுகின்றனர். நிறவாதத்தினால் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்கள் பாடசாலைச் சிறுவர்களாவர். 'அத்திவாரமில்லாத கட்டடங்கள்' சிறுகதை சேர்மனியில் வாழும் தமிழர்களின் பிள்ளைகள் பாடசாலையில் நிற ரீதியான ஒடுக்குதலை உணர்தலை எடுத்துக் கூறுகின்றது. மார்க்கோஸ் என்ற வெள்ளைக்கார இனத்துச் சிறுவன், வினோத் என்ற தமிழ்ச் சிறுவனை 'கறுப்பன்' என்றும் 'கறுப்பனே உனது நாட்டுக்குப் போ' என்றும் கூறும் வார்த்தைகள் புலம்பெயர் சூழலில் நிறவாத பாதிப்பின் உணர்தலை எடுத்துக் கூறுகின்றது.

### கல்வி நிலை

புகலிட நாட்டுச் சூழலில் குறிப்பாக செர்மனியில் வாழும் தமிழர்களின் கல்வி நிலையென்பது சவால்மிக்கதொன்றாகவே அமைந்துள்ளது. எண்பதுகள் காலப்பகுதியில் புலம்பெயர்ந்து சென்றவர்களில் பலர் இலங்கையிலிருந்து எத்தகைய கல்வி நிலையுடன் சென்றார்களோ அதே நிலையுடன்தான் வாழவேண்டிய நிலை செர்மனியில் இருந்தது. ஜேர்மனிய மொழியின் கடினதன்மை, குடும்பச்சுமை, வயது நிலை இவை காரணமாக முதலாவது பரம்பரையைச் சார்ந்த தமிழர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்ட தொன்றாகவே காணப்படுகின்றது. சிலபெற்றோர் தமது பிள்ளைகளை ஜேர்மனியில் படிப்பிக்காது இந்தியா போன்ற நாடுகளுக்கு அனுப்பும் நிலையும் காணப்படுகின்றது. அதேவேளை ஜேர்மனிய மொழிப் பரிட்சயம் இன்மையால் பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலையுடனோ ஆசிரியர்களுடனோ தொடர்புகளைப் பேணுவதிலும் சவால்களை எதிர்கொள்ளும் நிலை செர்மனியில் காணப்படுகின்றது. அன்னியப் படுத்தப்பட்ட - உறவுகளின் தொடர்பற்ற செர்மனிய சூழல் காரணமாக பெற்றோர் 'கசட்' பார்ப்பதை ஒரு தீவிர பொழுதுபோக்குச் செயற்பாடாக மேற்கொள்ளும் நிலையும் அதனால் குழந்தைகளின் கல்வி கற்கும் சூழல் அற்றுப்போன நிலையும் செர்மனியில் பரவலாக காணப்படுகின்றது. அத்திவாரமில்லாத கட்டடங்கள் சிறுகதையில் வரும் பின்வரும் பகுதி

கல்வி கற்கும் சூழலை இழந்து நிற்கும் வினோத்தின் பரிதாப நிலையினை எடுத்துக் கூறுகின்றது.

### பெண்கள் நிலை-வன்முறைகள்

பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல தளங்களிலும் நிகழ்ந்துகொண்டிருக்கும் நிலையில் புகலிட நாடுகளில் வாழும் பெண்களும் தமது கணவன்மாரால் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. பார்த்திபனின் 'கல்லான கணவன்' சிறுகதை, உறவுகளின் தொடர்பற்ற புகலிட வாழ்வில் அன்பாக வழி நடத்தப்படவேண்டிய பெண் அவளது கணவனால் துன்புறுத்தப்படுவதை எடுத்துக் கூறுகின்றது. இச் சிறுகதையில் தினமும் குடித்துவிட்டு வரும் கணவனால் துன்புறுத்தலுக்கு உட்பட்டுவந்த லட்சுமி, பின் அவளது கணவனின் சகோதரனின் ஆலோசனைப்படி, அடக்குமுறையிலிருந்து விடுபட்டு தனித்து வாழ முடிவெடுப்பது முற்போக்கானதாக அமைந்துள்ளது.

### தனிமை நிலை.

தாயகத்திலே பலரது வீடுகளுக்குச் செல்வதும் பல கதைகளைப் பேசி மகிழ்ந்திருப்பதுமாக இருந்த சூழல், புலம்பெயர் தேசத்தில் இருக்கவில்லை. கனடாவில் யாழ்ப்பாணத்தில் இருப்பதுபோன்ற மன உணர்வுடன் தமிழர்கள் வாழ்கிறார்கள். பிரான்சு - பரீஸ், இலண்டன், சுவிசர்லாந்து முதலான நாடுகளிலும் தமிழர்கள் செறிவாக வாழ்கிறார்கள். ஆனால் செர்மனிய அரசாங்கம் தமிழர்களை குடியேற்றும்போதும் தங்க வைக்கும்போதும் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக்கியே வைத்துள்ளனர். ஒவ்வொரு குடும்பமும் வசிக்கின்ற தூரம் அதிகமானதாகும். இதனால் வெளித் தொடர்புகள் எதுவும் அற்று வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் நிலை ஜேர்மனியில் அதிகமாக உண்டு. அதுவும் வேலையற்ற பெண்களே கூடுதலாக இத்தகைய தனிமை நிலையை அனுபவிக்கின்றனர். இவர்கள் செர்மனியர்களுடன் பழகுவதற்கும் வெளித் தொடர்புகளைப் பேணுவதற்கும் செர்மனிய மொழி பற்றிய பரிட்சயமின்மை காரணமாகவுள்ளது. இதனால் பெரும்பாலும் பெண்கள் தனிமையில் இருக்கும் நிலை காணப்படு வதுடன் பொழுதுபோக்காக் 'கசட்' பார்க்கின்றனர். அத்திவாரமில்லாத கட்டடங்கள்' கதையில் சாவித்திரி படித்துக்கொண்டிருந்த மகனை கசட் வாங்கி வரும்படி கட்டாயப்படுத்துகிறாள்.

### ஏமாற்றப்படுதல்

புகலிட நாட்டில் வாழும் இளைஞர்கள் சிலர் சீதனம், போக்குவரத்துச் செலவுகள் அனைத்தும் பெண் வீட்டாரே தர வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் மணமக்களை இலங்கையிலிருந்து அழைக்கும் நிலையை புகலிடப் படைப்புக்களில் காணமுடியும். இத்தன்மையினை பார்த்திபனும் "மனைவி இறக்மதி" சிறுகதை

யினூடாக எடுத்துக் கூறியுள்ளார். ஜெர்மனியில் வசிக்கும் இளைஞனான சிறி பெரும் ஆவலுடன் சீதனம் அனைத்தும் பேசி சுகந்தியை திருமணம் செய்யும் பொருட்டு அவளை எதிர்பார்த்திருக்கிறான்."கிட்டத்தட்ட பதினொரு மாதங்களாகக் காத்திருந்து சிறி பொறுமையிழந்தானே தவிர தான் பயணத்திற்கான காசு தருவதாகவோ, ஏஜெண்டை ஏற்பாடு செய்து தருவதாகவோ, சீதனம் தரவேண்டாம் என்று மாமாவுக்கோ சொல்லவில்லை." பின்னர் சுகந்தி பிரயாணம் செய்யும் திகதியை அறிவித்துவிட்டு அதன்படி செர்மனிக்கு வந்து சேர்கிறாள். எனினும் அவளது உறுதியான நோக்கும் செயற்பாடும் சிறிக்கு மட்டுமல்ல சீதனத்துடன் அனைத்துச் செலவுகளும் பெண் வீட்டாரே பொறுப்பேற்க வேண்டும் என்று நினைக்கும் அனைவருக்கும் ஒரு வாழ்க்கைப் பாடமாக அமைகிறது.

## இளைஞர் நிலை-மனநிலை பாதிப்பு.

தாய்நாட்டையும் உறவுகளையும் பிரிந்து எதிர்பாராத விதமாக புலம்பெயர் நாட்டில் வாழநேர்ந்தமை, அகதிக் கோரிக்கை ஏற்றுக்கொள்வதிலுள்ள தாமதம், தொழிலற்ற நிலை, தங்கி வாழும் உவுகளின் வறுமை நிலை முதலானவை மனநிலை பாதிப்புகளுக்கும் தவறான நடத்தைகளுக்கும் வழிவகுத்தன. செர்மனியத் தமிழ் இளைஞர்கள் இத்தகைய வாழ்நிலையினை எதிர்கொண்டமையினை பார்த்திபனின் படைப்புக்கள் புலப்படுத்துகின்றன. திருமணம் செய்வதற்கு விருப்பம் இருந்தும் உறவினர்களின் விருப்பமின்மையால் (திருமணம் செய்தால் வீட்டுக்கு பணம் அனுப்பமாட்டான் என்று உறவினர்கள் கருதி தடுப்பதால்) திருமணம் செய்யாது துன்பப் படும் இளைஞனின் பரிதாப நிலையை 'பனியில் எரியும் இரவுகள்' படம்பிடித்துக்காட்டுகின்றது.

கனவை மிதித்தவன் நாவலிலும் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி நிற்கும் இளைஞர்களின் நிலை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மன உளைச்சல் காரணமாக 'முத்து' என்னும் இளைஞனுக்குப் பைத்தியம் பிடிப்பதை நாவலில் காணலாம்.

அப்பாவித்தனமாக எயிட்ஸ் நோய்க்கு உள்ளாகிய ஒரு இளைஞனைப் பற்றியதாக மரணத்தின் விலை 30 டி.எம் சிறுகதை கூறுகின்றது.

நார்வேயில் வாழும் தியாகலிங்கத்தின் அழிவின் அழைப்பிதழ் நாவலும் எயிட்ஸ் நோயின் தாக்கத்தினையே எடுத்துக் கூறுகின்றது என்பதும் இவ்விடத்தில் நினைவிற்கொள்ளத்தக்கதாகும்.

## போதைக்கு அடிமையாதல்

இளைஞர்கள் போதை அடிமையாகும் நிலை புகலிட நாடுகளில் அதிகமாக உண்டு. விரக்தி,தனிமை,உடற் களைப்பு காரணமாக தனிமையிலும் நண்பர்கள் குழுக்களாக இணைகின்றபோதும் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகின்றனர். செர்மனியில் அரசியல் தஞ்சத்திற்காக காத்திருக்கும் முத்து என்ற இளைஞன் நண்பர்களின்

கட்டாயத்தினால் மதுப்பழக்கத்திற்கு அடிமையாகின்ற நிலையினை மிக நேர்த்தியாக பார்த்திபன் கனவை மிதித்தவன் நாவலில் பதிவு செய்துள்ளார்.

**தொழிலாளர் நிலை**

ஜெர்மனிய மொழிக்கல்வியின்மை, நிறவாதம் முதலானவை காரணமாக தமிழர்களில் பெரும்பாலானவர்கள் வீதி துப்பரவு செய்தல், உணவு விடுதிகளில் பாத்திரங்கள் கழுவுதல் முதலான வேலைகளையே செய்யவேண்டியுள்ளது. அத்துடன் கடினமாக வேலை செய்தும் அதற்கு ஏற்ற வேதனம் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. இந்நிலை இவ்வாறிருக்க 'ஒரு தொழிலாளியும் ஒரு தொழிலாளியும்' என்ற கதை யினூடாக பார்த்திபன்,ஜேர்மனியில் வாழும் இலங்கைத் தமிழ்த் தொழிலாளிக்கும் அதே நாட்டில் வாழும் வேறு நாட்டுத் தொழிலாளிக்கும் இடையிலான வேறுபாடொன்றை எடுத்துக் கூறியுள்ளார். அச்சிறுகதை இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகும். அதாவது அடுத்தவாரத்திலிருந்து எல்லோரும் இரவிலும் வேலை செய்யவேண்டுமென்று முதலாளி கூறியபோது துருக்கி நாட்டவனான இல்கான், இரவில் தான் சார்ந்த சமூகத்திற்கான சில கடமைப்பாடுகளை மேற்கொள்வதை நினைவில் வைத்துக்கொண்டு தன்னால் முடியாதென்று மறுக்கிறான். அதனால் முதலாளியால் கண்டிக்கப்பட்டு மிகவும் சிரமப்பட்டு பெற்றுக்கொண்ட தொழிலையும் இழக்கின்றான். தான் சார்ந்த சமூகத்திற்காக எதையும் இழக்கத் தயாராக துருக்கித் தொழிலாளி இருப்பதையும் இலங்கைத் தொழிலாளி அவ்வாறு எதையும் தன் சமுகத்திற்காக இழக்கத் தயாராக இல்லாமல் இருப்பதையும் இச்சிறுகதை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

**இணக்கமற்ற உறவு**

தமிழர்கள் தமது பண்பாடுகளும் வாழ்வியல் நடத்தைகளும் செர்மனியர்களைவிட மேலானது என்ற மனநிலையிலேயே வாழ்கின்றனர். அத்துடன் செர்மனிய மக்களைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களுடன் பழகுவதற்கும் செர்மனிய மொழியும் சவால்மிக்க தொன்றாகவே காணப்படுகின்றது.செர்மனியப் பெண்களைத் தமிழ் இளைஞர்கள் திருமணம் செய்தபோதும் பெரும்பாலான திருமணங்கள் நிலைக்க வில்லை. தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பெண்களை எப்படி நினைக்கின்றார்களோ அதனைப்போன்றே தாம் காதலிக்கும் செர்மனிய பெண்களையும் நோக்கமுற்பட்டனர். இந்நிலையினை செர்மனிய பெண்களால் சகித்துக்கொள்ளமுடியவில்லை.பாத்திபனின் காதல் சிறுகதை தமிழ் இளைஞனான ஜீவனுக்கும் செர்மனிய(டொச்) பெண்ணான ஸில்வியாவுக்கும் முளைத்த காதல் அறுந்து போனமையையும் செர்மனிய பெண்ணை செர்மனிய பண்பாட்டுப் புரிதலுடன் ஏற்றுக் கொள்ள முடியாத தமிழ் இளைஞனின் நிலையினையும் எடுத்துக்கூறுகின்றது.

ஆண் மேலாதிக்கம் பெற்று நிற்பதையும் ஆணுக்குப் பெண் சரி நிகர் என்ற நிலையினை ஏற்றுக்கொள்ளாத ஆண் வர்க்கத்தின் நிலைப்பாட்டினையும் இன்னும் சுருங்கக் கூறின் இன்னும் மாறாத தமிழ்ச் சமுகத்தின் குடும்ப அதிகார நடத்தைசார் கீழ் நிலையினையும் இச் சிறுகதையினூடாக பார்த்திபன் எடுத்துக் கூறியுள்ளார்.

## முடிவுரை

மேற்கூறியவாறு தொகுத்து நோக்கும்போது செர்மனிய தமிழர்களது வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பார்த்திபனது படைப்புக்கள் வெளிப்படுத்தி நிற்பதை அவதானிக்க முடிகிறது. செர்மனியத் தமிழர்கள் தொடர்பானச் சமூக நிலைப்பட்ட , வரலாறு நிலைப்பட்ட ஆய்வுகள் பெருமளவு இல்லாத சூழலில் புகலிட இலக்கியங்களே பெருமளவு செர்மனியத் தமிழர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றன. இவ்விதத்தில் பார்த்திபனது படைப்புக்களுக்கு முக்கியமான இடமுண்டு என்பதை மறுதலிக்கமுடியாது.

## துணைநூல்கள்


பார்த்திபன்,கனவை மிதித்தவன்(நாவல்),தூண்டில்.

பார்த்திபன், ஒரு தொழிலாளியும் ஒரு தொழிலாளியும் (சிறுகதை), தூண்டில், செர்மனி, 1989.

பார்த்திபன்,தெரியவரததது (சிறுகதை),1988

பார்த்திபன், மேற்கின் ஒரு பக்கம்(சிறுகதை), களம் புதிது,இந்தியா.

பார்த்திபன்,அத்திவாரமில்லாத கட்டடங்கள் (சிறுகதை), தூண்டில், செர்மனி, 1989.

பார்த்திபன்,மனைவி இறக்குமதி (சிறுகதை),தேனீ,ஜேர்மனி,1988.

பார்த்திபன்,வந்தவள் வராமல் வந்தால்(சிறுகதை), சரிநிகர்,இலங்கை.

பார்த்திபன்,காதல்,தூண்டில் (சிறுகதை),ஜேர்மனி,1988

பார்த்திபன், தீவு மனிதன் (சிறுகதை),கண்ணில் தெரியுதுவானம்,2002.

பார்த்திபன், மரணத்தின் விலை 30 டி.எம்(சிறுகதை),1996.

பார்த்திபன், பலமா (சிறுகதை),இன்னுமொரு காலடி, இங்கிலாந்து, 1998.

பார்த்திபன், கல்லான கணவன் (சிறுகதை), தூண்டில்,ஜேர்மனி.

பார்த்திபன், பனியில் எரியும் இரவுகள்(சிறுகதை), நிறப்பிரிகை, இந்தியா, 1995.

**துணை ஆதாரம்**

யோகராசா.செ.,புலம்பெயர் கலாசாரமும் புகலிட இலக்கியங்களும், 4 வது அனைத்துலக தமிழாராய்ச்சி மகா நாட்டு மலர்,1974.

யோகராசா.செ.,புகலிடத் தமிழரது பண்பாடு:சில அவதானிப்புக்கள், சமகால கலை இலக்கியங்களில் பண்பாட்டுக்கோலங்கள்.

யோகராசா.செ., இலங்கைப் புகலிட நாவல்கள்,வெளி(வெள்ளி விழாச் சிறப்பு மலர்), கலை பண்பாட்டுப் பீட மாணவரவை, கிழக்குப் பல்கலைக் கழகம்,2006.

நிருபா,அச்சாப்பிள்ளை,உதவிநண்பர்கள்,2005.

# இலங்கைவாழ் தமிழர்களின் வாழ்வியல் அடையாளச் சிக்கல்கள்

முனைவர் மூ. தமிழரசி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை, தமிழ்நாடு

## முன்னுரை

இலங்கை இனக்கலவரத்தை அடுத்து உலகின் பல நாடுகளிலும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாய் குடியேறினர். இங்ஙனம் பிற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் கல்வி கற்றவர்களாகவும் பணவசதி படைத்தவர்களாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கூறப்பட்ட தகுதிகளினடிப்படையில் இவர்கள் குடியேறிய நாடுகளில் வேலை வாய்ப்புக்களையும், தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொண்டனர். சொந்த மண்ணையும் உறவுகளையும் இழந்த இவர்கள் பிழைப்புக்கான வழியை வலிந்து தேடிக்கொண்டனர். ஆனால், கல்வி வாய்ப்பும் பணவசதியும்அற்ற ஏழை மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாய் வாழும் தாங்கொணா துயர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்றளவும் அவர்கள் வாழ்க்கையானது நிரந்தரத்தன்மையற்ற, பாதுகாப்பற்ற, தேடல் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறதென்பதை அவர்களிடம் பெற்ற பேட்டியின் வாயிலாக அறிய முடிந்தது.[1]

இலங்கைத் தமிழர்கள் இருபது பேரிடம் மேற்கொண்ட நேர்காணல்மூலம் பெறப்பட்ட தரவுகளே இக்கட்டுரைக்கான முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன. தற்காலத்தில் அவர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் வாழ்வியல் போராட்டங்களை இக்கட்டுரைப் பதிவு செய்கிறது.

## கலாச்சார அடையாளச்சிக்கல்கள்

போரின் காரணமாக தற்பொழுது இலங்கையில் வாழும் மக்கள் இனக்கலவரம் தொடங்கிய காலம் முதல் 2011 வரை முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். சுதந்தரமாக வேலை செய்யவோ, கல்வி கற்கவோ முடியாத நிலையில் அன்றாட அடிப்படைத் தேவைகளுக்குக் கூட அரசை எதிர் நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். 'பசிவரப் பத்தும் பறந்துபோம்' என்ற கூற்றின்படி அடிப்படைத் தேவைக்குக் கூட போராடும் நிலையில் இவர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே

தங்கள் பண்பாட்டு அடையாளங்களை இழந்தவர்களாக மாறிப்போயினர்.

2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்நிலை மாறத் தொடங்கி யுள்ளதாகக் கூறுகின்றனர். முகாம் வாழ்க்கை முடிவுக்கு வரத்தொடங்கி தங்கள் வீடு, குடும்பம், உறவுகள் என்ற சுய நினைவு ஏற்பட்டுள்ளது.[2] இந்நிலையிலும் தங்களின் பண்பாட்டு அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்து தங்களை அடையாளப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தி வருவதாகக் கூறுகின்றனர்.[3] தங்கள் சாதிய அடையாளங்களையும் மத அடையாளங்களையும் மற்றும் தங்கள் இருப்பை உறுதிசெய்யும் அனைத்து செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்த முற்பட்டுள்ளனர். குலதெய்வ வழிபாட்டு முறைகள், குடும்ப உறவு, திருமண உறவு போன்றவற்றைத் தக்க வைத்துக்கொள்ளத் தனிக்கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனக் கூறுகின்றனர். எச்சூழலிலும் இவை மாற்றமடைதல் கூடாது, இதில் தளர்வு நேரக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர்.

இம்மக்கள் தங்களது பழைய வாழ்க்கை முறைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். ஆண்டுகள் பல கழியினும் தங்கள் இன அடையாளங்களை இன்றளவும் அவர்கள் தக்க வைத்துக் கொண்டுள்ளமை, அவர்களின் பண்பாட்டு உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது.

## குடும்ப அமைப்பும் உறவுமுறை கட்டமைப்பும்

பொருளாதாரத்தில் இவர்கள் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் குடும்பம் மற்றும் உறவுக்கட்டமைப்பு வலுவான நிலையிலுள்ளது; தனிக்குடும்ப அமைப்பும் கூட்டுக்குடும்ப அமைப்பும் நடைமுறை யிலுள்ளது.[4] பன்னெடுங்காலமாகத் தனித்தனி முகாம்களில் உறவுகளின்றி தனித்த இவர்களது அடிமனது உறவுகளின் நெருக்கத்தை மிகுதியும் விரும்புகின்றது. மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகக் குடும்ப அமைப்பு விளங்குகின்றது. 'குடும்பம்' என்பது சமுதாயத்தைக் கட்டமைப்பதில் பெரும் பங்காற்றுகிறது. மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை இக்குடும்ப உறவோடு தங்களை இணைத்துக் கொள்ள விரும்புகின்றனர். ஏனெனில் இம்மக்களின் உயிரியல், உளவியல், வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் இவ்வமைப்பு நிறைவு செய்கின்றது. எனவே குடும்பம் என்ற கட்டமைப்பு உலகம் தழுவிய ஒரு பண்பாட்டு அடையாளமாக விளங்குகிறது என்ற சமூகவியலாளர்களின் கூற்று இங்கு கருதத்தக்கது.

இன்றைய காலகட்டத்தில் மரபார்ந்த சமுதாயத்தில் நிலவிய கூட்டுக்குடும்பங்கள் தனிக்குடும்பங்களாக வடிவம் பெற்றன. சமூகம் கூட்டுக்குடும்பத்தை விரும்பினாலும் இளையோர் தனிக்குடும்ப அமைப்பையே விரும்புகின்றனர். இதன் காரணமாகக் கூட்டுக்

குடும்பத்தின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. கூட்டுக்குடும்ப வாழ்க்கையையே இம்மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். தங்கள் உணவு மற்றும் உடைமைகளைப் பகிர்ந்துகொண்டு இணைந்து வாழ்கின்றனர். மரபார்ந்த வாழ்வியல் முறையை நடைமுறைப்படுத்த விரும்புவதை இவர்களின் கூற்றுக்களிலிருந்து அறிய முடிகிறது.

வயது முதிர்ந்த பெற்றோரை உடன் வைத்துக்காப்பாற்றுவதில் தனிக்கவனம் செலுத்துகின்றனர். நேர்காணல் நிகழ்த்தப்பட்ட இருபது பேர்களில் பதினொரு பேர் வயது முதிர்ந்த பெற்றோரைத் தங்களுடன் வைத்துப் பராமரித்து வருகின்றதாகக் கூறினர். எச்சூழலும் தங்களைப்பிரித்து விடக்கூடாது என்பதில் இம்மக்கள் உறுதியாக உள்ளனர். உறவுநிலை கட்டமைப்பும் குடும்பக் கட்டமைப்பும் சிதைவதை இம்மக்கள் சிறிதும் விரும்பவில்லை என்பதை இவர்களது உணர்ச்சி பொங்கிய பேச்சுக்கள் வெளிப்படுத்தின.

### திருமண உறவுகளும் - முறைகளும்

உறவுகளுக்குள் திருமணம், சொந்த சாதியில் திருமணம் செய்தல் போன்ற நடைமுறைகள் இருந்தாலும் காதல் திருமணங்களுக்கும் கலப்புத்திருமணங்களுக்கும் பெரிய எதிர்ப்பு இவர்களிடையே இல்லை. சாதிய உணர்வு இம்மக்களிடையே மறைவில்லை எனினும் பொருளாதாரச் சூழல் காரணமாக சாதி கடந்த காதல் திருமணங்களையும் ஏற்றுக் கொள்கின்றனர். எனினும் ஒரு அவசரமான வாழ்க்கை முறை அல்லது அச்சமான மனநிலையிலேயே இம்மக்கள் இன்றளவும் உள்ளனர். இல்வாழ்க்கை பறிபோய் விடுமோ என்ற அச்சவுணர்வுடனேயே இவர்கள் வாழ்ந்து வருகின்ற நிலை வருந்தத்தக்கது. மேலும் நிரந்தரத் தன்மையற்ற மனநிலையிலிருந்து இம்மக்கள் இன்னும் மீளவில்லை என்பதை உணரமுடிகிறது.

### கல்வி அமைப்பு

போர்காலங்களில் இவர்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப் பட்டிருந்தது. உயிரைக்காப்பாற்றிக் கொள்வதே பெருஞ்சவாலாக அமைந்தது. 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தொடர்ந்து குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற அதிவீரராம பண்டிதாரின் கூற்றுக் கேற்ப வறுமையான சூழலிலும் எப்பாடுபட்டேனும் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். பெண் குழந்தைகளுக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இலவசக் கல்வித் திட்டம் இங்கு நடைமுறையிலுள்ளது. கல்விக்கட்டணம் இங்குள்ள பள்ளிகளில் வாங்கப்படுவதில்லை என்பது சற்று ஆறுதலளிப்பதாய் உள்ளது. பெரும்பாலும் பெண்களைக் கூலிவேலைக்கு அனுப்புவதை இம்மக்கள் விரும்புவதில்லை. ஆசிரியர் பணி, தாதியர் பணி, போன்றவற்றிற்கு அனுப்புவதையே விரும்புகின்றனர். இதன் காரணமாக் ஆண்களுக்கு

நிகராகப் பெண்களும் தற்போது கல்வி கற்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் இவர்களது கல்விச் சான்றிதழில் சாதிப் பெயர் குறிப்பிடப்படுவதில்லை. இவர்களை அடையாளப்படுத்த இலங்கைத் தமிழர் என்று குறிக்கின்றனர்.

### சமூக அமைப்பும் - வாழ்வியல் நடைமுறைகளும்

போர் உருவாக்கிய பேரழிவுகளில் குறிப்பிடத்தக்கது உயிரிழப்பு. சங்க காலத்திலேயே இந்நிலையைப் பார்க்க முடிகிறது உடைமைகளும் உயிர்களும் போரினால் சேதமடைந்தன. ஆண்கள் போருக்குக் கட்டாயப்படுத்தப்படும் நிலையை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அந்நிலையை இங்கும் காணமுடிகிறது. கணவனை இழந்து 90,000 பெண்கள் விதவைகளாக உள்ளதாகக் கணக்கெடுப்புகள் கூறுகின்றன. இதனால் பெண்களே குடும்பத்தைக் கட்டிக்காக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நேர்காணலில் துரைராஜா கஜாஜினி என்ற பெண்ணின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. அப்பெண் ஆறு மாதக் கர்ப்பிணியாக இருந்த காலகட்டத்தில் கணவன் போரில் இறந்து விட்டதாகவும் இன்றளவும் தன்னுடைய ஆறுவயது மகனிற்காக மன உறுதியுடன் தனியாக வாழ்ந்து வருவதாகவும் கண்ணீர் தளும்பக் கூறியது நெகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. மேலும் அப்பெண் பலநோக்க கூட்டுறவு சங்கத்தில் வேலை செய்வதாகவும், எத்தனையோ விதவைப் பெண்கள் கல்வியில்லாமலும் வேலையில்லாமலும் குடும்பத்திற் காகவும் குழந்தைகளுக்காகவும் வறுமையில் வாடுவதைப்பார்க்கும் போது நான் பாக்கியசாலி என்றும் அதற்காக கடவுளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன் என்றும் கூறியபோது மிகப் பெருமையாக இருந்தது.[5]

உயிரோடு இருக்கும் பல ஆண்கள் உடல் உறுப்புகளை இழந்து ஊனமுற்றவர்களாய் உள்ளனர். இவர்களையும் பாதுகாக்க வேண்டிய நிலை பெண்களுக்குள்ளது. எனினும் உறவுகள் மீது கொண்ட பாசப்பிணைப்பால் இம்மக்களுக்கு இவையாவும் சுமைகளாகத் தோன்றவில்லை. மனநிறைவோடு இம்மக்கள் இதனைப் பகிர்ந்து கொண்டமை கண்களில் நீரை வரவழைத்தது. தமிழர்களைப் போன்றே ஆணாதிக்கம் மேலோங்கிய பண்பாடுடையவர்கள் எனினும் மேற்கூறப்பட்ட சில காரணிகளால் பெண்கள் தங்களை முன்னிறுத்த வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. நாம் தமிழர் என்ற கூட்டுணர்வு இவர்களிடையே வலுவாக உள்ளது. இதனால் ஒற்றுமையுடன் வாழத்துடிக்கின்றனர்.

அரசு ரீதியாக எதிர்ப்புடன் செயல்பட்டாலும் சமூகத்தில் தமிழ்களுடன் சுமூகமான உறவு கொண்டுள்ளன. என்பது வியப்பளிப்பதாக உள்ளது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் கல்வி நிறுவனங்களில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படுவதில்லை. ஆனால்

அரசுசார் வேலை வாய்ப்புகளில் சிங்களவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் தமிழர்களை மனமடிவடையச் செய்கிறது.

### வழிபாட்டு முறைமைகள்

இலங்கை வாழ் தமிழர்கள் இந்துக்களே. இவர்களிடையே குல தெய்வ வழிபாட்டு மரபு இன்றளவும் நிலைபெற்று விளங்குகிறது. ஒவ்வொரு குடும்பமும் தங்களுக்கென தனித்தனி குல தெய்வங்களைக் கொண்டுள்ளனர். மேலும் தங்கள் குடும்பத்திலுள்ள பெண்கள் இறந்து விட்டால் அவர்களைத் தெய்வமாக எண்ணி வழிபாடு செய்கின்றனர். இதனைக் கன்னி வழிபாடு என்று அழைக்கின்றனர்.[6] பெருந்தெய்வ வணக்கமும் நடைமுறையில் எள்ளது. பல இந்துக்கோயில்கள் புத்தவிகாரைகளாக மாற்றம் பெற்றுள்ளமை இவர்களிடையே மனச் சோர்வை உருவாக்கியுள்ளது. இச்சூழல்கள் இவர்களிடையே ஒரு எதிர்ப்புணர்வை உருவாக்குகிறது என்று கூறலாம். நம் மண்ணிலேயே நமது உரிமைகள் மறுக்கப்படுகின்றனவே என்ற ஏக்கமும் இவர்களது பேச்சில் வெளிப்படுகின்றது.[7] கோயில் தொடர்பான அனைத்து விழாக்களிலும் உற்சாகமுடன் ஈடுபடுகின்றனர். புத்தாண்டு, தீபாவளி போன்ற விழாக்களும் இம்மக்களால் விரும்பிக் கொண்டாடப் படுகிறது.

### பொருளாதாரநிலையும் - தொழில்களும்

பொருளாதாரநிலையில் முன்னேற்றமற்ற நிலையே காணப் படுகிறது. நிரந்தர தொழில் வாய்ப்புகள் அற்ற நிலையில் இவர்கள் அன்றாடக் கூலிகளாகவே உள்ளனர். தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவே போராட வேண்டிய நிலை காணப்படுகிறது. இச்சூழலிலும் இவர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாது பள்ளிகளுக்கு அனுப்புவது பாராட்டத்தக்கது. அரசு சார்ந்த வேலைகள் இம்மக்களுக்குத் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றது. அரசு சாரா தனியார் அமைப்புகளில் உதவித்தொகை பெற்றுச் சிலர் சுயதொழில் செய்யும் வாய்ப்புகளை இன்று பெற்றுள்ளமை வரவேற்கத்தக்கது.

அகதிகளாகப் பிற நாடுகளுக்குச் சென்ற சிலர் தங்கள் மக்களின் அவலநிலையைக் கண்ணுற்று அவர்களுக்குச் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களிடையே பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்க முனைப்புடன் செயல்படுகின்றனர். கடந்த பெப்ருவரி மாதத்தில் நெதர்லாந்தில் வாழ்ந்து வரும் திருமதி இரஜினி இக்பால் என்பவர் 20 இலங்கை வாழ் தமிழர்களை அழைத்து சுயதொழில் பயிற்சி மற்றும் நிர்வாகப் பொறுப்பு குறித்த பயிற்சியையும் அளிக்க விரும்பினார். இதற்கான பயிற்சிக்களமாக மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியைத் தேர்வு செய்தனர். கல்லூரி நிர்வாகத்தின் அனுமதியின் பேரில் பத்து நாட்கள் இவர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சி

மிகவும் பயனள்ளதாக அமைந்ததாக இம்மக்கள் குறிப்பிட்டனர். இப்பயிற்சியின் போது கட்டுரையாளர் இவர்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இலங்கை வாழ் தமிழர்களின் ஒருங்கிணைந்த முயற்சியும் இம்மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுகள்

சொந்த மண்ணிலேயே அகதிகளாய் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் இலங்கைத்தமிழர்கள் இன்றளவும் போரின் பாதிப்புகளையும் தாக்கங்களையும் இழப்புகளையும் சுமந்தே திரிகின்றனர். அச்ச உணர்விலிருந்து சுதந்திர மற்ற மனநிலையிலிருந்தும் இம்மக்கள் மீளவில்லை என்பதை உணர முடிகிறது.

கணவனை இழந்த பல பெண்கள் துணிவுடன் குடும்பத்தை நடத்திக் குடும்ப நிறுவனமும் உறவுகளும் சிதறாமல் பாதுகாத்து வருவது குறிப்பிடத்தக்கது.

பின்தங்கிய சூழலிலும் இம்மக்கள் கல்விக்கு முதன்மை அளிப்பது இவர்களது ஒளிமயமான வாழ்வு தொலைவிலில்லை என்பதைக் காட்டுகிறது.

கூலித்தொழிலாளர்களாக உள்ள இம்மக்கள் சுயதொழிலில் ஈடுபட முன் வருவது இவர்களது மனத்திண்மையை எடுத்துக் காட்டுகிறது.

வழிபாட்டு முறைமைகளும் சடங்கு முறைகளும் இவர்களிடையே இறுக்கமான நிலையிலுள்ளது. இம் மக்கள் தமிழர்கள் என்ற தனி அடையாளத்தை மீட்டுருவாக்கம் செய்வதிலேயே முனைப்புடன் உள்ளனர்.

சமூகத்தில் சிங்களவர்களுடன் இனிய உறவு கொண்டுள்ள இம்மக்களுக்கு அரசு சார் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கப்படாமை வருந்தத்தக்கது.

## நேர்காணல்

1. சேனாதி ராசா (ஷப்னா) - *24/2/2014*
2. புனிதா நட்சத்திரம் (மட்டக்களப்பு) - *26/2/2014*
3. ஸ்டாலின் (ஷப்னா) - *27/2/2014*
4. செல்வி (முல்லைத் தீவு) - *27/2/2014*
5. கஜாஜினி (முல்லைத் தீவு) - *28/2/2014*
6. வதனி (மட்டக்களப்பு) - *2/3/2014*
7. ரஜீ காந்த் (மன்னார்) - *2/3/2014*

# எஸ்.பொ.வின் நாவலில் பெண்கள்

முனைவர் இரா.இராமமூர்த்தி
தமிழ்த்துறைத் தலைவர்
விஸ்வபாரதி கலை அறிவியல் கல்லூரி
மொரப்பூர் தருமபுரி
தமிழ்நாடு

## முன்னுரை

இருபதாம் நுற்றாண்டில் மகத்தான இலக்கியமாகத் திகழ்வது நாவல் இலக்கியமாகும். தமிழில் புதினம் என்று வழங்குவர். இது ஒரு உரைநடை இலக்கியம். பாட்டு, உரைநடை என்ற வேறுபாடுகளுக் கப்பால் காப்பியமும், புதினமும், கதைக்கரு, கட்டமைப்பு, மாந்தர் படைப்பு, வருணனை ஆகியவற்றால் ஒன்றி நிற்கும்.

## அறிஞர் கருத்து

புதினங்கள் இனிப்புகள் போன்ற தரமான இலக்கியம். பசிகொண்ட எல்லாரும் அவற்றை விரும்புகின்றனர் என்பர் வில்லியம் தாக்கரே.[1] சிறுகதையே புதினத்தின் வளர்ச்சி நிலை என்றும் அட்சன் கருதுகிறார்.[2] மகிழ்வூட்டலை முதற்கருவாகவும் அஃதுடன் நன்னெறிவூட்டலை முதற்கருத்தாவாகவும் கொண்டதே சிறந்த நாவல் என்பது அ.மாதவையாவின் கூற்று.[3]

## புதினத்தோற்றம்

புதினத்தின் தாயகம் இத்தாலி. உலகின் புகழ்பெற்ற புதினம் சப்பான் மொழியில் ரோசாக்கி சீமாட்டி படைத்த "கெஞ்சிக்கதை" என்பதாகும். தமிழில் வெளிவந்த முதல் நாவல் 1879 இல் முனிசீப் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்பதாகும்.

## வகைகள்

தமிழில் புதினங்கள் துப்பறியும் புதினங்கள், சமூகப்புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள், தழுவல் புதினங்கள் என ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. இது தவிர வட்டார நாவல், குறுநாவல், குட்டி நாவல், தொடர் கதை நாவல் என்றும் வகைப்படுத்துவர். இலங்கையிலிருந்து மலேசியாவிற்குப் புலம் பெயர்ந்த தமிழ்ப்படைப்பாளி யாழ்ப்பாண குலப்பாடகன் எஸ்.பொ என்கிற பொன்னுதுரையின் 'சடங்கு' என்ற புதினத்தில் இடம்பெற்ற பெண்பாத்திரங்களின் நிலையை இங்கு ஆராயப்பட்டுள்ளது.

இந்நாவல் யாழ்ப்பாணத்து மக்களின் ஒழுகலாறுகளைப் பற்றி குறிப்பிடும் வட்டார நாவல் எனலாம். இந்நாவலில் செந்தில்நாதன், அன்னலட்சுமி, செல்லப்பாக்கிய ஆச்சி என்ற மூன்று பாத்திரங்களை முதன்மையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது.

**கதைச்சுருக்கம்**

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு வறுமையின் காரணமாக வேலைப்பார்க்க சென்ற செந்தில்நாதன் மூன்று மாதங்களுக்குப்பிறகு மனைவி அன்னலட்சுமி மற்றும் மக்களைப் பார்க்க வருகிறான். அவன் குடும்பத்தைக் காத்து வருபவள் அன்னலட்சுமியின் தாய் செல்லப்பாக்கிய ஆச்சி ஆகும். ஐந்து குழந்தைகளைப் பெற்ற அன்னலட்சுமி படும் அவதிகளோடு கணவனையும் சந்தோசப்படுத்த நினைக்கிறாள். ஆனால் விடுப்பு முடிந்து கணவன் திரும்பி செல்லும்வரை முடியாமலே அனுப்பி வைப்பதாக நாவல் முடிகிறது.

**மாற்றாந்தாய்**

இந்த நாவல் தாயை இழந்த செந்தில்நாதனின் தந்தை, ஒரு குடிகாரனாக மகனைவிட்டு வைப்பாட்டியிடம் வாழ்கிறான். செந்தில்நாதன் தன் பாட்டியின் வளர்ப்பில் வளருகிறார். மாற்றாந்தாயிடம் வளர அவனது பாட்டி அனுமதிக்கவில்லை. எவ்வளவுதான் கல்வி பெற்றாலும் அறிவியல் வளர்ந்தாலும் மனிதநேயம் போற்றப்பட்டாலும் மற்றவள் பெற்ற குழந்தை என்றாலே கொடுமைக்கு ஆளாக்கும் பெண்கள் சமுதாயத்தில் இருப்பதை சுட்டியுள்ளார். இதனை 'சின்னம்மாச்சாரியின் கொடுமைக்கு ஆளாக்கவில்லை'[4] என்ற வரிகள் பெண்களின் குணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**தமிழ்ப்பெண்கள்**

தாயில்லாதவன், தந்தையும் வைப்பாட்டியுடன் வாழ்பவன் ஆகையால் செந்தில்நாதனுக்கு யார் பெண்கொடுப்பார்கள்? என்ற நிலைவரும்போது தந்தையின் குணம் பெறாமல் ஒரு நல்ல குணத்துடன் இருக்கும் செந்திநாதனுக்கு சார்பாக நியாயம் கற்பித்து "அவனுக்கு ஒரு சிங்களத்தியோ கோணகத்தியோ கிடைக்க மாட்டாளா?"[5] என்ற செல்லப்பாக்கிய ஆச்சியின் வாதம்தான் பெண் கொடுக்கப் போவதைக் கூறி தமிழ்ப்பெண்களை உயர்த்தியும் சிங்களப்பெண்களைத் தாழ்த்தியும் பேசுவது ஆசிரியர் சிங்களர்கள் மீது கொண்டுள்ள வெறுப்பைப் புலப்படுத்துகிறது.

**செல்லப்பாக்கிய ஆச்சியின் குணநலன்கள்**

நாவலில் முக்கிய பெண்பாத்திரமாகப் பயணித்துக் கொண்டிருக்கும் செல்லபாக்கிய ஆச்சி கணவனை இழந்தாலும் குழந்தைகளை பக்குவமாக கவனித்து நல்வழிப்படுத்தியும் தன் மகளை நல்லவனான செந்தில்நாதனுக்கு கட்டிக்கொடுத்து மகளுக்குத்

துணையாகவும் மருமகனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுத்து தாயாக இருந்தும் வாழ்ந்து வரும் அனுபவசாலியாகவே சித்தரிக்கப்பட்டுள்ளார். இதனை

"செல்லப்பாக்கிய ஆச்சி வாழ்ந்து பெருகிய மனுசி இளம் பிள்ளைகளுடைய சேட்டைகளை அறிவாள்"[6]

என்ற வரிகள் சொல்லிச் செல்கின்றன. தன் மகளைக் கட்டிக் கொடுத்தால் போதும் இனி நம் கடமை முடிந்தது என்று ஒதுங்கும் சமுதாயத்தில் மகள்வீட்டு குடும்ப பொறுப்பை ஏற்று கணக்கு வழக்குகளை மருமகன் தலையில் ஏற்றக்கூடாது என்று ஒருநல்ல தலைவியாக வாழ்பவள் தான் செல்லபாக்கிய ஆச்சி என்கிறது இந்த நாவல். கணக்கு வழக்குகளை மருமகன் தலையில் ஏற்றக்கூடாது என்று செல்லபாக்கிய ஆச்சியே பொறுப்பேற்றாள்.[7] "அம்மையும் அப்பனுமாக இருந்து பார்க்கும் பெண்களுக்கு இயல்பாகவே உண்டாகும் ஒரு வகை ஆண்மைச் சுபாவம் செல்லபாக்கிய ஆச்சிக்கு உண்டு."[8] என்றும் யாழ்ப்பாணத்துத் தமிழ்பெண்களின் ஆளுமைத் திறனையும் பண்பாட்டுடன் கூடிய தாய்மைப்பண்பையும் உலகுக்கு எடுத்துச்சொல்வதை அறியலாம்.

எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பு இல்லைகாண் என்று கும்மியடி[9]

என்ற பாரதியின் கூற்று செல்லபாக்கிய ஆச்சிக்கு முற்றிலும் பொருந்தும்.

செந்தில்நாதன் தமது மனைவி அன்னலட்சுமியைப் பற்றி நினைப்பதிலும் மாமி செல்லபாக்கிய ஆச்சியைப் பற்றியே அதிக சந்தர்ப்பங்களில் நினைவு கூறுவர்.[10] தான் இல்லையென்றாலும் தன் மனைவியையும் மக்களையும் பொறுப்புடன் வளர்த்துவரும் தன் மாமியாரைக் கடவுளாக எண்ணியே செந்தில்நாதன் தினமும் நினைவுகூர்தலை இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

" மருமகனை ஆட்டிப்படைக்கும் கொடுசூரி அல்லாள்[11]

" அவருக்கு அவள் கொடுக்கும் மரியாதை
அண்டை அயலெல்லாந் தெரியும்"[12]

" கடனை இறுக்க ஓடுவாள் செல்லபாக்கிய ஆச்சி"[13]

மகள் பட்ட கடன் தன் கடனாக எண்ணி அதனை அடைக்க ஒரு தாய் படும் பாட்டையும் குடும்பத்திலுள்ள பெரியோரின் பொறுப்புணர்வையும் நாவல்தெளிவு படுத்துகிறது. குடும்பத்தில் உள்ள நபர்களுக்கு ஏற்ப உப்பு புளி காரம் போன்றவற்றை சமையலில் சேர்க்கும் தன்மை சில பெண்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கும். சடங்கு நாவலிலும் செல்லபாக்கிய ஆச்சி என்பவரின் கைப்

பக்குவத்தையும் சுவையறியும் தன்மையையும் எஸ்.பொ. சொல்லிச் செல்கிறார். இதனை,

> "உப்புப் புளியை சரியாகப் போடுவதற்கென்றே படைக்கப்பட்ட விரல்கள் பெரியசபை பந்திக்குச் சமைக்கும் பொழுதுகூட எணேய் செல்லபாக்கிஆச்சி ஒருக்கா வந்து இதுக்கு உப்பைச் சரியாய் போட்டிட்டு போயேன்"[14]

என்ற வரிகள் வெளிப்படுத்துகிறது.

### செந்தில் நாதனும் அன்னலட்சுமியும்

அழகான பெண்களைப் பார்த்தாலோ பேச்சு கொடுத்தாலோ அல்லது தானே வலிய பேச்சுக் கொடுத்து காமப்பார்வையுடன் பார்க்கும் சில ஆண்களைச் சாடும் வகையில் எஸ்.பொ. தனது நாவலில் சுட்டிச்செல்கிறார். செந்தில்நாதனின் மனைவி அன்னலட்சுமி பயணத்தின்போது அருகில் இருந்த ஒரு ஆண்மகனின் கேள்விக்கு பதில் கூறுவதைப்பார்த்து

> 'கண்டவன் நிண்டவன் எல்லோரையும் பல்லைக் காட்டி பேசுறதே? பேந்து என்னோட வந்த ஆம்பிளையள என்னை சேமனையன் என்டெல்லோ நினைச்சிருப்பாங்கள்'[15]

என்று செந்தில்நாதன் குதிக்க நிலைமையறிந்த அன்னலட்சுமி தன் கணவனின் மனம் கோணாமல் நான் செய்தது பிழைதானப்பா தெரியாமல் செய்துபோட்டேன். ஏன்று விட்டுகொடுத்து வாழும் தன்மை உடையப் பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளதை தெளிவுபடுத்துகிறது. தன்குடும்பத்தைப் போலத்தான் பிறரின் குடும்பமும் தங்களுக்குள் சண்டைச்சச்சரவுகள் இருந்தாலும் பேச்சு வழக்கம் இல்லையென்றாலும் ஒரு ஊரு, ஒரு இனம் என்று வருகிறபோது துன்பத்தில் பங்கு கொள்வது மனித இயல்பு. வேலைசெய்து கொண்டிருக்கும் போது மாரடைப்பால் இறந்துபோன கந்தசாமி என்பவனுக்காக "பாவம் நாலு பொம்பள பிள்ளையளையும் தாயையும் ஒரு கையில உழச்சுக் காப்பத்தின மனுஷன்"[17] என்று கூறும் அன்னலட்சுமியின் அனுதாபத்தையும் வருத்தத்தையும் கூறுவதோடு தமிழ்ப் பெண்களின் மனிதாபிமானத்தையும் எஸ்.பொ. அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

### கணவன் மனைவி அன்பு

கொழும்பிலிருந்து மூன்று மாதம் கழித்து யாழ்ப் பாணத்திலுள்ள தன் மனைவி மக்களையும் மாமியையும் பார்க்க வந்த செந்திநாதன் தன் மனைவியுடன் இரவு இன்பத்தை அனுபவிக்க ஆசைப்படுகிறான். ஆனால் ஐந்து பிள்ளைகளைப்பெற்ற அன்னலட்சுமி உணவை ஊட்டி

உறங்கவைத்து கடைக்குட்டிக்கு அவன் விழிக்கும் பொழுதெல்லாம் பால்கொடுக்க மார்பை குழந்தையின் வாயில்வைத்துவிட்டு உறக்கம் கொள்கிறாள். ஆண்மை தன்னை அவசரப்படுத்த தன்மனைவி நிலைமையைப் புரிந்துகொண்ட செந்தில்நாதன்

"பாவம் பகல் முழுக்க ஓடியாடி வேலைசெய்த அலுப்பும் களைப்பும் விரதம் வேற அடிச்சு முறிச்சுப் போட்டாப் போலத்தான் கிடக்கும் அவளையும் அறியாமல் நித்திரை வலுவாப்போட்டு அமத்திப்போட்டுதாக்கும்"[18] என்ற எஸ்.பொவின் வரிகள் பெண்களின் கடின உழைப்பையும் அளவுக்குமீறிக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் கட்டுப்பாட்டின்மையும் இல்லற வாழ்வில் ஆண்களைவிட பெண்களுக்குநேரும் அவதிகளை வெளிப் படுத்துவதைக் காணலாம்.

## தாய்மைப் பண்பு

பெண்குழந்தைகள் உறங்கும் போது விலகிக் கிடக்கும் ஆடைகளை இழுத்துவிடுவதும் கூனி குறுகிக் கிடக்கும் குழந்தைகளை ஒழுங்காகப் படுக்க வைப்பதும் தாய்தான். இதற்காகவும் தாயானவள் இரவில் கண்விழித்துக் கிடப்பாள். "கதையில் வரும் அன்னலட்சுமி ரோகினியின் சட்டையை இழுத்துவிடுகிறாள். கூனிக்கிடக்கும் மாலினியை நீட்டி நிமிர்த்திப்படுக்க வைக்கிறாள். சாலினியை ஒன்றுக்கு போக வேலியோரம் விட்டு வந்து படுக்கவைக்கிறாள்."[19] என்ற எஸ்.பொ. வின் வரிகள் தாய்மைப் பண்பை மேம்படுத்திக் காட்டுவதை அறியலாம். தன் பசியைவிட குழந்தையின் பசியை ஆற்றும் குணம் தாய்க்கு மட்டுமே உண்டு. இரவு உணவு மறந்து அழும் குழந்தைக்கு பால்கொடுத்துவிட்டு பசியுடன் படுத்துக்கொள்ளும் தமிழ்ப்பெண்ணின் தாய்மைப் பண்பு புலப்படும்.

> "நீங்கள் முழுவதையும் சாப்பிட்டுவிட்டுக் கழுவி வையுங்கோ எனக்கு இண்டைக்குப் பசிக்கேல்ல பொடியன் அழுகிறான், நான் பால் குடுக்கப் போறேன்"[20]

என்று அன்னலட்சுமியின் குணத்தை நாவல் எடுத்துரைக்கிறது.

## நல்ல மனைவி

குடிபோதையில் மனைவி மக்களை மறந்து படுக்கையில் வாந்தி எடுத்து, ஆடையில்லாமல் மல்லாந்து கிடக்கும் தன் கணவனை சரிசெய்தும், துணியில் வாயைத்துடைத்தும் வாய் நாற்றத்துடன் தன்னை கட்டி அனைத்தாலும், பொறுத்துக்கொள்ளும் எதார்த்தம் ஒரு தமிழ்பெண்ணுக்கு மட்டுமே உண்டு என்பதை சடங்கு நாவலில் எஸ்.பொ. கூறுவதைக் காணலாம்.சேலையையும் பாவாடையையும் சரிசெய்தபொழுது சாமி அடங்காமாரியைப் போலையல்லே நடந்து கொண்டேன் என்றும், "இத்தனைப் பெண்டுகள் நித்தம் குடிகாரப் புருஷன் மாரோடை நெருக்கி வாரப்பட்டுச் சீவிக்கிறாளுனு" என்றும்

நாவலின் அன்னலட்சுமி நொந்து கொள்ளும் விதத்தையும் போதையில் சாப்பிடாமல் படுத்துக்கொண்டு விடியற்காலை அவதிப்படும் கணவனுக்கு சாப்பாடு கொடுத்து அரவணைப்பவள் தான் மனைவி. இதனை,

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி குறள் 923

என்ற குறளில் நல்லவர் முன் கள் குடித்த மயக்கத்தை குற்றம் என்கிறார் வள்ளுவர்.

வயிற்றுப் பிழைப்புக்காக வேலைக்குச் சென்று வந்து விடுப்பில் மனைவியுடன் இன்பம் அனுபவிக்காது மீண்டும் வேலைக்குச் செல்லும் கணவனின் பரிதாப நிலையையும் உணரும் மனைவி சூழ்நிலை காரணமாக மனைவியுடன் சேராமல் செல்லும் நிலையையும் எண்ணி வருந்தும் கணவனும் ஒருவரையொருவர் கண்களால் அன்பின் எல்லையில் நின்று பருகி விடைபெறுவதை எடுத்தியம்புகிறார் ஆசிரியர்.

"பிரிவின் ஏக்கம் இனி எப்ப திரும்பி வாரது"[21]

"ஊன்னாலினயப்பா உடம்பை வடிவாப் பாருங்க"[22]

என்று கூறும் மனைவியின் கரிசனத்தையும் ஏக்கத்தையும் புலப்படுத்துவதை ஆராயப்பட்டுள்ளது. இதனை வள்ளுவரும்

தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கோள் உடைத்து குறள் 1325

என்ற குறளிலும் தழுவப்பெறாத பொழுதும் உண்டாகும் சுகத்தை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

இலங்கைத் தமிழில் யாழ்ப்பாணத்து வட்டார வழக்குச் சொற்களால் யாழ்ப்பாணத்து தமிழ்ப்பெண்களின் இயல்பான குணத்தையும் தாய்மைப் பண்புகளையும் பொறுப்புணர்ச்சியையும் எடுத்துரைப்பதோடு நாவலில் பொதிந்துள்ள பொருளாதர ரீதியாக ஏற்படும் துயரம், குடும்பக்கட்டுப்பாடு, கணவன் மனைவியின் உறவுநிலை புரிந்துகொண்டு வாழும் மனப்பக்குவம் மற்றும் பெண்களின் ஆளுமைத்திறன் ஆகியவற்றையும் கூறுகள் இந்நாவல் அமைந்துள்ளதை இக்கட்டுரையின் மூலம் அறியப்படுகின்றன.

அடிக்குறிப்பு

1. கா.கோ. வேங்கடராமன் - தமிழ் இலக்கிய வரலாறு, கலையகம் வெளியீடு பா.வேலூர்- நாமக்கல் பக்.371

2. " பக்.372

3. மேலது, பக்.372

4. எஸ்.பொ சடங்கு (நாவல்), மித்ரா ஆர்ட்ஸ் கிரியேசன்ஸ், கோடம்பாக்கம் சென்னை-24, பக் 43.

5.— மேலது, பக்.45

6. மேலது, பக்.83

7. மேலது, பக்.41

8. மேலது, பக்.45

9. பாரதியார் கவிதைகள், சக்தி காரியாலயம், சென்னை 6. பக்.217

10. எஸ்.பொ, சடங்கு, மித்ரா ஆர்ட்ஸ் கிரியேசன்ஸ் கோடம்பாக்கம் சென்னை 24, பக்.48.

11. மேலது, பக்.49

12. மேலது, பக்.49

13. மேலது, பக்.48

14. மேலது, பக்.49

15. மேலது, பக்.53

16. மேலது, பக்.53

17. மேலது, பக்.78

18. மேலது, பக்.87

19. மேலது, பக்.90

20. மேலது, பக்.107

21. மேலது, பக்.125

22. மேலது, பக்.158

# அ.முத்துலிங்கம் படைப்புகளில் வெளிப்படும் புலம்பெயர்ந்தோர் வாழ்வியல் பதிவுகள்

முனைவர் குளோரியா விதாஸ்
பேராசிரியர்
கிறித்தவத் தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை, தமிழ்நாடு

முன்னுரை

ஈழத்தமிழ் எழுத்தாளர்களில் புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியவாதிகளின் படைப்புகள் பரவலான கவனத்தைப் பெற்று வருகின்றன. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு நடுகை செய்யப்பட்டவர்களே புலம் பெயர்ந்தோர் எனப்படுகின்றனர். தமது இனம் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றோடு முற்றிலும் மாறுபட்ட புதியதொரு நாட்டிற்குப் பெயர்ந்தவர்களே இப்புலம்பெயர்ந்தோர் இங்ஙனம் புலம் பெயர்ந்தோரால் படைக்கப்படும் இலக்கியங்கள் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் எனப்படுகின்றன.

கனடா, பிரான்சு, செருமனி, இத்தாலி, நார்வே, டென்மார்க், ஆஸ்ரேலியா போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்தோர் மிகுதியாக வாழ்ந்து வருகின்றனர். ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்த காலகட்டத்தை இரண்டு காலகட்டமாகப் பிரிப்பர். 1982க்கு முன் புலம் பெயர்ந்தவர்கள். 1983க்குப் பின்புலம் பெயர்ந்தவர்கள் என பகுக்கப்படுகின்றனர். 1983க்கு முன்புலம் பெயர்ந்தவர்கள் தொழில், உயர்கல்வி, இவற்றை மையமாகக் கொண்டே புலம் பெயர்ந்தனர். 1980க்குப்பின் பெயர்ந்தவர்கள் இனக்கலவரம், ஈழப்போர் காரணமாகப் பெயர்ந்தவர்கள்.

படைப்பாளர் அ.முத்துலிங்கம் அவர்களை முதற்பிரிவில் அடக்கலாம். இவர் பணிநிமித்தம் பல்வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்தவர். புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை இலக்கிய வடிவங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவர்களின் படைப்புகளின் பாடுபொருளாக தாயக நினைவுகளும், வாழ்வியல் அனுபவங்களும், புலம்பெயர்ந்தோர்

சந்தித்த பல்வேறு துயரச் சம்பவங்களும், புலம்பெயர் நாட்டின் புதிய கலாச்சாரப் பண்பாட்டுத்தாக்கங்களும் அவர்கள் எதிர்கொண்ட சவால்களும் அமைந்தன. எனினும் புலம்பெயர்ந்தோரது படைப்புகள் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி பூரணச் சுதந்திரத்துடன் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## அ.முத்துலிங்கம் என்னும் புலம்பெயர்ந்த படைப்பாளர்

ஈழத்தைச் சேர்ந்த இவர் 1970களின் மத்தியில் பணியினிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றார். இவர் இலங்கை கொக்குவில் என்ற சிற்றூரில் பிறந்தவர். கணக்காயர் படித்தவர். ஐ.நாவுக்காக பல நாடுகளில் பணி புரிந்தவர். 1960களில் இருந்து இவரது எழுத்துப் பணி தொடங்கியது. 1964இல் 'அக்கா' என்ற தமது முதல் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டவர். இவர் கைலாசபதியால் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டார். இலங்கை தினகரன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற அக்கா சிறுகதையைத் தலைப்பாகக் கொண்ட இவரது முதல் தொகுப்பு க.கைலாசபதியின் அணிந்துரையுடன் 1964இல் வெளிவந்தது. பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 1995இல் மறுபடியும் எழுதத் தொடங்கி சிறுகதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், புத்தக மதிப்புரைகள், விமர்சனங்கள் என்று எழுதி வருகிறார். அவர் கதைகளில் காணப்படுவது வெவ்வேறு தேசங்கள். வெவ்வேறு கலாச்சாரங்கள், வெவ்வேறு மனிதர்கள். ஆனால் தமிழ் வாசகர்களுக்கு அந்நியப்படாமலும், தீவிரம் சிதைக்கப்படாமலும் அப்புனைவுகள் படைக்கப்பட்டுள்ளன. நாமறிந்த உலகங்களுக்கு நாமறியாத பாதைகளில் அவை நம்மை இட்டுச் செல்கின்றன. அவாரின் பார்வை கூர்மையானது.

## படைப்பின் சாரங்கள்

பொதுவாக அ.முத்துலிங்கத்தின் தமிழ்க்குரல் என்றுமே ஒரு வேதனையும் போராட்டமும் கொந்தளிக்கும் உரத்த குரலாகவே இருந்துள்ளது. அது வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து வெளிக் கிளம்புவது. இவர் தன் சொந்த நாட்டில் இருக்கும்போதே சோகக் கதைகளையே படைக்கிறார். கிரேக்க நாடகங்கள் பெரும்பாலும் அடுத்தடுத்த போர்கள் விளைவித்த அழிவுகளின் பின்னணியில் பிறந்தவை. எனவே இவை போர் மற்றும் போர் அழிவு பற்றிய செய்திகளையே மிகுதியும் பேசுகின்றன. பல நாடகங்கள், கணவனை இழந்த பெண்களின் புலம்பலாகவே அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. நம் புறநானூற்றுப் பாடல்களும், கலிங்கத்துப்பரணி பாடல்களும் போர்மேற் சென்ற தமிழரின் வீரத்தையும், மரணத்தையும், போர்கள், அழிவுகளையுமே பதிவு செய்துள்ளன. இன்றைச் சூழலில் பரணியும், புறநானூற்றுப் போர்ப் பாடல்களும் எழ வாய்ப்பில்லை. படைப்பாளன் தான் வாழ்ந்த காலத்துச் சமூக அவலங்களை இலக்கியத்தில் பதிவு செய்வான். புலம் பெயர்ந்த படைப்பாளியான முத்துலிங்கம்,

பெரும்பாலும் ஈழத்தமிழர் அனுபவங்களை நேரடியாக பகிர்ந்து கொண்டவர் அல்லர். இவர் இனக்கலவரத்தால் பாதிப்புக்குள்ளானவர். தான் பிறந்த மண்ணையும் ஊரையும் இழந்தவர். எனினும் இவரிடம் இருந்து உக்கிரமான ஆவேசக் குரலோ, உரத்த எதிர்ப்போ வெளிப்படவில்லை. இயல்பாக சாந்த குணம் படைத்தவர். உரக்கப் பேசி அறியாதவர். கொண்டாடத்திலும் துயரத்திலும் அமைதியைக் கடைபிடிப்பவர். அறுபதுகளில் எழுதத் தொடங்கிப் பின்னர். பல ஆண்டுகால இடைவெளியில் மீண்டும் எழுதினார் எனினும் இவரது எழுத்தில் பெரிய மாறுதல்களைக் காணஇயலவில்லை. இவரது படைப்புகள் எங்கும் எவரும் எதிர்பாராத இடத்தில் இழப்பின் சோகத்தின் தாக்கத்தை, நாம் உணர முடியும். ஒவ்வொரு சிறுகதையிலும் வெகு அமைதியாக ஒரு பெரும் சோகத்தை, பெரும் இழப்பை சொல்லிவிடுகிறார். முழக்கங்கள் அவருக்குத் தேவைப்படவில்லை.

இவரது படைப்புகள் தமிழிலக்கியத்தில் தோய்ந்த தன்மையை வெளிக்காட்டுவனவாக அமைந்திருப்பதைக் காணமுடியும். செவ்வையான தமிழிலக்கியப் பரிட்சயம் உடையவர் என்பதை சு.மோகனரங்கனும் சுட்டிக்காட்டுகிறார். "இவரது பல கதைகளில், சாத்தியமான இடங்களில் எல்லாம் மிக சஜகமாக எடுத்தாளப்படுகின்ற பழந்தமிழ் இலக்கிய கவிதை வரிகள், புராண இதிகாச தருணங்கள் போன்றவை இக்கதைகளுக்கு மேலதிகமான தொரு கால பரிமாணத்தை அளிப்பதாயும் கலாச்சாரத்தின் உட்பொதிந்த நினைவை மீட்டுவதாகவும் அமைகிறது. ஆனால் இக்கதைகளைப் பொறுத்தவரை மேலதிகமான தளமும் இதற்கு உள்ளது. இவை புலம் பெயர்ந்த நாடிழிந்த ஒருவரின் கதைகள். இந்த ஏக்கம், தவிப்பு, அவரது எல்லாக் கதைகளிலும் அடிநாதமாக இடம்பெறுகிறது. புலம்பெயர்ந்து வசிப்பதால் அடையக் கூடிய இழப்புகள் அனைத்திற்குமான ஒருவித ஈடுகட்டலாக இவரது படைப்புகள் அமைகின்றன. தன் சொந்த தேசத்தையும் மண்ணையும் ஒருவர் தன் மொழியில் சுமந்தலைய முடியுமா? என்ற கேள்விக்கு முத்துலிங்கத்தின் கதைகள் உடன்பாட்டுநிலையில் பதிலளிக்கின்றன.

### புலம் பெயர்தல் என்றும் உணர்வியல் நிகழ்வு

புலம்பெயர்தலில் இடம் பெயர்தல்மட்டும் நிகழ்வதில்லை. மனிதனின் கலாச்சாரம் பண்பாடு, வழிபாடு, குலமரபுகள், புவியியல் சுற்றுச் சூழல், மரம், செடி, கொடி அனைத்தையும் இழக்க வேண்டிய ஒரு நிகழ்வு, திரும்பப் பெற முடியாத ஒரு நிரந்தரப் பிரிவையே இந்தப்புலம் பெயர்தல் என்ற சொல்லாடல் குறிக்கின்றது. தனிமனிதன் விரும்பிப் பிரிதல் என்பது மகிழ்வளிப்பது. கட்டாயத்தின் பேரில் பிரித்தெடுத்தல் என்பது உணர்வுகளையும், உளவியலையும் பாதிப்புக்குள்ளாக்கும் ஒரு செயல்பாடாகின்றது. இரண்டாயிரம் வருடம் தங்கள் நிலத்தைச் சுமந்து தான் உலகமெல்லாம்

அலைந்தார்கள். மண்ணும் தேசமும் நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் அவர்கள் சொந்தநாடும் மலைகளும் தேய்ந்த பின்னரும் கூட அவர்கள் மனதையும் உணர்வுகளையும் விட்டு நீங்கவில்லை. இது யூதர்களுக்கு மட்டுமின்றி புலம் பெயர்ந்த அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.

படைப்பாளர் முத்துலிங்கம் அவர்கள் வேலைவாய்ப்பின் நிமிர்த்தமாகத் தனது சொந்த நாட்டைப் பிரித்தாலும் உறவுகளையும், உடைமைகளையும், உடன்பிறப்புக்களையும் ஈழப்போரின் நிமித்தமாக இழந்தவர். எனவே இவரது படைப்புகள் சோகம் நிரம்பியவை போரின் அவலங்களையும், குடும்பச் சிதைவுகளையும், பண்பாட்டுச் சிதைவுகளையும், உறவுச் சிதைவுகளையும் இவரது படைப்புகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

முத்துலிங்கம் கதைகள் என்ற தொகுப்பிலுள்ள 75 கதைகளில் புலம் பெயர்ந்தோர் வாழ்வியலை நேரடியாக எடுத்துக்காட்டும் ஏழு கதைகள் மட்டுமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. (ஒரு சாதம், வம்சவிருத்தி, நாளை, கடன், ஐந்தாவது சுதிரை, அடைப்புகள்)

குடும்பச் சிதைவுகள்

புலம்பெயர்தல் என்றும் நிகழ்வால் மனிதர்கள் இழந்தது உடைமைகளையும் உறவுகளையும் மட்டுமன்று, பண்பாட்டு இழப்புகளும் இதிலடங்கும். புலம் பெயர்தலினால் உணவு மற்றும், பழக்கவழக்கங்கள் முற்றிலும் மாறுபட அதை எதிர்கொள்வதில் குடும்பங்களிடையே சிதைவுகளும், ஒற்றுமை இன்மைகளும் உருவாகின்றன. 'ஐந்தாவது சுதிரை' என்னும் கதையில் தங்கராசாவின் குடும்பம் போரின் நிமித்தமாக கனடாவுக்கு இடம் பெயர்கிறது. சாதாரண கிராமத்துப் பெண்ணாய் இருந்த அவரது மனைவி பத்மாவதியின் பழக்க வழக்கங்கள் முற்றிலும் மரிப்போயின "இங்கு வந்த பிறகு அவள் குதிங்கால் வெடிப்பில் ஒட்டியிருந்த செம்பாட்டு மண் முற்றிலும் மறைவதற்குச் சரியாக ஆறுமாதம் எடுத்தது. ஆனால் அவள் அடியோடு மாறுவதற்கு ஆறுவாரம் கூட எடுக்கவில்லை. 'தங்கராசா கனடா அவளுக்குச் சொர்க்கலோகமாகப்பட்டது. 'தங்கராசா இன்னமும் பழக்க தோசத்தில் உலர் சலவை சட்டை உதறிப் போட்டும் காலணிகளை அதிகாலை வேளைகளில் கவிழ்ந்துப் பார்த்தும் போட்டுக் கொண்டிருக்கையில் பத்மாவதி ஜீன்சும் வாசம் எழுதிய டீ சர்ட்டும் அணிந்து வலம்வந்தாள் (592) என்ற அடிகள் விரும்பி மணம் புரிந்த மனைவி புலம் பெயர்தலினால் பண்பாட்டு நிலையில் முற்றிலும் மரிப் போன அவலத்தைப் பதிவு செய்கிறார். இம்மாற்றம் தொடர் கதையாகி நாளடைவில் உறவுச் சிக்கலுக்கு இட்டுச் செல்கிறது. இலங்கையில் அவள் உண்ட இட்லியும், தோசையும், புட்டும், பழைய புளித்த உணவாக அவளுக்குத் தோன்றுகிறது. பிட்சாவும், ரொட்டியும் நாகரிகத்தின் அடையாளமாக அவளால் கருதப்படுகிறது. சொந்த

ஊரின் உணவு வகைகளை விரும்பும் கணவனும் குழந்தைகளும் அநாகரிகத்தின் அடையாளங்களாய் அவளுக்குத் தோன்றுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக வேலையற்ற தங்கராசா மனைவியை வேலைக்கனுப்பும் சூழலுக்குத் தள்ளப்படுகிறார். இதனால் பிளவுவலுப்படுகிறது. கணவன் என்ற உறவே அவளுக்கு விருப்பமற்றதாக மாறுகிறது. கணவனுக்கு மட்டுமே உள்ள அந்தரங்கங்கள் பொதுவுரிமையாக்கப்படும் நிலை அறிந்து இருண்ட வனத்திலே பதுங்கி இருந்த மிருகம் ஒன்று தாக்கியது போல உணர்ந்தார். மெல்ல பலமிழந்து சரிந்தார் என்ற அடிகள் ஒரு குடும்பத்தின் ஓட்டுமொத்த சிதைவைப்படம் பிடித்துக் காட்டுகின்றன.

அன்பின் அடித்தளத்தில் கட்டப்பட்ட இக்குடும்பம் புலம் பெயர்வினால் ஏற்பட்ட பழக்க வழங்கம் மற்றும் பண்பாட்டு தாக்கத்தினாய் அதன் உயிர்த்தன்மையே இழந்து சிதைவடைகிறது.

உளவியல் - தளர்வுகள்

போரின் காரணமாக உயிர்பிழைத்தலுக்காக வேற்று நாடுகளுக்குச் செல்லும் மக்கள் மிகுந்த உளவியல் சிக்கலுக்கு உள்ளாகின்றனர் உயிருக்கு அஞ்சி, இரவோடு இரவாக எந்த உடைமைகளுமின்றி அனைத்தையும் விட்டுவிட்டு, வேலை, கல்வி அனைத்தையும் இழந்து உயிர் ஒன்றையே மூலதனமாகக் கொண்டு பிழைப்புக்காக வேற்று நாடுகளுக்குச் செல்லும் மக்களின் மனநிலையில் தளர்ச்சியும், சோர்வும் ஏற்படுவது இயல்பே.

'ஒரு சாதம்' என்னும் கதையில் வரும் சிவலிங்கம் சர்ட்டட் அக்கவுன்ட் முடித்து ஒரு பெரிய கம்பெனியில் பெரிய பொறுப்பிலிருந்தான். வீடு, வேலைக்காரர்கள், தோட்டக்காரன், காவல்காரன் என்று வசதியான வாழ்க்கையும் நல்ல மனைவியும் யாழ்ப்பாணத்தில் அவருக்கு வாய்த்திருந்தது. 1977ல் நடந்த கலவரத்தின் போது எல்லாவற்றையும் துறந்துவிட்டு உயிர்தப்பினால் போதும் என்று இந்தியாவுக்குப் பூர்ணிமாவுடன் ஓடிவந்து விட்டான். "அங்கே சிவலிங்கம் பட்ட இன்னல்கள் விவரிக்க இயலாது ஒரு உயர்ந்த பதவியில் சகல சௌகரியங்களுடன் வாழ்க்கை நடத்தி விட்டு அகதியாக வந்து இம்சைபடுகிற அவதி சொல்லி விளங்காது கடைசியில் எவ்வளவோ துன்பப்பட்டு கனடாவுக்கு அகதிகளாக வந்து தஞ்சம் புகுந்தார்கள்" என்ற வரிகள் இடம் பெயர்ந்தமைக்கானக் காரணங்களைப் பதிவு செய்கின்றன.

கம்பெனியின் பொறுப்பாளராக இவருக்குக் கிடைத்தது கடைசியில் வாட்ச்மேன் உத்யோகம் தான். அதற்கே மிகுந்த சிரமப்பட வேண்டியதாயிற்று நான் இவ்வளவு படித்து விட்டு இப்படியாக காவல்கார வேலை செய்ய வேண்டி வந்துவிட்டதே விதியே என்று நொந்து கொண்டேன். எங்கள் கம்பெனி பிரசிடெண்ட்

போகும் போதும் வரும்போதும் சலாம் செய்வேன்" என்று தன் நிலையை நண்பனுடன் பகிர்ந்து கொள்கிறார்.

தனக்குச் சலாம் சொல்ல பலர் இருந்த வேலை, ஒரே இரவில் பறிபோன அவலம் இவரை மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கியது, தன்னைவிட கல்வியில் குறைந்த பலர் நல்ல நிலையில் வருவதைப் பார்த்து மனம் மருகுகின்றார். ஆனாலும் மனம் துவளாது தொடர்ந்து போராடி இறுதியில் உயர் பதவியைப் பெறுவது போல் கதை முடிகிறது. இந்தியாவிலும் கனடாவிலும் அவர்பட்ட இடர்பாடுகள் அவரது உளவியலில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.

'கடன்' என்றும் கதையில் முதியவர் தங்கம்மா என்ற தனது மனைவியுடன் இலங்கையில் வாழ்ந்து வரும் வேளையில் போர் மூளுகிறது. "எல்லோரும் ஓடும் போது இவர்களும் ஓடினார்கள்". ஒரு மூட்டைகூட கட்ட நேரமில்லை கால்மைல் தூரம் கடக்கு முன் அவள்கால் இழந்து விட்டது. தங்கம்மாவைத் தூக்குவதற்கு ஒருவரும் வரவில்லை வீதியிலே கிடந்த அவளைத் தாண்டி ஓடிக்கொண்டே யிருந்தார்கள். உடம்பு குளிர்ந்த வெகு நேரமாகியும் கூடவே இருந்தார் பிறகு அவரும் ஓடினார்" இறந்துப் போன தன்மனைவியை வீதியிலே போட்டு விட்டு உயிர் காக்க ஓடும் அவலம். மகனின் அறிவுரையின் பேரில் கனடாவுக்குப் சிரமப்பட்டு பயணிக்கிறார். மகன் சகல வசதி வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தாலும் மனைவியைப் பற்றிய உணர்வு அவரை மன நோயாளியாக்கிவிடுகிறது. "இரவு நேரங்களில் திடீரென்று விழிப்பு ஏற்படும் பொழுது நாலு சுவர்கள் பதுங்கு குழி சுவர்கள் போல நெருங்கி வந்தன. பேசுவதற்கு ஒரு துணை இல்லை. அப்பொழுது தான் இவர் தனக்குள் பேச ஆரம்பித்தார். உண்மையிலேயே இவர் தங்கம்மாவுடன் தான் பேசினார்" என்ற வரிகளில் இவரது மனநிலை தெளிவு படுத்தப்படுகிறது.

மகனும், மகளும் வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். ஒரு வாரத்திற்கான உணவை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விடுகின்றனர். இவர் எழு முன்போன அவர்கள், அவர் தூங்கியபின் வருகின்றனர். நேரடி சந்திப்பில்லாத நிலை, தனியறையில், தனிமையில் தன் சொந்த நாட்டையும், உறவுகளையும் எண்ணி ஏங்குகிறார். இறுதியில் மன நோயாளியாகவே இறந்துவிடுகிறார்கள். இலங்கையில் பெரிய அதிகாரியாகப் பணியாற்றிய இவரின் புலம் பெயர்ந்த வாழ்வு இவரை மனநோயாளியாக்கி, மன ஏக்கத்துடனே வாழ்வை முடிக்க வேண்டிய அவலத்திற்குத் தள்ளுகிறது.

அடைப்புகள் என்ற கதை இளம் பெண் ஒருத்தியின் மனக் குமுறலைக் வெளிக்காட்டுகிறது. அமெரிக்காவில் இவள் வேலைபார்க்கிறாள். தகப்பன் இலங்கையிலிருக்கிறார், தாய்

துபாயிலிருக்கிறாள். துபாயில் பிறந்த இவள் இங்கிலாந்தில் கல்வியை முடித்து தற்பொழுது அமெரிக்காவில் தனிமையில் வேலை பார்க்கிறாள். பழகும் ஒவ்வொருவரும் வேற்றுநாட்டவர்கள். வேற்று மொழி பேசுகின்றவர்கள் இவள் தமிழ்பண்பாட்டிற்குக் கட்டுப்பட்டவள். ஆண்களோடு தொடர்பு கொள்வதை இவள் வெறுக்கிறாள். துணைக்கு "றொட்வைலர்" நாய் ஒன்றை வளர்க்க ஆசைப்படுகிறாள். இது மிகவும் பிரியமுடன் மனிதர்களுடன் பழகக் கூடியது. ஆனால் அது அவளுக்குக் கிட்டவில்லை. மனம் சோர்வடைகிறார். தனது தாயாருடன் தொலை பேசியில் மட்டுமே தொடர்பு கொள்ள முடிகிறது. தனியான நேரங்களை அழுவதற்கே செலவளிக்கிறாள்.

இந்நிலையில் ஆண்களின் வசியப்பேச்சுகளும், ஆசைக்கு இணங்க வற்புறுத்தும் மனநிலையும் இவளை அச்சத்திற்குள்ளாக்கு கின்றன. எனவே அழுவதற்கென்றே இடம் தேடி அலைகிறாள். இவளது வாழ்க்கை கேள்விக்குறியாகவே உள்ளது என ஆசிரியர் கதையை முடித்துள்ளார். பெற்றோரைப் பார்க்கும் வாய்ப்பின்றி தனிமையின் அன்பு காட்டவோ, அரவணைக்கவோ ஆளின்றிபடும் மனவேதனை இங்கு படம்பிடித்துக் காட்டப்படுகிறது. புலம் பெயர்தலினால் குடும்பங்கள் பிரிந்து தனிமையில் உழலும் மன உளைச்சலை இக்கதை தெளிவுபடுத்துகிறது.

### பொருளாதார இறுக்கமும் - வாழ்க்கைச் சிக்கல்களும்

புலம்பெயர்ந்தோரின் பொருளாதார நிலை பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. உடலை ஒட்டிய உடையோடு வெளிக் கிளம்பிய இம்மக்களின் எதிர்காலம் வேதனை அளிப்பதாகவே உள்ளது. 'ஒருசாதம்' என்ற கதை இம்மக்களின் பொருளாதார நிலையை படம் பிடிப்பதாக உள்ளது. கம்பெனியின் மேலதிகாரியான சிவலிங்கம் ஒரு வேளை உணவுக்கும், உடைக்கும் அரசின் உதவித் தொகையை எதிர் நோக்கும் அவலநிலைக்குத் தள்ளப்படுகிறார். மேலாளர் என்ற அந்தஸ்தோடு யாழ்ப்பாணத்தில் உலா வந்தவர் 'அகதி' என்ற அடைமொழியோடு வரிசையில் நின்று றொட்டித் துண்டைப்பெறும் கொடுமையை அனுபவிக்கின்றார். 'சாதமும் ருசியான மீன் குழம்பும் உண்டுப் பழகிய நினைவுகள் இவரை நெகிழ்வடையச் செய்கின்றன. றொட்டித் துண்டும், பீட்சா துண்டும் பழகிய உணவாயிற்று 'கனடா அரசு வழங்கிய உதவித் தொகை அவருடைய செலவினங்களுக்கு போதவில்லை. எனவே உதவித் தொகையை அதிகரிப்பதற்குச் சில குறுக்கு வழிகளைச் கூறுகின்றனர். அதில் ஒன்று மனைவியைத் தற்காலிகமாக நீக்கி வைப்பது என் மனம் உடன்படவில்லை" என்று ஒரு வித சுமையோடு ஆசிரியர் பதிவு செய்கிறார். பொருளாதார நெருக்கடியின் கொடுமையை இங்கு உணர முடிகிறது.

**நிறைவாக**

எழுத்தாளர் முத்துலிங்கம் அவர்களின் படைப்புகள் நாடிழந்த ஒருவரின் கதைகள் இவரது ஆக்கங்களில் எப்போதுமே இந்த ஏக்கம் தவிப்பு வெளிப்படையாக வெளிவரா விடினும் அனைத்துக் கதைகளின் அடிநாதமகாவும் இச்சோக மனநிலையே வெளிப்படுகிறது. புலம்பெயர்ந்தோரின் இழப்பு எத்தகையது என்பதை இவரது கதைகளைக் கற்போர் உணர முடியும். வாழ்வின் பிரகாசமான தருணங்களை முன்னிறுத்துபவயையாக எச் சூழலிலும் மகிழ்ச்சியை நம்பிக்கையை இழக்க சம்மதியதாதவைகளாகவே இவை அமைந்துள்ளன. எனினும் இவர்களது இழப்புகள் உறவோடும் உடமைகளோடும் மட்டும் சம்மந்தப்பட்டவை அல்ல, அதையும் தாண்டி பண்பாடு, கலாச்சாரரம், குடும்ப சிதைவுகள் போன்ற அவலங்களையும் உருவாக்கி மாறாத வடுக்களை அவர்களது அடிமனதில் உருவாக்கியுள்ளமையை இக்கதைகள் பிரதிபலிக்கின்றன.

# அழித்தலும் - உயிர்த்தலும்

(யாருமில்லை என்றானபோது - என்னும் கவிதை நூலை முன்வைத்து)

முனைவர் கு. சிவப்பிரகாசம்
தமிழ்த்துறைத் தலைவர்
பெரியார் பல்கலைக்கழக கலை
அறிவியல் கல்லூரி
பென்னாகரம்
தருமபுரி மாவட்டம், தமிழ்நாடு

ஒன்றை அழித்து மற்றொன்று உயிர்ப்பது இயற்கையானது. ஆனால் மனிதனை மனிதனே அழித்து வாழ்தல் என்பது மனித குலத்திற்கு எதிரானது. கருத்து அடிப்படையில் ஒன்றை அழித்து மற்றொன்று வாழ்தல் என்பதற்கு மாறாக ஒன்றிலிருந்து மற்றொன்று என்பதை சமுக, அரிவியல் விஞ்ஞானிகள் உறுதிபடுத்தியிருக்கிறார்கள். இந்த வாரிசையில் கவிஞர் முல்லை ஆதவன் மருதம் அவர்கள் எழுதிய 'யாருமில்லை என்றானபோது' என்ற கவிதைத் தொகுப்பின் வழியாக ஒன்றன் தொடர்ச்சி மற்றொன்று என்பதை அழித்தலின் வழியாக உயிர்த்தல் என்பதாகப் பதிவு செய்திருக்கிறார். ஓர் இனம் அழித்தலின் வழியாக புலம்பெயர்தலும். புலம் பெயர்த்தப்படுதலும் நடைபெறும்போது உயிர்த்தல் உறுதியானது என்பதை ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார்.

புலம்பெயர்தல் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாகும். தொழில், திருமணம், கல்வி, வேலைவாய்ப்பு வாழ்தல் போன்ற பல்வேறு காரணங்களால் புலம் பெயர்தல் உலகெங்கும் உள்ள மனிதர்களிடத்தில் நடைபெறும் இயக்கத்தின் அடையாளமாகும். உயிர்கள் தோன்றிய காலம்தொட்டே புலம்பெயர்தல் அவசியத்தின் காரணமாக நடைபெற்றது. ஆனால் புலம்பெயர்தலை முதன் முதலாக பதிவுசெய்து வரையறை செய்தவர் தொல்காப்பியர் ஆவர். தொல்காப்பியர் பிரிவு என்பதாக வரையறை செய்து மீண்டும் திரும்ப வருவதாகவும் அதற்கு காலஎல்லை உண்டு என்று மக்களின் வாழ்வின் வழியாகப் பதிவு செய்திருக்கின்றார். ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் குறுகிய கால எல்லையில் புலம்பெயர்தல் என்னும் பிரிதல் தேவையானவையாகவே இலக்கணம் வரையறைச் செய்தது.

ஆனால் திரும்பவும் வரமுடியாதபடி ஓர் இனத்தை புலம்பெயர்த்தும் போதும் அவ்வினத்தின் வாழ்வாதாரங்களை அழித்து நிர்மூலமாக்கப்படுவதன் மூலம் வேற்று இடங்களுக்கு வாழ்வுகருதி அகதிகளாகவும் வாழ்க்கையைத் தேடுபவர்களாகவும் புலம்பெயரும் போது அது விரும்பி ஏற்றுக்கொள்வதல்ல. மாறாக வேறு வழியின்றி நிர்பந்தத்துடன் எடுக்கும் முடிவாகவே முடிகின்றது. "ஆள்வதும் வாழ்வதும் எல்லோருக்கும் சொந்தமானது எனும்போது ஓர் இனம் ஆளவேண்டும் மற்றோர் இனம் அழியவேண்டும் என்று ஒரே நாட்டுக்குள் இருவேறு சிந்தனை வருமானால் அது மனித பகை உணர்வின் உச்சமாகும்". இப்போக்கு மனிதர் வாழும் எல்லா நாடுகளிலும் மேலோங்கி இருக்கின்றது.

மொழி, இனம், சாதி என்பன போன்ற பல்வேறு அடையாளங் களுடன் கூடி வாழும் ஒரே தேசத்தில், ஒருவர் ஆள்வதும் மற்றொருவர் வாழ்வதற்காகவும் படைக்கப்பட்டவர்களாக ஓர் இனம் கற்பனை செய்து கொள்பவர்களானால் வாழ்பவர்களுக்கான வாழ்க்கை சுதந்திர மானதாக்கப்பட வேண்டும். இவ்வாழ்க்கை அவரவர்களுக்கான முழுமையைக் கொடுக்காதபோது, அவற்றைத் தக்க வைக்க போராட வேண்டியுள்ளது. இது ஆளும் இனத்திற்குச் செயற்கையான வெறுப்புணர்வை ஏற்படுத்தும்போது உளவியல் சார்ந்து இன அழிப்பு நடைபெறுகின்றது. இச் சிந்தனை உலக நாடுகளில் பெரும்பாலும் பொருந்தும்.

இச்சூழலில் பலநூறு ஆண்டுகளுக்கும் மேலாகவும் சுதந்திரமாக வாழ வேண்டிய மக்கள் அழிக்கப்படுகிறார்கள். மொழியின் காரணமாகவும் இனத்தின் காரணமாகவும் போர் என்று பல லட்சம் அப்பாவி மக்கள் கொன்று குவித்து. அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்துகிறார்கள். இந்த அச்சமும் பீதியும் வலுக்கட்டாயமான புலம்பெயர்தலை நிகழ்த்துகின்றன. புலம்பெயர்ந்தவர் அத்தோடு நின்று விடாமல் தாம் வாழ்ந்த மண்ணை மீண்டும் சேர நினைப்பது. புலம்பெயர்ந்த நாடுகளில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களினால் இழந்த வாழ்வை மீண்டும் கட்டியமைக்க நினைப்பதும் இயல்பானதே. இச்சிந்தனையை கவிஞர் முல்லை ஆதவன் மருதம் அவர்கள் ஓர் இனத்தின் இனஅழிப்பு. புலம்பெயர்வு. மீள்குடியமர்வு என்பன தன்னுடைய நெருப்பு வார்த்தைகளால் ஓர் இனத்தின் குரலாகவே 'யாருமில்லை என்றானபோது' என்னும் கவிதைத் தொகுப்பில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

புலம்பெயர்தல் என்பது ஓடி ஒளிதல் என்று யார் சொன்னது?
ஓடிஒளிதல் என்பது விலகிப்போதல் என்று யார் சொன்னது?
விலகிப்போதல் என்பது காணாமல் போவது என்று யார் சொன்னது?
காணாமல்போதல் என்பது செத்துப் போதல் என்று யார் சொன்னது?
செத்துப்போதல் என்பது தோற்றுப் போதல் என்று யார் சொன்னது?
(ப.50)

என்று புலம்பெயர்தல் என்பது தோற்று ஓடுதல் இல்லை என்பதை தெளிவுபடுத்தியிருக்கின்றார். நேற்றைய வாழ்க்கையை நாளைக்கு வாழ்ந்துவிட வேண்டுமென்று இன்றைக்குத் தயார் செய்யவே புலம்பெயர்தல் நடைபெறுகின்றது என்பதை 'புலம்பெயர்தலுக்குள் திரள்கிறது நேற்றைய வாழ்க்கை' என்று பதிவு செய்திருக்கிறார். காற்றும். மரமும். விலங்கும். பறவையும் மனிதனின் உற்ற நண்பர்களாகவே இருந்து வந்துள்ளன. மாறாக சுவாசிக்கும் காற்றும் ஆனந்தத்தைக் கொடுக்கும் மரமும் அச்சத்தைத் தருமானால் வாழ்வு அந்த மண்ணில் எவ்வளவு அந்நியமாகிவிட்டது என்பதை 'யாருமில்லை என்றான போது' என்னும் கவிதைத் தொகுப்பின் வழியாக உணர முடிகின்றது.

எரித்ததும். சுட்டதும். சிதைத்ததும் விரட்டியதும் எதற்காக என்று யாருக்குமே தெரியாது. சிறுகுழந்தை. இளம்பெண், தாய் முதியவர் என்று எல்லோரையும் கொன்றழித்தபின்பு அவர்களின் இரத்தம் மௌனியாக காட்சியளிக்கின்றது. "இன்றொரு நாட்டினில் இன்றொரு மொழியிடை, இன்றொரு உணர்வுடன், இன்றொரு நாட்டினில், இன்றொரு புகழிடம் இன்றொரு வாழ்தல்" என்ற வரிகளின்வழி புலம்பெயர்தலில் புகழிடம் இல்லை என்பதை உணர முடிகின்றது. வேற்று மொழி, நாடு, உணர்வு, நட்பு, வாழிடம் என்று புதிதுபுதிதாக வாழ்வைத் திசை திருப்புவது நரகம் என்பதாக பதிவு செய்திருக்கின்றார். புது மனிதர்கள், புது கலாச்சாரம். புது மொழிச்சூழல், புது வாழ்க்கைமுறை என்று வெவ்வேறாக வாழ்ந்து காட்டுவது புகழிடம் தேடுவதாகவோ புகலிடம் தேடுபவையாகவோ அமைந்துவிடுவதில்லை இவையெல்லாம் நரகமாகவோ இருகின்றது என்கிறார்; புலம்பெயர்ந்த வாழ்வை கொல்லப்பட்ட பின்பும் வாழ்கிறோம் என்பதாகவே உணரவைக்கின்றார். கொல்லப்பட்ட பின்பு நான் வாழும் வாழ்க்கை எனக்கானது அல்ல. இது கொல்லப்பட்ட எம் இனத்தின் கனவுகளைச் சுமந்து கொண்டு புலம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கை தொடர்கின்றது.

'அடிக்க விரும்பினோம் அடித்தோம்/எரிக்க விரும்பினோம் எரித்தோம்/அழிக்க விரும்பினோம் /அழித்தோம்/கொல்ல விரும்பினோம் கொன்றோம்'/ என்று சொல்லும் போது அடித்தலும் எரித்தலும் அழித்தலும் கொள்ளுதலும் எம் இனத்திற்கு எதிரான இனஅழிப்பை உறுதிபடுத்தியிருக்கிறார்கள் என்று பதிவு செய்துள்ளார். எங்களுக்கெதிரானக் கொடுமைகள் எமக்குத் தெரியாமலேயே நடக்கின்றது என்பதுதான் எங்களுக்கெதிரான கொடுமைகளின் உச்சம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். "யுத்தம் என்பதில் எங்கள் வாழ்க்கை/ யுத்தம் என்பதில் எங்கள் மரணம்/யுத்தம் எங்களை மீண்டும் பார்க்கும் /யுத்தம் தொடுத்தல் அழிகிற வரைக்கும்" (பக்-40) ஆயுதம் சார்ந்த

யுத்தம் என்பது கருத்தியல், அரசியல் சார்ந்து பிரிந்துகிடந்த இனத்தை ஒன்றிணைத்திருக்கிறது என்பதைப் பதிவு செய்திருக்கிறார்.

உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் உயிருக்கு உதவாமல் உயிருக்குப் போராடுவது எப்படி என்று விளக்குவதற்கு அந்நிகழ்வை பயன்படுத்திக் கொள்வது போலவே உதவுகிறோம் என்ற பெயரில் எங்களின் உயிர்கள் துறப்பதற்கும் காரணமாக இருக்கும் போலிகளையும் தம் கவிதையில் இனம் கண்டுள்ளார். எங்களுக்கு உதவுகிறோம். எங்களுக்கு ஆதரவு தருகிறோம், நாங்கள் உங்கள் இனம் என்றும். உங்களுக்காகப் போராடுகிறோம் என்று சொல்ல வேண்டாம் என்று எச்சாரிக்கும் கவிஞர் அவ்வாறு செய்வதினால் இன்னும் வேகமாக அழிக்கப்படுகின்றோம் என்பதையும் பதிவு செய்திருக்கின்றார். பொய்யான அறிவிப்புகளும். வாக்குறுதிகளும் மரணத்திற்கு இன்னும் வேகமாக அழைத்துச் செல்கின்றது என்பதை தம் கவிதையின் வழி உறுதிபடுத்தியிருக்கின்றார்.

**அறிவிப்பு என்ற சொல்லே எங்களுக்கு**
**அருவறுப்பாக இருக்கிறது.**
**அறிவிப்புகள் அறிவிப்புகள் அறிவிப்புகள்**
**கேட்டுக் கேட்டுக் கேட்டுக் கேட்டே**
**எங்கள் தலைமுறை அழிந்துவிட்டது.** *பக்-34*

இனத்தின் பெயராலும் மொழியின் பெயராலும் திட்டமிட்டு அழிக்கப்படுவதை தடுப்பதாகச் செய்யும் அறிவிப்புகள், அழித்தலை இன்னும் துரிதபடுத்தும் என்னும் போக்கே வெற்றியடைந்தது என்பதால், எங்களுக்கு அறிவிப்பும் வாக்குறுதிகளும் தேவையில்லை என்று பதிவு செய்திருக்கின்றது. சுதந்திரம் பெறுவதற்காக உலகில் பல்வேறு இனங்களும் பல்வேறு விதமான இன்னல்களை அனுபவித்திருக்கிறது. இவற்றை வெறும் காற்றல் கரைந்து போகும் வார்த்தைகளாக இல்லாமல் எதிர்காலச் சமுதாயம் எண்ணிப்பார்த்து பாதுகாக்க வேண்டும் என்று உணர்ந்து இலக்கியமாக வடிக்கப்படுவது மிகக்குறைவே. இப்பணியை முல்லை ஆதவன் மருதம் அவர்கள் தனது கவிதைத் தொகுப்பில் ஒர் இனத்தின் வரலாற்றை துல்லியமாக பதிவு செய்திருக்கிறார்.

சிறுநீர் கலந்து குடிநீராகவும், மணலும் தவிடும் கலந்து உணவாகவும், சேற்றையும் கழிவையும் உடையாகவும் எங்களுக்குக் கொடுத்தத் துன்பங்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. உடை களைந்து, சுடுமணலில் நடக்கச் சொல்வதும், விலங்குகளைப்போல் கைகள் பிணைந்து நின்றுகொண்டே உறங்கச் சொல்வதும், எம்பெண்கள் கற்பழிப்பைப் பார்க்கச் சொல்வதும், எம்மக்களின் மரண ஓலத்தை கேட்கச் சொல்வதுமான கொடுமை வேறெங்கும்

நடந்ததில்லை என்றும் தம் கவிதையில் வடித்திருக்கின்றார். ஐம்புலங்களின் வழியாகவும், பார்த்து, ரசித்து, கேட்டு, உணர்ந்து உய்த்து வாழ வேண்டிய எம்புலன்கள் எம்மக்களின் துன்பங்களைப் பார்த்து கேட்டு உணர வேண்டியதாயிருந்தும், இவ்வளவு கொடுமைகளையும் கொடுத்து விட்டு என்ன வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இப்போது மீண்டும் கேட்கிறார்கள் என்ன வேண்டுமென்று/ என்ன வேண்டுமென்று. என்ன கேட்போம் என்ன வேண்டுமென்று முன்பு கேட்டோமோ/அதையேக் கேட்போம். மீண்டும் அதையேக் கேட்போம்/உரக்கக் கேட்போம் /உங்கள் காதுகள் கிழிய நீயே கிழிய உரக்கக் கேட்போம்/ (பக்.24)என்ற வாரிகளும் வார்த்தைகளும் புலம்பெயர்ந்தவர்களின் இழந்த வாழ்வை மீண்டும் கேட்கின்றது. புலம்பெயர்தல் என்பது தோற்றுப்போதல் இல்லை என்பதை இக்கவிதை உறுதிபடுத்தியிருக்கின்றது. கண்ணைக் குத்தி கிழிப்பதும், இறந்து கிடக்கும் எம்மினப் பெண்களின் மீது சிறுநீர் கழிப்பதும், செத்துப்போன எம் தங்கையை வன்புணர்ச்சி செய்வதும், ஓர் அரசின் அடையாளமென்றால் அப்படியான அரசின் அடையாளத்தை உடைத்தெறிந்து அவர்களின் நோக்கத்தை அழித்தொழிப்பது எங்களின் தலையாயக் கடமை என்பதை இவர் கவிதைகள் மூலம் வெளிப்படுகின்றது.

ஆயுதங்கள் கொண்டு அழித்தல், ஆதிகாரத்தைக் கொண்டு ஒழித்தல் இவையெல்லாம் தற்காலிகமானவை. அதற்கெதிராக கருத்தியல், அரசியல் சார்ந்த எண்ணம் வலுப்பெறும்போது துப்பாக்கிகளும் தோட்டாக்களும் துருப்பிடித்துப் போகும். பீரங்கிகளும் குண்டுகளும் செயலிழந்துபோகும் என்று உலக சமுதாயம் ஒப்புக் கொண்டாக வேண்டிய நிகழ்கால நடப்புகளை கவிஞர் 'யாருமில்லை என்றானபோது' என்னும் கவிதைத் தொகுதியில் வெளிப்படுத்தி யிருக்கிறார். ஓர் இனத்தை ஆயுதங்களால் அடக்கி ஒடுக்குவது என்பது அவ்வினத்திற்கு உளவியல் சார்ந்து வலுசேர்ப்பதாகவே அர்த்தப்படும். இவ்வுளவியல் சிந்தனையை கவிஞர் முல்லை ஆதவன் மருதம் அவர்களின் கவிதை ஏற்று நிற்கின்றது.

நாங்கள் அப்படியே இருக்கின்றோம் /நாங்கள் இன்றும் வலுவாக இருக்கின்றோம்/ஒப்புக் கொள்வதற்கு உங்களுக்கு இயலாமை இருக்கும் /ஒப்புக் கொள்ள உங்களுக்கு அவமானமாக இருக்கும்/இனி. யோசிக்க வேண்டியது நீங்கள்/நாங்கள் அப்படியே எப்போதும் இருப்போம்/ என்பது உறுதியாகிவிட்டதால்/(பக்.14). ஓர் இனத்தின் அழிப்பிற்குப் எதிராக உலக சமுதாயம் சிந்திக்க வேண்டிய தருணம் வந்தவிட்டதாகவே தமது கவிதையில் கவிஞர் பதித்திருக்கிறார். ஓர்

இனம் அழித்தொழிக்கபடும்போது மனிதநேயமுள்ள அனைவரும் அதுக்கெதிராக முன்வர வேண்டும். போராட்டங்களிலும். புரட்சியிலும் ஈடுபாடில்லாத ஒத்த இனம் கேளிக்கைகளிலும் சினிமாக்களிலும் காதல் களியாட்டங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது இன அழிப்பை விட மோசமானதாகும்.

சாமியார்களும் நடிகர்களும் போலி அரசியல் தலைவர்களும். தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கிக் கிடக்கும் பொழுது எசமானர்களும் முதலாளிகளும் கொழுக்கத்தான் செய்கிறார்கள். உன் முதலாளிகளும் எசமானர்களும் ஏழைகளை அடிமையாக்க நினைக்கும் பொழுது உன்னோடு சேர்ந்து போராடுவதற்கு ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்பதை மிக அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார். சாமியார்கள் பஜனை செய்து கொண்டிருக்கிறார்கள்/நடிகைகள் காதல் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்/தலைவர்கள் மேடையில் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள்/மக்கள், தொலைக் காட்சிகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள்/முதலாளி நிறுவனங்கள் கொழுத்துக் கொண்டிருக் கிறார்கள்/அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் / விளையாட்டுக்காரரர்கள் இன்னும் இன்னும் எல்லாம்/நல்லபடியாகவே நடந்து கொண்டிருக்கின்றன/எங்களையும் கொன்று கொண்டிருக் கிறார்கள். நாங்களும் செத்துக் கொண்டிருக்கின்றோம்.கேளிக்கையும். சினிமாவும். ஆரசியல் சட்டங்களும் இயல்பாக நடந்து கொண்டிருப்பது போலவே எங்களின் மரணமும் இயல்பாகவே நடந்து கொண்டிருக்கின்றது என்பதை பதிவு செய்திருக்கிறார்.

"எல்லாம் பார்த்தாகிவிட்டது/அடைக்கலம் என்பார் புகலிடம் என்பார்/ சமமாய் வாழலாம் எனப் பல சொல்வார் / கையறா உணவென ஆறுதல் சொல்வார் /புலம்பெயர் அழிவில் புதிதாய் வாழ்தல் துலைப்படுபொழுதில் /உன்றன் நாடு எது எனக் கேட்பார். அந்த ஒற்றைக் கேள்வியால் எம்மைக் கொள்வார்".(பக்-24) என்று புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் அவலங்களை எடுத்துக் காட்டுகின்றார். "தினம்தினம், கணம்கணம் குண்டு சத்தங்களோடு வாழ்ந்து, எந்தநொடி எங்கள் உயிர்போகும் என்று தெரியாமல், வாழ்ந்துவிடலாம் என்று புலம் பெயரும் போது, போரும் ஊரும் விலாசமும் கேட்டு, அகதி என்று முத்திரையிட்டு, இரண்டாம் தர மனிதர்களாக வாழ்வதைக் காட்டிலும் எதிரிகளின் தோட்டாக்கள் எங்களைத் துளைத்துவிடலாம் என்றாகிவிடுகின்றது" என்ற சிந்தனை கவிதையில் இழையோடிக் கிடக்கின்றது. சொந்த நாட்டிலும் வாழ்வில்லை, வந்த நாட்டிலும் வாழ்வில்லை என்றாலும் கூட எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் இன்னும் தீவிரமாக புலம் பெயர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதை இக்கவிதை எடுத்துக்காட்டுகிறது.

சொந்த நாட்டில் அனுபவிக்கும் துன்பங்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர்கொள்ளும் சவால்கள், ஏதிர்காலத்தைக் கட்டமைக்கும் சிக்கல்கள் என்கின்ற மூன்று விதமான அடையாளத்தோடு புலம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கை இருப்பதாக 'யாருமில்லை என்றானபோது' கவிதை பதிவு செய்திருக்கிறது. ஒன்றை அழிப்பதின் வழியாக மற்றொன்று உயிர்ப்பது உலக இயற்கை என்றானபோது அது புலம்பெயர்ந்தவர்களுக்கு முழுவதுமாகப் பொருந்தும் என்பதை கவிஞர் முல்லை ஆதவன் மருதம் அவர்கள் தமது கவிதையின் ஊடாக வெளிப்படுதியிருக்கின்றார்.

வாழிடமும் வசிப்பிடமும் வேறுபட்டவை. வசித்துக் கொண்டிருக்கும் நாங்கள் வாழ்வதற்கான எங்கள் மண்ணைக் கேட்பதற்கு இவ்வளவு மனித உயிர்களை இழக்க வேண்டியிருக்கிறது. உலகெல்லாம் வியாபித்திருக்கிற ஒரு மொழி, உயர்ந்த பண்பாடுடைய செம்மொழி என்றெல்லாம் பேசும்மொழி, அதன்வழி வாழும் மனிதனுக்கு எது சொந்தநாடு என்று கேட்பதற்கு உலக நாடுகளும் தொப்புள் கொடி உறவுகளும் பதில் சொல்லவேண்டும்.

உங்கள் ஊர் எது? உங்கள் நாடு எது? /என்று கேட்கப்படும் போது/எங்கே இருக்கிறது எங்களுக்கான ஊர் /எங்கே இருக்கிறது எங்களுக்கான நாடு/உங்கள் நாடு எது என்று அந்தக் குழந்தை கேட்கும் / எந்தநாடு எங்கள் நாடு என்று சொல்ல? (பக்.69) என்ற கேள்வி ஒவ்வொரு புலம்பெயர்ந்தவர்களின் சிந்தனைகளிலும் ஓடிக் கொண்டிருப்பதாகும். என் பாட்டன் வாழ்ந்த வாழ்க்கை சுதந்திரமானதாகும். என் தந்தை வாழ்ந்த வாழ்க்கை போராட்டம் மிகுந்ததாகும். என் வாழ்க்கை புலம்பெயர்ந்ததாகும். என் குழந்தை வாழ்க்கை எப்படி இருக்கும் என்று சிந்திக்கும் தருணம் புலம்பெயர்ந்தவர்களின் உள்ளத்தில் உருவெடுப்பதை கவிதை பதிவு செய்திருக்கிறது.

> எமது மொழியை மாற்றி எழுதியாகிவிட்டது
> எமது சொந்தங்களை மாற்றி பேசியாகிவிட்டது
> எமது உறவை மாற்றி உணர்ந்தாகிவிட்டது
> எமது இனத்தை மாற்றி உரைத்தாகிவிட்டது
> எமது நாட்டை மாற்றி குறித்தாகிவிட்டது
> இனி மாற்றுவதற்கு ஒன்றுமில்லை என்று சொல்வதற்கு
> யாருமில்லை என்றான பொழுது. (பக்.41)

சொந்த மண்ணில் இருந்து அகதிகளாக புலம் பெயர்ந்து யாருமில்லை என்றான போது மொழி உறவுகள். உரிமைகள், இனம், நாடு, என்று எமக்கான அடையாளங்கள் அனைத்தும் மாற்றி அமைத்தாகிவிட்டது என்பதனால் புலம்பெயர்தலில் இருந்து புணரமைத்தல் என்பது

தேவையான ஒன்றாகவே கருதமுடிகின்றது. ஓர் இனத்தின் ஏக்கத்தை எதிர்கால வாழ்வியலுக்கான தேடலை'யாருமில்லை என்றானபோது' என்னும் கவிதை சுமந்து நிற்கின்றது. கவிதை பொத்தாம் பொதுவான நடப்பு நிகழ்வுகளைப் பதிவு செய்வது என்பதைத் தாண்டி ஓர் இனத்தின் அடையாளமாய் அமைந்து வலி, ஏக்கம், நெருடல், எதிர்கால வாழ்க்கை என்றெல்லாம் உள்ளடக்கியுள்ளது. மீண்டுமொருமுறை இக்கவிதையை வாசிப்போம்

புலம்பெயர்தல் என்பது ஓடி ஒளிதல் என்று யார் சொன்னது?
ஓடி ஒளிதல் என்பது விலகிப்போதல் என்று யார் சொன்னது?
விலகிப்போதல் என்பது காணாமல் போதல் என்று யார் சொன்னது?
காணாமல் போதல் என்பது செத்துப்போதல் என்று யார் சொன்னது?
செத்துப் போதல் என்பது தோற்றுப்போதல் என்று யார் சொன்னது?
புலம்பெயர்தலுக்குள் திரள்கிறது நேற்றைய வாழ்க்கை
நேற்றைய வாழ்க்கையின் நாளைய வாழ்க்கை"

"யாருமில்லை என்றானபோது" என்னும் கவிதைத் தொகுப்பின் வழியாக இன அழிப்புக்கு எதிராக அவ்வினம் உயிர்த்திருத்தலை உணர முடிகின்றது. இக்கவிதை படிக்கும் பொழுதெல்லாம் நெருப்பின் ஆற்றலாய் நீரின் அழுத்தமாய், காற்றின் வேகமாய், மண்ணின் வாசமாய் இருந்து அண்ட வெளியின் அவ்வளவு தூரத்தையும் உள்ளடக்கியுள்ளது. அழித்தலும் - உயிர்த்தலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பதனை முல்லை ஆதவன் மருதம் அவர்கள் தமது கவிதைத் தொகுப்பில் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

**துணை நூல்**

யாருமில்லை என்றானபோது - முல்லை ஆதவன் மருதம், நந்தினி பதிப்பகம், திலகா மறுதோன்றி அச்சகம், 169 ஏ, ஆறாவது சாலை நீட்சி, காந்திபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு.

# மொரிசியசு தீவில் தமிழர் வாழ்வியல்

முனைவர். ஏ.காருண்யாள்
இணைப்பேராசிரியர்
தாவரவியல் துறை,அமெரிக்கன் கல்லூரி
மதுரை, தமிழ்நாடு

## முன்னுரை

தென்மேற்கு இந்தியப் பெருங்கடலில் அமைந்திருக்கும் மொரிசியசு தீவு 'சிரிய இந்தியா' என அழைக்கப்பட்டது. இத்தீவு 2100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது. இதில் ஒன்பது மாவட்டங்கள் உள்ளன. இதன் தலைநகரம் போர்ட் லூயி ஆகும். 1507ம் ஆண்டில் போர்ச்சுக்கீசியரால் கண்டுபிடிக்கப்பட்ட இத்தீவில் முதல் முதலாக டச்சுக்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும் குடியேறினார்கள். இத்தீவை சுமார் 100 ஆண்டுகள் பிரஞ்சுக்காரர்கள் ஆட்சி செய்து, இதன் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டனர். தமிழ்நாட்டிலிருந்து மொரிசியசு தீவிற்கு அடிமைகளாகவும், தோட்டத் தொழிலாளர்களாகவும், கைவினைஞர்களாகவும் புலம் பெயர்ந்து சென்று குடியேறிய தமிழர்கள், கல்வியில் தேர்ச்சி பெற்று, அரசியலிலும், சமுதாயத்திலும், தொழிலிலும் மிகப் பொரிய பொறுப்புகளை வகிக்கிறார்கள். பல மொழிகள், கலாச்சாரங்கள், மக்கள் கூட்டங்கள், மத நம்பிக்கைகள் நிறைந்த மொரிசியசு தீவிற்கு புலம் பெயர்ந்து சென்ற தமிழர்களின் வாழ்வியல் முறைகளைக் குறித்து தொகுத்தளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மொரிசியஸில் தமிழர்களின் குடியேற்றமும், சுதந்திரமும்

டச்சுக்காரர்கள் 17ம் நூற்றாண்டிலும், அதன் பின் 1710ம் ஆண்டு முதல் பிரஞ்சுக்காரர்களும் மொரிசியசை ஆட்சி செய்த போது, தமிழர்கள் அதிகமாக இங்கே குடியேற்றப்பட்டார்கள். 1731ம் ஆண்டிலிருந்து, பிரஞ்சு ஆட்சியின் போது புதுச்சேரியிலிருந்தும், சந்திரநாகூரிலிருந்தும், அதைத் தொடர்ந்து ஆங்கியே ஆட்சியின் போது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, காரைக்கால், புதுச்சேரி ஆகிய பகுதியிலிருந்தும் மொரிசியசு தீவிற்குச் சென்று தமிழர்கள் குடியேரினர். இதைத் தொடர்ந்து பொரியாளர்கள், பொற்கொல்லர்கள், வாணிபர்கள், மேசைத் தொழிலாளர்கள், தகவாலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், பணியாளர்கள், பண்ணையாட்கள் ஆகியோரும் லேபர்

டொநேஸ் ஆளுநராகப் பதவியாற்றிய போது மொரிசியசில் குடியேரினார்கள். வீடுகள், கூட்டுக் குடியிருப்புகள், கோட்டைகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், கப்பல் கட்டுதல், கரும்பு ஆலைப்பணி ஆகியவற்றில் தமிழர்கள் பங்கேற்றனர், இன்றும் போர்ட் லூயி துறைமுகத்தில், தமிழர்கள் கட்டிய கட்டிடங்களைக் காணலாம். பிரஞ்சு ஆதிக்கம் ஒழிந்து 1810ம் ஆண்டில் ஆங்கிலேய ஆதிக்கம் மொரிசியசில் தொடங்கியது. அதன் பின்னும் தமிழர்கள் இங்கே அதிகமாகக் குடியோரினார்கள். ஆனால் இவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டில், பிரஞ்சுக் குடியேற்றப் பகுதியாக, மொரிசியசு தீவு மாரியவுடன், ரியூனியன் பகுதியில் குடியிருந்த இந்தியர்கள் மொரிசியசு தீவிற்கு அழைத்து வரப்பட்டனர். 1860ம் ஆண்டுவரை தமிழர்கள் கரும்புத் தோட்டங்களில் கூடாரம் அமைத்து வாழ்ந்து வந்தார்கள். 1860ம் ஆண்டுக்குப் பின் கொஞ்சம் கொஞ்சமாக நாட்டுப்புரங்களுக்குச் சென்று வாழத்தொடங்கினார்கள். 1901ம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்கள் மொரிசிசு தீவிற்கு சென்று அங்குள்ள தமிழர்கள் அடிமைகளாக நடத்தப்படுவதைக் கண்டு மிகவும் மன வேதனையடைந்து கூஇந்தியா திரும்பினார். பின்னர் மொரிசியஸ் தமிழர்களின் துயரங்களை போக்கவும், உரிமைகளைக் காக்கவும் எண்ணிய அவர் 1907ஆம் ஆண்டு தன் சார்பாக மணிலால் டாக்டர் என்ற வழக்கறிஞரை மொரிசியசிற்கு அனுப்பினார். அங்கு சென்ற இவர் ஒடுக்கப்பட்ட தமிழர்களின் வாழ்வியலை உயர்த்துவதற்காகவும், உரிமைகளை பெறுவதற்கும் அரும்பாடு பட்டார். 1922ஆம் ஆண்டு வரை தமிழ்ப் பணியாளர்களின் உரிமைகள் பரிக்கப்பட்டு தோட்டங்களில் பணி செய்து வந்தனர். 1922ஆம் ஆண்டு சட்டத்தின் படி இவர்களுக்கு சம்பளம் மற்றும் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. 1958ஆம் ஆண்டில் நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு மொரிசியஸ் தமிழர்கள் வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டார்கள். 1968ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் நாள் மொரிசியசுக்கு சுதந்திரம் கிடைத்தது. இதன் பிறகு தமிழர்களின் வாழ்க்கை நிலை உயர்வடைந்தது.

### மொரிசியஸில் வாழும் தமிழர்கள்

இப்போது மொரிசியசில் சுமார் 47,000 தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். நாட்டு மக்கள் தொகையில் தமிழர்கள் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளனர். தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதி மொரிசியசின் தலைநகரான போர்ட்லூயி, வடக்கு மற்றும் தென் மாவட்டங்களாகும். தஞ்சாவூர் வீதி, திருச்சிராப்பள்ளி வீதி என்று போர்ட்லூயி பகுதில் இருக்கும் வீதிகளில் ஒரு காலத்தில் தமிழ் பேசும் மக்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர். இந்தியர்களைத் தவிர கிரியோல்களும், வெள்ளையர்களும் சீனர்களும் ஆப்பிரிக்கர்களும்

மொரிசியசில் வாழ்கின்றனர். இவர்களில் கலப்புத் திருமணங்களின் மூலம் தோன்றியவர்கள் தான் கிரியோல்கள், இவர்கள் பேசும் மொழி கிரியோல் ஆகும்.

**மொரிசியஸில் தமிழ் மொழியின் வளர்ச்சியும், தமிழ்க் கல்வியும்**

தமிழர்கள், மொரிசியசில் குடியேறிய காலங்களில் ஆப்பிரிக்க அடிமைகளோடு வேலை செய்ய வேண்டியதிருந்ததால் அவர்கள் பேசிய மற்றும் தோட்ட உரிமையாளர்களாகிய ஐரோப்பியர்களுக்குப் புரிந்த கிரியோல் மொழியைக் கற்றுத் தேர்ந்தனர். இதனால் தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்தது. முதல் தலைமுறையினர் பெரும்பாலும் தமிழ் மொழியை மட்டுமே முதன்மை மொழியாகப் பயன்படுத்தினர். அதன் பின் தமிழையும், கிரியோல் மொழியையும் பயன்படுத்தினர். இப்போது தமிழர்கள் கிரியோல் மொழியோடு பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்து வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தனர். மொரிசியஸில் தமிழ், தெலுங்கு, மராட்டி, இந்தி, உருது, போக்பூரி, குஜராத்தி, அரபு, சீனம் ஆகிய மொழிகளைப் பேசக்கூடிய மக்களும் வாழ்கிறார்கள். இப்படி பல மொழிகளை பேசும் மக்கள் மத்தியில் தமிழர்கள் வாழ்ந்தாலும், கடைகளில் தமிழ் வியாபாரிகளும், 60 வயதிற்கு மேற்பட்டோரும் தமிழ் மொழியைப் பேசுவதிலே ஆர்வம் காட்டுகிறார்கள்.

விடுதலைக்குப் பின், கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பு தொடங்கி 6ம் வகுப்பு வரை முறையான தமிழ்ப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எல்லா ஆசிரியர்களும், 1979ம் ஆண்டு வரை ஓராண்டு பயிற்சி பெறுகின்றனர். 1979ம் ஆண்டிற்குப் பிறகு ஈராண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் போது மொழி இலக்கியம், முறை கல்விக் கொள்கை ஆகியவை தமிழிலேயே கற்றுத் தரப்படுகிறது. தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்குக் கல்வித் துறையே வேலை தருகின்றது. அனைத்து மொரிசியசு தமிழ் தேர்வுக்குழு என்ற அமைப்பு, தனித்தேர்வு நடத்தி சான்றிதழ்கள் வழங்குகின்றன. தமிழ்மணி என்னும் 3 ஆண்டு பட்டத் தேர்வு சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில் நடத்தப்படுகிறது. மேற்படிப்புக்குத் தமிழகத்தில் பயிலவும் அரசு உதவிகளை வழங்குகிறது. இந்திய அரசின் உதவியால் நிறுவப்பட்ட மகாத்மா காந்தி நிறுவனம், தமிழ் மொழியின் வளர்சிக்கு பொரிதும் உதவுகிறது. இது தமிழ்ப்பாட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளது. மாலைப் பள்ளிக்கூடங்களும் தமிழ் மொழியை ஊக்குவிக்கும் முறையில் நடைபெற்று வருகின்றன. பயிற்று மொழியாக ஆங்கிலம், மேல் வகுப்புகளில் உள்ளது (சு.இராசாராம்). மொரிசியஸ் கல்விக் கழகமும், மொரிசியஸ் வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களும் தமிழ் மொழி கற்பிக்கின்றன.

**சமயம்**

சமயம் மக்களை இணைக்கும் பாலமாக செயல்படுகிறது. மொரிசியசு தீவிலுள்ள 47,000 தமிழர்களில் 9 விழுக்காடு கிரித்துவ சமயத்தினராகவும், 86 வழுக்காடு இந்துக்களாகவும், 5 விழுக்காட்டினர் முஸ்லீம்களாகவும், பிற சமயத்தினராகவும் மற்றும் சமய சார்பற்றவர்களாகவும் இருக்கின்றனர். கிறித்துவர்களில் 40 விழுக்காட்டினர் பிராட்டடசு டெண்டுகளாகவும், 60 விழுக்காட்டினர் கத்தோலிக்கர்களாகவும் இருக்கின்றனர். இந்துக்கள் தங்கள் கோவில்களுக்கும், மத சடங்குகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றனர். இங்கு சுமார் 125 இந்துக் கோவில்கள் இருக்கின்றன. எல்லா ஊர்களிலும், தமிழர்களுக்குக் கோவில் உண்டு, முருகன், சிவன், விநாயகர், மாரியம்மன், கிருஷ்ணா, துர்க்கை, இராமன், வீரமாகாளி அம்மன், முனீஸ்வரன், மதுரைவீரன், கன்னியாகுமாரி முதலிய தெய்வங்களுக்கு உருவச்சிலைகளும் உள்ளன. இங்குள்ள சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோயில் பொரியது. தமிழ் புத்தாண்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பல கலை நிகழ்சிசிகள் நடைபெறுகின்றன. காமன் கூத்து கதையாட்டமாடி, இலாவணிபா, பொங்கல், தீபாவளி, சிவராத்திரி ஆகியவை தமிழ் பண்பாட்டோடு கொண்டாடப்படுகிறது.

**கலைகள்**

கோயில்கள் கலைக் கூடமாகவும், கோட்டையாகவும் சமயம், நாடகம், இசை தொடர்பான விழாக்கள் நடக்கும் இடங்களாகவும் உள்ளன. செவ்வாய்க் கிழமை மாலையில் சைவம் பேசுகிறது என்ற தலைப்பில் அந்த வாரத்தில் வரும் விரதம் பற்றிய உரை இடம் பெறும். இதிலிருந்து தமிழ் மக்கள் தங்களுக்குரிய சமயப் பண்பாட்டுத் தொடர்பான நிகழ்ச்சியை அறிந்து கொள்கிறார்கள். தெய்வீகப் பாடல்கள், கர்நாடகப் பாடல்கள், திரைப்பட பாடல்கள் ஆகியவை ஒலிபரப்பப் படுகின்றன. தொலைக்காட்சியில் அவ்வப்போது தமிழ் திரைப்படம் ஒளி பரப்பப்படுகிறது. இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் பரதக்கலை, இங்கு தமிழர்களின் முக்கிய நாட்கள் அனைத்திலும் தொலைக்காட்சியில் இடம் பெறுகிறது. இக்கலை நிகழ்ச்சிகளை மொரிசியசு நாட்டுப் பெண்களே அளிக்கிறார்கள். ஆண்களும் நடனத்தில் பங்கு பெறுவது குறிப்பிடத்தக்கது. நாடகம் என்ற அமைப்பும் தமிழ்த் திருவிழாக்களில் இடம் பெறுகிறது. தேசிய நாடக விழாவைக் கல்வி அமைச்சு நடத்துகிறது. இந்நாடக விழா எல்லா மொழிகளிலும் நடைபெறும், தமிழ் மொழியிலும் நாடகங்கள் நடைபெற இது நல்ல ஒரு வாய்ப்பாக அமைகிறது.

## மொரிசியசில் கொண்டாடப்படும் பண்டிகைகள்

### தீ மிதித்தல் / பூக்குழி இறங்குதல்

இது தமிழர்களுக்கே உரிய பண்டிகை, திசம்பர் திங்கள் முதல் பிப்பரவாரி திங்கள் வரை நடைபெறுகிறது. பத்து நாட்கள் வேண்டுதலுக்குப் பின் பக்தர்கள் கோயிலுக்குச் சென்று, குழியில் இருக்கும் நெருப்பில் நடந்து சென்று பிறகு பாதங்களைப் பாலில் நனைக்கிறார்கள்.

### கோலிப் பண்டிகை

இந்திய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பண்டிகை இது. ஆண், பெண் குழந்தைகள் ஆகியோர் பல வண்ணப் பொடிகளைத் தூவி இனி நல்ல காலம் பிறக்கும் என்பதை அறிவிக்கிறார்கள்.

### தைப்பூசக் காவடி

தைப்பூசக் காவடித் திருவிழா மிக முக்கிய திருவிழா என்பதால் அரசு பொது விடுமுறை நாளாக அரிவித்திருக்கிறது. இத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. பக்தர்கள் விரதம் இருந்து பின் காவடி எடுக்கிறார்கள். காவடியோடு மாவிளக்கு, பால்குடம் எடுப்போரும் உண்டு. காவடி எடுக்கும் போது பெண்கள் மஞ்சள் ஆடையும் ஆண்கள் காவி நிற ஆடையும், அணிகிறார்கள். பெண்கள், ஆண்கள் வாயில் அலகுகளைக் குத்தியும், சிலர் காலில் ஆணி நிறைந்த காலணிகளை அணிந்தும், ஊர்வலமாகப் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டே செல்கிறார்கள். காவடியில் பூசக் காவடி, சித்திரைக் காவடி, வைகாசிக் காவடி, ஆகியவைகளுடன் அம்மன் கோவில்களில் தீ மிதித்தல், கஞ்சி, கத்திப் பூசை ஆகிய வேண்டுதல்களை தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டோடு கொண்டாடி நிறைவேற்றுகின்றனர்.

### சைனர்களின் புது வருட விழா

இந்த நாளில் கத்தரி, கத்தி போன்றவற்றை மக்கள் உபயோகிப்பதில்லை. மகிழ்ச்சியை அறிவிக்கும் சிவப்பு நிற ஆடைகளை அணிந்து இனிப்புகளைப் பாரிமாறிக் கொண்டு, நடனமாடிக் கொண்டாடுகிறார்கள்.

### மகா சிவராத்திரி

இது ஆயிரம் பக்தர்களின் திருவிழா. இத்திருவிழாவின் போது வெள்ளை உடையணிந்து, பூக்களாலும், கண்ணாடிகளாலும் அலங்காரிக்கப்பட்ட மரத்தாலான காவடிகளை கையில் எடுத்துக் கொண்டு அதிக தூரம் நடந்து, புனித நீர் நிலைகளுக்குச் செல்கிறார்கள். அங்குள்ள புனித நீரை எடுத்து, சிவபெருமானை வணங்கி வழிபடுகிறார்கள். இந்தியாவில், கங்கை நதியில் நடைபெறக்கூடிய திருவிழாவைப் போன்றே இதுவும் நடைபெறுகிறது.

**சுதந்திர தினம்**

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 12ம் தேதி மொரிசியசின் சுதந்திர தினத்தை மிகச் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

**ஊகாதி**

இந்தத் தெலுங்குப் புதுவருடத்தின் போது உணவு வகைகள், கேக் மற்றும் இனிப்பு வகைகள் வழங்கப்பட்டு, கலை நிகழ்ச்சிகளோடு மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள்.

**விநாயகர் சதுர்த்தி**

இது ஆகத்து அல்லது செப்டம்பர்த் திங்களில் கணேஷ் என்ற கடவுளின் பிறந்த நாளை நினைவு கூர்ந்து கொண்டாடப்படும் பண்டிகையாகும். இக்கடவுளின் உருவங்களைச் செய்து, சுமந்து வந்து சூரியன் மறைவதற்கு முன் நீர் நிலைகளில் கரைத்து விழாவை முடிக்கிறார்கள்.

**தீபாவளி**

இப்பண்டிகையை மொரிசியசு மக்கள் அக்டோபர் அல்லது நவம்பர்த் திங்களில் கொண்டாடுகிறார்கள். சிறிய களிமண் விளக்குகளை ஏற்றி, நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையோடு கொண்டாடுகிறார்கள்;

**பீர் லேவால் பயணம்**

செப்டம்பர் மாதம் 9ம் தேதி போர்ட் லூயிக்கு அருகிலுள்ள கருப்பர்களின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் ஜேக்குயிஸ் டிசையர் லேவால் என்பவரது கல்லறைக்குச் சென்று வழிபடுகின்றனர்.

**கிறித்துவப் பண்டிகைகள்**

கிறித்தவர்கள் கிறித்துமசு, ஆங்கிலப் புதுவருடம், ஏசுநாதர் உயிர்த்தெழுந்த திருநாள் ஆகிய பண்டிகைகளை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

**குடும்ப உறவுகளும், பழக்கவழக்கங்களும்**

பலதரப்பட்ட வாழ்வியல் முறைகளைக் கொண்ட மொரிசியசு மக்கள் மத்தியிலே, தமிழ்க் குடும்பங்களில் அன்பின் நெருக்கத்தை உணரலாம். முறைப் பெயர்களைச் சொல்லி அழைப்பதில் தமிழர்கள் தனிப்பெருமை அடைகின்றார்கள். இந்நாட்டு தமிழர்கள் தமிழ் மொழியோடு கிரியோல் மொழியைப் பேசினாலும், உறவுப் பெயர்களைச் சொல்லி அழைப்பதற்கு தமிழ் மொழியை மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

தந்தையின் சகோதரர்களைச் 'சித்தப்பா' என்றும் உடன் பிறந்த மூத்த சகோதரனை 'அண்ணன்' என்றும், தாயின் சகோதரர்களை 'மாமா'

என்பதைச் சற்றே மாற்றி "மாமே" என்றும் கூறி அழைக்கிறார்கள். மேலும் அக்காவின் கணவரை 'அத்தான்' என்றும், கணவரின் தாயாரை அதாவது மாமியாரை 'அத்தை' என்றும், பேரக்குழந்தைகள் தங்களின் பாட்டியை அதாவது அப்பாவின் அம்மாவை 'அப்பாயி' என்றும் அம்மாவின் அம்மாவை 'அம்மாயி' என்றும் அழைக்கிறார்கள்.

இந்தியத் தமிழர்களிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள், மொரிசீயசு வாழ் தமிழர்களிடமும் காணப்படுகிறது. குழந்தை பிறந்து 30 நாள் வரை அந்த வீட்டிற்குச் சென்று வருபவர்கள் தலை முழுகுகின்றனர். பெண் குழந்தைகளுக்கு காது குத்து வைபவம் நடத்துகிறார்கள். திரட்டிச் சடங்கும் செய்கின்றனர். திருமணத்தில் நிச்சயம் செய்தல், மஞ்சள் பூசுதல் (நலுங்கு வைத்தல்) பரிசம் போடுதல், தாரை வார்த்தல், கன்னிகா தானம் செய்து கொடுத்தல், மஞ்சள் கயிற்றில் தாலி கட்டுதல், பாத பூஜை செய்தல், சீர்வரிசை வைத்தல், நாத்தனார் மிஞ்சி அணிவித்தல், மாலை மாற்றல் போன்ற அனைத்துச் சடங்குகளும் தமிழ் மரபின் படியே செய்கின்றனர். மேலும் இறப்பில் கோடி போடுதல், எட்டுப் படைத்தல், கருமாதி, சோறு ஆக்கிபோடுதல், மகன் மொட்டை அடித்தல் ஆகிய சடங்குகளையும் தமிழ் பண்பாட்டின் படியே செய்கிறார்கள்.

**ஆடை அணிகலன்கள்**

மொரிசியசில் வாழும் தமிழர்களின் நாகாரிகம் அவர்களது ஆடை அணிகலன்கள் மூலம் வெளிப்படுகிறது. முக்கிய நிகழ்வுகளின் போது தங்களது அடக்கமான அலங்காரத்தின் மூலம் தமிழரது நாகாரிகம் எவ்வளவு மேம்பட்டது என்பதை இங்கே வாழும் தமிழர்கள் பறைசாற்றுகிறார்கள். அன்றாட வாழ்க்கையில் முழங்கால் வரை கவுன் போடும் இந்நாட்டுப் பெண்கள், கும்மி தட்டும் போது பாதம் வரை பாவாடை அணிவதோடு, மேல் ஜாக்கெட்டும், தாவணியும் அணிகின்றனர். திருவிழாக்களின் போது வளையல், காதில் தோடு, சிமிக்கி, மாட்டல், நெற்றிச்சூட்டி, பின்னலில் குஞ்சம், மூக்குத்தி ஆகியவற்றை அணிந்து தங்களின் அழகை அதிகப்படுத்தி, தமிழ்க் பண்பாட்டினை வெளிப்படுத்துகிறார்கள். மேலும் காகித்தால் ஆன பூவை தலை நிறையப் சூடி மகிழ்கிறார்கள். காலில் கொலுசு அணிகிறார்கள் இதை மொரிசியஸில் "பட்லி" என்று அழைக்கிறார்கள். திருமணத்தின் போது தமிழ்நாட்டின் தமிழ் மரபுப்படி மணப்பெண் பட்டுச்சேலையையும், மாப்பிள்ளை மேல் அங்கி மற்றும் மேற் சட்டையையும் அணிந்து தமிழ் மணமக்கள் போலவே காட்சி யளிக்கிறார்கள்.

**அரசியலில் தமிழர் பங்கு**

அரசின் முக்கியத்துறைகளில் தமிழர்களின் ஆளுமை மிகுந்துள்ளது. பல ஆண்டுகள் பிரதமராக ராம் கூலம், அனிருத் ஜகனாத்

எனும் மொரிசியஸ் இந்தியர்கள் இங்கு பணியாற்றினார். வீராசாமி ரிங்காடு எனும் மொரிசியசு தமிழர், மொரிசியசு ஆளுநராகப் பணியாற்றினார். கதிரேசன் பிள்ளை என்பவர் தொழில்துறை அமைச்சராகப் பணிபுரிந்துள்ளார். கல்வி அமைச்சராக ஆறுமுகம் பரசுராமன் என்பவரும் அ.புட்ப்பரதம் என்பவர் தமிழ்க் கல்வித்துறையில் தலைமை அலுவலராகவும் இருந்துள்ளனர். மொரிசியசு தொழிற்கட்சியின் முதன்மைச் செயலராக விஜய் வெங்கடசாமி என்பார் இருந்தமை குறிப்பிடத்தக்கது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்களாகவும், தலைவர்களாகவும், மாநகரத் தந்தையாகவும் பல தமிழர்கள் பணிபுரிகிறார்கள்.

### தொழில்

தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று. மொரிசியசு நாட்டிற்கு வந்த தமிழர்கள், பிரெஞ்சு மக்களின் ஆட்சியின் போது, வணிகர்களாகவும், தச்சர்களாகவும், கொத்தர்களாகவும், சிப்பாய்களாகவும், கைத்திறன் படைத்த வேலையாட்களாகவும் பணிபுரிந்து வந்தனர். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் பட்டு ஆடை நெய்வதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் மொரிசியசு வாழ் தமிழர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

மொரிசியசு நாடு விடுதலை அடைந்த பின்பு மொரிசியசுல் வாழும் தமிழர்கள் தொழிலில் பொரிதும் வளர்ச்சியடைந்தார்கள். வணிகத்துறையில் இவர்கள் மிகவும் சிறந்து விளங்கினார்கள். எல்லாவிதமான வியாபாரங்களிலும் வளர்ச்சி அடைந்து சீன மக்களோடு போட்டியிடும் அளவிற்கு இன்று வளர்ச்சி அடைந்துள்ளது போற்றத்தக்கது. அரசு பணியில் எல்லாத் துறைகளிலும் தமிழர்கள் மிக உயர்ந்த இடத்தை பிடித்திருக்கிறார்கள். இதில் நான்கு பேர் முதல் நிலை செயலாளர்களாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. மேலும் அரசு மருத்துவர்களாகவும், நீதிபதிகளாகவும், அரசு சட்ட நிபுணர்களாகவும் தமிழர்கள் இன்றும் பணியாற்றிக் கொண்டிருக் கின்றனர். மேலும் இவர்கள் எஸ்டேட் சொந்தக்காரர்களாகவும், கல்வி நிறுவனங்களை நடத்துகிறவர்களாகவும் கல்வி நிறுவனங்களில் மிக உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

### மொரிசியசில் பெண்களின் நிலை

ஒரு நாட்டின் முன்னேற்றம், பெண்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே என்று கூறுவர். மொரிசியஸ் தீவில் பெண்கள் உயர்ந்த நிலையிலிருக்கிறார்கள். தமிழ்ப்பெண்கள் கிராமங்களிலும், நகரங்களிலும் குழுக்களை அமைத்து மிகத்துடிப்புடன் செயல்படுகின்றனர். இவர்கள் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்கள். இதில் தையல், ஓவியம் வரைதல், கைவினைப் பொருட்கள் செய்தல் போன்ற கைத்தொழிலை மக்களுக்கு கற்றுத் தருகின்றனர். முக்கியமாக

விழாக்களை பெண்கள் தாங்களே முன்வந்து நடத்துகிறார்கள். தமிழ்ப் பெண்கள் தங்களது திறமையினால் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அரசு மருத்துவர்களாகவும், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். மொரிசியசில் தமிழ்ப் பெண்கள் மிக துணிச்சலாகச் செயல்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக பல ஆண்டுகளுக்கு முன் கரும்புத்தோட்ட ஆலையில் போராட்டம் நடந்து, தீவிரமடைந்த நிலையில், காவலர்கள் துப்பாக்கி சூடு நடத்தியதில் அஞ்சலி என்ற தமிழ்ப் பெண் சுட்டுக் கொல்லப்பட்டாள். இது குறித்து இவர்களைக் கௌரவிக்கும் வகையில் அவர்களது நினைவாக ஒரு கவிதையை பெருமாள் சுப்ரேயன் என்பவர் தமிழில் எழுதினார். இது ஆங்கில மொழியிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. சட்டத்துறையிலும் பெண்கள் தடம் பதித்திருக்கிறார்கள் இதற்கு எடுத்துக்காட்டாக திருமதி லாரி பிள்ளை அவர்கள் தலைசிறந்த நீதிபதியாக பணிபுரிந்துள்ளார்கள்.

முடிவுரை

தமிழகத்திலிருந்து மொரிசியசு தீவிற்குப் புலம் பெயர்ந்து சென்ற தமிழர்கள், பல மொழிகளைப் பேசும் மக்கள், பலவிதமான பண்பாடுகள், வாழ்வியல் முறைகள் உள்ள மொரிசியசு மக்கள் மத்தியில் வாழ்ந்தாலும், தமிழ்நாட்டின் மொழியையும், வாழ்வியல் முறைகளையும் பேணிக் காப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். கல்வி, தொழில், வாணிபம், அரசியல், அரசுத் துறைகள் ஆகியவற்றில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். தமிழர்களின் மொழியையும் மற்றும் வாழ்வியலையும் இன்னும் உயர்த்த பெற்றோர்களும், கல்வி நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும், ஊடகங்களும் முன்வந்து செயல்பட வேண்டும் என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை.

உதவிய நூல்கள்


1. அன்னை கஸ்தூரி சின்னப்பன், 'மோரிசில் தமிழர்கள்', ஆறாவது உலகத் தமிழ் நாட்டு மலர்', 1987.
2. இரத்தினம், கா.பொ. 'தமிழர் கண்ட உலகளாவிய நிறுவனங்கள், வரலாறு', ஆறாவது உலகத் தமிழ் நாட்டு மலர், 1987.
3. இராசாராம், சு. 'மொரிசியசில் தமிழ், தமிழ்க்கலை', தமிழ் 5, கலை 3,4.
4. சரோஜினி.ஜெ. 'அயல்மாநிலங்களில் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளின் புனைக்கதைகள்', தி பாக்கர், சென்னை 2003.
5. நாகராஜனன். எஸ். 'அயல்நாடுகளில் தமிழர்', சர்மாஸ் ஸானிடோரியம் அச்சகம், புதுக்கோட்டை, 1989.

# தமிழ்நாடு சுற்றுலாவில் அயலகத் தமிழர்கள்

திரு வே. திருநாவுக்கரசு
சுற்றுலாத் துறை
தலைமைச் செயலகம்
சென்னை, சென்னை

*முன்னுரை*

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் தொடரின் மூலம் உலகம் ஒரு குடும்பம் என்னும் சிந்தனையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுப்பினார் கணியன் பூங்குன்றனார். இந்த ஒருலகச் சிந்தனை செயல் வடிவம் எட்டுவதற்குப் பெருமளவு துணை செய்வன சுற்றுலாவாகும். இந்தியாவில் சுற்றுலா நோக்கில் தமிழ்நாடு ஒரு ஈடு இணையற்ற இடத்தைப் பெற்றுள்ளது. சுற்றுலா சார்ந்த செல்வங்கள் தமிழ்நாட்டின் மிகப் பெரிய சொத்தாகும்.

"வட வேங்கடம் தென் குமரி வரை ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரின் நாட்டிற்கு எல்லையாக இருந்தது. ஆனால் இன்று இலங்கை, கனடா, ஜப்பான், சீனா, மலேசியா, சிங்கப்பூர் வரை சென்று உலகம் முழுக்க வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள். இவர்கள் தங்கள் தாய்நாட்டை காணவருவதன் மூலம் அந்நிய செலவாணியை பெருமளவு ஈட்டி தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெருமளவு உதவி செய்து வருகிறார்கள்.

தமிழகத்திற்கு அதிக அளவில் வெளிநாட்டுத் தமிழர்கள் வருவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. அவர்களின் குடும்ப வேர்கள் இங்குதான் உள்ளன. பூர்வீகம் இங்கு உள்ளது. இதுதான் அயல்நாட்டுத் தமிழர்கள் அதிக அளவில் தமிழகத்திற்கு வர முக்கியக் காரணமாகும். குடும்ப விழாக்கள், ஆண்டு விழாக்கள், மருத்துவ சிகிச்சை, சுற்றுலா என பல காரணங்களுக்காக அயல்நாட்டு தமிழர்கள் பெருமளவில் தமிழகத்திற்கு வருகின்றனர். சென்னையிலிருந்து வெளிநாடுகளுக்கு அதிக அளவில் நேரடி விமானங்கள் இயக்கப்படுகின்றன. விமானக் கட்டணம் குறைந்துள்ளதால் அதிக அளவில் தமிழகத்திற்கு வெளிநாட்டு தமிழர்கள் வர ஒரு காரணமாக உள்ளது.

## தமிழகம் சுற்றுலா வளம்

இயற்கை தமிழ்நாட்டிற்கு அரிய பல செல்வங்களை அளித்துள்ளது. தமிழகத்தின் முக்கிய திருத்தலங்கள், அருமையான மலைவாழியிடங்கள், வெள்ளி போன்ற நீர்வீழ்ச்சிகள், தேசியப் பூங்காக்கள், வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயங்கள், அழகிய கடற்கரைகள், யுனஸ்கோ மூலம் அறிவிக்கப்பட்ட உலக பாரம்பரிய சின்னங்களான, தஞ்சைப் பெரிய கோயில், தாராசுரம், கங்கைகொண்டசோழபுரம், மாமல்லபுரம், இராமேஸ்வரம் மற்றும் அருங்காட்சியங்கள், அரண்மனைகள், கோட்டைகள், கிறித்தவ தேவாலயங்கள், மசூதிகள் என எண்ணிலடங்காத சுற்றுலா வளங்களை கொண்டு எத்திசையும் புகழ் மணக்கும் இடமாக தமிழகம் திகழ்கிறது. இந்த வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்குச் சிறப்புச் சுற்றுலாப் பயணம் தமிழக அரசாலும், தனியார் சுற்றுலா ஏற்பாட்டாளர்களாலும் மேற்கொள்ளப்படுகிறது. இது போன்ற செயல்பாடுகளால், உள்நாட்டு மக்கள் மட்டுமின்றி, அயல்நாட்டுத் தமிழர்கள், தமிழகத்திற்கு சுற்றுலா வருவது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

### பயணத்தின் தோற்றம்

மனிதன் நடக்கத் தொடங்கியது முதல் பயணமும் தொடங்கி இருக்க வேண்டும். தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருக்கின்றபடியால் இயற்கையாகவே அயல்நாடுகளுடன் கப்பல் வாணிகம் செய்வதில் தொன்றுதொட்டு தமிழர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

தொல்காப்பியர், வாழ்க்கை பற்றி அடிப்படைக் கருத்துகள் பல கூறியுள்ளார். அதில் ஓதல், தூது, பகை ஆகிய மூன்று காரணங்களுக்காகப் பயணம் நிகழும், என வகைப்படுத்தியுள்ளார். கல்விக்காக, அரசனின் தூதுக்காக போரிடுவதற்காகப் பயணம் மூவகைப்படும் எனக் கூறியுள்ளார்.

பல்வேறு நோக்கங்களுக்காகப் பயணம் மேற்கொள்வது, நாகரிகத்தின் ஒரு அங்கமாக இருந்தது. இன்று பயணத்தைச் சுற்றுலா என்கின்றனர். கோயில் குளங்களுக்குச் சென்று வந்ததைத் தீர்த்த யாத்திரை, சேத்திராடனம் என்று சொல்வார்கள். பல ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதைப் பகரச் சுற்றுலா என்கிறார்கள். தமிழில் செலவு, பயணம், தீர்த்த யாத்திரை, சேத்திராடனம் போன்ற சொற்கள் இருப்பினும் இவை அனைத்தும் உள்ளடக்கிய ஒரு சொல்லாக 'சுற்றுலா' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

### வெளிநாட்டுவாழ் தமிழர் சுற்றுலா

தமிழன் வரலாறு என்பது பயணங்களால், இடப் பெயர்வுகளால் ஆனது. தமிழர்கள் ஒரு ஊரை விட்டு இடம்பெயரும்போது, அவனது நினைவுகளைச் சுமந்து செல்கிறான். புதிய இடத்தில் குடியேறும்போது,

பழைமையுடன் தொடர்பு கொள்ளும் விதத்தில் தன் ஊர்ப் பெயரை அங்கே வைத்து வழிபடுகிறான்.

அயலகத் தமிழர்கள் தாங்கள் வாழும் நாட்டில் இருந்தாலும் அவனுடைய உள்ளம், தனது தாயகத்தின் பூர்விகத்தின் பெருமையிலே இருக்கும். எனக்குத் தமிழக சுற்றுலா பயணம் வந்த மொரிசியஸ் நாட்டைச் சார்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் தனது அடையாளமாக எதை வாங்காமல் மதுரையில் இருந்து ஒரு பிடி மண்ணை கண்ணீரோடு எடுத்து சென்று இது எங்கள் தாய் மண் பூசையில் வைத்து வழிபடுவேன் என்றுசொல்லி விட்டு சென்றபோது எந்த அளவுக்கு தான் பிறந்த மண்ணை நேசிக்கிறார்கள் என்பதை அறிந்து மகிந்தேன்.

இராஜராஜன் சோழன் காலத்தில் தமிழன் கடல் கடந்து வாணிபம் செய்ய சென்றார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைகளாக கடல் கடந்து போனார்கள். விடுதலைக்கு பிறகு கடல் கடந்து எழுத்துக் கூலிகளாகப் போனார்கள். இடைப்பட்ட காலத்தில் அகதிகளாகக்கூட சென்றார்கள். அப்போதெல்லாம் அவன் கங்காரு தன் குட்டியை சுமப்பது போல் தமிழகத்தின் பண்பாடு, கலாச்சாரம் தான் வாழ்ந்த ஊர்களின் பெருமைகளையும் தனது மனதிலே சமந்து கொண்டு சென்றான்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" (கொன்றை வேந்தன் 39) என்ற முதுமொழிக்கு ஏற்பக் கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் செய்தான்.'

சங்ககாலம் தொட்டு இன்றுவரை பொருளீட்டுதல் காரணமாக தன் மனைவியைப் பிரிந்து செல்வதைப் பிரதிபலிக்கும் வண்ணம் இலக்கியத்தில் "பொருட்வயிற் பிரிவு" அன்றே இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பரிணாம வளர்ச்சி காரணமாக இன்று அயல்நாடுகளுக்குப் பெருமளவு செல்கிறார்கள்.

எனது ஆசான் க.ப அறவாணன் அவரகள் செம்மொழி மாநாட்டு கருத்தரங்கில் பேசும்போது, குறிப்பிட்டார்கள்.

சில நூற்றாண்டுகளுக்கு முன், கடல் கடந்து செல்லக்கூடாது என்று கட்டுப்பாடு தமிழர்களிடம் காணப்பட்டது. சில காலத்துக்கு பிறகு, ஆண்கள் மட்டும் கடல் கடந்து செல்லலாம், பெண்கள் செல்லக் கூடாது என்ற நிலை இருந்து வந்தது. 6ம் நூற்றாண்டுக்குப் பிறகே தமிழர்கள் கடல் கடந்து வெளிநாடுகளுக்கு செல்லத் துவங்கினர்.

18ம் நூற்றாண்டில் பினாங்கு, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் தமிழர்கள் குடியேறினர். கூலி வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள், அங்கே பல்வேறு இன்னல்களுககு பிறகு தங்களது உழைப்பால், வெளிநாடுவாழ் தமிழர்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

தமிழகத்துக்கும் இடையிலான உறவு நிலைத்து நீடிக்க, தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டு மையத்தை நிறுவ வேண்டும். அந்த மையம் தமிழர்களது பண்பாட்டுப் பெருமையையும், தொன்மையையும் வெளிநாடுவாழ் தமிழர்களது புதிய தலைமுறைக்குப் போதிக்க வேண்டும் என்றார்.

தமிழ்ப் பண்பாட்டை மையத்தை நிறுவினால் அதிக அளவில் வெளிநாட்டுத் தமிழர்கள் சுற்றுலா மேற்கொள்வார்கள்.

**அயலகத் தமிழர்கள் சுற்றுலா வருகை**

தமிழகத்திற்குச் சுற்றுலா மேற்கொண்ட வெளிநாட்டவர் வரிசையில் மலேசியாவுக்கு 2வது இடம் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு தமிழகத்திற்கு வந்த மலேசிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 இலட்சமாகும். இந்த வரிசையில் முதலிடத்தில் இருப்பது இலங்கையாகும். கிட்டத்தட்ட 5 இலட்சம் இலங்கை தமிழர்கள் கடந்த ஆண்டு தமிழகத்திற்கு வருகை தந்துள்ளனர்

தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளால், சென்ற 2012ம் ஆண்டில், மாநில சுற்றுலா துறை, 34 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இந்தியாவில், அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் மாநிலமாக, மகாராஷ்டிரா உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில், தமிழ்நாடு உள்ளது. சென்ற ஆண்டு, தமிழகத்திற்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை, 18.76 கோடியாக உயர்ந்துள்ளது.

2023-ம் ஆண்டு, தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, 1.50 கோடியாக உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இவைகளில் பெரும்பகுதியினர் அயல்நாட்டுத் தமிழர்களாகவே இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சர்வதேச அளவில், சுற்றுலாத் துறையில் விரைவான வளர்ச்சி கண்டு வரும் நாடுகளின் பட்டியலில், இந்தியா, ஐந்தாவது இடத்தில் உள்ளது.

இந்திய சுற்றுலாத் துறை, ஆண்டுக்கு, 7.7 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வாயிலாக கிடைத்த வருவாய், ரூபாய் மதிப்பின் அடிப்படையில், 20.6 சதவீதம் வளர்ச்சி கண்டு, 8,623 கோடி ரூபாயிலிருந்து, 10,398 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

பெருவுடையார் கோவிலில் சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஆயிரமாவது ஆண்டு விழாவுக்குப் பிறகு இக்கோயிலுக்கு வெளிநாட்டினரின் வருகை அதிகரித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்துக்கு 2013-ல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை முந்தைய ஆண்டைவிட 28 சதம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அதிகமாக இருக்கும். பொங்கல் பண்டிகையின்போது இங்கு வெளிநாட்டினர் வருகை அதிகமாகி வருகின்றனர்.

இந்தியாவின் சுற்றுலா தலங்களில் ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பதி வெங்கடாசலபதி கோவில் முதல் இடத்தை பிடித்து பெருமை சேர்த்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள உலகப்புகழ் பெற்ற காதல் சின்னமான தாஜ்மஹால், மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அஜந்தா-எல்லோரா சிற்பக் குகைகளை எல்லாம் பின்னுக்கு தள்ளி உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் உள்ளம் கவர்ந்த இடமாக திருப்பதி கோயில் திகழ்வதாக தெரிய வந்துள்ளது. என்றால் உலகில் வாழும் தமிழர்கள் இந்தியாவிற்கு பெருமளவில் வருவதாகும்.

சுற்றுலா பயணிகளின் இதயம் கவர்ந்த 2வது மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 18 கோடியே 41 லட்சம் பயணிகள் தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலா தலங்களை கண்டு மகிழ்ந்துள்ளனர் என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது என்றால் அதற்கு காரணம் வெளிநாடு வாழ் தமிழர்கள் அதிகம் எண்ணிக்கையில் வருவதே முக்கிய காரணமாகும்.

## வெளிநாடு வாழ் தமிழர்கள் நலவாரியம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் வெளிநாடுகளில் பணிபுரிவதால் அவர்களின் நலனுக்காகவும், வெளிநாடுகளில் பணிபுரிகின்றபோது அங்கு அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீட்டிடவும், வெளிநாடு வாழ் தமிழர் நலனுக்காகத் தனித்துறையை ஏற்படுத்திட வேண்டும் எனும் கோரிக்கையை ஏற்கும் வகையில், மறுவாழ்வுத்துறை இயக்குநரகத்தை, "அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்களின் நல ஆணையரகம்" எனப் பெயர் மாற்றம் செய்திடவும், அந்த ஆணையரகத்தின்கீழ், "வெளிநாடு வாழ் தமிழர்கள் நலவாரியம்" ஒன்றை ஏற்படுத்திட முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, இந்தியத் தேர்தல்களில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் வாக்களிப்பதற்கு உரிமை வழங்கும் மக்கள் பிரதி நிதித்துவ திருத்தச் சட்டம், 2010 நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசிதழிலும் இதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டது. இப்படியாக வெளிநாட்டு தமிழர்களுக்கு உதவுதன் மூலம் அவர்கள் தாயகத்தை காணவரும் எண்ணிக்கை அதிகமாகும்

**கப்பல் சுற்றுலா**

கடல் வழியாக சுற்றுப் பயண மேற்கொள்வது பல நாடுகளில் பிரபலமடைந்து வருகிறது. இந்த நிலையில் அயல்நாட்டு தமிழர்களுக்கு புதிய சுற்றுலா திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் திட்டமிட்டுள்ளது. கப்பல் மூலம் வெளிநாட்டு சுற்றுலா தலங்களைப் பார்க்க சொகுசு சுற்றுலா திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

சிங்கப்பூர், மாலத்தீவு, மலேசியா போன்ற நகரங்களில் இருந்து கொச்சின், கோவாவிற்கு சுற்றுலாக் கப்பல் பயணம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதுபோல சென்னை துறைமுகத்தில் இருந்து சிங்கப்பூர், மலேசியா, மாலத் தீவிற்கு செல்ல சொகுசு சுற்றுலா கப்பல் பயணம் மேற்கொள்ள பரிசீலித்து வருகிறது. இந்த கப்பல் சுற்றுலா பயணம் தொடங்கும்பட்சத்தில் அயல்நாட்டு பயணிகள், உள்நாட்டு பயணிகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் அயலகத் தமிழர்கள் பெருமளவில் தமிழகம் வர வாய்ப்பு உள்ளது.

**மருத்துவச் சுற்றுலா**

மருத்துவ சுற்றுலாவில் இந்தியாவிலேயே முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளது. தனியார் மருத்துவனைகள் நியாயமான கட்டணத்தில் சிகிச்சை வழங்குவதால் மருத்துவச் சுற்றுலாவில் தமிழகம் சிறந்த இடத்தில் உள்ளது. மருத்துவ சிகிச்சைக்காக வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிகை தமிழகத்திற்கு அதிகரித்து வருவதற்கு காரணம் வெளிநாட்டுவாழ் இந்தியர்கள்தான். இவர்கள் மருத்துவம் முடித்தபின்னர் அருகிலுள்ள சுற்றுலா இடங்களைக் கண்டுகளித்து மருத்துவப் பயனோடு மனமகிழ்வும் பெறுகின்றனர். மருத்துவச் சுற்றுலா பயணிகளை ஈர்த்து தமிழகத்திற்கு அதிக அளவில் தமிழ்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வழி வகுக்கும்.

**வெளிநாடுவாழ் இந்தியர்கள் மாநாடு**

அயல்நாடு வாழ் இந்தியர்களுக்கான மாநாடு ஆண்டுதோறும் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. என்.ஆர்.ஐ.களுக்கான 7-வது மாநாடு முதன் முறையாக தமிழகத்தில் நடத்தப்பட்டது. மூன்று, நான்கு தலைமுறைகளாக வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் நம் நாட்டின் மொழி மற்றும் கலாச்சாரத்தைக் கடைபிடித்து வருகின்றனர். என்றாலும், அவர்கள் தொடர்ந்து மொழி பற்றையும், கலாசாரத்தையும் பின்பற்ற வேண்டும் என்று இங்கு வலியுறுத்தப்பட்டது.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இந்திய பொருளாதார முன்னேற்றத்திற்காக முதலீடுகள் செய்து வருகின்றனர். அவர்கள் நமக்கு

உதவுவது போல, நாம் அவர்களுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியும் என்று ஆராயப்பட வேண்டும்.

இந்த ஆண்டு வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான 3 நாள் மாநாடு டில்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். மாநாட்டில் சிறப்பு விருந்தினராக மலேசிய அமைச்சர் பழனிவேல் கலந்து கொண்டார் என்பது தமிழர்களுக்கே பெருமை அல்லவா.

அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள், அவர்கள் ஈட்டும் வருமானத்தில், இந்தியாவிற்கு அனுப்பும் தொகையை, அதிகளவில் முதலீடு செய்வதைவிட, தங்களது குடும்பத்தினரின் செலவிற்காகவும், சமூக மற்றும் பண்டிகை கால நிகழ்ச்சிகளுக்கும் அதிகம் செலவிடுவதாக, ரிசர்வ் வங்கி, வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது..

### அன்னிய செலாவணி

இந்தியாவிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை, 70 லட்சம் என்ற அளவில், ஆண்டுக்கு, 13 சதவீதம் வளர்ச்சி கண்டு வருகிறது. இதனடிப்படையில், வரும் 2015ம் ஆண்டில், இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, 80 லட்சத்தை தாண்டும் என்பதுடன், அவ்வாண்டில், சுற்றுலாப் பயணிகள் வாயிலாக, 2,600 கோடி டாலர் வருவாய் கிடைக்கும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், இந்திய சுற்றுலாத் துறையின் பங்களிப்பு, 6.6 தவீத அளவிற்கு உள்ளது. சுற்றுலாப் பயணிகள் வாயிலான வருவாய், அதிகரித்து வருவது, நாட்டிற்கு மிகவும் பயனளிப்பதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### முடிவுரை

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பரந்த மனப்பான்மையோடு ஒரு குடையின் கீழ் வலம் வர விரும்பும் தமிழர்கள் உலகின் பல்வேறு இடங்களில் தனது காலடித் தடங்களை பதித்துவிட்டு வந்திருக்கிறார்கள். இப்படி ஊர்விட்டு ஊர் செல்பவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாக எண்ணி வாழ்ந்த தமிழர்கள் சுற்றுலா இயக்கத்தின் முன்னோடிகள் என்றால் அது மிகையில்லை. வெளிநாட்டுத் தமிழர்கள் தனது தாய்நாட்டிற்குச் சுற்றுலா வருகை தருவதன் மூலம் தமிழகச் சுற்றுலா வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டு இருக்கிறது என்பதைக் காணமுடிகின்றது.

# தாய்த் தமிழும் புலம்பெயர்ந்த தமிழரும்

யாழ் தர்மினி பத்மநாதன்
ஆய்வாளர், எழுத்தாளர்
ஊடகவியலாளர், இலங்கை.

**தமிழகம்**

தமிழ் நாடு 130.058 சதுர பரப்பளவைக் கொண்டது மேற்கே கேரளா மாநிலத்துடனும்,வடக்கில் ஆந்திரா பிரதேசதுடனும் கிழக்கு எல்லையாக வங்களா விரி குடாவும் . தெற்கே இந்திய பெருங்கடலும் உள்ளது. யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி கரையோரத்தில் அமைந்துள்ளது. தென்முனையான கன்னியகுமரி வரை தமிழகம் பரவியுள்ளது . தமிழகத்தின் தலை நகராக சென்னை உள்ளது .

தமிழ் நாட்டில் கல்வி, பொருளாதாரம்,தொழில், மருத்துவம், வணிகம் என்று வெளி மாநிலத்தவர்கள் தவிர பல்வேறுபட்ட சமூகம் தமிழ் நாட்டிற்குக் குவிந்த வண்ணமே உள்ளனர். ஆயினும் கடந்த பல வருடங்களாக ஈழத் தமிழர்களும் அகதி நிலையில் தமிழ் நாட்டின் பல்வேறு அகதி முகாம்களுள்ளும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, இவ்வாய்வுக் கட்டுரையானது தாய்த் தமிழைப் பற்றியும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றியும் விரிவாக ஆராய்கிறது.

**தமிழ் மொழி**

தமிழ் மொழி இந்தியா, இலங்கை, மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிகளவிலும் ஐக்கிய அரபு நாடுகள் தென்னாப்பிரிக்க மொரீசியஸ், பீஜி, ரீயூனியன் போன்ற நாடுகளில் சிறிய அளவிலும் தமிழ் பேசப்படுகின்றது. தமிழ் மொழியினை தாயகமாக கொண்டதாக ஈழமும் தமிழகமும் விளங்குகின்றது.

**தமிழ் பேசப்படும் இடங்கள்**

தமிழ் நாட்டிலும், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மலையகம் கொழும்பு போன்ற பகுதிகளில் வாழும் மக்களின் தாய் மொழியாகவும் தமிழ் உள்ளது அத்துடன் கர்நாடகா,

கேரளா, ஆந்திரா போன்ற இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தமிழ் பேசப்படுகின்றது ஆயினும் ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு கலைத் தொனியில் தமிழ் ஒலிக்கின்றது. அவரவர் நடைமுறை வழக்குகள் ஒவ்வொன்றாக உள்ளது .

தமிழ் நாட்டில், தமிழீழத்தில் தமிழரோடு வாழ்ந்து தமிழில் பேசி, தமிழ்ப் பண்பாட்டை கடைப் பிடிப்பவர்கள் தமிழர் ஆவர் தமிழை வேராகக் கொண்ட இத்தகைய இரண்டு இடங்களிலும் இன்று தமிழ் சிதைவுறும் அவலத்தை இரண்டு நாட்டு அரசுமே திட்டமிட்டு செய்து வருகின்றன. தலைமுறைகள் மற்றும் ஓரளவு இரண்டாம் தலைமுறைகள் தமிழ் மொழியை உயிர்ப்புடன் பேணி வந்தாலும், புதிய தலைமுறைகளுக்கு / இளம் தலை முறைகளுக்கு தமிழ் கசப்பாகவும் இருக்கதான் செய்கின்றது. அவர்கள் முதியவர்களின் வார்த்தைகளை மதிப்பதுமில்லை, முதியவர்களின் பண்பாட்டை கடைப்பிடிப்பதுமில்லை, தமிழ்ப் பண்பாடு பற்றி அறியவோ, தொடரவோ விருப்பற்றும், ஆர்வமற்றும் உள்ளனர்.

ஆயினும் ஆங்காங்கே சிலர் தம் மொழி மீதான ஆழமான காதல் காரணமாகவும் பிள்ளைகளின் கலை வெளிப்பாடுக்காகவும் பிள்ளைகளைத் தமிழ் கலை நிகழ்வுகள், இசை, நடனம் , தமிழ் பண்டிகைகள், விழாக்கள், போட்டிகள், இலக்கியப் படைப்புக்கள், இலக்கிய சந்திப்புக்கள், மொழி மற்றும் பண்பாடு சார் நிகழ்வுகள் என்றும் பல்வேறு கலை பண்பாடு சார்ந்த நிகழ்வுகளில் பங்கு பற்ற வைக்கின்றனர். இன்றைய நவீன ஊடகங்களில் யூடியுப் மற்றும் முகநூல்கள் போன்றன இணைய வழி ஊடான தமிழ் மொழி வளர்ச்சியில், மொழிப் பிரசாரத்தில் பெரிதும் பங்கெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. தமது கெட்டித் தனங்கள் ஆளுமைகளை அவற்றின் ஊடாக பதிவேற்றம் செய்து ஏனையவர்களும் பயன் பெறும் வகையில் அவை புரட்சியையும் புரிகின்றன ஆயினும் ...இயந்திர வாழ்வின் விளிம்பில்விக்கித் தவிக்கிறது தமிழ் மற்றும் தமிழ்ப் பண்பாடு.

## மொழிக் கலப்பு

தொலைக்காட்சி நிகழ்வுகள் தற்கால திரைப்படங்கள், சீரியல் நாடகங்கள், மக்களுக்கான அபொழுது போக்கு நிகழ்வுகள், மேடை நாடகங்கள், வானொலி நிகழ்வுகள், ஜன ரஞ்சக நிகழ்வுகள் ஆாசியால் களியாட்டங்கள் என்பன தகவல் தொழில் நுட்ப உலகில் மொழி

தொடக்கம் தொழில் நுட்ப சாதனங்கள் வரை ஆங்கிலம் கலந்த தமிழை பயன்படுத்தி வருகின்றன. மேனாட்டுக் கல்வி மற்றும் அறிவியல் சார் விடயங்கள் ஒருங்கிணைவு அற்ற நிலையில் வேறுபட்ட மொழிகளை உள் வாங்கி உள்ளன. இதனால் பல்வேறு மொழி வழக்குகள் உருவாகக் காரணங்களாகின்றன.

தமிழ் மொழியில் அத்து மீறி நுழைந்த சொற்களாக ..பீரோ [பிரெஞ்ச்] கொய்யா [பிரேசில்] போன்றன உள்ளன. இவை மட்டுமன்றி அன்றாடம் ஒவ்வொரு நிமிடமும் எத்தனையோ ஆயிரம் ஆங்கில வார்த்தைகள் தமிழாகிக் கிடக்கின்றது தமிழ் நாட்டில்.. சோறு ...லஞ்ச் , அரிசி ...ரைஸ் , பொது ....காமன் [கொமன்], பொது அறிவு .. ஜெனரல் நாலேச், உதவி ...ஹெல்ப், இடது பக்கம் ...லெப் சைட் , வலது பக்கம் .. ரைட் சைட் ... இப்படி வாழ்வின் நிமிடங்கள் முழுவதுமே ஆங்கிலம் கலந்த தமிழாக இருப்பது மட்டுமன்றி அதுவே தமிழ் என்று சொல்பவர்களாகவும் பலர் உள்ளமை ஆத்திரத்தையும் தருகின்றது

உதாரணமாக ....சாதாரண ஒரு கடையில் சீனி ஒரு கிலோ, அரிசி ஒரு கிலோ, சவுக்காரம் ஒன்று என்று ஒரு ஈழத் தமிழன் கேட்டால்

" என்ன ...என்ன புரியும் படி சொல்லு ,"... நீ மலையாளியா? உனக்கு தமிழ் தெரியாத? என்பார்கள். இதற்கும் பதிலாக ஒரு கிலோ ஜீனி அல்லது சுகர் ஒரு கிலோ, ஒரு கிலோ ரைஸ், என்று கேட்டால் பொருள் உடன் கிடைத்துவிடும். தென் இந்திய தமிழ் ஊடகங்களில் பணி புரியும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் தொடக்கம் பொழுது போக்கு நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் சிறார்கள் வரை ஆங்கில மோகத்தில் உருளத்தான் செய்கின்றனர். ஆங்கிலம் கதைத்தால்தான் கௌரவம் என்று நினைக்கும் மனநிலையில் உள்ளவர்கள் தமிழ் தெரியாது என்று சொல்வதை பெருமை கொள்வதை விட அது வெட்கி நாணிக் கொள்ளும் நிலைஎன்பதையும் மறக்க கூடாது.

நிறைய மக்களிடம் பழமையான, மிகவும், தத்துவார்த்தமான எளிமையான, அர்த்தமுள்ள தமிழ்ப் பெயர்களையும் தமிழகத்தில் காணலாம் .

உதாரணமாக ...தமிழரசி, தமிழிச்சி , இலக்கியா, ....... ஆனால், இலங்கையில் பலரது பெயர்களில் வடமொழிக் கலப்புக்கள் உள்ளதாக

குறிப்பிடப் படுகின்றது. உதாரணமாக தர்மினி, சுரேஷ், சுமிதா .... ஆயினும்புலம் பெயர்ந்த தமிழர்களும் நாகரீகமான வெள்ளைக் கலப்பு பெயர்களை பிள்ளைகளுக்கு சூட்டி உள்ளனர். உதாரணம். லியானி, நீக்கிறா போன்றனவும் ஆயினும் தமிழ் அமைப்புக்கள், கடைகள், கலாசார நிறுவனங்கள் உணவு விடுதிகள். வணிக நிறுவனங்கள் வீதிகள் என்பன தமிழ் பெயர்களை சூடிக் கொள்கின்றன. இதே போன்று ஈழத்திலும் ஆங்காங்கே ஆங்கிலக் கலப்புடைய தமிழ்ச சொற்கள் பயன் பாட்டில் உள்ளன. உதாரணமாக ...பிரண்ட்ஸ், சைக்கிள், பஸ், அயன் போக்ஸ்...... போன்றன.

## தமிழின் ஆவல ஆயுள்

"தமிழ் என்றதும் அருவருக்கும், வெறுப்புக் கொள்ளும், முகம் சுளிக்கும் பலரை தமிழ் நாட்டின் ஒவ்வொரு முடக்கிலும், ஒவ்வொரு செக்கனுக்கும், ஒவ்வொரு கல்லூரி, வாயில்களிலும் சுற்றுலா ,தளங்களிலும், விமான நிலையங்களிலும் .......என்று காணலாம் .

"நான் சென்னை, எனக்குத் தமிழ் தெரியாது " என்கின்றாள் ஒரு பல்கலைக்கழக மாணவி. இந்தியா வரும் போது தமிழ் இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை. நான் எங்கு போனாலும் சரி, என் பேச்சு மொழி பலரால் புரிந்து கொள்ளப்படுவதில்லை " நீ மலையாளமா ? " நீ மலேசியனா? ...உனக்கு தமிழ் தெரியாதா? ... ஓ நீ சிங்களத் தமிழா? ஏய் புரியும் படி ஒழுங்கா தமிழில் பேசு ... அவங்கள் சிங்களத் தமிழ் அது தான் அப்பிடி பேசுறாங்கள், நாங்க பேசுறத பார்த்து கத்துக்கோ .... அப்படித்தான் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் எனக்குக் கிடைத்த அனுபவம் .

இங்கு குறிப்பிட வருவது .... தமிழ் நாட்டுத் தமிழ் வேறு ஈழத் தமிழ் வேறு என்று தான் பலர் எண்ணிக் கொள்கின்றனர். ஈழத் தமிழை சிங்களத் தமிழ் என்றும் புரிந்து கொள்ளும் நிலையில் தமிழகத் தமிழர்கள் உள்ளனர். தமிழ் என்பது ஒன்று தான் அதன் பேச்சு, மற்றும் உரையாடல்களில் மாற்றம் உண்டு என்பதை புரியும் வகையில் அவர்களுக்கு அனுபவம்போதாமை உள்ளது என்பது வருந்தத் தக்கது ஆகும். ஆயினும் தமிழகம் எங்கும் நகர்ப்புறங்களை மட்டுமன்றி கிராமங்களையும் ஆகிரமித்து நிற்பவை தமிழ் மொழி மூலமான பத்திரிக்கை, விளம்பரங்கள், சினிமா விளம்பரங்கள், செய்தி

விளம்பரங்கள், அரசியல் விளம்பரங்களுமே ஆகும். இவை அன்றாடம் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பான விற்பனை உத்தியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அரசியல் சார்ந்த, கோவில் சார்ந்த குடும்பம் சார்ந்த விழாக்கள், நிகழ்வுகளில் செய்திகளை அறிவிப்பு செய்ய டிஜிட்டல் விளம்பரங்கள் தமிழில் பயன் படுத்தப்படுகின்றன. வீதி ஓரத்தின் பல சுவர்களும் இத்தகைய வியாபார, விளம்பரத் தாக்கத்தினால் அடியுண்டு போயுள்ளன. இவை யாவும் தமிழ் மீதான பற்றுக் கொண்டமையினால் தான் தமிழில் உள்ளது என்று முடிவு செய்யலாமா?. ஆயினும் தமிழ் மக்களின், ஒடுக்கப் ட்ட மக்களின் மொழியாக தமிழ் இருப்பதால், அவர்களுக்கு தெரிந்த மொழி தமிழ் என்பதால் தமிழைத்தான் அவர்கள் பயன் படுத்தியாக வேண்டும் . இந்த "வீதி " விளம்பரத் தமிழுக்கும், இங்கு மக்களால் பயன் படுத்தப் படும் பேச்சு தமிழுக்கும், பத்திரிக்கை தமிழுக்கும், தொலைக்காட்சி/ வானொலித் தமிழுக்கும், புத்தகத் தமிழுக்கும், என்று.....ஒவ்வொரு தமிழும் ஒவ்வொரு விதமாக இருக்கக் காணலாம். உதாரணமாக.. தினத்தந்தி பத்திரிகை ... ஒடுக்கப் பட்ட மக்களின் வாசிப்பு திறனுக்கு ஏற்ப அன்றாட பேச்சு மொழிகளைக் கொண்டு இலகு தமிழில் அமைந்தள்ளது.

அதே நேரம் தினமணி பத்திரிகை கல்விப் புலம் சார்ந்து இலக்கண இலக்கிய அமைவுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. இவ்வாறுதான் தமிழ் பேராசிரியர்களும் சரி, தமிழ் ஆய்வு மாணவர்களும் சரி, படைப்பாளர்களும் சரி படைப்புக்களிலும், எழுத்துக்களிலும் தமிழை சிறந்த முறையில் , புதிய புதிய தமிழ் சொற்களுடன் எழுதி வந்தாலும் ... அவர்களின் பேச்சு மொழியுடன் அதிகம் முன் நிற்பது ஆங்கிலமாக உள்ளது. தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் பல்கலைக்கழக நிகழ்வுகள், விசேட கருத்தரங்க அமர்வுகள் என்று வரும் போதும் ஆங்கிலத்தில், உரையாற்றுவதும், கலந்துரையாடுவதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது .

இவ்வருட [2014 ] சென்னை புத்தகத் திருவிழாவில் 750 க்கும் மேற்பட்ட பதிப்பகங்கள பங்கு பெற்று இருந்தன. இங்கு அதிகமானவை கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் மொழி பெயர்ப்புக்கள், வரலாறுகள், என பலதரப்பட்டவையும் தமிழ் மொழி மூலமான வையாகவே இருந்தன. அவற்றில் எழுத்தாளர்கள்,

படைப்பாளிகள், கவிஞர்கள், ஆய்வாளர்கள் என்று கலை இலக்கிய தமிழ் துறை சார்ந்த பலருமே இத்தகைய புத்தகங்களைக் கொள்வனவு செய்தார்கள். அத்துடன் புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்தும் பல தமிழ்ப்படைப்பாளிகள் புத்தகங்களைக் கொள்வனவு செய்ய வந்திருந்தனர். ஆனால்குட்டி சுட்டிகள் தொடக்கம் கல்லூரி மணாவர்கள் வரை அதிகம் ஆங்கில புத்தகங்களைக் கொள்வனவு செய்வதில் மும்மரமாக நின்றனர் ....

அதில் லூசியா [வயது 30 ] என்ற பெண் குறிப்பிடும் போது ...["மகளுக்கான ஆங்கில புத்தகங்கள் அவரிடம் இருந்தது] "பொண்ணு [central board school education]சிஸ்டத்தில படிக்கிறாங்க அது சென்ரல் கவர்மெண்ட் சிஸ்டம் . இப்பவே இங்கிலீஷ்ல படிச்சிட்டா பின்னாடி ஈசியாகிடுமுங்க , சின்ன வயசிலேயே பெரிய ஸ்டடிஸ் எல்லாம் படிச்சிடுவாங்க ... கொஞ்சம் டப் தா அப்புறமா சரியாகிடும்" என்றார். அந்த தாயின் மகள் இப்படி சொன்னாளா?. பிள்ளை தனது அறிவுக்கு ஏற்ப படிப்பதா?. பெற்றோரின் அழுத்தத்துக்கு ஏற்ப படிப்பதா?. என சிந்திக்க முடியவில்லை .

திருமதி சிவநந்தினிஸ்ரீதர் குறிப்பிடும்போது இப்போது உள்ள பிள்ளைகள் அந்நிய மொழியில் ஒன்றிப் போய் அந்நியகாலசாரத்தில் அகப்பட்ட, அந்நியர்களாகவே வாழத் தலைப்படுகின்றனர் என்பது தான் இந்த மொழி மீதான அவலத்தின் ஒட்டு மொத்த நிலை ஆகும்

"அடுத்து வருகின்ற தலைமுறை கொஞ்சமும் தமிழ் அடையாளமின்றி உளவியல் ரீதியாக ஆங்கில அடிமைகளாய் வாழ்வதற்கான அனைத்துக் கூறுகளையும் உள்வாங்கி தயாராகிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டுக் கல்விக்கூடங்களில் தமிழ் தனக்கான இருப்பை இழந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன. நீதிமன்றங்களில் தமிழ் தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கிறது. கோவில்களுக்குள் நுழையமுடியாமல் தீட்டுப்பட்டு வாசலில் அணிவகுக்கும் மிதியடிகளுக்குக் கீழே தமிழ் நசுங்கிக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டுத் திரைப்படங்களெல்லாம் தமிழ் பேசி வரும் சூழலில், தமிழ்நாட்டுத் திரைப்படங்கள் இன்னமும் ஆங்கிலம்பேசிக் கொண்டிருக்கின்றன." என்கின்றார் சிவகுமார். கீற்று இணைய தளம் தமிழும், தமிழுடன் இணைந்து ஆங்கிலமும் முட்டி மோதிக் கொண்டு இருக்கும் இந்த நிலையில் " ஜூன் [2013] மாதத்தில் இருந்து தமிழக

அரசின் 3200 தொடக்கப் பள்ளிகள், மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் முதல் வகுப்பிலும், ஆங்கில மொழியை கொண்ட வகுப்புக்கள் தொடங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. இதன்படி இதுவரை அரசு பள்ளிகளில் தமிழில் நடாத்தப்பட்டு வந்த அறிவியல், சமூகவியல் பாடங்கள் ஆங்கில மொழியில் நடாத்தப் படும். "என்ற அரசின் இந்த அறிவிப்பு பல பகுதிகளிலும் கடும் எதிர்ப்புக்களை ஏற்படுத்தியது. தமிழ்மொழி, காரண காரியம் இன்றி அழிந்து கொண்டும் அழிக்கப்பட்டுக் கொண்டும் போகும் நிலையில் உள்ளது

தமிழின், தமிழ் நாட்டின் சிறப்பை பறை சாற்றும் வகையில் மதுரையில் நூறு கூடி ரூபா செலவில் மிகப் பிரமாண்டமாக "தமிழ்த் தாய்" சிலை, அமைக்கப்படும்" என்கிறார் இன்றைய தமிழக முதல்வர். மரினா கடற்கரையில் வள்ளுவர் சிலை, பாரதி சிலை, ஔவையார் சிலை, கண்ணகி சிலை என்று சிலைகளைக் காணலாம். ஆனால் அவை காகங்களின் எச்சங்களால் நிரப்பப்பட்டு உள்ளன. கன்னிய குமரியில் 1330 அடி உயரத்தில், 1330 திருக்குறள்கள் நிறைத்து வள்ளுவர் சிலை உள்ளது . ஆனால் அந்த சிலை கூட உப்புப் படிந்து போய் பராமரிப்பு இன்றி காணப்படுவதாக செய்திகள் வெளியாகின . கோவையில் செம்மொழி மாநாடு நடாத்தப்பட்டது. இவை எல்லாம் உண்மையாக தமிழுக்கு செய்யும் பணிகளா?. தமது அரசியல் இலாபங்கள், புகழ்களுக்காக செய்யும் வித்தைகளா?.

தமிழ் மாணவர்களின் கல்வி, வளர்ச்சியில் தமிழ் மொழி வளர்ச்சியில், பங்கெடுப்பதுடன் தமிழ் கலை கலாசார பண்பாட்டு நிகழ்வுகளுக்கு , படைப்பாளிகள், கலைஞர்களுக்கு, அவர்களின் தொடர் . பணிகளுக்கு ஊக்குவிப்பையும், உழைப்பையும், பயிற்சிகளையும் கொடுக்கமுன் வரவேண்டும். ஆங்கிலக் கலப்பற்ற தமிழை உயிர் பெற வைப்பதுடன் தமிழ் மொழிக் கல்விக்கு தமிழ் நாட்டில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் .

எங்கள்பிள்ளைகளும் எமது சமுகத்தின் வேரினை அறிந்து எமது தாயக மண் பயனுற தாய் மொழி தமிழை பிழையின்றி இன உணர்வோடு சமூகப் பொறுப்போடு கற்று தமிழன் என்ற இன, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களைத் தக்க வைப்பதோடு உலகுக்கு அடையாளப்படுத்தவேண்டும். தமிழகம், ஈழம், என்ற வேறுபாடு களையும் புலம்பெயர்ந்தவர்கள் என்ற பிரிவினைகளுக்கும்

அப்பால் தமிழ் கூறும் நல்லுலகம் தமிழோடு தமிழால் பிணைக்கப்பட வேண்டும்.

துணை நூல்.


1. விக்கிபீடியா.
2. நம் தோழி, [ஜூன், 2013. பக்கம் 16, 17].
3. இந்தியன் ரிப்போர்ட்டர், [ஜூன், 2013].
4. தினமலர், [26.05.2013].
5. சிவகுமார் கட்டுரை, [கீற்று இணைய தளம்].
7. தினமணி, [ 12.06.2013, பக்கம்.8].
8. தமிழ்க்காரன் இணையம்.
   நேர்காணல் 1. சென்னை வாசி, கேரளா வாசி 2. லூசியா

# கேரளத் தமிழரும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கமும்

முனைவர் கு. சிதம்பரம்
உதவிப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழர் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை, தமிழ்நாடு

## முன்னுரை

இன்று உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளவும் தங்களின் மொழி,பண்பாடு, கலை இலக்கியங்களை பேணிப் போற்றவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.தாங்கள் செல்லும் இடமெல்லாம் தமிழர்கள் முதலில் தம் மக்களுக்கென்று ஒரு தமிழ் அமைப்பினை உருவாக்குகின்ரனர். பின்னர் அவ்வமைப்பின் மூலம் மக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியினைச் செய்கின்றனர். இன்று தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் தமிழ்ச் சங்கங்களும் தமிழ் அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன.இவ்வமைப்புகள் இன்று உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டும் வருகின்றனர். இவ்வாய்வுக் கட்டுரையானது கேரள வாழ்த் தமிழர்களால் தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் வரலாறு இலக்கியப் பணிகள், சமூகப் பணிகள் குறித்து ஆய்வதாக அமைகின்றது.

## கேரளத் தமிழர்

கேரள மாநில வாழ்த் தமிழர்களை வரலாற்றுக் காலம் முதல் வாழ்ந்துவரும் தமிழர்கள், தற்காலத்தில் தொழில் நிமித்தமாக ஏலம்பெயர்ந்தத் தமிழர்கள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இவர்கள் இன்று கேரள மாநிலத்தில் உடல் உழைப்புத் தொழிலாளர்களாகவும் திறன்சார் தொழிலாளர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர். அதாவது, அரசு மற்றும் அரசு சாரா பணியாளர் களாகவும், வர்த்தகக் தலங்களை நடத்துபவர்களாகவும்

சுயத் தொழிலில் ஈடுபடுபவர்களாகவும் கைவினைக் கலைஞர்களாகவும் இருந்து வருகின்றனர். கேரள மாநிலத்தில் மலையாளம் பேசும் பெரும்பான்மையினத்தவரை அடுத்து மக்கள் தொகையில் அதிகம் கொண்ட இனத்தவர் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வசிக்கும் மாவட்டம் தோறும் தமிழ் அமைப்புகளை ஏற்படுத்தி தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, கலை, உரிமைகள் ஆகியவற்றைப் பேணி பாதுகாத்து வருகின்றனர்.

## தோற்றமும் வளர்ச்சியும்

கேரளாவின் தலைநகரம் திருவனந்தபுரத்தில் வாழும் தமிழ் மொழி சிறுபாண்மையினரை ஒருங்கிணைக்கும் நோக்கோடு திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் 1963 முறையாக பதிவு செய்யப்பட்டு, இன்றுவரை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

சங்கத்திற்கென்று சொந்த கட்டிடமும் உள்ளது. பி.ஆர்.எஸ் என்று அழைக்கப்படும் திரு இரத்தினசாமி அவர்களால் சங்கத்திற்கு இலவசமாக மனை வழங்கப்பட்டு, சங்கக் கட்டிடம் தமிழ் ஆர்வளர்களிட மிருந்தும், கொடை வள்ளல்களிடமிருந்தும் பெற்ற நிதியினைக் கொண்டு சங்கத்தின் தரைத்தளம் கட்டப்பட்டுள்ளது. திரு எஸ் சந்திரன் அவர்களால் சங்கத்தின் முதல் மாடியினை திரு.சுப்பிரமணியம் நினைவு நூலகமாக கட்டித்தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சங்க அணிகளும் இலக்கியப் பணிகளும்

சங்கம் இளைஞர் அணி சிறுவர் அணி, மகளிர் அணி என மூன்று அணிகளைக் கொண்டு சங்கத்தின் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## மாதக்கவியரங்கம்

தமிழ்ச் சங்க இளைஞர் அணி 1993 ஜனவரி முதல் ஒவ்வொறு மாத இறுதி ஞாயிறன்று கவியரங்கம் நடத்தி வருகின்றனர். கவியரங்கில் சங்க கவிஞர்களின் கவிதைளும், பிற புகழ்ப் பெற்ற கவிஞர்களின் கவிதைகளும் மொழிபெயர்ப்பு கவிதைகளும் வாசிக்கப்பட்டு அக்கவிதைகள் குறித்து கலந்துரையாடலும் விமர்சனமும் முன் வைக்கப்படுகிறது. கவிதையரங்கிற்கு தலைமையேற்று நடத்திக் கொடுக்க புகழ்பெற்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள் அழைக்கப் படுகின்றனர். அவ்வகையில் திருவனந்தபுர தமிழ்ச் சங்கத்தின் முதல் கவியரங்கிற்கு தலைமையேற்று நடத்திக் கொடுத்தவர், பிரபல

எழுத்தாளர் திரு தோப்பில் முஹம்மது மீரான் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாதக்கதைவேளை

கதைவேளை நிகழ்ச்சியினை சங்க இளைஞரணி முன்னின்று நடத்தி வருகிறது. மாதந்தோரும் நடக்கும் கதைவேளை நிகழ்ச்சியில் தமிழ் நாவல்களும் சிறுகதைகளும் பிற மொழிபெயர்ப்பு படைப்புகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. படைப்புகள் வாசிக்கப்பட்டு, விமர்சனமும் கலந்துரையாடலும் முன் வைக்கப்படுகிறது. இதேபோல் மாதக்கருத்தரங்கங்களும் மாதத் தமிழிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

### மகளிர் அணி

மாதந்தோறும் சங்க மகளிரணி கூட்டங்கள் கூட்டப்பட்டு வருகின்றது. தொடர்ந்து எல்லா மாதங்களிலும் முதல் வியாழக்கிழமை மகளிருக்கான பல்வேறுவகையான கைவேலைத் திறன்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. மேலும் மகளிரை மையப்படுத்திய கருத்தரங்கமும் நடத்தப்பட்டு வருகின்றது. இதுதவிர மகளிரின் திறன்களை வெளிக்கொண்டுவர பேச்சுப் போட்டி, கட்டிரைப் போட்டி, சமையல் போட்டி, வினாடி வினா, ஓவியப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்படுகின்றன. இலவச மருத்துவ முகாம், இரத்ததான முகாம் ஆகிய முகாம்களையும் சங்க மகளிரணி சீறும்சிறப்புமாக நடத்தி வருகிறது.

### கேரளத் தமிழ்

'கேரளத் தமிழ்' என்ற சங்கச் செய்தி மாத இதழை 1979 முதல் திருவனந்தபுரம் தமிழ்ச் சக்கம் வெளியிட்டுவருகிறது. இது 16 பக்கங்களைக் கொண்டது. தலைவர் அரங்கம், செயலாளர் அரங்கம் ஆகிய தலையங்கப் பக்கங்களையும். கதை, கவிதை, கட்டுரை, சங்கச் செய்திகள்,விளம்பரங்கள் ஆகியவற்றிற்கும் முறையாக பக்கங்கள் ஒதுக்கப்பட்டு 'கேரளத் தமிழ்' மிகச் சிறப்பாக வெளிவந்துக் கொண்டிருக்கின்றது. இதழில் இடம்பறும் விளம்பரங்களில் இருந்து கிடைக்கும் நிதி, இவ்விதம் தொடர்ந்து வெளிவருவதற்கு உதவியாக உள்ளது.

### நிலாவிருந்து

இலக்கியப் பணி சமூகப் பணிகளுக்கிடையை உறுப்பினர்கள் ஒன்றுசேருவதற்கும், மாலைப் பொழுதை குடும்பத்துடன் இன்னிசை

கேட்டு இரவு உணவை உண்டு மகிழவும் நிலாவிருந்து வருடந்தோரும் ஏற்பாடு செய்யப்படுகிறது. நிலா விருந்திற்கு அரசியல் வாதிகள்,அரசு உயர் அதிகாரிகள்,புகழ்பெற்ற எழுத்தாளர்கள் ஆகியோரை சிறிப்பு விருந்தினராக அழைப்பதை சங்கம் வழக்கமாகக் கொண்டுள்ளது. நிலாவிருந்தில் கலந்துக்கொண்ட உறுப்பினர்களில் மூன்று அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறையில் சிறப்பு பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு கௌரவிக்கப்படுகின்றனர். விருந்தில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்குவது சங்கத்தின் மரபாக இருந்துவருகிறது.

நிலாவிருந்து பற்றி கேரளத் தமிழ் மாத இதழில் தில்லை நாயகம் எழுதிய கவிதை ஒன்று:

'சுவைமிகு பண்டங்கள் சேர்ந்த விருந்தில்
செவிக்கு விருந்தாய் இசையும் அவையோர்க்கு
அன்புடன் தந்த பரிசெலாம் கண்ணுக்கு
இன்ப விருந்தே எனக்கு
சங்க நிலாவிருந் தென்றால் தனியின்பம்
பொங்கும் மகிழ்ச்சியில் பூரிப்பு இங்குமே
கூடியான் உண்ண நிலாவே கொதிக்கின்றேன்
நாடியோர் நாற்பார்த்து வா'.

### சங்க நூலகம்

முதல் தளத்தில் சங்க நூலகம் செயல்பட்டு வருகிறது. நூலகத்தில் கவிதை, மொழிபெயர்ப்பு, நாவல், உரைநடை, வாரப் பத்திரிக்கைகள் என்று அழகாகத் தொகுத்து தனித்தனி அடுக்குகளில் வைக்கப்பட்டுள்ளது. மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நூலகத்தில் சந்தாதாரர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலக்கியம் (ம) பண்பாட்டு விழாக்கள்:

### பாரதி விழா

தொன்றுதொட்டு இலக்கியம் (ம) பண்பாட்டு விழாக்கள் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

இலக்கிய விழாவாக பாரதி விழா வெகுசிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவிற்குத் தலைமைச் சொற்பொழிவு ஆற்றுவதற்கும், சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்கும் அரசியல் தலைவர்களையும், கல்வியாளர்களையும், படைப்பாளர்களையும் அழைத்து கௌரவப்படுத்தி வருகிறது சங்கம்.

குறிப்பாக, 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரதி விழாவில் அன்றைய முதல்வர் ஏ.கே. ஆண்டனி அவர்கள் சிறப்புரை ஆற்றியது வரலாற்று சிறப்புமிக்க ஒன்று. ஏ.கே ஆண்டனி அவர்கள் தமிழ்மொழி சிறுபான்மையினருக்காக பல்வேறு நலதிட்டங்களையும், இட ஒதுக்கீடுகளையும் இன்முகத்தோடு நல்கியவர் என்பது பாராட்டத்தக்கது. (மேலும் 1996-97 ஆம் ஆண்டு கேரள அரசு இச் சங்கத்திற்கு ரூ.5000/- மானியம் அளித்தது)

பாரதிவிழாவில் மாணவ/மாணவியற்களுக்கான பாரதியின் பாடல் சொல்லுதல், பேச்சுப்போட்டி ஆகியவை நடைபெறுகின்றன. போட்டியில் பெற்றிபெற்ற மாணவ/மாணவியற்குப் பரிசு வழங்கி ஊக்குவிக்கின்றனர். 1995ஆம் ஆண்டு பாரதி விழாவில் தலைமைச் சொற்பொழிவாற்றிய திருவனந்தபுரம் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தமை மாணவர்களுக்கு மேலும்ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### பொங்கல் விழா

ஆண்டுதோறும் பொங்கலன்று சங்க மகளிர் அணியினர், வளாகத்தில் பொங்கலிட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டு வருவது சங்க மரபாக உள்ளது. பொங்கல் நாளன்று அகத்தை மகிழ்விக்கும் பொறுட்டு பொங்கல் விழா கவியரங்கமாக நடத்தப்படுகிறது.

அவ்வப்போது சங்கம் மத்திய/மாநில அரசின் இலக்கிய விருதுபெறும் படைப்பாளர்களைக் கௌரவிக்கும் வகையில் பாராட்டுவிழாவும் நடத்தப்பட்டு வருவது திருவனந்தபுரத் தமிழ்ச் சங்கத்தின் பண்பாடாக உள்ளது.

### சமூகப் பணிகள்

கேரளாவில் வாழும் தமிழர்களின் வாழ்வுரிமையையும், கல்வி உரிமையையும் பாதுகாக்கும் பொருட்டு கேரள அரசாங்கத்தோடு தொடர்புக்கொண்டு பல்வேறு விதமான ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்து வருகிறது திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்.

1) தமிழ்மொழிச் சிறுபான்மை மணவர்களுக்குப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் முறையான இட ஒதுக்கீடு,

2) அரசு தமிழ் உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்,

3) மொழிச் சிறுபான்மை நலன் கருதி அரசு வெளியிடும் உத்தரவுகள், சரியான முறையில் குறித்த நேரத்தில் நடைமுறைப்படுத்த வலியுறுத்துதல்

4) தமிழ்ப் பிரிவு இல்லாத மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கலில் தமிழ்ா பிரிவு உருவாக்க கோருதல்

5) மொழிச்சிறுபான்மையினர் அதிகமுள்ள பகுதிகளில் உள்ளப் பள்ளிகளில் முடிந்தளவு தமிழ் ஆசிரியர்களை நியமிக்க கோருதல்,

6) மொழிச்சிறுபான்மையினர் அதிகமுள்ள பகுதிகளிலுள்ள மாவட்ட,வட்ட மருத்துவமனை மேம்பாட்டு குழுக்களில் மொழிச் சிறுபான்மை பிரதிநிதிகளை நிய்மிக்க நடவடிக்கை எடுக்கக் கோருதல், மொழிச் சிறுபான்மை மாணவர்களின் மொழிச் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க கோருதல்

7) பள்ளியிறுதித் தேர்வில் மாநில அளவில் முதல் மாணவ/ மாணவியரை தேர்ந்தெடுக்கும் போது மொழிச் சிறுபான்மை மாணவர்களின்(தமிழ் மொழியே முதல் மொழியாக படித்தவர்கள்) மதிப்பெண் பட்டியலைப் பரிசீலிக்கக் கோருதல்

8) அரசு அலுவலகங்களில் தமிழிலும் பெயர்ப்பலகை வைக்க அரசாங்கத்தை வலியிறுத்துதல்,

ஆகிய மேற்கூரிய முக்கிய கோரிக்கைகளைத் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் கேரள அரசாங்கத்திடம் மனுவாக அளித்து சிலவற்றில் வெற்றியும் கண்டிருக்கின்றது. திருவனந்தபுரம் மகளீர் கல்லூரி,காரியவட்டம் பல்கலைக் கழகம்,பாலக்காடு விக்டோரிய கல்லூரி ஆகிய கல்லூரிகளிலும் 5% இட ஒதுக்கீடு வழங்கவும்,தமிழ்ப் பள்ளிகளைத் தரம் உயர்த்தவும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. மேலும் கேரள அரசுப் பள்ளிகளில் படிக்கும் தமிழ் மாணவ மானவியர்கள் கூடுதலாக மலையாள மொழி படிக்க வேண்டிய அவசியமில்லை என்று திருத்திய அரசாணையையும் கேரள அரசு 2011 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**அறக்கட்டளைகள்**

பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்ற மாணவ/மாணவியற்கு வருடந்தோரும் அறக்கட்டளைகள் சார்பாகப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப்பரிசுகள் பெறுவதற்கு உறுப்பினர்களின் குழந்தைகள் மட்டுமே தகுதிபாடுடையவர்கள் ஆவர்.

1. திரு பி.சுப்பிரமணியம் நினைவு அறக்கட்டளை அதிக மதிப்பெண் பெற்ற மாணவனுக்கும்

2. சரசுவதி வேலப்பன் நினைவு அறக்கட்டளை அதிக மதிப்பெண் பெற்ற மாணவியருக்கும்

3. முத்தைய உடையார் அறக்கட்டளை தமிழைப் பயிற்சி மொழியாக்க் கொண்டு தேர்வு எழுதி அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கும்

பரிசுகள் வாழங்கப்பட்டு வருகின்றனர். இது தவிர சண்முகம்-சிதம்பரத்தம்மாள் நினைவு அறக்கட்டளையும் முத்துசாமி ரெட்டியார் நினைவு அறக்கட்டளையும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி உதவி வருகின்றன.

முடிவுரை

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் தொடங்கி தனது ஐம்பது ஆண்டுகால வரலாற்றில் பல்வேறு சமூகப் பணிகளிலும் இலக்கியப் பணிகளிலும் வெற்றிக்கண்டிருக்கின்றது. மேலும், பல எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் உருவாக்கிய பெருமை இவ்வமைப்பிற்கு உண்டு. இவ்வமைப்பின் 50வது ஆண்டு நிறைவை ஒட்டி பொன்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்க ஒன்று. தமிழ் அமைப்புகளின் பணியினைப் பாராட்டும்விதமாகத் தமிழ்நாடு அரசு சிறந்த தமிழ் அமைப்பினைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் தமிழ்த்தாய் விருது வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றது என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்க ஒன்று.

# தாயகம் கடந்த தமிழ்

முனைவர் சி .சிதம்பரம்
துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம், திண்டுக்கல்
தமிழ்நாடு

***அறிமுகம்***

எந்த ஒரு மனித சமுதாயம் இலக்கண மரபுகளின்படி தாய்மொழியைப் பயன்படுத்துகிறதோ அந்தச் சமுதாயமே சிறந்த சமுதாயமாகும். பண்டைத்தமிழகம் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளாகப் பிரித்து ஆட்சி செய்யப்பட்டது. பிற்காலத்தில் சேர நாட்டைச் சேர்ந்த கொங்கு மண்டலத்தில் தமிழ்மொழி முறையாக இலக்கண முறைப்படி பயன்படுத்தப்பெறாத நிலையில், வட்டார மொழிவழக்குகள் பெருகி, அதுவே ஒரு கிளைமொழியாக (மலையாளம்) தோன்றக் காரணமாகிவிட்டது என்பது மொழி வரலாறு. அதே போன்ற சூழல் தற்பொழுது உலகமயமாதல் பின்னணியில் நிகழ வாய்ப்புள்ளது. இன்று தாராளமயமாதல் *(liberalization)*, தனியார்மயமாதல் *(Privatization)*, உலகமயமாதல் *(Globalization)* சூழலில் தமிழ்மொழியின் வளர்ச்சி கேள்விக்குறியாகி விட்டது. உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல், உலக மொழிகளுக்கு இணையாக வளரும் நிலை, நவீன சாதனங்களில் தமிழைப் பயன்படுத்தும் முறை, புதிய கலைச்சொற்களை உருவாக்குதல், மொழிபெயர்த்தல், தமிழ்மொழிக்குப் புதிய அணிகலன்களை (வளங்களை) உருவாக்குதல், உலகத் தமிழர்களை ஒரு குடையின்கீழ் இணைத்தல் எனப் பல்வேறு பங்களிப்புகளை இன்றைய நவீன, விவேகக் கையடக்கத்தொலைபேசிகள் வழங்கிவருகின்றன.

பெரும்பாலான ஊடகங்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள் உள்ள வாசகர்களை மட்டும் நோக்கியே அக்கறை காட்டிவருகின்றன. ஆனால் இன்று இணையம் என்னும் அறிவியல் கண்டுபிடிப்பு உலகத்தமிழர்களை இணைக்கும் பாலமாக உள்ளது என்றால் அது மிகையாகாது. விரல் நுனியில் விரியும் விவரக் களஞ்சியமாக இணையம் இருந்தபோதிலும் அதனைப் பயன்படுத்தக் கணினி, இணைய இணைப்பு, மாற்றி *(Modam)* எனப் பல்வேறு கருவிகள் தேவைப் படுகின்றன. இன்று உலகம் அதிவேகமாகச் சுழன்றுகொண்டிருக்கும்

வேளையில் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் மனிதனுக்குக் கிடைத்த அரிய சாதனமே நவீன, விவேக அலைபேசிகள் ஆகும். இந்த அலைபேசிகளில் செயல்படும் குறுஞ்செயலிகள் எனும் பயன்பாட்டு நிரல்களின் வழியே உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாக அதிநவீன திறன்பேசிகள் *(Smartphones)* செயல்படுவதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**அலைபேசிகளின் அசுர வளர்ச்சி**

வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்ப உலகில் நவீன மற்றும் விவேகக் கையடக்கத் தொலைபேசிகளின் *(Smart Phones)* வருகை மனித சமுதாயத்தின் வரமாக அமைந்துள்ளது. இணையத்தைப் பயன்படுத்திக் கணினிவழி செயல்பட்ட மனிதன் அதே பணிகளை நவீன கையடக்கக் கருவிகளிலும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டான். இந்தியாவில் 2011-இல் நடைபெற்ற ஆய்வு ஒன்று, "கழிப்பறையைப் பயன்படுத்தும் மக்களைக் காட்டிலும் (40%) கைபேசிகளைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை (80%) அதிகமாக உள்ளது"(1) என்று புள்ளி விவரம் தருகிறது. நடப்பாண்டில் "உலக அளவில் செல்போன் பயனாளர். எண்ணிக்கையில் இந்தியாவுக்கு இரண்டாம் இடம் (86 கோடி பேர்) என்ற புள்ளி விவரத்தையும் தருகிறது"[2] இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI). ஆரம்ப காலகட்டங்களில், அலைபேசி சந்தையில் நோக்கியா *(Nokia)*, மோட்டரோலா *(Motorola)*, சோனி எரிக்சன் *(Sony Ericsson)*, சாம்சங் *(Samsung)*, எல்.ஜி *(L.G)* ஆகிய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இந் நிறுவனங்கள் தயாரித்த ஆரம்ப கால அலைபேசிகள் ஒலி வழித் தகவல் தொழில் நுட்ப வசதி கொண்டவையாக மட்டுமே இருந்தன. இவை அலைபேசிகள் கண்டுபிடித்த காலக் கட்டங் களில் மக்களால் பரவலாகப் பயன் படுத்தப்பட்டு வந்தன.

தொடக்க நிலையில் அலைபேசிகள் தொலைவில் உள்ளவர்களைக் குரல் வழித் தொடர்புகொள்ளும் நிலையில் மட்டும், (தூரத்தின் அளவை குறைக்கும் வகையில்) அமைந் திருந்தது. அலைபேசி முதலில் ஒரு தகவல் தொடர்புச் சாதனமாக மட்டுமே இருந்தது. ஆனால் இன்று அலைபேசியில் உள்ள வசதிகளால், பல அறிவியல் சாதனங்கள் வழக்கொழிந்து விடும் என்று சொல்லும் அளவிற்கு அலைபேசியில் அனைத்து வசதிகளும் வந்துவிட்டன.

**உலகமயமாதலும், தமிழ்மொழிக்காப்பு முயற்சிகளும்**

இன்று உலகமயமாக்கலின் விளைவாகப் பல்வேறு பாதிப்புகளும், பயன்களும் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் மொழிக்காப்பு முயற்சி என்பது மிகக்கடினமான சவாலாக மாறிவிட்டாலும், உலகமய

மாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட தொழிற்புரட்சியால் இன்று பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளின் வருகையால் தமிழ்மொழியைக் காக்கப் புதிய முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. "தமிழன் நிலத்தை அவன் வாழும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையைப் பகுத்தான். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அவை. தமிழை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்து இலக்கியங்களை வகைப்படுத்தினான். இன்று இணையத்தமிழ் என்ற புதியவகைத் தமிழ் தோன்றி அழியாப்புகழை அடைந்துள்ளது என்றால் அது மிகையாகாது"[3]. எனினும் ஆரம்ப காலகட்டத்தில் கணினி, இணையத்தில் தமிழ் மொழியைப் புகுத்துவதில், பயன்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. ஆனால் இன்று அவை அனைத்தும் சரிசெய்யப்பட்டு எட்டாத உயரத்தில் ஏறி, பறக்கத் தொடங்கிவிட்டன.

## இணையம் அன்றும் இன்றும்

இணையத்தின் வாயிலாக எட்டிய அனைத்துத் தமிழ் வளர்ச்சியையும் அடுத்த தளத்திற்கு *(Platform)* எடுத்துச்செல்ல வேண்டிய தேவையும் அவசியமும் இன்று ஏற்பட்டுள்ளன. அது கையடக்கத்தொலைபேசிகளில் தமிழைப் புகுத்தும் முயற்சியாகும். பழமையும் சிறப்பும் வாய்ந்த மொழி அனைத்துப் புதிய சாதனங்களிலும் பயன்படுத்தும்பொழுதுதான் அது சிறந்த இடத்தைப் பெறமுடியும். இப்பேற்றினைத் தமிழ்மொழி பெற்று, மென்மேலும் வளரத் தமிழ் வல்லுனர்களும், கணினித் தொழில் நுட்பவல்லுனர்களும் இணைந்து செயல்படவேண்டும். அவ்வாறு இணைந்து கையடக்கத் தொலை பேசிகளில் எண்ணற்ற தமிழ்க்குறுஞ்செயலிகளை உருவாக்க வேண்டிய தேவை தற்பொழுது எழுந்துள்ளது. இவ்வாறு தமிழ்மொழியில் குறுஞ்செயலிகளை உருவாக்கும்பொழுது பல்வேறு தொழில்நுட்பச் சிக்கல்கள், கால விரயம், பொருளாதாரச் சிக்கல் முதலியவை ஏற்படுகின்றன. ஆயிரக்கணக்கான குறுஞ்செயலிகளில் தமிழ் மொழி சார்ந்த குறுஞ்செயலிகளை இனம் கண்டு அவற்றைப் பிரித்தறிந்து ஆராயவேண்டும். மேலும் அவை தமிழ்மொழி வளர்ச்சிக்கு எந்தெந்த வகைகளில் பங்களிக்கிறன்றன என்பதையும் அறியவேண்டியுள்ளது.

## குறுஞ்செயலா? பெருஞ்செயலா?

தேவைகள்தான் கண்டிபிடுப்புகளின் தாய் என்பர். "ஒரு செயலைச் செய்யக்கூடிய செய்கையை விவரிக்கும் நிரல் துண்டைச் செயலி என்ற சொல் குறிக்கிறது"[4]. அதாவது ஒரு செயலை அல்லது வினையைச் செய்ய வல்ல ஆணைத்தொடர்களைக் குறிக்கச் செயலி என்ற சொல் தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுவருகிறது. "நவீனத் தொலைபேசிகளில் ஒரு குறிப்பிட்ட செயலைச் *(Action)*

செய்துமுடிக்க மனிதர்களால் பல கட்டளைகளைப் பிறப்பித்து உருவாக்கப்படும் நிரல் தொகுப்பு குறுஞ்செயலி *(Apps)* என்று அழைக்கப்படுகிறது. கணினியில் பல செயல்களைச் செய்யும் செயலிகளை, மென்பொருள் *(Applications- Software)* என்றும், குறுகிய நிலையில் செய்யக்கூடியதை குறுஞ்செயலி என்றும் வழங்கப்படுகிறது"[5]. ஆப்பிள் நிறுவனம் "அமெரிக்காவில் ஐ ஃபோன்களை உற்பத்தி செய்தாலும் உலகில் உள்ள அனைவரும் அதனை விரும்பி வாங்கக் காரணம் அந்ததந்த மொழிகளில் அதன் செயலிகள் *(Apps)* அமைந்திருப்பதே. இந்தியாவில் ஆப்பிள் நிறுவனம் தனது பொருட்களை விற்பதற்குக் கூட நேரடி முகவர்கள் *(Dealer)* இல்லாத சூழலில் இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் அதிக அளவில் ஆப்பிள் ஐ ஃபோன்கள் பயன்படுத்தப்பட்டு வருவதற்கான மிக முக்கிய காரணம் அதில் இடம்பெற்றுள்ள தமிழ்வழிச் செயலிகளே"[6] என்ற கருத்து குறிப்பிடத்தக்கதாகும்.

அமைப்பியல் முறையில் தமிழ்ச் செயலிகள் நிலையானவை *(Static Content)*, புதுப்பித்தல் நிலையில் மாறக்கூடியவை *(Rss Feed)* என இருவகைப்படும். மின்புத்தகங்கள் போன்றவை நிலையானதாகவும், செய்திகள் போன்றவை அடிக்கடி மாறக்கூடிய உள்ளடக்கமாகவும் உள்ளன. தமிழ்மொழியில் இடம்பெற்றுள்ள செயலிகள் பல்வேறு பிரிவுகளில் அமைந்துள்ளன. அவையாவன: மின் இதழ்கள், · இணைய வானொலிகள், தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் கருவிகள், தமிழ்த் தட்டச்சுக் கருவிகள், தமிழ் நேரடித் தொலைக்காட்சிகள், தமிழ் நேரடி மொழிபெயர்ப்புக் கருவிகள், நாளிதழ்கள் - செய்திகள், சமுதாய வலைத்தொடர்புகள், தேடுபொறிகள் மூலம் தரவுகளைப் பெறுதல், தமிழ் போட்காஸ்ட்*(Podcaste)*, அகராதிகள், தமிழ் மரபு சார்ந்த செயலிகள், தனி நபர், பிரபலங்கள் சார்ந்தவை, பொழுதுபோக்கு, முதலிய பிரிவுகளில் அடங்கும்.



**ஒரு குடையின்கீழ்த் தமிழ் - தமிழர்**

உலகத்தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் பல்வேறு செயலிகள் உள்ளன. யாழ்-யுகே, யாழ்-உலகம், தமிழ் சங்கம்- ஹாங்காங், சமூகம் ஆகிய செயலிகள் உலகத்தமிழர்களை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இவை தவிர இலங்கைத்தமிழர்களைப் பற்றி, அததெரண தமிழ், தமிழ் Mirror ஆகிய இரு செயலிகள் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகின்றன.

**முரசு - செல்லினம்**

ஆப்பிள் அலைபேசிகளில் ஆரம்ப காலக் கட்டங்களில் தமிழை உள்ளீடு செய்வதற்குப் பயன்பட்ட ஒரு குறுஞ்செயலிதான் முரசு செல்லினம் என்பதாகும். இதன்மூலம் மட்டுமே ஆரம்ப காலக்கட்டத்தில் தமிழ்த் தட்டச்சு செய்வதற்கு ஒரே ஒரு குறுஞ்செயலி என்றால் அது செல்லினம் மட்டுமே. தற்பொழுது பல குறுஞ்செயலிகள் தமிழில் தட்டச்சு செய்வதற்கு வந்துவிட்டன. Ios 7 பதிப்பில் எந்த ஒரு குறுஞ்செயலியையும் பயன்படுத்தி தமிழ்த் தட்டச்சு செய்ய வேண்டிய தேவை இல்லை. ஆப்பிள் இயங்குதளத்திலேயெ தமிழ் தட்டச்சு செய்யும் வகையில் இயங்குதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் குறுஞ்செயலி தமிழை உள்ளீடு செய்வதற்காக மட்டுமல்லாது இந்திய செய்திகள், மலேசிய இலக்கியம், சிங்கப்பூர் இலக்கியம் எனப் புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளான சிறுகதைகளையும் வழங்குகிறது. புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளை உலகெங்கிலும் பரப்புவதில் இந்த குறுஞ்செயலியின் பங்கு அளப்பரியது.

**முரசு -செல்லியல்**

முரசு. முத்துநெடுமாறன் அவர்களின் மற்றுமொரு குறுஞ்செயலி முரசு செல்லியல் என்பதாகும். இந்தக் குறுஞ்செயலி முற்றிலும் புதுமையானது. மலேசியா உள்ளிட்ட உலகச்செய்திகளை உடனுக்குடன் தருவதில் முதன்மையாகத் திகழ்கிறது. இந்த குறுஞ்செயலியை பதிவிறக்கம் செய்யும் போது அந்ததந்த நாட்டவரின் தேவைக்கேற்ப செய்திகளின் முக்கியத்துவத்தை அறிந்து வழங்குகின்றன. இதே இதன் தனிச்சிறப்பாகும். தற்பொழுது மலேசிய விமானம் மாயமான செய்திகள் தொடர்பான தகவல்களை முந்தித் தருவதைப் பார்க்க முடிகிறது.

## இணைய வானொலிகள்

பன்பலை மூலமாக மட்டும் அலைக்கற்றைகள் வழி ஒலிபரப்பப்படும் வானொலிகளின் மத்தியில் இணையம் வழியாக ஒலிபரப்பப் படும் வானொலிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது.





இதற்கு மிக முக்கியமான காரணம் உலகெங்கிலும் வாழும் ஒரு குறிப்பிட்ட இன மக்களின் சமூகம் சார்ந்த நிகழ்வுகளை அறிந்துகொள்ளும் போக்கும் இனப்பற்றும் ஆகும். அதனடிப்படையில் தன் இன மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டினையும், கலாச்சார உறவுகளை மேம்படுத்தவும் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பச் சாதனங்களே ஆகும். அந்த வகையில் இணைய வானொலிகள் நாடு, மொழி, இனம் கடந்து செல்லக்கூடிய தகவல் தொழில்நுட்பமாக வளர்ந்துவருகின்றன. அலைக்கம்பங்கள் துணையுடன் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்சிகளே இணையம் ஊடாகவும் ஒலிபரப்பப்டுவதுண்டு. இணையத்தின் ஊடாக மாத்திரம் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளும் இன்று பரவலாகி வருகின்றன. தமிழர் திரைகடல் ஓடித் திரவியம் தேடியபொழுதும் தம் தாய் திருநாட்டையும், தாய்த்தமிழ் உறவுகளையும் எப்பொழுதும் இணைப்பில் வைத்திருப்பதற்கு இணைய வானொலிகள் பயன்படுகின்றன. தமிழ் இணைய வானொலிகள் தமிழர் வாழும் நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தாய்த்தமிழ் உறவுகளை இணைக்கும் பாலமாகவும் செயல்படுகின்றன என்றால் அது மிகையாகாது. தமிழ்நாட்டில் நடக்கும் சில முக்கியமான நிகழ்வுகளைக்கூட தமிழக ஊடகங்கள் கண்டுகொள்ளாத நிலையில் அயல்நாடுகளில் உள்ள இணைய வானொலிகள் கூர்ந்து கவனித்து செய்திகளையும், செவ்விகளையும் வழங்கிவருகின்றன. ஆஸ்திரேலியாவில் இருந்து ஒலிபரப்பாகும் SBS எனும் வானொலி தமிழ்நாட்டில் நடக்கும் முக்கியமான நிகழ்வுகளை ஒலிபரப்புகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவாக

தமிழ்க் குறுஞ்செயலிகள் உலகெங்கிலும் உள்ள தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாகத் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது. தகவல் தொழில்நுட்பத்தில் முன்னேறிவரும் வேளையில் தமிழ்மொழி சிறப்பான இடத்தைப்பெற ஒவ்வொரு தமிழனும் தங்களால் ஆன குறுஞ்செயலிகளை உருவாக்குவதன்மூலம் ஒரு குடையின் கீழ் தமிழர்களை ஒன்றிணைத்து தமிழர்களின் அடையாளங்களை உலகிற்கு பறைசாற்ற - நிலைநாட்ட முடியும் என உறுதியாகக் கூறமுடியும்.

## சான்றெண் விளக்கம்

1. தினமணி நாளிதழ்ச் செய்தி, மதுரைப் பதிப்பு, நாள்:18-06-2011, ப. 12.

2. புதிய தலைமுறை மாத இதழ், ஜூன் 2013, ப. 63.

3. சி. சிதம்பரம், உள்வழி, ப. 101.

4. https://ta.wikipedia.org/wiki/

5. முரசு. முத்து நெடுமாறன், நவீனத் தொழில்நுட்பத்தில் தமிழ் என்ற பொருளில் இணையக்கல்விக்கழகத்தில் ஆற்றிய சிறப்புரையின் காணொளிக்காட்சி: <http://www.youtube.com/watch?feature=player_embedded&v=7UdRM1kwrXw>)

6. சி. சிதம்பரம், ஐஃபோனும் தமிழும், 11-ஆவது உலகத்தமிழ் இணைய மாநாட்டுக் கட்டுரைகள் (www.muthalvan.in <http://www.muthalvan.in>)

# A Tamil Martyr from Pondicherry in Netaji's Freedom Struggle in south-east Asia (Vietnam)

**JBP.More**
Paris

In this paper, my intention is to trace the historical role played by a leading Tamil personality hailing from Pondicherry in the Indian Armed Struggle for freedom, led by Netaji Subhas Chandra Bose in the 1940s in south-east Asia. The name of this Tamil personality was Leon Prouchandy. Pondicherry was a French colony located on the Sozhamandalam coast about 100 miles south of Madras.

## Historical Background and Context

Indians particularly Tamils had trading and cultural contacts with south-east Asia and China since a very long time. During British rule in India, especially during the nineteenth and early twentieth century many Tamils migrated to Burma and Malaysia, mainly as workers.[1]

Right from the 1860s, Tamils of Pondicherry were attracted by the employment and trade prospects in the French colony of Indo-China, composed of Vietnam, Cambodia and Laos. Many migrated, especially to Saigon. There were other Indians, hailing from British India who also found their way to Saigon and Indochina. They were mostly the Hindu Nattukottai Chettiars and Tamil-speaking Muslims. In 1937 there were about 6000 Indians in Indochina. Most of them were Tamils.[2]

The launching of the Civil Disobedience Movement in 1930 by Mahatma Gandhi and the demand for complete independence from British rule seems to have fascinated many Indian Tamils. There was one Tamilian settled in Indochina or rather in Saigon who was particularly fascinated by the Gandhian movement. He was Léon Prouchandy of Pondicherry. When Gandhi gave the call to Indians holding responsible positions to relinquish their jobs as a sign of protest, Léon Prouchandy was probably the only Indian and Tamil in Indochina who actually gave up his lucrative job in French credit bank. The news about his giving up the job actually appeared in a Franco-Indian journal of Pondicherry called L'Inde Illustré.[3]

Léon Prouchandy was born in Pondicherry on 1st May 1901 in a middle-class Tamil Christian family. Like many Pondicherrians, his father had migrated to Indochina where he was employed as a policeman. Léon Prouchandy studied in a French school in Saigon and was a Brevet diploma holder. Having lost his wife at a young age, he remarried a widow, who happened to be the wife of Saverikannu Prouchandy, who was one of the most prominent Indian Tamil landlords of Saigon, hailing from Pondicherry. Thus Léon Prouchandy assumed control of the vast landed properties of Saverikannu Prouchandy in Saigon and Pondicherry. Besides, he donated quite often to the needy and public causes and earned for himself a name in Saigon. Léon Prouchandy lived in the sprawling villa of the Prouchandys situated in the posh 'white' area of Saigon at 76, rue Paul Blanchy (presently Hai Bha Trung) with his large family.[4]

**Dress Reforms initiated by Prouchandy:**

Having renounced his job following the call of Mahatma Gandhi, one would probably think that Léon Prouchandy would follow the footsteps of Gandhi in every way. Prouchandy definitely admired Gandhi's objective to eradicate untouchability in Hindu

society. He seems to have even contributed to the Harijan Sevak Sangh fund, founded by Gandhi.[5]

Prouchandy did not take to any of the usual social reforming activities of Indian stalwarts like widow remarriage. Instead, he felt the need for the Indians to modernise themselves. So in the year 1933 he boldly launched what he called as the 'Dress Reforms' among the Tamils in Saigon. Léon Prouchandy himself personally contacted the various Indian Tamil groups living in Saigon and asked them to get rid of their chomins or dhotis and kailis (lungis) and take to wearing European dresses at least when they go about in the town and also cut off their kudumis (tuft of hair on the head) in the interest of hygiene. He called upon the Tamils to emulate the Japanese and Chinese in this respect.[6]

He implored the prominent Tamil personalities of Saigon like Mr.J.M.Mohammad Ismail, Chief of the Congregation of the Muslims and Administrator of the Saigon mosque, Arunassalam Chettiar(President of the Association of Nattukotai Chettiars), Kumarappa Chettiar, Chief of the Congregation of Hindus, Somasundaram Chettiar, Administrator of the temple of Nattukottai Chettiars, Karpanapillai, Chinnasamy Vandayar, Kishnasamy Devar, Subramania Pillai, Subbaraya Pillai, Administrator of the temple of Mariamman, and Kathiappa Devar, proprietor, Appa Pillai, banker as well as the Pondicherry Tamil Christians to take to European dresses. Prouchandy thought that this would contribute to the good name of the Indian ethnic group and to their social progress. The Franco-Tamil journal L'Inde Illustré was the first to come out in favour of Prouchandy's dress reforms. Most of the preceding personalities of Saigon came out in support of the dress reforms of Prouchandy.[7]

In pursuit of his objectives, Prouchandy wrote personally to a number of his friends and journalists in India asking them to support them in his efforts. It seems that they had strongly encouraged him

to pursue his path. He issued a fervent appeal to the Indians of India to take to his dress reforms. He even expected Mahatma Gandhi and the southern social reformer Periyar E.V. Ramasami to come out in support of his reforms.[8]

Besides, Prouchandy also worked for the unity of the Hindus, Muslims and Christians of both French and British India settled in Cochinchina. Prouchandy was particularly interested in the fate of Hinduism and the expansion of Islam in India, especially in south India. He was also quite annoyed about the existence of caste in south Indian Christianity.[9]

Léon Prouchandy no doubt held Islam and the French republican values in high esteem. Prouchandy also held the Self-respect movement of Periyar Ramasamy as the greatest reform movement against the ridiculous and injurious 'brahmanical' customs. He exhorted all Tamils to follow the teachings of Periyar in order to establish a casteless and egalitarian society.[10]

## Political Martyrdom of Léon Prouchandy

But all this was in for a change, with the Japanese becoming more and more powerful in East Asia, threatening the colonial interests of the 'white' western powers. The Tamils settled in Indochina and Malaysia too seems to have come under Japanese influence. Saigon Indian Tamil personalities like Léon Prouchandy and Raoul Ramradja Vernier wrote articles in the popular Indian paper Saigon Dimanche praising the Japanese for their achievements. As we have seen earlier, Prouchandy had called upon the Indians to emulate the Japanese.[11]

In September 1939, the World War II broke out. A pro-German French regime under Maréchal Pétain was installed in Vichy in June 1940. Many French colonies including Indochina owed allegiance to the Vichy regime.[12]

During this period i.e. in the month of July 1940, J.M.Mohammad Ismail of Koothanallur, the prominent Saigon merchant was forced to call a meeting of Indians, of all religious persuasions to discuss the question of cooperation with the Japanese and the setting up of an Indian Nationalist Society in Saigon. It is quite certain that the prominent personalities of the Indian community in Saigon including Léon Prouchandy of Pondicherry participated in this meeting. In the present state of our knowledge, we do not know the outcome of this meeting. It seems that some like Leon Prouchandy were for cooperation with the Japanese while others were against. But what appears certain is that Mohammad Ismail left Saigon for India during 1941, leaving his business in charge of his brothers.[13]

On February 15, 1942, the British colony of Singapore surrendered to the Japanese. Articles began to appear in the Franco-Tamil journal of Saigon, Indochine-Inde about Japanese politics, written by Indian Tamils like P.M.A.Majid.[14]

Subhas Chandra Bose, a leading Congressman disappeared from India in early 1941. He made his way to Tokyo along with Abid Hassan in February 1943 from Germany. In Tokyo, he sought the cooperation of the Japanese in freeing India from the British.[15]

On 4th July, Bose accepted the Presidency of the Indian Independence League in Singapore. On August 8, he assumed the command of the Indian National Army. Bose then founded the Rani of Jhansi women's regiment, under the command of Captain Lakshmi Swaminathan, a doctor from Madras Medical College. She was assisted by Mrs.Thevar, another Tamil lady. Bose wanted to mobilise tne human and material resources of the 3 million Indians, mostly Tamils settled in East Asia, especially in Malaya, Singapore, Thailand and Burma. The battle cry raised by Bose at this time was 'Jai Hind' and 'Delhi Chalo' (On to Delhi). Already about 75000 Asiatics,

which comprised of a good number of Tamil labourers from Malaya, had been pressed on by the Japanese to construct the Burma-Siam 'Death Railway'. Only 12000 survived at the end of the war. Many of the dead were Tamils.

On 21st October 1943, at a rally attended by 50000 people, many of them Tamils, Bose inaugurated the Provisional Government of Free India in Singapore. S.Appadurai Iyer was the Tamil face of the Ministry. Among the advisers there were Tamils, settled in Malaysia like Karim Gani and John Thivy. Bose exhorted the Indians, sometimes in very harsh terms, to donate money for the cause of India's freedom. In December the Japanese ceded the Andaman and Nicobar islands to the Provisional Government. Bose appointed Lt.Col.A.D.Loganathan, a south Indian medical officer as its first Indian administrator.[16]

Earlier on 9th August 1943, Bose had flown to Saigon and conferred with the Japanese Ambassador Matsumota. He was greeted with open arms by many members of the Indian/Tamil community of Saigon. It was then when he drove down in an open car in one of the main roads of Saigon, leading to Hotel Majestic, that Léon Prouchandy of Pondicherry ascended the car and garlanded Bose with a gold necklace. Bose even addressed a rally of some 1000 Indian (mostly Tamil) residents of Saigon. Leon Prouchandy eventually became one of the principal financers and supporters of the Indian freedom struggle in Saigon.[17]

As a matter of fact, the Japanese penetration into Indochina had created a totally novel situation for the Tamils. While some Saigon-based Tamils like Khaliloor Rahman and Leon Prouchandy supported Bose, many others, mostly pro-de Gaulle Pondicherrians and the Chettiars objected to the forcible methods (like threat of death or imprisonment), used to raise funds for Netaji's movement.[18]

The Japanese southern Army Headquarters was moved from Manila to Saigon in November 1944. Christopher Bayly and Tim Harper had noted in their book that the Japanese fostered the branches of the Indian Independence League in both Saigon and Hanoi. Towards the end of 1944, Bose once again flew to Saigon. The Indian community had assembled to greet him. It seems that Bose estimated that Indians in Indochina could contribute up to 12 million piastres for his war fund.[19]

On 9th March 1945, Japanese forces moved to take over all government offices and garrison camps in Saigon. On 10th March the Japanese Ambassador in Saigon declared Vietnam independent. The Japanese police and the Kempetai (Japanese Gestapo) arrested many Indians who were suspected to be anti-Japanese.[20]

On 4th July 1945, for the first time the Indians of Indochina, especially those residing in Saigon celebrated the 'Netaji Week'. A big Indian T- nil meeting was organised at the Eden Cinema Hall of Saigon. Pro.ninent Indian Tamils of Saigon participated in it.[21]

On ?1-t July 1945, when the I.N.A. and Japanese forces were retreating om Burma, the 'Provisional Government Day' was celebrated by the Indian Tamils of Saigon. They were expected to hoist the Indian national flag and the Japanese flag in front of their houses and shops during that day.[22]

During the celebration of the Provisional Government Day, special prayers were offered at the Saigon mosque, situated at Amiral Dupré Street. The Provisional Government Ministers, A.C.Chatterji and A.M.Sahai, along with members of all Indian communities were present during the prayers. Moulvi Khaliloor Rahman, a Tamil Muslim from Koothanallur, who translated the speeches of north Indian leaders into Tamil, welcomed the leaders.[23]

During this period, the General Secretariat of the Indian Independence League (I.I.L.) of Saigon, was established in the

spacious residence, situated at 76, rue Paul Blanchy (Hai Bha Trung presently), belonging to the Prouchandy family of Pondicherry. Actually, Léon Prouchandy, who as we have seen was active in Indian Tamil circles since the 1930s, had given this residence free of rent so that it can serve as the branch office of the I.I.L. in Saigon. Three flags - Indian, Vietnamese and Japanese - flew atop the residence. A soldier of the Indian National Army stood guard at the entrance. As the provisional government of Free India had accepted romanised Hindustani as the common language for all Indians, Hindustani classes were conducted in Saigon for the Tamils. Inscription for these classes were to be done at the Office of the I.I.L. at 76, rue Paul Blanchy.32 Besides, a recruitment bureau for the Indian National Army was established in the same place. Its secretary was a Tamil Muslim known as Abdul Majid Sahib. All details regarding recruitment and training were to be obtained from the Secretariat of the I.I.L. During this period a certain Nuarudin seems to have been the President of I.I.L. in Saigon.[24]

We do not know about the exact role played by Léon Prouchandy in the I.I.L., but we know that he was an ardent supporter of the Netaji struggle to free India since 1943. He used to affirm that 'we (Pondicherry Tamils) are French only in paper, but in our hearts, we are Indians. We will take only what is good in European civilisation, but leave the bad.' He wanted to drive all foreign powers from India. He contributed profusely to the Netaji War Fund - gold, jewellery and cash, sometimes against opposition from his own wife and relatives. It appears that threats were handed out to him by pro-French supporters, that in the event of Japanese defeat Prouchandy's properties in Indochina and Pondicherry will be confiscated by the French. But such threats did not seem to have deterred him from supporting the Indian Armed Struggle. Anyhow the most surprising fact was that the Secretariat of the Indian Independence League was established in the residence of an Indian Tamil from Pondicherry, when there were many other

wealthy Indians in Saigon, especially the Chettiars and the Tamil Muslims, with vast landed and business interests. This only demonstrates the devotion of Léon Prouchandy for the cause of Indian independence, in his capacity as one of the prominent leaders of the Indian Tamil community of Saigon.[25]

At this time the branch of the I.I.L. in Saigon was reorganised with the creation of several new departments. During this period some British Indian Tamils like the rich merchant-landlord J.M.Abdul Aziz, the youngest brother of J.M.Mohammad Ismail was arrested by the Japanese for non-cooperation with them and the I.I.L. and refusing to contribute more money for the Netaji War Fund. He was let off after about two months, probably due to the intervention of Bose himself. It seems that he was tortured in prison. The French rewarded him amply after the end of the war. He was even decorated as Chevalier de la Légion d'Honneur.[26]

Some Indians of Pondicherry who were members of the I.I.L. feared that half their fortunes had to be given as contribution to the Netaji War Fund. Major General A.C.Chatterji allayed their fears and again appealed to the Indian Tamils, who were not members of the League to enrol themselves as members and sign the Fidelity Pledge to the Provisional Government of Free India at the League's bureau at 76, rue Paul Blanchy. The Pondicherrian T.G.syed was at this time at the head of a flourishing business in Hanoi, Haiphong and Namdinh. We do not know if Syed too extended his help to Netaji's movement.[27]

On 6th and 9th August, Hiroshima and Nagasaki were bombed out of existence. On 15th August 1945, Japan capitulated. On 16th August, Bose flew to Bangkok with some of his comrades like Colonel Habibur Rahman Khan, Col.Pritam Singh, Major Abid Hassan and S.Appadurai Iyer, leaving behind Major General Mohammad Zaman Kiani and Major General Alagappan in charge

of Singapore. On 17th August 1945, Bose flew with some of his close comrades to Saigon. He dissolved the I.N.A. and said: "The roads to Delhi are many and Delhi still remains our goal". It seems that Bose held his last Cabinet meeting in the branch office of the Provisional Government of Free India. But as far as I know, the Secretariat of the Indian Independence League was at Prouchandy's villa at 76, rue Paul Blanchy in Saigon. The three flags - Japanese, Indian and Vietnamese still flew aloft the villa and there was some coming and going in the villa on the 17th and 18th, according to witnesses. As a matter of fact, it seems quite evident that Subhas Chandra Bose held his last discussions and Cabinet meeting at the Secretariat of the I.I.L. Major General Kiani states in his memoirs that Bose spent the night in Saigon at the I.I.L. Secretariat and the following day he had discussions with his compatriots and the Japanese representatives of Field Marshal Count Terauchi's headquarters in Saigon. From Saigon, he flew to an unknown destination along with Col.Habibur Rahman and two suitcases loaded with gold and jewellery. The plane finally crashed in Taipei on takeoff on the 18th August. Subhas Chandra Bose did not survive. His body was cremated two days later and the ashes taken to Tokyo by Tatsuo Hayashida.[28] That brought the curtains down on the valiant effort to free India by Subhas Chandra Bose. Bose's martyrdom traumatized many Indian and Tamil civilians of south-east Asia.

Ho Chi Minh declared the independence of Vietnam on 2nd September 1945. The French colonialists were in a quandary. On 8th September 1945, units of the British 20th Indian division, under General Douglas David Gracey, along with some French troops entered southern Vietnam. This was a great relief to the French to re-establish colonial rule. The Gurkha troops put to flight the Vietnamese/ Viet Minh, but not before they wreaked vengeance on local Indian Tamil population by looting and attacking them all throughout the month of September 1945. Half a dozen local Tamils were murdered and about 70 were kidnapped. Certain Frenchmen

were in a retaliatory mood against the Vietnamese as well as those who supported the Japanese. Many others who had collaborated with the Japanese and even the I.I.L. were arrested, tried and even court-martialled. A.C. Chatterji, the Azad Hind's Finance Minister, who was stranded in Saigon due to Japanese surrender, escaped into the countryside, while many others of the I.I.L were arrested, interrogated and deported. With the arrival of more French troops, colonial order was re-established on a firmer ground in Saigon.[29]

Subhas Chandra Bose flew to his death from Saigon. Much is talked of his death. Much has been written about his death. Some even claim that he did not die in the crash. But hardly any historian seem to worry of what happened to those Indians or Tamils who had followed and supported Netaji till the end. There is not a single book written about them and the difficulties that they encountered after Japanese defeat and Netaji's death and the sacrifices that they had made for the cause of Indian independence.

When the Japanese were defeated and the war was over, one afternoon probably towards the end of September 1945, a colonial military jeep approached the villa of Leon Prouchandy at 76, rue Paul Blanchy in Saigon, which until then served as the Secretariat of the Indian Independence League. Some soldiers brought down the three flags -Indian, Vietnamese and Japanese - that still flew atop the residence. They arrested Léon Prouchandy from his villa and took him away to an unknown destination. This happened in front of all the helpless family members including Léon Prouchandy's wife and her children. All family members wailed and cried when Prouchandy was taken away. Some anti-Japanese Pondicherrians were also present on the occasion. It was said that it was they who instigated Prouchandy's arrest. The family was in total disarray, with the arrest of its head, who was only 45 years old then

About three months later Léon Prouchandy returned home. But he was no more the same lively young man. He was completely

transformed. He was suffering from amnesia. In other words he had lost his senses. It seems that he was tortured while he was in custody, which rendered him amnesiac. His life and all his future was snuffed out at a young age. He never knew that he had sacrificed his life and his future for the sake of the independence of his country. The top French doctor of Saigon, Dr. Le Vilain tried to cure Léon Prouchandy. But it was of no avail. Cambodian sorcerers were pressed in by the wife of Léon as a last attempt to retrieve the senses of Prouchandy. It was not successful either. As a result, the family was in a pathetic state.[30]

Finally, it was decided to return to Pondicherry where the family restarted a new life at Villa Selvom, the residence of the Prouchandys in Dupleix Street, near Raj Niwas. Léon Prouchandy too was brought over to Pondicherry in an amnesic state. He underwent treatment once again at the Madras Psychiatric Hospital in Kilpauk. But it was of no avail. Most Pondicherrians never knew about what happened to Léon Prouchandy. Nor did his family members dare to speak about what had befallen him as Pondicherry was still a French colony.

In August 1947, India became independent. In November 1954, the French left Pondicherry and Pondicherry became part of India. But Léon Prouchandy was never aware of it. A few people like the Franco-Tamilian Edouard Goubert, who later became Chief Minister of Pondicherry, were aware of Léon Prouchandy's plight. As long as he was chief minister of the Union Territory of Pondicherry, he used to send invitation to Léon Prouchandy to assist the yearly Independence Day celebiations. But Prouchandy never ever drew any freedom fighter pension from the Pondicherry or Indian government. No compensation was paid to him or his family which was in total disarray since 1945 when Prouchandy lost his senses. Of course, Prouchandy did not apply for any pension or compensation as he was in an amnesic state till his death.

Léon Prouchandy had no money any more. But whatever money that was given to him he used to distribute them to the poor and the children, seated at the government park in front of Villa Aroumé, the present Dining Hall of the Sri Aurobindo Ashram. His philanthropic trait never left him even in his amnesic state. Sometimes he used to even sit with ordinary labourers on the roadside and eat their food. He used to visit the Ganesh temple nearby. Léon Prouchandy lived in that amnesic state for about two decades at Villa Selvom like a 'robot', when he finally passed away one evening after a severe and prolonged dysentery in the year 1968. Apart from family members and friends, no dignitary ever visited Léon Prouchandy at his death bed in the salon of the Villa Selvom to pay their last respects for a great son of Pondicherry, Thamizhnadu and India who has given his all including his life so that Indians and Tamils live with dignity without the fetters of slavery and colonialism.[31]

Though Subhas Chandra Bose, who too left this world tragically, has been honoured in every city of India with statues and the naming of roads after him, many of the heroes who participated in the freedom struggle along with him from India, Pakistan, Malaysia, Singapore, Burma and Indochina have simply been forgotten. They remain the unsung martyrs of the Indian Freedom Movement. Of course Léon Prouchandy of Pondicherry is one of those great unsung Tamil martyrs who had dared to sacrifice their wealth and lives so that their countrymen may live in freedom. Leon Prouchandy stands apart from the whole array of social reformers and freedom-fighters that Pondicherry, Thamizhnadu and India had produced, due to the originality and uniqueness of his dress and hair style reforms and his ardent desire to put an end to colonialism.

## Notes

1. H. Kulke, D. Rothermund, *A History of India,* London, 1992, pp. 121-125; Sandhu & Mani, eds. *Indian Communities in South-east Asia,* Singapore, 1993

2. Philippe Franchini, *Saigon 1925-1945 - De la Belle Colonie à l'Eclosion Révolutionnaire ou la fin des Dieux Blancs,* (Paris, 1992), 46,47 ; J.B.P.More, *'Indians in French Indochina',* K.S.Mathew(ed.), *French in India and Indian Nationalism(1700 A.D.-1963 A.D),* vol.II, (Delhi, 1999), 449; J.B.P.More, 'Pathan and Tamil Muslim Migrants in French Indochina', *Pondicherry University Journal of Social Sciences and Humanities,* Vol.1, Nos.1&2, 116

3. *L'Inde Illustré,* Septembre 1933; Interview with the late Hélène P. former resident of Saigon and eldest step-daughter of Léon Prouchandy, and other relatives of the latter

4. Interview with the late Hélène P.; J.B.P.More, *op.cit.,* 1999, 452; J.B.P.More, *op.cit.,* 2006, 148; *L'Inde Illustré,* Septembre 1933

5. *Saigon Dimanche* (French Indian journal), 8 Juillet 1934, 12 Janvier 1936 ; *L'Inde Illustré,* 28 Février 1937, 23 May 1937, 15 Octobre 1939 ; Interview with the late Hélène P.

6. *L'Inde Illustré,* Août 1933

7. *L'Inde Illustré,* Août, Septembre 1933 ; L'Inde Illustré, Septembre 1934 ; *Saigon Dimanche,* 7 Juillet 1935

8. *L'Inde Illustré,* Juillet 1934 ; Octobre 1933

9. *Indochine-Inde* (Franco-Tamil journal), 2 & 9 Mai 1937 ; *Saigon Dimanche,* 22 Décembre 1935 ; *Saigon Dimanche,* 2 Juin 1935

10. *Saigon Dimanche,* 27 Octobre 1935 ; 14 Mai 1936 ; 17 Mars 1935, 21 Avril 1935; 21 Avril, 2 Juin 1935; 19 Juillet 1936 J.B.P.More, *Puducheri Valartha Bharathiar,* Pondicherry, 2011

11. *l'Inde Illustré,* Août 1933; *Indochine-Inde,* 12 Juillet 1940; V. Thompson, *French Indochina,* London, 1937, p.104

12. *Indochine-Inde,* 28 Septembre 1940; A. Roth, *Japan Strikes South,* New York, 1941, p.57; P. Franchini, Continental Saigon, Paris, 1995, pp. 117, 126

13. Microfiche 458, *British Indians in Saigon,* Pol (S) 2519 - 1940, Centre of South Asian Studies, Cambridge; Interview with late Z.A. Latif, former Vice-President of the Saigon mosque

14. *Indochine-Inde,* 10 Octobre 1940; 8 Novembre 1940

15. *Indochine-Inde,* 13 Février 1941; J. Lebra, *Ibid.* p.21 ; H.Toye, *The Springing Tiger - A Study of Subhas Chandra Bose,* London, 1959, p.77 ; L. Sehgal, A Revolutionary Life. Memoirs of a Political Activist, New Delhi, 1997, p.47

16. *Times of Saigon,* 3rd October 1945; H.Toye, *Ibid.,* pp. 81-83, 93-95; J. Lebra, *Ibid.* p.24; F. Saito & T. Hayashida, *'To Delhi! To Delhi! 1943-1945',* in Sisr Bose, A. Werth, S.A. Ayer, eds., *A Beacon Across Asia. A Biography of Subhas Chandra Bose,* Hyderabad, 1996, pp. 132, 156; J. Lebra, *Ibid.* pp. 30, 34; M. Getz, *Subhas Chandra Bose. A Biography,* London, 2002, p.94; L. Gordon, *Brothers Against the Raj,* New Delhi, 1990, p.303

17. H. Toye, *op.cit.* p.155; 10H684 - Propagande pour L'indépendance de l'Inde - Service Historique de l'Armée, Paris ; Saito, Hayashida, *op.cit.* p.155 ; Cf. Also *V. Mathurakavi,* Puducheri I.N.A. *Thyagi Léon Purushanthi Varlatru Kaiédu(Tamil),* Pondicherry, 2004; Interview with some former Saigon residents like Hélène; Information collected from various family sources

18. 10H684 - *Propagande pour l'Indépendance de l'Inde - Service Historique de l'Armée,* Paris ; N. Pairaudeau, op.cit. p.202 ; Saito, Hayashida, *op.cit.* p.155

19. Saito, Hayashida, *Ibid.* p.179 ; Franchini, *op.cit.* pp. 125-126; Impartial, 3, 8 Février 1945

20. J. Lebra, *op.c.:* .p. 138-139; Franchini, *op.cit.* pp. 127-128, 131; 10H80(I), l'Occupation Japonaise; 10H78(I), L'Indochine sous l'occupation française - Service Historique de l'Armée, Paris;

21. *Azad Hind,* 6 Juillet 1945

22. *Ibid.* 6, 20 Juillet 1945

23. *Ibid.* 27 Juillet 1945; Interview with Z.A. Latif and Mumtaz Alam, former residents of Saigon

24. *Ibid.* 27 Juillet 1945, 3 Août 1945; Interview with the late Hélène P.;

25. Interview with the late Hélène P., former resident of Saigon; Cf. Also J.B.P.More *'Indians in French Indochina'*(in) Mathew, K.S.(ed.), Nationalism in French India, vol.II, New Delhi, 1999, pp.447-460

26. *Azad Hind,* 3 Août 1945; Interview with Mumtaz Alam, Z.A. Latif, Maricar France (former residents of Saigon)

27. *Ibid.*

28. *Azad Hind,* 10 Août 1945; *Saigon Dimanche,* 8 Novembre 1931; H. Toye, *op.cit.* p.155; Interview with M.Husain, former Qazi of Pondicherry, Hélène P., and Z.A. Latif; J.B.P.More 'Commerçants Musulmans Tamouls en Indochine Française: J.M. Abdul Aziz et T.G. Mohamed Said' - published by CIDIF website; *Journal Officiel de l'Indochine Française, 1940-41,* p.979; C. Bayly, T. Harper, *op.cit.* p.21; L. Gordon, *Brothers*

*Against the Raj,* New Delhi, 1990, pp. 538-543, 763; M.Z. Kiani, *Indian's Freedom Struggle and the great INA,* New Delhi, 1994, p.167; P.; K.C. Yadav, Seki Akiko, *The Last Days of Netaji Subhas Chandra Bose,* New Delhi, 1996, p.81; Das & Subbiah, Chalo Delhi: *An Historical Account of the Indian Movement in East Asia,* Kuala Lumpur, 1946, pp. 221-222

29. Franchini, *op.cit.* pp. 131-137; P. Isoart, ed., *L'Indochine Française 1940-1945,* Paris, 1982, p. 241 ; Turner, *op.cit.,* pp. 39, 42, 45 ; C. Bayly, T. Harper, *op.cit.* pp. 141, 144-146, 148, 153, 156; *Times of Saigon,* 16, 22, 24, 27 September 1945; M.J.Gilbert, *op.cit.* pp. 118-126, 130, 131

30. *Union Française,* 11 Avril 1947; Interview with Hélène P.

31. Information collected from various family sources; Interview with Hélène P.; cf. Also *Azad Hind,* (Netaji Movement's newspaper in Saigon) 27 July 1945; Veera Mathurakavy, *op.cit.*; Today Prouchandy's mansion at 76, rue Paul Blanchy(Hai Bha Trung), Saigon is in a dilapidated state, confiscated by the Communist government of Vietnam. This confiscation has ruined the Prouchandy family.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

| அண்மை வெளியீடுகள் | ரூ. பை. |
| --- | --- |
| அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள் | 60.00 |
| பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு | 65.00 |
| பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும் | 50.00 |
| மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு | 175.00 |
| பெரியார் என்னும் பேரொளி | 60.00 |
| சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு) | 70.00 |
| புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம் | 100.00 |
| உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி 1) | 450.00 |
| செவ்விலக்கியச் சாரம் | 70.00 |
| வேதாத்திரி மகரிசியும் மதநல்லிணக்கமும் | 45.00 |
| வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம் | 50.00 |
| திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள் | 165.00 |
| தொல்காப்பிய உத்திகள் | 60.00 |
| தமிழில் இசுலாமிய மரபுகள் | 60.00 |
| தமிழில் இலக்கிய மானிடவியல் | 80.00 |
| தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சி | 65.00 |
| இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் | 80.00 |

வெ.எண் : 788

**புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும்**

**விலை : ₹ 140.00**



ISBN : 978-81-925359-7-5

9788192535975